# சுவாமிநாதம்

பதிப்பும் உரையும்

செ. வை. சண்முகம்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
1975

# சுவாமிநாதம்

# சுவாமிநாதம்

பதிப்பும் உரையும்

டாக்டர் செ. வை. சண்முகம்
எம். ஏ., எம். லிட்., பி. எச். டி.
துணைப் பேராசிரியர்,
மொழியியல் உயர் ஆய்வுத் துறை,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்
1975

மொழியியல் துறை வெளியீடு 36
முதற் பதிப்பு : 1975

அச்சிட்டோர்:
இளங்கோ அச்சகம், பாண்டிச்சேரி.

# அணிந்துரை

அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் உயர் ஆய்வுத்துறை திராவிட மொழித் தொடர்பாக பல துறைகளில் ஆராய்ந்து வருகிறது. அவற்றுள் ஒப்பிலக்கணம், ஒப்புமை மொழியியல் (Contrastive Linguistics) கிளைமொழிகள், சமூக மொழியியல், தென்னகப் பழங்குடி மக்களின் மொழிகள், திராவிட மொழிகளைப் பிற மொழியினருக்குக் கற்பிக்கும் மொழி ஆய்வு, தமிழ்மொழி வரலாற்று இலக்கணம், திராவிட மொழி மரபு இலக்கணங்களின் மதிப்பீடு ஆகிய துறைகள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. அவற்றுள் இலக்கண மதிப்பீட்டு ஆய்வில் இத்துறை பலவேறு பணிகளைப் பலவேறு நிலைகளில் புரிந்து வருகிறது. பழைய இலக்கணங்களைத் தற்கால மொழியியல் கண்ணோட்டத்தில் ஆராய்ந்து அவற்றில் மறைந்து கிடக்கும் சிறந்த மொழியியல் கோட்பாடுகளை வெளிக் கொணர்வதன் மூலம் மொழியியல் வரலாற்றில் (History of Linguistics) அவற்றிற்கு இடமளிக்க வழிவகை செய்வதும் இன்றைய தலைமுறையினர் பழைய இலக்கணங்களின் உண்மையான சிறப்பையும், குறை நிறைகளையும் உணர்ந்து இலக்கண ஆராய்ச்சியிலும் மொழியியல் ஆராய்ச்சியிலும் மொழி வரலாற்று ஆராய்ச்சியிலும் ஈடுபாடு கொள்ள நல்ல வாய்ப்பினை அளிப்பதும் இலக்கண மதிப்பீட்டுத் துறையில் இதுவரை செய்த பணிகளில் குறிப்பிடத்தக்கனவாகும். இலக்கண நூல்களைப் பல்வேறு ஆராய்ச்சிப் பட்டங்களுக்கு எடுப்பதுடன் அவற்றை நூல் வடிவில் வெளியிட்டு மொழியியல் மாணவர்களுக்கும் பிறருக்கும் பயன்படுமாறு

செய்வதும் இதன் பணியாகும். நச்சினார்க்கினியர் எழுத்ததிகார உரை ஆராயப்பெற்று அதன் அடிப்படையில் **Naccinarkkiniyar's conception of Phonology** என்ற நூலையும், நன்னூல் எழுத்ததிகாரத்தைத் தற்கால மொழியியல் கண்ணோட்டத்தோடு ஆராய்ந்த நிலையில் **A modern evaluation of Nannu:l – eluttatika:ram** என்ற நூலையும் வெளியிட்டதும் தமிழ் இலக்கண வரலாற்றை விரிவாக எழுதும் முயற்சியில் வேற்றுமை பற்றி எல்லா இலக்கண ஆசிரியர்களின் கருத்தையும் ஆராய்ந்து 'A History of Tamil Grammars with reference to Declension' என்ற ஆராய்ச்சிக் கட்டுரையைத் தயாரித்துள்ளதும் இந்நிலையில் குறிப்பிடத்தக்கன.

திராவிட இலக்கண நூல்களைப்பற்றி ஏழு கருத்தரங்குகள் நடத்தி அவற்றை நூல்களாக வெளியிடும் பணியையும் இத்துறை மேற்கொண்டுள்ளது 1970-இல் நடந்த கருத்தரங்கில் தொல்காப்பியம் மட்டும் முழுமையாக ஆராய்ந்து அக்கட்டுரைகளைத் **தொல்காப்பிய மொழியியல்** என்ற நூலாகவும் 1973-இல் நடைபெற்ற இரண்டாவது தமிழ் இலக்கணக் கொள்கைகள் கருத்தரங்கில் ஆராயப் பெற்ற கட்டுரைகளை **இலக்கண ஆய்வுக் கட்டுரைகள்-1** என்ற நூலாகவும் வெளியிட்டுள்ளது இத்துறை.

இத்துறை ஆசிரியர்கள் பலரும் இலக்கணத்தின் பலவேறு கூறுகளைத் தொடர்ந்து ஆய்ந்து வெளியிட்டு வருவதும் தொல்காப்பியத்திற்கு தற்கால மொழியியல் கண்ணோட்டத்தில் தெளிவுரை ஒன்று எழுதி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கன.

இந்நிலையில் இத்துறையைச் சார்ந்த செ. வை. சண்முகம் 1972–73 கல்வியாண்டில் உயர் ஆய்வுக்காக ரெடிங் பல்கலைக் கழகம் (இங்கிலாந்து) சென்றபோது லண்டனில் உள்ள பிரிட்டிஷ் பொருட்காட்சி சாலைக் கீழைக் கலைத்துறை நூல் நிலையத்தில் ஐந்திலக்கண நூலாகிய **சுவாமிநாதம்**

முழுமையும் கையெழுத்துப் பிரதியாக இருப்பது அறிந்து அதனைக் கற்று மகிழ்ந்ததுடன் புகைப்பட பிரதி ஒன்றுடன் தாய் நாடு திரும்பினார். தாய் நாடு வந்த அவர் அந் நூலுக்கு நல்லதொரு உரை ஒன்றை வகுத்து, பதிப்பித்த நிலையில் அதனை வெளியிடுவதில் இத் துறை பெருமையும் மகிழ்வும் கொள்ளுகிறது. மேலும் தமிழகத்திலும் பிற மாநிலங்களிலும் கிடைக்கும் சுவாமிநாதத்தின் சில பகுதிகளையும் அவர் திரட்டிய நிலையில் அதனைத் தனியொரு நூலாகவும் வெளியிட உள்ளது இத்துறை. இந்நிலையில் அவருடைய ஆக்கப் பணிக்குத் தமிழ் உலகம் நல்லதொரு வரவேற்பையும் வாழ்த்தையும் அளிக்கும் என நம்புகிறேன்.

அண்ணமலைப்பல்கலைக்கழகம்.
அண்ணாமலைநகர்.

**ச. அகத்தியலிங்கம்,**
இயக்குநர்,
மொழியியல் உயர் ஆய்வுத்துறை.

# பதிப்புரை

சுவாமிநாதம் என்ற ஐந்திலக்கணத்தின் மூலம் முழுமையும் பிரிட்டிஷ் பொருட்காட்சி சாலையில் தாளில் எழுதப்பட்டு வைக்கப்பட்டுள்ளது. அந்த மூலமே உரை எழுதி இங்கு பதிப்பிக்கப்படுகின்றது.

நூலை உரை எழுதி வெளிவிடுவதற்கு வேண்டிய ஊக்கமும் ஆக்கமும் தந்த மொழியியல் துறை பேராசிரியரும் மொழியியல் உயர் ஆய்வுத்துறை நெறியாளருமான டாக்டர் ச. அகத்தியலிங்கம் அவர்களுக்கு என் உளங்கனிந்த நன்றி உரியது.

மூல பாடத்தைப் படித்து பிரதிசெய்தபோதும் உரை எழுதியபோதும் பல்லாற்றானும் உதவிசெய்த தமிழ்த்துறை துணைப்பேராசிரியர் க. வெள்ளைவாரணன் அவர்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன்.

மொழியியல் ஆராய்ச்சி மாணவர்களான ஜி. சங்கரநாராயணன், எஸ். ஜெயபால், என். மதியழகன், ஏ. கோபால் ஆகிய நால்வரும் அச்சுப்பிரதி தயாரிப்பதில் உதவிசெய்தார்கள். அவர்களுக்கு என் நன்றி உரியதாகும்.

சூத்திரங்களைச் சீர் பிரிப்பதிலும் அச்சுத்தாள்களைத் திருத்துவதிலும் உதவிபுரிந்த தமிழ்த்துறை விரிவுரையாளர் புலவர். சோம. இளவரசு அவர்களுக்கும் என் நன்றி.

# உள்ளுறை


அணிந்துரை

பதிப்புரை

முதற் குறிப்பு விளக்கம்

உள்ளுறை

முன்னுரை

| | | |
|---|---|---|
| 1. | நூல்வழி | 1 |
| 2.1 | எழுத்தாக்கமரபு | 15 |
| 2.2 | பதமரபு | 37 |
| 2.3 | புணர்ச்சிமரபு | 53 |
| 3.1 | பெயர்மரபு | 67 |
| 3.2 | வினைமரபு | 101 |
| 3.3 | எச்சமரபு | 117 |
| 4.1 | அகத்திணை மரபு | 163 |
| 4.2 | கைக்கோண் மரபு | 175 |
| 4.3 | புறத்திணை மரபு | 221 |
| 5.1 | உறுப்பு மரபு | 243 |
| 5.2 | பாவின மரபு | 249 |
| 5.3 | பிரபந்த மரபு | 255 |
| 6.1 | பொருளணி மரபு | 271 |
| 6.2 | சொல்லணி மரபு | 287 |
| 6.3 | அமைதி மரபு | 295 |
| சூத்திர முதற்குறிப்பு அகராதி | | 297 |
| துணை புரிந்த நூல்கள் | | 301 |

# முன்னுரை

## 1. சுவாமிநாதத்தின் பதிப்பும் பிரதிகளும்

1924ஆம் ஆண்டு திரு. இ. கோவிந்தசாமி பிள்ளை அவர்கள் சுவாமிநாதத்தை வெளியிடும் பணியை மேற்கொண்டார். பாயிரம் (14 நூற்பா), எழுத்தாக்க மரபு (14 நூற்பா), பதமரபு (8 நூற்பா) ஆகிய மூன்று பகுதிகள் மட்டுமே கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடான தமிழ்ப்பொழிலில் துணர் 4-இல் (பக். 351-360, 369-70) அவரால் வெளியிடப்பட்டுள்ளது. ஆயினும் நூலின் முன்னுரையில்

'இந்நூல் ஏறக்குறைய ஓரிரு நூற்றாண்டுகட்கு முன்னர் செந்தமிழ் நாட்டிலுள்ள கல்லிடையூரில் தோன்றிய சாமி கவிராசன் எனும் சீரிய புலவரால் இயற்றப்பட்டதாகும்; ஐந்து இலக்கணப்பகுதியை நன்கு இனிது உணர்த்துவது; ஒவ்வோர் அதிகாரமும் தனித்தனி மும்மூன்று இயல்களை உடையது; அந்தாதித் தொடையால் எண்சீர்கழி நெடிலடி ஆசிரியப்பாவால் அடைமொழிகளைப் புணர்க்காது செய்யப் பட்டுத் திகழ்வது; பாயிரமும் நூன்மரபும் உள்பட 213 செய்யுட்களை உடையது'.

என்று குறிப்பிடுவதால் நூல் முழுமையும் கிடைத்திருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. ஆனால் அவர் நூல் முழுமையும் ஏன் வெளியிடவில்லை என்று தெரியவில்லை. ஏட்டுப்பிரதி திருநெல்வேலி நீலமேகம்பிள்ளை என்பாரிடமிருந்து கிடைத்ததாகவும் அவ்வேடு 'சிற்சில இடங்களில் தொடர்மொழிகளும் சிற்சில இடங்களில் சிறு பூச்சிகளால் அரிக்கப்பட்டமையின் எழுத்துகளும் காணப்பட்டில' என்றும் கூறியுள்ளார்.

சுவாமிநாதம் பற்றி வேறு யாரும் குறிப்பிட்டதாகத் தெரியவில்லை. அறிஞர் திரு. வையாபுரிப் பிள்ளை அவர்கள் இலக்கியமணிமாலை என்ற நூலில் (முதல் பதிப்பு 1954, இரண்டாம் பதிப்பு, 1957) சுவாமிநாதத்திற்கு விருத்தி உரை உள்ளது (பக். 219, 1957) என்ற செய்தியைத் தெரிவித்து சுவாமிநாதம் 19ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்கவேண்டும் என்றும் தெளிவாக்கியுள்ளார்.

சோம. இளவரசு அவர்கள் தமது இலக்கணவரலாற்றில் (1963:219-21) மேலே குறிப்பிட்ட இரண்டு குறிப்புக்களைத் தழுவி சுவாமிநாதத்தின் வரலாற்றை விளக்கியுள்ளார்.

பொருள் அடிப்படையில் இலக்கணச் செய்திகளைத் தொகுக்கும் பணியை மேற்கொண்ட ச. வே. சுப்பிரமணியன் அவர்கள் இலக்கணத்தொகை (எழுத்து) என்ற நூலில் தமிழ்ப் பொழிலில் வந்துள்ள பகுதியைப் பிற்சேர்க்கையாகத் (பக். 309-324) தந்துள்ளார்.

இங்கிலையில் 1972-73 கல்வியாண்டு உயர்நிலை ஆய்வுக்காக இங்கிலாந்து-ரெடிங் பல்கலைக்கழகம் சென்றிருந்த பொழுது லண்டனில் உள்ள பிரிட்டிஷ் பொருட்காட்சி (British Museum) யில் சுவாமிநாத மூலம் முழுமையும் காகிதத்தில் எழுதப்பெற்ற பிரதி ஒன்று இருப்பது தெரிய வந்தது. பிரிட்டிஷ் பொருட்காட்சி நிர்வாகத்திடமிருந்து சுவாமிநாதத்தின் புகைப்பட பிரதி (Photostat copy) பெற்று வந்தேன். இது சுவாமிநாதத்திற்குக் கிடைத்த முதல்முழுப் பிரதி. இதற்கு உரையெழுதி வெளியிடலாம் என்று முயற்சி மேற்கொண்டபோது ச. வே. சுப்பிரமணியன் அவர்கள் கேரளப் பல்கலைக்கழக கீழைக்கலை ஏட்டுப்பிரதி நூல் நிலையத்தில் (Oriental manuscript library) சுவாமிநாத விருத்தி உரை இருப்பதாகத் தெரிவித்ததோடு கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை ஆராய்ச்சி மாணவரான க. இராசேந்திரன்

என்பாரைக்கொண்டு ஓலைச்சுவடியிலிருந்து பிரதிசெய்து அனுப்பிவைத்தார்கள். நானும் ஒருமுறை திருவனந்தபுரம் சென்று சுவடியைப்பார்த்துச் சில பகுதிகளை நேரில் பரிசீலித்து வந்தேன். கேரளப் பல்கலைக்கழகப் பிரதி எழுத்தாக்க மரபிற்கு மட்டுமே விருத்தி உரையோடு அமைந்திருந்தது. அறிஞர் வையாபுரிப்பிள்ளை அவர்கள் இந்தப்பிரதியை உள்ளத்தில் கொண்டே சுவாமிநாதத்திற்கு விருத்தி உரை உள்ளது என்று கூறியிருக்கவேண்டும். ஆக, சுவாமிநாதத்திற்கு மூன்று பிரதிகள் இதுவரை கிடைத்துள்ளன. அவையே இங்கு பதிப்பிக்கப்படுகின்றன.

மூன்று பிரதிகளுக்குமுள்ள தொடர்பு :

பிரிட்டிஷ் பொருட்காட்சிப் பிரதி (பி. பொ. பி.), கரந்தைத் தமிழ்ச் சங்கப்பிரதி (க. த பி), கேரளப் பல்கலைக் கழகப்பிரதி (கே.ப.பி.)என்ற மூன்றையும் ஒப்பிட்டு ஆராய்ந்த போது க. த. பிரதியும் கே. ப. பிரதியுமே பெரிதும் ஒப்புமை உடையனவாய்க் காணப்பட்டன. அதாவது இரண்டிற்கும் சிறு சிறு பாட வேறுபாடுகளே அமைந்து ஒற்றுமை மிகுதியாக அமைந்துள்ளன. ஆயினும் இந்த இரண்டு பிரதிகளும் ஒரு மூலப் பிரதியிலிருந்து தோன்றியிருக்கவேண்டும் என்று ஊகிக்க வேண்டியுள்ளது.

பி. பொ. பிரதிக்கும் இந்த இரண்டு பிரதிகளுக்கும் செய்யுட்களின் எண்ணிக்கையிலும் அமைப்பிலும் வேறுபாடு அமைந்துள்ளது. பாயிரமாக (நூல் வழி) பி. பொ. பிரதியில் 11 செய்யுட்களும், க. த. பிரதியில் 14 செய்யுட்களும், கே. ப. பிரதியில் இரண்டு செய்யுட்களுமே காணமுடிகிறது. பத மரபில் பி பொ. பிரதி 5 செய்யுட்களும், க. த. பிரதி 6 செய்யுட்களும் கொண்டுள்ளன.

ஒரு செய்யுளுக்குள்ளேயே கருத்து அமைப்பு முறை மாறுபட்டுக் காணப்படுகின்றது. எழுத்தாக்க மரபின் 2-ஆம்

செய்யுள் கே. ப. பிரதியிலும் க. த. பிரதியிலும் 'மொழி காரண மாகி' என்று தொடங்கி எழுத்தின் பொது விளக்கமும் எழுத் ததிகாரப் பகுப்பும் பெயரின் விரியும் விளக்கப்பட்டுள்ளன. பி. பொ பிரதியில் 'பெயர், எண், முறை' என்று தொடங்கி எழுத்ததிகாரப் பாகுபாடும் பிற்பகுதியில் எழுத்தின் பொது விளக்கமும், பெயரின் விரியும் தரப்பட்டுள்ளன. பெயர்களைத் தொகுத்துச் சொல்வதிலும் இரண்டிற்கும் வேறுபாடு காணப் படுகின்றன. கே. ப. பிரதியிலும் க. த. பிரதியிலும் விடம், அமுதம், ஆண், பெண், அலி என்ற யாப்பதிகாரத்தில் கூறப் படும் பாகுபாடும் எழுத்ததிகாரத்திலே சேர்க்கப்பட்டுள்ளன. ஆனல் இப்பிரிவு பி. பொ. பிரதியில் காணப்படவில்லை.

எழுத்தாக்க ம'பு 3ஆம் சூத்திரம் 'எண், முதல் சார்பு இரண்டு' என்று கே ப. பிரதியிலும் க. த. பிரதியிலும் தொடங்கி எழுத்துக்களின் எண்ணின் தொகையும் வகையும் விரியும் விளக்கப்பட்டுள்ளன. பி. பொ. பிரதியிலோ 'அகராதி ஈராறு உயிர்' என்று ஆரம்பித்து எழுத்துக்களின் எண்ணின் தொகையும் வகையும் விரியும் விளக்கியதோடு 'முறை' என்ற வேருெரு பொருளையும் விளக்குகிறது. இவ்வாருன வேறு பாடுகள் வேறு பல செய்யுள்களிலும் அமைந்துள்ளன. அவ்வாறே இலக்கணக் கோட்பாட்டு முறையிலும் இரண்டிற் கும் (பி. பொ. பிரதி ஒன்று; க. த. பிரதியும் கே. ப. பிரதியும் மற்ருென்று) வேறுபாடு காணப்படுகிறது. இறந்தகால இடை நிலைகளை விளக்கும் முறையில் (பி. பொ. பி 25-ஆம் செ. பக், 44, க. த. பி. பதமரபு 4) அமைந்துள்ள வேறுபாட்டால் உணரலாம்.

இவ்வாறு எண்ணிக்கையிலும், கருத்தைக்கூறும் முறையி லும், கருத்திலும், கோட்பாட்டிலும் வேறுபாடுகள் பி. பொ. பிரதிக்கும், க. த. பிரதி, கே. ப. பிரதி ஆகிய இரண்டுக்கும் காணப்படுவதால் பி. பொ. பிரதி வேறு ஏதோ ஒரு மூலப் பிரதியிலிருந்து பெயர்த்து எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று எண்ண வேண்டியுள்ளது.

மூன்று பிரதிகளுக்கும் உள்ள தொடர்பைக் கீழ்க்காணும் வரைபடத்தின் மூலம் தெளிவுபடுத்தலாம்.




ஆயினும் பாட வேறுபாடு, கருத்தமைப்பு வேறுபாடு, கருத்து வேறுபாடு, கோட்பாடு வேறுபாடு எவ்வாறு வந்தன என்ற கேள்விக்குப் பதில் கூற முடியாத நிலையில் இன்று நாம் உள்ளோம். இன்னும் பிரதி ஏதாவது கிடைத்தால் ஓரளவு விடை காண முடியும். வேறுபாடு மிகுதி காரணமாகவே இங்கு மூன்று பிரதியும் தனித்தனியே பதிப்பிக்கப்பட்டுள்ளன. க. த. பிரதியில் மட்டும் பாடவேறுபாடுகள் ஆங்காங்கே சுட்டிக்காட்டப்படும்.

## 2. பிரதிகளின் நிலை

பி. பொ. பிரதி மையினால் தெளிவான எழுத்தில் எழுதப் பெற்றிருக்கிறது. ஆயினும் ஆங்காங்கே சிறு அடித்தல் திருத்தல் காணப்படுகிறது. இன்னொருவர் படித்து திருத்தம் செய்தாரா, பிரதி செய்தவரே மறுமுறை படித்துத் திருத்தம் செய்தாரா என்பது தெரியவில்லை. பொதுவாக எழுத்துப்பிழைகள், ஏகார ஓகாரங்களுக்குக் கொம்பு சேர்த்தல், சொற்பிழை, செய்யுளில் வரிபிரித்து அறியக் கோடிடுதல் முதலிய திருத்தங்கள் காணப்படுகின்றன.

எழுத்துப்பிழை திருத்தம் :

1. ரகரத்தை றகரமாக்கல் : சோரு>சோறு
இருவேனிலாரு மனைமாலை>இருவேனிலாறு
மனைமாலை — அகத்திணை மரபு 2 . 4
மொழியெனவாருங்>மொழியெனவாறுங்—எச்சமரபு
124

2. றகரமெய் 'ர்க்' ஆக ஆக்கல் : (இடை)யு
யிற் குற்றொற்று>யுயிர்குற்றொற்று

3. ரகரத்தை ழகரமாக்கல்:
வருவில்வாங்>வழுவிலாங்—எச்சமரபு 6.1

4. நகரத்தை னகரமாக்கல் : முதநிலை > முதனிலை—
பதமரபு 2 . 2

5. விடப்பட்ட எழுத்தைப் புதிதாகச் சேர்த்தல் .
(செய்யு)விற்பும்>விறப்புங் (புள்ளியில் மேலே பகரத்தை
எழுதியதால் எழுத்துப்பிழையையும் நீக்கிவிட்டது) —
வினை மரபு 7.1
வினையஞ்சிலக் குறிப்பாகுஞ்சினை > வினையெஞ்சிலக்
குறிப்பாகுஞ்சினை ஷ 3 வரி (சிறப்பின்) வ.........யெ
யென் — வழாயெ — எச்சமரபு 15.1
நமனகுறிற்>நமனக்குறிற்—எழுத்தாக்க மரபு . 7.4

6. மிகையெழுத்தை அடித்தல் :
தொளிதல்>தெளிதல் — எச்சமரபு 16.3 வது வரி

7. மொழிமாறுற்றுதலடி தொறும் > மொழிமாறுற்றுதலடி
தோறும் ஷ 4வது வரி
கொள்ளுமே > கொளுமே—பதமரபு 2.4

8. புதிய சொல்லாகத் திருத்தல்:
மன்றயெ > மறையே — எச்சமரபு 15.1
(முயல்) பசுமும் புணர்வுமுற் பன்னிரண்டாய் >
பதமும் புணர்வுமுறப் பன்னிரண்டாய் —
எழுத்தாக்க மரபு 2.2

யியற்பொருப்பொருளிற் > யியற்பேர் அப்பொருளிற்—
எச்சமரபு 17.1

9. மெய்யை உயிர்மெய்யாக்கல் :
விளைவது தான்றியாமை > விளைவது தானறியாமை —
எச்சமரபு 7.1

10. உயிர்மெய்யெழுத்துக்களைத் திருத்தல் :
சொல்லரட்டு > சொல்லிரட்டு— எச்சமரபு 11.1

11. சொல்லைச் சேர்த்தல் :
வேற்றுமை யுவமை வினை பண்பு > வேற்றுமை
யுவமையும்மை வினை பண்பு—எச்சமரபு 12.4

இவ்வாறு பல திருத்தங்கள் செய்யப்பட்டிருப்பினும் நூல் செம்மையாக அமைந்துவிட்டது என்று கூறமுடியாது. இன்னும் திருத்தம் செய்யவேண்டிய இடங்கள் பல உண்டு. அவை பதிப்பில் ஆங்காங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

கே.ப பிரதி ஓலைச்சுவடியில் உள்ளது முழுமையும் பார்க்க முடியாவிடினும் நூலுக்குள் உள்ள முரண்களைக் காண முடிகிறது. அவை பதிப்பில் ஆங்காங்கே குறிப்பிடப்பட்டுள்ளன. உரையும் திருத்தம் செய்யவேண்டிய நிலையில் உள்ளது.

இந்நிலையில் பதிப்பாசிரியருக்கு ஒரு சிக்கல் தோன்றுவது இயல்பே. மூலத்தில் உள்ளது உள்ளவாறே பதிப்பிப்பதா அல்லது திருத்திப் பதிப்பித்து மூல பாடத்தை அடிக்குறிப்பில்

கொடுத்துவிடுவதா என்ற தடுமாற்றம் எழும். இங்கு இரண்டாவது முறையே கையாளப்பட்டுள்ளது. ஏனெனில் இந்நூலைப் படிப்போர் மிகக் குறைவான எண்ணிக்கை உடையவராக இருப்பர். திருத்தம் செய்யாமல் விட்டுவிட்டால் நூலைப் படிக்க முற்படுபவரும் படிப்பதற்குத் தடுமாறக்கூடும்; அதனால் ஊக்கம் குறைந்துவிடும் என்ற எண்ணமே திருத்தத்தைச் செய்யத் தூண்டியது.

### 3. நூல் கூறும் பொருள்

சுவாமிநாதம் ஒரு ஐந்தமிழ் இலக்கண நூல். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்று ஐந்து வகையாகப் பிரித்துக்கொண்டு ஆராய்கிறது. ஒவ்வொரு இயலும் மூன்று மூன்று இயல்களாகப் பிரித்துக் கொள்ளப்பட்டுள்ளது. நூலின் முற்பகுதியில் நூல்வழி என்ற தலைப்பில் பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் என்ற இரண்டும் விளக்கப்படுகிறது.

எழுத்ததிகாரம் எழுத்தாக்கமரபு, பதமரபு, புணர்ச்சி மரபு என்ற மூன்று பிரிவுகளை உடையது. பெயர், எண், முறை, பிறப்பு, வடிவம், அளவு, முதனிலை, இறுதி நிலை, இடைநிலை, (மெய்ம்மயக்கம்), போலி, பதம், புணர்ச்சி என்று பன்னிரண்டாக வகைப்படுத்தி அவற்றில் முதல் பத்து வகையையும் எழுத்தாக்க மரபு பேசுகின்றது. பதவியல் என்பது பகுபதம், பகாப்பதம் என்பவற்றை விளக்கி வினைப்பகுதி, விகுதிகள், இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் ஆகியவற்றைப் பேசுகிறது. புணர்ச்சியின் பொது இலக்கணத்தைக் கூறி முப்பத்தொரு புணர்ச்சி விதிகளையும் தொகுத்து விளக்கிவிட்டு இறுதியில் வடமொழி—தமிழ் ஆகிய இரு மொழிகளுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை விளக்கி தமிழாக்க விதிகளையும் புணர்ச்சி மரபு பேசுகிறது.

சொல்லதிகாரம் பெயர்மரபு, வினை மரபு, எச்சமரபு என்ற மூன்று பிரிவுகளை உடையது. சொல்லின் பொது

இலக்கணமும் சொற்களின் பல்வேறு வகைப் பாகுபாடும், வேற்றுமையின் வகையும் விரியும் பெயர் மரபு உணர்த்துகிறது. வினையின் பொது விளக்கமும், வினைப்பாகுபாடும் கூறி வினை முற்று விகுதிகளையும், எச்சங்களையும் வினை மரபு விளக்கு கின்றது. இடைச்சொல்லின் இலக்கணம், சில இடைச்சொற் களின் பொருள்கள், உரிச்சொல்லின் இலக்கணம், வழு வழு அமைதி, பொருள்கோள்கள் ஆகியவற்றை எச்சமரபு உணர்த்துகிறது.

அகத்திணைமரபு, கைக்கோண்மரபு, புறத்திணைமரபு என்ற மூன்று பிரிவுகளைக் கொண்டது பொருள் அதிகாரம்.

அகத்திணை வகைகள், அவற்றிற்குரிய முதல், கரு, உரிப் பொருள்கள், ஐந்திணையின் வகை, அவற்றின் விளக்கம் ஆகிய வற்றை அகத்திணை மரபு பேசுகின்றது. களவியல், வரைவியல், கற்பியல் என்று மூன்றிற்குரிய கிளவிகளையும், அகப்பாட்டு உறுப்புக்களின் தொகை வகைகளையும் உணர்த்துகிறது கைக்கோண் மரபு. புறத்திணை ஏழையும், பொதுவியலையும் புறத்திணை மரபு பேசுகிறது.

யாப்பதிகாரம் உறுப்புமரபு, பாவினமரபு, பிரபந்தமரபு என்று மூன்று வகையாக உள்ளது. யாப்பு உறுப்புகளின் வகையும் அவற்றின் விரியும் உறுப்புமரபு உணர்த்துகின்றது. நான்கு வகைப் பாக்கள், அவற்றின் இனம் ஆகிய இரண்டை யும் பாவினமரபு பேசுகிறது. செய்யுளின் வகையும் பிரபந்தங் களின் இலக்கணமும் பொருத்தத்தின் வகையும் அவற்றின் இலக்கணமும் பாகமும் உணர்த்துகின்றது பிரபந்த மரபு.

அணியதிகாரம் பொருளணிமரபு, சொல்லணிமரபு, அமைதிமரபு என்று மூன்று பிரிவுகளை உடையது. பொரு ளணி மரபு முப்பத்தொரு பொருளணிகளின் இலக்கணத்தை விளக்குகின்றது. சொல்லணி மரபு; மடக்கு அணியையும் இரு பத்து மூன்று சித்திர கவிகளையும் உணர்த்துகின்றது. அமைதி மரபு வழு அமைதியை விளக்குகின்றது.

## 4 பாயிரம் பற்றிய குறிப்பு

தமிழகத்தில் ஆராய்ச்சி எவ்வாறு நடைபெற்று வந்தது என்பது பற்றி அறிந்துகொள்ள வரலாற்றுக் குறிப்பு எதுவும் கிடைக்கவில்லை. முச்சங்கம் பற்றிய இறையனார் களவியல் உரை, அதற்கு ஒரு வகையில் விடைதருகிறது. ஆனால் அதன் உண்மையான விளக்கம் இன்னும் தெளிவு செய்யப் படாமலே இருக்கிறது. ஆயினும் தொல்காப்பியத்தில் செய்யுளியலிலும் (164 முதல் 170 வரை) மரபியலிலும் (91 முதல் 111 வரை) உள்ள நூற்பாக்கள் நூலாராய்ச்சி நடைபெற்றதை இலக்கண முறையில் பேசுகிறது. இதன் மூலம் நூலாராய்ச்சி செய்யும் முறையும் நூல் பற்றிய விவரத் தொகுப்பு முறையும் பற்றிகூட அறிஞர்கள் சிந்தித்து சில விடை கண்டிருக்கிறார்கள். என்று அறிந்துகொள்ள முடிகிறது. இதுவே பிற்கால இலக்கண நூல்களில் பாயிரமாக வளர்ந்து உருபெற்றது. பாயிரம் இலக்கணத்தில் முன்னுரையாக அமைந்துள்ளதால் அதன் உண்மைச் சிறப்பு அறியப்படாமலே போய்விட்டது. ஆராய்ச்சித் துறையில் இந்நூற்றாண்டில் புதிய சகாப்தத்தை ஏற்றுக்கொண்டுள்ள தமிழுலகம் பழைய முறையின் சிறப்பையும் குறை நிறைகளையும் அறிந்துகொள்ள முயலவேண்டும்.

பாயிரம் இப்போது பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் என இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டு விளக்கப்படுகிறது.

பொதுப்பாயிரம் நூல்பற்றிய பொது ஆராய்ச்சியின் வழிகாட்டியாக அமைந்துள்ளது. அவற்றுள் நூல்பற்றிய செய்திகளில் நூலாராய்ச்சியில் நம் முன்னோர் கண்ட பொது உண்மைகள் பொதிந்து கிடக்கின்றன. நூலின் வகை, எழுமதம், பத்து குற்றம், பத்து அழகு, முப்பத்திரண்டு உத்தி ஆகியவை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன.

நூலின் வகை வரலாற்று ஆராய்ச்சியைப் பின்பற்றியது. ஒரு துறையில் உள்ள பல நூல்களை ஒப்பிட்டால்

முதல்நூல், வழிநூல், புடைநூல் என்ற பாகுபாட்டின் நுட்பம் புலனாகும். வரலாற்று நிலையில் நூலை மதிப்பிடும் முறையாக நூலின் வகையைக் கொள்ள வேண்டும்.

இறைவன் சொன்னது முதனூல் என்பதை அப்படியே ஏற்றுக்கொள்ளாமல் மூலநூல் (Original work) என்று கொள்ளலாம். தமிழ் இலக்கணங்களுள் தொல்காப்பியத்தை முதனூல் என்று கூறலாம். தமிழில் முதல் இலக்கண நூல் என்ற காரணத்தால் மட்டுமின்றி இலக்கண அமைப்பிலும் மொழியாரய்ச்சி முறையிலும் ஏனைய நூல்கள் பிற்பட்டே நிற்கின்ற காரணத்தாலும் தொல்காப்பியத்திற்கு முதனூல் தகுதி தரப்பெறுதல் வேண்டும்.

1. ஒப்பிலக்கண ஆராய்ச்சியில் பொதுவாகவும் திராவிட மொழி ஒப்பிலக்கண ஆராய்ச்சியில் சிறப்பாகவும் கால்டுவெல் ஐயர் எழுதிய **A comparative grammar of the Dravidian or South Indian family of languages** என்பது முதனூலாகக் கருதப்படுகிறது.

முதனூல் என்பதைத் தனிநிலையில் கொள்வது ஒரு முறை; ஒப்பு நிலையில் கொள்வது மற்றொரு முறை.

நன்னூல் ஒரு வழி நூலே. ஆயினும் இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய பிற இலக்கண நூல்களை நோக்க ஒப்பு நிலையில் முதனூல் என்று கூறுவதில் தவறில்லை. நூலை இவ்வாறு வேறுப்படுத்திப் பார்ப்பது ஆராய்ச்சியில் நடைபெறும் திருப்பு முனைகளைக்காட்ட உதவும்.

எழுவகை மதமும் முப்பத்திரண்டு உத்தியும் நூல் எழுதுவோன் கைக்கொள்ள வேண்டிய நெறிமுறைகளையும் நூலை ஆராய்வோர் நூலை வரலாற்று நிலையில் வைத்து ஆராயும் சில வகைகளையும் சுட்டிக்காட்டுவதாகக் கொள்ளலாம். உத்திகளில் சில பொது நிலையிலும் விளக்கப்பட்டுள்ளன.

ஓத்து,முறை, வைப்பு, தொகுத்துச் சுட்டல், உரைத்தும் என்றல், போன்றவை நூல் எழுதும் பொதுமுறையை காட்டுகின்றன.

குற்றமும், குணமும் நூல் மதிப்பீட்டுக் கருவிகள். நூலை வரலாற்று முறையில் மட்டுமல்லாமல் தனிநிலையில் அதாவது வருணனை நெறிப்படி (descriptive techniques) ஒரு நூலில் அமைய வேண்டாதன—குற்றமும், அமைய வேணடியன—குணமும் என்னென்ன என்று விளக்குவதே பத்துவகை குற்றமும், பத்துவகை அழகும் ஆகும்.

இன்றைய மொழியியல் ஆராய்ச்சியில் அதுவும் சிறப்பாக மாற்றிலக்கண மொழியியலில் மதிப்பீட்டுமுறை (Evaluation procedures) என்று குறிப்பிடுவதே பாயிரத்தில் குற்றமாகவும் குணமாகவும் குறிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு இலக்கண நூல்களையும் ஏனைய நூல்களையும் கூட மதிப்பிட இவை பயன்படும். சாம்ஸ்கி என்ற மொழியியல் அறிஞர் இவை பற்றிச் சற்று விரிவாக **Current Issues In Linguistic Theory** என்ற நூலில் (பக் 28-55) விளக்கியுள்ளார்.

காட்சி நிறைவு (observational adequacy), வருணனை நிறைவு (descriptive adequacy), விளக்க நிறைவு (explanatory adequacy) என்ற மூன்று நிறைவுகள், இலக்கணத்தில் அமைந்திருக்க வேண்டும் என்று கூறுவார் அவர்.

மொழியின் அமைப்பில் உள்ள எல்லா உண்மைகளையும் விட்டுவிடாமல் எடுத்துச் சொல்லுதல் காட்சி நிறைவாகும். தொல்காப்பியத்தில் மொழிமுதல் எழுத்துக்கள் இறுதி எழுத்துக்களில் காட்சி நிறைவு காணப்படுகிறது. ஓரெழுத்தொருமொழி பற்றிய செய்தியில் காட்சி நிறைவு காணப்படவில்லை. மொழி மரபில் 'நெட்டெழுத்து ஏழே ஓரெழுத்தொரு மொழி' (தொல். 43) என்று உயிரெழுத்துக்கு

மட்டும் பொருந்துவதாகக் கூறியுள்ளார். ஆனால் தா, வா, போ போன்ற சொற்களும் ஓரெழுத்தொரு மொழியாகக் கருதப்படுவதால் உயிர் மெய்யையும் சேர்த்துக் கூறாதது காட்சி நிறைவு இல்லாமல் குன்றக் கூறல் என்ற குற்றம் ஏற்பட்டு விடுகின்றது. தமிழ்மொழி அமைப்பில் இன்னும் எத்தனையோ உண்மைகள் வெளிக்கொணரப்படாமலேயே இருக்கின்றன. அதாவது மொழி அமைப்பு விளக்கத்தில் காட்சி நிறைவு ஏற்பட்டு விட்டதாகக் கூறமுடியாது.

மொழி அமைப்பை விளக்கும்போது ஒரு மொழி பேசுவோர் அம்மொழி பற்றிய இயல்பாக அறிந்துள்ள இயல்பு நுண்ணறிவு வெளிப்படும் வகையிலும் மொழியில் அடிப்படையாக அமைந்துள்ள ஒழுங்கைப் பொதுமைப் படுத்திக் கூறும் வகையிலும் வருணனை நிறைவு அமையும் *. அதாவது மொழியில் சில சொற்களையோ வாக்கியங்களையோ வைத்து இலக்கணம் எழுதுபோதும்கூட பொதுமைப்படுத்தி—மொழி முழுமைக்கும் பொருந்தும் வகையில் பொதுமைப்படுத்தி கூற வேண்டும். தொல்காப்பியர் மெய்ம்மயக்கம் கூறும்போது மொழியில் வராத மெய்ம் மயக்கங்களையும் சேர்த்துக்கூறியதும், சில புணர்ச்சி முறைகளைக் கூறும்போது (கொற்றன், சாத்தன் போன்ற சொற்கள் வல்லெழுத்து முதலாக உடைய மகளின் பெயரோடு சேரும்போது னகரம் வருமொழிக்கேற்ப மாறுகிறது என்று சொல்லாமல் அம் சாரியை வருவதாகக் கூறியது (தொல். 350) நேரடியாகக் கூறாமல் சற்று சுற்றி

---

* ...a correct account of the linguistic intution of the native speaker and specifies the observed data (in particular) in terms of significant generalisations that express underlying regularities in the language. N. Chomsky (*current issues in Linguistic theory p. 28.*)

வளைத்துக் கூறியதும் வருணனை நிறைவு பற்றிய அடிப்படை சிந்தனையை உடையவராக அவர் இருந்திருக்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது.

விளக்க நிறைவு என்பது மொழிக்கு இருக்கும் பல இலக்கணங்களில் சிறந்தது எது என்பதைத் தேர்ந்தெடுக்கும் முறையைக் கூறுவது.* நமது இலக்கண ஆசிரியர்கள் கூறும் குற்றமும் குணமும் விளக்க நிறைவையே சுட்டி நிற்பதாகக் கொள்ளவேண்டும். ஆகவே இக்கொள்கை அடிப்படையில் இலக்கண நூல்களை ஆராயும் முயற்சி இப்போதுதான் தொடங்கியுள்ளது. நமது இலக்கணங்களின் குறை நிறைகளை விஞ்ஞான முறையில் அறிந்து கொள்வதற்கு இத்தகைய ஆராய்ச்சியே துணைசெய்யும்.

இக்கருத்து அடிப்படையில் குற்றமும் அழகும் ஆராயப்படுமானால் புதிய விளக்கம் கிடைப்பதோடு ஆராய்ச்சி முறை பற்றிய புதிய கருத்துக்களும் உண்டாகக்கூடும். உதாரணமாக இதுவரையில் மொழியியல் ஆராய்ச்சி-சிறப்பாக விதிமுறை ஒலியியன் ஆராய்ச்சி (Systematic phonology) ஒரு குற்றம் சில காரணங்களுக்காகக் குணமாகக் கொள்ளலாம் என்பதை வெளிப்படுத்தியுள்ளது. வெற்றெனத் தொடுத்தல் என்று நம்முடைய இலக்கண ஆசிரியர்கள் கூறியதை ஒத்து மொழியியலார் Vacuous rule என்று குறிப்பிடுவர். ஆனால் இலக்கணத்தில் பொதுமையும் எளிமையும் ஏற்படுமானால்

---

* (Explanatory adequacy) is achieved when the associated linguistic theory provides a general basis for selecting a grammar that achieves the second level of success (i e. descriptive adeqnacy) over other grammars consistent with the relevent observed data that do not achieve this level of success.

அந்த விதியை யேற்கொள்வதில் தவறில்லை என்று கொண்டு வெற்று விதியை எங்கெங்கு அமைக்கலாம் என்பதைப்பற்றியும் அமைக்கும் முறை பற்றியும் விரிவாக ஆராயத்தலைப்பட்டுள் ளனர். இம்முறை தொல்காப்பியரே கையாண்டுள்ளார் என்ற செய்தி நமக்கு வியப்பையும் பெருமிதத்தையும் தருகின்றது. (செ. வை. சண்முகம். 'தொல்காப்பியரின் சில இலக்கண உத்திகள்')

இம்முறையில் பத்துவகை குற்றமும் பத்துவகை அழகும் புதிய கோணத்தில் விளக்கப்பட்டால்தான் இன்றைக்கும் தேவையான கருத்தாக அவை அமைய முடியும்.

ஆசிரியனின் இயல்பு, நுவலுந்திறம், கொள்வோன் கோடற்கூற்று முதலியன நம்முடைய மக்களின் கல்விபற்றி கோட்பாடு காட்டுவனவாக அமைந்துள்ளன. இன்றைய நிலையில் அவற்றைப்பற்றி கல்வியாளர்களே விவாதித்து முடிவு காணவேண்டும். கோட்பாட்டு நிலையில் தமிழர்களின் கல்விக் கொள்கையை இங்கேதான் நாம் சந்திக்கிறோம்.

சிறப்புப்பாயிரம் என்பது நூல் பற்றிய செய்திகளை கொண்டுள்ளது. இது Biographical and bibliographical information என்று கொடுப்பது போன்று உள்ளது. இன்றைய நூலின் மேலட்டையும் முன்னுரையும் தரக்கூடிய செய்திகளை அக்காலத்தில் சிறப்புப்பாயிரமாகக் கருதிக் கூறப் பட்டுள்ளது என்று நாம் கொள்ளலாம். இங்கும் இன்றைய மரபுகளை ஆராய்ந்து சிறப்புப்பாயிரத்தோடு ஒப்பிட்டுப்பார்த் தால் சிறப்புப்பாயிரத்தை நன்ருகப் புரிந்துகொள்ளவும் இன்றைய அறிவின் வளர்ச்சியாலும் சமூக மாற்றத்தாலும் ஏற்பட்ட மாற்றத்தை அறிந்து கொள்ளவும் முடியும்.

## 5. நூல் மதிப்பீடு

எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் தற்கால மொழியியல் அடிப்படையில் மதிப்பீட்டு ஆராய்ச்சிக்கு இங்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. முதலில் சுவாமிநாதம் தனக்கு முன்

னெழுந்த இலக்கண நூல்களை எவ்வாறு பயன்படுத்திக் கொண்டுள்ளது என்பதை விளக்கும் ஆராய்ச்சி வரலாற்று நிலையிலும் சாமிக்கவிராயரின் உளப்பாங்கை விளக்கும் நிலையிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது: அடுத்து சாமிகவிராயரின் தனிச்சிறப்பை விளக்கும் நிலையில் அவர் நூலில் காணப்படும் புதுமைகள் மொழி அமைப்பு நிலையிலும், கோட்பாட்டு நிலையிலும் விளக்கப்பட்டுள்ளன.

## 5. 1. சுவாமிநாதமும், முன்னூல்களும்

எல்லாத் தமிழ் இலக்கண நூல்களிடையேயும் சில கருத்துகள் (உயிர் பன்னிரண்டு, மெய் பதினெட்டு, உயிர், மெய் ஆகியவற்றின் பகுக்கும்முறை. உயிரெழுத்துக்களின் பிறப்பு, எழுத்துக்களின் மாத்திரை) பெரிதும் ஒற்றுமையுடைத்தாகக் காணப்படும். அதனால் எல்லா இலக்கண நூல்களும் ஒன்றை யொன்று தழுவியதாகக் கொள்ள முடியாது; கொள்ளவும் கூடாது. நூல் முழுமையும் பார்த்தால் ஏதாவது ஒரு நூலையே பெரிதும் அடிப்படையாகக்கொண்டு எழுதப்பட்டிருப்பது தெரியவரும். அந்த நூலை—அடிப்படையாகத்தழுவிக் கொள்ளப்பட்ட நூலை முதலில் வரையறுத்துக்கொள்ளவேண்டும். சில சமயத்தில் இதில் தவறு ஏற்பட்டுவிடுவது உண்டு. நேமிநாதம், பாயிரத்தில் அந்நூல் தொல்காப்பியக்கடலைக் கடக்க உதவும் படகு என்று குறிப்பிட்டுள்ளதால் தொல்காப்பியத்தையே பின்பற்றி எழுதியதாகக் கருதப்பட்டது. ஆனல் எழுத்ததிகாரத்தை விரிவாக அறிஞர்கள் ஆராய்ந்த போது வீரசோழியத்தையே பெரிதும் எழுத்ததிகாரம் தழுவிக் கொண்டுள்ளதாகக் கண்டுள்ளார்கள். எனவே ஒவ்வொரு இலக்கண நூலையும் வரலாற்று நிலையில் ஆராயும்போது அந் நூல் தனக்கு முன்னெழுந்த இலக்கண நூல்களை அடிப்படையாகக்கொண்ட நூல்தானா என்பதைச் சரியான முறையில் வரையறுக்கவேண்டும். பின்பு ஆராய எடுத்துக்கொண்ட நூல் அடிப்படையாகக் கொண்ட நூலை மாற்றியும், சேர்த்தும், திரித்தும், தொகுத்தும், விரித்தும் தழுவிக் கொண்டவற்றை

அடிப்படையான நூலுக்கு எழுந்த விமர்சனமாகக் கொள்ளலாம். மேலும் நூலாசிரியர்கள் தாங்கள் அந்நூலை எவ்வாறு ஆராய்ந்து அறிந்து வைத்துள்ளார்கள் என்பதையும் நாம் அறிந்துகொள்ளமுடியும். அடிப்படையாக இல்லாத பிற நூல்களை ஏற்றுகொண்ட இடங்களை அடிப்படை நூலில் ஆசிரியர் கண்ட குற்றங்குறை காரணமாகக் கருதித் தழுவிக் கொண்டார் என்று நாம் விளக்க முயலலாம்.

பொதுவாக ஒரு இலக்கணநூல் தனக்கு முன்னெழுந்த பல இலக்கணநூல்களையும் எங்கெங்கே தழுவிக்கொண்டுள்ளது என்று மட்டும் தொகுத்துக்கூறுவதால் நூலின் ஆதாரங்களைப் புரிந்து கொள்ளலாமே தவிர நூலாசிரியரின் எண்ணத்தையும் மதிப்பீட்டையும் கோட்பாட்டையும் அறிந்துகொள்ளமுடியாது: இலக்கண ஆராய்ச்சியில் வளர்ச்சியும், போக்கும் சரியாக வரையறுக்க முடியாமல் போகும்; நூலாசிரியனைப் பற்றியும் சரியான முறையில் புரிந்துகொள்ள தவறியவர்களாக நாம் ஆகிவிடுவோம். ஒவ்வொரு நூலிலும் சிற்சில கருத்துக்களை அங்கொன்றும் இங்கொன்றுமாக விளையாட்டாகப் பொறுக்கி எடுத்துக்கொண்டுள்ளார் என்ற எண்ணத்தை நம்முடைய ஆராய்ச்சி ஏற்படுத்திவிடும்.

சுவாமிநாதத்தில் எழுத்தும் சொல்லும் நன்னூலையே அடிப்படையாகக்கொண்டு எழுதப்பட்டுள்ளது. நன்னூல் அமைத்த பாகுபாட்டு முறை (Classificatory method)யையும் எழுத்ததிகாரப் பகுப்பு முறையையும் பின்பற்றியுள்ளதால் (செ வை. சண்முகம்-எழுத்திலக்கணப் போக்குகள், பெ. திருஞான சம்பந்தம்பிள்ளை மணிவிழா மலர் பக். 193-98) நன்னூலுக்குச் சுவாமிநாதம் பட்ட கடனைப்புரிந்துகொள்ளமுடியும். ஆயினும் இந்நூலாசிரியர் தொல்காப்பியம், நேமிநாதம், இலக்கண விளக்கம், இலக்கணக்கொத்து, இலக்கணவிளக்கச் சூறாவளி, முத்துவீரியம், பிரயோகவிவேகம், ஆகியவற்றின் கருத்துக்களையும் பின்பற்றியுள்ளார். இது நன்னூலுக்கு அவர் தரும் மதிப்பீடாக அதாவது நன்னூலில் கண்ட குறையை வேறு நூல்களின்

துணைகொண்டு திருத்திக் கொண்டதாகக் கொள்ளலாம். இவற்றை சாமிகவிராயர் ஏனைய நூல்களைத் தழுவிக் கொண்டதற்குரிய காரணமாகக் கொள்ளலாம்.

## 5. 1. 1. சுவாமிநாதமும் தொல்காப்பியமும்

தொல்காப்பியத்தில் கூறப்பட்ட சில கருத்துக்கள்-பிற நூல்களில் ஏற்றுக்கொள்ளப்படாமல் விடப்பட்டுள்ள சில கருத்துக்கள் சுவாமிநாதத்தில் தழுவிக்கொள்ளப்பட்டுள்ளன. அதாவது தொல்காப்பியத்தில் கூறப்பட்ட கருத்துக்கள் மீண்டும் சுவாமிநாதத்தில் மட்டுமே பேசப்பட்டுள்ளன.

இடைச்சொல்லின் ஒரு சிறப்புப்பண்பாகத் தொல்காப்பியர் 'தம்மீறு திரிதல்' (தொல்-சொல். 251-3) (இடைச்சொற்களின் ஈறு மாற்றுவடிவம் பெற்று வருதலை அதாவது மன் என்ற இடைச்சொல் மன்னை என்று ஈறு திரிந்து வருதல்) என்று விதந்து கூறியுள்ளார். இக்கருத்து சுவாமிநாதத்தில் 'ஒருபொழுது சில ஈறு திரிந்தும் வரும்' (54.3) என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சொல்லதிகாரத்தில் கிளவியாக்கத்திலும் இத்தகைய ஒரு செய்தி காணப்படுகிறது.

இனத்தைச் சுட்டாத பெயரோடு வரும் பெயரடை இனத்தைச் சுட்டாது வருதல் செய்யுளுக்கே உரிய வழக்காக தொல்காப்பியர் குறிப்பிடுவார்.

> இனச் சுட்டில்லாப் பண்புகொள் பெயர்க் கொடை
> வழக்காறல்ல செய்யுளாறே (தொல். சொல். 18)

ஆனால் நன்னூல் வெளிப்படையாகவும் இலக்கண விளக்கம் குறிப்பாகவும் இத்தகைய தொடர்கள் செய்யுளுக்கும் வழக்குக்கும் உரியதாகப் பேசும்.

பொருள் முதல் ஆறும் அடைசேர் மொழியினம்
உள்ளவும் இல்லவும் ஆம் இருவழக்கினும் (நன். 401.)

பொருண் முதல் ஆறும் அடைசேர் மொழியினம் உள்ள
தற்கும் இல்லதற்கும் ஒரோவழி (இ. வி. 312)

ஆயினும் சுவாமிநாதம்

'இனம் உளபண்பாம் வழக்கில் இலதாம் செய்யுளுக்கே' என்று செய்யுளுக்கே உரியதாக மட்டும் கூறிச்சென்றது தொல்காப்பிய உண்மையைப் புறக்கணிக்க முடியாத காரணத்தினல் ஆகும். ஆனல் மொழிப் பயிற்சி அடிப்படையில் நோக்கினுல் எல்லாவற்றிற்குமே வருவது என்பதே சரியாக அமையும்.

## 5. 1 · 2 நேமிநாதமும் சுவாமிநாதமும்

நேமிநாதத்தைப் பொருத்தவரையில் அது கூறிய முறையே சாமிகவிராயரை ஈர்த்திருக்கிறது. கருத்தளவில் தொல்காப்பியமே இரண்டிற்கும் மூலமாக அமைந்துள்ளது.

உயர்திணைப் பெயர்களை ஒவ்வொரு இலக்கண ஆசிரியரும் ஒவ்வொருவிதமாக விளக்கிச் சொல்லியுள்ளார்கள். தொல்காப்பியர் கருத்தைத் தொகுத்துப் பொதுமையாகக் கூறும் முறையில் நேமிநாதார்

சுட்டே வினை ஒப்பே பண்பே தொகுனளர
ஒட்டுப்பேர் எண்ணியற்பேற்............(நேமி. 30–1,2) என்று கொடுத்துள்ள விளக்கத்தை ஒட்டியே

சுட்டு, வினை, விடைச்சொல், உவமையினும்
தூண்டுபெயர் ஈறுனளர...............(சுவாமி 39.1,2) என்று சாமிகவிராயர் அமைத்துக் கொண்டுள்ளார் என்பது எளிதில் விளங்கும்.

இவ்வாறே தொகைநிலைத் தொடரில் பொருள் சிறந்து நிற்குமிடத்தைக் கொண்டு நேமிநாதத்தின் செல்வாக்கைக் காணலாம். தொல்காப்பியர்

'முன்மொழி நிலையிலும் பின்மொழி நிலையிலும்
இருமொழியலும் ஒருங்குடனிலையலும்
அம்மொழி நிலையாது அன்மொழி நிலையிலும்
அந்நான் கென்ப பொருள்நிலை மரபே.
(தொல். சொல். 419)

இக்கருத்தைத்தான் குணவீர பண்டிதர்

முன்மொழியும் பின்மொழியும் மூண்ட இருமொழியும்
அன்மொழியும் என்று இவற்றிலாம்...
(நேமி. 63. 1,2)

என்று கூறிச் சென்றார். இந்த வரிகளே

'முன்மொழி, பின்மொழி, இருமொழி, அன்மொழியாய்ச்
சாற்றல்' என்று சாமி கவிராயர்க்கு (சுவாமி. 67,2)

வழிகாட்டியாக அமைந்திருக்க வேண்டும். ஏனெனில்

முன்மொழி, பின்மொழி, பன்மொழி, புறமொழி
என நான்கிடத்தும்... (நன். 370)

என்ற நன்னூல் வரிகளைப் பார்த்தால் உண்மையைத் தெற்றெனப் புரிந்து கொள்ளலாம்.

அன்மொழி விளக்கத்திலும் நேமிநாதமே சுவாமிநாதத்திற்கு ஆதாரமாக அமைந்துள்ளதைக் காணலாம்.

ஏனைத் தொகைச் சொற்கள் ஐந்தின் இறுதிக்கண்
ஆனபெயர் தோன்றின் அன்மொழியாம்

என்ற நேமிநாத வரிகளே (62. 1,2)

சாற்று அன்மொழி ஐந்தொகை ஈற்று
அங்ஙன வேறு ஒருபேர் தனைக் காட்டும்

என்று சுவாமிநாதமாக மாறியுள்ளது (66 · 14)

இங்ஙனம் சொல்லளவில் மட்டும் நேமிநாதத்தில் சாமிகவிராயர் ஏன் ஈடுபாடு கொண்டார் என்பது மேலும் ஆராய்தற்குரியது.

## 5. 1. 3. நன்னூலும் சுவாமிநாதமும்

சுவாமிநாதத்தின் எழுத்ததிகார அடிப்படை நன்னூலைத் தழுவியது என்று முன்னரே கூறப்பட்டது. சொல்லதிகாரத்தில் இலக்கண விளக்கமும் இலக்கணக் கொத்தும் செல்வாக்குப் பெற்று விளங்குகின்றன. யகரம் அடிநாவில் தோன்றுகிற செய்தி

'அண்ணக்குழியின் மிடற்றுக்கால் அடிநாப்பற்ற'
(சுவாமிநாதம் 17.2,3)

என்று கூறப்பட்டிருப்பது

'அடிநா அடியணம் உறயத்தோன்றும்'
என்ற நன்னூலுக்கு (82) கடமைப்பட்டிருப்பதைக் காட்டும்.

'எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரின்

பதமாம் ... ... ...
என்ற நன்னூல் வரிகளே

'எழுத்து ஒன்று பல பொருளைத் தரிற் பதம்'
என்ற சுவாமிநாத வரி (23.1) களாக மலர்ந்துள்ளன.

அஃறிணைக்குச் சுவாமிநாதம் 'அவரல்லது உயிர் உள்ளவும் இல்லவுமாய்ச் செல்வது அஃறிணை' (34.3) என்று கூறிய விளக்கம்

'மற்று உயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை' என்ற நன்னூல் (261.2) வரியின் தழுவலே.

ஏகார இடைச்சொல் ஆறு பொருளை உடையது என்றது (சுவாமி 4.3,4) நன்னூலைத் தழுவியே கூறியதாகும்.

நன்னூலைப் பின்பற்றியபோதிலும் நன்னூலுக்குப் பிறர் கொடுத்த விமர்சனத்தை ஏற்றுக்கொண்டு அம்முறையில் மாற்றி அமைத்துள்ளார்.

சிவஞான முனிவர் நன்னூல் எழுத்ததிகாரப் பாகு பாட்டை மறைமுகமாக இலக்கண விளக்கச் சூறுவளியில் மறுத்துள்ளார்.

எழுத்ததிகாரப் பாகுபாட்டு முறையான எண், பெயர் முறை, பிறப்பு...என்று தொடங்குவது பொருந்தாது என்று சுட்டிக் காட்டியுள்ளார். 'எண்ணுதற்கும் பெயர் கருவியாக லின் அதனை முற்கூறுதது முறையன்று' என்று இலக்கண விளக்கச் சூறுவளியில் (பக். 65) கூறியுள்ளதை மனதில் கொண்டே சாமிகவிராயர் பெயர், எண், முறை, பிறப்பு என்ற நன்னூலார் பகுப்பை முறையை மாற்றி கூறியுள்ளார்.

நன்னூல் ஒரே இடத்தில் கூறிய செய்தியைச் சாமிகவி ராயர் பிரித்து ஆங்காங்கே பேசியுள்ளார்.

எல்லையின்னும் அதுவும் பெயர் கொளும்
அல்லவினைகொளு நான்கு ஏழ் இருமையும்
புல்லும் பெரும்பாலும் என்மனார் புலவர் (318)

என்று வேற்றுமைகள் கொண்டு முடியும் சொல்லைத் தொகுத்து நன்னூலார் சொல்லியிருக்க சாமி கவிராயர்

இரண்டன் உருபு.........
.........ஏற்கும் வினைக்குறிப்பான் முற்று
மூன்று உருபு.........ஏற்கும் வினை, பேர் பயநிலையும்
நான்கு.........
.........வினையும் சிலபெயரும் முடிபு கூறிடுமே.

என்பன போன்று ஒவ்வொரு வேற்றுமையையும் அது கொண்டு முடியும் சொல்லையும் பிரித்து ஆங்காங்கே பேசுதலைக் காணலாம்.

நன்னூலிற்கும், சுவாமிநாதத்திற்கும் உரிய ஒப்புமை பகுதிகள்:

| | | | |
|---|---|---|---|
| நன். | 261 — | சுவாமி. | 34.3 |
| ,, | 267, 268, 269 — | ,, | 36 |
| ,, | 270, 271, 272 — | ,, | 37 |

| | | | | |
|---|---|---|---|---|
| ,, | 273, 274, 275 | — | ,, | 38 |
| ,, | 282 | — | ,, | 39.3, 4 |
| ,, | 323, 324 | — | ,, | 49 |
| ,, | 238 | — | ,, | 50 |
| ,, | 345, 351 | — | ,, | 53 |
| ,, | 454 | — | ,, | 54.1 |
| ,, | 375, 376 | — | ,, | 58.1, 2 |
| ,, | 380, 382 | | | |
| ,, | 388 | — | ,, | 61.1 |
| ,, | 411 முதல் | | | |
| | 419 வரை | — | ,, | 69 |

நன்னூலை அடிப்படையாகப் பின்பற்றியிருந்தும் பிற நூல்களைத் தழுவிக் கொண்ட காரணம் அந்த நூல்களைப் பற்றிப் பேசுமிடத்தில் விளக்கப்பட்டுள்ளது. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமெனில், நன்னூலில் சில கருத்துக்கள் விடுபட்டுள்ளன என்று தொல்காப்பியம், இலக்கண விளக்கம், பிரயோகவிவேகம் போன்றவற்றைச் சில இடங்களிலும், நன்னூலில் கூறிய கருத்துத் தவறெனக் கருதி இலக்கண விளக்கத்தைச் சில இடங்களிலும், கூறு முறையில் சில ஒருமைப்பாடு வேண்டும் என்றும், புதிய கருத்துக்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும், இலக்கண விளக்கம், இலக்கணக் கொத்து ஆகியவற்றைச் சில இடங்களிலும் பின்பற்றியுள்ளார் என்று நாம் கூறலாம்.

## 5. 1. 4 இலக்கண விளக்கமும் சுவாமிநாதமும்

இலக்கண விளக்கத்தைத் தழுவியதற்கு ஒரு காரணம் நன்னூல் கருத்து பொருத்தமற்றது என்று கருதியபோது இதன் கருத்து பொருத்தமாக அமைந்திருந்ததே ஆகும்.

சார்பெழுத்துக்களின் எண்ணிக்கையைக் கூறும்போது நன்னூலார் ஒலிகளின் எண்ணிக்கையோடு மொழியில் வருமிடங்களையும் சேர்த்து மிகைப்படுத்திக் கூறிவிட்டார். அள

பெடை—7 ஒலிகள். அவை மொழி முதல், இடை, கடை ஆகிய இடத்திலும் வருவதால், $7 \times 3 = 21$ என்று கூறி விட்டார் நன்னூலார். இலக்கண விளக்க உரையில் வரும் 'உயிர் மெய்யொழித்து ஏனையவெல்லாம் இட வேற்றுமையானன்றி எழுத்து வேற்றுமையால் அங்ஙனம் பல்காமையில்' என்ற குறிப்பு சாமிகவிராயருக்கு நன்னூலார் கருத்தின் தவற்றை உணர்த்தியிருக்கலாம். ஆகவே இலக்கண விளக்கத்தை மேற் கொண்டார் ஆயினும் இலக்கண விளக்கத்தார் கூறுதுவிட்ட ஆய்தக்குறுக்கத்தை நன்னூலைத் தழுவி ஏற்றுக்கொண்ட பண்பு, எதையுமே கண்மூடித்தனமாக ஏற்றுக்கொள்ளாத தன்மையை வெளிப்படுத்துகிறது.

தவறாக இல்லாவிட்டாலும் நன்னூலார் கருத்தைவிட இலக்கண விளக்கத்தாரின் கருத்தே சிறந்தது என்ற எண்ண மும் சில இடங்களில் இலக்கண விளக்கத்தைத் தழுவக் காரணமாக இருந்திருக்கலாம்.

சொல்லைத் தனிமொழி, தொடர்மொழி, பொதுமொழி என்ற பவணந்தியார் பாகுபாட்டை ஒத்துக்கொள்ளாது தனி மொழி, தொடர்மொழி என்ற வைத்தியநாத தேசிகர் பாகு பாட்டை ஒத்துக்கொண்டுள்ளார். (இ. வி. 160, சுவாமி. 34) அவ்வாறே குறிப்பு மொழியில் ஒன்றொழிப் பொதுச்சொல்லைச் சேர்த்துக் கொள்ளாதது (இ. வி. 170, சுவாமி. 36). ஆய்தம் தலையில் பிறக்கும் என்றது (இ. வி. 13, சுவாமி. 18.4) ஆகிய வற்றையும் இப்பிரிவில் அடக்கலாம்.

நன்னூலார் தன் காலத்தில் வழக்கு ஒழிந்தது என்று சில வற்றைக் கூறுதுவிட்டுச் சென்றுள்ளார். பழைய இலக்கியம் படிப்போர்க்கு அச்செய்திகள் தெரிந்திருக்கவேண்டும்; அதற்கு இலக்கணம் உதவி செய்யவேண்டும் என்ற அடிப் படையில் இலக்கணவிளக்கமும் அதைத் தழுவிச் சுவாமிநாத மும் தங்கள் காலத்தில் வழக்கு ஒழிந்தவற்றிற்கும் இலக்கணம் கூறியுள்ளன. இடைச்சொற்களில் எற்று (இ. வி. 263), மன்ற

(இ. வி. 270), தஞ்சம் (இ. வி. 271) ஆகியவற்றைச் சுவாமி நாதம் (55) கூறியது, பெயர்ச் சொற்களின் பால்பாகுபாடு பற்றிப் பேசும்போது தெய்வம், பேடு போன்றவை உயர்திணை யிடத்து உரிய பாலாய் வேறுபட்டு இசைக்கும் என்றது ஆகியவை உதாரணங்களாகும்.

நன்னூலார் கூறாத புதிய விதிகளை இலக்கண விளக்கம் கூறியபோது அவற்றையும் சுவாமிநாதம் தழுவிக் கொண் டுள்ளது. இதற்கு மொழியில் ஏற்பட்டுள்ள புதிய மரபு களையும் பிற்கால இலக்கண ஆசிரியன் ஏற்று இலக்கணம் எழுத வேண்டும் என்ற கோட்பாடே காரணமாக அமையும்.

நன்னூலார் முன்னிலை வினையைப் பற்றிக் கூறும்போது

ஐ, ஆய், இகர ஈற்ற மூன்றும்
ஏவலின் வருஉம் எல்லா ஈற்றவும் (335)

என்று கூறியதையும்

'அல், ஆல், ஏல், காண் ஈற்றவும்'

என்று இலக்கண விளக்கத்தார் புதியதாக மொழிந்ததையும் ஏற்றுக் கொண்டு சாமிகவிராயர்,

ஐ, ஆய், இம்மூன்று ஏவலில் வரும் இருபான் மூன்று
பின், ஏன், அல், ஆல், காண் முன்னிலை ஒருமை
(50. 3, 4)

என்று தொகுத்துரைத்து விட்டார்.

இம் முறையிலேயே நன்னூலார் கூறாத வியங்கோள் விகுதிகளைச் சுவாமிநாதம் (51.4) இலக்கண விளக்கத்தைப் பின் பற்றி விளக்கியுள்ளது. இறந்தகால விகுதிகளில் ஒன்றாக ககரம் கூறப்பட்டிருப்பதும், இலக்கண விளக்கம் புதுமை யாகக் கூறியதைத் தழுவியது ஆகும்.

நன்னூலும் இலக்கண விளக்கமும் கருத்து ஒத்திருந்த போதிலும் கருத்தைக் கூறு முறையில் சிறப்பாக அமைந்த

ஒரே காரணத்திற்காக இலக்கண விளக்கமே சுவாமிநாதத்திற்கு ஆதாரமாக அமைந்த இடங்களும் உண்டு. உதாரணமாக பெயர்ச் சொல்லை விளக்கும்போது நன்னூலார் படர்க்கைப் பெயரும் ஏனைய இடப்பெயர்களும் பொருள் உணர்த்து முறையை முன்னரும் (265) மூவகை இடம் என்னென்ன என்பதைப் பின்னரும் (266) கூறியுள்ளார்.

படர்க்கை வினைமுற்று நாமம் குறிப்பிற்
பெறப்படும் திணைபால் அனைத்தும்; ஏனை
இடத்தவற்று ஒருமை பன்மைப் பாலே (நன். 265)
தன்மை முன்னிலை படர்க்கை மூவிடனே (நன். 266)

ஆனால் இலக்கண விளக்கமோ இதே சூத்திரங்களை முன் பின்னாக மாற்றி (நன். 265—இ.வி. 167; நன். 266—இ.வி. 166) அமைத்துக்கொண்ட பாங்கிலேயே சுவாமிநாதமும் பேசுகிறது (36.1,2)

நன்னூலின் திருத்த நூலாக இலக்கண விளக்கத்தில் ஏற்பட்ட ஈடுபாடு தனிப்பட்ட முறையிலும் பெருகியிருக்க வேண்டும். அதனால் நன்னூல் கருத்தே ஒத்துக்கொள்ளத்தக்கதாக இருந்தும் அதைத் தள்ளிவிட்டு இலக்கண விளக்கத்தைப் பின்பற்றி விட்டது ஓரிடத்தில்.

மகரக்குறுக்கம் பற்றி விளக்கும்போது நன்னூலார்
'ணனமுன்னும் வஃகான் மிசையும் மக்குறுகும்' (நன். 96)

என்று கூறியதால், உண்ம், தின்ம் போன்ற இயல்பு ஈறான ணகர னகரங்களின் பின்னர் மட்டுமின்றி கொண்ம், சென்ம் போன்ற விதியீற்றின் பின்னரும் (ளகரமும் லகரமும் திரிந்து முறையே ணகரமாகவும் னகரமாகவும் மாறுதல்) மகரக் குறுக்கம் கொள்ள வழியிருக்கிறது. அந்த இரண்டு இடங்களிலும் மகரம் குறுகியே வருகிறது. ஆனால் இலக்கண விளக்கம் இரண்டாவது வகையான விதியீற்றில் மட்டுமே மகரம் குறுகும் என்றது குன்றக் கூறலாகவே அமையும்.

ளமெய் திரிந்த ணணமுனும் வருமொழி
லகாரமிசையும் மகாரம் குறுகும் (இ. வி. 22)

சாமிகவிராயர் இக்குறையை உணராது இலக்கண விளக்கத்தை போலவே,

லளத் திரிந்த ணணப்பின் வம்மென்
மக் குறுகும்' (18,3)

என்று கூறிவிட்டார்.

இலக்கண விளக்கத்தில் அவர் கொண்ட சற்றுக் கூடுதலான ஈடுபாடு இலக்கணத்தில் குன்றக் கூறல் என்ற பிழை ஏற்படக் காரணமாக அமைந்திருக்கலாம்.

இலக்கண விளக்கத்தைத் தழுவி எழுந்த சுவாமிநாதச் சூத்திரங்களின் முழு விவரமும் கீழே தரப்பட்டுள்ளது. ஆயினும் இரண்டிற்கும் சிறு சிறு வேறுபாடுகள் உண்டு என்பதையும் (முழு ஒற்றுமை இல்லை என்பதையும்) நினைவில் இருத்திக் கொள்ள வேண்டும்.

| சுவாமிநாதம் | இலக்கண விளக்கம் |
|---|---|
| 15 | 15 |
| 16 | 10 |
| (வல்லெழுத்துக்குரிய பிறப்பிடம்) | |
| 17 | 12 |
| 18 | 13 |
| 19 | 19 |
| 25 | 47, 48, 49, |
| 34 | 160 |
| 35 | 170 |
| 40 | 192, 193 |
| 46 | 216, 222 |
| 50 | 238 |

| | |
|---|---|
| 51 | 239.4 |
| 55 | 263, 269, 275, |
| | 253, 265, 264, |
| | 270, 271 |
| 56 | 274, 272, 273, |
| | 276, 277 |
| 57 | 280, 319 |
| 58 | 295, 296, 297, |
| 59 | 300 |
| 60 | 304, 305, 308 |
| 61 | 311, 312, 313 |
| 62 | 314, 315, 317 |
| 63 | 318, 320, 322 |
| 64 | 327, 328, 329 |
| 65 | 333, 334, 335 |
| 66 | 338 |
| 67 | 345, 346 |
| 68 | 355, 356, 353, |
| | 354 |

## 5. 1. 5. இலக்கண விளக்க உரையும் சுவாமிநாதமும்

இலக்கண விளக்க உரையில் காணப்படும் கருத்துக்களையும் சுவாமிநாதம் பின்பற்றியுள்ளது என்பதற்கு இரண்டு உதாரணங்களைச் சுட்டிக் காட்ட முடியும்.

உருபும் பயனிலையும் இயைதல், இயைபிலதாய்
னிமயங்கல் பொருண் மயக்கம், உருபு மயக்கமதாம்

என்ற சுவாமிநாத வரிகளுக்கு (46.2) இலக்கண விளக்கச் சூத்திரம் ஆதாரமாக அமைய முடியாது.

பொருளின் மயக்கம் பிறிதொன்றன் பொருளொடு
தன் பொருள் விடாது தலை மயங்குதலே

(இ. வி. 218)

உருபின் மயக்கமோர் உருபின் பொருளொடு
தன்பொருள் விடுத்துத் தலைமயங்குதலே.
(இ. வி. 219)

என்ற சூத்திரங்கள் சுவாமிநாதத்தோடு தொடர்பற்று காணப் படுகின்றன. ஆனால் இலக்கண விளக்கம் 220ஆம் சூத்திர உரையில் கணப்படும்

'பொருள் மயக்கம் தன் பொருளில்.தீராது மயங்குதலின் உருபு ஏற்ற சொல்லும் உருபு நோக்கிய சொல்லும் தம்முள் இயைபு உடையனவாம் ஆகலின் அத் தொடர்ப் பொருள் அவ்வேற்றுமை உருபின் பொருளாவான் சேறலான் அதனைச் சார்ந்து அதன் பொருளாம் என்பதூஉம் உருபு மயக்கம் தன்பொருளில் தீர்ந்து மயங்குதலின் உருபு ஏற்ற சொல்லும் உருபு நோக்கிய சொல்லும் தம்முள் இயைபு உடையனவல்லவாம் ஆதலின்......' என்ற உரைப் பகுதியே ஆதாரம் என்பது தெளிவு.

வினையெச்ச வாய்பாடு கூறும் சூத்திர உரையில் (சூத். 246, பக். 307) 'இன்னும் அதனானே விருந்தியின்றி பகலும் எனவரும் இன்றியும்......அன்றியும்... ஏலும்...... வினையெச்சக் குறிப்புக்களாம் எனக் கொள்க, என்ற விதப்புக் கிளவியை ஒட்டியே சுவாமிநாதம் (53) அவற்றையும் வினையெச்ச விகுதிகளாகப் பேசியுள்ளது.

## 5. 1. 6. இலக்கணக்கொத்தும் சுவாமிநாதமும்

இலக்கணக்கொத்தே சொல்லதிகாரத்திற்குச் சிறப்பிடம் கொடுத்து ஆராய்ந்துள்ளது. அதனால் சுவாமிநாதம் சொல்லதிகாரத்தில் இலக்கணக்கொத்தைத் தழுவிக்கொண்டுள்ளது. ஆயினும் சுவாமிநாததேசிகர் கூறிய எழுத்ததிகாரக் கருத்துக்களில் சிலவற்றையும் ஏற்றுக்கொண்டுள்ளது. புதிய கருத்துக்கள், கூறுமுறை ஆகிய இரண்டு வகையில் இலக்கணக்கொத்தின் செல்வாக்கை சுவாமிநாதத்தில் காணலாம்

புணர்ச்சியை வகைப்படுத்துவதில் ஒரு புதிய முறையைக் கையாண்டார். புணர்ச்சி விகாரம், புணர்ச்சியல் விகாரம் (இ. கொ. 111; சுவாமி. 27) என்று இருவகைப்படுத்தி புணர்ச்சியில் விகாரத்தைத் 'தோன்றல், திரிதல், கெடுதல். நிலைமாறுதல்' என்று நான்கு வகைப்படுத்தியது (இ. கொ. 113, சுவாமி. 28) என்ற இரண்டு கருத்தையும் சுவாமிநாதம் தழுவிக்கொண்டுவிட்டது. அவ்வாறே வேற்றுமை பற்றிப் பேசும்போது 'உருபு ஏற்பது, உருபு, பயன் மூன்றே' (சுவாமி 40.3) என்ற சுவாமிநாதத்தின் கருத்து

உருபு ஏற்றதனையும் உருபையும் உருபு

நோக்கி வந்ததனையும் வேற்றுமை யென்பர் (இ. கொ. 20) என்ற இலக்கணக் கொத்தின் எதிரொலியே.

இலக்கணக் கொத்து வேற்றுமையை விளக்கக் கையாண்ட முறையைச் சுவாமிநாதம் அவ்வாறே ஏற்றுக் கொண்டுள்ளது. ஒவ்வொரு வேற்றுமைக்கும் அதற்குரிய சிறப்பு உருபு, பிற உருபுகள், சொல்லுருபுகள் என்று மூவகைப் படுத்திப் பேசும் சுவாமிநாத மரபு, இலக்கணக்கொத்தின் அடிச்சுவட்டைப் பின்பற்றியது.

'சாற்று உருபு, வேறுருபு, சொல்லுருபாய்ப் பிறவே தாம்' என்ற சுவாமிநாத வரிகளில் (41.2)

உருபேவே றுருபு சொல்லுரு பென்ன
வேற்றுமை யுருபு மூன்றென விளம்புவர்
(இ. கொ. 16)

இலக்கணக் கொத்தின் சாயல் படிந்திருப்பதைக் காணலாம்.

இவ்வாறே வினையியல் கூறு முறையிலும் இலக்கணக் கொத்தின் செல்வாக்கு படிந்துள்ளது. வினையியல் முதல் இரண்டு சூத்திரங்களும் ( 47, 48) வினையியலின் இறுதிப் பகுதியும் (53.4) இலக்கணக் கொத்தின் முழுமையான தழுவலே.

இலக்கணக் கொத்து ஆதாரமாக அமைந்த சூத்திரங்களின் முழுப்பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | சுவாமிநாதம் | இலக்கணக் கொத்து |
|---|---|---|
| எழுத்து: | 27 | 111, 113 |
| சொல்: | 40.3 | 20 |
| | 41.2 | 16 |
| | 41.3, 4 | 25 |
| | 45 | 22, 45, 47, 46, 50, 23 |
| | 47 | 68, 69, 66 |
| | 48 | 67 |
| | 51 | 71, 72, 85 |
| | 53.4 | 86 |
| | 65.4 | 79 |

இலக்கணக் கொத்து கருத்துக்களை அப்படியே ஏற்றுக் கொள்ளாமல் பொதுமைப்படுத்தியும் தொகுத்தும் கூறிய சாமிகவிராயரின் சிறப்பு தனியே சுட்டிக் காட்டுவதற்கு உரியது.

இலக்கணக்கொத்து முதல் வேற்றுமை உருபை விரித்துச் சொல்லும்போது

... ... ... ஆயவன்,
ஆனவன், ஆவான், ஆகின்றவன் முதல்
ஐம்பாற் சொல்லும்

என்று இ. கொ. (25.5, 7) கூறியதையே சுவாமிநாதம் (41.4)

'ஆனவன் முதல் ஐம்பாற் மூன்று இட
முக்காலச் சொல்'

என்று பொதுமையாக்கிக் கூறியுள்ளது

எல்லா உருபொடும் செயப்படு பொருள்
எழுமே (45)
எல்லா உருபொடும் கொள்வோன் எழுமே (47)

என்ற இரண்டு இலக்கணக் கொத்து சூத்திரங்கள்

'இரண்டு, நான்கு ஏற்பன உருபு அனைத்தும் உறும்'

(சுவாமி. 45.2)

என்று தொகுத்துக் கூறப்பட்டுள்ளதைக் காணலாம்.

ஓர் உருபிற்கே பல பொருள் வருதலும்
ஒரு பொருட்கே பல உருபுகள் வருதலும்
என இரண்டாகும் வேற்றுமை இயல்பே

(இ. கொ. 23,1–3)

என்ற கருத்து சுவாமிநாதத்தில்

.........ஓர் பொருட்பால் உருபு, ஏற்றல், பொருள் வேறுதல்
தம் பொருள் ஈய்ந்து அயல் விரும்பன்
மூன்றின் முடித்தனரே. (45.4)

என்றும் தொகுத்தும் விரித்தும் கையாளப் பட்டுள்ளதைக் காணலாம்.

இலககணக் கொத்தின் செல்வாக்கிற்கு நூல் அடிப் படையே காரணமாக இருக்கலாம்போல் தோன்றுகின்றது. இலக்கண விளக்கம் சொல்லைத் தனிமொழி, தொடர் மொழி என்று பொதுவாகப் பிரிக்கலாம் என்று குறிப்பிட்டுவிட்டு பெயரியலிலோ, வினையியலிலோ அப்பாகுபாட்டின் அடிப் படையில் நினைக்கத் தவறிவிட்டது. அதே அடிப்படையில் அந்த இரண்டு இயலிலும் இலக்கணம் கூறுவது சிறந்தது என்ற கருத்து நிலைபெற்றபோது இலக்கணக் கொத்து அம் முறையைப் பின்பற்றியிருப்பதைக் கண்டே சாமிகவிராயர் இலக்கணக் கொத்தில் ஈடுபாடு கொண்டிருக்கலாமோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

## 5.1.7. பிரயோக விவேகமும் சுவாமிநாதமும்

நன்னூலார் வடமொழியை நோக்கத் தமிழில் காணப்படும் சிறப்புப் பண்புகளைக் கூறுமிடத்து எழுத்தியல் பண்புகளை மட்டுமே கூறினர்.

றனழள ஒவ்வும் உயிர்மெய் உயிரளபு
அல்லாச் சார்புந்தமிழ் பிறபொதுவே
(நன். 149)

ஆனால் பிரயோகவிவேக ஆசிரியர் சொல்லியல் நிலையில் பண்பையும் சுட்டிக் காட்டிச் சென்றார்.

.........திணைபால் உணர்த்தும் வினைவிகுதி
மாற்றருந் தெய்வ மொழிக்கு இல்லை......
(பி. வி. 49)*

இரண்டையும் சேர்த்து சாமிகவிராயர்

.........றனழளவ் வொவ்வலது
உயிர்மெய் உயிரளபு அல்சார்பு
வினைவிகுதி.........மலிதமிழுக்குச் சிறப்பாகும்

என்று வட மொழியை நோக்க தமிழின் சிறப்பாக உள்ள எல்லாப் பண்புகளையும் தொகுத்துக் கூறிவிட்டார். நன்னூலில் கூறாது விட்ட செய்திகள் பிற நூல்களில் வந்துள்ளபோது இவர் இரண்டையும் இணைப்பதன் மூலம் நன்னூலில் உள்ள குறையைப் போக்க முற்படுகின்றார் என்று வேண்டுமானாலும் சொல்லலாம்.

## 5. 1. 8 முத்துவீரியமும் சுவாமிநாதமும்

முத்துவீரியத்தின் செல்வாக்கு மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. பிற இலக்கண ஆசிரியர் கூறாத சில செய்திகளாக முத்து வீரியத்தில் காணப்படுபவை சுவாமி நாதத்திலும் வந்துள்ளதால் சாமிகவிராயர் முத்து வீரியத்தையும் படித்துத் தழுவிக் கொண்டிருக்க வேண்டும் என்று எண்ணத் தோன்றுகிறது.

---

* நூலுள் (பக். 61) 45-ஆம் சூத்திரம் இருப்பதையும் பி. வி. 49 என்று திருத்தி வாசிக்க வேண்டும்.

மாத்திரை மிக்கு ஒலிப்பதற்குரிய இடங்களில் முத்து வீரியம்

'விற்கை புலம்பு இசை விளியினும் மிகுமே'
(மு. வீ. எழு. 105)

என்று கூறியதில் 'புலம்பு' புதுமையாகச் சேர்க்கப்பட்டுள்ளது. சுவாமிநாதத்திலும் (20.4)

.........இசை, விளி பண்டமாற்று உறைமீட்டு
ஞவலும் புலம்பும் குறிப்பு இசையும் வரைவில
வந்திடுமே

என்று 'புலம்புதலும்' ஓரிடமாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு அதிகாரத்தையும் மூன்று மூன்று இயலாகப் பிரித்துப் பேசும் மரபு முத்து வீரியத்தின் செல்வாக்கினால் இருக்கலாமோ என்று ஐயுற வேண்டியுள்ளது.

## 5. 2. சுவாமிநாதத்தின் புதுமை

சுவாமிநாதம் பிற இலக்கண நூல்களைப் பின்பற்றி எழுந்ததாயினும் தனக்கென சில புதுமைகளையும் உடையது. அவையே அந்த நூலின் தனிச்சிறப்பாக அமைந்து சாமி கவிராயர் இந்த இலக்கணத்தை எழுத முக்கிய காரணமாக இருந்திருக்கலாம். நூலின் புதுமையை இரண்டு வகையாகப் பிரித்து விளக்கப்படுகிறது. ஒன்று மொழியியல் கோட்பாட்டுப் புதுமை; மற்றொன்று தமிழ்மொழி அமைப்பு பற்றிய புதுமை.

### 5. 2. 1. மொழியியல் கோட்பாட்டுப் புதுமை

**பிறப்பியல்:**

எல்லா தமிழ் இலக்கண ஆசிரியர்களும் நெஞ்சு, மிடறு, தலை, பல், இதழ், அண்ணம், மூக்கு ஆகிய எட்டு உறுப்புக்களையும் இருபெரும் பிரிவாகப் பிரித்துள்ளார்கள். தொல்காப்பியர் நெஞ்சு, மிடறு, தலை ஆகிய மூன்றை ஒரு பிரிவாகவும் ஏனையவற்றை மற்றொரு பிரிவாகவும்

பிரித்துள்ளார் (தொல். 83). வீரசோழியர், நன்னூலார் போன்றோர் நெஞ்சு, மிடறு, தலை, மூக்கு ஆகியவற்றை ஒரு பிரிவாகவும் ஏனையவற்றை மற்றொரு பிரிவாகவும் பாகுபடுத்தியுள்ளார்கள் (வீரசோ. 6, நன். 74). ஆனால் சாமிகவிராயரோ மூன்று வகைப்படுத்தி நெஞ்சை ஒரு வகையாகவும், மிடறு, தலை (உச்சி), மூக்கு ஆகியவற்றை ஒருவகையாகவும், ஏனையவற்றை மற்றொரு வகையாகவும் பிரித்துள்ளார்.

> அணுவினுன் மூலவிந்தில் ஏழுநாதம் இலஞ்சிக்
> காய் உதானத்தொடு நெஞ்சு அணுகி வெளிவாக் காற்
> பணியுமிடறு (உ)ச்சி, மூக்கு ஒலித்து நா, அண்ணம்
> பல், இதழின் வினையால் (16.1,2)

என்பது சுவாமிநாதம்.

நெஞ்சு என்பது நுரையீரலைக் (lung) குறிப்பதாகக் கொள்ளப்படுகிறது. நுரையீரல் சுருக்கி விரிவதால் காற்று வெளியேறுகிறது. மிடற்றில்தான் அக்காற்று பேச்சொலியாக மாறுவதற்குரிய ஒலிப்புடைய ஒலி (voiced sounds), ஒலிப்பிலா ஒலி (voiceless sounds) என்ற மாற்றத்தை அடைகின்றது. எனவே எல்லா பேச்சொலிகளுக்கும் நெஞ்சு பொதுவான உறுப்பாக அமைந்திருப்பதால் அதைத் தனியே பிரித்துக் கூறிய திறம் பாராட்டுதற்குரிய முறையில் அமைந்துள்ளது.

**எழுத்தியல் :**

பதமரபில்தான் சாமிகவிராயர் சில புதுமைகளைச் சுட்டிக்காட்டிச் சென்றுள்ளார். பதவியல் சொல்லியல் (Morphology) ஆராய்ச்சியைச் சேர்ந்தபோதிலும் அதை எழுத்ததிகாரத்தின் ஒரு பகுதியாக விரித்துச் சொன்ன பெருமை பவணந்தியாரையே சாரும். பதவியல் புணர்ச்சிக்கு முன்னோடியாக அமைந்தது. சொற்களின் புணர்ச்சி இலக்கணம் கூறுவதற்குச் சொற்களைப்பகுத்து பகுதி, விகுதி என்று பிரித்து அறிந்தால்தான் பகுபதத்திற்குள் நடைபெறும் புணர்ச்சியை-அதாவது பதத்தோடு உருபு, விகுதி முதலியன

சேரும்பொழுது ஏற்படும் புணர்ச்சியை விளக்க முடியும். எனவே புணர்ச்சியை விளக்குவதற்கு ஒரு மொழியிலுள்ள எல்லா உருபன்களையும் (பகுதி, விகுதி, இடைநிலை) தெரிந்து வைத்திருக்கவேண்டும். அதற்கு உதவியாக இருப்பது பதவியல் நன்னூலார் வினைப்பகுதி, வினைவிகுதி, கால இடைநிலை ஆகிய வற்றை மட்டுமே பதவியலில் விளக்கிச்சென்றார். சாமி கவிராயர் இன்னும் ஒருபடிமேலே சென்று சாரியை, சந்தியில் ஏற்படும் பொது மாற்றங்களையும் பதமரபில் கூறிச்சென்றுள்ளார். பதமரபு என்பதை தமிழ் உருபன்களின் பட்டியலாக அமைத்துக் கொண்டு அந்த உருபன்களின் மாற்று வடிவத்தைப் புணர்ச்சி மரபில் சாமிகவிராயர் விளக்கிச்சென்றுள்ளார். அதனால்தான் நன்னூலார் பதவியியலில் கூறிய வடமொழி-தமிழ் ஒற்றுமை வேற்றுமை ஆராய்ச்சிப் பகுதியை பதமரபில் சேர்த்துக்கொள்ளாது விட்டுவிட்டார்.

சொல்லியல் ஆராய்ச்சியில் மற்றுமொரு புதுமை மின்னலெனத்தோன்றி மறைந்துள்ளது. ஓரிடத்திதில் மட்டுமே அந்தப் புதுமை போற்றப்பட்டு ஏனைய இடங்களில் மரபு வழி நின்று விளக்கமே தரப்பட்டுள்ளது. இன்றொருவேடிக்கை, இப்புதுமை கரந்தைத் தமிழ்ச்சங்க பிரதியில்மட்டுமே காணப்படுகிறது. பி. பொ. பிரதியில் மரபு வழிமுறையே பின்பற்றப்பட்டுள்ளது.

பொதுவாக மொழியியலில் புணர்ச்சி என்பது சொல்லின் எல்லா மாற்று வடிவங்களையும் விளக்கிக்கூறுது, ஒலிக்கட்டுபாடு உடைய (phonologically conditioned) மாற்று வடிவங்களை அதாவது புணர்ச்சியால் ஒலிமாற்றம் ஏற்படும் மாற்று வடிவங்களை மட்டும் விளக்கும் பகுதியாகும். மாற்று வடிவங்களிடையே ஒலி ஒற்றுமையில்லாத வடிவங்களையும் வேறு வேறு வடிவமுடைய மாற்று வடிவங்களையும் சொல்லியலில் தொகுத்துக் கூறுவார்கள். இந்த முறையைப் பின்பற்றினால் இறந்தகால இடைநிலைகளான த், ட், ற், இன், இ, என்பவற்றில் த், இன் என்பவற்றைச் சொல்லியலிலும் ட், ற் ஆகியவற்றைப் புணரியலில் தகரத்தின் மாற்றுவடிவமாகவும்

இகரத்தை இன்னின் மாற்றுவடிவமாகவும் புணர்ச்சிவிதி மூலம் கூற வேண்டும். இதே முறையை சாமிகவிராயர் கையாண்டுள்ள நுட்பம் பெரிதும் போற்றற்குரியது.

'தவ்வொற்று இன் இறப்பும், (க. த. பி. பதமரபு 3 ஆம் சூத்.) என்று முதலில் இறந்த காலத்திற்கு த, இன் என்ற இரு இடை நிலைகளைக் கூறிவிட்டு அடுத்த சூத்திரத்தில்

'இடைநிலை இன் திரிந்து 'இ'ய்யாய் தத்திரிந்து
டறவாய் இறப்பு உதவும்.'

என்று இரண்டு இடைநிலைகளுக்கும் உரிய மாற்று வடிவங்களைக் கூறுவது தற்கால மொழியியலார் விளக்குவது போல உள்ளது,

இம்முறையைச் சொல்லியல் முழுமையும் பின்பற்றியிருந்தால் சாமிகவிராயர் தமிழ் இலக்கண உலகில் மிக உயர்ந்த இடத்தைப் பெற்றிருக்க முடியும். ஆனால் அவ்வாறு செய்யாததால் நூலே போற்றப்படுவார் இல்லாமலும் பதிப்பிப்பார் இல்லாமலும் போகும் நிலை ஏற்பட்டுவிட்டது.

பதமரபில் மேலும் ஒரு புதுக்கோட்பாட்டை நினைத்துப் பார்த்திருக்கிறார். சொற்களில் எல்லா வடிவங்களும் மற்றொரு சொல்லோடு புணரும்போதுதான் மாறுபடுவது என்பது கிடையாது. உறழ்ச்சியாக ஒன்றுக்கு மேற்பட்ட வடிவங்கள் வழங்குவது எல்லா மொழியிலும் காணப்படும் பொது இயல்பே. யாது என்ற சொல் அன் என்ற சாரியையோடு சேரும்போது யாத் (அதாவது புணர்ச்சியில் உகரம் கெட்டு விடுவது) என்றவடிவத்தைப்பெறும் இவற்றில் தொல்காப்பியம் யாது என்றோ இவற்றில் தொல்காப்பியம் யாவது என்றோ கேட்கலாம். இங்கு யாவது உறழ்ச்சி வடிவம். உறழ்ச்சி வடிவங்களை புணரியல்களில் விளக்கமுடியாது எனவே இந்த இரண்டு மாற்று வடிவங்களை வேறுபடுத்திக் காட்ட புணர்ச்சி, விகாரம்

என்ற இரண்டு கலைச்சொற்களைக் கூறுவதன் மூலம் மொழி அமைப்பின் பண்பைச் சரியாகப் புரிந்துகொண்டிருக்கிறார் என்ற உண்மையை மறைமுகமாக வெளிப்படுத்திவிடுகிறார்.

... ... ... ... ... ... ... ...புணர் நாற்சந்தி
சேர்புணர்ச்சி, புணர்ச்சியின்றாய் எழுத்து மொழி
தோன்றல் திரிதல், கெடல், மாறல் விகாரம். (27· 2,3)

என்று புணர்ச்சியால் மாறுபடுவதை புணர்ச்சி என்றும் புணர்ச்சி இல்லாமல் மாறுபடுவதை விகாரம் என்றும் பாகு படுத்துவது கோட்பாட்டு நிலையில் அமைத்த புதுமையாகக் கருதலாம்.

ஆகுபெயர்க்குச் சாமிகவிராயர் தரும் விளக்கம் விரிவான தாகவும் சற்றுப் புதுமையாகவும் இருக்கின்றது.

தொல்காப்பியர் ஆகுபெயராக வரும் பெயர் உணர்த்தும் பொருளுக்கும் சாதாரண நிலையில் அச்சொல் உணர்த்தும் பொருளுக்கும் உள்ள தொடர்புகளை வகைப்படுத்திக் கூறி யுள்ளார். முதலில் கூறும் சினையறி கிளவி (தொல். சொல். 114) என்பது போன்று விளக்கியுள்ளார். இதை நேமிநாதர் பொதுமைப்படுத்தி

'ஒன்றன்பேர் ஒன்றற்கு உரைப்பதாம் ஆகுபெயர்'
(நேமி. சொல். 22)

என்று கூறியுள்ளார். நன்னூலார் இரண்டு பொருளுக்குத் தொடர்பு இருக்கவேண்டும் என்று கூறியுள்ளார்.

ஒன்றன் பெயரான் அதற்கு இயை பிறிதைத்
தொன்முறை உரைப்பன ஆகுபெயரே (நன். 290)

சாமிகவிராயர் அத்தொடர்பு இனத்தொடர்பாக இருக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகிறார்.

... ... ... ... ... ... ... பழையோர் வழியின் ஒன்றற்கு
ஒன்று இனமோடு விட்டு இயைபாய்
பாகுபடச் சொற்றிடலாம் (40. 2,3)

என்று அவர் தரும் விரிவான விளக்கமே சற்றுப் புதுமையான தாக உள்ளது.

எச்சத்திற்குத் தந்த விளக்கம் தனிச் சிறப்பு உடையதாகவே கருதவேண்டும்.

தொன்னூல் விளக்கத்தில் மட்டுமே வினையெச்சம், பெயரெச்சம் என்ற இரண்டு எச்சத்திற்கும் பொதுவாக

எச்சமே தொழில் பொழுது என்று இவை தோன்றி
இடம்பால் தோன்றாது எஞ்சிய வினை...

(தொ. வி. 117)

என்று கூறப்பட்டுள்ளது. இந்த விளக்கம் சொல்லியல் நிலையில் அமைந்த விளக்கமாகும். ஆனால் தொடரியல் நிலையில் நினைத்துப்பார்த்து

'முற்று இலது பிற சொல் நோக்குவது எச்சம்' (52.1) என்று கூறியிருப்பதை சிறப்பானதாகவே கருதவேண்டும்.

## 5. 2. 2. மொழி அமைப்பில் புதுமை

தமிழ்மொழி அமைப்பை விளக்கும்போது பிற இலக்கண ஆசிரியர்கள் குறிப்பிடாத சில உண்மைகளை இவர் கூறியுள்ளார். இவற்றில் சில பொது உண்மைகளாக எக்காலத்துக்கும் பொருந்துவன; வேறு சில மொழிவரலாற்று மாற்றத்தால் ஏற்பட்டதைக் கவனித்துக்கூறியதால் குறிப்பிட்ட கால மொழிக்கே அதாவது இடைக்காலத் தமிழுக்கே (Middle Tamil) பொருந்துவன.

**பொது உண்மை:**

பெயரெச்சத்தின் இறுதியில் வரும் அகரம் (செய்த, செய்கின்ற என்ற இருவகை வாய்பாட்டு பெயரெச்சத்திலும் வருவது) அண்மைச்சுட்டு அகரமாகக் கருதுகிறார்.

செய்யெனும் வாய்பாடு பெற்று சுட்டதின்
எட்டு ஒற்று அமையத்திரியும் பெயரெச்சம் (52.1,2)

என்ற வரிகள் இவ்வுண்மையை விளக்கும். சேய்மைச் சுட்டாக இருந்தாலும் சேய்மைச் சுட்டுப்பொருளில் வராது பிரதி பெயராக (**Pronoun** அதாவது **Anaphoric pronoun**) வருவது என்பதே பொருந்தும். எவ்வாறாயினும் பெயரெச்சத்தில் தொழிலும் காலமும் மட்டுமன்றி பிரதிப்பெயராக வருகின்ற தன்மையைக் குறிக்கவும் உருபு இருக்கிறது என்று கண்டு கூறிய உண்மை புதுமையானது.

இடைச்சொல்லை ஒன்பது வகையாகப்பிரித்துக்கூறியது (சுவாமி. 54) தனிச் சிறப்பாக அமையாவிட்டாலும் சாமி கவிராயர் தமிழ்மொழி அமைப்பில் பொதுவாக சில மாற்றங்களை நினைத்துப் பார்த்துள்ளார் என்ற முறையில் சிறப்பானதாகக் கருதலாம்.

எட்டாம் வேற்றுமை பொருளாக செப்பு, ஏவல், வினைப் பயன் என்று மூன்றைக் குறிப்பிடுவதும் பொதுவான மொழி அமைப்பு உண்மையே. 'செப்பு, ஏவல், வினைப்பயனும் எட்டாம் வேற்றுமைக்கே' (சுவாமி. 44.4) என்பது அத் தொடர். ஆயினும் இதன் பொருத்தமும் விளக்கமும் தெளிவாக விளங்கவில்லை.

எழுத்துக்களுக்குரிய மாத்திரையை வரையறுத்துக் கூறிவிட்டு அம்மாத்திரை மிகுந்து ஒலிக்கும் இடங்களையும் இலக்கண ஆசிரியர்கள் குறிப்பிட்டுச் சென்றுள்ளார்கள். அவ்வாறு குறிப்பிட்ட மாத்திரை மிக்கு ஒலிக்கும் இடங்களாக இவர் 'உறை மீட்டுறைவலும் குறிப்பிசையும் வரைவில வந்திடுமே' (20.4) என்று கூறியது எல்லா மொழிக்கும்கூட பொருந்தும் உண்மையாகக் கொள்ளலாம்.

## 5. 2. 3. மொழி வளர்ச்சி பற்றிய புதுமை

பெரும்பாலான தமிழ் இலக்கண நூல்கள் பிற்காலத்தில் மொழியியல் ஏற்பட்ட வளர்ச்சியைப் புறக்கணித்தே வந்துள்ளன. அவற்றுள் இரண்டு வகை உள்ளது. ஒன்று எல்லா பிற்கால இலக்கண ஆசிரியர்களும் புறக்கணித்த வளர்ச்சி. முன்னிலைப் பன்மை வடிவமான 'நீங்கள்' (இது அப்பர் தேவாரத்திலேயே (445:7) வந்துள்ளது) என்பதும், செய்தால் எனும் வாய்ப்பாட்டு வினையெச்சமும் (இது சங்க காலத்திலேயே - கண்டால் – புறம் 390.25, மடுத்தால் - பரிபாடல் 20.42 வந்துள்ளது) - உதாரணமாகக் கூறலாம். மற்றொன்று ஒரு இலக்கண ஆசிரியர் மொழி வளர்ச்சியைக் கவனித்துக் கூறியிருந்தும் அவர்க்குப் பின் வந்தோர் புறக் கணிப்பது, சகர முதன்மொழி வருவதை வீரசோழியமும் (7) நன்னூலும் (102) கூறியிருந்தும் இலக்கண விளக்கம் (246) புறக்கணித்து விட்டது. இங்கிலையில் பிற்கால இலக்கண ஆசிரியர் தனக்கு முன்னால் கூறப்பட்ட மொழி வளர்ச்சியை ஒத்துக் கொள்வதே சிறப்பானதாகக் கருத வேண்டும் போலத் தோன்றுகிறது. இதற்கு முன்னால் உள்ள இலக்கண ஆசிரியர்கள் கூறாத தமிழ் அமைப்பு உண்மைகளைச் சாமி கவிராயர் குறிப்பிட்டவையே இங்கு எடுத்துச் சொல்லப்படு கின்றது.

### பிறப்பியல்:

றகரத்திற்கு 'ஒத்துதல்' என்ற முயற்சியைக் கூறியுள்ளார். நன்னூலார் 'நனி உறில்' (நன். 86) என்று குறிப்பிட்டதை ஆடலொலி (Trill) என்று விளக்குவர். ஒத்துதல் என்பது ரகரத்தைப்போல நாவின் நுனி மேல் அண்ணத்தை ஒரு தடவை தொடுதலைக் குறிப்பதாகக் கொள்ளலாம். அப்படி யாயின் இன்று றகரமும், ரகரமும் உச்சரிப்பில் ஒன்றாக இருக்கிற தன்மையே பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் இருந்தது என்று எடுத்துக் கொள்ளலாம்.

ஐகாரம் மொழி முதலிலும் இறுதியிலும் 1½ மாத்திரையும் மொழியின் இடையில் 1 மாத்திரையும் உடையது என்று கூறியது ஐகாரத்தின் உச்சரிப்பை அதாவது மொழி முதலிலும் இறுதியிலும் 'அய்' என்றும் நடுவில் 'அ' என்றும் உச்சரிக்கப்பட்டதாகக் கொள்ளலாம்.

**எழுத்தியல்:**

உயிரளபெடையைச் சார்பெழுத்தாகக் கூறினும் அதற்குத் தனியே மாத்திரை கூறவில்லை. இது உயிரளபெடை எழுத்தியலில் இரண்டு உயிர்களின் சேர்க்கையாக அவர் கருதுகிறார் என்பதைக் காட்டுவதாகக் கொள்ளலாம். இதை மொழியியல் வளர்ச்சியாகக் கருத முடியாது. எனினும் இது தமிழ்மொழி அமைப்பில் அவருடைய கருத்தாகக் கொள்ளத் தக்கது.

தமிழ் எழுத்துக்களில் 104 எழுத்துக்கள் மொழிக்கு முதலில் வரும் என்று மிகுதியான எண்ணிக்கையை இவரே குறிப்பிட்டுள்ளார். இதில் இவர் புதுமையாகக் குறிப்பிட்டது ஞகர மெய் ஆறு உயிர்களோடு கூடி மொழிக்கு முதலில் வரும் என்பதுதான். தொல்காப்பியர் ஞகர மெய் மூன்று உயிரோடும் (ஆ, எ, ஒ) கூடி மொழிக்கு முதலில் வரும் என்றும் (தொல். 64) வீரசோழியரும் (வீரசோ. 7) நன்னூலாரும் (நன். 105) நான்கு உயிரோடும் (அ, ஆ, எ, ஒ) கூடி மொழிக்கு முதலில் வரும் என்றும் கூற சாமிகவிராயர் ஆறு உயிரோடு (அ, ஆ, இ, எ, ஏ, ஒ) மொழிக்கு முதலில் வரும் என்று வரையறுத்துள்ளார். இவற்றில் இகரத்தோடு ஞகரம் மொழிக்கு முதலில் வருவது சங்க காலத்திலேயே வழக்கு ஏற்பட்டுவிட்டது (ஞிமிறு-புறம். 93.12) ஆயினும் பிற்கால ஆசிரியர்கள் அவ் வழக்கிற்கு இலக்கணத்தில் இடம் கொடுக்காது விட்டு விட்டனர். சாமிகவிராயர் முதன்முதலில் இந்த வழக்கையும் ஞிமிர் என்ற பிற்கால வழக்கையும் மனதில்

கொண்டு இகரத்தைச் சேர்த்துள்ளார். ஞேயம் என்பது சிவஞான சித்தியாரில் (11.2) வந்துள்ளது. எனவே ஏகாரத்தையும் சேர்த்து ஆறு உயிர் என்று குறிப்பிட்டு விட்டார்.

## சொல்லியல்:

மூன்றும் வேற்றுமைக்குச் சொல்லுருபாகக் 'கொண்டு' என்று கூறியதும் சங்க இலக்கிய வழக்கிற்கு இலக்கணம் கூறியதாகக் கருத வேண்டியுள்ளது. ஆயினும் இலக்கண ஆசிரியர்கள் கூறத் தவறியதை இவர் எடுத்துக் கூறியதால் பாராட்டுதற்குரியவராகிறார். 'ஒரு கணை கொண்டு மூவெயில் உடற்றி' (புறம்.55.2); 'கோல் கொண்டு புடைக்கும் (ஐங். 275)' என்ற வழக்குகள் சங்க இலக்கியத்திலேயே பயின்று வந்துள்ளன.

ஆறும் வேற்றுமைக்குத் தொல்காப்பியர் 'அது' என்ற உருபை மட்டும் குறிப்பிட்டார். (தொல். 79) நன்னூலார் அது, ஆது என்ற இரண்டு உருபும் ஒருமைக்கு என்றும் 'அ' என்ற உருபு பன்மைக்கு என்றும் (நன். 300) பிரித்துப் பேசியுள்ளார். அக்கருத்தையே இலக்கண விளக்கமும் (203), தொன்னூல் விளக்கமும் (61), முத்து வீரியமும் (பெயரியல் 63) ஆதரித்துள்ளன. இவ்வாறு எண்ணிற்கேற்ப உருபு மாறுபடுவது என்பது தமிழ் மொழி அமைப்புக்கு மாறுபட்டது. இதை உணர்ந்தும் உடைய என்ற சொல்லுருபு சங்க காலத்திலிருந்து வழங்குவதை அறிந்தும் சாமிகவிராயர்

'ஆறு அது, ஆது அவ்வுடைய உருபு' (சுவாமி 43.2) என்று வரையறுக்காமல் குறிப்பிட்டுச் சென்றுள்ளார்.

உடைய என்ற சொல்லுருபு சிலப்பதிகாரம் (தம்முடைய தண்ணணி 7.32.1) மணிமேகலை (அணங்குடைய யாப்பு 3.57) ஆகிய நூல்களில் பயின்று வந்து பிற்காலத்தில் நிறையப் பயன்படுத்தப்பட்டுவந்துள்ளது.

நிகழ்கால இடைநிலையாக 'கிற்று' (சுவாமி. 25) என்று குறிப்பிடுவதும் பிற்கால வளர்ச்சியைத் தழுவியதாகும்.

பெயரிலும் வினையிலும் வரும் பால் காட்டும் விகுதிகளில் உள்ள ஆகார உயிர் ஓகாரமாக மாறி வருவது செய்யுளுக்கே உரியது என்று தொல்காப்பியர் (சொல். 195), நேமிநாதர் (சொல். 37), பவணந்தியார் (353), வைத்தியநாத தேசிகர் (இ.வி. 326), முத்துவீர உபாத்தியாயர் (மு.வீ. பெயரியல் 47) கூறியிருக்க சாமி கவிராயர் செய்யுளில் மட்டும் வரும் என்று வரையறுக்காது.

'பெயர் வினையின் னளரய ஈற்றயலின் அ, ஆ ஓவாகும்'
(சுவாமி 64.1)

என்று கூறியுள்ளதால் வழக்கிற்கும் செய்யுளுக்கும் உரியதாகக் கொள்ள வேண்டும். பிற்காலக் கல்வெட்டுக்களிலும் ஓகார வடிவம் வழங்கியுள்ளதால் வழக்கினும் அவ்வழக்கு பயிலப்பட்டது என்பது புலனாகும். எனவேதான் சாமிகவிராயர் இடம் வரையறுக்காமல் கூறிச் சென்றிருக்க வேண்டும்.

# சுவாமிநாதம்

## 1. நூல் வழி

1. பூமகளும் பாமகளும் போற்றுமே நாமகளுங்
கோமகளுங் கொண்டார்கைக் குஞ்சரமே—மாமகிமைத்
தொன்னூற்குள் உண்டாய்த் தொகுத்த இலக்கணமாம்
இந்நூற்குக் காப்பாகு மே.

### கடவுள் வாழ்த்து

**உரை :** *நிலமகளும் கவிதாசக்தியாம் பாமகளும் போற்றுகின்ற சரசுவதியும் இலக்குமியும் உள்ளத்தில் கொண்டு நிறைதற்குக் காரணமான விநாயகப் பெருமானே தொன்னூல் பலவற்றிலிருந்து தொகுத்த இலக்கணமான சுவாமிநாதம் என்ற இந்நூலுக்குக் காப்பாம்.*

**விளக்கம் :** *பாமகள் — கவிதாசக்தி. போற்றுமெய் என்று பாடங்கிடைப்பின் நலம். கொண்டு ஆர்கைக் குஞ்சரம் என்க. குஞ்சரமே காப்பு என்பதாம்.*

**குறிப்பு:** *பி. பொ. சுவடியில் முதலாவது எழுத்தாக்க மரபு என்ற தலைப்பும் இறுதியில் ''நூல்வழி முற்றும்'' என்ற தலைப்பும் உள்ளன. அடுத்த பகுதிக்கும் எழுத்தாக்க*

மரபு என்ற தலைப்பே கொடுக்கப்பட்டுள்ளது அங்கே பொருத்தமாக உள்ளது. எனவே 'நூல் வழி' என்று இறுதியில் காணப்படும் தலைப்பே இதற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது. பாயிரம் என்று மற்ற நூல்களில் காணப்படும் செய்திகளே இப்பகுதியில் பேசப்படுகின்றன.

2. பூமிசைகீழ்க் கடல்குமரி குடகம்வேங் கடத்துட்
புகுந்ததமி ழியல்ஐந்தும் அகவல்வி ருத்தமதால்
ஆ(ம்)முன்னூல் வழியாய்மெய் யநித்தநூல்விரி வென்று
அஞ்சும்அவர் உணர்ந்துபய நூலுணர்ஏ துவினன்
ஏமமெனுஞ் **சுவாமிநாதம்** பகர்ந்தான்பொ திகைநிகண்டு
உரைத்தோன்சிவ சுப்பிரமணி யன்எனும் என்னை
மாமகன்என் றருளும்எந்தை நதிகுலன்கல் லிடையூர்
வாழ்சுவாமி கவிராசன் எனுநூல்வல் லோனே (க)

***சிறப்புப் பாயிரம் கூறுவது.***

**உரை :** *கிழக்கே கடலும் (வங்காள விரிகுடா) தெற்கே குமரியும் (கன்னியா குமரியும்), மேற்கே குடகும், வடக்கே வேங்கடமும் எல்லையாக உடைய தமிழ்மொழியின் இயலான எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்று ஐந்து வகையையும் ஆசிரிய விருத்தத்தால் முன்னோர் சொன்ன நூலைத் தழுவி யாக்கை நிலையாதது, நூல் விரிவானது என்று அஞ்சுபவர்கள் கற்றற்கு ஏதுவாகக் காப்பாகும் என்று கூறத்தக்க சுவாமிநாதம் என்றநூலைப் பகர்ந்தோன் பொதிகை நிகண்டு செய்தவனும் சிவசுப்பிரமணியன் என்னும் பெயரை உடைய மகனும் என்னை ஈன்றவனும் கல்லிடையூரில் வாழ்ந்தவனுமாகிய சுவாமி கவிராயன் என்ற இலக்கணக் கல்வியில் வல்லோன்.*

**விளக்கம் :** *தன்மகனும் சிறப்புப்பாயிரம் கூறுவதற்கு உரியவன் ஆதலின் இது நூலாசிரியரின் மகன் பாடிய சிறப்புப்பாயிரம். இப்பாயிரம் தமிழின் எல்லையும் சுவாமிநாதத்தின் முதனூலும் யாப்பும் இயைபும் காரணமும் நூற்பெயரும் ஆக்கியோன் பெயரும் பயனும் கூறுகின்றது.*

அகவல் விருத்தமதால் பகர்ந்தான்; முன்னூல் வழியாய்ப் பகர்ந்தான்; ஏதுவினல் பகர்ந்தான் எனக் கூட்டுக.

மெய் அநித்தம், நூல்விரிவு என்றது சின்னாட் பல்பிணி சிற்றறிவினோர் என்ற தொடரை உட்கொண்டு.

3. நூலின்வகை முதல்வழிசார் பெனமூன்றும்; இறைசொன்னூல்
முதனூல்;அவ் வழித்தாய்ச் சிலவிகற்ப மாம்வழிநூல்
மேல்இரண்டிற் றிரிந்துகா லந்தழுவும் புடைநூல்
விரிக்கும் இவை பாயிரங்கள் தோற்றிஏழ் மதத்தாய்
நாலுபயத் தாய்ப்பதின்மா சகன்றுபதின் குணத்தாய்
நாலெட்டாம் உத்தியின்ஓத் துப்படல உறுப்பிற்
காலின்சூத் திரம்காண்டி விருத்திநடைத் தாகிக்
காண்குமவற் றினிற்பதிகம் பொதுச்சிறப்பென் றிரண்டே. (உ)

***இப்பாடல் நூலின் வகையும் அவற்றின் விளக்கமும் நூலின் தன்மையும் பதிகத்தின் வகையும் கூறுகின்றது.***

**உரை :** முதல்நூல், வழிநூல், சார்புநூல் என நூல் மூன்று வகைப்படும். இறைவன் சொன்னது முதல் நூல் எனப்படும். முதல் நூலைத் தழுவிச் சில வேறுபாடுகளையும் அமைத்துக் கூறுவது வழிநூல் ஆகும். முதல் நூல், வழிநூல் ஆகிய இரண்டிலிருந்தும் வேறுபட்டுக் காலத்திற் கேற்ற கருத்துக்களையும் தழுவிச் செல்வது புடைநூலாகும்.

நூல், பாயிரங்களை அமைத்துக் கொண்டு ஏழுவகை மதத்தையும் நால் வகையான பயனையும் உடையதாகவும் பத்து வகைக் குற்றமும் இல்லாமல் பத்து வகையான அழகும் முப்பத்திரண்டு உத்தியும் உடையதாகவும் ஓத்து, படலம் ஆகிய உறுப்புக்களோடு சூத்திரமாக அமைந்தும் காண்டிகை விருத்தி என இரு வகையான உரை பெறும் தன்மையோடு அமைவது.

இவற்றுள் பாயிரம் (பதிகம்) என்பது பொதுப்பாயிரம் சிறப்புப்பாயிரம் என இருவகைப்படும்.

**விளக்கம் :** நூலின் வகையும், அவற்றின் விளக்கமும் நன்னூல் 5 முதல் 8 வரையுள்ள சூத்திரங்களின் தொகுப்பு உரையாகும். நூலின் தன்மைகள் நன்னூல் 4 ஐ ஒட்டியன.

4. பொதுக்குருக், கொள்வோன், கொடுத்தல், கோடல் என நான்காம்;
பூமியெனப் பொறை, முயற்சி, யளவு பயன், வன்மை
நதிக்குளிர்ச்சி தூய்து ஒழுக்கந் தெளி ஆற்று நிறை போல்
நடுவையந் தீர்த்தன்மலை போல்தோற்ற நிலைமை
மதிப்பரிய பொருள்மாறு வளங்கடல் போல்நிறைவும்
மழையுண்டும் வற்றாமை விரிவாழ மலர் போல்
இதக்கடிமங் கலமலர்ச்சி யின்றியமை யாமை
யிரணியம்போற் குலம்பிறவும் உள்ளவன்மெய்க் குருவே.(௪)

**பொதுப்பாயிரமும் நல்ல ஆசிரியனது இலக்கணமும் கூறுகின்றது இப்பாடல்.**

**உரை :** *நூலாசிரியனது வரலாறும் மாணக்கனது வரலாறும் ஆசிரியர் மாணக்கனுக்குச் சொல்லுதலின் வரலாறும் மாணக்கர் கேட்டலின் வரலாறும் என நான்கும் பொதுப்பாயிரமாகும்.*

*பூமியைப்போலப் பொறையும், முயற்சி செய்கிற அளவுக்குப் பயன் தருதலும், வலிமையும் ஆறுபோன்ற குளிர்ந்த கருணையும், தூய ஒழுக்கமும், தெளிந்த அறிவும், துலாக்கோல் போல உண்மை பெற இரண்டு தட்டுகளுக்கும் நடுவே நிற்றலும், ஐயத்தைத் தீர்த்தலும், மலைபோல் தோற்றமும், மதிப்பிடுதற்கரிய பொருளும், குறைவே இல்லாத வளமும், கடல்போல் நிறைவும், மேகம் போல உண்டும் வற்றாத தன்மையும், மலர்போல மென்மையும், மங்கலத் தன்மையும், முகமலர்ச்சியும், இன்றியமையாத் தன்மையும், பொன் போன்ற குலமேன்மையும் இன்ன பிறவும் உடையவனே மெய்க்குரு ஆவான்.*

**விளக்கம் :** நன்னூல் 3-ஆம் சூத்திரம் பொதுப்பாயிரம் நூல், நுவல்வோன், நுவலுந்திறன், கொள்வோன், கோடல், கூற்று ஆகிய ஐந்து என்று கூறும். ஆனால் தொல்காப்பிய உரைகளாகிய இளம்பூரணம், நச்சினார்க்கினியம், இலக்கண விளக்கம் ஆகியவற்றைத் தழுவிப் பொதுப்பாயிரம் நான்கு கூறு உடையது என்று கூறியுள்ளார்.

5. மெய்தவிருங் கழற்குடம்போல் முறையன்றிப் பிறழ்தல்
மிகும்முடத்தெங் காய்முயன்றோர்க்கு அன்றி
அல்லோர்க் கீதல்
செய்பருத்திக் குண்டிகைபோற் கோளல்கொடை முட்டுறுதல்
செறியுமடற் பனையெனத்தா னேகொடுத்தால் அன்றி
ஏய்து அடுத்தோர்க்கு ஈயாமை உடைத்தாகி யெவைக்கும்
இச்சித்தல் அழுக்காறு மனவஞ்சங் கொடுமை
யையுறல்வீண் படிப்போதன்ற குருவுக்குள தாமக்குணங்கள்
இன்மையுமே உள்ளவன் துற்குருவே. (ச)

**தீய ஆசிரியனின் இலக்கணம் கூறுகின்றது.**

**உரை :** கழற்காய் போட்ட குடத்தினது குணம் போல முறை இல்லாத முறையில் மாறுபட்டுக் கூறுதல்; தென்னை மரம், தனக்கு உதவி செய்தவர்களுக்கு உதவாமல் பிறர்க்கு உதவுதல் போலத் தன்னை வழிபடுவோர்க்குச் சொல்லித் தராமல் பிறர்க்குச் சொல்லித் தருதல்; பருத்திக் குண்டிகை போன்று சிறிது சிறிதாகக் கொடுத்தல்; பனைமரம் போன்று தானே கொடுத்தால் தவிரத் தன்னிடத்து வந்து நெருங்கி வருவோர்க்குக் கொடுக்காமை; பொருள் உடையவனாக இருந்தாலும் எல்லாப் பொருளையும் விரும்புதல்; அழுக்காறு, வஞ்சமனம், கொடுமை, ஐயப்படுதல், வீண்படிப்பு, ஆசிரியனுக்கு வேண்டிய நற்குணங்கள் இல்லாமை ஆகிய குணங்களை உடையவன் தீய ஆசிரியன் ஆவான்.

6. குருமகன்தன் மகன்அரசன் மகன்கொடுப்போன் பணிவோன்
கூரியனு வனம்பானீர் பிரித்தோன்நன்கு உணர்ந்து
புரையகற்றல் கிளியெனச்சொற் றுங்குரைத்தல் வெண்மை
போலெவைக்கும் ஏற்பதுமற் றுள்ளவன்கொள் பவனும்
எருமையென வுழக்கியுண்டல் தோணியின்ஓர் பொருட்கே
இசைதல்ஆ டெனப்பல் பால்ஓதல் குரங்கெறிந்து
வருபவன்போல் வலிதுஅறித னுடன்சினநோய் மடம்
பொய் மறவிபலநூற். கச்சம்நா ணுளன் கொள் கிலனே [ரு]

**நன் மாணுக்கர் தீய மாணுக்கர் இலக்கணம் கூறுவது.**

*உரை:* தன்னுடைய ஆசிரியனுடைய மகன், தன்னுடைய மகன், அரசனுடைய மகன், பொருள் கொடுப்பவன், பணிவு உடையவன், பாலிலிருந்து நீரை எடுக்கும் அன்னம் போன்று குற்றமறக் கற்பவன், கிளிபோன்று சொன்னதைச் சொல்லும் தன்மையன், வெண்மைநிறம் போன்று எல்லா நிறங்களையும் ஏற்றுக்கொள்ளும் தன்மை போலப் பண்பு உடையவன் ஆகியோர் மாணுக்களுகை இருப்பதற்குத் தகுதி உடையவர்கள்.

எருமை நீரைக் கலக்கி உண்பது போன்ற தன்மையும் தோணி ஒரு பொருட்கே பயன்படுதல் போன்ற தன்மையும் ஆடு பல இடத்திலும் மேய்வது போன்ற தன்மையும் குரங்கு காயைப் பறித்து எறிந்து வேறொன்று கொள்ளுதல் போல வன்முறையில் அறிந்து கொள்ள விரும்பும் தன்மையும் உடையவர்களும் சினம், நோய், மடமை, பொய், மறதி, பல நூல்களைக் கற்க வேண்டுமே என்ற அச்சம், நாணம் ஆகிய பண்புகளை உடையவர்களும் கற்றுக் கொள்ளும் தகுதி இல்லாதவர்கள்.

7. கொள்பவன்கோள் உணர்ந்துஇடங்கா லம்குறித்து விரைவு
கோவமின்றி ஓதல்கொடை பொழுதொடு சென்று இறைஞ்சி
வள்ளல்குணங் குறிப்பிசைந்து அகம் வயிருச் செவியே
வாயாநூல் சோரு உண் பவனில்விரைந் தறிதல்

உள்ளம்கொள் வதாங்கேட்டல், சிந்தித்தல், பயிற்சி
உணர்தல் பயிலியல்ஒரு காற் கேட்டவன்பின் கேட்கிற்
கள்ளம் மிக விலைமுக்காற் கேட்டபின்முறை யறியுங்
கற்றல்கால், பயிற்சி அரை, பிறர்க்குஓதின் முற்றே. (சு)

**கொடுத்தல் (கொடை), கொள்ளும் முறை ஆகிய இரண்டின் இலக்கணமும் விளக்குகின்றது.**

**உரை :** *மாணவனுடைய கொள்ளும் அறிவு உணர்ந்து இடம், காலம் முதலியன குறித்துக் கொண்டு விரைவும் கோபமும் இல்லாமல் கற்பித்தலே கொடையாகும்.*

*நல்ல சமயத்தில் சென்று வணங்கி, ஆசிரியனுடைய குணத்தையும் குறிப்பையும் அறிந்து மனம் வயிருகவும், செவி, வாயாகவும், நூலைச் சோருகவும் கொண்டு உணவு உண்ணச் செல்பவனைப்போல விரைந்து அறிந்து கொண்டு உள்ளத்துள் கொள்ளும்படி கேட்டல், அவ்வாறு கேட்டலைச் சிந்தித்தல், பலகாலும் பயின்று உணர்தல் ஆகியவற்ருேடு தான் பயின்ற பொருளை ஒரு தடவை கேட்டவன் மீண்டும் ஒரு முறை கேட்டால் நூலிலே மிகுதியும் பிழைபடுதல் இல்லை; மூன்று முறை கேட்டால் ஆசிரியர் கற்பித்த முறையை அறிந்து கொள்வான்.*

*தான் ஆசிரியனிடத்துக் கற்றுக் கொள்வது நாலில் ஒரு பங்கு. பிற மாணுக்கர்களோடு பழகும் வகையால் மேலும் கால் பங்கையும் பெற்றுப் பிறர்க்கு எடுத்துக் கூறுதலால் அவன் அறிவு முழுமை அடையும்.*

**விளக்கம் :** *இது நன்னூல் 40 முதல் 45 சூத்திரங்களின் தொகுப்பு.*

8. ஓதினவன்கேட் பவன் நூற்பெயர் வழியாப் புள்ளலை
உணர்ந்து பொருட் பயனெடுகாலங் களன்காரணம் என்று
ஈதுபதினென்றுபா யிரச் சிறப்பாம். அது நூல்
இயம்பு பாவினத்துரைப்பர் தன் குருமா ணுக்கர்

காதலன்தன் ஞெடுகற்றேன், உரைபதிகம் சொலற்காம்
கல்விமுதிர்ந் திடினுந் தான் தனைப்புகழ்த லாகா;
வாதுவசை வரில்உணரா ரிடைவெல்லும் பொழுதில்
வழுத்தலுமாம் பதிகமன் றேனூற்குமறு வுடைத்தே.

***இது சிறப்புப் பாயிரத்தின் இலக்கணம் கூறுகின்றது.***

**உரை :** *நூல் செய்தோன் பெயர், நூலைப் படிப்பதற்கு உரியவர்கள், நூலின் பெயர், நூல் வந்த வழி, நூல் படிப்பதற்குரிய இயைபு, நூலின் எல்லை, நூல் கூறும் பொருள், நூலைப்படிப்பதன் பலன், நூல் செய்த காலம், நூல் அரங்கேற்றிய களம், நூல் செய்தற்குரிய காரணம் ஆகிய பதினொன்றும் நூலின் சிறப்புப் பாயிரத்தின் இலக்கணம்.*

*நூலின் சிறப்புப் பாயிரம் செய்வதற்குத் தன்னுடைய ஆசிரியர், மாணாக்கர், தன் மகன் தன்னோடு படித்தவன், உரைகாரன் ஆகியோர் தகுதி உடையவர்.*

*தான் கல்வியில் முதிர்ந்து விளங்கினாலும் தன்னைத் தானே புகழ்ந்து கொள்ளுதல் கூடாது. ஆனால் அவையில் வாது செய்யும்போதும் பழி ஏற்படும் போதும், தனது கல்வி வலிமையை உணராதவர் இடத்தும் தன்னைத்தான் புகழ்ந்து சொல்லலாம்.*

*பாயிரம் (பதிகம்) இல்லாவிட்டால் நூலுக்கும் குறை உண்டு.*

**விளக்கம் :** *நன்னூலில் காலம், களம், காரணம் என்பதையும் சேர்த்துப் பதினொன்றாகக் கொள்வோரும் உளர் (48) என்று உள்ளது.*

நன்னூலாரும் இலக்கண விளக்கத்தாரும் கூருத 'தன் காதலன்' என்பானும் பதிகம் சொல்லுதற்கு உரியவராகக் குறிப்பிடுகிருர் இந்நூலார். தன்காதலன்—தன்மகன்.

இந்தச் சூத்திரம் நன்னூல் 47, 48, 51, 52, 53, 54 ஆகிய சூத்திரங்களை அடியொற்றியது.

9. மறுத்தல்,உடன் படல்,பிறர்நூற் புரையுரைத்தல், இருவா
மற்ருெருபால் துணிவு,பிறர் மதங்கொண்டு நீக்கல்,
திறத்தொடுசொற் றவைநிறுத்தல், பிறர்மதந்தீர்த் தேதன்
திறம்கொளலஏ ழுமதங்கள்; அறம்ஆதி பயன்குற்றங்
குறைத்தன்,மிகை மயக்கல்,வழூஉப், பயனிலி,மா று,அகன்று
குறுகல்,புன ருத்த(ம்)மற் ருென்றுரைத்தல் வெளிற்றுரை யாம்
முறைச்சுருக்கல், விளக்கல்,உதா ரணமிசைநற் பொருள் நன்
*மொழியின் இனம் முறையாழ மயங்காமை குணமே. [அ]

**மதம், பயன், குற்றம், குணம் ஆகியவற்றை விளக்குகின்றது.**

உரை: 1) பிறர் கருத்தை மறுத்தல், 2) ஒத்துக் கொள்ளுதல், 3) பிறருடைய நூலிலுள்ள குற்றத்தை எடுத்துக் கூறுதல், 4) இருவரால் மாறுபாடாகக் கொள்ளப் பட்ட இரண்டினுள் ஒரு கருத்தைச் சரியெனக் கொள்ளுதல், 5) பிறர் கருத்திற்கு உடன்பட்டுப் பின்பு மறுத்தல், 6) தானே ஒரு பொருளை எடுத்து நாட்டி அதனை வரும் இடந்தோறும் நிறுத்துதல், 7) பிறர் கருத்தை ஒத்துக் கொள்ளாது தன்னுடைய கருத்தையே கொள்ளுதல் என மதங்கள் ஏழு.

நூலின் பயன் அறம், பொருள், இன்பம், வீடு என்பன.

1. குறைவுபடச் சொல்லுதல் 2 மிகைப்படுத்திச் சொல்லுதல் 3. மயங்க வைத்தல் 4. குற்றமுடைய சொற்களைச் சேர்த்தல் 5. பயனில்லாத சொற்களைச்சேர்த்தல் 6. முன்பின் மாறுபாடு தோன்றக் கூறுதல் 7. செல்லச்

செல்லச் சொல்லும் பொருளும் தேய்ந்து முடிதல் 8. புனருத்தம் 9. சொல்லத் தொடங்கிய பொருளை விட்டு விட்டு இடையிலே மற்றொரு பொருளை விரித்தல், 10. பொருள் வெளிப்படையாகத் தோன்றச் சொற்களைச் சேர்த்தல் ஆகிய பத்தும் குற்றங்களாகும்.

1. சுருங்கச் சொல்லுதல், 2. விளக்கி வைத்தல் 3. உதாரணமாகப் பயன்படுதல் 4. சந்த இன்பம் 5. சிறப்பாகிய பொருளைத் தருதல் (விழுமியது பயத்தல்) 6. நல்ல சொற்களைச் சேர்த்தல், 7. இனிமை பயத்தல், 8. முறைப்படி வைத்தல், 9. ஆழமுடைமை 10. உயர்ந்தோர் வழக்கோடு மயங்காமை ஆகிய பத்தும் குணங்களாகும்.

'புனருத்தம்' என்பது மீண்டும் கூறல். நன்னூலோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது 'கூறியது கூறல்' எனக் கூறலாம்.

**விளக்கம்:** இது நன்னூல் 11, 10, 12, 13 ஆகிய சூத்திரங்களின் வரிசையையொட்டி அமைக்கப்பட்டுள்ளது.

10. மேலைநுதலிப் புகுதல்,தொகுத் தல்,பகுத்து ணர்த்தல்,
விகற்பத்தின் முடித்திடல் உய்த் துணர்தல், மாட் டெறிதல்,
நூலின் முறை வைப்பு,ஏதுக் காட்டல்,தா னெடுத்து
நுவறல், முடித் துக்காட் டல்,முடிவிடங் கூறுதலே
சாலெடுத்துக் காட்டுஎடுத்த மொழியின்எய்த வைத்தல்,
தன்குறிமிக் கெடுத்துரைத்தல், எஞ்சுசொல்லின் விரித்தல்
ஏழுமொரு தலைதுணிதல், உரைத்தும்என்றல், உரைத்தாம்
என்றல்,பிறர் நூன்முடிவு தான்உடன்பா டுறலே. (க0)

**இந்தச் சூத்திரமும் அடுத்த சூத்திரமும் உத்திகளின் வகைகளைக் கூறுகின்றன.**

**உரை:** 1. நுதலிப் புகுதல் (இது செய்தால் இப்படி ஆகும் என்று கருதிப் புகுதல்) 2. தொகுத்தல் (பலவற்றையும்

திரட்டிக்காட்டுதல்) 3. பகுத்து உணர்தல் (திரட்டிக் கூறியவைகளை வெவ்வேருக்க் கூறுபடுத்திக் கூறுதல், 4. விகற்பத்தின் முடித்திடல் (வெவ்வேருக முடித்தல்) 5. உய்த்துணர்தல் (சில கருத்துக்களை நாமே உணர்ந்து கொள்ளும் படியாக ஒருபொருளை வைத்தல்) 6. மாட்டெறிதல் (ஒன்றுக்குச் சொல்லப்பட்ட இலக்கணத்தை மற்றென்றுக்கும் பொருந்தும் என்று கூறுதல்) 7. நூலின் முறைவைப்பு (நூலின் உட்பிரிவுகளைக் காரண காரிய முறைப்படிவைத்தல்) 8. ஏதுக்காட்டல் (முன் காரணம் விளக்கப்பெருத ஒன்றைப் பின்காரணத்தான் முடிவுசெய்தல்) 9. தான்எடுத்து நுவறல் (முன்னேரால் இயற்றப்பட்ட சூத்திரங்களைத் தான் சிற்சில இடங்களில் எடுத்துச் சொல்லுதல்) 10. முடித்துக்காட்டல் (மேலோர் முடித்தவாறு முடித்துக்காட்டுதல்) 11. முடிவு இடங் கூறுதல் (தான்கூறும் இலக்கணத்திற்குரிய இலக்கியத்தை எடுத்துக் கூறுதல்) 12. தான் எடுத்துக் காட்டு (தான் சொல்லும் இலக்கியத்திற்குத் தானே இலக்கியத்தை எடுத்துக் காட்டுதல்) 13. எடுத்த மொழியின் எய்தவைத்தல் (தான் சொன்ன இலக்கணத்தைத் தன் இலக்கணத்திலேயே பொருந்த வைத்தல்) 14. தன்குறி மிக்கு எடுத்துரைத்தல் (தான் புதிதாகப் பயன் படுத்திய குறியை (கலைச்சொல்லை)ப் பலஇடங்களிலும் எடுத்துச் சொல்லுதல்) 15. எஞ்சு சொல்லின் விரித்தல் (சொல்லாது விடப்பட்டவைக்குச் சொல்லப்பட்டதனுல் இலக்கணம் பொருந்தச் சொல்லுதல்) 16. ஒருதலை துணிதல் (இருவர் மாறுபட்ட கருத்துக்களைக் கூறும்போது ஒரு கருத்தை ஏற்றுக்கொள்ளுதல்) 17. உரைத்தும் என்றல் (பின்னல் சொல்லவேண்டியதனை ஒரு காரணத்திற்காக முன்னல் சுருக்கமாகச் சொல்லுதல்) 18. உரைத்தாம் என்றல் (முன்னல் சொன்ன கருத்தைப் பின்னல் சொல்லவேண்டியிருந்தால் முன்னல் சொல்லப்பட்டது என்று கூறுதல்) 19. பிறர் நூல் முடிவுதான் உடன் படுதல் (பிறர் நூலில் கூறப்பட்ட முடிவைத் தானும் ஒத்துக்கொள்ளுதல்).

11. உடன்படாபிறன் கோட்கூறு தல்தொடர்ச்சொற் புணர்த்தல்
ஒன்றெனத்தன் னினமுடித்தல் ஒப்பின்முடித் திடலே
முடிந்ததனை முடித்தல்இரட் டுறமொழிதல் முன்னே
மொழிந்துகொளல் பின்னிறுத்தல் இன்னதன்று ஈதுஎன்றல்
மிடைந்தசொல்லின் முடிவினில்இப் பொருள்சொலல் சொற்
பொருளே
விரித்தல்இறப் பகற்றல்எதிர் போற்றல்முப் பான்இரண்டும்
இடஞ்செயநூற் பொருள்வழக்கோடு உணர்த்தி ஏற்புழி
யோர்ந்துஇதற்கிதாம் எனச்செலுத்துந் தந்திரவுத் திகளே.(ல)

**உரை:** *20. உடன்படாத பிறன் கோட்கூறல் (தான் ஒத்துக் கொள்ளாத பிறர் கருத்துகளைக் கூறுதல்) 21. தொடர் சொல் புணர்த்தல் (ஒன்றுக்கொன்று தொடர்பு உடைய சொற்களைச் சேர்த்தல். 22. ஒன்றெனத் தன்னினம் முடித்தல் (ஒன்றைச் சொல்லுமிடத்து அதற்கு இனமாகிய மற்றொன்றையும் அதனோடு முடித்தல்) 23. ஒப்பின் முடித்திடல் (ஒன்றிற்குச் சொல்லப்படும் இலக்கணம் வேறொன்றிற்கும் ஒத்து வருமாயின் அதற்கு அதுவே இலக்கணமாக உடன் முடிவு செய்தல்) 24. முடிந்ததனை வைத்தல் (வெவ்வேறாக முடிந்ததைப் புலப்பட வேண்டித் தொகுத்து முடித்தல்) 25. இரட்டுற மொழிதல் (ஒரு தொடரை இரண்டு பொருள்படச் சொல்லுதல்) 26. முன்னே மொழிந்து கொளல் (பின்பு வேண்டும் இடந்தோறும் எடுத்தாளும் பொருட்டு முன்னே ஒன்றனைச் சொல்லிக் கொள்ளுதல்) 27. பின்னிறுத்தல் (ஒரு பொருளுக்குக் கருவியாக முன் வைத்தற்குரியது அங்கே வைப்பதற்கு இடம் பெறுவிட்டால் அப்பொருளின் பின்னுல் அதனை வைத்தல்) 28. இன்னதன்று ஈது என்றல் (சந்தேகப் பட்டபோது இத்தன்மையது அன்று இத்தன்மையை உடையது என்றல்) 29. மிடைந்த சொல்லின் முடிவினில் இப்பொருள் சொலல் (சொல்லின் முடிவிலே அதன் பொருளையும் முடித்தல்) 30. சொற்பொருள் விரித்தல் (சொல்லினது பொருள் விளங்குதற்கு உருபு முதலியவைகளை விரித்துச்*

சொல்லுதல்) *31.* இறப்பு அகற்றல் (முற்கால வழக்கு களுள் பிற்காலத்து வழக்கில் ஒழிந்தவற்றை நீக்கி விடுதல்) *32.* எதிர் போற்றல் (முற்காலத்து வழங்காது பிற்காலத்தில் வழக்கில் வந்ததை ஏற்றுக் கொள்ளுதல்) ஆகிய முப்பத்தி ரண்டு உத்திகளையும் கொண்டு நூலால் அறிவிக்கப்படும் பொருளை நூல் வழக்கோடும் உலக வழக்கோடும் பொருந்த எடுத்துக் காட்டி ஏற்கும் இடத்தை அறிந்து இன்னதற்கு இதுஎன்று பொருந்தும்படிக் கூறுவது தந்திர உத்தியாகும்.

**விளக்கம்:** இதுவும் முன்னுள்ள சூத்திரமும் நன்னூல் *14*-ஆம் சூத்திரத்தை ஒட்டியன.

12. உய்த்தபொருள் ஓரினஓத் தாம்விரைவிற் படலம்
உருக்காட்டு மாடியிற்சில் லெழுத்தேபல் பொருளும்
ஒய்த்துநுட்பந் திட்பம்உறுஞ் சூத்திரஞ்சூத் திரத்தின்
மொழிப்பொரு ளேகருத்து உதாரணம்வின விடையாற்
பெற்றபொருட் படுங்காண்டி; சூத்திரத்தின் பொருளும்
பிறநூலாற் றன்னுரையாற் காண்டியொடு
ஐயம்அகற் றிடச்சொல்வது விருத்தி; இத்துணை நூ லியல் கண்டு
ஆய்த்துரைபோ தனைமதி மற்றுல்அறி கதமிழே. (௰௧)

***இது ஒத்து. படலம், சூத்திரம், உரை ஆகியவற்றையும் விளக்குகின்றது.***

**உரை:** ஒரே இனத்தைச் சார்ந்த பொருள்களை ஒரு வழிபடச் சொல்வது ஒத்து. பல பொருள்களையும் கலந்து கூறினல் அது படலம். (பார்க்கும்) உருவத்தைக் காட்டும் கண்ணடி போன்று சில எழுத்துக்களால் பலவகைப்பட்ட பொருளையும் செறிவாக அடக்கிப் பொருள் நுணுக்கங்களும் குற்றம் இல்லாத சொல்வளமும் பொருள்வளமும் பொருந்தி விளங்குவது சூத்திரம்.

சூத்திரத்து மொழியினுடைய பொருளைக் கருத்து உரையும் உதாரணமும் கொண்டு வினு விடையாலும் (கேள்வியை எழுப்பிக் கொண்டு பதில் கூறுதல்) விளக்குவது காண்டிகை உரை.

சூத்திரத்திலுள்ள பொருளொடு பிற நூலாசிரியரின் கருத்தாலும் தன்னுடைய உரையாலும் காண்டிகை உரைத் தன்மையோடு சந்தேகம் நீங்குமாறு சொல்லுவது விருத்தி உரை.

இவ்வாறு நூலின் தன்மையை உணர்ந்து உரையாலும் போதனையாலும் தன்னுடைய அறிவாலும் தமிழை அறிந்து கொள்ள வேண்டும்.

**விளக்கம்:** நன்னூல் 16, 17, 18, 22, 23 ஆகிய சூத்திரக் கருத்துக்களைத் தழுவியது இது.

# 2. எழுத்ததிகாரம்

## 1. எழுத்தாக்க மரபு

13. தமிழ்தருதென் பொதிகைமலை கயிலைமலை கமலஞ்
சங்கம்இவற்று இறைவருக்குப் பொருளைஅருள் வாயால்
உமிழ்குருவாய் ஆறெழுத்தோர் எழுத்தாகுஞ் செந்தூர்
ஒருகுமரன் இருசரண்என் உளத்து(உ)றைந்த வளத்தாற்
சிமிழ்அனைய களபமுலைப் பூமயிலே முதியோர்'
செப்பெழுத்துச் சொற்பொருள்யாப்பு அலங்காரம் எனும்ஐந்
தமிழ்தின் இலக் கணவிரிவை ஒவ்வொருமூன்று இயலாய்
அடக்கிமொழி குவன்; சுவாமி நாதம்இந்நூற் பெயரே. (க)

***இறை வணக்கமும் நூலில் கூறப்படும் செய்திகளும் நூலின் பெயரும் கூறுகின்றது.***

**உரை:** *தமிழ் தந்த தென்பொதிகைமலை வாழும் அகத்தியரும் கயிலைமலை வாழும் சிவபெருமானும் தாமரையில் வீற்றிருக்கும் பிரமனும் சங்கத்தாரும் ஆகிய நால்வருக்கும் அவரவர் விரும்பும் பொருளைத் தனது அருள்பொருந்திய வாயினால் உபதேசித்த குருமூர்த்தியாகிய ஆறு எழுத்தும் (சரவணபவ) ஓர் எழுத்தாய்க் கொண்டு திருச்செந்தூரில் வாழும் முருகக் கடவுள் என்னுடைய உள்ளத்துத் தங்கிய காரணத்தால் பெரியோர் கூறுகின்ற எழுத்து, சொல்,*

*பொருள், யாப்பு, அலங்காரம் என்ற ஐந்து இலக்கண விரிவை ஒவ்வொரு அதிகாரத்தையும் மூன்று மூன்று இயலாகச் சுருக்கிச் சுவாமிநாதம் என்ற பெயரால் கூறுவேன்.*

14. பெயர்,எண்,முறை, பிறப்பு,வடிவு, அளவு,முத னிலையே
பின்னிலையே, இடைநிலை,போ லியதாம்பத் துடனே
முயல்பதமும் புணர்வும்உறப் பன்னிரண்டாய்; அருளான்
மொழிக்குக்கா ரணமாகி நாதகா ரியப்பட்
டயிரொலி ஓர்ந்து எழுதில்எழுத் தாம்;அவற்றுள் உயிர், மெய்
யறுகுறுக்க(ம்), மூவினங்கள், குறில்,நெடிற்,சுட் டு,வினா
இயல்உயிர்மெய், ஆய்த(ம்), முதல் சார்புபோ லியிரெண்டு
இரண்டளபாம் இருபதிரண் டெழுத்தின் போகமே. (உ)

**எழுத்துக்களை ஆராயும் முறையும் எழுத்துக்குரிய பொது விளக்கமும் எழுத்துக்களின் பெயர்களும் கூறுகின்றது• இச் சூத்திரம்.**

***உரை:*** *1. பெயர் 2. எண் 3. முறை 4. பிறப்பு 5. வரிவடிவு 6. மாத்திரை 7. மொழிமுதல் எழுத்துக்கள் 8. மொழி இறுதி எழுத்துக்கள் 9. மொழிக்கு இடைவரும் மெய்ம் மயக்கங்கள் 10. போலி ஆகிய பத்து முறையோடு• 11. பதம் 12. புணர்ச்சி ஆகிய இரண்டும் சேரப் பன்னிரண்டு வகையாகப் பிரித்து எழுத்தை ஆராயலாம். மொழிக்கு முதற்காரணமாகியும் நாதத்தினது காரியமாகியும் வரும் ஒலியை எழுதுவதால் எழுத்து எனப்படும். 1. உயிர் 2. மெய், அறுவகைக் குறுக்கங்களான 3. ஐகாரக்குறுக்கம் 4. ஔகாரக் குறுக்கம் 5. ஆய்தக் குறுக்கம் 6. மகரக் குறுக்கம் 7. குற்றியலிகரம் 8. குற்றியலுகரம் ஆகியவை, மூன்று இனமான 9. வல்லினம் 10. மெல்லினம் 11. இடையினம் ஆகியவை, 12. குறில் 13. நெடில் 14. சுட்டு 15. வினா 16. உயிர்மெய் 17. ஆய்தம் 18. முதல் எழுத்துக்கள் 19. சார்பு எழுத்துக்கள் 20. போலி எழுத்துக்கள்; இரண்டு அளபெடையான 21. உயிரளபெடை 22. ஒற்றளபெடை ஆக மொத்தம் இருபத்திரண்டும் எழுத்தின் பெயராகும்.*

**விளக்கம் :** 'எண்ணுதற்கும் பெயர் கருவியாதலின் அதனை முற்கூறுதது முறையன்று' என்று சிவஞானமுனிவர் இலக்கண விளக்கச் சூறாவளியில் (பக். 65) கூறப்பட்ட கருத்தை மனதில் கொண்டுதான் நன்னூலார் கூறிய 'எண் பெயர் முறை' என்ற முறையை மாற்றிப் 'பெயர் எண் முறை' என்று இவ்வாசிரியர் கூறியுள்ளார்.

மொழிக்குக் காரணமாகி வரும் நாதகாரிய ஒலி என்பது இலக்கண விளக்கத்தை ஒட்டியது. 'மொழிக்குக் காரணமா நாதகாரிய ஒலி' (இ. வி. 3) என்ற வுரி ஒப்புநோக்கத் தக்கது.

15. அகராதி யீராறும் உயிர், ககராதிகண் மூவாறும் உடல்; இம்
முப்பானு(ம்) முதலெழுத்தாம்; ஆய்த(ம்)
இகல் குறளின் இஉஐஔவே ஆய்த(ம்) மவ்ஓரொன்றுய் உயிர்மெய்
நூற்றெணிநட்டு. (உ)யிரளவு ஏழ்; ஒற்றின்
உகுமளபு பதினொன்றெடு (இ)ருநூற்று நாற்பானொன்று
சார்பெழுத்து இருநூற்று எழுபத்தொன்றெண்ணுகும்
புகலுமிட(ம்) முயற்சி பொருள் அளவு (உ)ரு ஏற்பனவே
பொருந்தும் இனஞ்சிறப்பாலவவாதி முறையனுமே. [ரு]

***எழுத்துக்களின் எண்ணும் முறையும் விளக்குகின்றது இச் சூத்திரம்.***

உரை : அகரத்தை முதலாக உடைய பன்னிரண்டு எழுத்துக்களும் உயிர்; ககரத்தைமுதலாக உடைய பதினெட்டும் மெய்; ஆக முதலெழுத்து முப்பது ஆகும். ஆய்தம், குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக் குறுக்கம், ஆய்தக்குறுக்கம், மகரக்குறுக்கம் ஆகியவை ஒவ்வொன்று; உயிர்மெய் இருநூற்றுப்பதினறு; உயிரளபெடை ஏழு; ஒற்றளபெடை பதினொன்று; ஆக சார்பெழுத்துக்கள் இருநூற்று நாற்பத்தொன்று. இடம், முயற்சி, பொருள், மாத்திரை, வடிவம் ஆகியவற்றுள் ஏற்பன, பொருந்துகின்ற இனத்தாலும் சிறப்பாலும் அகர முதலாக நடத்தலே முறை என்று கூறப்படும்.

**விளக்கம் :** *சார்பெழுத்துக்களின் எண்ணிக்கையை இலக்கண விளக்கத்தை ஒட்டிக்கூறினும் அவர்கூறாத ஆய்தக் குறுக்கத்தையும் சேர்த்துக் கொண்டுள்ளதால் 241 என்று இலக்கண விளக்கத்தைக் காட்டிலும் ஒரு எண் மிகையாக உள்ளது. நன்னூலார் சார்பெழுத்துக்களின் வருமிடத்தையும் சேர்த்துக் கொண்டதால் எண்ணிக்கை மிகுதியாயிற்று. முறை பற்றிய கருத்து பெரும்பான்மையும் நன்னூலை யொட்டியது.*

**பா. வி.:** *ஒற்றளபு என்பது தான் 'ஒற்றினுகுமளபு என்று மூலத்தில் காணப்படுகின்றது.*

16. அணுவினன் மூலவிந்தில் எழுநாதம் இலஞ்சிக்
 காய்உதானத்தொடு நெஞ்சணுகி வெளிவாக்காற்
பணியு மிடறு (உ)ச்சி மூக்கு ஒலித்து நாவண்ணம்
 பல்லிதழின் வினையால் வெவ்வேறெழுத்தாம் . அவற்றுள்
நணுகு மிடற்று[உ]யிர் இடை, யுச்சியின் வன்மை, மென்மை
 நாசியில் உண்டாம். அவற்றுள் அஆவங்காப்பாம்
துணி இ, ஈ, எ, ஏ, ஐ அண்பல் அடிநாப்பாற்றுெடும்
 உ, ஊஒ, ஓ, ஔ இதழ்குவிமாம் அணங்கே. [௪]

***எழுத்துக்களின் பொதுப்பிறப்பும் உயிரெழுத்துக்களின் சிறப்புப்பிறப்பும் கூறுகின்றது.***

**உரை :** *அணுவினுல் மூலவிந்தில் எழுகின்ற ஒலி கொப்பூழ், நெஞ்சு ஆகிய இடங்களை நெருங்கி வெளியே புறப்பட்ட ஒலியால் மிடறு, தலை, மூக்கு ஆகிய இடங்களில் ஒலித்து நாக்கு, அண்ணம், பல், இதழ் ஆகிய உறுப்புக்களின் செயலால் வெவ்வேறு எழுத்துக்களாக மாறும். மிடற்றில் உயிரும் இடையினமும், உச்சியில் வல்லினமும், மூக்கில் மெல்லினமும் உண்டாகும். அகர ஆகாரம் வாயைத் திறந்து கூறும் முயற்சியாலும் இ, ஈ, எ, ஏ, ஐ ஆகியவை அண் பல்லை நாவினது அடி (விளிம்பு) பொருந்துவதாலும் உ, ஊ, ஒ, ஓ, ஔ என்பன இதழ் குவிதலாலும் பிறக்கும்.*

**விளக்கம்:** தலை என்பது மூச்சுக்காற்றுக் செல்லும் மேல் தொண்டை, வாயறை மூக்கறை ஆகியவற்றைக் குறித்து நிற்பதாகத் திரு. முருகையன் (தொல்காப்பியரின் ஒலியியல் கொள்கை—தொல்காப்பிய மொழியியல் என்ற நூலில் பக்கம்-8) கருதுகிறார்.

வல்லெழுத்து உச்சி (தலை)யை இடமாகக் கொண்டு பிறக்கும் என்பது இலக்கண விளக்கத்தை ('உச்சி வன்மை' 10) ஒட்டியது.

மிடற்றில் உயிரும் இடையினமும், மூக்கில் மெல்லினமும் உண்டாகும் என்றது அங்குதான் அவை சிறப்பு மாற்றம் பெறுகின்றன என்பதைக் குறிக்கிறதே தவிர அங்கு ஒலி உண்டாவதைக் குறிக்கவில்லை. இலக்கணப் பிறப்பியலை மொழியியல் கண்கொண்டு இலக்கணக் கருத்துக்களை நல்ல முறையில் விளக்கி முருகையன் அவர்களின் 'தொல்காப்பியரின் ஒலியியல் கொள்கை' என்ற கட்டுரை எழுதப்பட்டுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

17. அண்ண(ம்) முதலிடை நுனிநாவுற வுடன்முன்றும்
அண்பல் அடிநாமுடி யொத்திடத் தநவாம் இதழ்கள்
கண்ணிவிடப் பமவாம் அண்ணக் குழியின் மிடற்றுக்கால்
அடிநாப்பற்ற யவ்வாம் நுனிநா வண்ணத்தின்
நண்ணி மேல்வருட ரழவாம் அண்பல் அண்ண[ம்]
நாவிளிம்பு ஒத்தித் தைவர லளவாம் கீழ்இதழின்
விண்ணகை குற்றிட வவ்வா[ம்] நுனிநா வண்ணத்தின்
மேல் ஒத்தறனவாம் சில பேதகவன்புறுமே [ரு]

**மெய்யெழுத்துக்களின் பிறப்புக் கூறுகின்றது.**

**உரை:** அண்ணத்தை முதல் நாவும் இடை நாவும் நுனிநாவும் பொருந்த முறையே 'க்' 'ங்', 'ச்' 'ஞ்', 'ட்', 'ண்' ஆகிய ஆறு ஒலிகளும் தோன்றும். அண்பல்லின் அடிப் பகுதியை நாவின் முடி நன்றாகப் பொருந்த 'த்' 'ந்' பிறக்கும். இதழ் ஒன்றோடொன்று பொருந்த 'ப்', 'ம்' வும் மிடற்றிலிருந்து வரும் காற்று இடை அண்ணமும் அடிநாவும் பொருந்த 'ய்' யும், நுனிநா அண்ணத்தைப் பொருந்திப் பக்கம் வருட 'ர்', 'ழ்'

வும், அண்பல்லையும் அண்ணத்தையும் முறையே நாவிளிம்பைத் தொடவும் தடவவும் முறையே லகர ளகரமும் கீழ் உதடும் மேற்பல்லும் பொருந்திட வகரமும் நுனிநா அண்ணத்தின் நுனியின் மேலே தொட றகர னகரமும் பிறக்கும். ஒவ்வொன்றிற்கும் சிறு வேறுபாடு உண்டு.

விளக்கம்: யகரத்தின் பிறப்பு நன்னூலைத் தழுவிக் கூறப்பட்டுள்ளது. நன்னூலாரின் கருத்துப்படி யகரம் முதல் நாமுதல் அண்ணஒலி (Velar Sound) ஆகிறது. இது தவறு என்பது இலக்கண விளக்க உரையில் (12-ஆம் சூத். உரை) எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

நன்னூலைப் பெரிதும் தழுவி எழுதப்பட்டுள்ளது,

பா. வி.: 'தனவாம்' என்று இருந்தது தநவாம் (7-வது வரி) என்று கொள்ளப்பட்டுள்ளது.

18. வன்மை மென்மை யிடைமை யுயிர் ஆய்தம் என்றுஐந்
தொடர்க்கீழ் வல்லெழுத்தூருக்குறுகுங்; குறள் உவின் கீழ்யவரிற்
சொன்மியா வினில் இகரங்குறுகு[ம்]; முதலிடைபின்
சொற்பொருள் ஐயே குறுகு[ம்] முன் ஔவே குறுகும்
இன்னலள வலித்திரிபின் இடத்து ஆய்தங்குறுகும்; லளத்
திரிந்த னணப் பின் வம்மென் மக்குறுகும்; இவையாறு;
உன்னுமலாற் குறிலின்கீழ் உயிர்வலிமேல் அங்காந்துரத்
தொலியால் ஒற்றியல் போல் உதித்திடும் ஆய்தமுமே. [சூ]

**சார்பு எழுத்துக்களின் பிறப்புக் கூறத்தொடங்கி அறுவகை குறுக்கமும் ஆய்தமும் பற்றிப் பேசுகின்றது இச்சூத்திரம்.**

**உரை:** வல்லினம், மெல்லினம், இடையினம், உயிர், ஆய்தம் ஆகிய ஐந்து எழுத்துக்களை இறுதியில் உடைய தொடரின் கீழ்வரும் வல்லினம் ஊர்ந்த உகரம் குறுகிக் குற்றியலுகரமாகும். மியா என்ற சொல்லில் வரும் இகரமும் யகரமுதன்மொழி வரும்போது இகரமாக மாறும் குற்றிய லுகரமும் குற்றியலிகரமாகும். மொழிக்கு முன்னும் பின்னும்

இடையும் வரும் ஐகாரம் குறுவது ஐகாரக்குறுக்கம். மொழி முதலில் வரும் ஔகாரம் குறுகுவது ஔகாரக்குறுக்கம். லகர ளகர ஈற்றுச்சொல் வல்லெழுத்து முதன்மொழியொடு புணரும் போது திரியும் ஆய்தம் ஆய்தக்குறுக்கம் எனப் படும். லகர ளகரத் திரிந்து முறையே னகர ணகரத்தின் முன் வரும் மகரமும் வகரத்தின் பின்வரும் மகரமும் குறுகி மகரக் குறுக்கம் ஆகும். குற்றெழுத்தின் கீழும் உயிரெழுத்தைத் தொடர்ந்த வல்லினத்தின் மேலும் அங்காந்து கூறும் முயற்சியால் நெஞ்சொலி கொண்டு மெய்போலத் தோன்றும் ஆய்தம்.

வடக்கு—வன்றொடர்க் குற்றியலுகரம்
தெங்கு—மென்றொடர்க் குற்றியலுகரம்
செய்கு—இடைத்தொடர்க் குற்றியலுகரம்
வரகு —உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்
அஃகு —ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம்

**விளக்கம்:** குற்றியலுகரம் என்பது மொழியின் இறுதியிலுள்ள உகரம் ஏனைய உகரம் போல இதழ்குவித்துக் கூறப்படாமல் இதழ்குவியாமல் கூறப்படுவதால்தான் குற்றிய லுகரம் என்று பெயர்பெற்றது. இதனை இதழ் குவியா ஒலி (Unrounded) என்று ஒலியியலார் கூறுவர்.

குற்றியலிகரம் என்பதை இகரத்தின் மாற்றொலியாகக் கருதலாம்.

ஐகாரக் குறுக்கத்திற்குத் தொல்காப்பியமும் (57) அதையொட்டி நன்னூலும் (99) இலக்கண விளக்கமும் (24) ஒரு மாத்திரை என்று குறிப்பிட்டுள்ளன. இது ஐகாரம் அகரமாக ஒலித்தலைக் குறிக்கும். ஐகாரக்குறுக்கம் பெரும் பான்மையும் யகரத்தின் மேலும் (இடையன்—இடயன்) மற்றொரு ஐகாரத்தின் மேலும் வரும் (தலைமை—தலமை).

வீரசோழியமும் அதையொட்டி நேமிநாதமும் $1\frac{1}{2}$ மாத்திரை என்று கூறியுள்ளன. இது ஐகாரம் 'அய்' காரமாக ஒலிப்பதைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

யாப்பருங்கலக்காரிகை உரையாசிரியர் ஐகாரம் தன்னளவிற் சுருங்கி ஒன்றரை மாத்திரையும் ஒரு மாத்திரையுமாகக்குறுகும் (பக்: 15) என்று குறிப்பிட்டுள்ளாரே தவிர இடம் குறிப்பிடவில்லை.

சுவாமிநாதம் மொழி முதலிலும், இறுதியிலும் $1\frac{1}{2}$ மாத்திரை பெறும் என்றும், இடையில் 1 மாத்திரை பெறும் என்றும் 20 ஆம் சூத்திரத்தில் குறிப்பிட்டது தனிச் சிறப்பாகவே கொள்ள வேண்டும்.

ஔகாரக் குறுக்கம் பற்றித் தொல்காப்பியர் குறிப்பிடவில்லை. ஔகாரம் குறுகி வேறொரு ஒலியாக வரவில்லை. அவருக்கு 'அவ்' என்று வருவது குறுக்கம் ஆகாது. (அதுபோலவே ஐகாரம் 'அய்' என்று வருவதை அவர் ஐகாரக் குறுக்கமாகக் கருதவில்லை)

தொல்காப்பியர் ஐகாரக் குறுக்கம் சொன்னதால் ஔகாரக் குறுக்கமும் சொல்லி விட்டார்கள். இது எல்லா ஆசிரியர்களிடத்தும் காணப்படுகின்றது. ஆயினும் 'அய்' என்பதை ஐகாரக்குறுக்கம் என்று கொண்டது போல, 'அவ்' என்பதை ஔகாரக் குறுக்கம் என்று கொள்ளலாம்.

பௌவம் என்பது பவ்வம் (புறம்: 380.1, குறுந்தொகை 164.4) என்றும் கௌவை என்பது கவ்வை (பத்துப்பாட்டு 6.721) என்றும் சங்க இலக்கியத்திலும் வந்துள்ளது. அதனல் $1\frac{1}{2}$ மாத்திரை பெறும் என்பது அவர் கருத்துப்படி ஒத்துக் கொள்ளத் தக்கது. எனவே நன்னூலார் ஔகாரத்திற்கும் ஐகாரக் குறுக்கம் போல ஒரு மாத்திரையே பெறும் என்றது ஆராய்ச்சிக்குரியது. இங்கு ஔகாரக் குறுக்கம் என்பது

மொழி முதலில் மட்டும் என்று சொன்னதால் ஔகாரக் குறுக்கம் மொழி முதலில் $1\frac{1}{2}$ மாத்திரை பெறுவது மட்டுமே கொள்ளவேண்டும்.

ஆய்தக் குறுக்கம் என்பது புணர் மொழியில் வரும் ஆய்தத்தையே குறிக்கும்: கல் + தீது > கஃறீது
முள் + தீது > முஃடீது
இதனுடைய ஒலித்தன்மை இன்னும் விளங்கவில்லை.

மகரக் குறுக்கம் என்பது மகரம் முழுமையாக உச்சரிக்கப் படாத ஒலியையும் மூக்கொலிச்சாயல் பெற்றுவரும் ஒலியையும் குறிக்கும். இதைப் பொதுவாக மூக்கொலிசாயல் (Nasalisation) என்று கொள்ளலாம்.

போலும் > போன்ம்
மருளும் > மருண்ம்

இங்கு மகரத்தின்மேல் இன்னொரு மெல்லொலி வருவதால் அந்த மெல்லொலிக்குப் பிறகு வரும் மகரம் முழுமையாக உச்சரிக்கப்படுவதில்லை. தரும் + வளவன் என்ற புணர் மொழியில் மகரம் மறைந்து மேலுள்ள உயிர், மூக்கொலிச் சாயல் பெறுகின்றது.

எஃகு<br>வெஃகாமை } ஆய்தம்

ஆய்தம் என்பது தனி ஒலியைக் குறிக்காது. இது பொது ஒலித் தன்மை உடையது. எனவே அடிநிலைஒலி (Anchisegment) என்பார் பாலசுப்பிரமணியம் (தொல்காப் பியரின் ஒலியனியல் கொள்கை) அதாவது உயிர், மெல்லொலி என்பன போன்று ஆய்தமும் ஒரு பொதுத்தன்மையைப் பெற்று வருமிடத்திற்கே மாறி அமைந்து வரும். வல்லெழுத்தை அடுத்து வருவதால் ஆறுவகை வல்லெழுத்தும் திரிந்து வரும் ஆறு ஒலியாகவே கொள்ள வேண்டும். கூய்ப்பர்,

மீனாட்சி சுந்தரனார் போன்றோர் ஆய்தம் என்பது 'உரசொலி' என்ற பொது ஒலியைக் குறிக்கலாம் என்று கருதுகின்றனர்.

மகரக் குறுக்கமும் ஆய்தத்தின் பிறப்பும் இலக்கண விளக்கத்தை ஒட்டிக் கூறியுள்ளார். ணகர, னகர ஈற்றுச் சொல் கீழ்வரும் மகரமும் (உண்ம், தின்ம்) குறுகுவதால் 'லள த்திரிந்த னணப்பின்......மகரம் குறுகும்', என்பது குன்றக் கூறலாகவே அமையும்.

19\. ஆயுமொன்றெல்லாமும் அப்பான் முன்னுருவாம். உயிர்
வெருகின் மேற்கீழ்விலங்கு தீர்க்கங்கொண்டி ரட்டாய்க்
காயம் வெவ்வேருகும்; உயிர் அளவு அளவாம். உயிர்பின்
காட்டும், உடல் முன்காட்டும் இவை உயிர்மெய்யாமே.
ஏய இசை கெடின் மொழிக்கு முன்பின் இடைஉயிர்க்,
குற்றெற்று நெடிநீளும் ஐயெளவ் விவ்வுவ் வேற்றுஉயிரிற்
கூய் அளவாம்; ஆய்தம் வ ய ல ள ங ஞ ண ந ம ன குறிற்கீழாய்
இடைகடை யொற்றெற்றிடும் ஒற்றளபே. (எ)

***உயிர்மெய், உயிரளபெடை, ஒற்றளபெடை என்ற மூன்று சார்பெழுத்துக்களை இது விளக்குகின்றது.***

**உரை:** எல்லா மெய்யெழுத்துக்களும் அகரத்தொடு கூடிய வழி முன்னைய வடிவே உடையன. ஏனைய உயிரெழுத்துக்களோடு கூடிய வழி மேல் விலங்கு, கீழ் விலங்கு தீர்க்கம் முதலிய கொண்டு வடிவம் வேறு உடையதாக அமையும். உயிர்மெய்யின் மாத்திரை அதிலுள்ள உயிரின் மாத்திரையேயாம்; மெய் முன்னும் உயிர் பின்னும் உடையது. இசை குறைந்தால் மொழிக்கு முன்னும் பின்னும் இடையும் குற்றெழுத்தை ஏற்று நெடிலும் நீண்டு வரும். ஐகாரத்திற்கு இகரமும் ஔகாரத்திற்கு உகரமும் வரும்.

குறில் கீழ் வருகின்ற ஆய்தம், வ ய ல ள ங ஞ ண ந ம ன ஆகிய பதினொன்றும் மொழிக்கு இடையிலும் இறுதியிலும் நீண்டால் ஒற்றளபெடையாம்.

**விளக்கம்:** கி, கீ போன்ற இகர ஈகார வரிசைகள் மேல் விலங்கு பெற்றன. கு, கூ போன்ற உகர ஊகார வரிசைகள் கீழ் விலங்கு பெற்றன. தீர்க்கம் என்பது நெட்டெழுத்தைக் குறிக்கும். ஆனால் இங்கு கால் என்று கூறப்படும் 'ா' என்ற வடிவத்தைக் குறிப்பதாகக் கொள்ளலாம். புள்ளி விட்ட உருவே அகரம் ஏறிய வடிவம் என்பது தெளிவாக்கப் பெறவில்லை. ஏனைய உயிர் ஏறும் போது ஏற்படும் வடிவமாற்றத்தையும் முழுமையாகக் கூற வில்லை. ஆகார வரிசை காலும், எகரமும் ஏகாரமும் கொம்பும், ஒகரஓகாரமும் கொம்பும் காலும்பெற்று வருகின்றன. க என்பதை க் + அ என்பதால் மெய் முன்னும் உயிர் பின்னும் வந்துள்ளது.

உயிர்மெய், உயிரும் மெய்யும் சேர்ந்ததாயினும் உயிரின் மாத்திரையை மட்டுமே பெறுவதால் தனிச் சார்பெழுத்தாகக் கொண்டனர். எனவே உயிர்மெய்யும் ஒரு குறுக்கமாகக் கருதப்பட்டு விட்டது என்பதே பொருள். ஆயினும் உயிர் மெய் என்பது ஒரு தனி ஒலியாகக் கருத முடியாது. சிவஞான முனிவரும் அது பற்றி விளக்கமாக ஆராய்ந்து இறுதியில் உயிர்மெய்யின், ஒலியெழுத்திலக்கணம் வேறுபடக் கூறுமையாலும் (முதற் சூத்திர விருத்தி ப. 33) சார்பெழுத் தாகக் கொள்ளமுடியாது என்று குறிப்பிட்டுள்ளார்.

உயிரளபெடைக்குத் தனி மாத்திரையே சொல்லாததால் இவரும் உயிரளபெடை நெடிலும் குறிலும் சேர்ந்த கூட்டெழுத்தாகக் கொள்கிறார் என்பது தெளிவு. செய்யுளில் அளபெடை சீர்நிலை எய்தி நெடிலும் குறிலும் தனித்தனி அசையாக வருவது. ...திறப்பாடி லாஅதவர்–குறள்: 640 என்ற சீரில், லா என்பது ஒருஅசையாகவும் அ என்பது அடுத்த அசையாகவும் அமைந்துள்ளன. அவ்வாறே வீழப்படுவர் (1164) என்ற குறளில் கெழீஇயலர் என்பதில் உள்ள அளபெடை அலகுபெறாது வந்துள்ளது. சீர்நிலைபெறாது ஒரே அசையாக வருவதும் இலக்கியங்களில் காணப்படுவதால்

(ஓஒதல் வேண்டும்–குறள் 653) என்ற சீரில் ஓ ஒ என்று அளபெடை ஒரே சீராகக் கொள்ளப்படுகிறது. எனவே மூன்று மாத்திரை இருப்பதால் மூன்று மாத்திரை பெறும் ஓரெழுத்தாகவும் (வடமொழியில் புலுதா இருப்பது போல்) ஒரே வழிக் கொள்ளவேண்டி நேருகிறது. ஆயினும் இவர் நன்னூல், இலக்கண விளக்கம் போல அளபெடைக்கு மூன்று மாத்திரை என்று கூறவில்லை.

அளபெடை என்பது தனி ஒலியன்று. அதுவும் பொதுநிலை ஒலியே. எனவே தான் நெட்டெழுத்து ஏழும் அதற்கு இணையான குற்றெழுத்துப் பெற்று உயிரளபெடை ஏழு தனிப்பட்ட ஒலியாக (ஆஅ, ஈஇ, ஊஉ, ஏஎ, ஐஇ, ஓஒ, ஔஉ) அமைகிறது.

அளபெடை, நெட்டெழுத்தின் விகாரமாகவே கொள்ளப் பட்டது. அதாவது அளபெடையை ஒலி உறழ்ச்சியாகக் (Phonetic free variation) கருதுகிறார் என்று கொள்ள வேண்டும். இதையே சிவஞான முனிவரும் முதற்சூத்திர விருத்தியில் (ப. 26) 'அளபெடை அந்நெட்டெழுத்தோடு குற்றெழுத்து ஒத்து நின்று நீண்டிசைப்பது ஒன்றாயினும் மொழிக்காரணமாய் வேறுபொருள் தராது இசை நிறைத்தன் மாத்திரைப் பயத்ததாய் நிற்றலின் வேறு எழுத்தென வைத்து எண்ணப்படாதாயிற்று என்பது நுண்ணுணர்வான் உணர்க' என்று வலியுறுத்தியுள்ளார். ஆனால் அவரே நன்னூலுக்கு உரையெழுதும்போது சங்கரநமச்சிவாயரை ஒட்டி சொல்லிசைஅளபெடை என்ற ஒரு வகையைக் குறிப்பிட்டுள்ளார். நசைஇ 'விரும்பி' என்ற சொல்லிசை அளபெடை 'நசை' (விருப்பம் அல்லது விரும்பு) என்ற நெட்டெழுத்து இறுதிச் சொல்லோடு மொழிக்காரணமாய் வேறுபொருள் தருகின்றது. எனவே இங்கு அளபெடையைத் தனி எழுத்தாகக் (Phoneme) கொள்ள வேண்டியுள்ளது. அவ்வாறே

தாஅம் 'தாவும்' (அகம். 115.12) : தாம் 'படர்க்கைப் பன்மை' (புறம் : 14.16)

தாஅய் 'தாவி' (அகம்: 14.2) : தாய் 'அன்னை' (புறம்: 4.18)

தேஎம் 'இடம்' (நற் : 371.3) : தேம் 'இனிமை' (குறுந்: 300.2)

சேஎய் 'முருகன்' (குறுந் : 1.3) : சேய் 'சேய்மை' (குறுந்: 64.5)

போஓர் 'ஊரின்பெயர்' (அகம்: 186.16) : போர் 'சண்டை' (குறுந்: 80.4)

போன்ற பல உதாரணங்களில் இசை நிறைத்தற்கு வராது மொழிக்காரணமாய் வேறுபொருள் தருவதால் அளபெடையை ஒலியனாகவே கொள்ள வேண்டும். ஆயினும் நெடிலும் குறிலும் சேர்ந்த உயிர்மயக்கமாகக்கொண்டுவிட்டால் அளபெடையைத் தனிஒலியனாகக் கொள்ளத் தேவையில்லை. அளபெடையில் உறழ்ந்து வருவன எல்லாம் (இராஅ (நற்றிணை 218.8) ~ இரா (குறுந்: 145.5) 'இரவு'; ஊஉர் (குறுந்: 262.1) ~ ஊர் (குறுந்: 15.3) 'கிராமம்' போன்று வருவன) ஒலியன் உறழ்ச்சியாகக் (Phonemic free variation) கொள்ள வேண்டும்.

ஒற்றளபெடை என்பது நெடில்மெய் (long consonant) யாகக் கொள்ளவேண்டும். அது எங்கும் உறழ்ச்சியாகவே வருகின்றது

மரங்ங் (கொட்டி)—மொழி இறுதியில் வந்தது.

கண்ண்டண்ண்ணெனக் கண்டும்—இடையில் வந்தது.

இது எங்கும் ஒலிநிலை உறழ்ச்சியாகவே (Phonetic free variation) வரும்.

20. ஒற்றுயி ராதிகள் பாத்தாறுறுப்புக் கூட்டாம்
ஊழ்மைத்த வடிவு எகர வொகர மெய் புள்ளியுமாம்;
அற்ற நெடில் இரண்டு குறுகு ஐ ஔ முதல் ஈறு
ஒன்றரை இடையொன்றும்; குறில் ஒன்று ஆய்த[ம்] மெய் குற்றுகரங்
குற்றிகரம் அரை மவ் வாய்தக்குறுக்கமுங் கால்;
குறித்து உணரிற் கண்ணிமைத்த நொடித்தன் மாத்திரைதான்;
மற்றவிசை விளி பண்டமாற்று [உ]றைமீட்டு
ஞவலும் புலம்புங் குறிப்பு இசையும் வரைவில வந்திடுமே. [அ]

**இது வரிவடிவமும், மாத்திரையும் கூறுகின்றது.**

**உரை :** *எகர ஒகரம் அவற்றின் இணையான நெட்டெழுத்தில் புள்ளி பெற்றுக் குறிலாகும். மெய்யெழுத்தும் புள்ளிபெறும். நெட்டெழுத்து இரண்டு மாத்திரை பெறும். ஐகார ஔகாரக் குறுக்கங்கள் மொழி முதலிலும் இறுதியிலும் ஒன்றரை மாத்திரையும் மொழியிடையில் ஒரு மாத்திரையும் பெறும். குற்றெழுத்து ஒரு மாத்திரையும், ஆய்தம், மெய், குற்றியலிகரம், குற்றியலுகரம் முதலியன ஒவ்வொன்றும் அரை மாத்திரையும் மகரக் குறுக்கமும், ஆய்தக் குறுக்கமும் ஒவ்வொன்றும் கால் மாத்திரையும் பெறும். கண்ணிமை அளவும் கைநொடி அளவும் ஒரு மாத்திரைக்குரிய அளவு கோலாம். இசைக்கும் போதும், விளிக்கும் போதும், பண்டமாற்றின் போதும், அலறும் போதும், புலம்பும் போதும், மகிழ்ச்சியின் போதும் மேலே குறிப்பிடப்பட்ட வரையறை இன்றி மாத்திரை மிகுந்து வரும்.*

**விளக்கம் :** *பழங்காலத்தில் இன்று எ, ஒ என்று குற்றெழுத்துக்களாகக் கருதப்படும் எழுத்துக்கள் நெட்டெழுத்துக்களாகக் கருதப்பட்டு அதன்மேல் ஒரு புள்ளி வைப்பதன் மூலம் குற்றெழுத்து அமைத்துக்கொள்ளப் பட்டிருக்க வேண்டும். இன்றைய எழுத்துமுறை (நெட்டெழுத்திற்கு அடியில் ஒரு வளைவுகோடு இடுவது) வீரமாமுனிவர் ஏற்படுத்தியதாகக் கூறும் கருத்து சரியானதன்று என்று மயிலை சீனி வேங்கடசாமி* **கிறித்துவமும் தமிழும்** *என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.*

மேலே (சூத். 18) ஔகாரக் குறுக்கம் மொழிமுதலில் மட்டும் என்று கூறியதால் ஔகாரக்குறுக்கம் ஒரு மாத்திரை பெறும் இடம் இல்லை என்று கொள்ளவேண்டும்.

மாத்திரை அளபிறந்து ஒலிக்கும் இடங்களாக நன்னூலார் இசை, விளி, பண்டமாற்று முதலியனவற்றைக் (நன்: 101) குறிப்பார். முத்துவீரியம் (எழு: 105) புலம்புதலையும் ஓரிடமாகச் சேர்த்துக் கூறும். இந்த இரண்டையும் சேர்த்ததோடு புதிதாக மகிழ்ச்சியையும் ஓரிடமாகச் சேர்த்துள்ளார்.

21. வந்த வுயிர் க ச த ந ப ம வ் வில் என்பானுன்கும்
வஞய வெட்டாறு (ஆ)று லாடவிற் சிலவு முதற்காம்;
அந்தம் இவற்றைந்து ஙவ்வுஞ் சுட்டுவினுவினுமாம்
ஆவி ஞண நமன யரல வழள குற்றுகரக்கு
அந்தம் இருபானுன்கும் இறுதிநிலையெழுத்தாம்; கசதப நீத்து
ஈரெழுமெய் மயக்கமாம் ரழ நீத்து
இந்திரண்டெட்டு (உ)டநிலையாம்; உயிர்மெய் யவ்வமயக்காம்
யரழமுன் க ச த ப ங ஞ ந ம ஈரொற்றியல்பே [கூ]

**இது மொழி முதல், இறுதி, இடைநிலை ஆகியன உணர்த்துகின்றது.**

உரை: எல்லா உயிர் எழுத்துக்களும் க, ச, த, ந, ப, ம ஆகிய ஆறு மெய்களும் எல்லா உயிரோடும் கூடி மொழிக்கு முதலாக (84 எழுத்துக்கள்) வரும். வகரமெய் எட்டு மெய் யோடும் யகரம் ஆறுமெய்யோடும் ஞகரம் ஆறு மெய்யோடும் மொழிக்கு முதலாக வரும் (மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் மொத்தம் 104 ஆகும்). ஙகரம் சுட்டெழுத்துக்களோடும் வினவெழுத்தோடும் சேர்ந்து மொழிக்கு முதலாக வரும்.

பன்னிரண்டு உயிரெழுத்துக்களும் ஞ, ண, ந, ம, ன, ய, ர. ல, வ, ழ, ள ஆகிய மெய்யெழுத்துக்களும் குற்றியலுகரமும் ஆக 24 எழுத்துக்களும் மொழிக்கு இறுதியில் வரும்.

க. ச, த, ப ஆகிய நான்கு மெய்கள் நீங்கிய ஏனைய 14 மெய்யெழுத்துக்கள் வேற்றுநிலை மெய்ம் மயக்கமாகவும்,

ர, ழ ஆகிய இரண்டு மெய்கள் தவிர ஏனைய பதினாறு மெய்கள் உடனிலை மெய்ம்மயக்கமாகவும் வரும்.

உயிர் மெய்யெழுத்துக்கள் அந்தந்த மெய்யெழுத்துக்கள் போன்று மயங்கும்.

ய, ர, ழ என்ற மூன்று மெய்யெழுத்துக்களும் க, ச, த, ப, ங, ஞ, ந, ம ஆகியவற்றோடு இரண்டு மெய்யெழுத்துக் களின் இயல்பில் வரும்.

**விளக்கம்:** மொழி முதல் எழுத்துக்கள்

உயிர்: அடை, ஆடை, இடை, ஈடு, உடை, ஊடல், எடு, ஏடு, ஐந்து, ஒன்று, ஓடு, ஔவியம்.

க: கடை, காடை, கிளி, கீழ், குலை, கூன், கொண்டை, கோடு, கைப்பு, கொல், கோல், கௌ.

ச: சடை, சாந்து, சிறி, சீற்றம், சுற்றம், சூடு, செல், சேல், சைவம், சொல், சோலை, சௌமியா.

த: தகடு, தான், தின், தீனி, துணி, தூண், தெரு, தேர், தையல், தொடு, தோடு, தௌவியம்.

ந: நகரம், நான், நினை, நீடு, நுனி, நூல், நெல், நேர், நைப்பு, நொந்து, நோய், நௌவி.

ப: படை, பாடு, பிடி, பீடை, புல், பூக்கள், பெட்டி, பேன், பையன், பொடி, போடு, பௌவம்.

ம: மலை, மாலை, மிளகு, மீதி, முன், மூன்று, மெல், மேல், மைந்தர், மொட்டு, மோர், மௌவல்,

வ: வடை, வாடை, விலை, வீடு, வெல், வேல், வையம், வௌவால்

ய: யவனர், யானை, யுகம், யூகம், யோகம், யௌவனம்.

ஞ: ஞமலி, ஞாயிறு, ஞிமிறு, ஞெண்டு, ஞேயம், ஞொள்கு.

ங: அங்ஙனம், இங்ஙனம், எங்ஙனம்.

மொழி ஈற்றெழுத்துக்கள்:

உயிர்: பல, பலா, கரி, தீ, கடு, பூ, சேள, பகை, நொ, நோ, கௌ.

மெய்: உரிஞ், மண், வெரிந், மரம், மான், தாய், தேர், கால், தெவ், ஆள், வாழ், காடு.

வேற்றுநிலை மெய்ம்மயக்கம்:

வெட்கம், கற்க, அங்கு, அஞ்சு, உண்டு, ஒன்று, பந்து, அம்பு, ஆய்க, தேர்க, வெல்க. தெவ்யாது, வாழ்க, மீள்க.

உடனிலை மெய்ம்மயக்கம்:

பாக்கம், அங்ஙனம், அச்சம். அஞ்ஞானம், எட்டு, எண்ணி பத்து, வெந்நீர், அப்பா, அம்மா, தொய்யில், அல்லல், எவ்வம், வெள்ளம், காற்று, அன்னை.

ஈரொற்று: மூன்று மெய்யெழுத்துக்களின் மயக்கம் ஆயினும் தமிழ் எழுத்தில் எழுதும் போது இரண்டு மெய்யெழுத்துக் களாகவும் மற்றொன்று உயிர்மெய்யாகவும் அமைவதால் தான் ஈரொற்று எனப்பட்டது.

தேய்க்க, பார்க்க, வாழ்க்கை
வாய்ச்சி, நேர்ச்சி, மகிழ்ச்சி
பொய்த்தல், பார்த்தல், வாழ்த்து
வாய்ப்பு, வார்ப்பு, காழ்ப்பு
தேய்ந்து, தேர்ந்து, வாழ்ந்து
மொய்ம்பு ... ...
மொய்ம்மை ... ...

22. இயலுங் கம்முன் கவ்வும் வம்முன் யவ்வு(ம்) ஞ நமுன்
இனமும் யவ்வும் யரழவின்முன் முதன்மெய்யும் மம்முன்
பயவவுமாம் டறமுன்னே கசபவுமாம் லளமுன்,
பகசவய வா(ம்) னணமுன்னின மொடுங் க ப ச ஞ

மய வ வு மா(ம்) மெய் மயக்கத்து இடைநிலையாம்; போலி
வகை அம்முன் இய ஐயாம் உ வ இயைய வெளவாஞ் சஞய
அயலின் முதலிடையிலே அ ஐ போலிசைவாம்;
அகரங் கான் கரங் காரம் எழுத்திசை சாரியையே. [ய]

**மெய்மயக்கங்களின் விரிவும் போலியும் எழுத்துச் சாரியையும் கூறுகின்றது இது.**

**உரை:** *ககர மெய்முன் ககரமும் வகரமெய்முன் யகரமும் ஞ, ந என்ற மெய்முன் முறையே இவற்றின் இனமான ச, த, என்பனவும் மயங்கி வரும்*

*ய, ர, ழ என்ற மூன்று மெய்களின் முன்னர் மொழிக்கு முதலில் வரும் எல்லா மெய்யெழுத்துக்களும் மயங்கி வரும்.*

*மகரமெய்முன் ப, ய, வ ஆகிய மூன்று மெய்யும் மயங்கும்.*

*ட, ற என்ற இரண்டு மெய்யெழுத்துக்களின் முன் க, ச, ப என்ற மூன்று மெய்யும் மயங்கும்.*

*ல, ள என்ற இரண்டு மெய்யெழுத்துக்களின் முன் க, ச, ப, வ, ய என்ற ஐந்து மெய்களும் மயங்கும். ன, ண என்ற இரண்டு மெய்களின்முன் முறையே இன எழுத்தான ற, ட என்ற மெய்களும் க, ச, ப, ஞ, ம, ய, வ ஆகிய மெய் யெழுத்துக்களும் மயங்கும்.*

*அகரமுன் இகரமும் யகரமும் தனித்தனியே சேர ஐகாரம் ஆவதும், உகரமும் வகரமும் தனித்தனியே சேர ஔகாரம் ஆவதும் போலி எழுத்தின் ஒரு வகையாம். ச, ஞ, ய பின்னல் மொழிமுதலிலும் மொழிஇடையிலும் அகரமும் ஐகாரமும் ஒரு பொருள்பட அதாவது போலியாக இசைக்கும்.*

*அ, கான், கரம், காரம் ஆகிய நான்கும் எழுத்துச் சாரியைகளாகப் பயன்படும்.*

**விளக்கம் :** பாக்கு, தெய்வம், பஞ்சி, பந்து.

பொய்கை, கொய்சகம், செய்ந, நெய்தல், ஆய்பு, வாய்மை, தெய்வம்.

சேர்க,—, சேர்தல், பகர்நர், மார்பு. நீர்மை.

பார்வை, —.

வாழ்க, —, அமிழ்து, வாழ்நர், சூழ்பு, கீழ்மை, மகிழ்வு.

அம்பு,— , — .

வெட்க, வெட்சி, மீட்பு.

கற்க, அற்சிரம், கற்பு.

வெல்க, வல்சி, சால்பு, கல்வி, கல்யாணம்.

கொள்கை, —, கொள்பவர், கள்வன், —.

எண்கு, பண்பு, —, ஆண்மை, —, —.

புன்கு, அன்பு, நன்செய், —, மென்மை —, —.

ஐ = அ+இ = அ+ய்

ஔ = அ+உ = அ+வ்

ஐ, ஔ என்ற இரண்டையும் தனியே ஒலிக்கும்போது முறையே அ + இ, அ + உ என்ற கூட்டுயிர்களாக (Diphthong) உச்சரிக்கிறோம். மொழியியலில் ஒலியனியல் (Phonemics) என்று தனிநிலை அமைத்து ஒலியின் பயன் நிலையில் பார்க்கும்போது அவற்றை முறையே அ+ய், அ+வ் என்று கொள்ள வேண்டியுள்ளது. (விளக்கத்திற்கு செ. வை. சண்முகம் எழுதிய பழந்தமிழில் ஐகார ஔகாரங்கள் என்ற கட்டுரையைப் பார்க்க)

ஐகார அகரப் போலி

வைச்ச — வச்ச

ஐஞ்சு — அஞ்சு

மையல் — மயல்

அரைசு — அரசு

விளைஞ்சி — விளஞ்சி
அமையம் — அமயம்.

க என்பது க் என்ற மெய்யெழுத்தைக் குறிக்கும்போது அ என்பது எழுத்துச் சாரியை

அகரம், ஆகாரம், ஐகான் – என்பனவற்றில் கரம், காரம், கான் ஆகியன உயிர் எழுத்துக்களோடு வரும் எழுத்துச்சாரியை.

மெய்ம்மயக்கம் தனிமொழியிலும் புணர்மொழியிலும் கொள்ள வேணடும் என்பார் இளம்பூரணர். புணர்மொழியில் வருவது புணர்ச்சி இலக்கணத்தில் விளக்கப்பட வேண்டும் என்று கூறித் தனிமொழியில் வருவது மட்டுமே கொள்ள வேண்டும் என்பார் நச்சிஞர்க்கினியர். தனிமொழியில் உதாரணம் கிடைக்காதபோது பண்புத்தொகைச் சொல்லும் வினைத்தொகைச் சொல்லும் தனிமொழியாகக் கருதலாம் என்று கூறி அவற்றிலிருந்து சில உதாரணங்களை எடுத்துக் கொண்டு ஏனையவை 'தொல்காப்பியர் காலத்து இருந்து பிற்காலத்து வழக்கு ஒழிந்தன' என்று அமைதி கூறியுள்ளார் நச்சிஞர்க்கினியர். வேங்கடராசுலு ரெட்டியார் அவர்கள் தமது எழுத்ததிகார ஆராய்ச்சி உரையில் சில மெய்ம் மயக்கங்கள் பிற்காலத்து வழக்கு ஒழிந்து போய்விட்டன என்பதை ஒத்துக்கொள்ளவில்லை.

மொழியியலார் தனிமொழியில் வரும் மெய்ம்மயக்கமே கொள்ளவேண்டும் என்று கொள்கின்றனர். தனிமொழி என்பது பகாப்பதமாக வருகிற தனி மொழியை மட்டுமே குறிக்கும்.

பொதுவாக எழுத்தியல் ஆராய்ச்சி செய்ய உதாரணங்கள் (Data) நிறையத் தேவைப்படாது. தமிழ் இலக்கியம் பரந்துபட்டு இருப்பினும் அவற்றிலும் பல மெய்ம் மயக்கங்கள் வரவில்லை என்ருல் அவை இறந்து போய் விட்டன என்று சொல்லி விட முடியாது. எனவே இதற்கு வேறு ஏதாவது ஒரு காரணம் அமைந்திருக்க வேண்டும்.

மொழியை ஆராய்வோர் அம்மொழியிலுள்ள மெய்ம் மயக்கங்களை மட்டும் கண்டு கொள்வது மிக எளிய செயலாகும். ஆனால் அவற்றிடையே அமைந்துள்ள ஒழுங்கு முறையைக் கண்டு அவற்றைப் பொதுமைப்படுத்திச் சொல்லுதலே அரிய செயலாகவும் இலக்கண ஆசிரியரின் கடமையாகவும் இன்று மொழியியலார் கருதுகின்றனர். மேலும் ஒழுங்குமுறையைப் பொதுமைப்படுத்தும் போது சிலசமயங்களில் மொழியில் வராத ஆனல் வருவதற்கு வாய்ப்பு அதிகம் பெற்ற மெய்ம்மயக்கங்களைச் சேர்த்து மொழியின் இலக்கணமாகக் கூறிவிடலாம். அவ்வாறு வருவதற்கு வாய்ப்பு இருந்தும் வராதவற்றைத் தற்செயல் விடுப்பு (Accidental gap) என்று கூறி அவற்றை இலக்கணத்தில் சேர்த்துக் கூறலாம் என்று கொள்வர் மொழியியலார். ஆனல் மொழியின் அமைப்புக்கு முற்றிலும் மாறுபட்டதெனக் கருதத்தக்க மெய்ம் மயக்கங்களையும் பிறவற்றையும் மொழி அமைப்பிலே இயல்பான குறையாக வருவதால் அமைப்பு விடுப்பு (Structural gap) என்று கூறி அவற்றை ஒதுக்கிவிட வேண்டும் என்பர் மொழியியலார். அம்முறையில் தொல்காப்பியரும் ஏனைய தமிழ் இலக்கண ஆசிரியர்களும் கூறியவற்றில் உதாரணம் கிடைக்காத மெய்ம் மயக்கங்களைத் தமிழ்மொழியில் வருவதற்கு வாய்ப்பான மெய்ம்மயக்கங்கள் என்று கருதியும் அதனல் இலக்கணத்தில் பொதுமைப் படுத்த வாய்ப்பு உள்ளது என்று கொண்டும் கூறியிருக்கவேண்டும்.

ணகர மெய்யை எடுத்துக் கொண்டால் அது ககரத் தோடும் எண்கு என்றும் பகரத்தோடும் பண்பு என்றும் வரும் போது சகரத்தோடு மட்டும் தனிமொழியில் அமையவில்லை. அவ்வாறு வராதது தற்செயல் விடுப்பாகவே கருதி அதையும் இலக்கண ஆசிரியர்கள் சேர்த்துள்ளனர். ஆனல் ணகரம் தகரத்தோடு வராதது (ண்த்) அமைப்பு விடுப்பு என்பதால் அதை யாரும் கூறவில்லை.

**பா. வி.:** 3–வது வரி 'உவ இவனவாஞ்' என்ற மூல பாடம் 'உவ இயைய ஔவாம்' என்று திருத்தப்பட்டுள்ளது.

# 2. பத மரபு

23. எழுத்தொன்று பலபொருளைத் தரிற்பதம்; பகாமையி
னைப் பகுமையாம் அதிற்பகாமை யிடுகுறியாய்
மொழிப் பகுப்பாற் பயனில் பெயர் வினையொடு (இ)டைஉரி
யா(ம்);
முயல்பகாப் பதம்;தொடர்ச்சொல் இரண்டினுட் படாமல்
விளைத்தபெயர் முற்று எச்சம் பிறவுமாய் பகுதிவிகுதி
இடைநிலையே சாரியை சந்தி விகாரம்,
பழுத்த கருவிகளின் ஏற்பன கொண்டுமுடியும்
பகுபத(ம்) முன் மூன்றிவைக் காம்ஏனைசில புலுமே. (க)

***பதத்தின் பொது இலக்கணமும் பகுபத பகாப்பதப் பாகுபாடும் பகுபத உறுப்புக்களும் கூறுகின்றது.***

**உரை :** *ஒரு எழுத்தோ பல எழுத்தோ ஒரு பொருளைத் தந்தால் 'பதம்' ஆகும். அது, பகாமை (பகாப்பதம்), பகுமை (பகுபதம்) என இருவகைப்படும். அவற்றில் பகாமைப் பதம் (பகாப்பதம்) என்பது இடுகுறியாய், பகுத்தால் பயனில்லாததாய்ப் பெயர், வினை, இடை, உரி என நான்கு வகைப்படும். பெயர், வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம் முதலியனவாய்ப் பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்ற உறுப்புக்களைக் கொண்டு இவற்றுள் ஏற்பன கொண்டு முடிவது பகுபதம்.*

**விளக்கம் :**

பூ—ஒரு எழுத்து ஒருமொழி

பலா
மலர்
கடவுள் } பல எழுத்து ஒருமொழி

நடந்தான்—பகுபதம், நட+(ந்)த்+ஆன்

பாரம்—பெயர்ப்பகாப்பதம்

ஆரம்பி—வினைப்பகாப்பதம்

கொல் (ஐயப்பொருள்) —இடைப்பகாப்பதம்

நனி—உரிப் பகாப்பதம்

தலைவன்—பெயர்ப்பகுபதம்

வாழ்வான்—வினைமுற்றுப்பகுபதம்

வாழ்ந்து—வினையெச்சப்பகுபதம்

வாழ்ந்த—பெயரெச்சப்பகுபதம்

வாழும்—(வாழ்+உம்): பகுதியும் விகுதியும் கொண்டது.

செய்தான் (செய்+த்+ஆன்): பகுதி, இடைநிலை, விகுதி கொண்டது.

உண்டனன் (உண்+ட்+அன்+அன்): பகுதி, இடைநிலை, சாரியை, விகுதி கொண்டது.

பிடித்தனன் (பிடி+த்+த்+அன்+அன்): பகுதி, சந்தி, இடைநிலை, சாரியை, விகுதி கொண்டது.

செத்தனன் (சா+த்+த்+அன்+அன்): பகுதி, சந்தி, இடைநிலை, சாரியை, விகுதி கொண்டு பகுதியில் விகாரம் ஏற்பட்டது.

பகுதி என்பது சொல்லின் அடிப்படைப் பொருளைத் தரும் கூறு ஆகும். இதை அடிச்சொல் (Root) என்றே விகுதி

ஏற்கத் தகுதி பெற்ற வடிவமான Stem என்றே அழைக்கலாம்.

விகுதி என்பது சொல்லின் இறுதியில் வரும் பொருள் உடைய கூறு என்று இலக்கண ஆசிரியர்கள் கருதுகின்றனர். எனவே தான் பெயரிலும் வினைமுற்றிலும் பால் காட்டும் உருபை மட்டுமே விகுதியாகக் கொண்டுள்ளனர். ஆனால் விகுதி Suffix என்ற பொதுப் பொருளிலும் இன்று கையாளப் படுகின்றது.

இடைநிலை என்பது வினைச்சொல்லில் காலங்காட்டும் விகுதியையே சிறப்பாகக் குறிப்பதாக இலக்கண ஆசிரியர்கள் கருதுகிறார்கள். பெயர்ச் சொல்லிலே பால் காட்டும் விகுதிக்கு முன்னால்வரும் அசைநிலைகளை (சாரியை)யும் இடைநிலை என்று கொண்டுள்ளனர். புலைத்தி என்ற பெயர்ச்சொல்லில் தகரமும் சேரமான் என்பதில் மகரமும் இடைநிலை என்று மயிலைநாதர் காட்டியுள்ளார். 'பகுபதம், வினையாயின் விகுதிப் புணர்ச்சிக்கண் வருவன சாரியை என்றும் பெயராயின் பெயரிடைநிலை என்றும் பெயரளவில் தான் வேறுபாடு என்று கொண்டனர்' என்பர் (சோ. ந. கந்தசாமி: இலக்கணச் சிந்தனைகள் பக்: 27).

சந்தி என்பது பகுதிக்கும் இடைநிலைக்கும் நடுவில் வருவதாகக் கருதப்படுகிறது. சந்தி என்பது மிகுதல் புணர்ச்சியைக் குறிக்கும். படி என்ற பகுதியும் தகர இடைநிலையும் சேரும்போது தகரமெய் சந்தியாக வந்தது என்பர்.

படி + த் + த் + உ = படித்து

சாரியை என்பது இடைநிலைக்கும் விகுதிக்கும் நடுவில் வருவதாகக் கருதப்படுகிறது. படி என்ற பகுதியும் தகர இடைநிலையும் அன் என்ற விகுதியோடு சேரும்போது அன் என்ற சாரியை வரும்.

படித்தனன்

| பகுதி | சந்தி | இடைநிலை | சாரியை | விகுதி |
|---|---|---|---|---|
| படி | த் | த் | அன் | அன் |

பெயரில் வேற்றுமை உருபிற்கு முன்வரும் சாரியையும் இங்கு எடுத்துக் கொள்ளலாம்.

| பெயர் | சாரியை | விகுதி |
|---|---|---|
| ஒன்று | அன் | ஐ —ஒன்றனை |

விகாரம் என்பதை ஒரு தனிப் பகுப்பாகக் (Segment) கருத முடியாது. பொதுவாக மேலே குறிப்பிட்ட ஐந்து உறுப்புகளும் மாற்றுவடிவம் பெறுவதை விகாரம் என்று அழைக்கலாம். காண் என்ற பகுதி இறந்த கால இடைநிலை முன் கண் என்று விகாரப்படும். நன்னூல் உரையாசிரியர் கள் கருத்துப்படி வாழ்ந்து என்ற வினையெச்சத்தில் வரும் நகரமெய் சந்தியாக வந்த தகர மெய்யின் விகாரமாகும்.

பகுபதச் சொற்களில் பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை ஆகிய ஐந்தையும் சொற்கூறுகளாகக் (Segments) கொள்ள வேண்டும். ஆனால் பகுதி, விகுதி, இடைநிலை ஆகிய மூன்றே பகாப்பத உறுப்புக்கள். பகுபதச் சொல்லில் புறநிலை அமைப்பிலிருந்து (Surface structure) சென்றால் உயர்ந்த அளவு ஐந்து கூறுகள் இருக்கலாம். அவற்றைப் புறநிலை உறுப்புகள் என்று வேண்டுமானால் அழைக்கலாம். புதைநிலை அமைப்பில் (deep structure) பகுதி, விகுதி, இடை நிலைஎன்று மூன்றே உறுப்பாக அமையும். எனவே புறநிலையில் ஐந்து கூறுகளாக இருப்பது புதைநிலையில் மூன்று உறுப்பாகவே அமையும். எந்த நிலையிலும் விகாரத்தை ஒரு உறுப்பாகவோ கூறாகவோ கொள்ள முடியாது.

பொதுவாக மொழி அமைப்பு நீண்டநிலை அமைப்பு (Linear structure) உடையதன்று என்றும் படிநிலை அமைப்பு (Hiearchical structure) உடையது என்றும் மொழியியலார் விளக்குவர். அதன்படி பகுதி, விகுதி, இடைநிலை ஆகிய முதல்படியில் உள்ள புதைநிலை உறுப்புகள்; அவை ஒன்றோடொன்று புணரும்போது மிகுதல் புணர்ச்சி

யாகச் சந்தியும் சாரியையும் தோன்றும். அவை இரண்டாவது படியாக உள்ள இடைப்பட்ட அமைப்பு (Intermediate structure); பின்னர், திரிதல்புணர்ச்சி பெறுவதே விகாரம் எனப்படும். இதன் மூலம் புறநிலை அமைப்பிற்குரிய அமைப்பாக வருவதை இறுதிப்படி (Terminal structure) என்று அழைக்கலாம்.

பகுதிகளை அவை ஏற்கும் விகுதிகளின் அடிப்படையைப் பகுப்பதே சொற்கூறு (Parts of speech) எனப்படும். தமிழில் பெயர், வினை, இடை, உரி என்ற பாகுபாடு ஓரளவு இந்தக் கருத்தில் எழுந்தது. ஒவ்வொரு வகைச் சொல்லும் ஏற்கும் விகுதிகளை விளக்குவதே சொல்லியல் (Morphology) எனப்படும்.

சொற்களைப் பகுத்து ஆராய்ந்த பின்னரே ஒரு சொல்லிற் குரிய பல்வேறு வடிவங்களையும் அவை வருமிடங்களையும் அறிந்து கொள்ள முடியும். சொல்லைப் பகுத்து ஆராய்வது மொழியியலார் சொல்லியல் ஆராய்ச்சியில் முதற்கூறுகக் கருதும் பகுப்பு (Segmentation) என்பதோடு ஒத்தது. பகாப்பதம் என்பது ஓர் உருபனை மட்டுமே உடைய ஓர் உருபுச்சொல் (Monomorphemic word) என்றும் பகுபதம் என்பது ஒன்றுக்கு மேற்பட்ட பல உருபன்களை உடைய பல்லுருபுச்சொல் (Polymorphemic word) என்றும் கொள்ளலாம்.

பகுப்பு ஆராய்ச்சிக்குப் பிறகு ஒரு சொல்லின் பல்வேறு வடிவங்களையும் தொகுத்து அதற்கு ஒரு பொது வடிவம் (Base form) எடுத்துக் கொள்வர் மொழியியலார். சொல்லியல் ஆராய்ச்சியில் பொது வடிவத்தைத் தேர்ந் தெடுப்பதை (Selection of Base form) இரண்டாவது கூறுகக் கருதுவர். பிற்கால இலக்கணங்கள் அனைத்தும் சொல் தனித்தியங்கும்போது கொள்கிற வடிவத்தையே (Free form) பொது வடிவமாகக் கொண்டதால் பொது

வடிவம் தேர்ந்தெடுக்கும் முறை பற்றிய ஆராய்ச்சி தமிழ் இலக்கணங்களில் காணப்படவில்லை.

பொது வடிவத்திலிருந்து வரும் பிற வடிவங்கள் மாற்று வடிவங்கள் அதாவது மாற்றுருபு (Allomorph) எனப்படும். எல்லா மாற்று வடிவங்களையும் புணர்ச்சி விதி மூலம் விளக்குவர். எனவே புணர்ச்சி இலக்கணத்திற்கு முன்னால் பகுபத ஆராய்ச்சி அல்லது சொல்லியல் ஆராய்ச்சி மேலே சொன்ன முறையில் செய்யப்பட வேண்டும். ஆகவே பகுபத ஆராய்ச்சியைச் சற்று விரிவாக நன்னூலார் முதன் முதலில் ஆரம்பித்து வைத்தார்.

'முன்மூன்று இவைக்காம் ஏனைசிலபுலுமே' என்பது விளங்கவில்லை. பகுதி, விகுதி, இடைநிலை என்ற முன்னால் சொன்ன மூன்றும் ஏனையவற்றில் (சந்தி, சாரியை, விகாரம்) சிலவற்றோடு பொருந்தும் என்று உரை கொள்ளலாமா என்பது ஆராயத்தக்கது. பகுபதம் பற்றிய இவர் விளக்கம் சற்றுப் புதுமையானது. நன்னூலார் பொருள், இடம் முதலிய ஆறு அடிப்படையில் வரும் பெயர்களும் காலத்தைக் குறிப்பாகவும் தெரிநிலையாகவும் காட்டும் வினைகளும் பகுபதம் என்று கூறியிருக்க இவர் பெயர்ச்சொல், வினைமுற்று, எச்சம் (பெயரெச்சம், வினையெச்சம்) போன்ற பிறவும் என விதந்து ஓதியுள்ளார். அவ்வாறே பகுதி, விகுதி, இடைநிலை போன்றவை எல்லாப் பதத்தோடும் வரும் என்பது போல 'முன்னிப் புணர்ப்ப முடியும் எப்பதங்களும்' (133) என்று நன்னூலார் பொதுவாகக் கூறியிருக்க 'பகுதி விகுதி......... ஏற்பன கொண்டு முடியும் பகுபதம்' என்று இங்கு விதந்து ஓதியது இலக்கணத்தில் தெளிவை ஏற்படுத்தியுள்ளது.

நன்னூல் 128, 131, 133 ஆகிய மூன்று சூத்திரங்களை அடியொற்றியது இச்சூத்திரம்.

24. புல்லும், நட,வா,மடி, சீ,விடு,கூ,வே, வை, நொப்,
போ, வெள,வொடு எய் உரிஞ்,உண், பொருந்,திருந்,தின்
தேய், பார்,
செல்,வவ்,வாழ்,கேள், அஃகிருபான் மூன்று; ஈற்றிற்
சேர்த்த முதனிலை யீண்டு தெரிநிலையின் வினைக்கே
சொல்பகுதி; வினைமரபிற் பிறவினைக்கு எண்வகையாய்ச்
சொல்லும்ஈ ரேவலின்வினைக் குப்பகுதியதாம். பொருளே
நல்லிடங் காலஞ்சினையே குணந்தொழில் என்றுறு
நாட்டுவினைக் குறிப்பின்வரும் பகுதியெனக்
கொளுமே. (உ)

***பகுதியின் விரி கூறுகின்றது.***

**உரை:** *பொருந்திய நட, வா, மடி, சீ, விடு, கூ, வே, வை, நொ, போ, வெள, உரிஞ், உண், பொருந், திரும், தின், தேய், பார், செல், வவ், வாழ், கேள், அஃகு என்ற இருபத்து மூன்று பகுதிகளும் தெரிநிலை வினைக்கு உரியன. அவை வினைச்சொல்லில் பிறவினைக்கு எட்டு வகையாகச் சொல்லும் ஈரேவல்வினைப் பகுதியாக இருக்கும். ஏவல் வினைக்குப் பகுதியாக வரும். பொருள், இடம், காலம், சினை, குணம் தொழில் என்ற ஆறு வகையாகக் குறிப்பு வினையின் பகுதி வரும்.*

**விளக்கம்:**

*குழையன் — குழை என்பது குறிப்பு வினையின் பொருள் பகுதி.*

*அகத்தன் — அகம் என்பது குறிப்பு வினையின் இடப் பகுதி.*

*ஆதிரையன் — ஆதிரை என்பது குறிப்புவினையின் காலப் பகுதி.*

*பல்லன் — பல் என்பது குறிப்பு வினையின் சினைப் பகுதி.*

*கரியன் — கருமை என்பது குறிப்பு வினையின் குணப் பண்புப் பகுதி.*

கூத்தன் — கூத்து என்பது குறிப்பு வினையின் தொழில் பகுதி.

எட்டு வகையாக ஈரேவல் வரும் என்றது நடப்பி, நடப்பிப்பி, நடத்துவி, நடத்துவிப்பி, வருவி, வருவிப்பி; உண்பி, உண்பிப்பி என்பதைக் குறிப்பதாகக் கொள்ளலாம். இது, வினைப்பகுதியின் தொகையைக் கூறுகின்றது. சொல்லியல் ஆராய்ச்சியில் ஒரு பகுதியாகப் பகுதிகளின் தொகுத்துக்கூறுதலும் கருதப்படுகின்றது.

ஈரேவலின் விகுதியாக நான்கு மட்டுமே (வி. பி. என்பது தனித்து வருவதும் இணைந்து வருவதும் ஆக நான்கு — நடப்பி, வருவி, நடப்பிப்பி, வருவிப்பி) நன்னூலார் கூற இவர் எட்டு வகை கூறுவது புதுமையாக உள்ளது.

நன்னூல் 137, 138, 132 ஆகிய சூத்திரங்களின் தழுவலே இச்சூத்திரம்.

**பா. வி.:** ஈறேவல் (3வதுவரி) என்ற மூலபாடம் ஈரேவல் என்று கொள்ளப்பட்டுள்ளது.

25 கொண்ட அன், ஆன், அள், ஆள், அர், ஆர், பம், மார், அ, ஆ,
குு, டு, து, று, என், ஏனன ல்லொடு, அம், ஆம், எம்,
ஏம், ஓம்,
கண்ட உம் ஊர் கடதற வை யிய யார் மின் இர் ஈர்
கயர வொற்றுல் ஏல் காணும் பிறவும் வினை விகுதி
பண்டிவற்றிற் சிலவெழுத்து ஈற்றென சொல்லீற்றன வாய்ப்
பல பெயர்க்காங்; கடதற வொற்றின் னிறப்புங்கிறுகிற்
றெண்டருகின்று ஆநின்று நிகழ்வு பவ்வல் எதிர்வும்
இடைநிலை பாலிடத் தேற்கும் வினையெலா சிலவே. (௯)

***விகுதியின் விரி கூறுகின்றது.***

***உரை :*** அன், ஆன், அள், ஆள், அர், ஆர், ப. மார், அ, ஆ, கு, டு, து, று, என், ஏன், அன், அல், அம், ஆம், ஓம், கும், டும்; தும், றும், ஐ, இ, மின், இர், ஈர், க, ய, ர்,

ஆல், ஏல் போன்றவை வினை விகுதிகளாம். இவற்றுள் சில பெயர்ச்சொல் ஈற்றிலும் வரும். க், ட், த், ற், இன், ஆகிய விகுதிகள் இறந்த காலத்தையும் கிறு, கிற்று, கின்று, ஆநின்று ஆகிய விகுதிகள் நிகழ் காலத்தையும் ப், வ் ஆகிய விகுதிகள் எதிர்காலத்தையும் இடைநிலைகளாக நின்று காட்டும். சில வினைகள் இவற்றை ஏற்கா.

**விளக்கம் :**

| | | |
|---|---|---|
| அன் | — நடந்தனன் | ஆண்பாற் படர்க்கை |
| ஆன் | — நடந்தான் | |
| அள் | — நடந்தனள் | பெண்பாற் படர்க்கை |
| ஆள் | — நடந்தாள் | |
| அர் | — நடந்தனர் | பலர்பாற் படர்க்கை |
| ஆர் | — நடந்தார் | |
| ப | — நடப்ப | |
| மார் | — நடவன்மார் | |
| அ | — நடந்தன | பலவின்பாற் படர்க்கை |
| ஆ | — நடவா | |
| கு | — உண்கு | தன்மை ஒருமை |
| டு | — உண்டு | |
| று | — சேறு | |
| து | — நடந்து | |
| என் | — நடந்தனென் | |
| ஏன் | — நடந்தேன் | |
| அன் | — வருவன் | |
| அல் | — நடப்பல் | |

| | | |
|---|---|---|
| அம் — நடந்தனம் | | |
| ஆம் — நடந்தாம் | | |
| எம் — நடந்தனெம் | | |
| ஏம் — நடந்தேம் | | |
| ஓம் — நடந்தோம் | | தன்மைப் பன்மை |
| கும் — உண்கும் | | |
| டும் — உண்டும் | | |
| றும் — சேறும் | | |
| தும் — நடந்தும் | | |
| ஐ — நடந்தனை | | முன்னிலை ஒருமை |
| இ — நடத்தி | | |
| மின் — நடமின் | | |
| இர் — நடந்தனிர் | | முன்னிலைப் பன்மை |
| ஈர் — நடந்தனீர் | | |
| க — வாழ்க | | |
| ய — வாழிய | | வியங்கோள் |
| ர் — வாழியர் | | |

ஆல் — வழால்

ஏல் — வழேல்

காண் — சொல்லிக்காண்

உம் — உண்ணும்

இவ்வீறுகளில் பெயர்க்கு இறுதியில் வரும் ஈறுகளும் உண்டு. அவையாவன:

அன் — குழையன், பொன்னன்

ஆன் — வானத்தான்

அள் — குழையள்

ஆள் — வானத்தாள்

அர் — குழையர்

ஆர் — வானத்தார்

மார் — பாவைமார், தோழிமார்

அ — குழையன

இ — பொன்னி

காலங்காட்டும் விகுதிகள்

| | | | |
|---|---|---|---|
| க் | — புக்கான் | | இறந்த காலம் |
| த் | — செய்தான் | | |
| ட் | — உண்டான் | | |
| ற் | — தின்ருன் | | |
| இன் | — ஓடினன் | | |
| கிறு | — செய்கிருன் | | நிகழ்காலம் |
| கிற்று | — | | |
| கின்று | — வருகின்றன | | |
| ஆநின்று | — செய்யாநின்ருன் | | |
| ப் | — உண்பான் | | எதிர்காலம் |
| வ் | — செய்வான் | | |

விகுதிகளின் தொகை, இலக்கண விளக்கம் 46, 47, 48, 49 ஆகிய சூத்திரங்களை ஒட்டியது. நன்னூலில் கூருத சில விகுதிகளும் (ஆல், ஏல் போன்றவை) கால இடைநிலைகளும் (இறந்த காலத்திற்குக் ககரமும்) காணப்படுவதால் இலக்கண விளக்கத்தைத் தழுவியது என்று கொள்ள வேண்டியுள்ளது.

**பா. வி.:** யியயார் (2-வது வரி) (இ, இய், ஆர்) என்பது விளங்கவில்லை. இங்கு ஆய் விகுதி விடப்பட்டுள்ளது.

*மினீரீர் (மின், ஈர், ஈர்) என்று மூலபாடத்தில் (2—வது வரி) உள்ளது. மின், ஈர், இர் (மினீரிர்) என்றோ மின், இர், ஈர் (மினிரீர்) என்றோ திருத்தி வாசித்துக் கொள்ளலாம். இங்கு பின் முறை கையாளப்பட்டுள்ளது: இற்பும் (3-வது வரி) என்ற மூலபாடம் 'இறப்பும்' என்று திருத்தப்பட்டுள்ளது.*

26. சிலபலவாய் இலக்கியங்கண் டதற்குஇயலே சொல்லாற்
றிகழ்பகுதி விகுதிபகுத்து இடையினிற்கும் எழுத்தைச்
சொலேயிசைவாய் வினைக்குறிப்புக்கு இடைநிலையாய்ப்புகல்வார்
தொகுக்கும்அன் ஆன்இச்சினத்து ந்தநனுமை குனவும்
அலிஞடயத் தளவணவீ யக்கோவெலா வற்றவைமற்
ருலுவ் வெனும் எண்ணுன்கு இரண்டும் பிறவு
மலிவிகுதி பதம்உருபு மேலொன்றும் பலவும்
வருவது போவது விகற்பமாம் இரு சாரியையே. (ச)

***இது இடைநிலையும், சாரியையும் பற்றி விளக்குகின்றது.***

*உரை: இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் சொல்வதால் குறிப்பு வினையில் பகுதி, விகுதி பகுத்துப் போக இடையில் நிற்கும் எழுத்தை இடைநிலை என்று சொல்லுவர் புலவர். அன், ஆன், இ.சு, இன், அத்து, நம் தன், உம். ஐ, கு, ன, ம, அல், இ, ஞ, ட, ய, து, அள், அவ், அண், அ, ஈ, அக்கு, ஓ, ஏல், ஆ இறுதியில் வருவனவும் மற்றும் ஆல், உ என்பனவும் ஆக முப்பத்து நான்கு விகுதி பகுதி, உருபு ஆகியவை ஒன்றோடொன்று சேரும் போது ஒரு சாரியையாயினும் பல சாரியையாயினும் வருதலும் வராமல் போதலும்ஆகிய இரண்டு விகற்பங்களைச் சாரியை உடையது.*

*அன் — ஒன்றனை (ஒன்று + அன் + ஐ)*
*ஆன் — ஒரு பாற்கு (ஒருபஃது + ஆன் + கு)*
*இச்சு — தச்சிச்சி (தச்சு + இச்சு + இ)*

*(இவ்வாறு இலக்கண விளக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது, பக்: 85)*

இன் — வண்டினை (வண்டு + இன் + ஐ)

அத்து — மரத்தை (மரம் + அத்து + ஐ)

நம் — எல்லாநம்மையும் (எல்லாம் + நம் + ஐ + உம்)

தன் — கோவலன் தன்னை (கோவலன் + தன் + ஐ)

உம் — எல்லாரும் (எல்லார் + உம்) ?

ஐ — பண்டைக் காலம் (பண்டு + ஐ + காலம்)

கு — ஆடிக்கு (ஆடி + கு) (இங்கு குகரத்தை நான்காம் வேற்றுமையாக இலக்கண ஆசிரியர்கள் கொள்வதில்லை)

ன — ஆனநெய் (ஆ + ன + நெய்)

அல் — தொடையல் (தொடை + அல்)
(அல் என்பதற்குப் பொருள் இல்லாததால் சாரியையாகக் கொள்ளப்பட்டது)

ம — சேரமான் (சேரன் + ம் + ஆன்)

இ —

ஞ — கலைஞன் (கலை + ஞ் + அன்)

ட — மலையாண்டி (மலை + ஆண் + ட் + இ)

ய —

த — புலைத்தி (புலை + த் + இ)

அள் —

அவ் — வானவன் (வான் + அவ் + அன்)

பதமுன் பதம் புணர்தல் பொருட்புணர்ச்சி

புளி + காய் > புளியங்காய்

பதமுன உருபு புணர்தல் உருபுப் புணர்ச்சி.

கல் + ஐ > கல்லை

பதமுன் விகுதி புணர்தல் விகுதிப் புணர்ச்சி.

நட + த் + அன் + அன் > நடந்தனன்*.

இது சாரியை பெற்று வந்தது.

பொருட்புணர்ச்சி: புளி + கறி > புளிக்கறி

உருபுப் புணர்ச்சி : மான் + ஐ > மானை

விகுதிப் புணர்ச்சி : நட + த் + ஆன் > நடந்தான்*

இவை மூன்று புணர்ச்சியிலும் சாரியை பெறுமல் வந்தன. அவற்றினை (அவை + அற்று + இன் + ஐ) இங்கு இரண்டு சாரியை வந்துள்ளது.

சாரியைகளை நன்னூலார் உருபு புணரியலிலும் (243) இலக்கண விளக்கத்தார் உயிரீற்றுப் புணரியலிலும் (61) கூறியுள்ளனர். பகுபதத்தின் ஓர் உறுப்பாகச் சாரியையைக் கொண்டு விட்டமையாலும் பகுதி, விகுதிகளின் தொகைகளைப் பதமரபில் கூறினமையாலும் சாரியைகளின் தொகையைப் பதமரபில் கூறியது வரவேற்கத்தக்கதே. அவ்வாறு சாரியை வருமிடம் பற்றிய இறுதிப் பகுதியும் நன்னூலில் உருபு புணரியலிலும் (243) இலக்கண விளக்கத்தில் (61) உயிரீற்றுப் புணரியலிலும் கூறியதைச் சாமி கவிராயர் பதமரபில் கூறியதும் பொருத்தமாக அமைந்து விட்டது.

இச்சூத்திரம் நன்னூல் 141, 244, 243 ஆகிய சூத்திரங்களின் தழுவலாகவே அமைந்துள்ளது

---

* மொழியியலார் 'ந்த்' என்பதையே இறந்தகால விகுதியாகக் கொள்வர்.

27. சார் எண் வேற்றுமை விரிந்துந் தொகுத்தும் அவ்வப் பொருளைத்
தழுவுதொடர் வேற்றுமையின்வழி விரிவாய்த் தொகையாய்ப்
பேரில் வினையிடையுரிச் சொற்றொடர் பொருள் அவ்வழியே.
பின்பு பொது வழியடங்கா வழிபுணர் நாற்சந்தி
சேர்புணர்ச்சி புணர்ச்சியின்றாய் எழுத்து மொழி தோன்ற
றிரிதல் கெடன் மாறல் விகாரம், விரித்தனீட்டல்
ஆர்குறுக்கல் வலிமெலிமுக்குறை தொகுத்தன் முன்
மூன்றும் ஒன்று நானாலாய்ச் சொல்லினும் உய்குவரே. (ரு)

***இது சந்தியும் விகாரமும் விளக்குகிறது.***

**உரை :** *வேற்றுமை உருபு விரிந்தும் தொக்கும் அவ்வப் பொருளைத் தருகின்ற புணர்ச்சி வேற்றுமைப் புணர்ச்சி. வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் ஆகியன தொடர்ந்து வருவது அல்வழித் தொடராகும். புணர்ச்சி நான்கு வகைச் சந்தி (இயல்பு, தோன்றல், திரிதல், கெடுதல்) சேர்ந்தது. புணர்ச்சி இல்லாத இயல்பும், எழுத்தும் மொழியும் தோன்றல், திரிதல், கெடுதல், மாறுதல் ஆகிய நால்வகை விகாரமுமாகும். விரித்தல், நீட்டல், குறுக்கல், வலித்தல், மெலித்தல், முதற் குறைத்தல், இடைக்குறைத்தல். கடைக்குறைத்தல்,தொகுத்தல் என ஒன்பதாகவும் ஒன்று நான்காகவும் சொல்லலாம்.*

*பாலை + கறந்தான் = பாலைக்கறந்தான். இரண்டாம் வேற்றுமை விரிப்புணர்ச்சி.*

*பால் + கறந்தான் = பாற்கறந்தான். இரண்டாம் வேற்றுமை தொக்குநின்ற புணர்ச்சி.*

*நடித்து + காட்டு = நடித்துக்காட்டு. வினையெச்சத் தொடர். அல்வழிப் புணர்ச்சி.*

*புணர்ச்சியில்லாமல் விகாரம் ஏற்படுவது தனிச்சொல்லில் மொழிமாற்றத்தால் ஏற்படும் மாற்றம் ஆகும்.*

**விளக்கம் :** *புணர்ச்சி விகாரம், புணர்ச்சியில் விகாரம் என்பது, இலக்கணக் கொத்தில் காணப்படும் ‘புணர்ச்சி விகாரம் புணர்ச்சியில் விகாரம் என இரண்டாகும் எழுத்து*

விகாரம்' (111); 'தோன்றல் திரிதல் கெடுதல் நிலைமாறுதல் என நான்காகும் புணர்ச்சியில் விகாரம்' (113) என்ற நூற்பாக்களைத் தழுவியது.

புணர்ச்சியில் விகாரம்.

| | |
|---|---|
| தோன்றல் | — யாது > யாவது |
| திரிதல் | — உழுந்து > உளுந்து |
| கெடுதல் | — யாடு > ஆடு |
| நிலைமாறுதல் | — மிஞிறு > ஞிமிறு |
| | விசிறி > சிவிறி |
| விரித்தல் | — விளையுமே > விளையும்மே |
| நீட்டல் | — இது > ஈது |
| குறுக்கல் | — தீயேன் > தியேன் |
| வலித்தல் | — குறுந்தாள் > குறுத்தாள் |
| மெலித்தல் | — தட்டை > தண்டை |
| முதற்குறை | — தாமரை > மரை |
| இடைக்குறை | — ஊஞ்சல் > ஊசல் |
| கடைக்குறை | — உலகம் > உலகு |
| தொகுத்தல் | — சோழநாடு > சோணாடு |

சந்தி என்பது மிகுதிப் புணர்ச்சியாகவும் விகாரம் என்பது புணர்ச்சி இல்லாமல் ஏற்படும் மாற்றமாகவும் கருதலாம்.

இது உருபு புணர்ச்சி, விகுதிப் புணர்ச்சியில் ஏற்படும் மாற்றமாகக் கொள்ளலாம். இத்தகைய புணர்ச்சி மாற்றத்தை அகநிலைப்புணர்ச்சி (Internal Sandhi) என்பர் மொழியியலார். பதத்தோடு பதம் புணரும் புணர்ச்சியைப் புறநிலைப்புணர்ச்சி (external Sandhi) என்பர். பதவியலில் அகநிலைப் புணர்ச்சியை மட்டும் விளக்க வேண்டும். அவ்வாறு இலக்கண ஆசிரியர்கள் யாரும் செய்யவில்லை.

# 3. புணர்ச்சி மரபு

28. உயிர்மெய்முத லீருகும் இருபதந்தம் மொடு வேருெடு(ம்)
நாற்சந்தியின் பொருளாளின்மொழி அம்மொழியாய்
இயல்புவிகா ரத்திஞற்புணர் வாம்;எண் மூன்றுஈற்ற
நாஞற்சொலின் முன்ஞற் சொற்புணரின் அயிரும்
உயிர்வருக்கம் வரிற்சாரியை யொற்றீற்று ஒன்றுஅணுகி
யுருப்போய் ஒலியாமு வருக்கம் வருங்காற்
பயிலியன்மிக் குறழ்திரிவு கெடன்மாற லாறு
பான்மையவாய் எவ்வழிக்கும் ஏற்கு முடிவுடைத்தே. (௧)

***புணர்ச்சியின் பொது விளக்கம் கூறுகின்றது.***

*__உரை :__ உயிரையும் மெய்யையும் முதலாகவும், ஈருகவும் உடைய பகுபதம், பகாப்பதம் ஆகிய இரண்டு சொற்களும் தம்மொடு தாமும் பிறவொடு பிறவுமாய் உயிரீற்றுச் சொற்கள் உயிர்முதன் மொழியோடும் மெய்யீற்றுச் சொற்கள் மெய்முதன் மொழியோடும் உயிரீற்றுச் சொற்கள் மெய் முதன் மொழியோடும் மெய்யீற்றுச் சொற்கள் உயிர் முதன் மொழியோடும் புணரும் போதும் இயல்பாகவும் விகாரமாகவும் புணரும். இருபத்து நான்கு எழுத்துக்களை ஈற்றில் (12 உயிர், 5 மெல்லினம், 6 இடையினம், 1 குற்றிய லுகரம்) உடைய சொற்கள் பதினன்கு வகைச் சொல்லோடு (பெயர் முன்பெயர், வினை, இடை, உரி; வினைமுன் பெயர், வினை, இடை, உரி; இடைமுன் பெயர், வினை, இடை, உரி;*

உரிமுன் பெயர், வினை, இடை, உரி ஆகியன) புணர்ந்தால் உயிர் முதன் மொழியாக வருமொழி இருக்குமானால் சாரியையின் மெய் கெட்டுவிடும். வல்லின, இடையின, மெல்லின முதன் மொழி வந்தால் இயல்பு, மிகுதல், உறழ்ச்சி, திரிதல், கெடுதல், நிலைமாறுதல் என்று ஆறு தன்மைகளை உடையவாய் ஏற்ற முடிவு பெற்று வரும்.

**விளக்கம்:**

நடை + அழகு = நடையழகு — உயிர்முன் உயிர்
நடை + தீது = நடைதீது — உயிர்முன்மெய்
கல் + அழகு = கல்லழகு — மெய்முன்உயிர்
கல் + குறிது = கற்குறிது — மெய்முன்மெய்
நூல் + அழகு = நூலழகு — பெயர் முன் பெயர்
நூல் + பெற்றான் = நூற்பெற்றான் — பெயர் முன் வினை
நூல் + கு = நூற்கு — பெயர் முன் இடை
அம்பு+கடிவிடுதும்=அம்புகடிவிடுதும் — பெயர்முன் உரி

இவ்வாறே வினை முதலிய ஏனைய சொற்களின் முன்னும் நான்கு சொற்களும் புணர்தல் கொள்க.

இயல்பு — நிலா + முற்றம் = நிலாமுற்றம்
மிகுதல் — வாழை + பழம் = வாழைப்பழம்
உறழ்ச்சி — கிளி + குறிது = கிளிக்குறிது ௳ கிளிகுறிது
திரிதல் — பொன் + குடம் = பொற்குடம்
கெடுதல் — மரம் + வேர் = மரவேர்
மாறுதல் — நாளி + கேரம் = நாரிகேளம் (இலக்கணக் கொத்திலிருந்து எடுக்கப்பட்டது)

முதல் பகுதியில் நன்னூல் 151–ஆம் சூத்திரத்தையும் அறுவகை மாற்றம் என்பதில் இலக்கணக்கொத்து

113-ஆம் சூத்திரத்தையும் (தோன்றல், திரிதல், கெடுதல், நிலைமாறுதல் என நான்காம் புணர்ச்சியில் விகாரம்) தழுவி எல்லா வகைப் புணர்ச்சி மாற்றத்தையும் சேர்த்து ஆறுவகை என்று சொல்லியுள்ளார். இவர் உறழ்ச்சியைத் தனி வகையாகக் கொண்டுள்ளார்.

'பொருளாளின் மொழி' என்பதற்கும் 'சொற்புணரின் அயிரும்' என்பதற்கும் பொருள் விளங்கவில்லை.

29. உடலின்உயிர்ஒலி யுறல்குற்றொற்று (உ)யிர்கண்டிரட் டல்,உவ்
வழிந்தவ்வொற் றின்உயிர்ஒலி ஏறல்; உயிரின்
இடம்வன்மை வரினதுவே யினமேதான் மிகுத்தல்;
ஈறுகுறுகு தல்குறுகி யுவ்வேற்றல்; முதலே
கெடுதன் முதற்குறுக்கு,முதல் அலதுஏகல்,நடுவே
கெடுதல், நிலை இடை மிகல்சொற்கெடல் ஒற்றுவ் வேற்றல்,
கடையில்ஒற்றை யிரட்டை பலகெடுதல் அளபேற்றல்
காணுமுயிர் வரடணவ தாகயண வுதலே. (உ)

**புணர்ச்சியைத் தொகுத்துக் கூறுகின்றது.**

*1.* மெய்யெழுத்துமேல் உயிரெழுத்துவரின் பொருந்தும். *2.* குறிலை அடுத்து வரும் மெய்யெழுத்துமுன் உயிர்வரின் இரட்டும். *3.* குற்றியலுகர ஈற்றின்முன் உயிர்வரின் உகரம் கெட்டு நின்ற மெய்யின் மேல் உயிர் பொருந்தும். *4.* உயிர் ஈற்றுச் சொல்முன் வன்மை வந்தால் வல்லினம் மிகும். *5.* இனமான மெல்லினம் மிகும் *6.* ஈற்று உயிர் குறுகும்; *7.* குறுகி உகரம் ஏற்கும். *8* வருமொழி முதல் கெடும். *9.* முதல் குறுகும். *10.* முதல் அலது ஏகும். *11.* நடுவே கெடும். *12.* இடை மிகும். *13.* சொல் கெடும். *14.* ஒற்று உகரம் ஏற்கும். *15.* ஈற்றயல் ஒற்றிரட்டும். *16.* பல கெடும். *17.* அளவு ஏற்கும். *18.* உயிர்வரின் டகரம், ணகரமாக மாறிப் பொருந்தும்.

மெய்யெழுத்துமேல் உயிரெழுத்துப் பொருந்தும் என்ற விதி தனிக்குறிலை அடுத்துவராத மெய்யெழுத்துக்கே பொருந்தும்.

1. பகல் + இரவு = பகலிரவு — மெய்முன் உயிர்வரப் பொருந்துதல்.
2. கல் + இல்லை = கல்லில்லை — தனிக்குறில் முன் உயிர் வர இரட்டல்.
3. தகடு + அரிது = தகடரிது — குற்றியலுகர முன் உயிர் வர உகரம் கெட்டு மெய்யும் உயிரும் பொருந்துதல்.
4. பலா + காய் = பலாக்காய் — தான் மிகுதல்
5. மா + காய் = மாங்காய் — இனம் மிகுதல்
6. இரா : இர — (இரவில் = இர + இல்) ஈற்று உயிர் குறுகியது.
7. நிலவு — குறுகி உகாரம் ஏற்றது.
8. மக + அத்து = மகத்து — வருமொழி முதல் கெடல்.
9. நீ + கை = நின்கை — முதல் கெட்டது.
10. பத்து + இரண்டு = பன்னிரண்டு—முதலலது ஏகியது.
11. இரண்டு + பத்து = இருபது — இடை ஏகியது.
12. ஆடு + கால் = ஆட்டுக்கால் — இடை மிகுந்தது.
13. ஒன்பது + பத்து = தொண்ணூறு — சொல் கெட்டது.
14. பொருந் + கடிது = பொருநுக்கடிது — ஒற்று உகரம் ஏற்றது.
15. ஈற்றயல் ஒற்று இரட்டியதற்கு உதாரணம் தெரியவில்லை
16. நீயிர் + ஐ = நும்மை — பல குறுகியது
17. பலா + கோடு = பலாஅக்கோடு — அளபு ஏற்றது.
18. வேட்கை + அவா = வேணவா — உயிர்வரின் டகரம் ணகரமாக மாறிப் பொருந்தியது.

பல கெடுதல், உயிர்வரின் ட, ண ஆகல் என்பவற்றிற்குரிய உதாரணங்களின் பொருத்தம் ஆராய்தற்கு உரியது.

30. அணவுவலி வரின்மகரம் அவற்றுஇன வொற்ருதல்
ஆய்தம்உறல்; வம் முதலின் முதனீண்டு ஒற்றுறலே.
னண முன்(ந்) தற்றவாய் நன்னணவாய்ப் பின்றிரிவே
ஞமவரவே ளனணவாய்க் கசபவரற் றடவாய்த்
தணினணமுன் கசபவரற் றடவாய்முன் றிரிவே
தகரம்னண முன்னும் லள முனும்இயைந்தே டறவாய்த்
திணிநகரம் லளமுன்னியைந் தேனணவாய் இருசொற்
றிரிதல்மப் பாலவமதா னிலையுவ்வை யுறலே (ங)

***புணர்ச்சியைத் தொகுத்து உரைக்கின்றது.***

**உரை :** *19. மகர ஈற்றுச்சொல் முன் வல்லெழுத்து முதன்மொழி வந்தால் அவற்று இன ஒற்ருகத் திரியும். 20. ஆய்தம் வரும். 21. வகர முதன்மொழி புணரும் போது முதல் நீண்டு மெய் பொருந்தும். 22. னகர, ணகர முன் தகரம் வந்தால் முறையே றகர டகரமாகவும் 23. நகர முதன்மொழி வந்தால் ன, ணவாகவும், 24. லகர, ளகர முன் ஞகர மகரங்கள் வந்தால் னகர, ணகரம் ஆகவும் மாறும். 25. க, ச, ப வந்தால் றகரமாகவும், டகரமாகவும் மாறும். 26. தகரம் ண, ன முன் முறையே டகர றகரமாகவும், ல,ள முன் முறையே டகர றகரமாகவும் திரியும். 27. நகர முதன்மொழியான வருமொழியொடு லகர, ளகர இறுதியாக உடைய நிலைமொழி சேர்ந்தால் ன, ண வாக நிலைமொழியும் வருமொழியும் மாறும்.*

**விளக்கம் :** *19. இவ்விதி அல்வழிக்கே பொருந்தும்.*

| | |
|---|---|
| *மரம் + குறிது = மரங்குறிது* | *மகரம் இன ஒற்ருகத் திரிதல்* |
| *மரம் + சிறிது = மரஞ்சிறிது* | |
| *மரம் + தீது = மரந்தீது* | |

*20. முள் + தீது = முஃடீது — ஆய்தம் வருதல்*

*21. விளக்கம் தெரியவில்லை.*

*22. மகன் + தகுதி = மகன்றகுதி — னகரம் முன் தகரம் வரல்; ஆண் + தன்மை = ஆண்டன்மை — ணகரம் முன் தகரம் வரல்.*

23. மகன் + நலம் = மகனலம் }
ஆண் + நலம் = ஆணலம் } நிலைமொழி னகரமும் ணகரமும் கெட்டு, முறையே வருமொழி நகரங்கள், னகரமும் ணகரமும் ஆயின.

24. கல் + மாண்டது = கன் மாண்டது: மகரம் வர லகரம் னகரமாயிற்று.
கல் + ஞாலம் = கன்ஞாலம் : ஞகரம் வர லகரம் னகர மாயிற்று.
முள் + மாண்டது = முண்மாண்டது: மகரம் வர ளகரம் ணகரமாயிற்று.
முள் + ஞாலம் = முண்ஞாலம்: மகரம் வர ளகரம் ணகரமாயிற்று.

25. கல் + குறை = கற்குறை: லகரம் றகரமாயிற்று.
கல் + சிறப்பு = கற்சிறப்பு " "
கல் + பெருமை = கற்பெருமை " "
முள் + குறை = முட்குறை: ளகரம் டகரமாயிற்று.
முள் + சிறப்பு = முட்சிறப்பு " "
முள் + பெருமை = முட்பெருமை " "

26. கண் + தீமை = கட்டீமை: ணகரமும் தகரமும் 'ட்ட்' ஆயிற்று.
பொன் + தகடு = பொற்றகடு: னகரமும் தகரமும் 'ற்ற்' ஆயிற்று.
கல் + தீது = கற்றீது: லகரமும் தகரமும் 'ற்ற்' ஆயிற்று.
முள் + தீது = முட்டீது: ளகரமும் தகரமும் 'ட்ட்' ஆயிற்று.

27. கண் + நன்று = கண்ணன்று: ணகரமும் நகரமும் 'ண்ண்' ஆயிற்று.

பொன் + நன்று = பொன்னன்று: னகரமும் நகரமும் 'ன்ன்' ஆயிற்று.

பல் + நன்று = பன்னன்று: லகரமும் நகரமும் 'ன்ன்' ஆயிற்று.

எள் + நன்று = எண்ணன்று: ளகரமும் நகரமும் 'ண்ண்' ஆயிற்று.

31. நிலையிகரம் உவ்வுறன்;மூ வினந்தாந் தாம் உறழ்தல்;
நிலைமொழிமா றுதல்;ஐகான் அவ்வாவாகுதலே;
யிலகுணஎ வாதல்;பல விதிபெறுதல்; இடைச்சொல்
இசைதல்முப் பான்மூன்றில் எல்லாம்அடங்கும்
ஒவ்வாதனவும்
அலபுணர்ச்சி வரினும்அடக்குக; ற,ன,ழ,எவ்,வொவ்,
அலதுஉயிர்மெய் உயிரளபு அல்சார்பு வினைவிகுதி
மலிதமிழ்க்குச் சிறப்பாகும்; உயிராறொற் றிருபான்வரு
மிலிங்க மூன்று வடமொழிச்சிறப் பாங்காணே. (ச)

***சில புணர்ச்சி விதிகளும் தமிழ்மொழிக்கும் வடமொழிக்குமுள்ள சிறப்புப்பண்புகளும் விளக்குகின்றது.***

*உரை: 28. நிலைமொழி இகரம் உகரமாக மாறும். 29. இகர ஈறு வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகிய மூன்று முதல் மொழியோடும் சேர்ந்தால் உறழ்ச்சியும் நிலைமொழி மாற்றமும் பெறும். 30. ஐகார நிலைமொழி அகரமாக மாறும். 31. ணகரம் ளகரமாக மாறும். 32. பல விதிகளைப் பெறும். 33. இடைச்சொல் சேரும், ஆகிய முப்பத்து மூன்று புணர்ச்சி விதிகளில் ஏனைய புணர்ச்சி மாற்றங்களையும் அடக்கிக் கொள்ளலாம்.*

*ற, ன, ழ, எ, ஒ அல்லாத முதலெழுத்துக்களும் உயிர் மெய்யும் உயிரளபெடையும் நீங்கிய சார்பெழுத்துக் களும் திணை உணர்த்தும் வினை விகுதியும் தமிழுக்கே சிறப்பாக உரியன.*

*உயிர் எழுத்துக்களில் ஆறு எழுத்துக்களும் மெய் யெழுத்துக்களில் இருபது எழுத்துக்களும் மூன்று லிங்கமும்*

(ஆண்பால். பெண்பால், அலிப்பால்) வடமொழிக்குச் சிறப்பாக உரியன.

**விளக்கம் :**

29. அ) (வாள்)அன்றி+பிடியா = அன்று பிடியா, இன்றி+பொய்ப்பின் = இன்று பொய்ப்பின் } இகரம் உகரமாக மாறல்.

ஆ) கிளி + குறிது = கிளிக்குறிது ம கிளிகுறிது: இகர முன் வல்லினம் வர உறழ்ந்தது. மெல்லினமும் இடையினமும் உறழ்ந்து வருதல் இல்லை.

நாழி + உரி = நாடுரி: நிலைமொழி மாறுதல்.

30. பனை + காய் = பனங்காய்: ஐகாரம் அகரமாக மாறி மெல்லினம் பெறுதல்

31. எண் + கடிது = எள் கடிது : ணகரம் ளகரமாக மாறியது.

32. பலவிதி பெறுதல் — பல புணர்ச்சி விதிகளை ஏற்று வரும் பொதுவிதி. பனை + காய் > பனை + அம் + காய் > பன் + அம் + காய் > பன் + அங் + காய் = பனங்காய்.

33. ஒன்று + கால் = ஒன்றேகால்: ஏ என்ற இடைச் சொல் சேர்ந்தது.

புணர்ச்சி விதிகள் முப்பத்து மூன்று என்று வரையறுத்துக் கூறியுள்ளார். ஆனால் அவை யாவை எனத் தெளிவாகத் தெரியவில்லை. எனவே சிலவற்றைப் பிரித்தும் தொகுத்தும் எண்ணுவதற்கு இடம் உண்டு.

இரண்டு மொழிகளை ஒப்பிட்டு ஒற்றுமை வேற்றுமை காணும் ஒப்புமை மொழியியலில் (Contrastive Linguistics)

இரண்டு மொழிக்குரிய ஒலிகளை ஒப்பிட்டு ஒற்றுமை வேற்றுமையை ஆராய்ந்து ஒவ்வொரு மொழி நோக்கிலிருந்தும் மற்றொரு மொழியில் காணப்படும் சிறப்பு ஒலிகளை ஒருமொழி எவ்வாறு ஏற்றுக் கொள்ளும் என்று விளக்குவர். தமிழ் இலக்கண ஆசிரியர்கள் கூறும் வடமொழியாக்கம் என்பது ஒப்புமை மொழியியலோடு பெரிதும் தொடர்பு உடையது.

இங்கு வடமொழி அடிப்படையில் சில இலக்கணக் கூறுகளும், தமிழின் சிறப்பெழுத்துக்களும், தமிழ்மொழி அடிப்படையில் வடமொழியின் சிறப்பு எழுத்துக்களும் சில இலக்கணக் கூறுகளும் பேசப்பட்டுள்ளன.

**விளக்கம் :** தமிழ், வடமொழிச் சிறப்புத் தன்மைகள் நன்னூல் (150) பிரயோக விவேகம் (45) ஆகியவற்றிலிருந்து தழுவிக் கொள்ளப்பட்டன.

32, காணும் அ,ஆ, இ,ஈ,உ,ஊ, ஏ,ஐ,ஓ,ஔ, க,ங,ச,ஞ,
ட,ண,த,ந, ப,ம,ய,ர, ல,வ,ள, இவையே
சேணில்பொது எழுத்தாம்;இப் பொதுவெழுத்தும் வடசொற்
சிறப்பெழுத்தும் ஈரெழுத்து மேஇயைந்து திரிந்த
வாணிபெயர் வாயுமற்றுப் பொதுவெழுத்துட் பொதுவாய்
வருதமிழின் சிறப்பெழுத்தாய்த் திரிந்துமுன் பின்னிடையிற்
பூணும்விகா ரத்துஇயைந்தும் வடமொழி தென்மொழியாம்;
புகன்றகூட் டெழுத்தொட்டுப் பிரிந்தும் ஆர்த்திடுமே. (ரு)

**வடமொழி—தமிழ் வேறுபாடும் கடன் வாங்கும்போது ஏற்படும் மாறுபாடும் விளக்குகின்றது.**

**உரை :** அ, ஆ, இ, ஈ, உ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ, க ங, ச, ஞ, ட, ண, த, ந, ப, ம, ய ர, ல, வ, ள ஆகிய இருபத்து ஐந்து எழுத்துக்களும் தமிழுக்கும், வடமொழிக்கும் பொதுவான எழுத்துக்களாகும். இந்தப் பொது எழுத்துக்களும் வட மொழிக்கே உரிய சிறப்பு எழுத்துக்களும் ஆகிய இரண்டு வகை எழுத்துக்களுமே சேர்ந்து திரிந்தும் மொழிக்கு முன்னும் பின்னும் நடுவிலும் வேண்டிய மாற்றம்

பெற்றும் வடமொழிச்சொல் தமிழ்மொழிச் சொல்லாய் மாறி விடும்.

**விளக்கம் :** நன்னூலார் 'பொது எழுத்து ஒழிந்த நாலேழுந் திரியும்' (146) என்று கூறினர். பொது எழுத்தும் கூடத் திரியும் என்று இவர் கூறியது சிறப்பு உடையது. பிற மொழியிலிருந்து சொற்களைக் கடன் வாங்கும்போது தாய்மொழியின் அமைப்பிற்கேற்பவே மாற்றிக்கொள்ளுவது எல்லா மொழியிலும் காணப்படும் பண்பே ஆகும். அம் முறையை மொழியியலார் Fashion of Adaptation என்று கூறுவர். மொழியின் அமைப்புக் காலந்தோறும் மாறுவது போலவே தமிழ் மொழியாக்கமும் காலந்தோறும் மாறுபடும். அடுத்த சூத்திரத்தில் சில எழுத்துக்கள் இரண்டு விதமாக (ப॰ என்பது ச, ய என்றும் ஷ என்பது ட, ச என்றும் மாறும் என்று கூறியது) மாறும் என்பதும் இவ்வுண்மையை வலியுறுத்தும். 'பிற பொதுவே' என்று நன்னூல் (150) கூறியதை இவ்வாசிரியர் விரித்து எழுதியுள்ளார்.

33. ஆரியத்தின் உயிரினுடை நான்கிருவில் லீற்றிரண்
டவ்வைவருக்கத் தின்இடை யின்மூன் றுதி,மெய்எட்டு
ஈரெட்டோர் எழுமூன்றின் நான்கு யடவ;முப்பான்
சய;பின்னொன்றுசட; விரண்டு சத, மூன்றகவாம்;ஐந்தே
யேரிருகச் சவ்வாகும் ஆவீறையியீறு இகரமாம்;
அ,ஆ; வி,யை; யுவ்வெள, விரு,வார்;
கூறுமிய்யே; யுவ்வோ; வேயை, யோவெள, விசையுங்
குவ்வநவி நநிபின்சொற் பொருணீத்துஞ் சொலுமே. (௪)

***தமிழாக்க விதிகளைத் தொகுத்துக் கூறுகின்றது***

**உரை :** வடமொழி உயிர் எழுத்துக்களில் இடையில் உள்ள நான்கு எழுத்துக்களும் (ரு, ரூ, லு, லூ) தமிழில் 'இரு' 'இல்' என்றும் ஈற்றில் உள்ள இரண்டு (அம், அஹ) எழுத்துக்களும் தமிழில் அகரமாகவும் திரியும். க, ச, த, ட, ப என்ற ஐந்து வருக்கங்களை உடைய

வல்லெழுத்துக்களில் இடையில் உள்ள மூன்றும் முதலில் உள்ள வல்லினம் போன்று திரியும்.

எட்டாவது மெய்யாகிய ஜ என்பதும் பதினாறும் மெய்யாகிய ൧ என்பதும் இருபத்தைந்தாம் மெய்யாகிய ய என்பதும் முறையே ய, ட, வ என்று மாறும். முப்பதாம் மெய்யாகிய ശ என்பது ச, ய ஆகவும் (மொழிக்கு முதலில் சகரமாகவும் இடையில் சகரமாகவும் யகரம் ஆகவும்) முப்பத்து ஒன்றும் மெய்யாகிய ஷ என்பது ச, ட ஆகவும் (மொழி முதலில் சகரமாகவும் இடையில் சகரமாகவும் டகரமாகவும்) முப்பத்து மூன்றுவது மெய்யான ஹ என்பது அ, க ஆகவும் (மொழி முதலில் அகரமாகவும் ஏனைய இடங்களில் ககரமாகவும்) முப்பத்தைந்தாம் மெய்யாகிய க்ஷ என்பது இரண்டு ககரமாகவும் (க்க்) சகரமாகவும் (ச்ச்), ஆகார ஈறு ஐகாரமாகவும் ஈகார ஈறு இகரமாகவும் மாறும். அகரம் ஆகாரமாகவும், இகரம் ஐகாரமாகவும், உகரம் ஔகாரமாகவும். 'இ ரு' என் ப து 'ஆ ர்' ஆகவும், இகரம் ஏகாரமாகவும், உகரம் ஓகாரமாகவும் வரும். ஏகாரம் ஐகாரமாகவும், ஓகாரம் ஔகாரமாகவும் திரியும்.

* மொழி முதலில் சகரமாகவும் இடையிலும் இறுதியிலும் சகரமாகவும் டகரமாகவும் முப்பத்திரண்டாம் மெய்யாகிய ஸ என்பது ச, த, ஆகவும்,

---

வடமொழியில் ஒரு சொல்லிற்குரிய பொருளை நீக்குவதற்கு அதாவது எதிர்மறை ஆக்குவதற்கு மெய் முதன் மொழி முன்னர் அகரத்தையும் உயிர் முதன் மொழி முன்னர் 'அந்' என்பதையும் சேர்ப்பர். இதனை 'உபசர்க்கம்' என்பர்.

விளக்கம் :

ஜீஷஸ்: — இடபம்

ஜூமஃ — மிருகம்

ஏழாம் உயிரான ரு என்பது மொழி முதலில் இகரமாகவும் இடையில் 'இரு' வாகவும் மாறும்.

| | | | | |
|---|---|---|---|---|
| க வர்க்கத்தில் | 2வது | நவம் | — | நகம் |
| ,, | 3வது | நாமம் | · | நாகம் |
| ,, | 4வது | மேகம் | — | மேகம் |

ச வர்க்கத்தில் 2வது ഛവി — சவி

,, 3வது വിജയഃ — விசயம்

,, 4வது ഝടിതി — சடிதி

ட வர்க்கத்தில் 2வது പീഠം — பீடம்

,, 3வது ജഡം — சடம்

,, 4வது ഗൂഢം — கூடம்

த வர்க்கத்தில் 2வது സ്ഥലം — தலம்

,, 3வது ദിനം — தினம்

,, 4வது ധരാ — தரை

ப வர்க்கத்தில் 2வது ഫലം — பலம்

,, 3வது ബന്ധം — பந்தம்

,, 4வது ഭാരഃ — பாரம்

ജ > ய പങ്കജം — பங்கயம்

ഥ (th) > ட வீரஸ்தானம் > வீரட்டானம்

ய > வ

ശ > ய ദേശഃ — தேயம்

ശ > ச — தேசம்

சங்க காலத்தில் பெரும்பான்மையும் யகரமாகவும் இடைக் காலத்தில் சகரமாகவும் மாறியுள்ளன. மொழி முதலில் எப்பொழுதும் சகரமாகவும் மாறியுள்ளது. இதற்கு எடுத்துக்காட்டு.

ശങ്കരഃ — சங்கரன்

ഷ > ச—ഷണ്മുഖഃ — சண்முகன்

—ட—വിഷം — விடம்

—ச— — விசம்

இடையில் டகரமாகச் சங்க காலத்திலும், சகரமாக இடைக் காலத்திலும் மாறியது.

സ > ச— സഭാ — சபை

—ச— വാസഃ — வாசம்

—த— മാസഃ — மாதம்

தகரமாக மாறியது சங்ககாலத்திலும் சகரமாக மாறியது பிற் காலத்திலும் ஏற்பட்டிருக்கவேண்டும். சங்க காலத்தின் முற்பகுதி ஸ என்பது மெய் கெட்டு மாறியதும் உண்டு (T. Burrow, Collected papers in Dravidan Linguistics p. 151, 154) அதனால்தான் ஸபா — (சபா) அவை என்று வந்தது.

| | | | |
|---|---|---|---|
| ஹ > அ | ஹர: | — | அரன் |
| ஹ > க | மோஹம் | — | மோகம் |
| க்ஷ > க்க | பக்ஷ: | — | பக்கம் |
| க்ஷ > ச்ச | தக்ஷ | — | தச்சன் |
| ஆ > ஐ | மாலா | — | மாலை |
| ஈ > இ | புரீ | — | புரி |

அருகன் என்பதிலிருந்து ஆருகதன் வந்ததால் அகரம் ஆகார மாயிற்று. சிவன் என்பதிலிருந்து சைவன் வந்ததால் இகரம் ஐகார மாயிற்று.

புத்தன் — பௌத்தன் — உகரம் ஔகாரமாயிற்று

இருடி — ஆரிடம் — 'இரு' என்பது 'ஆர்' ஆயிற்று

நர + இந்திரன் > நரேந்திரன் என்பதனால் இகரம் ஏகார மாயிற்று.

குல + உத்துங்கன் > குலோத்துங்கன் என்பதனால் உகரம் ஓகாரமாயிற்று.

கேவலம் - கைவலம் என்பதனால் ஏகாரம் ஐகாரமாயிற்று

கோசலம் - கௌசலை என்பதனால் ஓகாரம் ஔகாரமாயிற்று.

எதிர்மறை: நாதன் — அநாதன்

உசிதம் — அநுசிதம்

முதற் பகுதி நன்னூலையும் (147) பிற்பகுதி (அ ஆ ஐ என்ற மூன்றும் வரி முதல்) வீரசோழியத்தையும் (11 ஆம் சூத்திரம்) தழுவி எழுதப் பெற்றுள்ளன.

# 3. சொல்லதிகாரம்

## 1. பெயர் மரபு

34. சொல்வகுக்கிற் றனிமொழியுந் தொடர்மொழியும் ஆகிச்
சொற்பொருள்கொண்டு, இருதிணைஐம் பாலின், மூன்று இடத்தாய்,
ஒல்வழக்கிற் செய்யுளினிற் குறிப்பில்வெளிப் படையால்
ஒரு பொருளால் பலபொருளாற் விரிப்பதுசொல் லியலாம்
பலவகையாம் பொருளின்உயர் திணைமக்கட் சுட்டாம்;
பகரும்அவ ரல்லது(உ)யிர் உள்ளவும்இல் லவுமாய்ச்
செல்வது(அ)ஃ றிணையாம்;ஆண்,பெண்,பலர்மூன் று(உ)யர் பாற்;
செறிஒன்று, பலஇரண்டும் இழிபால்அன் னதுவே. [க]

***சொல்லின் பொது இலக்கணமும் அவற்றின் பாகுபாடும் கூறுகின்றது.***

உரை : *சொல் என்பது ஒருமொழி (தனிமொழி)யும் தொடர் மொழியும் என இருவகைத்தாய்ச் சொற்பொருள் கொண்டு இருதிணையாகிய ஐந்து பாலினையும் மூன்று இடத்தினையும் வழக்கின் கண்ணும் செய்யுட் கண்ணும் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் ஒரு பொருளாகவும் பல பொருளாகவும்*

விரிக்கும். பல வகையான பொருள்களுள் உயர்திணை என்பது மக்கட் சுட்டையும் அஃறிணை என்பது அவரல்லாத உயிர் உள்ள பொருள்களையும் உயிர் இல்லாத பிற பொருள்கள் அனைத்தையும் குறிக்கும். ஆண்பால், பெண்பால், பலர்பால் என்ற மூன்று பாலும் உயர்திணைக்கும்; ஒன்றன்பால், பலவின் பால் என்ற இரண்டும் அஃறிணைக்கும் உரியன.

உயர்திணையை உயர்பால் என்றும் அஃறிணையை இழி பால் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

**விளக்கம்:** சொல் என்பதை இங்கு குறைந்த அளவு பொருள் உடைய பகாப்பதச் சொல் அதாவது மொழியியலில் கூறும் உருபன் (Morpheme) என்று கொள்ள முடியாது. எனவே வார்த்தை (word) என்பதற்கு இணையான பொருள் உடையதாகக் கருதலாம். இருதிணை ஐம்பால் என்பது பொருள் அடிப்படையில் தமிழில் அமைந்திருப்பது உண்மை யாயினும் இலக்கண ஆராய்ச்சியில் பொருள் மட்டுமே அடிப்படையாகக் கொள்ள முடியாது. உயிருள்ள அஃறிணைப் பொருள் பலவற்றில் ஆண், பெண் வேறுபாடு இருப்பினும் தமிழ் இலக்கணத்தில் குறிப்பிடாதது மொழியியல் அமைப்பில் வேருகப் பயன்படாதது தான். அரசன் வந்தான், அரசி வந்தாள் என்று உயர்திணையில் வினைமுற்று வேறு படுவது போல அஃறிணையில் பசு வந்தது, காளை வந்தது என்று பெயர்ச்சொல் பால் வேறுபாட்டிற்கேற்ப வினைவிகுதி வேறுபட்டு வருவதில்லை. எனவே தான் மொழி அமைப்பில் வேறுபட்டு வரக்கூடிய பொருள்களை மட்டுமே இலக்கணத்தில் விளக்க வேண்டும் என்று கூறுவர் மொழியியலார்.

உயர்திணை, ஐம்பால் பாகுபாடு பெயர்ச் சொல்லுக்கு மட்டுமே பொருந்துவது. வினைச்சொல்லில் அதாவது முற்று வினைகளில் பால்காட்டும் விகுதியில் அந்த வேறுபாடு இருந் தாலும் வினையடிச் சொற்களை (வினைப் பகுதிகளை) அவ்வாறு பகுக்க முடியாது. ஒரு வினைப்பகுதியே எல்லாத் திணையும்

பாலும் ஏற்று வரும். ஆனால் பெயர்ச் சொல் ஏதாவது ஒரு திணை பால் வேறுபாட்டிற்கு மட்டுமே உரியதாக வரும். எனவே தான் பெயர்ச்சொல்லை அம்முறையில் பகுக்க வேண்டும்.

இடப் பாகுபாடு மூவிடப்பெயர்க்கு (Pronouns) மட்டுமே பொருந்தும். எல்லாப் பெயர்களும் படர்க்கை இடத்தனவாகக் கொள்ளலாம். தா, கொடு போன்ற மிகச்சில வினைகளையே மூவிடப் பாகுபாட்டில் அடக்கமுடியும். பெரும்பான்மையான ஏனைய வினைகளை அவ்வாறு அடக்க முடியாது; மேலும் வினைச்சொற்கள், பால்காட்டும் ஈற்றில் மூவிடப்பெயரின் விகுதியை ஏற்று வரும் தன்மையன. எனவே மூவிடமாகப் பகுப்பது பொதுவாக எல்லாச் சொல்லுக்கும் பொருந்தக் கூடியது அன்று.

பேச்சு மொழியின் இலக்கணமும் எழுத்து மொழியின் இல்க்கணமும் எப்பொழுதும் வேறுபடக் கூடியன. எழுத்து மொழியிலும் உரை நடைக்கும் செய்யுளுக்கும் இலக்கணம் வேறுபடுதலும் இயல்பே. ஒலிநிலையில் வேறுபடாவிட்டாலும் புணர்ச்சி, சொல், தொடர்நிலை ஆகியவற்றில் வேறுபடுவதைத் தொல்காப்பியர் ஆங்காங்கே சுட்டிக் காட்டியுள்ளார்.

சுட்டுச்சொல் நீண்டு வருதல் செய்யுளில் உரித்து என்பதை ‘நீடவருதல் செய்யுளுள் உரித்தே’ (தொல் எழுத்து 208) என்றும் பல சில என்பன பலாஅம் சிலாஅம் என்று வருவதைச் ‘செய்யுள் கண்ணிய தொடர் மொழியான’ (213) என்றும் கூறும் இவை போன்றவை புணர்ச்சியில் செய்யுளுக்கும் வழக்குக்குமுள்ள வேறுபாட்டைக் காட்டும். ஆக்கக்கிளவி முதலில் வருதல் (தொல். சொல். 22), சுட்டுச் சொல்லை முன்னர் சொல்லுதல் (தொல். சொல். 39), திணை விராய் எண்ணப்பட்ட பெயர் அஃறிணை முடிவு பெறுதல் (51) போன்ற தொடரியல் செய்திகள் செய்யுளுக்கே உரியனவாகக் குறிப்பிடுவதும் செய்யுளின் இலக்கணமும்

ஏனையவற்றின் இலக்கணமும் மாறுபடுவன என்ற உண்மையை வலியுறுத்தும். எனவே தான் வழக்கு, செய்யுள் என இருவகையாக இலக்கண ஆசிரியர்கள் பிரிப்பர். இவர் அம்மரபையொட்டி அந்த இரண்டைக் கூறினும் நூலுள் இந்த வேறுபாட்டைக் குறிப்பிடத் தவறி விட்டார். இது இலக்கண விளக்கம் 160, 162, 163, 164 ஆம் சூத்திரங்களை ஒட்டி அமைந்திருப்பினும் அஃறிணைக் குரிய விளக்கம் நன்னூல் 261 ஐ ஒட்டி அமைந்துள்ளது. 'மற்று உயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை' என்பது நன்னூல் தொடர் (261).

35. அன்னதெய்வம் பேடுஈறின் முடிவதாந்திணை ஈற்று
 ஐம்பாலின் வகுத்திடுவர்; மூன்றுஇடமே தன்மை
முன்னிலையும் படர்க்கையுமாம்; அவற்றுள்ளே படர்க்கை
 முற்றுவினை பெயர்குறிப்பாற் றிணைபால் விளக்குஞ்;
சொன்னதின்மற் றுஈரிடமும் திணைபாலின் இடத்தே
 சொற்குறிப்பாற் பெயர்வினையால் ஒருமைபன்மை
 விளக்கு(ம்),
முன்னும்விர வுத்திணையாய் இருதிணையும் வினையால்
 உரைத்தகுறிப் பால்உணர்தற்கு ஒக்கும்இலக் கணமே. (உ)

**திணை—பால்களுக்குப் புறனடை கூறுகின்றது.**

**உரை:** தெய்வம், பேடு என்பனவற்றையும் ஐம்பாலுள் அடக்கி வினைமுற்று விகுதியால் விளக்குவர். தன்மை, முன்னிலை, படர்க்கை என்பனவே மூன்று இடம். இவற்றில் படர்க்கை வினைமுற்றும் வினைப்பெயரும் குறிப்பால் திணையையும் பாலையையும் விளக்கும். ஏனைய தன்மை, முன்னிலை, இடப்பெயர்களும் வினைகளும் ஒருமை பன்மையை மட்டுமே விளக்கும். விரவுப் பெயர்களின் திணையையும் பாலையும் அவை ஏற்கும் வினையே குறிப்பாக உணர்த்தும்.

**விளக்கம்:** சிவன் வந்தான்—ஆண்பால்; தேவி வந்தாள்—பெண்பால்; இவை தெய்வப் பெயர்கள்: பேடி வந்தாள் பேடு வந்தது — பேடு என்பது இருதிணை வினையும் பெற்றன.

வந்தான் — உயர்திணை ஒருமை ஆண்பால் வினைமுற்று

வந்தது — அஃறிணை ஒருமை ஒன்றன்பால் வினைமுற்று

பொன்னன் — உயர்திணை ஒருமை ஆண்பால் பெயர்க் குறிப்பு.

நான் வந்தேன் — தன்மை ஒருமை

நாங்கள் வந்தோம் — தன்மைப் பன்மை

நீ வந்தாய் — முன்னிலைப் ஒருமை

நீங்கள் வந்தீர்கள் — முன்னிலை பன்மை

சாத்தன் — விரவுப் பெயர்

•சாத்தன் வந்தான் என்புழிச் சாத்தன் உயர்திணை ஆண் பாலையும், சாத்தன் வந்தது என்புழிச் சாத்தன் அஃறிணை ஒன்றன் பாலையும் உணர்த்தும்.

இன்று மாணிக்கம், ரத்தினம் போன்ற சொற்கள் விரவுப் பெயர்களாகப் பயன்படுகின்றன. அவை உயர்திணையில் ஆண்பாலையும் பெண்பாலையும் அஃறிணை ஒன்றன்பாலையும் உணர்த்தும்.

மாணிக்கம் வந்தான் என்புழி உயர்திணை ஆண்பாலையும்

மாணிக்கம் வந்தாள் என்புழி உயர்திணைப் பெண்பாலையும்

மாணிக்கம் வந்தது என்புழி அஃறிணை ஒன்றன்பாலையும் உணர்த்துகின்றன.

**விளக்கம் :** இது இலக்கண விளக்கம் 165, 166, 167 ஆகிய சூத்திரங்களையொட்டி அமைக்கப்பட்டுள்ளது. நன்னூலில் இடம் பற்றி இரண்டு நூற்பாக்கள் காணப் படினும் (265, 266) அவற்றைச் சொல்லும் முறையில் இலக்கண விளக்கம் மாறுபாடு செய்துள்ளது. நன்னூலார் மூவகை இடச்சொல்லும் எவ்வாறு திணை பால் விளக்கும் என்று முதலில் (265) கூறிவிட்டே மூவகை இடம் இது

என்று (266) விளக்குகிருர். இலக்கணவிளக்கத்தாரோ மூவகை இடத்தை முதலில் (166) விளக்கிவிட்டு அடுத்து அவை எவ்வாறு திணைபால் விளக்குகிறது என்று விளக்கு கிருர். இலக்கண விளக்க முறையே சுவாமிநாதத்திலும் பின்பற்றப்பட்டுள்ளது.

36. இலக்கணமது உடையதுஇலக் கணப்போலி மரூஉச்சொல்
இயல்புமூன்று; இடக்கரு(ம்),மங் கலங்,குழூஉக் குறியும்
பலத்தகுதி மூன்று;இவைகள் ஆறுமே வழக்காம்;
பலவகைத்தா து(உ)டற்கு (உ)யிர் போறபல சொலினும் பொருளாய்
அலர்த்துஅணிகள் பெற்றயாப்பிற் செயும்செய்யுள் இயலாம்;
அன்மொழிவிகா ரம்வினைக்குறிப்பு ஆகுபெ யர்கள்
ஒலித்தகுதி குறிப்புமுதல் தொகைபொருள் மாற்ருதி
யுணர்த்தல்குறிப் பாங்;குறிப்பில் வெளிப்படையாம்
அவையே. (ரு)

**வழக்கு, செய்யுள், குறிப்பு, வெளிப்படை ஆகியவற்றின் இலக்கணம் கூறுகின்றது.**

**உரை :** இலக்கணம் உடையது, இலக்கணப்போலி, மரூஉச்சொல் என்று இயல்பு மூன்று வகைப்படும். இடக் கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி எனத் தகுதி மூவகைப் படும். இந்த ஆறும் வழக்குக்கு உரிய இலக்கணமாகும். பலவகைத் தாதுக்களினுலும் அமைக்கப்பட்ட உடலுக்கு உயிர்போலப் பல சொற்களால் பொருட்கு இடஞகைப் பூத்து, அழகு பெற்ற யாப்பால் அமைக்கப்பட்டது செய்யுள். அன்மொழி, விகாரம், வினைக்குறிப்புச்சொல், ஆகுபெயர்கள், தகுதிக்குறிப்பு, முதல்குறிப்பு, தொகை, பொருண்மாற்று ஆகியவை உணர்த்துதல் குறிப்பாகும். குறிப்பில்லாத எல்லாம் வெளிப்படையாம்.

**விளக்கம் :** இயல்பு என்பதைச் சொற்பொருள் நேரடி யாகச் சொல்லுவோன் கருத்தைக் குறிப்பதாகவும் எல்லோ ருக்கும் பொதுவானதாகவும் கொள்ளலாம். இலக்கணம் உடையது என்பது இலக்கணத்துக்குப் பொருந்தி

வருவது என்று கருதலாம். இலக்கணப் போலி என்பது ஒருமொழியின் பெரும்பான்மை வழக்குக்கு மாறுபட்டு வருவது. தமிழில் பெயர்ச் சொல்லை அடுத்தே இடத்தை உணர்த்தும் விகுதி சேர்ப்பர். கைமுன், ஊர்ப்பின் போன்றவை இவ்வுண்மையை உணர்த்தும். ஆனால் சில சமயங்களில் இடவிகுதியை முன்னர்ச் சேர்த்து முன் + இல் > முன்றில், வாய் + இல் > வாயில் என்பன போன்று வழங்குவர். இலக்கணத்துக்கு மாறுபட்டு வரினும் இலக்கணம் உடையது போலக் கருதுவதால் இலக்கணப்போலி இயல்புடையதாகக் கருதப்படுகிறது.

சொற்களின் வடிவம் அதன் பழைய வடிவம் தெரிந்து கொள்ளாத நிலையில் திரிந்து வருவது மரூஉ. ஆனால் எல்லா மாற்றங்களையும் மரூஉ என்று கொண்டால் தவறில்லை. சோழநாடு > சோணாடு போன்ற மொழி மாற்றத்தை இயல்பு என்று நம் இலக்கண ஆசிரியர்கள் கருதியது மொழி காலந்தோறும் மாறும் என்ற அதன் அடிப்படைப் பண்பை அவர்கள் நன்கு உணர்ந்திருந்தனர் என்று காட்டுகின்றது.

இலக்கணம் உடையதையும் இலக்கணப் போலியையும் மரூஉவையும் இயல்பான அதாவது இயற்கையானதாகக் கருதினர். மாறுகத் தகுதி என்பது ஓரளவு செயற்கையானது. ஏனெனில் தகுதியாக வருகிற மூன்றும் தனக்கென ஒரு இயல்பான பொருளோடு அதாவது நேரடிப் பொருளோடு வேறொரு பொருளை மறைமுகமாகவும் உணர்த்துகின்றன.

கால் கழுவி வா என்பது இடக்கர் அடக்கல். இது இயல்பாக அமையும்போது ஒரு பொருளையும் இடக்கர் அடக்கலாக வரும்போது மற்றொரு பொருளையும் உணர்த்துதல் தெளிவு.

துஞ்சினர், இறைவனடி சேர்ந்தார் போன்றவை மங்கலம். இறந்தார் என்பது அமங்கலம் (தீய நிகழ்ச்சி). ஆனால்

அவற்றை வேறொரு முறையில் சொல்லும்போது அச்சொற்களும் இரண்டு பொருள் உடையதாகின்றன.

உயிர்ப் பொருளைச் 'சீவான்மா' என்றும் மெய்ப் பொருளைப் 'பசு' என்றும் கூறுவது மெய்ப் பொருளாரின் குழூஉக்குறி. உயிர், மெய் என்பன இலக்கண ஆசிரியர்களின் குழூஉக்குறி. இங்கும் இச்சொற்களுக்கு இயல்பான பொருளும் வேறு பொருளும் இருக்கின்றன. ஒரு குழுவினர் இயல்பான சொல்லுக்குப் பதிலாக வேறொரு சொல்லைப் பயன் படுத்துவதும் குழூஉக்குறி. பொற்கொல்லர் பொன்னைப் பறி என்று கூறுவதும் இத்தகையது. ஏனெனில் பறி என்பதற்கும் இரு பொருள் ஏற்பட்டு விடுகின்றது.

'இப்பொருளை அறிதற்கு அமைந்து கிடந்த இச்சொல்லாற் சொல்லுதல் தகுதியன்று, வேறொரு சொல்லாற் சொல்வது தகுதியென்று நினைத்துக் கூறுதலால் தகுதி வழக்கு எனப் பட்டன' என்று கூறும் சங்கரநமச்சிவாயர் விளக்கம் (நன்னூல் 267-ஆம் சூத்திர உரை) குழூஉக் குறிக்குப் பொருந்தாது. ஏனெனில் குழூஉக் குறியில் மேலே காட்டிய இரு வகையிலும் (கலைச்சொல்லாகவும் மாற்றுச் சொல்லாகவும்) பயன் படுமே தவிர ஒன்று தகுதியற்றது என்ற கருத்தே கிடையாது.

நன்னூலார் 'பல்வகைத் தாதுவின் உயிர்க்கு உடல் போற் பல சொல்லால் பொருட்கு இடனாக' (268) என்று கூறியிருக்க இவர் 'பல் வகைத்தாது உடற்கு உயிர் போல், என்று மாற்றிக் கூறியிருக்கும் நயம் குறிப்பிடத் தக்கது. நன்னூலார் 'அணிபெறச் செய்வன' (268.3) என்று பன்மையாகக் கூறியதை இலக்கண விளக்கத்தார் 'செய்வது' (162.3) என்று ஒருமையாக மாற்றினர். இவர் 'செயும்' என்ற பொது வாய்ப்பாட்டால் கூறி இருவர் மொழியிலிருந்தும் மாறுபட்டார்.

'குறிப்பு' பற்றிய சூத்திரம் இலக்கண விளக்கத்தை (170) ஒட்டியது. ஏனெனில் இவரும் இலக்கண விளக்கத்

தாரைப் போல நன்னூலார் சொன்ன 'ஒன்றொழி பொதுச் சொல்லை' (269) விலக்கியுள்ளார். இவர் பொருள் மாற்றையும் (பொருள்கோள்) குறிப்பில் ஒரு வகையாகக் கொண்டுள்ளது புதுமையாக உள்ளது.

37. அவைஇயற்சொல் திரிசொல்எனும் இருவகைச்சொல் இயல்பின்
அப்பெயர்ச்சொல் வினைச்சொல்இலாம் இடையுரியாங் கடுக்கும்;
இவையல்லால் திசைச்சொல்வட சொல்இரண்டும் கலக்கும்
எப்பகுப்பும் இருதிணைச் சொற்பதினறு விரிவாம்;
உவையினிற்செந் தமிழாகித் திரியாதி யார்க்கும்
• உணர் பொருளை விளக்கும்இவற் சொல்தானோர்; பொருளைக்
கவரபல சொற்பலபொரு ளைக்கயர்,ஒரு சொல்லாகிக்
•களிபொருளை யரிது(உ)ணர்த்திக் காட்டல்திரி சொல்லே.(ச)

***சொல்லின் மற்றொரு பாகுபாடும் அவை சிலவற்றிற்கு விளக்கமும் கூறுகின்றது.***

**உரை:** இயற்சொல், திரிசொல் என்னும் இருவகைச் சொல்லும் இயல்பினால் பெயர்ச் சொல்லும் வினைச் சொல்லுமாம். இடைச்சொல்லும் உரிச்சொல்லும் அதில் சேர்த்துக்கொள்ள வேண்டும். இவற்றுடன் திசைச்சொல் வடசொல் என்ற இருவகையையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். மொத்தம் பதினாறு வகையான சொல்பாகுபாடு உடைத்து. செந்தமிழ் நிலத்து மொழியாகி யாவர்க்கும் உணர்பொருளை விளக்குவது இயற்சொல். ஒரு பொருளுக்குப் பல சொல்லும் பல பொருளுக்கு ஒரு சொல்லும் பொருள் அரிய முறையில் உணர்த்திக் காட்டுவது திரிசொல்லாகும்.

**விளக்கம்:** இயற்சொல்லைப் பொது மொழி (Standard or common language) என்று கூறி அது ஒரு நாட்டு மக்கள் எல்லோரும் அறியக் கூடிய பொதுவான சொற்களைக் கொண்டது ஆகும் என்றும், திரிசொல்லைச் சிறப்பு மொழி (Special Language) என்று கூறிக் கற்றுத்துறை போகிய

வர்கள் ஒரே சொல்லைப் பொதுப்பொருளிலிருந்து பிரித்துச் சிறப்புப் பொருளில் பயன்படுத்துவதும் பொது மொழிச் சொற்களை ஒரு வரையறுத்த பொருளில் கலைச்சொற்களாக அறிஞர்கள் அமைத்துக் கொள்வதும் ஆகும் என்றும் (அதாவது திரி சொல்) கா. மீனாட்சி சுந்தரனார் விளக்கம் தந்துள்ளார். ('சொற்பகுப்பு அன்றும் இன்றும்' **ஐந்தாவது ஆய்வுக்கோவை** பக் 753, 754)

உயிர் என்பது பொதுமொழிச் சொல். அது ஒரு இயற்சொல். அச்சொல் இலக்கணத்தில் வேறு பொருளைக் குறிக்கின்றது. இது பல பொருளுக்கு ஒரு சொல் என்ற வகையில் அடங்கும். மெய், உடம்பு, மெய்யெழுத்து; நெடில், நீண்டது, நெடில் எழுத்து போன்ற வேறு பல கலைச் சொல்லான உதாரணங்களும் இயற்பொருளும் கலைச் சொற்பொருளும் பெற்று இவ்வகையில் அடங்கும்.

மிடற்றில் திரிபு ஏற்படும் ஒலியை மிடற்று ஒலி என்று கூறுவது போல மூக்கில் மாற்றம் ஏற்படுவதை மூக்கொலி என்னாது மெல்லினம் என்பது ஒரு பொருளுக்கு இரண்டு சொல் என்ற பிரிவில் அடங்கும். ஒரு பொருளுக்கு இயல் பாக வழங்கும் சொல் ஒரு குறிப்பிட்ட துறையில் வேறொரு சொல்லாகக் கலைச்சொல் நிலையில் பயன்படுதலும் ஒரு பொருளுக்கு இரண்டு சொல்லாக அமைந்து விடும்.

இது நன்னூல் 270, 271, 272 ஆகிய சூத்திரங்களை ஒட்டி எழுந்தது. எனினும் இயற்சொல் 'யார்க்கும் உணர் பொருளை விளக்கும்' என்று கூறியது சற்றுப் புதுமையானது. இதுவும் 'உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே' (தொல். சொல். 393) என்ற கருத்து அடிப்படையில் எழுந்திருக்கலாம்.

38. சொற்றமிழ்ப்பார் சூழ்நிலம்ஈ ராறுஒழிபார் பதினேழ்
தோய் குறிப்பின் வருந்திசைச் சொற்;பொதுச்சிறப்பும் இரண்டு(ம்)
முற்றுஇசையும் வடசொல்லே; யிவைஇரண்டும் விலக்கார்
ஓரிருசொற் பொருள்உணர்த்திற் பெயர்ச்சொல்லாம்; பெயர்தான்
அற்றஇடு குறியொடுகா ரணம்இரண்டின் மரபும்
ஆக்கமுமே தொடர்ந்துவேற் றுமைக்குஇடனாய்த் திணைபான்
முற்றுஇடத்து ஒன்றுஏற்பனவும் பலபொருள் ஏற்பனவு(ம்)
முறைதரும்ஈ ருல்ஈறின் முடிவால்ஆள் குவரே. (ரு)

***திசைச்சொல், வடசொல் ஆகியவற்றின் இலக்கணமும் பெயர்ச் சொல்லின் பொது இலக்கணமும் கூறுகின்றது.***

*உரை :* செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த பன்னிரண்டும் ஒழிந்த பதினேழு பகுதியைச் சார்ந்த நிலத்திலிருந்தும் அவர்கள் தம் குறிப்பினவாய் வழங்கும் சொல் திசைச் சொல்லாகும். பொது எழுத்தானும் சிறப்பு எழுத்தானும் வழங்குவது வடசொல். திசைச் சொல்லையும் வடசொல்லை யும் விலக்கமாட்டார் (புலவர்). இடுகுறியும் காரணக்குறியும் மரபினையும் ஆக்கப்பாட்டினையும் தொடர்ந்து வேற்றுமை உருபு ஏற்பதற்கு இடமாக இருதிணை, ஐம்பால், மூன்று இடம் ஆகியவற்றுள் ஒன்று ஏற்றும் பல ஏற்றும் ஒரு பொருளையும் பல பொருளையும் உணர்த்துவது பெயர்ச் சொல்லாகும்.

**விளக்கம் :** *திசைச்சொல் என்பதைக் கிளைமொழிச் சொல் என்று பலரும் கொள்கின்றனர். ஆனால் இவர் தரும் விளக்கப்படி அவ்வாறு கொள்ள முடியாது. இவர் நன்னூலாரைத் தழுவி இவ்வாறு விளக்கியுள்ளார். நன்னூலார் கருத்துப்படி திசைச்சொல்லைக் கிளைமொழிச் சொற்களாகக் கொள்ள முடியாது என்று கா. மீனாட்சிசுந்தரனார் மேலே குறிப்பிட்ட கட்டுரையில் காட்டியுள்ளார்.*

*தொல்காப்பியர் செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்துத் தத்தம் குறிப்பினால் வழங்குவது திசைச்சொல் என்றார்*

(தொல். சொல். 400). இது கிளை மொழிச்சொல் என்பது பொருத்தமாக உள்ளது. ஆனால் நன்னூலாரும் அவரை யொட்டி இலக்கண விளக்கத்தாரும் செந்தமிழ் நாட்டைச் சேர்ந்த பன்னிரண்டு பகுதியிலும் தமிழகம் நீங்கிய பதினேழு நிலத்தினும் தத்தம் குறிப்பினன் வழங்குவது திசைச்சொல் என்றனர். இவ்விளக்கம் கிளைமொழிச் சொற்களையும் பிற மொழிச்சொற்களையும் திசைச் சொற்களாகக் குறிப்பிடுகின்றது.

வடமொழிச் சொற்கள் என்பது வடமொழி என்று சிறப்பித்துச் சொல்லப்படும் சமஸ்கிருத மொழிச்சொற்களும் கடன் வாங்கப்பட்ட ஏனைய மொழிச் சொற்களுமாகக் கொள்ளலாம் என்று பலரும் ஒத்துக்கொள்கின்றனர். அவ்வாறாயின் வடமொழிச் சொல்லையும் சேர்த்துக் கொண்டால் கடன்வாங்கப்பட்ட சொற்களை நன்னூலார் கருத்துப்படி இரண்டு பெரும் பிரிவுள் உட்படுத்தலாம் என்று ஆகிறது. தொடர்பில்லாத பிற மொழியிலிருந்து வாங்கப்படும் சொற்களைத் திசைச் சொற்கள் என்றும் வட மொழியிலிருந்து வாங்கிய சொற்களை வட சொற்கள் என்றும் கொண்டார் என்று நாம் கருதலாம். எனவே திசைச்சொல்லும் இரு பிரிவாக ஆகிறது. ஒரு மொழியின் கிளைமொழியிலிருந்து வாங்குவது ஒரு வகையையும் தொடர்பில்லாத பிறமொழிகளிடமிருந்து வாங்கப்படும் சொற்கள் மற்றொரு வகையையும் சேர்ந்தன என்று கொள்ளலாம். நேரடித் தொடர்பு மூலம் அதாவது அம்மொழி பேசும் மக்களோடு தொடர்பு கொள்வதால் வாங்குகிற சொற்கள் திசைமொழிச் சொற்கள் என்று கொண்டனர். ஆனால் சாமி கவிராயர் ஒரு மொழியின் கிளை மொழியிலிருந்து வாங்கப்படும் சொல்வகையைக் குறிப்பிடாது தொடர்பில்லாத பிறமொழிகளிலிருந்து வரும் சொற்களை மட்டுமே திசைச் சொற்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

வடசொல் என்பது சமஸ்கிருதமொழிச் சொற்களை மட்டுமின்றிக் கடன் வாங்கப்பட்ட எல்லாச் சொற்களையும்

பொதுவாகக் குறிப்பதாகக் கொள்ளலாம் என்று மேலே கூறப்பட்டது. வடமொழி பேசும் மக்களோடு மட்டும் தொடர்பு இருந்ததாலும் வடமொழி நூலைப்படிக்கும் வாய்ப்பு இருந்ததாலும் அம்மொழியிலிருந்து கடன் வாங்கப்பட்ட சொற்களைக் குறிக்கச் சிறப்பாக வடசொல் என்று குறிப்பிட்டனர். மேலே கொடுக்கப்பட்ட விளக்கத்தையொட்டிப் பார்க்கும் போது நேரடித்தொடர்பு உடைய மொழியிலிருந்து சொல்லைக் கடன் வாங்குவது மட்டுமே வடசொல் என்று கொள்ளவேண்டும். இம்முறைப்படி இன்றைய மொழிநிலையில் ஆங்கில மொழியிலிருந்தும் பிற இந்திய மொழியிலிருந்தும் கடன் வாங்குவது ஒரு வகையாகவும் நேரடித் தொடர்பு இல்லாத ஸ்பானிஷ், ரஷ்யன் போன்ற மொழிச் சொற்களையும் கடன் வாங்குவது மற்றொரு வகையாகவும் கொள்வது போன்றது.

பகாப்பதம் எல்லாம் இடுகுறியாகவும் பகுபதம் எல்லாம் ஓரளவு காரணப் பெயராகவும் கருதுவர் மொழியியலார். இடுகுறிப்பெயர் மரபு பற்றியும், காரணப்பெயர் ஆக்கப்பாடு பற்றியும் வரும்.

வேற்றுமை ஏற்கும் இலக்கணம் தவிர ஏனையவை சொல்லின் பொது இலக்கணத்திலும் ('இருதிணை ஐம்பால் மூவிடத்தாய்' – சூத். 34-1) காணப்படுவது நோக்கத்தக்கது.

இச்சூத்திரம் நன்னூல் 273, 274, 275 ஆகிய சூத்திரங்களைத் தழுவி எழுதப்பெற்றது.

39. ஆண்டபொருள், இடம், காலஞ், சினை, குணமே, தொழிலோடு
ஆறிடத்துஞ் சுட்டு, வினா, விடைச்சொல், உவமையினுந்
தூண்டுபெயர் ஈறு ன, ள, வை, யிர், கள்உயர்பாற்; று, டு, று,
வை, ய, க்கள் இழிபாற்; றெகுக்கும் ஈறிலவாய்
வேண்டுவனவும் இருதிணைஐம் பால்உணர்த்துந்; திணையே
விரவன்முதல் நான்கு; சினை நான்கு; சினை முதல் நான்கு;
ஈண்டுமுறை யிரண்டு; தன் நான்கு; ஐந்து முன்னே, தான், தாம்
எல்லாமும் பொது; ஆண் பெண் ஒன்றுபல வாக்கே (சூ)

**பெயரின் பல வகைகளைப் பற்றிய விளக்கம் தருகின்றது.**

உரை: பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்ற ஆறினோடும் இவற்றை அடையும் சுட்டினாலும் வினாவினாலும் இடைச் சொல்லினாலும் உவமையினாலும் ன், ள், ஐ, இர், கள் முதலிய ஈறுகள் உயர் திணையையும் து, டு, று, வை, அ, கள் முதலிய ஈறுகள் அஃறிணையையும் உணர்த்தும். இந்த ஈறுகள் இல்லாத சொற்களும் இருதிணை ஐம்பாலை உணர்த்தும். முதற்பெயர் நான்கு, சினைப்பெயர் நான்கு, சினை முதற் பெயர் நான்கு, முறைப்பெயர் இரண்டு, தன்மை நான்கு, முன்னிலை ஐந்து; தான், தாம், எல்லாம் ஆகியவை ஆண்பால், பெண்பால், ஒன்றன் பால், பலவின் பால் ஆகியவற்றிற்குப் பொதுவாகும்.

**விளக்கம்:**

பொருளால் வரும் பெயர்கள் — பொன்னன், முடியன்

இடத்தால் வரும் பெயர்கள் — மதுரையான், அகத்தான்

காலத்தால் வரும் பெயர்கள் — ஆதிரையான், ஓணத்தான்

சினையால் வரும் பெயர்கள் — செவிடன், குருடி, குருடு

குணத்தால் வரும் பெயர்கள் — பெரியன், நெடியர், நெட்டை

தொழிலால் வரும் பெயர்கள் — உழவன், இரவலன்

சுட்டால் வரும் பெயர்கள் — அவன், இவன்

வினாவால் வரும் பெயர்கள் — எவன், யாது

உவமையால் வரும் பெயர்கள் — பொன் அன்னான், பொன் அன்னது.

மகன், அரசன் முதலியன னகர ஈற்று உயர்திணைப் பெயர்கள்.

மகள், இல்லாள் முதலியன ளகர ஈற்று உயர்திணைப் பெயர்கள்.

நங்கை, தந்தை முதலியன ஐகார ஈற்று உயர்திணைப் பெயர்கள்.

மகளிர், கேளிர் முதலியன இர் ஈற்று உயர்திணைப் பெயர்கள்.

முனிகள், தம்பிகள் முதலியன கள் ஈற்று உயர்திணைப் பெயர்கள்.

அது, இது முதலியன துகர ஈற்று அஃறிணைப் பெயர்கள்.

குண்டுகட்டு முதலியன டுகர ஈற்று அஃறிணைப் பெயர்கள்.

அவை, இவை முதலியன வைகார ஈற்று அஃறிணைப் பெயர்கள்.

பல, சில முதலியன அகர ஈற்று அஃறிணைப் பெயர்கள்.

மாடுகள், பூக்கள் முதலியன கள்ளீற்று அஃறிணைப் பெயர்கள்.

நம்பி; ஆடுஉ, மாந்தர் போன்றவற்றில் வரும் இ, உ, அர் முதலிய ஈறுகளும் உயர்திணைக்குரியன. மரம், பாம்பு, பலா, அலவன் போன்றவற்றில் வரும் பல ஈறுகளும் அஃறிணைப் பெயர்க்குரியன.

முதற்பெயர்கள் : சாத்தன், கோதை முதலியன.

சினைப்பெயர்கள் : முடவன், முடத்தி முதலியன.

சினைமுதற் பெயர்கள் : முடக்கொற்றன், கொடும்புற மருதி முதலியன.

முறைப் பெயர்கள் : தந்தை, தாய் முதலியன.

தன்மைப் பெயர்கள் : யான், யாம், நான், நாம்.

முன்னிலைப் பெயர்கள் : நீ, நீர், நீயிர், நீவிர், நீங்கள்

இச்சூத்திரம் நேமிநாதம் 30, நன்னூல் 282 ஆகிய இரண்டையும் தழுவியது. நேமிநாதத்தின்

'சுட்டேவினு ஒப்பே பண்பே தொகு ன,ள,ர,
ஒட்டுப்பேர் எண்ணியற்பேர் ஒண்ணிலப்பேர் இட்டிடையாய்
கூடியற்பேர் காலம்குலம் தொழிலின்பேர்.' (30—1—3)

**என்ற வரிகளையொட்டிச் சுவாமிநாதம் அமைந்துள்ளது.**

40. ஆகுபெயர் இருபெயரொட் டு,(உ)வனடி பொருண்முதலா
றுட்சி, கைமா றனபளவை காரணங்கா ரியஞ்சொன்
மாகருவி, தானி,வினை முதல்,பிறவும் பழையோர்
வழியின் ஒன்றற்கு ஒன்றுஇனமோ விட்டுவிடாது
இயைபாய்ப்
பாகுபடச் சொற்றிடலாம். உருபுஏற்பது உருபு
பயன்மூன்றே வேறுபட்டும் வேறுபடுத் தியம்பின்
போகமுற முடித்தும்வேற் றுமையாகிப் பெயரின்
பொருளைவேற் றுமைசெய்வது எட்டுவேற் றுமையே. (எ)

***ஆகுபெயர், வேற்றுமை ஆகியவற்றை விளக்குகிறது.***

**உரை:** *இருபெயரொட்டு, உவமை, மு.தலிய இரண்டும் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் முதலிய ஆறும் அளவை, காரணம், காரியம், சொல், கருவி, தானி வினைமுதல் ஆகியவும் பிறவும் தொல்லாசிரியர்கள். பயின் றுள்ள பயிற்சியை ஒட்டி ஒரு சொல்லுக்கு இனமான ஒரு பொருளைக் குறித்துச் சொற்பொருளை விட்டுவிடாமல் தொடர் புடைய முறையில் கூறுவது ஆகுபெயர்.*

*உருபு ஏற்பது உருபாகும். இதன் பயன் மூன்று. 1. வேறுபடுதல் 2. வேறுபடுத்தல் 3. வேற்றுமையை முடித்தல். இவ்வாறு வேற்றுமையாகிப் பெயரின் பொருளை வேறுபடுத்துவது வேற்றுமை. இது எட்டு வகைப்படும்.*

**விளக்கம்:**

| | | |
|---|---|---|
| *இருபெயரொட்டு ஆகுபெயர்* | : | *வகரக்கிளவி.* |
| *உவமையாகு பெயர்* | : | *கோதை (வந்தாள்).* |
| *பொருளாகு பெயர்* | : | *தாமரை முகம்.* |
| *இடவாகு பெயர்* | : | *ஊர் சிரித்தது.* |
| *காலவாகு பெயர்* | : | *கார் விளைந்தது.* |
| *சினையாகு பெயர்* | : | *வெற்றிலை விளைந்தது.* |
| *குணவாகு பெயர்* | : | *வெள்ளை அடித்தான்.* |

தொழிலாகு பெயர் : வற்றல் உண்டான்.
அளவையாகு பெயர் : படி அளந்தான்.
காரணவாகு பெயர் : ஏனையோர் கருவியாகு பெயர் என்பர். இவர் காரண ஆகுபெயர், கருவியாகு பெயர் என்று இரண்டாகக் கூறியுள்ளார்.
காரியவாகு பெயர் : இந்நூல் அலங்காரம்.
சொல்லாகு பெயர் : இந்நூற்கு உரை செய்தான்
கருவியாகு பெயர் : திருக்குறள் முற்றிற்று.
தானியாகு பெயர் : விளக்கு ஒடிந்தது.
வினை முதலாகு பெயர் : இவ்வாடை கோலிகன்.

ஆகுபெயர் என்பது எழுவாய் — பயனிலை இயைபு சொல்லளவால் அமையக்கூடியது; மேலும் அது சொல்லுக்கும் ஆகுபெயருக்குரிய பொருளுக்கும் மேற்காட்டிய பொருள் இடம் போன்ற உறவு கொண்டிருக்கும் என்று பொன். கோதண்டராமன் அவர்கள் (ஆகுபெயர் அன்மொழித்தொகை என்ற கட்டுரையில் **இலக்கண உலகில் புதிய பார்வை** என்ற நூல்; பக்: 4–25) விளக்கியுள்ளார்.

'பொருள் முதல் ஆறு ஆட்சி கைமாறனபு' இதன்பொருள் விளங்கவில்லை.

இச்சூத்திரம் இலக்கணவிளக்கம் 192, 193 ஆம் சூத்திரத்தையும் இலக்கணக் கொத்து 20–ஆம் சூத்திரத்தையும் தழுவியது. 'பின்போகமுற முடித்தும்' என்ற மூன்றுவது நிலைக்கு விளக்கம் தெரியவில்லை. ஆதலால் ' இலக்கணக் கொத்து' 20-ஆம் சூத்திரத்தை ஒட்டிப் பொருள் எழுதப் பெற்றது. 'உருபு ஏற்பது உருபே' என்பதும் ஆராய்தற் குரியது. ஆகுபெயரை விளக்கும்போது நன்னூலார் 'கருவி' (290.1) என்று கூறியதை இலக்கண விளக்கத்தார் காரணம் என்று கூறினர். எனவே ஆகுபெயர் பற்றிய கருத்து இலக்கண விளக்கத்தை ஒட்டியது என்று கூறப்பட்டது.

41. வேற்றுமையா வதிற்பெயர்,ஐ யால்குவ்வின் னதுகண்,
விளியுருபின் பெயர்முறையாம்; ஐகுவ்வோ டுருபாஞ்,
சாற்றுருபு, வேறுருபு, சொல்லுருபாய்ப் பிறவே
தாம்,பலவாம்; அவற்றுளெழு வாய்க்குருபின் று(எ)ன்பார்;

ஊற்றுபெயர் தோன்றல்,வினை முதலாதல், பயனை
யுறுதல்வினை யுறுதல்,விகா ரப்பெயர்பின், விகுதி
ஏற்றல்உருபு என்பர்;ஆ னவன்முதல்ஐம் பால்மூன்
றிடமுக்காலச் சொல்பெயர்க் குருபுஎன்னப் படுமே. (அ)

**வேற்றுமை உருபுகளையும் முதல் வேற்றுமையையும் கூறுகின்றது.**

**உரை:** வேற்றுமையாவன பெயர், ஐ, ஆல், கு, இன், அது, கண், விளி என்பன. ஐயும் குவ்வும் ஓர் உருபாம். ஏனைய வேற்றுமை உருபுகளுக்குச் சொல் உருபுகள் பல உள்ளன. எழுவாய் வேற்றுமைக்கு உருபு இல்லை என்று சொல்வர். பெயர் தோன்றிய நிலையில் இருத்தல், கருத்தாவாக வருதல், பயனை உறுதல், வினைச் சொல்லைப் பெற்று வருதல், விகாரப் பெயர்களான தன், தம், நம்; என் முதலியன பின்னால் வேறு ஏற்றல், ஆகியவை எழுவாயின் பண்புகள். ஆனவன், ஆனவள், ஆனவர், ஆனது, ஆனவை போன்று ஐந்து பாலிலும் மூன்று காலத்திலும் மூன்று இடத்திலும் வரும் சொற்கள் எழுவாய் வேற்றுமைக்கு உருபாகவும் வரும்.

**விளக்கம்:** ஐ, கு என்பன ஓர் உருபாம் என்றது அவற்றிற்கு வேறு சொல்லுருபு இல்லை என்பது. குவ்விற்குப் பொருட்டு என்பது சொல் உருபாயினும் அது பொருட்டுப் பொருளில் (purposive) மட்டுமே வருவது. கொடை போன்ற பிற பொருளில் வரும்போது சொல்லுருபு வராது.

முதல் வேற்றுமை

| | | |
|---|---|---|
| கருத்தாவாக வருதல் | : | சாத்தன் எழுதினான். |
| பயனை உறுதல் | : | சாத்தன் உண்டான். |
| வினையை உறுதல் | : | சாத்தன் பெருத்தான். |

பிற உருபேற்பதற்குத் தகுதியான மூவிடப் பெயர் களின் வடிவங்களான என், நும் போன்றவை

பெயராக மாறி முறையே நான், நீயிர் போன்று வருவன விகாரப் பெயர்கள் ஆகும்.

சாத்தன் ஆனவன் வந்தான்,

சாத்தி ஆனவள் வந்தாள்,

ஆசிரியர் ஆனவர் வந்தார்.

பசுவானது வந்தது.

பசுக்கள் ஆனவை வந்தன.

சாத்தன் ஆகிறவன் வந்தான்
சாத்தன் ஆவான் வந்தான் } இவ்வாறு ஏனைய வற்றையும் மூன்று காலத்திற்கும் விரித்துக் கொள்ளலாம்.

சாத்தன் ஆன நான் வந்தேன்

சாத்தன் ஆன நீ வந்தாய் – இவ்வாறே ஏனையவற்றையும் மூன்று இடத்திற்கும் விரித்துக் கொள்ளலாம்.

ஆனவன், ஆனவர் போன்றவை முதல் வேற்றுமை என்றது வடமொழி இலக்கணச் செல்வாக்கினாலேயே ஆகும். சாத்தன் வந்தான் என்பதும் சாத்தன் ஆனவன் வந்தான் என்பதும் ஒரே பொருளைத் தரின் ஓரளவு அதை ஒத்துக் கொள்ளலாம். ஆனால் சாத்தன் என்று அழைக்கப்படுவன் என்ற பொருளையும் தருவதால் அதை முதல் வேற்றுமை உருபாகக் கொள்ளமுடியாது.

கருத்தாவாக வருதல் என்பது ஒரு செயலைச் செய்யும் வினை முதல் என்ற நிலையை வற்புறுத்துவது. சாத்தன் எழுதினான் என்னும்போது எழுதுதல் என்ற தொழிலைச் செய்தவன் என்ற முறையில் சாத்தன் கருத்தா எனப்பட்டது.

சாத்தன் உண்டான் என்னும் போது உண்டான் என்னும் தொழிலைச் செய்யும் முறையில் சாத்தன் கருத்தாவே ஆனால் உண்ணுதலின் பயனைச் சாத்தனே பெறுகிறான்

என்பதை இங்கு வலியுறுத்தவே பயனைப் பெறுதல் என்று கூறப்பட்டது. எழுதினன் என்னும் போது எழுதுதல் என்ற தொழிலின் பயனைச் சாத்தன் பெறவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது.

சாத்தன் பெருத்தான் என்பதில் பெருத்தல் என்ற வினையையே சாத்தன் அடைவதால் வினையுறுதல் ஆயிற்று.

பயனிலையை இவ்வாறு பாகுபடுத்துவது மொழி அமைப்பு அடிப்படைக் காரணமாக இல்லாமல் தருக்க முறையை ஒட்டியது போலத் தோன்றும். ஆனல் உண்மை அது அல்ல என்று மொழியியலார் காட்டி இந்த முறையில் ஆராய்ச்சியை வளர்த்து வருகின்றனர். அது Generative Semantics என்ற பெயரிட்டு ஆராய்வதும் குறிப்பிடத் தக்கது.

சாத்தன் சோறு உண்டான்.

சாத்தன் புத்தகம் எழுதினன்.

இரண்டும் ஒரே மாதிரியான வாக்கியமாயினும் இரண்டும் வாக்கிய அமைப்பில் வேறுதன்மை உடையன.

1. சாத்தான் உண்ட சோறு பெரியதாக இருக்கிறது.

2. சாத்தன் எழுதிய புத்தகம் பெரியதாக இருக்கிறது.

இங்கு முதல் வாக்கியம் தவருனது. ஏனெனில் சோறு உண்ணைப்பட்டு விட்டது. எனவே அதைப் பெயரெச்சத் தொடராக்கி நிகழ்கால வினையைப் பயன்படுத்த முடியாது.

இது அழித்தற் பொருள் உடையது; அதனல் அழிந்த பொருளை நிகழ்காலத்தில் கூற முடியாது. ஆனல் புத்தகம் என்பது ஆக்கப் பொருளாக அமைந்திருப்பதால் நிகழ்கால வினைமுற்றைப் பயன்படுத்த முடிகிறது. எனவே செயப்படு பொருள், அழித்தல் பொருளில் வருவதற்கும், ஆக்கப்

பொருளில் வருவதற்கும் தொடர்நிலையில் (Syntactical) வேறுபாடு உண்டு. எனவே தமிழ் இலக்கண ஆசிரியர்கள் ஒவ்வொரு வேற்றுமையையும் பல்வேறு வகையாகப் பிரித்துள்ளதைத் தொடர்நிலையில் வைத்து ஆராய்ந்து விளக்கம் காண வேண்டும்.

இச்சூத்திரம் இலக்கணக் கொத்து 16, 25-ஆம் சூத்திரங்களைத் தழுவியது.

உருபு வேறு சொல்லுருபு என்ன
வேற்றுமை உருபு மூன்றென விளம்புவர். (இ. கொ. 16)

எழுவாய் வேற்றுமைக்கு உருபே இன்று
பெயரே பயனிலை கொள்ளும் தன்மையே
பயனிலை தன்னைக் கொண்ட தன்மையே
வினைமுதல் ஆதலே விகாரப்பெயரே
பெயர்ப்பின் விகுதி பெறுதலே ஆயவன்
ஆனவன் ஆவான் ஆகின்றவன் முதல்
ஐம்பாற் சொல்லும் பெயர்ப்பின் அடைதலே
உருபென வெவ்வேறு உரைத்தார் பலரே (இ. கொ. 25).

42. படுமெழுவாய் உருபுவினை முதல்ஏற்கும் வினை,பேர்
பயனிலையாம்; இரண்டன்உருபு ஐயாம்;கன் மத்தின்
முடுகுசெயப் படுபொருளே யேற்கும்வினைக் குறிப்பான்
முற்று;மூன்று (உ)ருபு ஆல்,ஆன், ஒடு,ஓடு, கொண்டு என்று
இடுதல்,வினை முதற்கருவி யுடனிகழ்வே ஏற்கும்
இசைவினைபேர்பய னிலையா(ம்); நான்கு(உ)ருபே குவ்வாம்,
வடுவில்வினை முதல்கொள்வோன் தான்ஏற் குங்கொடை
மூன்வருவினை யுஞ்சிலபெய ரு(ம்)முடிபு கூறிடுமே. (கூ)

***ஒன்றுமுதல் நான்கு வரையுள்ள வேற்றுமைகளை விளக்குகின்றது.***

**உரை :** எழுவாய் உருபு வினைமுதலாகி வினையையும் பெயரையும் பயனிலையாக ஏற்று வரும். இரண்டாம் வேற்றுமை உருபு ஐ யாகும். அது கருமத்தின் செயப்படு பொருளையும் **(வினை)**, வினைக்குறிப்பையும் ஏற்று வரும். மூன்றும்

வேற்றுமையின் உருபு, ஆல், ஆன், ஒடு, ஓடு கொண்டு ஆகும். அது வினைமுதல், கருவி, உடனிகழ்ச்சி ஆகிய பொருளில் வினையையும் பெயரையும் பயனிலையாகக் கொண்டு வரும். நான்காம் வேற்றுமை உருபு 'கு' ஆகும். அது வினைமுதல் கொள்வோனைக் கொடைப் பொருளின் வினைச் சொல்லும் பெயர்ச்சொல்லும் பயனிலையாகக் கொண்டு முடியும்.

**விளக்கம்:**

எழுவாய் : அவன் வந்தான் — வினைமுதலாக வினையே ஏற்றது.

சாத்தன் நண்பன் — பெயர் ஏற்றது.

2-ஆம் வே : சாத்தன் பழம் தின்றான் — தெரிநிலை வினை ஏற்றது.

சாத்தன் பழம் உடையன் — குறிப்பு வினை ஏற்றது.

3-ஆம் வே : ஆல்: கத்தியால் வெட்டினான் — கருவி.
தொல்காப்பியனால் இலக்கணம் எழுதப்பட்டது வினைமுதல்.

ஆன்: வாளான் உயிர் துறந்தான் — கருவி.

கொண்டு: வாள் கொண்டு வெட்டினான் — ,,

ஒடு : கண்ணனொடு முருகன் வந்தான் — உடனிகழ்வு

ஓடு: பாலோடு தேன் கலந்தான் — ,,

சங்க காலத்தில் ஆன் ஆல், ஒடு ஓடு ஆகிய நான்கும் எல்லாப் பொருளிலும் பயன்பட்டன. இடைக்காலத்தில் தான் ஆல் ஆன் கருவி, வினைமுதல் என்ற பொருளிலும்

ஒடு, ஓடு உடனிகழ்ச்சிப் பொருளிலும் வழங்கி வரத் தொடங்கின.

நான்காம் வேற்றுமை : கண்ணன் முருகனுக்குக்
கொடுத்தான் — வினை முடிபு

கண்ணன் முருகனுக்கு
நண்பன் — பெயர் முடிபு

43. கூறும்ஐந் தாம்உருபு இல்இன்னும், ஏதுஎல்லை
கொளுநீக்கம் உவமைஏற் பதுவினைபேர் முடிவாம்;
ஆறுஅதுஆது, அவ்,வுடைய, உருபுஏற்குங் கருத்தன்
அவற்றினிற்றற் கிழமைசினை, குணம்,தொழிலாய்ப் பிறிதின்
பெறுபொருள், இடம்,கால மாய்ச்,சம் மந்தப்பேர்
பெற்றுமுடித் திடும்;ஏழன் உருபுகண்,அப் பெயராம்
ஏறுபொருண் முதலறுபேர் கருத்தன்இட னுகி
ஏற்கும்வினை பெயர்முடிவாம், எட்டுமாம் விளியே. (ம)

**ஐந்து முதல் எட்டு வேற்றுமைகளை விளக்குகின்றது.**

**உரை :** ஐந்தாம் வேற்றுமையின் உருபு இல்லும் இன்னும் ஆகும். அது ஏது, எல்லை, நீக்கம், உவமை ஆகிய பொருளில் வந்து வினையையும் பெயரையும் பயனிலையாகக் கொண்டு முடியும். ஆறும் வேற்றுமை அது, ஆது, அ, உடைய உருபுகளை ஏற்றுத் தற்கிழமையாகச் சினை, குணம், தொழில் ஆகியன கொண்டும் பிறிதின் கிழமையாகப் பொருள் இடம் காலம் ஆகியன கொண்டும் பெயர்ச் சொல்லைக் கொண்டு முடியும். ஏழாம் வேற்றுமை உருபு 'கண்' ஆகும். அது பொருள் முதலாக ஆறையும் கருத்தாவின் இடனுக ஏற்று வினையையும் பெயரையும் கொண்டு முடியும். எட்டாம் வேற்றுமை விளிவேற்றுமையாம்.

இன் : ஏது : பல்கலைக்கழகத்தின் சிறப்புற்றது சிதம்பரம்.
(பல்கலைக்கழகம் காரணமாகச் சிதம்பரம் சிறப்புற்றது).

எல்லை : அண்ணமலைநகரின் கிழக்கு சிதம்பரம்.

நீக்கம் : அண்ணமலைநகரின் நீங்கினன்.

உவமை : பாரியின் நல்லன் வளவன்.

பெயரியல் 12–ஆம் நூற்பாவில் (45-ஆம் நூற்பா) ஐந்தாம் வேற்றுமை 2–ஆம் வேற்றுமையும் 4-ஆம் வேற்றுமையும் ஏற்று வரும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நீக்கப்பொருளும் உவமைப் பொருளுமே 2-ஆம் வேற்றுமையில் வரும்.

அண்ணமலைநகரை நீங்கினன் — நீக்கம்

பாரியை விட வளவன் நல்லவன் — உவமை

உவமைப் பொருளும் எல்லைப் பொருளும் 4–ஆம் வேற்றுமை உருபு ஏற்று வரும்.

பாரிக்கு வளவன் நல்லவன் — உவமை

அண்ணமலைநகருக்குக் கிழக்கு சிதம்பரம் — எல்லை

ஆறும் வேற்றுமை

அது — அரசனது தொழில்

ஆது — தனது ஊர்

அ — நேற்றைய கூட்டம்

உடைய— ஆசிரியனுடைய பெருமை

தற்கிழமை :

சினைத் தற்கிழமை — சாத்தனது கை
மரத்தினது கிளை

குணம் (பண்பு) — பூவினது வெள்ளை

தொழில் — மாலையினது வரவு

பிறிதின் கிழமை :

பொருள் — முருகனது வேல்

இடம் — கண்ணனது ஊர்

காலம் — வெயிலினது காலம்

ஏழாம் வேற்றுமை :

பொருள் இடம் — வீட்டின்கண் இருக்கும் மரம்

இடம் இடம் — வீட்டின்கண் இருக்கும் அறை

காலம் இடம் — சித்திரையின்கண் வீசும் காற்று

சினை இடம் — தலையின்கண் அமைந்த நெற்றி

குணம் இடம் - கறுப்பின்கண் மிக்குள்ள அழகு

தொழில் இடம் — ஆடல்கண் பாடப்பட்ட பாட்டு

நன்னூலார் ஆறும் வேற்றுமைக்கு மட்டும் ஒருமைக்கு ஒரு உருபும் பன்மைக்கு ஒரு உருபும் கூறியதையொட்டி இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்து வீரியம் ஆகிய இலக்கண நூல்களும் அவ்வேறுபாட்டைக் கூறியுள்ளன. ஆயினும் சுவாமிநாதம் அம்முறையைப் பின்பற்றாதது பாராட்டப்பட வேண்டியது.

ஆறும் வேற்றுமையை ஏற்ற பெயரைக் குறிப்பு வினையாகவும் வேற்றுமையைத் தழுவிப் பெயரை எழுவாயாகவும் கொண்டதால் எழுவாய் — பயனிலைத் தொடர்பு (ஆனால் இங்கு பயனிலை — எழுவாய் முறையில் வந்துள்ளது.) இருக்க வேண்டும் என்று கருதி ஒருமைக்கு அதுவும் பன்மைக்கு 'அ' வ்வும் உருபு என்று கூறினர். ஆறும் வேற்றுமைத் தொடரை மட்டும் வாக்கியமாகக் கொள்ளமுடியாது. அதையும் தொடராக (phrase) வே கொள்ள வேண்டும். மேலும் அகரம் பயன்படுத்தப்பட்டிருக்கிற எல்லா இடத்திலும் (நின்ன கண்ணி) பன்மையாகக் கொள்ளமுடியாது. எனவே தான் நன்னூலார் முறையை இவர் பின்பற்றவில்லை போலும்.

நன்னூலார் ஆறும் வேற்றுமைப் பொருளின் ஐவகைப் பிரிவும் தற்கிழமைக்கும் ஏனைய பிறிதின் கிழமைக்கும் வரும் என்றார். இலக்கண விளக்க வைத்திநாத தேசிகர் அவற்றோடு 'பொருள், இடம், காலமாம் பிறிதின் கிழமை' (203-5) என்று கூறினர். இருவர் கருத்தையும் ஏற்றுக் கொண்டதோடு தற்கிழமைக்குத் தொழிலும் உரியது என்று இவர் புதிதாகச் சேர்த்துக்கொண்டது பொருத்தம் உடையதே.

சாத்தனின் ஓட்டம் என்பது தொழிலை ஒட்டிய தற்கிழமை. இங்குத் தொழிலையும் வினைமுதலையும் பிரிக்க முடியாது. ஆகையால் தொழிலைத் தற்கிழமை என்பது சரியானதேயாகும்.

ஏழாம் வேற்றுமை பற்றிய கருத்து முத்து வீரியத்தை ஒட்டியது. 'அதன் (ஏழாம் வேற்றுமையின்) பொருள், பொருள் முதல் ஆறிரு கிழமையின் இடனாய் நிற்பது என்மனார் புலவர்' (முவீ: 66) என்ற சூத்திரத்தோடு தொடர்பு உடையது இச்சூத்திரம்.

44. விளியேற்கும் பெயர்ஈற்றின் அயலின்அள பெழுதல்,
விளம்பயல்,ஈ றவைநீடல், அயல்ஈறு கெடுதல்,
ஒளிர்ஈறு விகுதிகெட்டு ஆவுறல்;ஆவோ வேயே
யுற்றிடல்,ஈற் றயல்அஆ இஈயுற்றிடல், ஈறு
அளவோடுஅயல் ஆதல்,கடை மிகுதல்.இயல் பாயணமைக்கே
யுருத்தொகுத் தல்பிறவும் அவற்று உருபாந்;
தெளிவாய்ஏற் பதுபடர்க்கை, ஏற்றிடின்முன் னிலையாம்
செப்பு ஏவல் வினைப்பயனும் எட்டாம் வேற்றுமைக்கே. (௰௪)

**எட்டாம் வேற்றுமையின் இலக்கணம் கூறுகின்றது.**

**உரை :** விளியேற்கும் பெயர் : 1. ஈற்று அயல் எழுத்து மாத்திரை நீளுதல்; 2. ஈறு கெடுதல் 3. ஈறு நீளுதல் 4 ஈற்று விகுதி கெட்டு 'ஆ' விகுதி சேர்தல் 5. ஆ, ஓ, ஏ ஆகிய விகுதிகளைப் பெற்று வருதல் 6. ஈற்றயல் அ, ஆ, இ, ஈ பெற்று வருதல் 7. ஈறு

அளபெடுத்து வேறு ஒன்று மிகுதல் 8. ஈறு மிகுதல் ஆகியன அவற்றின் உருபாம். படர்க்கை விளி உருபு ஏற்றால் முன்னிலையாகும். விடை, ஏவல், வினைப்பயன் ஆகிய மூன்று பொருளில் எட்டாம் வேற்றுமை வரும்.

**விளக்கம் :**

1. ஈற்றயல் நீளுதல் : மக்கள் — மக்காள்
2. ஈறு கெடுதல் . அரசன் — அரச
3. ஈறு நீளுதல் : தம்பி — தம்பீ
4. ஈற்று விகுதி கெட்டு 'ஆ' சேர்தல் : மன்னன் — மன்ன.
5. விகுதி சேர்தல்:- ஆ : கந்தன் — கந்தா
   ஏ : மகன் — மகனே
   ஓ : ஐயன் — ஐயாவோ
6. ஈற்றயல் 'அ' பெறுதல் :
   'ஆ' பெறுதல் : இழை — இழாஅய்
   'இ'

ஈறு அளபெடுத்து மிகுதல்:

7. சாத்தன் — சாத்தாஅ
8. ஈறு மிகுதல்: நம்பி — நம்பீ

தந்தை என்பது படர்க்கைச் சொல். அது தந்தாய் என்று விளியேற்றபொழுது தந்தையாகிய நீ என்று பொருள் படுவதால் முன்னிலை ஆயிற்று. எனவேதான் விளி ஏற்ற பெயர் முன்னிலைக்கு மட்டுமே உரியதாக அமையும்.

விடைப் பொருள் :
வினைப் பொருள் : சாத்தா போவாயா
வினைப் பயன் : சாத்தா வந்தேன்

45. ஏட்டின்விளி ஒழிந்தனமுன் னுரைத்ததுஅல் லாற்பிறவும்
ஏற்கும்,ஓர் உருபுஏற்பது உருபுபல வினுமே
ஒட்டும்அவை இரண்டுநான்கு ஏற்பதுஉருபு அனைத்தும்
உறு(ம்); மூன்றை ஏற்பனநான்கு ஐந்துஆறை எற்கும்;
பட்டஐந்தை ஏற்பனநான் குஇரண்டு ஏற் கும்;ஆறு
ஏற்பனநான் குஐந்து ஏழு உறும்;ஏழ்எற் பதுநான்கு
இரண்டும்;
தட்டிகும்ஓர் பொருட்பல்உ ருபு உறல்;பொருள்வே றுதல்;
தம் பொருள்ஈய்ந்து அயல்விரும்பன் மூன்றின்முடித்
தனரே. (௰அ)

***இது வேற்றுமை மயக்கம் விளக்குகின்றது.***

**உரை :** *மேலே கூறப்பட்ட உருபுகள் அல்லாது பிற உருபுகளையும் எட்டாம் வேற்றுமையான விளி வேற்றுமை தவிர ஏனைய வேற்றுமைகள் ஏற்கும். இரண்டாம் வேற்றுமையும் நான்காம் வேற்றுமையும், ஏற்பன பிற வேற்றுமை உருபுகளையும் ஏற்கும் மூன்றும் வேற்றுமை நான்கு, ஐந்து, ஆறு ஆகிய வேற்றுமை உருபுகளையும் ஏற்கும். ஐந்தாம் வேற்றுமை நான்கு, இரண்டு ஆகிய வேற்றுமை உருபுகளையும் ஏற்கும். ஆறும் வேற்றுமை நான்கு, ஐந்து, ஏழு ஆகிய வேற்றுமை உருபுகளையும், ஏழாம் வேற்றுமை நான்கு, இரண்டாம் வேற்றுமை உருபுகளையும் ஏற்று வரும். ஒரு பொருளை உணர்த்தப் பல வேற்றுமை உருபுகளையும் பயன்படுத்தல், வேற்றுமைக்குரிய பொருள் வேறுபடுதல், வேற்றுமை தன் பொருளை விட்டு விட்டுப் பிறவேற்றுமையின் பொருளை ஏற்று வரல் ஆகிய மூன்று பண்புகளையும் கொண்டது.*

*இரண்டாம் வேற்றுமை எல்லா வேற்றுமை உருபு ஏற்று வருதல்.*

*முதல்: சோறு சுடப்பட்டது. (செயப்பாட்டு வினையாக்கத்தில்தான் செயப்படுபொருள் முதல் வேற்றுமையில் வரும்.) அரிசியாற் சோறு ஆக்குகிறான் என்பதை இரண்டாம் வேற்றுமை மூன்றும் வேற்றுமை உருபில் வந்ததற்கு*

உதாரணமாக இலக்கணக்கொத்து ஆசிரியர் கொடுத்துள்ளார். அரிசியைச் சோறாக ஆக்குகின்றான் என்ற புதைநிலை வாக்கியமே அரிசியால் சோறு ஆக்குகிறான் என்று வந்துள்ளது என்று கருதி இரண்டாம் வேற்றுமை மூன்றாம் வேற்றுமை உருபில் வந்துள்ளது என்று அவர் கருதியிருக்க வேண்டும்.

அவட்குக் கொள்ளும் இவ்வணிகலம் — இவளைக் கொள்ளும் இவ்வணி என்று பொருள்படுவதால் இரண்டாம் வேற்றுமை நான்காம் வேற்றுமை உருபில் வந்துள்ளது.

பழியின் அஞ்சும் (பழியை அஞ்சும்): 2ஆம் வேற்றுமைக்கு ஐந்தாம் வேற்றுமை உருபு வந்துள்ளது.

நூலது குற்றம் கூறினன் -நூலைக்குற்றம் கூறினன்— 6 ஆம் வேற்றுமை ஏற்றது.

கோட்டின்கண் குறைத்தான் —கோட்டைக் குறைத்தான் 7ஆம் வேற்றுமை ஏற்றது.

நான்காம் வேற்றுமையும் ஏனைய எல்லா வேற்றுமை உருபைப் பயன்படுத்திக் கொள்ளும்.

1 ஆம் வே: இரப்பவர் என் பெறினும் கொள்வர் — இரப்பவர்க்கு என்ன கொடுத்தாலும் கொள்வர் (இலக்கண விளக்கத்தில் உள்ள உதாரணம்.)

2 ஆம் வே: செய்யவள் தவ்வையைக் காட்டி விடும் (குறள் 167)—திருமகள் தவ்வைக்குக் காட்டிவிடும்.

3 ஆம் வே: நாகராற்பலி —நாகர்க்குப்பலி

5 ஆம் வே: அவனின் இவன் நல்லன்—அவனுக்கு இவன் நல்லன்

6 ஆம் வே: நாகரது பலி—நாகர்க்குப் பலி

7 ஆம் வே: நாகர்கண் அன்பு செய்தான் —நாகர்க்கு அன்பு செய்தான்

மூன்றும் வேற்றுமைப் பொருளில் நான்கு, ஐந்து, ஆறு வேற்றுமை உருபுகள் வரும்.

4 ஆம் வே: கண்ணிற்குக் காணலாம் — கண்ணால் காணலாம்.

5 ஆம் வே: கண்ணிற் காணலாம்—கண்ணால் காணலாம்.

6 ஆம் வே: கண்ணது காட்சி —கண்ணால் காணும் காட்சி

ஐந்தாம் வேற்றுமைப் பொருளில் 2, 4, வேற்றுமை உருபுகள் வரும்.

2 ஆம் வே: மதுரையை நீங்கினான் — மதுரையின் நீங்கினான்.

4 ஆம் வே: சிதம்பரத்தின் கிழக்கு அண்ணாமலைநகர் — சிதம்பரத்துக்குக் கிழக்கு அண்ணாமலைநகர்

ஆறாம் வேற்றுமைப் பொருளில் 4, 5, 7 வேற்றுமை உருபுகள் வரும்.

4 ஆம் வே. சாத்தனுக்கு மகன் — சாத்தனது மகன்.

5 ஆம் வே. சாத்தனின் மகன் — சாத்தனது மகன்.

7 ஆம் வே. பாட்டின் கண் சிறப்பு — பாட்டினது சிறப்பு

ஏழாம் வேற்றுமைப் பொருளில் 4, 2 வேற்றுமை உருபுகள் வரும்.

4 ஆம் வே: நாளைக்கு வா — நாளைக்கண் வா

2 ஆம் வே: தூணைச்சார் — தூணின்கண் சார்

ஒரு பொருளுக்குப் பல வேற்றுமை என்பது கருவிப் பொருள் மூன்று, நான்கு, ஐந்து வேற்றுமை உருபுகளால் உணர்த்தப்படுவது போன்றது. இது பொருள் மயக்கத்தைக் குறிக்கும்.

ஒவ்வொரு வேற்றுமையும் பொருள் வேறுபடுதல் என்பது மூன்றும் வேற்றுமை, கருவி, கருத்தா, உடனிகழ்வு போன்று பல பொருளில் வருவது போன்றது.

வேற்றுமை தன் பொருளை விட்டு விட்டுப் பொருளைத் தருதல் என்பது உருபு மயக்கம் ஆகும்.

நம்பிக்கு மகன் என்னும் போது 'கு' என்ற நான்காம் வேற்றுமை, தன் பொருளை விட்டு விட்டு ஆறும் வேற்றுமைப் பொருளைத் தருகின்றது.

இச்சூத்திரம் இலக்கணக்கொத்து 22, 45, 47, 46, 48, 49, 50, 23 ஆகிய சூத்திரங்களைத் தழுவியது.

ஒரு வேற்றுமைக்குப் பல உருபு வருதலும்
(இ. கொ. 22,2)

எல்லா உருபொடும் செயப்படுபொருள் எழுமே
(இ. கொ. 45)

எல்லா உருபொடும் கொள்வோன் வருமே (இ. கொ. 47)

ஒன்று மூன்று நான்கு ஐந்து ஆறு உருபொடு கருவி
வருமெனக் கருதினர் பெரியோர் (இ. கொ. 46)

இரண்டு நான்கு ஐந்தொடும் எழுமே (இ. கொ. 48)

நான்கு ஐந்து ஆறு ஏழொடு குறை நடக்கும்
(இ. கொ. 49)

ஒன்று இரண்டு நான்கு ஏழொடு இடம் எழும்
(இ. கொ. 50)

ஓர் உருபிற்கே பல பொருள் வருதலும்
ஒரு பொருட்கே பல உருபுகள் வருதலும்
என இரண்டாகும் வேற்றுமை இயல்பே (இ. கொ. 23).

இலக்கணக்கொத்திற்கும் சுவாமிநாதத்திற்கும் வேறு பாடு அமைந்துள்ளது. இலக்கணக்கொத்து பொருள் அடிப் படையில் ஒவ்வொரு பொருளும் என்னென்ன வேற்றுமையில் வரலாம் என்று தொகுத்துக் கூறுவதைச் சுவாமிநாதம் ஒவ்வொரு வேற்றுமையும் என்னென்ன பிற வேற்றுமையில் வரலாம் என்று மாற்றிக் கூறியுள்ளது. இறுதிப்பகுதியில் இலக்கணக்கொத்து இருவகை மயக்கம் கூற (23), சுவாமிநாதம் மூவகை மயக்கம் கூறுவதும் நோக்கத் தக்கது.

46. த,ந,நு,எ, எனவைகிளையின் ன,ள,ர,ஈற் றனவுந்,
தாந்தானும் சுட்டுவினுப் பெயரும்விளி ஏலா;
அனையவைகள் உறிற் சிலயாம் ஒன் றிடத்துஒன்றே யதியாம்,
உருபும்பய னிலையும்இயை தல்இயை பிலதாய்
நனி மயங்கல் பொருண்மயக்கம்; உருபுமயக்கம் தா(ம்)நன்
முதல்ஐயுறிற் சினை கண்உறு(ம்); முதல்அது உற்றுற்
சினைஐயே உறும்;வெவ்வேறு இலஉரைப்போர் குறிப்பாஞ்
சினைமுதல்கள்; பிண்டமும்அற் றும்வினவும் பொழுதே.(௫௩)

***விளியேலாப் பெயர்களும் வேற்றுமை மயக்கமும் உணர்த்து கின்றது.***

**உரை:** த, ந, நு, எ என்பவற்றை உறுப்பாக உடைய ன, ள, ர இறுதியில் உடைய சொற்களும், தாம், தான், சுட்டுப்பெயர், விணுப்பெயர்களும் விளி ஏற்று வரா; இப்பெயர் கள் 'கள்' விகுதிபெற்று வந்தால் சில சொற்கள் விளி கொள்ளுதலும் உண்டு. உருபும், பயனிலையும் இயைபோடு பொருந்தி வருதல், இயைபு இல்லாமல் பொருந்தி வருதல் என்பன பொருண் மயக்கம், உருபு மயக்கம் எனப்படும். முதல் 'ஐ' உருபு பெற்றால் சினை 'ஐ' உருபு ஏற்கும், முதல், 'அது' உருபு பெற்றால் சினை 'ஐ' உருபு ஏற்கும். முதல், சினை என்பன வேறு இல்லை. ஒரு பொருளே உரைப்போர் குறிப்பை ஒட்டியே சினையும் முதலுமாக அமையும். பிண்டப் பொருளும் அத்தன்மையதே.

**விளக்கம்:** தமன், தமள், தமர், நமன், நமள், நமர், எமன் (எம்மவன்) எமள் என்பன கிளைப்பெயர்கள்.

தமர்கள் என்பது தமர்காள் என்றும் நமரங்கள் என்பது நமரங்காள் என்றும் கள் விகுதி பெற்ற பின் விளிவேற்றுமை ஏற்றன.

'யாம் ஒன்றிடத்து ஒன்றே ஆதியாம்' என்பது என்ன வென்று விளங்கவில்லை.

உருபும் பயனிலையும் இயைந்து வருவது பொருள் மயக்கம் என்றது உருபேற்ற சொல் அதற்குரிய அடிப்படை உருவிலும் வரலாம் என்பதைக் குறிக்கும். அதாவது இரண்டு வேற்றுமை உருபுகளும் வரத் தகுதி உடையன என்பது பொருள்.

குறை என்ற வினைச்சொல் இரண்டாம் வேற்றுமைக் குரியது. அது ஏழாம் வேற்றுமையும் ஏற்று வரும்.

கோட்டைக் குறைத்தான்.
கோட்டின்கண் குறைத்தான்.

எப்பொழுதும் இரண்டு வேற்றுமையும் இரண்டு வேறு பொருளைத் தருவது (மரத்தை வெட்டினான், மரத்தில் வெட்டினான்) இங்கு ஒரே பொருளைத் தருவதால் சமனுதல் (Neutralisation) என்று மொழியியலார் விளக்குவர். ஆகவே, பொருள் மயக்கம் என்பது சமனுதல் என்று கொள்ளலாம்.

வந்த உருபின் பொருளொடு தொடர்பில்லாத வேறு ஒரு உருபின் பொருளே தருவதால் உருபு மயக்கத்தில் உருபும் பொருளும் இயைபு படவில்லை என்று கூறியுள்ளார். அதாவது புதைநிலையில் உள்ள வேற்றுமை உருபு இல்லாமல் வேறு ஒரு உருபே அப்பொருளை உணர்த்துவதால் வேற்றுமை உருபு பிளவுபட்டதாகக் கருதுவர். எனவே உருபு மயக்கத்தைப் பிளவு படல் (Diversification) என்று மொழியியலார் விளக்குவர்.

சாத்தனுக்கு மகன் என்ற தொடரில் நான்காம் வேற்றுமை ஆறும் வேற்றுமைப் பொருள் தரும். இந்தத் தொடர், இலக்கண ஆசிரியர்கள் கருத்துப்படி ஆறும் வேற்றுமை ஏற்று வராததால் ஆறும் வேற்றுமையே சில இடங்களில் 'அது' என்றும் சில இடங்களில் 'கு' என்றும் வருவதால் பிளவுபட்டதாகக் கருதலாம்.

இயைபு உடைமை, இயைபு இலாமை என்ற கருத்து இலக்கண விளக்கம் உரையில் (220 சூத் உரை. பக். 271) காணப்படுகின்றது. 'பொருண் மயக்கம் தன் பொருளில் தீராது மயங்குதலின் உருபு ஏற்ற சொல்லும், உருபு நோக்கிய சொல்லும் இயைபு உடையனவாம் ஆகலின் ......என்றும் உருபு மயக்கம் தன்பொருளில் தீர்ந்து மயங்கு தலின் உருபு ஏற்ற சொல்லும் உருபு நோக்கிய சொல்லும் தம்முள் இயைபு உடையன அல்லவாம் ஆகலின்'...... என்றும் இலக்கண விளக்க உரையில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

யானையைக் கோட்டின் கண் குறைத்தான்.
யானையது கோட்டைக் குறைத்தான்.

முதல், சினை என்பது பேசுவோர் குறிப்பை ஒட்டியது என்பதால் முதல், சினை என்பன ஒப்புநிலைச் (Relative terms) சொற்கள் என்பதும் தனி நிலைச் (Absolute terms) சொற்கள் அல்ல என்பதும் அறியத்தக்கன. கை என்பதை மனித உடல் முழுமையும் நோக்கச் சினையாகவும் விரலை நோக்க முதலாகவும் கருத வேண்டும்.

பல பொருள் சேர்ந்த ஒன்றைக் குறிப்பிடும் பிண்டம் என்பதையும் முதலாகவும் சினையாகவும் கருதலாம். இச்சூத்திரம் இலக்கண விளக்கம் 216, 221, 222 ஆகிய சூத்திரங்களைத் தழுவியது.

**பா. வி.:** தந்நு என்று கையெழுத்துப் பிரதியில் காணப்படுகின்றது. த, ந, நு என்று திருத்தப்பட்டுள்ளது.

# 2. வினை மரபு

47. வினை,வினைபேர் இடையுரியிற் பிறந்து,முத னிலையே
விதித்தொழிற்பேர் வினைமுற்றுஈ ரெச்சம்என ஐந்தாய்த்;
தனிவினையுந் தொடர்வினையு மாகும்முத னினையே
தனிவினை;மற் றையவைதொடர் வினைகள்;தனி வினையே
உனு தொழிற்பேர், முற்றெச்சஞ் கருத்தன்முத லாதல்,
உருபேற்றல், படுவினைகுன் றுமை,குன்றல், பொதுவே
பனும்இடங்குன் றுமை,பகாப் பதம்பகுதி யாதல்
பலபொருட்கு ஒன்று;ஒருபொருட்கே பலவிதெல்லாந்
தொடுமே. (க)

***வினைச்சொல்லின் பொது இலக்கணமும் தனிவினையின் இலக்கணமும் கூறுகின்றது.***

**உரை:** *வினை, பெயர், இடை, உரி ஆகிய நான்கு சொற்கள் அடியாக வினைச்சொல் பிறக்கும். அது முதனிலை, தொழிற்பெயர், வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் என ஐந்துவகைப்படும். தனிவினை, தொடர்வினை எனப் பெரும் பிரிவு இரண்டாகும். முதனிலைமட்டுமே தனிவினையாகும். மற்றவை தொடர்வினை ஆகும். தனிவினை என்பது தொழிற் பெயர், முற்று, எச்சம், கருத்தாவாதல், உருபேற்றல், செயப்படு பொருள் குன்றுமை, செயப்படுபொருள் குன்றல், பொதுமை, இடங்குன்றுமை, பகாப்பதத்தின் பகுதியாதல், பலபொருட்கு*

ஓர் முதனிலை, ஒருபொருட்குப் பல முதனிலை ஆக இவ்வாறெல்லாம் வரும்.

**விளக்கம் :**

| | |
|---|---|
| நட | வினையடியாகப்பிறந்தது |
| நகை | பெயரடியாகப்பிறந்தது |
| போல் | இடையடியாகப்பிறந்தது |
| சிவ | உரியடியாகப்பிறந்தது |
| ஈறு < இறு | முதனிலை |
| இறுதல் | தொழிற்பெயர் |
| இறும் | வினைமுற்று |
| இற்ற | பெயரெச்சம் |
| இற்று | வினையெச்சம் |

தனிவினை என்பது விகுதி எதுவும் சேராதது. தொடர்வினை என்பது பகுதியோடு விகுதி முதலியன சேர்ந்தது.

'அறிகொன்று அறியான்' (குறள்) என்பதில் அறி என்பதில் முதனிலை தானே தொழிற்பெயராய் நின்றது.

'பெறுவது கொள்வாரும் நேர்' என்பதில் நேர் என்ற முதனிலை வினைமுற்றாக வந்தது.

'பொருபடை' என்பதில் பொரு, பெயரெச்சம் (எல்லா வினைத்தொகையிலும் முதனிலை, பெயரெச்சமாக இருக்கும்).

'வரிபுனைபந்து' என்பதில் வரி வினையெச்சம். 'கால காலனைக் காண்கின்ற போது'—முதனிலை பிரிந்து தொழிற்பெயராய் வினைமுதலானது.

உருபேற்றல் :

| | |
|---|---|
| இவ்வுரை பெருகிற்று | — 1-ஆம் வேற்றுமை |
| சொல்லைச் சேர்த்தான் | — 2-ஆம் வேற்றுமை |

உரையால் அறிவித்தான் — 3-ஆம் வேற்றுமை

இச்சொற்குப் பொருளிது — 4-ஆம் வேற்றுமை

இச்சொல்லின் அறியலாம்
இப்பொருள் — 5-ஆம் வேற்றுமை

இவ்வுரையது பெருமைக்கு
ஒப்பில்லை — 6-ஆம் வேற்றுமை

இச்சொற்கண் இருக்கும்
இப்பொருள் — 7-ஆம் வேற்றுமை

களி வாராய் — 8-ஆம் வேற்றுமை

உண், பார் போன்றவை செயப்படுபொருள் குன்றாவினை (Transitive Verb); நட, வா போன்றன செயப்படுப்பொருள் குன்றியவினை (Intransitive Verb); தேய், பிரி போன்றன செயப்படுப்பொருள் குன்றிய வினையாகவும், குன்றா வினையாகவும் வரும். செல் போன்றன இடங்குன்றாவினை (தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடத்துக்கும் வரும்). பகுதியாக வருவது பகாப்பதமாக இருக்கும்; நடந்தான் என்பதில் நட என்ற பகுதி, பகாப்பதமாக உள்ளது.

வை என்பது வைதல், வைத்தல் என்ற இரண்டிற்கும் பகுதியாக இருப்பதால் பல பொருட்கு ஒரு முதனிலை.

சொல், பேசு, இயம்பு முதலியன ஒரே பொருளை உணர்த்துவதால் ஒரு பொருட்குப் பல முதனிலை.

உதாரணம் முழுமையும் இலக்கணக்கொத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளன.

இச்சூத்திரம் இலக்கணக்கொத்து 68, 69, 65, 66 ஆகிய நான்கு சூத்திரங்களின் தழுவலாகும்.

*பெயர், வினை, இடை, உரி நான்கு அடியானும் பிறக்கும் வினை'* (*இ. கொ. 68-1, 2*)

*'முதனிலை, தொழிற்பெயர், முற்று, ஈரெச்சம் என்று ஐவகையுள்ளே அடங்கும் வினையே'* (*ஷை 69*)

*'தனிவினை, தொடர்வினையென இருவினையினும்'* (*ஷை 65*) *எஞ்சிய பகுதிகள் 66—ஆம் சூத்திரத்தைத் தழுவிச் சுருக்கமாக எழுதப்பட்டுள்ளன.*

**பாட விளக்கம்** : *2-வது வரி — 'முதலிலை என்ற மூல பாடம் 'முதனிலை' என்று திருத்திக் கொள்ளப்பட்டது. இலக்கணக்கொத்து 65-ஆம் சூத்திரக்கருத்தும் இவ் வுண்மையை வலியுறுத்தும்.*

48. தொடர்வினைதான் விகுதிமுதற் பொருந்தல்அன்றித் திரிதல்,
சொற்றிணைபால் இடம்பொழுது விளக்குதல்;செய் வினையே
படுவினைதன் வினைபிறவின் வினைவிதியே மறையே
பரித்தமுதல் சினையிவற்றிற் பொதுக்கடெரி நிலையே
இடுதெரியா நிலையெச்சப் பொதுஒருமை பன்மை
இயல்புதிரி யினும்பலவாய்க் கருத்தின்நிலங் கால
மொடுகருவி தொழில்செய்பொருள் இன்னதற்கு இப்பயன்
என்றுளபொருத் தம்பொருந்தியே பொருண்முடிவு தருமே.
[உ]

***தொடர்வினையின் இலக்கணம் கூறுகின்றது.***

**உரை:** *தொடர்வினை என்பது விகுதி, இடைநிலை போன்றவை பொருந்தி வரும். பகுதி, விகுதி போன்றவை சேராமல் திரிதல்; திணை, பால், இடம், பொழுது விளக்குதல்; செய்வினை, செயப்பாட்டுவினை, தன்வினை, பிறவினை, உடன் பாட்டுவினை, எதிர்மறைவினை, முதல்வினை, சினைவினை, முதல்—சினைவினை ஆகியவற்றில் சிலவற்றிற்குப் பொதுவாகவும் அமைந்து தெரிநிலைவினை, தெரியாநிலைவினை, பெயரெச்சம், வினையெச்சம், இரண்டுக்கும் பொதுவான எச்சம், ஒருமைப் பன்மையை இயல்பாகவும் திரிபாகவும் உணர்த்துதல்; நிலம்,*

காலம், கருவி, தொழில், செயப்படுபொருள், இன்னதற்கு இது பயன் என்றுள பொருத்தம் ஆகிய உடையவாய்ப் பொருள் முடிவு தரும்.

**விளக்கம் :**

செய்யும் (செய்+உம்): பாடுக (பாடு+க) — விகுதி; பொருந்தியது.

செய்தான் (செய்+த்+ஆன்)—இடைநிலையும் விகுதியும் பொருந்தியது.

செய்தனன் (செய்+த்+அன்+அன்) — இடை நிலையும் சாரியையும் விகுதியும் பொருந்தியது.

நடக்கின்றனன் (நட+க்+கின்று+அன்+அன்) சந்தி, இடைநிலை, சாரியை விகுதி பொருந்தியது.

கேடு (கெடு என்பது கேடு என்று திரிந்தது)—திரிதல். நடந்தான் - உயர்திணையையும், ஆண்பாலையும். படர்க்கை இடத்தையும் இறந்த காலத்தையும் விளக்கியது.

உழுதான் — செய்வினை

நடத்தப்பட்டான் — படுவினை (செயப்பாட்டுவினை)

நடந்தான் — தன்வினை

நடத்தினன் — பிறவினை

நடந்தான் — விதிவினை (உடன்பாட்டு வினை)

நடவான் — எதிர்மறை வினை

சாத்தன் நடந்தான் — முதல்வினை (செய்வோனின்வினை)

கண் பார்த்தது — சினை வினை

ஒரு சொல்லே ஒன்றுக்கு மேற்பட்ட வினையாக வருதலைப் பொது என்று குறிப்பிட்டுள்ளார்.

துணியை வெளுத்தான் — பிறவினை

துணி வெளுத்தது — தன்வினை

வெளுத்தான் என்பது தன்வினையாகவும் பிற வினையாகவும் பயன்பட்டது.

வல்லார் (வல்லவர்) — உடன்பாடு

எளியர் (வன்மை இல்லாதவர்)— எதிர்மறை

| | |
|---|---|
| வல்லார் திறை (கப்பம்) கொள்வர் — உடன்பாடு<br>வல்லார் திறை கொடுப்பர் — எதிர்மறை | இலக்கணக்கொத்து உரையிலிருந்து எடுக்கப் பட்ட உதாரணம். |

எனல் (திருக்குறள் 196) — 'என்று சொல்' — உடன்பாடு

எனல் (திருக்குறள் 196) — 'என்று சொல்லாதே' — எதிர்மறை

புலி கொன்ற யானை என்பது புலி யானையைக் கொன்றது என்ற பொருளைக் குறிக்கும்போது செய்வினையாகவும், யானை புலியைக் கொன்றது என்ற பொருளைக் குறிக்கும்போது புலி யானையால் கொல்லப்பட்டது எனச் செயப்பாட்டுவினையாகவும் கொள்ளப்படும். அவன் பருத்தான் என்பதில் எழுவாய் மனிதனைக் குறிக்கும் போது முதல் வினையாகவும் அவன் உடலைக் குறிக்கும்போது சினைவினையாகவும் கொள்ளவேண்டும்.

நடந்தான் என்பது இறந்த காலத்தைக் காட்டுவதால் தெரிநிலைவினை. இல்லை என்பது காலத்தைக் காட்டாததால் தெரியாநிலைவினை — குறிப்புவினையே இது.

படித்த நூல் — பெயரெச்சம்
படித்து மகிழ் — வினையெச்சம்
} படித்த, படித்து இவை இரண்டும் வெவ்வேறு வடிவின.

*தேடிய பொருள் — (செய்த என்னும் வாய்பாடு) பெயரெச்சம்*

*தேடிய வந்தான் — (செய்யிய என்னும் வாய்பாடு) வினையெச்சம்) (தேடுவதற்கு வந்தான் என்று பொருள் பட்டு வினையெச்ச மாகும்)*

*தேடிய என்பது பெயரெச்சத்திற்கும் வினையெச்சத்திற்கும் பொது வடிவுடையது.*

*வந்தான் — ஒருமை வினை; வந்தார் — பன்மை வினை*

*வரும் — ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவான வினை*

*இச்சூத்திரம் இலக்கணக்கொத்து 67-ஆம் சூத்திரத்தை அடியொற்றிச் சுருக்கி எழுதப்பட்டுள்ளது.*

**பாட விளக்கம் :** *'திரிபினும்' என்ற மூலபாடம் (3–வது வரி) 'திரியினும்' என்று திருத்தப்பட்டுள்ளது.*

49. தருதொழிலின் பொருத்தமதாற் பொருளாதி பெயரிற்
சார்ந்து,தான்தொட ராய்,வேற் றுமை உருபுஏற் பிலதாய்க்,
கருவியினாற் பதமுடிவின் இயல்பெற்றுத் தோற்றிக்
காலம்விளக் கியுந்தொகுத்து முடிதன்முற் றும்.அதுவே
ஒருவன்முதல் ஐந்திணையும் படர்க்கையினும் பன்மை
ஒருமையைத்தன் மையினொடுமுன் னிலையினும்,முக் காலம்
முரணிமுறை யேஐமூன் றுஆறாய் வினையின்
முற்றுச்சொல் ஒன்றேமூ வொன் பதாம் அன்றே. [௯]

***முற்றுச் சொல்லின் இலக்கணம் கூறுகின்றது.***

**உரை :** *பொருள் முதலிய அறுவகைப் பெயரைச் சார்ந்து தொடர்வினையாய் வேற்றுமை உருபு ஏற்காது*

காலத்தை வெளிப்படையாகவும் குறிப்பாகவும் ஏற்பது முற்று. ஆண், பெண், பலர், ஒன்று, பல என ஐம்பாலையும் படர்க்கையிலும் பன்மையையும் ஒருமையையும் தன்மை, முன்னிலையிலும் மூன்று காலத்திலும் சேர்த்துக்கொண்டு வர முற்றுச் சொல் ஒன்றே இருபத்தேழு ஆக வரும்.

**விளக்கம் :**

| | |
|---|---|
| செய்தான் அவன் | — வினைமுற்று, பொருட்பெயர் கொண்டது. |
| தோன்றியது ஊர் | — வினைமுற்று, இடப்பெயர் கொண்டது. |
| வந்தது மழை | — வினைமுற்று, காலப்பெயர் கொண்டது. |
| எழுதியது கை | — வினைமுற்று, சினைப்பெயர் கொண்டது. |
| வென்றது உண்மை | — வினைமுற்று, பண்புப்பெயர் கொண்டது. |
| சிறப்புற்றது வாழ்வு | — வினைமுற்று, தொழிற்பெயர் கொண்டது. |
| செய்தான் | — இறந்த காலத்தைத் தெளிவாக விளக்கியது. |
| நல்லன் | — காலத்தை வெளிப்படுத்தவில்லை. |

படர்க்கை: ஐந்துபால் × மூன்று காலம் — 15

தன்மை: ஒருமை,
பன்மை என இரண்டு × மூன்று காலம் — 6

முன்னிலை: ஒருமை,
பன்மை என இரண்டு × மூன்று காலம் — 6

27

இச்சூத்திரம் நன்னூல் சூத்திரம் 323, 324 ஆகிய இரண்டையும் தழுவியது.

**பாட விளக்கம்:** தருதொழினலின் (முதல் வரி) என்பது மூலபாடம்.

50. அன்,ஆன் ஈறு ஆண்; அள்,ஆள் பெண்; அர்,ஆர்,பம்,மார்
ஆம் பலர்;து டு,று ஒன்று; அ,ஆ பலபால், படர்க்கை
பன் மூன்றும், என்,அல்,அன், ஏன்,கு,டு,து,று, செய்கு என்ப
பகர் ஒருமைத் தன்மை; அம்,ஆம் எம்,ஏம்,ஓம், உம்மைத்,
தன்னொடாங்; க,ட,தற, செய்கும்மெனலாம் பன்மைத்
தன்மையையாய் இம் மூன்றுஏவ லில்இருபான் மூன்று,
பின்,ஏன்,அல், லால்,காண்,முன் னிலையொருமை இர்,ஈர்
பெறும்;ஏவ லிலும்மின் முன்னிலைப் பல்லீறே. (ச)

***வினைமுற்றின் விகுதிகளைத் தொகுத்து உரைக்கின்றது.***

**உரை:** அன்,ஆன் ஈறுகள் ஆண்பாலையும் அள், ஆள் ஈறுகள் பெண்பாலையும் அர், ஆர், ப, மார் ஈறுகள் பலர்பாலையும் து, டு, று ஈறுகள் ஒன்றன்பாலையும் அ,ஆ ஈறுகள் பலவின் பாலையும் காட்டும் வகையில் 13 விகுதிகள் படர்க்கையிடத்து வரும். என், அல், அன், ஏன், கு, டு, து, று, ஈறுகள் பெற்று வரும் செய்கு வர்ய்பாடு தன்மை ஒருமையிலும், அம், ஆம், எம், ஏம், ஓம், கும், டும், தும், றும் ஈறுகள் பெற்றுவரும். செய்கும் வாய்பாடு தன்மைப் பன்மையிலும் வரும். ஐ ஆய்,இ ஆகிய மூன்று ஈறுகளும் ஏவலில் வரும்.

பதமரபில் கூறிய இருபத்து மூன்று ஈற்றுச் சொற்களும் ஏல், அல், ஆல், காண் ஆகிய ஈறுகளும் முன்னிலை ஒருமையிலும் இர், ஈர். ஆகிய ஈறுகளும் ஏவலோடு உம், மின் ஈறுகள் பெற்று முன்னிலைப் பன்மையிலும் வரும்.

**விளக்கம்**

வந்தனன், வந்தான் — ஆண்பால்

வந்தனள், வந்தாள் — பெண்பால்

வந்தனர், வந்தார், வருப, பாடன்மார் எமரே—பலர்பால்
வந்தது, பொருட்டு (பொருளை உடைத்து) பாடிற்று—
ஒன்றன்பால்

வந்தன, வாரா — பலவின்பால்

வந்தனென், வந்தனன், வருவல் வருவேன்,
உண்கு, உண்டு, வருது, சேறு (செல்வேன்) } தன்மை
வந்தனம், வந்தாம் வந்தனெம், வந்தேம்,
வந்தோம், உண்கும், உண்டும், வந்தும், சென்றும்.

உண்டனை, உண்டாய், உண்டி, உண்ணல்.
அழால், அழேல், சொல்லிக்காண், } முன்னிலை
உண்டனீர், உண்டீர், உண்ணும், உண்மின்,

முன்னிலைக்குரிய ஈறுகள் இலக்கணவிளக்கம், 238 ஐ ஒட்டிக் கூறப்பட்டுள்ளன; ஏனைய நன்னூலைத் (325) தழுவியன.

**பாட விளக்கம்:** 'அன்னென்' (2வது வரி) அன்னேன் என்று திருத்தப்பட்டுள்ளது ஏனெனில் முன்னரே 'என்' என்பது வந்துள்ளது. 'ஏவலிலும்மு (4-வது வரி) என்ற மூல பாடம் 'ஏவலிலும்மின்' என்று திருத்தப்பட்டுள்ளது.

51. ஈறு,முத னிலைதிரிதல், திரியாமை, விப்பி,
இவற்றினிணைந்திடல், வெவ்வேறு உறலாய்,எண் வகையா
மாறில்பிற வினையே;அப் பிறவினைதன் வினையாய்
வருதலுமா(ம்); முதனிலையின் றியுந்தொழிற்பேர் உளவாம்;
ஈறிலாத்தொ ழிற்பெயர்எச் சமு(ம்) முற்றுமாகும்;
உண்டுஇன்மை யன்மைக்கும்படும் வேண்டுஞ், செயும்,யார்,
வேறுஎவனுங் குறிப்பல்லால் உம்,மாரை க,ய,ர
மெய்யின்வியங் கோள்;எச்சம் பொதுவாய் முற்றிடுமே. (ரு)

***பிறவினை, தொழிற்பெயர், இருதிணைப்பொதுவினை ஆகியன விளக்கப்படுகின்றன.***

**உரை:** முதனிலை திரிந்தும், திரியாமலும், இருவகை வினையின் இறுதியிலும் 'விப்,பி' விகுதி இணைந்தும், இருவகை

வினையிலும் 'வி' விகுதி தனியாகவும் 'பி' விகுதி தனியாகவும் ஆக எட்டு வகையாகப் பிறவினை வரும். பிறவினை தன்வினையாக வருதலும் உண்டு. முதனிலை இல்லாமலும் தொழிற்பெயர் வரும். தொழிற்பெயர் பெயரெச்சமாகவும் முற்ருகவும் பயன்படும். உண்டு, இன்மை, அன்மை, தகும். படும், வேண்டும், செயும், யார், வேறு, எவன் ஆகிய குறிப்பு வினை முற்றுகளும் அல், ஆல், உம், மார், ஐ, க, ய, ர ஆகிய எட்டு விகுதியை உடைய வியங்கோளும் எச்சமும் இருதிணைப் பொதுவினைகள்.

**விளக்கம் :**

ஊட்டு (உண்—தன் வினை) — முதனிலை திரிந்த பிறவினை

அரசன் கட்டின கோட்டை— அரசன் தச்சரால் கோட்டையைக் கட்டுவித்தான் என்ற வாக்கியத்தின் திரிந்த பெயரெச்சத்தொடர் ஆனதால் 'கட்டின' முதனிலை திரியாத பிறவினை.

நடத்துவிப்பி — முதனிலை திரிந்த பிறவினையோடு 'விப்பி' விகுதி வரல்

நடப்பி — முதனிலை திரியா வினையோடு 'பி' விகுதி வரல்

நடத்துவி — முதனிலை திரிந்த பிற வினையோடு 'வி' விகுதி வரல்

செய்வி — முதனிலை திரியாப் பிறவினையோடு 'வி' விகுதி வரல்

ஊட்டுப்பி — முதனிலை திரிந்த பிறவினையோடு 'பி' விகுதி வரல்.

உண்டபி — முதனிலை திரியாப் பிறவினையோடு 'பி' விகுதி வரல்

கூத்து என்பது கூத்தாடு என்ற வினையிலிருந்து உண்டானதாகக்கொண்டு முதனிலை இல்லாமல் தொழிற்பெயர் ஆக வந்தது என்று விளக்குவர். அவ்வாறே சண்டை (சண்டையிடு), வேட்டை (வேட்டையாடு) முதலியனவும் கொள்ளலாம். பொருள் செயல்வகை என்ற தொடரில் பொருள் செய்யும் வகை என்பதால் தொழிற்பெயர் பெயரெச்சமாக வந்துள்ளது.

மெய்யீறு எல்லாம் புள்ளியொடு நிலையல் (தொல் : 104) என்ற தொடரில் 'நிலையல்' என்ற தொழிற்பெயர் வினை முற்றாக வந்துள்ளது.

வியங்கோள் : கிளத்தல் (கிளக்குக) ; ஒரால் (நீக்குக); வாழ்தல் வேண்டும்; பாடன்மார் எமரே; அஞ்சாமை (நான் மணி 27. 1); வாழ்க; வாழிய; வாழியர்.

இச்சூத்திரம் இலக்கணக்கொத்து 71, 72, 85 ஆகிய சூத்திரங்களையும் இலக்கண விளக்கம் 239–ஆம் சூத்திரத்தையும் (வியங்கோள் பற்றியது) தழுவியது.

**பாட விளக்கம்** : 'வேணடும்' (3-வது வரி) என்ற மூல பாடம் 'வேண்டும்' என்று திருத்தப்பட்டுள்ளது.

52 முற்றிலது பிறசொல்நோக் குவதுஎச் சமாகு(ம்);
முடிதல் பெயர் வினையிலாஞ், செய்யெனும்வாய் பாடு
பெற்றுஇறுதிசுட்டதின்எட் டுஒற்றுஅமையத் திரியும்
பெயரெச்சம்; முக்காலம் இடைநிலையாற் காட்டி
மற்றகாம்இ றப்புநிகழ் வுக்குஎதிர் உம்ஈறாய்
வாய்பாடு செய்தசெய்கின் றசெய்யும் எனவே
நற்றொழிற்செய் பொருட்,செய்வோன், நிலங்.கருவி கால
நண்ணி,முடி வாங்காலத் தொகைகுறிப்பாய்ச் செய்யே. (சூ)

**எச்சத்தின் பொது இலக்கணமும் பெயரெச்சமும் விளக்குகின்றது.**

**உரை :** முற்றாக இல்லாமல் முடிப்பதற்குப் பிறசொல்லை எதிர்பார்ப்பது எச்சமாகும். செய் என்னும் வாய்பாட்டின் இறுதியில் சேய்மைச் சுட்டைக் குறிக்கும் அகரமும் நடுவில் கால இடைநிலையும் எதிர்காலத்திற்கு உம் ஈறும் பெற்று வருவது பெயரெச்சம். அது, செய்த, செய்கின்ற செய்யும் என மூவகை வாய்பாட்டில் வரும். வினை செய்பொருள், வினை முதல் (செய்வோன்), நிலம், கருவி காலம் ஆகியவற்றைக் குறிக்கும் பெயரைக் கொண்டு முடியும்.

**விளக்கம் :**

பெயரெச்சம்

நடந்த நடை — வினை கொண்டு முடிந்தது.

படித்த நூல் — செயப்படுபொருள் (ஒருவர் நூலைப் படித்தார்)

படித்த ஆசிரியர் — வினை முதல் (ஆசிரியர் நூலைப் படித்தார்)

படித்த பள்ளி — இடம் (ஒருவர் பள்ளியில் படித்தார்)

படித்த ஆண்டு — காலம் (ஒருவர் [இந்த] ஆண்டில் படித்தார்

படித்த கண்ணாடி — கருவி (ஒருவர் கண்ணாடியால் படித்தார்)

பெயரெச்சத்திற்கும் பெயருக்கும் உள்ள இலக்கண உறவே அதாவது அடிப்படை வாக்கியத்தில் அமைந்த இலக்கண உறவே பெயரெச்சத்தைக் கொண்டு முடியும் பெயரின் பண்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

செய்த என்ற பெயரெச்ச வாய்பாட்டில் இறுதி அகரத்தைப் பெயரெச்ச விகுதி என்பர் மொழியியலார். இவர் சேய்மைச்சுட்டு என்பது புதுமையானது.

**பாட விளக்கம் :** 'மற்றகாம்' (3-வது வரி) என்ற தொடர் விளங்கவில்லை.

53\. செய்து,செய்பு செய்யா,செய் யூ,இறப்பும்; செய்யச்,
செய்யிய,செய் யியர்வான்,பான் பாக்கு,எதிர்வுங்; காலம்
எய்திவினை, வரின்முடியும் வினையெச்சம்; அன்றி
இன்றிஏலால் காணுமாயின் இவ்வே யும்மே.
மெய்தெரிபேர்ப் பயனிலைதீர் உருபுஇவைபோற் பிறவும்
வினையெஞ்சி லக்குறிப்பா குஞ்;சினைதம் மோடுங்
கொய்தமுத லொடுமா (ம்); முற்றெச்சமுமாம்;
வினைச்சொற் கூட்டமள விலை ஐந்தின் அடக்குவதாம்
உரித்தே. (எ)

**இது வினையெச்சம் கூறுகின்றது.**

**உரை :** செய்து, செய்பு, செய்யா, செய்யூ ஆகிய வாய்பாட்டு வினையெச்சங்கள் இறந்த காலத்தையும், செய்ய செய்யிய, செய்யியர் செய்வான், உணபான், செய்பாக்கு ஆகிய வாய்பாட்டு எச்சங்கள் எதிர்காலத்தையும் காட்டும். வினை கொண்டு முடிவது வினையெச்சமாகும். அன்றி இன்றி, ஏல், ஆல் முதலியனவும் வினையெச்சத்தின் தன்மையைப் பெறும். சினைவினை சினையோடு மட்டுமின்றி முதலோடும் வந்து முடியும். வினைமுற்று வினையெச்சமாகவும் வரும். வினைச்சொற்களின் தொடர்நிலை பண்புக்கு அளவு கிடையாது. அவற்றை மேலே குறிப்பிட்ட முதனிலை, தொழிற் பெயர், வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் என்ற ஐந்து வகைக்குள் அடக்கி விளக்கலாம்.

**விளக்கம் :**

| | | |
|---|---|---|
| உண்டு வருவான் | | — செய்து |
| பச்சிலை இடை இடுபு தொடுத்த (புறம். 33) | | — செய்பு |
| கல்லாக் கழிப்பர் (கல்லாமல் கழிப்பர்) | | — செய்யா |
| காணூ மகிழ்ந்தான் (கண்டு மகிழ்ந்தான்) | | — செய்யூ |
| காண வந்தான் | (காண்பதற்கு வந்தான்) | — செய்ய |
| காணிய வந்தான் | | — செய்யிய |
| காணியர் வந்தான் | | — செய்யியர் |

கொல்வான் வந்தான் (கொல்வதற்கு வந்தான்) —வான்
உண்பான் வந்தான் (உண்பதற்கு வந்தான்) — பான்
உண்பாக்கு வந்தான் ,, — பாக்கு
அவன் அன்றி ஓரணுவும் அசையாது
(அவன் இல்லாமல் ஒருஅணுவும் அசையாது)— அன்றி
மழை இன்றி நிலம் வறண்டது (மழை
இல்லாமல் நிலம் வறண்டது) — இன்றி
உண்பானேல் பசி தீரும் — ஏல்
உண்ணுமேல் பசி தீரும் (உண்டால் — ஏல்
உண்டால் பசி தீரும் பசி நீங்கும்)— ஆல்

கால் ஒடிந்து விழுந்தான் — சினைவினை முதல் வினையைச் சார்ந்தது. ஏனெனில் ஒடிந்து என்பது கால் என்ற சினையின் தொழிலைக் குறிப்பதால் சினைவினை ஆயிற்று. விழுந்தான் என்பது ஆள் முழுமையும் குறிப்பதால் முதல் வினை ஆயிற்று. கால் ஒடிந்து விழுந்தது — சினைவினை மற்றொரு சினைவினையோடு முடிந்தது விழுந்தது என்பது காலாகிய சினையைக் குறிக்கும்.

கண்டான் வணங்கினான் (கண்டு வணங்கினான்) — வினை முற்று வினையெச்சமாக வந்துள்ளது.

ஒரு சொல் (Part of speech) ஏற்கும் எல்லா விகுதிகளையும் சேர்த்துக் கூறும் தொகுதியை (வா, வருகிறான், வருவான், வந்தான், வராமல், வந்த, வருகிற என்பது வா என்ற வினைச்சொல்லின் அடுக்கு) அடுக்கு (Paradigm) என்பர். சொல்லியல் ஆராய்ச்சியில் சொல்லடுக்கைக் குறிப்பிடும் முறையும் பகுதி விகுதியாகப் பகுத்துக் கூறும் முறையும் உண்டு. வினையெச்சங்களைச் செய்து, செய்பு போன்று அடுக்கு முறையில் முன்னரும் வான், பான், பாக்கு என்று பகுப்பு முறையில் பின்னரும் கூறியுள்ளார்.

இது நன்னூல் 345, 351 ஆகிய இரண்டு சூத்திரத்தையும் இலக்கணவிளக்கம் 246-ஆம் சூத்திர உரையையும்

இலக்கணக்கொத்து 86-ஆம் சூத்திரத்தையும் அடியொற்றியது

'வினைச்சொல் இலக்கணம் விளம்பில் அளவில்லை;
ஆயினும் ஐந்தனுள் அறிந்துஅடக் குகவே'

என்ற இலக்கணக்கொத்துவரிகளையே இறுதிவரி பிரதிபலிக்கின்றது.

# 3. எச்ச மரபு

54. உருபுசாரி யைவிகுதி இடைநிலையே இசைகொள்
ஒப்பசைதத் தம்பொருள்கோள் எழுத்தணவல் ஒன்பான்
கருதியவுந் தனித்தியலா தப்பெயரின் வினையின்
கடைஇடைமுன் னென்றுபல வருதல்இடைச் சொல்லாம்;
வருபொழுது சிலஈறு திரிந்தும்வரும் அவற்றுள்
மறைதேற்றம் பிரிவுஎண்வினா ஈற்றசைஆறு ஏயாம்
தெரிவுமறை யாக்கம்எச்சம் ஐயம்முற் றுஎண்ணுடனே
சிறப்பொடுஉம் மையெட்டாம் வேறுஅசைநிலை மற்றுமே. (க)

***இடைச்சொல்லின் பொது இலக்கணமும் ஏ, உம், மற்று ஆகிய வற்றின் சிறப்பிலக்கணமும் கூறுகின்றது.***

**உரை :** *1. வேற்றுமை உருபுகள், 2. சாரியைகள், 3. வினையில் வரும் விகுதிகள், 4. காலத்தைக்காட்டும் இடைநிலைகள், 5. இசை நிறைத்தற்கு வருவன, 6. உவமை உருபுகள், 7. அசைச்சொற்கள், 8. தத்தமக்குரிய பொருளை உணர்த்தி வருவன, 9. எழுத்தணவல் என்று ஒன்பது வகையாய்த், தனித்து இயங்க முடியாத தன்மை உடையதாய்ப், பெயர்ச்சொல்லுக்கும் வினைச்சொல்லுக்கும் முன்னும் பின்னும் நடுவும் ஒன்றோ பலவோ வருவது இடைச்சொல்லாகும்.*

இடைச்சொற்களின் சில வடிவங்கள் இறுதியில் மாற்றம் பெற்றும் வரும். இடைச்சொற்களில் ஏகார இடைநிலை 1. எதிர்மறை, 2. தெளிவு, 3. பிரிவு, 4. எண், 5. வினா, 6. ஈற்றசை என ஆறுபொருளில் வரும். 'உம்' என்ற இடைச்சொல் 1. எதிர்மறை, 2. தேற்றம், 3. பிரிவு, 4. எண், 5. ஐயம், 6. முற்று, 7. எண், 8. சிறப்பு என்ற எட்டு பொருளையும் 'மற்று' என்ற அசைச்சொல் 1. வேறு, 2. அசைநிலை என்று இரண்டு பொருளையும் உணர்த்தும்.

**விளக்கம்:** ஐ, ஆல், ஓடு என்பன போல்வன வேற்றுமை உருபுகள்.

அன், இன், வற்று போல்வன சாரியைகள்-வண்டினை (வண்டு+இன்+ஐ), அதனால் (அது+அன்+ஆல்),

வி, பி (செய்வி, உண்பி) போன்றவையும் வினைமுற்றில் வரும் அன், (வந்தனன்) ஆன், (வந்தான்) போன்றவையும் விகுதிகள்.

த் (செய்தான்) ட், ற் போன்று இறந்த காலத்தைக் காட்டுவன இடைநிலைகள்.

தனக்கென ஒரு பொருள் இல்லாமல் செய்யுளில் ஓசையை நிறைப்பதற்காக நிற்பது இசைநிறை. 'ஏயே இவள் ஒருத்தி பேடியோ என்றார்' என்ற தொடரில் முதலில் உள்ள ஏகாரம் பொருள் இல்லாமல் இசையை நிறைத்து நிற்கிறது.

போல, புரைய, ஒப்ப போன்றவை உவம உருபுகள் பொருள் இல்லாமல் பெயர்ச்சொல்லையும் வினைச்சொல்லையும் சார்த்திச் சொல்லப்பட்டு நிற்பது (அசைத்தல்=சார்த்துதல்) அசைநிலைகளாகும். 'அது மன் கொண்கன் தேரே' என்ற தொடரில் மன் என்பது பெயரைச் சார்ந்து பொருளில்லாமல் இருப்பதால் அது அசைநிலை ஆகும்.

தமக்கே பொருள் உடையனவாய் வரும் இடைச் சொற்களே 'தத்தம் பொருள்கோள்' என்று குறிப்பிடப்பட்

டுள்ளது. ஏ, ஓ, மன்ற என்பன போன்று கீழே விளக்கும் இடைச்சொற்கள் இவ்வகையைச் சார்ந்தவை.

எழுத்தணவல் என்பது கரம், காரம் போன்ற எழுத்துச் சாரியைகளைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

கடைசியில் வந்தது—அது மன்.

இடைநிலையில் வருவது—கால இடைநிலை, சாரியை போன்றவை. செய்தான் <செய்—த்—ஆன், மரத்தை <மரம்—அத்து—ஐ,

இறுதியில் வருவது வேற்றுமை உருபு, விகுதி போன்றவை—தாளால் < தாள்—ஆல்; செய்தான் < செய் — த்—ஆன்.

ஒன்று வருதல்—கையே : ஏகார மட்டும் ஒன்று வந்தது. பல, வருதல்—சாரியையும் உருபும் சேர்ந்து வருதல்—காலினை < கால்—இன்—ஐ: இடைநிலை, சாரியை, விகுதி ஆகியவையும் சேர்ந்து வரும். நடந்தனன் < நட—ந்த—அன்—அன். தில் என்ற இடைச்சொல் 'தில்ல' என்றும் வருவது ஈறு திரிந்து வருவதற்கு உதாரணமாகும்.

'ஏ' என்ற இடைச்சொல்லின் ஆறு பொருள்கள்:

1. எதிர்மறை: நண்பனே கொண்டான். இங்கு நண்பன் கொள்ளவில்லை என்ற பொருள் தருவதால் எதிர்மறை.

2. தேற்றம்: உண்டே கடவுள். இங்கு உண்டு என்பது ஐயமில்லை என்னும் தெளிவுப் பொருளைத் தருவதால் தேற்றம்.

3. பிரிவு: நூல்களுள் தொல்காப்பியமே சிறந்தது. இங்கு பல நூல்களுள்ளும் தொல்காப்பியத்தைப் பிரித்து நிற்றலால் பிரிவு.

4. எண்: நாலேகால் (நாலும் காலும்)

5. வினா: நீயே வந்தாய் இங்கு நீயா வந்தாய் என்று பொருள் தருவதால் வினா.

6. ஈற்றிசை: ஆசிரியர் வந்தாரே. இங்கு பொருள் இல்லாமல் இறுதியில் அசையாக வந்துள்ளதால் ஈற்றசை.

'உம்' என்ற இடைச்சொல் தரும் எட்டுபொருள்கள்:

1. எதிர்மறை: பிச்சை எடுத்தாலும் கற்க வேண்டும். இங்கு பிச்சை எடுக்கக்கூடாது என்ற பொருள் தருவதால் எதிர்மறை.

2. தெரிவு (தெரிநிலை): நன்றும் அன்று, தீதும் அன்று

3. ஆக்கம்: நல்லவனும் ஆயினன், வல்லவனும் ஆயினன் என்று ஆக்கவினை வந்திருப்பதால் ஆக்க உம்மை.

4. எச்சம்: பட்டமும் பெற்றான் என்பது ஒரு துறையில் அதற்குரிய அறிவும் பெற்றான் என்று பொருள் தருவதால் எச்ச உம்மை.

5. ஐயம்: அவன் வெற்றிபெற்றாலும் பெறுவான் — இங்கே துணிந்து கூறாமையின் ஐய உம்மை.

6. முற்று: பணம் பத்தும் கொடுத்தான் என்பது அவனிடம் இருந்த முழுப்பொருளையும் கொடுத்தான் என்பதால் முற்றும்மை.

7. எண்: இரவும் பகலும் — இங்கு எண்ணுதற்கண் வருதலால் எண்ணும்மை.

8. சிறப்பு: குறவரும் மருளும் குன்று என்பது மலையில் வாழும் குறவர்களே மருட்சி அடையக்கூடிய மலை என்று பொருள்படுவதால் மலையின் சிறப்புப்பெறப்பட்டது.

'மற்று' என்பது தரும்பொருள் இரண்டு:

1. வேறு: இனி மற்று ஒன்று உரை.

2. அசைநிலை: அது மற்று அவலம் கொள்ளாது—இங்கு 'மற்று'என்பதற்கு பொருள் இல்லை.

இடைச்சொல்லைத் தொல்காப்பியமும் இலக்கண விளக்கமும் ஏழுவகையாகவும் நேமிநாதமும் முத்து வீரியமும் ஆறு வகையாகவும் நன்னூலும் தொன்னூல் விளக்கமும் எட்டு வகையாகவும் கொள்ளச் சுவாமிநாதம் மட்டும் ஒன்பது வகையாகக் கொண்டுள்ளது.

நன்னூலில் வினை என்பது கால இடைநிலையையும் பால் விகுதியையும் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதை இவர் விகுதி. இடைநிலை என்று இரண்டாகக் கொண்டார். நன்னூலில் கூறப்பட்ட குறிப்பு (420) என்பது விடப்பட்டு எழுத்துச் சாரியையைத் தனிவகையாகக் கொண்டதால் இடைச்சொல் ஒன்பது வகையாயிற்று.

மொழியின் முன்னும் பின்னும் இடைச்சொல் வரும் என எல்லா ஆசிரியர்களும் சொல்லியிருக்க முன், பின், நடு ஆகிய மூன்று இடத்திலும் வரும் என்று இவர் கூறுகின்றார்.

ஏகாரத்தின் பொருள் ஆறு என்பதும் (தொல்காப்பியம் ஐவகை சொல்: 257) நன்னூலைப் (422) பின்பற்றியது. உம்மையின் பொருள் எட்டு என்பதும் (தொல். சொல். 255, நன். 425) 'மற்று' இரண்டு பொருளில் வரும் என்பதும் (தொல். சொல். 262, இ. வி. 266) நன்னூல் தவிர எல்லா இலக்கணத்திலும் காணப்படுகிறது. நன்னூலார் மட்டும் வினைமாற்று, அசைநிலை, பிறிது (வேறு) என்று மூன்று பொருளில் வரும் என்று குறிப்பிடுகிறார் (433). தொல்காப்பியத்தை (சொல். 251) யொட்டியே ஈறு திரிந்து வரும் என்று கூறியுள்ளார். இவ்வுண்மை நன்னூல், இலக்கணவிளக்கம் ஆகிய நூல்களில் கூறப்பெறவில்லை.

55. ஆக்கம்ஒழிவு அசைகழிவு நான்கு(ம்)மன்னே யாகும்.
ஐயம்அசை இரண்டுகொல்லாம், அசைவியங்கோள் மாவா(ம்)
நீக்க(ம்)மறை அசைதெரிவு பிரிவுவினை ஒழிவு
நிகழ்சிறப்பு எட்டு ஓவர்கும், போகல் ஒன்று, எற்று
ஆகும் என்று என

பாக்குறிப்புஎண் பண்பிசைபேர் வினைஆறு னவாம்
பயமிலைகா லம்பெருமை பயன்நான்குங் கொள்ளுந்
தேக்குஒழிவு காலம்விழை வதுமூன்றுந் தில்லாந்,
தேற்றம்ஒன்றே மன்றவதாம், எளிமை தஞ்சஞ்கேளே. (உ)

**சில இடைச்சொல்லின் சிறப்பிலக்கணம் கூறுகின்றது.**

**உரை:** 'மன்' என்ற இடைச்சொல் 1. ஆக்கம் 2. ஒழியிசை 3. அசைநிலை 4. கழிவு என்ற நான்கு பொருளைத் தரும். 'கொல்' என்பது 1. ஐயம் 2. அசை நிலை என்ற இரண்டு பொருளைத் தரும். 'மா' என்பது வியங்கோளின் கண் வரும் அசைச்சொல்லாம். 1. நீக்கம் 2. எதிர்மறை 3. அசைநிலை 4. தெரிநிலை 5. பிரிநிலை 6. வினா 7. ஒழியிசை 8. சிறப்பு ஆகிய எட்டு பொருளில் 'ஓ' என்ற இடைச்சொல் வரும். 'எற்று' என்பது போகல் என்ற பொருளில் மட்டுமே வரும். 'என்று' 'என' என்ற இரண்டு இடைச்சொற்களும் 1. குறிப்பு 2. எண் 3. பண்பு 4. இசை 5. பெயர் 6. வினை என்ற ஆறு பொருளில் வரும். கொன் என்ற இடைச்சொல் 1. பயம் இல்லாமை 2. காலம் 3. பெருமை 4. பயன் என்ற நான்கு பொருளைத் தரும். 'தில்' என்பது 1. ஒழியிசை 2. காலம் 3. விழைவு என்ற மூன்று பொருளையும் 'மன்ற' என்பது தேற்றப்பொருள் (தெளிவுப் பொருள்) ஒன்றையும் 'தஞ்சம்' என்பது எளிமைப் பொருளையும் தரும் இடைச் சொற்களாம்.

**விளக்கம்:** 'மன்' தரும் பொருள்கள்:

1. ஆக்கம்: பண்டு காடுமன் — இன்று வயல் ஆயிற்று என்று ஆக்கப்பொருளைத் தருவதால் ஆக்கம்.
2. ஒழிவு: கூரியதோர் வாள் மன் — இங்கு வாள் மிக நன்றாக அறுத்தது என்னும் பொருள் தருவதால் ஒழிவு.
3. அசை: அதுமன் கொண்கன் தேரே — இடைச்சொல்லுக்குப் பொருள் இல்லாமையால் அசை.

4. கழிவு: சிறியகட் பெறினே எமக்கு ஈயுமன்னே (புறம். 235)—அவன் இப்பொழுது இறந்ததனல் எமக்குக் கொடுத்தல் கழிந்தது என்னும் பொருளைத் தருவதால் கழிவு.

'கொல்' தரும் பொருள்கள் :

1. ஐயம்: இவ்வுரு குற்றி கொல்! மகன் கொல்!—குற்றியோ மகனோ என்னும் பொருளைத் தருவதால் ஐயம்.

2 அசைநிலை: 'என்நோற்றான் கொல் எனும் சொல்' (குறள். 70) — பொருள் இல்லாமல் சார்ந்தப் பட்டிருப்பதால் அசைநிலை.

'மா' தரும் பொருள்:

1. அசைநிலை: உப்பின்று புற்கை உண்கமா கொற்கை யானே — உப்பில்லாமல் புல்லரிசி உணவை உண்பாயாக. இங்கு 'மா' வியங்கோளை அடுத்து அசைநிலையாக உள்ளது.

'ஓ' தரும் பொருள்கள்:

1. நீக்கம்: (பிரிநிலை) இவனோ கொண்டான் — இது பலருள் நின்றும் ஒருவனைப் பிரித்து நிற்பதால் பிரிநிலை,

2. எதிர்மறை: அவனோ கொண்டான்—அவன் கொண்டிலன் என எதிர்மறைப் பொருளைத் தருவதால் எதிர்மறை.

3. அசை : 'காணிய வம்மினோ' — காண வாருங்கள். இங்குப் பொருள் இல்லாமல் வந்துள்ளதால் அசை.

4. தெரி (தெரிநிலை) : ஆணோ? அதுவுமன்று பெண்ணோ? அதுவுமன்று — இங்கு அத்தன்மை இல்லாமையைத் தெரிவிப்பதால் தெரிநிலை.

5. பிரி (பிரிநிலை): இவனே கொண்டான் — இங்கு பலரி லிருந்து ஒருவனைப் பிரித்துச் சுட்டுதலால் பிரிநிலை.

6. வினா: குற்றியோ மகனோ — என்பது குற்றியா மகனா என வினாப்பொருளைத் தருவதால் வினா.

7. ஒழிவு (ஒழியிசை): படிக்கவோ வந்தாய் — இங்கே படிப்பதற்கு வரவில்லை; விளையாடுவதற்கு வந்தாய் என ஒழிந்த சொற்களைத் தருவதால் ஒழியிசை.

8. சிறப்பு: ஓஒ பெரியன் — இங்கு ஒருவனது பெருமையை விளக்குவதால் உயர்வு சிறப்பு என்றும்

ஓஒ கொடியன் — இங்கு ஒருவனது கொடுமையை விளக்குவதால் இழிவு சிறப்பு என்றும் பிரித்துப்பேசுவர்.

எற்று: போகல். எற்று என் உடம்பின் எழில் நலம்- இங்கு என் நலம் இழிந்தது என்று பொருள்படும்.

என்று/ என தரும் பொருள்கள்:

1. குறிப்பு: விண்ணென்று தெரிக்கிறது.
விண்ணெனத் தெரிக்கிறது.

2. எண்: நிலன் என்று நீர் என்று தீயென்று வளி யென்று வான் என்று ஐந்து பூதங்கள்.
நிலன் என நீர்எனத் தீயென வளியென வான் என ஐந்து பூதங்கள்.

3. இசை: ஒல்லென்று ஒலித்தது.
ஒல்லென ஒலித்தது.

4. பண்பு: வெள்ளென்று வெளுத்தது.
வெள்ளென வெளுத்தது.

5. பெயர்: பாரி என்று ஒரு அரசன்.
பாரியென ஒரு அரசன்.

6. வினை: வருவான் என்று கூறினேன்.
வருவான் எனக் கூறினேன்.

'கொன்' தரும் பொருள்கள்:

1. பயமிலி: கொன்னே கழிந்தன்று இளமை (நாலடியார் 55.1)—இளமை பயம் இல்லாமல் கழிந்தது. எனவே இது பயம் இன்மை பொருள்.

2. காலம்: கொன்வரல் வாடை-காதலர் நீங்கியகாலம் அறிந்து வருதலை உடைய வாடை என்ற பொருள் தருவதால் காலப் பொருள்.

3. பெருமை: 'கொன்னூர் துஞ்சினும்' (குறுந் 138) பெரிய ஊர் தூங்கினாலும்' என்ற பொருள் தருவதால் பெருமைப் பொருள்.

4. பயன் இல்லாமை: கொன்னே கழிந்தன்று இளமை— இளமை பயன் இல்லாமல் கழிந்தது.

'தில்' தரும் பொருள்கள்:

1. ஒழிவு: 'வருகத்தில் அம்ம எஞ் சேரி சேர' (அகம்.276.7) – வந்தால் ஒன்று செய்வேன் என்னும் ஒழிந்த சொற்பொருளைத் தருவதால் ஒழியிசை.

2. காலம்: 'பெற்றாங்கு, அறிகதில் அம்ம இவ்வூரே (குறுந்.14)—பெற்றகாலத்தை அறிக எனக் காலத்தை உணர்த்துவதால் காலம்.

3. விழைவு: 'அரிவையைப் பெறுகதில் அம்ம யானே' (குறுந்.14)
அரிவையைப் பெருதல் விருப்பத்தை உணர்த்துவதால் விழைவு.

மன்ற: — தேற்றம்: 'மடவை மன்ற வாழிய முருக' (நற். 34.11) – 'திண்ணமாக நீ அறியாமையை உடையை–தெளிவுப்பொருள்.

தஞ்சம்: எளிமை: 'முரசு கெழுதாயத்து அரசே தஞ்சம் (புறம் 73.3)—அரசு கொடுத்தல் எளிது–எளிமைப் பொருள்.

நன்னூலில் சொல்லப்படாத 'எற்று' 'மன்ற' தஞ்சம் போன்ற இடைச்சொற்கள் இங்குக் கூறப்பட்டுள்ளதால் எல்லா இடைச்சொற்களும் இலக்கண விளக்கத்தைப் பின்பற்றி [மன் (இ.வி.262); கொல் (இ.வி,269), மா (இ.வி,275) ஓ (இ.வி 253), எற்று (இ வி 263), என்று, என (இ.வி 255) கொன் (இ.வி 265), தில் (இ.வி 264), மன்ற (இ வி 270) தஞ்சம் (இ.வி 271)] எழுதப்பட்டுள்ளதாகக் கூறலாம்.

**பாட விளக்கம்:** 'பண்மிசை' (3வது வரி) என்று மூலப் பிரதியில் இருந்தது 'பண்பிசை' என்று திருத்திக் கொள்ளப் பட்டுள்ளது.

56. கேள்வியசை அம்ம;வொடுத் தெய்யிசை யிலேயாங்;
கிளரும்அசை நிலே,அந்தில் ஆங்குஇடமு மாகு(ம்);
மாள,மியா, மதி,இக,மோ, அத்தை,இத்தை, யாழ
வாழிய,வீ யும்,சின்,பிற பிறக்கு,அ ரோப்,போ,
கோள்,இருந்திட்டு,அன்ருந் தந்,தான் என்ஞல் என்ப,
குரை,ஓர் போல், யா,கா,மாது, இகுஞ் சின்,முதலியவே
ஆளும் அசைநிலேகள்; இசைநிலேயும் பேர்,விணேயும்,
அளபுஇரக்கந், திரிபடுக்கும் குறிப்புமாய்ப் பணியே. [௩]

**சில இடைச்சொற்களுக்குச் சிறப்பிலக்கணம் கூறுகின்றது.**

'அம்ம' என்ற இடைச்சொல், 1. ஒருவனே ஒன்று கேள் என்ற பொருளிலும், 2. அசைநிலேப் பொருளிலும் வரும். 'ஒடு' 'தெய்ய' ஆகிய இரண்டும் இசைநிறைப் பொருளிலும்; 'ஆங்கு' என்பது அசைநிலேப் பொருளிலும்; அந்தில் என்பது 1. அசைநிலேயோடு 2. இடப்பொருளிலும் வரும். மாள, மியா, மதி,இக, மோ, அத்தை, இத்தை, யாழ, வாழிய, ஈ, சின், பிற, பிறக்கு, அரோ, போ, கோள், இருந்து, இட்டு, அன்று, ஆம், தம், தான், என். ஆல், என்ப, குரை, போல், யா, கா, மாது, இகும்,சின் முதலியன அசைநிலேகள். இவை இசை நிறைக்க பெயரோடும் விணேயோடும் வரும்.

**விளக்கம்:** அம்ம:

1 ஏவல்-அம்ம வாழி தோழி (நற். 158.1) — தோழீ! வாழி! யான் கூறுகின்ற இதனைக் கேட்பாயாக என்ற பொருள் தருவதால் ஏவல் பொருள்.

2 அசைநிலை: 'பயனின்று மன்று அம்ம காமம்' (கலி. 142.3)

ஒடு: இசைநிறை—'விதைக்குறு வட்டி போதொடு பொதுள, (குறுந். 155.1)

தெய்ய: உதுக்காண் தெய்ய உள்ளல் வேண்டும்' (குறுந். 81.4)

அந்தில்: 1. அசைநிலை: 'அந்திற், கழலினன், கச்சினன்' (அகம் 76. 6)

2. இடப்பொருள்: 'வருமே சேயிழை அந்திற் கொழுநற் காணிய' (குறுந். 293.7) தலைவி—கணவனைக்காண அந்த இடத்துக்கு வரும்.

ஆங்கு : ஆங்குத் திறனல்ல யாழ்கழற—அசைநிலை.

மாள : சிறிது தவிர்ந்து ஈக மாளநின் பரிசிலர் உய்ம்மார்.

மியா : செழுந்தழையன் சென்மியா சென்று.

மதி : சென்மதி பெரும. (அகம் 46. 16)

இக : கண்பனி ஆன்றிக வென்றி தோழி.

மோ : கண்டது மொழிமோ. (குறுந். 2.2)

அத்தை: செலியர் அத்தை நின் வெகுளி. (புறம். 6)

இத்தை: நீ ஒன்று பாடித்தை. (கலி 40. 10)

யாழ : நீயே செய்வினை மருங்கிற் செலவு அயர்ந்தியாழ. (கலி. 7)

வாழிய : காணிய வாழி மலைச்சாரல்.

ஈ : சென்றீ பெரும.

சின் : வென்றிசின் யானும். (நற் 61. 10)

பிற : ஆயனை அல்ல பிற.

பிறக்கு : நகை பிறக்கு ஒழிய. (புறம் 140. 4)

அரோ : இருங்குயில் ஆலுமரோ (கலி. 33. 24)

போ : பிரியின் வாழாது என்போ.

கோள் :

இருந்து: எழுந்திருந்தேன். (எழுந்து + இருந்து + ஏன்)

இட்டு : நெஞ்சம் பிளந்திட்டு.

அன்று : தேவன் அவன் சேவடி சேர்ந்து மன்றே. (சீவக. 1.4)

ஆம் : பணியுமாம் என்றும் பெருமை. (குறள் 978)

தம் : தாவில் சீர்தம் மடிக்கண்.

தான் : நீதான்.

என : இறுவுழி இறுகவென.

என்ப : இழிந்தது என்பவே. (சீவக. 39. 4)

குரை : பலகுரைத்துன்பங்கள். (குறள். 1045)

ஓர் : அஞ்சுவதோரும் மறனே. (குறள் 366)

போல் : மங்கலம் என்பதோர் ஊர் உண்டு போலும்.

யா : யா பன்னிருவர் மாணாக்கர் அகத்தியனுருக்கு.

கா : காண்டிகா. (கலி. 99. 9).

மாது : விளிந்தன்று மாது அவர் தெளிந்த என் நெஞ்சே. (நற். 178. 10)

இகும் : காண்டிகும் அல்லமோ. (ஐங்குறு 121.1)

சின் : தண்ணென்றிசினே. (ஐங்குறு 73.4)
சின் என்பது இரண்டு இடத்தில் சொல்லப்பட்டுள்ளது.

இந்தச் சூத்திரமும் இலக்கண விளக்கம் 274, 272, 273, 276, 277 ஆகிய சூத்திரங்களையொட்டியே அமைக்கப்பட்டுள்ளது.

57. பண்பான வடிவு, அளவு, நிறங், காட்சி, கருத்தாய்ப்
பகர் உரித்தாய்ப் பெயர் வினை போன்றவைக்கடியாய் முன்பின்
என் பாலினின்று உணரா உணர்த்தி உணர்த்தலிற்சார்ந்
தொருசொல் பலபொருட் பலசொல் ஒருபொருளாம் உரிச்சொல்;

என்பாவின இருபாலும் இணங்கிட விகாரத்
தியன்று பொருள் அமைவுசெயும்; பிறிது எனினும் பொருளா
நண்பாண்மை யுறும்; பொருட்குப் பொருள் தெரியின் மிகவா(ம்);
நன்மதுரங் கொழித்திருக்கு நயப்பிடை வாய்த்திடுமே. (௬)

*உரிச்சொல் இலக்கணம் கூறுகின்றது.*

**உரை :** *வடிவு, அளவு, நிறம், காட்சி, கருத்து முதலிய பண்புகளை உடையதாகியும் அவற்றிற்கு உரியதாகியும் பெயர்ச் சொல்லையும் வினைச்சொல்லையும் போன்று தம்மை உணர்த்தியும் வேறு பொருளை உணர்த்தியும் பெயருக்கும் வினைக்கும் முதனிலையாகவும் அவற்றின் முன்னும் பின்னும் நின்று, அறியப் படாத சொற்களை அறியப்பட்ட சொற்களோடு சேர்த்து உணர்த்தப்படும் தன்மையதாகியும் ஒரு சொல்லுக்கு ஒரு பொருளும் ஒரு பொருளுக்குப் பல சொல்லும் உரியதுமாயும் வருவன உரிச்சொல்.*

*செய்யுளில் இருபாலும் பொருந்தவும் குறைச்சொல்லாக வும் ஆகி பொருள் அமைந்து இருக்கும். எல்லாச்சொல்லும் பொருள் வேறு உடையதாகவும் ஆகும். ஒரு சொல்லுக்குரிய பொருளை மற்றொரு சொல்லாலும் அப்பொருளினை வேறொரு சொல்லாலும் சொல்லிக் கொண்டே சென்றால் வரம்பு இல்லாமல் மிகும்.*

**விளக்கம்**

*நனி என்ற உரிச்சொல் மிகுதிப்பொருள் உடையது. இவ்வாறு எல்லா உரிச்சொற்கும் பொருள் உண்டு.*

*கறுப்பு என்ற பெயர் கறு என்ற உரிச்சொல் அடியாகப் பிறந்தது.*

துவைக்கும் என்ற வினைச்சொல் துவை என்ற உரிச் சொல்லடியாய்ப் பிறந்தது.

நனி பேதை — பெயர்க்கு முன் வந்தது.

நனி தின்றான் — வினைக்கு முன் வந்தது.

'கரும்புனல் சாஅய்' (நெடுநல். 18) —இங்கு புனல் என்ற பெயர்ச்சொல்லிற்குப் பின் சாய் என்ற உரிச்சொல் வந்தது.

(ஓய்தல், ஆய்தல் நிழத்தல் சாய்தல் உள்ளதன் நுணுக்கம் இ.வி. 281.)

'வியன் மார்பன் அணங்கிய செல்லல்' (அகம்.22.3)—இங்கு அணங்கிய என்ற பெயரெச்சம் 'செல்லல்' என்ற உரிச்சொல்லுக்கு முன்வந்தது (செல்லல் இன்னல் இன்னாமை செப்பலும் இ.வி 281 3) ஒரு சொல் பலபொருள்: கடி என்ற சொல் வரைவு, கூர்மை, காப்பு, புதுமை போன்று பல பொருள் உடையது (தொல். சொல். 38.3). ஒரு பொருளுக்குப் பல சொல் : மிகுதிப் பொருள் உறு, தவ, நனி போன்று பல சொல்லால் உணர்த்தப்படும். (தொல் சொல் 299).

இச்சூத்திரம் நன்னூல் 454, இலக்கண விளக்கம் 280, 291 (தொல், சொல். 391) ஆகியவற்றைத் தழுவியது. நன்னூலில் குறிப்பிடாத, பெயருக்கும் வினைக்கும் அடிச்சொல்லாக உரிச்சொல் வரும் என்ற கருத்து இலக்கண விளக்கத்தில் (280.2) பேசப்படுவது இங்கு கூறப்பட்டுள்ளது.

தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் சொல்லின் கருவாக அமையும் அடிச்சொல்லையே உரிச்சொல் குறிக்கின்றது என்று கருதுவதும் இக் கருத்திற்கு அரண் செய்கின்றது. (**இலக்கண ஆய்வுக் கட்டுரைகள்-1** 'உரிச்சொல்' பக்கம் 123)

58. வாய்த்த திணை,பால், இடமே, காலம், வினச், செப்பு,
மரபும், வழாஅது ஓம்புக; வழீஇயவழியமைக்க
வாய்த்த திணை, பால்களிலே ஐயவே முற்ருற் பொதுச்சொல்
அறைந்திடுக; துணிவில் அன்மை மொழிக, இருதிணையில்
ஏத்திறுதி கொடுபொருள் ஆறினும் ஏற்கமுடிப்பார்,
இழிபு, சொன் நோக்கு, உயர்பு (உ)வகை, சினம், சிறப்பு
ஆறினிலும்
வேய்தத்திணை பால்வழுவும் வழுவிலாந் திணைபால்
விரவில் எண்.பேர், சிறப்பு.இழிபு, மிகவில்ஒரு முடிவே. (ரு)

***வழு. வழுவமைதி ஆகியவற்றின் பொது இலக்கணமும் திணைவழுவும் விளக்குகின்றது.***

**உரை:** *ஒருசொல்லுக்கு அமைந்த 1. திணை, 2. பால், 3. இடம், 4. காலம், 5. வினை, 6. விடை, 7. மரபு ஆகிய ஏழும் வழுவாமல் பாதுகாக்க வேண்டும். ஒரோவழி வழுவிய இடத்து வழுஅமைத்துக் கொள்ள வேண்டும்.*

*ஒரு சொல்லுக்குரிய திணைபற்றியும் பால்பற்றியும் ஐயம் ஏற்பட்டால் அவற்றிற்குரிய பொதுச்சொல்லால் கூறவேண்டும். ஐயம் ஏற்பட்டுத் திணை இன்னது, பால் இன்னது என்று துணிந்தபோது துணிந்த பொருள்மேல் அல்லாத தன்மையை வைத்துச் சொல்ல வேண்டும்*

*உயர்திணை எழுவாயைத் தொடர்ந்த பொருள், இடம் காலம், குணம், தொழில், சினை ஆகிய அஃறிணைப்பொருள் ஆறும் உயர்திணையோடு சேர்ந்து முடிக்கின் அந்த உயர் திணை முடிபாகும்*

*1. பழிப்பினுலும் 2. சொல் நோக்கத்தாலும் 3. கோபத்தினுலும் 4. மேன்மையினுலும் 5. மகிழ்ச்சியினுலும் 6. சிறப்பினுலும் பாலும் திணையும் வழுவி வந்தாலும் தவருகக் கருதப்படமாட்டாது.*

*திணைகளும் பால்களும் கலந்து வருமானல் 1. சிறப்பினுலும் 2. இழிவினுலும் 3. மிகுதியினுலும் ஒரு முடிபின ஆகும்*

**விளக்கம்:** பெயர்ச் சொல்லும், கொண்டு முடியும் வினைச் சொல்லும் திணை, பால், இடம், வழு ஏற்படாமல் பாதுகாத்தலாவது.

1. திணை வழு: அவன் வந்தது — உயர்திணைப்பெயரும் அஃறிணை வினையும்

2. பால் வழு: அவன் வந்தாள் — ஆண்பால் பெயரும் பெண்பால் வினையும்

3. இடவழு: நான் வந்தான் — தன்மைப் பெயரும் படர்க்கை வினையும்

4. காலவழு: நேற்று வருவான்

5. வினாவழு: நடந்து வந்தவன் நொண்டியா?

6. விடைவழு: உண்டாயா என்ற வினாவிற்கு நீர்ஊக்குப் போகிறேன் என்ற பதில்

7. மரபு வழு: மரவேலை செய்பவனைக் கொல்லன் என்பது

குற்றியா மகனா என்ற திணை ஐயம் ஏற்பட்டால் குற்றியா மகனா அங்கே தோன்றுகின்ற உருவம் என்று பொதுச் சொல்லான 'உருவம்' என்பது சேர்த்துச்சொல்ல வேண்டும். ஆண்மகனோ பெண்மகளோ என்று பால் ஐயம் தோன்றிய போது ஆண்மகனோ பெண் மகளோ அங்கே தோன்றுகின்றவர் என்ற பொது வினைமுற்றுச் சொல்லால் கூறவேண்டும்.

ஐயம் ஏற்பட்டுத் தெளிந்தபோது குற்றி என்று தெரிந்து கொண்டால் மகன் அன்று என்று கூறவேண்டும்.

உயர்திணை எழுவாயைத் தொடர்ந்த அஃறிணைப் பொருள்கள் உயர்திணையோடு சேர்ந்து முடியும்போது உயர் திணை முடிபு பெறல்.

1. பொருள்: நம்பி பொன் பெரியன்

2. இடம்: நம்பி நாடு பெரியன்

3. காலம்: நம்பி வாழ்நாள் பெரியன்

4. சினை: நம்பி மூக்குக் கூரியன்

5. குணம்: நம்பி குடிமை நல்லன்

6. தொழில்: நம்பி நடை கடியன்

திணைபால் வழுவி வருதல்:

1. இழிவு : 'ஏவவும் செய்யலான், தான் தேருன்
அவ்வுயிர் போஒ மளவுமோர் நோய்'
(குறள் 848)

இங்கு 'தான் தேருன்' என்ற உயர்திணை இழிவு காரணமாக 'அவ்வுயிர்' என்ற அஃறிணையோடு மயங்கியது.

2. சொல்நோக்கு: அரசு வந்தது. இங்கு அரசு என்பது அரசன் என்று பொருள்பட்டு உயர்திணையைக் குறித்தாலும் சொல் நிலையில் அஃறிணையாக இருப்பதால் அஃறிணை முடிபை ஏற்றுள்ளது. எனவே இங்கு உயர்திணையும் அஃறிணையும் மயங்கியது.

3. கோபம்: அவன் தந்தை வந்தது. சொல்லுவோனின் கோபத்தினுல் தந்தை என்ற உயர்திணைச் சொல் அஃறிணை முடிவு பெற்று மயங்கியது.

4, உயர்பு (மேன்மை): ஒருவர் வந்தார். இங்கு உயர்வினுல் ஒருமையும் (எழுவாய்) பன்மையும் (பயனிலை) மயங்கியது.

5. உவகை (மகிழ்ச்சி): தன் புதல்வனை என் அம்மை வந்தாள் என்பது மகிழ்ச்சியினுல் ஆண்பால் பெண்பாலாயிற்று.

6. சிறப்பு : கண்போலச் சிறந்தவனை, 'என் கண் வந்தது' என்பது சிறப்பினுல் உயர்திணை அஃறிணையாய் மயங்கியது.

திணையும் பாலும் கலந்து வரும் தொடர்கள் முடிவு பெறுதல்.

1. சிறப்பு : 'திங்களும் சான்றோரும் ஒப்பர்' என்று அஃறிணையும் (திங்கள்) உயர்திணையும் (சான்றோர்) கலந்து திங்கள் சிறப்பு உடையதால் உயர்திணை முடிபே பெற்றது.

2. இழிவு : 'வடுகர், அருவாளர், வான் கருநாடர், சுடுகாடு, பேய், எருமை என்று இவை யாறும்'—இங்கு வடுகர் முதலிய உயர் திணைப் பெயர்கள் சுடுகாடு முதலிய அஃறிணைப் பெயர்களோடு கலந்து இழிவு காரணமாக 'இவை' என்று அஃறிணைச் சொல்லால் குறிக்கப்பெற்றுள்ளது.

3. மிகுதி : 'பார்ப்பார், தவரே சுமந்தார், பிணிப் பட்டார், மூத்தார், இளையார், பசுப் பெண்டிர், என்று இவர்கட்கு'—இங்கு பசு என்ற ஒரு அஃறிணைச் சொல்லும் பார்ப்பார் முதலியன உயர்திணைச் சொல்லும் கலந்திருந்தாலும் உயர்திணைச் சொற்கள் மிகுதியாக இருப்பதனல் 'இவர்' என்று உயர்திணைச் சொல்லாற் குறிக்கப்பட்டுள்ளது.

இது நன்னூல் 375, 376, 378, ஆகிய சூத்திரங்களோடு ஒத்தது; ஆனால் இலக்கண விளக்கம் 295, 296, 297, 298, 299, ஆகிய சூத்திரங்களைத் தழுவியது. ஏனெனில் நன்னூலார் திணை-பால் வழுவிற்கு உவப்பு, உயர்வு, சிறப்பு, செறல், இழிவு, என்ற ஐந்து காரணம் (379) கூற இலக்கண விளக்கத்தார் சொன்னேக்கு' என்ற மற்றென்றையும் சேர்த்துக் கூறிய தனையே (இ.வி 299) இவர் பின்பற்றியுள்ளார்.

**பாட விளக்கம்:** மூலத்தில் (4வது வரி) திணையால் (விரவில்) என்று இருந்த பாடம் 'திணைபால்' என்று திருத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

59. ஒருமைபன்மை யாய்,பன்மை ஒருமையாய் உழற்வாம்;
ஓரிடமே பலவிடமுந் தழுவல்வழு விலவாந்;
தரும்இறப்பு, நிகழ்வு,எதிர்வில் எதிர்வுமுக் காலமுமே
தழுவுமுக் காலப்பொருளு நிகழ்ச்சியினுந் தோன்றும்;
பொருளினது புடைபெயர்ச்சி நிகழ்காலம் என்பார்;
புகலும்வினைக் குறை,நிகழ்வி னற்இறப்பு,எதிர்வின் முடிப்பார்;
விரைவுஇயல்பு மிகவுதெளி வாற்பிறவார்கால
விதிமூன்றும் ஏற்புழி நின்றுடன் மயங்கும் அறியே. [சூ]

***பால், இடம், காலம் ஆகியவற்றில் ஏற்படும் வழு விளக்கு கின்றது.***

**உரை:** *ஒருமைப்பாலிற் பன்மைப்பாற் சொல்லையும் பன்மைப்பாலில் ஒருமைப்பாற் சொல்லையும் ஓரிடத்திற்குரிய சொல்லைப் பிற இடங்களுக்குரிய சொல்லாலும் தழுவிக் கூறி னலும் தவறு இல்லை.*

*இறப்பு, நிகழ்வு, எதிர்வு, எனக் காலங்கள் மூன்று. மூன்று காலத்திலும் ஒரே தன்மையவாகத் தழுவிச் செல்லும் பொருள்களை நிகழ்காலத்தினல் சொல்லுவார்.*

*பொருளினது புடைபெயர்ச்சி நிகழ்காலம் என்று கூறுவர்.*

*விரைவினலும் இயல்பினலும் மிகுதியினலும் பிற கார ணங்களாலும் மூன்று காலங்களும் ஒன்று மற்றொன்ருகச் சொல்லப்பெறும்.*

**விளக்கம்:** *ஒருமை பன்மை: 'அஃதை தந்தை அண் ணல் யானை அடுபோர்ச்சோழர்' (அகம் 96.12)–தந்தை என்ற ஒருமை எழுவாய் சோழர் என்ற பன்மை பயனிலையை ஏற்றது. பன்மை ஒருமை: இரண்டு கண்ணும் சிவந்தது. தன்மையில் படர்க்கை சேர்த்துச் சொல்லுதல்: 'சாத்தன் தாய் இவண் செய்வலோ'—சாத்தன் தாயாகிய யான் இவை செய் வேன் - என்று பொருள் படுவதால் தன்மையில் சாத்தன்*

தாய் எனப் படர்க்கைச் சொல் சேர்த்துச் சொல்லப்பட்டது.

நெருப்பு சுடும் என்பது மூன்று காலத்துக்கும் பொருந்துவதால் நிகழ்கால வினைச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது,

விரைவு: சாப்பிட்டுக் கொண்டிருப்பவனை யாராவது அவசரமாகக் கூப்பிட்டால் 'சாப்பிட்டேன்' என்பது விரைவு காரணத்தினால் நிகழ்காலம் இறந்தகால விகுதியைப் பெற்றது. சாப்பிடப் போகிறவனும் சாப்பிட்டேன் என்று கூறுவது உண்டு. இங்கு விரைவால் எதிர்காலத்திற்குரிய பதில் இறந்தகாலம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மிகுதி: முயன்று படிப்பவன் முதல் வகுப்பு பெறுகிறான். முயன்று படித்தவன் முதல் வகுப்பு பெற்றான்.

இயல்பும் தெளிவும்: இங்கு இறப்பும் எதிர்வும் நிகழ்காலத்தோடு மயங்கும் முயன்றால் வெற்றி பெறுவாய் — எதிர்காலம் இறப்போடும் நிகழ்வோடும் மயங்கியது.

பிறகாரணம்: சென்ற ஆண்டு தினம் குளிப்பேன்—இறப்பு எதிர் காலத்தில் வந்தது

முற்பகுதி நன்னூல் 380, 382, 383,384ஆம் சூத்திரங்களைத் தழுவியது. அடுத்த பகுதி முத்து வீரியம் 473ஆம் சூத்திரத்தை ஒட்டியது. ('வினைக்கிளவி நிகழ்வு' என்பது). முதற்பகுதிக்குரிய கருத்தை இலக்கண விளக்கம் 300 ஆம் சூத்திரம் கூறினும் காலம் பற்றி இலக்கண விளக்கத்தில் கூறப்படாததால் இச்சூத்திரம் நன்னூலைத் தழுவியது என்றே கொள்ள வேண்டும்.

**பா. வி.** 'தரும் இறப்பு நிகழ்வு எதிர்விலெதிர்வு முக்காலமுமே' என்பதில் (2-வது வரி) எதிர்காலத்தை 'எதிர்வில் எதிர்வு' என்றது பொருத்தமாகப் படவில்லை. எனவே 'எதிர்வில் என்ற சொல்லே மிகையாக எழுதப்பட்டுள்ளதாகக் கொள்ளவேண்டியுள்ளது.

60. அறியாத பொருளை அறி வுறுத்தல்வினு, வதுதான்
அறியாமை ஐயம்இரண் டாம்;அறிவு கொடை,கோள்
இறும்ஏவல் நான்கும்வாய் பாட்டின்வினுஅமை வாமே;
யா, ஆர், யார், யாது, ஓ, ஏ, எவன்கொல், உருவாஞ்;
செறிவினுப்பொரு ளைஅறிவுறுப் பதுசெப்பு; அதுவே
செவ்வன்இறை இறைபயப்பாம்; அவற்றின்இறை பயப்பே
உறுவது, (உ) ற் றீரவினு, ஏவல்,மறுத் திடலே
உடன்படல், சொற்ெறுகுத்துஇறுத்தல் ஏழெனச் சான்றனவே
(எ)

***வினு, விடை ஆகியவற்றை விளக்குகிறது***

*உரை:* *அறியாத பொருளைத் தெரிவிப்பது வினு. அது அறியாமையாலும் ஐயத்தாலும் எழும். 1. அறிபொருளும் 2. கொடுத்தலும், 3. கொள்ளுதலும் 4. ஏவுதலும் ஆகிய நான்கு வாய்பாட்டில் வினு அமையும். யா, ஆர், யார், யாது, ஓ, ஏ, எவன், கொல் ஆகிய வடிவங்களில் வினு நிகழும்.*

*வினுய பொருளை அறிவுறுப்பது விடை. அது 1. செவ்வன் இறை, 2. இறை பயப்பது என இருவகைப்படும். இறைபயப்பது 1. உற்றது உரைத்தல், 2. உறுவது கூறுதல், 3. வினு எதிர்வினவுதல், 4 ஏவுதல் 5. மறுத்தல், 6. ஒத்துக் கொள்ளுதல், 7. சொல் தொகுத்துக் கூறுதல் என்று ஏழு வகைப்படும்.*

**விளக்கம்:**

*1 அறியாமை வினு : இச்சூத்திரத்திற்குப் பொருள் யாது என்று மாணக்கன் கேட்பது.*

*2 ஐய வினு : ஆணு பெண்ணு*

*வினு வாய்பாடு :*

*1 அறிவினு : இச்சூத்திரத்திற்குப் பொருள் யாது என்று ஆசிரியர் கேட்பது*

*2 கொடை வினு : சாத்தனுக்கு ஆடை இல்லையா?*

*3 கோள்வினு : வணிகனிடம் பயிறு இருக்கிறதா?*

4 ஏவல் விறு : சாத்தா உண்டாயோ –(போய்) உண் என்று பொருள்படுவதால் ஏவல் ஆகும்.

விறு வடிவங்கள் ;

யா : யாவன், யாவள் முதலிய சொற்களில் பகுதி.

ஆர் : அங்கு வந்தது ஆர்.

யார் : அங்கு வந்தது யார்.

யாது : இம்மரங்களில் கருங்காலி யாது

ஓ : சாத்தா உண்டாயோ

ஏ : நீயே கொண்டாய்

எவன் : ஏதிலார் சொன்னது எவன் (சிலம்பு 18:15)

கொல் : உண்டான் கொல்

விடையின் வகை:

1. செவ்வன் இறை : உயிர் எத்தன்மைத்து என்ற கேள்விக்கு உணர்தல் தன்மைத்து என்பது — நேரடியாகப் பதில் சொல்வது.

2. இறை பயப்பது : உண்டாயா என்ற கேள்விக்கு வயிறு வலிக்கிறது என்பது-மறைமுகமாகப் பதில் சொல்வத.

இறை பயப்பின் வகை:

உண்டாயா என்ற கேள்விக்கு,

1. உற்றது கூறல்: வயிறு வலித்தது (அதனுல் உண்ணவில்லை)
2. உறுவது கூறல்: வயிறு வலிக்கும் ,,
3. ஏவல் : நீ உண்
4. மறுத்திடல் : உண்ண மாட்டேன்

5. உடன்படல் : உண்டேன்

6. சொல் தொகுத்து உரைத்தல் : பயிறு உள்ளதா என்றால் உழுந்து உள்ளது என்று கூறல்.

இது இலக்கண விளக்கம் 305, 308 ஆகிய சூத்திரங்களை ஒட்டியது. (அதனோடு வினாவிற்குரிய சொல்லையும் விகுதியையும் இங்கு புதிதாகத் தொகுத்துக் கொடுத்துள்ளார்); ஆயினும் இலக்கண விளக்கம் அறிவு, அறியாமை முதலிய ஆறையும் ஒன்று சேர்த்துக் கூறிப் பின்னர் அறிவு, அறியாமை தவிர ஏனைய நான்கும் முதல் இரண்டோடு ஒக்கும் என்பதால் இவர் இரண்டாகக் கொண்டார் போலும்.

61. சான்றவர்எப் பொருளைஎவ் வாறுஉரைப்பர், அந்தபடியே
 தாம்உரைத்தல் மரபாகும்; பொருள்முதல்ஆ றினையும்
 ஏன்றடைசேர் மொழி,இனம்உள் ளதால்குறித்து இல்லதற்கும்
 ஏற்புடைத்து, ஒரோவழியே ஈரிடத்தும் இசைப்பார்;
 போன்று,இயற்கைப் பொருளினையிற் றெனச்சொல்லுஞ்; செயற்கைப்
 பொருள்நிலை யாக்கத்து இசைப்பின், ஆக்கம்முன் காரண
 முன்ஊன்றல்செயுட் காகும்;காரணம்இன்றி யாக்கத்துடன்
 சொல்லும் வழி வழக்கிடத்துள் உளதுமரபடைவே. [அ]

***மரபு பற்றி விளக்கமும் சில மரபு முறையும் விளக்குகின்றது.***

**உரை :** பெரியோர் எந்தப் பொருளை எப்படிக் கூறினார்களோ அதே முறையில் தாமும் உரைத்தல் மரபு. பொருள் முதலாக ஆறனையும் அடையாக அடுத்து வரும் மொழிகள் இனப்பொருளைச் சுட்டியும் இனப்பொருளைச் சுட்டாமலும் ஒரோ இடத்து உலகவழக்கு, செய்யுள் ஆகிய இரண்டு இடத்தும் கூறுவர்.

பொருளின் இயல்பான தன்மையாகக் கூறும்போது 'இற்று' என்ற வாய்பாட்டால் கூறுவர். ஒரு பொருளின் செயற்கைப் பண்பைக் கூறும்போது 'ஆகு' என்ற சொல்லைப்

பயன்படுத்திக் கூறுவர். அந்த 'ஆகு' என்ற சொல்லிற்கு முன் காரணச்சொல்லைக் கூறுதல் செய்யுளில் உண்டு. காரணச் சொல் இல்லாமலும் 'ஆகு' என்ற சொல்லைப் பயன் படுத்துவது வழக்கிடத்து உண்டு.

**விளக்கம்:** மரபு: மரவேலை செய்பவரைத் 'தச்சர்' என்றும் வீடு கட்டுபவரைக் 'கொத்தனர்,' என்றும் கூறுவது மரபு என்பர். இவ்வாறு ஒரு பொருளைக்குறிக்க வழக்கில் வழங்கிவரும் சொல்லைப் பயன்படுத்துவது என்பதே மரபு அடிப்படையில் எழுந்தது என்று கூறலாம்.

செந்தாமரை என்ற அடை எடுத்த மொழி தாமரையில் ஒரு வகையைக் குறிப்பதால் அது இனம் உள்ளது. இதை Restrictive Clause என்பர் மொழியியலார். செஞ்ஞாயிறு என்ற அடையடுத்த மொழி 'ஞாயிற்'றில் ஒருவகையைக் குறிப்பிடாததால் அடை இனத்தைச் சுட்டவில்லை. இதை Non-Restrictive Clause என்பர்.

| | இனம் உள்ளன | இனம் இல்லாதன |
|---|---|---|
| பொருள் : | நெய்க்குடம் | உப்புஅளம் |
| இடம் : | குளநெல் | ஊர் மன்று |
| காலம் : | கார்த்திகை விளக்கு | நாள் அரும்பு |
| சினை : | பூமரம் | இலைமரம் |
| குணம் : | செந்தாமரை | செம்போத்து |
| தொழில் : | ஆடு பாம்பு | தோய்தயிர் |

இயற்கைப் பொருள் : நிலம் வலிது

செயற்கைப்பொருள் : நிலம் மெலிதாயிற்று

செய்யுள் வழக்கு : நீர் கலந்தமையால் நிலம் மெலிதாயிற்று.

செய்யுளில் காரணமின்றி வருதல்

நல்லவை எல்லாந் தீயவாம், தீயவும்
நல்லவாஞ் செல்வம் செயற்கு (குறள். 375)

இங்கு ஆக்கச்சொல் (ஆம்) வந்து காரணக்கிளவி காணப்படவில்லை.

பயிர் நன்றும் (பயிர் நன்றாக இருக்கிறது) என்று உலக வழக்கினும் காரணக்கிளவி இல்லாமல் வரும். தொல்காப்பியமும் (22) அதையொட்டி இலக்கண விளக்கமும் (313) காரணமின்றி ஆக்கக் கிளவி வருதல் என்று மட்டும் சொல்லியுள்ளன. ஆனல் இவர் காரணம் முன்னும் ஆக்கம் பின்னும் செய்யுளுக்குரித்து என்றும் காரணமின்றி வருதல் வழக்கிடத்து வரும் என்றும் உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் பேசுவது புதுமையானது.

இது இலக்கண விளக்கம் 311, 312, 313 ஆகிய மூன்று சூத்திரத்தையும் தழுவியது.

62. அடை,சினை,கண் முதல்ஏற்கும்; ஈரடைகண் முதலே
அடைதலுமாம்; வழக்கினுக்குச், செய்யுளுக்கு ஈரடையா;
நடைசினையிற் செறிதலும்பின் மயங்கலுநன் மரபா (ம்);
நாட்டில்இலாப் பொருள்இனைத்து என்றுஅறிபொருள் இவ்விரண்டும்
இடையும்வினைப் படுதொகுதிக் கட்பொருள் ஆதியினில்
எச்ச(ம்) முற்றும், உம்மைபெறு உங்; குடி, சாதி, நிலம் பண்
புடைமை,தவம், தொழில், சிறப்புக், கல்வி, சினை பழி, ஈய்
வுரிமை; திணைப்பேர்ப் பின் இயற்பெயர் உரைப்பர்
பொருட்கே. (௬௨)

சில மரபுகளை விளக்குகின்றது.

**உரை:** பண்புச்சொல்லும் வினைச்சொல்லும் முதற்சொல்லும்அதே முறையில் தொடர்ந்துவரும். இரண்டு பண்புச்சொல் முதல் சொல்லோடு தொடர்ந்து வருதல் வழக்கிடத்து மரபு.

இரண்டு பண்புச்சொற்கள் சினைச்சொல்லோடு தொடர்தலு முறைமயங்கித்தொடர்தலும் செய்யுளிடத்து மரபு.

உலகத்தில் இல்லாத பொருளைக் குறிக்கும் மொழியை யும், இத்தனை என்று எல்லோரும் அறிந்துள்ள பொருளைக் குறிக்கும் மொழியையும் முடிக்கும் சொல்லோடு கூறும்போதும், பொருளும் இடமும் காலமும் முதலியவற்றோடு சேர்த்துக் கூறும்போதும் முற்றும் எச்சமும் ஆகிய இவ்விரண்டும் உம்மையைச் சேர்த்துச் சொல்லவேண்டும்.

குடி, சாதி, நிலம், பண்பு, உடைமை, தவம், தொழில், சிறப்பு, கல்வி, சினை, திணை முதலியவற்றோடு இயற்பெயர் பொருந்தி வந்தால் அது ஏனையபெயர்களுக்குப் பின்னே வருதல் மரபு.

**விளக்கம் :**

செங்கால் நாரை — பண்புச்சொல்லும் (செம்) சினைச் சொல்லும் (கால்) முதல் சொல்லும் (நாரை) அம்முறையே வந்தன.

சிவந்த பெரிய நாரை: இரண்டு பண்பு (சிவந்த, பெரிய) முதலோடு (நாரை) வந்தது.

சிறிய மெல்லிய இறகு: இரண்டு பண்பு (சிறிய, மெல்லிய) சினையோடு (இறகு) வந்தது.

செவிசெஞ்சேவல்: சினை (செவி) பண்பு (செம்) முதல் (சேவல்) என முறை மாறி வந்தது.

நாட்டில் இலாப்பொருள் : குருடன் பார்ப்பது பகலிலும் இல்லை.

இனைத்தென அறிந்தபொருள் : தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்தார்.

சாதிப்பெயரும் இயற்பெயரும்: பார்ப்பான் நாராயணன்.

நிலப்பெயரும் இயற்பெயரும் : குன்றவன் பாரி

பண்புப்பெயரும் இயற்பெயரும்: அருளாளன் கண்ணன்

உடைமைப்பெயரும் ,, ; நிலக்கிழான் பாரி

தவப் பெயரும் : முனிவன் அகத்தியன்

தொழிற் பெயரும் : ஆசிரியன் தொல்காப்பியன்

இவ்வாறே ஏனைய பெயரோடும் கூறலாம்.

இது இலக்கண விளக்கம் *314, 315, 317* ஆகிய சூத்திரங்களை அடியொற்றியது.

63. பொருள் தோன்றிற் பலபெயர்க்கோர் வினைமுடித்தல் கடனும்
பொதுவினைச் சொல்லால், வேறுஎண் பலவினைச்சொன் முடிப்பார்;
மருவிடம், பேர், இனம், சார்புவினையாற், பல பொருட்கே
வரும் ஒருசொல் இனையதென்பார்; தலைமை, பன்மை சிறப்பால்
இரு திணையிற் பலபொருளை ஒருபெயரால் உரைப்பார்;
இனம்உள பண்பாம் வழக்கில் இலதாம் செய்யுளுக்கே.
ஒரு பெயரால், வினையால், ஆண்பெண்ணை உணர்த்து இசைப்பார்;
உண்டுஎடுத்த வினம் பேசலும் பேசாமையுமே. (ம)

**சில மரபுகளை விளக்குகின்றது.**

**உரை :** ஒரு பொருளைக் குறித்து வரும் பல பெயர்ச் சொற்களுக்கு ஒரு வினைச்சொல்லையே பயனிலையாகக் கொடுக்க வேண்டும்,

வேறு வேறு வினைகளை ஏற்கக்கூடிய ஒரு பொருட் தொகுதியைச் சேர்ந்த பல பெயர்ச் சொற்களுக்குப் பொதுவான சொல்லாலும், அந்தச்சிறப்பு சொற்களாக எண்ணி நிற்கும் பலசொற்களையும் அந்த பொருட்தொகுதிக்குரிய பொது வினையாலும் கூறவேண்டும்.

வினைச் சொல்லாலும், பெயர்ச் சொல்லாலும், இனத்தைக் குறிக்கும் அடைச்சொல்லாலும், வேறுபடுத்தி அறியமுடியாத பல பொருளைக் குறிக்கும் ஒருசொல்லை 'ஆன்னது இது' எனச் சிறப்பாக விதந்து சொல்லவேண்டும்.

உயர்திணைக்கண்ணும், அஃறிணைக்கண்ணும் பல பொருளை உள்ளடக்கி இருக்கும் ஒன்றை அதிலுள்ள தலைமையாக உள்ள பொருள் அடிப்படையிலோ, மிகுதியாக உள்ள பொருள் அடிப்படையிலோ பெயரிட்டு அழைக்க வேண்டும்.

ஒரு பொருளின் இனத்தைக் குறிக்கும் பண்புச் சொல்லைச் செய்யுளில் பயன்படுத்தலாம்.

உயர்திணையில் ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவான சொல் அடுத்துவரும் பெயர்ச்சொல்லாலும் வினைச்சொல்லாலும் ஆண்பாலுக்கே உரியதாகவும் பெண்பாலுக்கே உரியதாகவும் கொள்ளப்படும்.

இனமாகிய பல பொருள்களில் ஒன்றை விதந்து எடுத்துக் கூறினால் அச்சொல் தன் பொருளுக்கு இனமாகிய பிற பொருளை உணர்த்துதலும் உணர்த்தாமையும் உரித்து.

**விளக்கம்:** தொல்காப்பியன், முதல் தமிழ்நூல் ஆசான், மொழியியல் மூதறிஞன் என்று பல பெயர்களும் ஒருவரைக் குறிக்கும் போது ஒருவினையே கொடுக்கவேண்டும.

தொல்காப்பியன், முதல் தமிழ்நூல் ஆசான் மொழியியல் மூதறிஞன் கூறினன்

குழல் ஊதினன், மேளம் கொட்டினன், தாளம் போட்டான் என்ற வெவ்வேறு வினைச் சொற்களை ஏற்கக் கூடிய இசையைக் குறிக்கும் சொற்களைப் பொதுவாகக் கூறும் போது இசைக்கருவிகள் வாசித்தான் என்றும குழலும் மேளமும் என பன்மையாகக் கூறும்போதும் வாசித்தான் என்றும் பொதுவினையால் கூறவேண்டும்.

'மா' என்ற சொல்லை மா வளர்ந்தது என்று வினை கொடுத்துச் சொன்னாலும் அது மாமரத்தையும், விலங்கையும் சுட்டியே நிற்கும். இம்மா நீளம் என்று பெயர்ச் சொல்லோடு வரும்போதும் பெரிய மா என்று அடைச் சொல்லோடு வரும் போதும் வேறுபடுத்தி அறிய முடியவில்லை. எனவே மாமரம் வளர்ந்தது, மாவிலங்கு நீளம் என்பன போல விதந்து சொன்னால் பொருள் தெளிவு ஏற்பட்டுவிடும்.

பலமொழிபேசும் மக்கள் வாழ்ந்தாலும் தமிழ்நாட்டைத் தமிழ்நாடு என்று வழங்குவது தமிழ்மக்கள் பெரும்பான் மையாக (பன்மை பற்றி) வாழும் காரணத்தினாலும் ஆகும். அவ்வாறே தலைமைபற்றி ஏற்பட்டது வைத்தீஸ்வரன் கோவில் எனலாம்.

போரில் மூவர் இறந்தார் என்னும்போது மூவர் என்பது போரில் என்னும் அடுத்து வந்த பெயர்ச்சொல்லால் ஆண் மக்களைக் குறித்தது.

மூவர் போரிட்டார் என்னும்போது வினைச்சொல்லால் ஆண் மக்களைக் குறித்தது.

அரசி மகப்பேறு பெற்ற இடத்து மூவர் இருந்தார் என்னும் போது மகப்பேறு என்னும் பெயர்ச் சொல்லால் மூவர் என்பது பெண் மக்களைக் குறித்தது

முயன்று படிப்பவர் முதல்வகுப்பில் வெற்றிபெறுவர் என்ற சொல் முயன்று படிக்காதவர் வெற்றிபெற மாட்டார் என்ற இனப் பொருளையும் தரும்.

தமிழ் வாழ்க என்று சொல்லும்போது பிறமொழி வீழ்க என்று பொருள் தராது. எனவே இனம் சுட்டவில்லை.

இது இலக்கண விளக்கம் 318, 320, 322 ஆகிய

சூத்திரங்களையும் தொல்காப்பியம் 53 (சொல். 50) ஆம் சூத்திரத்தையும் தழுவியது.

64. பேச்சிரட்டைச் சொல்இரட்டுப் பிரிந்து இசையாதாகும்;
பெயர் வினையின், ன.ள.ர,ய, ஈற்றயலின் அ,ஆ, ஓவாம்;
ஓச்சுருவு ஈரெச்சம் எதிர்மறுக்கினும், பேர்உகர
உருபுபல அடுக்கினு(ம்), முற்று அடுக்கினும், ஈரெச்ச
மூச்சது பல்லடுக்கினும், பொருளது ஒன்றே; முடியு(ம்)
முற்றுருபு, ஈரெச்சம், இடைப்பிற சொலும் வந்துஇயலும்;
வீச்சுருபு எச்சங்கண் முற்றவாய் நிலைப்பெயரும்,
வினையும் உம்மைபெறும், குறித்தோன்கூற்று வினையலுமே. [௬௪]

***மரபுகள் சிலவற்றை விளக்குகின்றது.***

*உரை : இரட்டைக்கிளவி இரட்டித்து நிற்றலிலிருந்து பிரிந்து நிற்கமாட்டாது.*

*பெயர்ச்சொல்லிலும் வினைச்சொல்லிலும் இறுதியில் நிற்கும், னகர, ளகர, ரகர, யகரங்களின் முன்நிற்கும் அகரமும் ஆகாரமும் ஓகாரமாக மாறும்.*

*வேற்றுமை உருபும், பெயரெச்சம், வினையெச்சம் ஆகிய இரண்டு எச்சங்களும், உடன்பாட்டில் கூறாமல் எதிர்மறையில் கூறினும் பொருள் நிலைதிரியா.*

*பல உருபுகள் தம்முள் தொடர்ந்து அடுக்கி வந்தாலும் வினைமுற்றும் பெயரெச்சமும் வினையெச்சமும் பல அடுக்கி வந்தாலும் பொருள் நிலையில் ஒன்றே.*

*முற்று வினைச்சொற்களுக்கும் வேற்றுமை உருபு ஏற்ற சொற்களுக்கும் பெயரெச்ச வினையெச்சச் சொற்களுக்கும் அவை கொண்டு முடியும் பெயர்ச் சொற்களுக்கும் வினைச் சொற்களுக்கும் இடையே பிற சொற்கள் வந்து பொருந்துவதும் உண்டு.*

உருபும், ஈரெச்சங்களும், முற்றுச்சொல்லை விரும்பி ஏற்று முடியும். நிலைப்பெயரும் வினையும் உம்மை பெற்று முடியும்; சூழ்நிலையால் ஒருபொருளை வேறுபடக் குறித்தோன், சொல் சரியாக விளங்கா விட்டால் அதையும் விளக்கிச் சொல்ல வேண்டும்.

**விளக்கம்:** குறுகுறு நடந்து (புறம். 188) என்ற தொடரில் குறுகுறு என்பது குறு என்று தனித்து இயங்காது.

கிழவன் > கிழவோன்
நல்லான் > நல்லோன்
இல்லாள் > இல்லோள்
மறவர் > மறவோர்
அடியார் > அடியோர்
சொன்னாய் > சொன்னோய்

எதிர்மறையில் உருபு : பழத்தைத் தின்னவில்லை.
எதிர்மறையில் பெயரெச்சம் : படிக்காத நூல்.
எதிர்மறையில் வினையெச்சம் : எழுதாமல் இருந்தான்.
உருபு அடுக்கல் : என்னோடும் அவனோடும் பேசினான்.
: சாத்தனுக்கும் கண்ணனுக்கும் கொடுத்தான்.
பெயரெச்ச அடுக்கல் : படிக்காத பேசாத பையன்.
வினையெச்ச அடுக்கு : ஆடிப்பாடி விளையாடினான்.

**இடைப்பிறவரல்**

வேற்றுமைக்குப் பின் : வாளால் வேகமாக வெட்டினான்
பெயரெச்சத்துக்குப் பின் : ஓடிய அழகான பையன்.
வினையெச்சத்துக்குப் பின்: படித்து வெற்றியோடு போனான்.

'உருபு எச்சங்கள் முற்றவாய் நிலைப்பெயரும் வினையும் உம்மை பெறும்' என்பது "இனைத்து என்று அறிபொருள், உலகின் இலாப்பொருள்; வினைப்படு தொகுதிக் கண்ணும் பொருள் முதல்; அவற்றொடு படுத்தற்கண்ணும் முறையே; முற்றும் எச்சமும் ஆயீரும்மையும்; தெற்றெனப் பெறுதல் செவ்விது" என்ற இலக்கண விளக்கத்தை (315) ஒட்டியது போலக் காணப்படினும் பொருள் தெளிவாக விளங்கவில்லை.

இது இலக்கண விளக்கச் சூத்திரங்கள் 331, 326 327, 328, 329, 315, 321 என்ற வரிசையில் தழுவப்பட்டுள்ளது. நன்னூல் இதே கருத்தைக் கூறினும் 396, 353, 354, 356, 394 என்ற வரிசையை மாற்றியதாலும் குறித்தோன் கூற்றம் பற்றி நன்னூலில் சூத்திரம் இல்லாததாலும் இலக்கண விளக்கத்தையே அடிப்படையாகக் கொள்ளவேண்டும். அகர, ஆகாரங்கள் ஒகாரமாக மாறுவது செய்யுளுக்கு மட்டுமே உரியதாக நன்னூலாரும் கூற இவர் செய்யுளுக்கும் வழக்குக்கும் பொதுவாகக் கூறியுள்ளார்.

65. அறை பொதுப்பேர் வினைப்பொதுவை நீக்கிட, மேல்வரும் பேரால்
வினையாற் குறிப்பாற் பால்இடம்திணை காண்குறுமே.
செறிவில் பெயரொடு பெயரும் வினையும் வேற்றுமை ஆதிய
பொருளின் உருபிடை நீங்குற, இரண்டு முதலாத்
துறையின் மொழிதொடர்ந்து, ஒரு சொற் போன்றும் அளப்பரி தாய்த்
தொகுத்தல், தொகைநிலை; விரிக்குங்காற் பிளவும்படுமே.
முறைசொல் வேற்றுமை, உவமை, உம்மை, வினை, பண்பு, அன்
மொழி,என வாருந் தொகை; பின்படு தொகைவேறு ஒன்றே. [௰௨]

**திணை, பால், இடம், ஆகியவை பொதுமை நீங்கு நெறியும் தொகையின் வகையும் விளக்குகின்றது.**

**உரை:** திணை, பால், இடங்களுக்குப் பொதுவாய் நிற்கும் பெயர்ச் சொற்களும் வினைச்சொற்களும் பொதுமையை

நீக்கி ஒன்றற்கு உரியவாக்குவது அவற்றின்மேல் வரும் பெயரும், முற்று வினையும், குறிப்புமே ஆகும்.

பெயர்ச் சொல்லோடு பெயர்ச் சொல்லும் வினைச் சொல்லும் வேற்றுமைப்பொருள் முதலிய பொருளில் புணரும்போது வேற்றுமை உருபும் பிற உருபுகளும் நீங்கி நிற்க இரண்டும் பலவுமாகத் தொடர்ந்து ஒருசொல் போன்ற தன்மை உடையதாய்ப் பிளவுபடாமல் தொகுத்து நிற்பது தொகைநிலை எனப்படும்.

தொகையை விரித்தால் பிளவுபட்டு ஒன்றுக்கு மேற்பட்ட சொல்போல நிற்கும்.

தொகையாவது 1. வேற்றுமைத்தொகை, 2. உவமைத் தொகை, 3. உம்மைத்தொகை, 4. வினைத்தொகை, 5. பண்புத் தொகை, 6. அன்மொழித்தொகை என ஆறு வகைப்படும்.

'படு' என்ற சொல் மேலே கூறிய ஆறு தொகைச் சொற்களோடும் சேர்ந்துவரும்போது அத்தொகைச்சொல் தனிவகையைச் சார்ந்தது.

**விளக்கம்:** சாத்தன் என்பது, உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவானது. சாத்தன் இவன், சாத்தன் இது என்று பின் வரும் பெயராலும் சாத்தன் வந்தான், சாத்தன் வந்தது என்று பின்வரும் வினையாலும் முறையே உயர்திணை, அஃறிணை என்று விளங்கின.

மரம் என்ற பால் பகா அஃறிணைப்பெயர் மரம் வளர்ந்தது, மரம் வளர்ந்தன என்று பின்வரும் வினையால் முறையே அஃறிணை ஒன்றன்பால், அஃறிணைப் பலவின்பால் என்னும் பால் பாகுபாட்டை விளக்கியது.

இது இலக்கண விளக்கம் 333, 334, 335 என்ற சூத்திரங்களையும் இறுதிப்பகுதி இலக்கணக்கொத்து 79 ஆம் சூத்திரத்தையும் தழுவியது.

"அறுதொகை அறைகுவர் அறிவுடையார் பலர்;
படுதொகையொடு தொகை ஏழென்பார் சிலர்"

என்பது இலக்கணக்கொத்துச் சூத்திரம்.

66\. வேற்றுமையின் தொகை உருபின் பொருட்காட்டும்;
உவமையேல்
உருப்பண்பு ஆதிதொக்கு விரிக்கும்; உம்மைத்தொகையின்
கூற்று இரண்டுமுதற் பலபேரிடத்து உம்மை தொகுத்துக்,
குறிக்குநால்வகை யளவைப் பொருள்விரித்துக் காட்டும்;
தூற்று வினைத்தொகை காலத்துஇயலும்; ஐந்தாம்பண்புத்
தொகைஇன்னது இதுவென விசேடம் ஒன்றிற்காட்டும்,
சாற்றுஅன்மொழி, ஐந்தொகை ஈற்று அங்ஙன்வேறு ஒருபேர்
தனைக் காட்டுந்; தொடர்மொழியிற் படுசொலுந்
தொக்குறுமே. [௬௬]

**இது அறுவகைத் தொகையின் இலக்கணம் கூறுகின்றது.**

உரை: *வேற்றுமைத்தொகை அதற்குரிய வேற்றுமை உருபின் பொருளில் வரும். உவமைத் தொகையில் உருவம், பண்பு முதலிய விளக்கும்சொல் மறைந்து நின்று அப்பொருளை விளக்கும். உம்மைத் தொகையாவது இரண்டுக்கு மேற்பட்ட பல பெயர்ச் சொற்களிடத்து உம்மை மறைந்து எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் நான்கு அளவைப் பொருளை விரித்துக்காட்டும். வினைத்தொகை மூன்று காலத்தின் கண் நிகழும். பண்புத்தொகை இன்னது இது என ஒன்றனை ஒன்று விசேடித்து இரண்டு சொல்லும் ஒரு பொருள்மேல் வரும் இயல்பினை உடையது. வேற்றுமைத்தொகை, உம்மைத் தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத் தொகை ஆகியவற்றின் இறுதியில் வேறொரு பெயர் தோன்ற வருமாயின் அன்மொழித்தொகை எனப்படும்.*

இரண்டுக்கு மேற்பட்ட சொற்களில் 'படு' என்னும் சொல் மறைந்து வந்து அப்பொருளைத் தந்தால் படுதொகை எனப்படும்.

விளக்கம் :

| | | |
|---|---|---|
| வேற்றுமைத்தொகை | : | தலைவணங்கினான்—தலையால் வணங்கினான்— மூன்றாம் வேற்றுமை உருபு தொக்கு வந்தது. |
| உவமைத்தொகை | : | பவளவாய்—பவளம் போன்ற வாய். |
| உம்மைத்தொகை | : | கபிலபரணர்—கபிலரும் பரணரும் |
| வினைத்தொகை | : | தின்பண்டம். |
| பண்புத்தொகை | : | செந்தாமரை |
| அன்மொழித்தொகை | : | கருங்குழல் — கருமையான குழலை உடையவள் — பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. |
| படுதொகை | : | பால் கறந்தது — பால் கறக்கப்பட்டது. |

தொகைகளின் இலக்கணம் சற்றுப் புதுமையாக உள்ளது.

67. தொக்குழி இன் மயங்கும் இரண்டாதி ஏழ்வரைக்குஞ்
சொற்பொருளே தொகைப் பொருள்; மூன்று ஒன்றாமற்றாகா;
தக்கிய முன்மொழி பின்மொழி இருமொழி அன்மொழியாய்ச்
சாற்றல் தொகைநிலையா (ம்);முற்று, ஈரெச்சம், பெயரின்
மிக்க உருபேறல், இடை, உரி, அடுக்காதியவே விரிதொகா
நிலைதொடர்தான்; பலதொடர் ஓர் தொடராம்;
எக்கும் அடுக்கு அசைக்கு இரண்டு; எண், பொருணிலை மேன் மூன்றாம்
இசைநிலை நான்கினும் ஆகும், இரண்டு இடத்தும் என்னே.
(௬௪)

***தொகையை விரிக்கும் முறையும் சில தொகாநிலைத் தொடரின் வகைகளும் விளக்குகின்றது.***

மூலத்தில் 'இன்' உருபு உடையதாக இருந்து மறைந்த தொகை, ஒன்றுக்கு மேற்பட்ட பொருளில் வரும். இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை வரை உருபு மறைந்து வந்தால் தொகைச் சொல்லும் விரிதொடரும் ஒரே பொருளைத் தரும். மூன்றும் வேற்றுமையும் முதல் வேற்றுமையும் ஒன்றுகும். தொகைச்சொல்லில் முன்மொழி, பின்மொழி ஆகிய இரண்டு மொழியிலும், உள்ள இரண்டு மொழியில் இல்லாமல் வேறொரு மொழியிலும் பொருள் நிற்கும்.

முற்றுச்சொல், பெயரெச்சம், வினையெச்சம், பெயரில் வேற்றுமை உருபேற்றசொற்கள், இடைச்சொல், உரிச்சொல், அடுக்குமொழி ஆகியவை விரிந்து வருபவை தொகாநிலைத் தொடர்மொழிகளாகும்.

அசைநிலைக்கு இரண்டு சொல்லும் பொருள் நிலைக்கு (அதாவது விரைவுக்கு) இரண்டு சொல்லும் மூன்று சொல்லும் இசைநிலைக்கு இரண்டும் மூன்றும் நான்கும் ஆகச் சொல் லடுக்கி வரும்.

**விளக்கம்:** கடிப்பகை—கடிக்குப் பகை, கடியினது பகை என நான்காம், ஆறும் வேற்றுமையிலும் ஆக இரு பொருளில் மயங்கி வந்தது.

சொற்பொருள் — 1. சொல்லான் அறியப்படும் பொருள் (கருவிபொருள்) 2. சொல்லின் அறியப்படும் பொருள் (ஏதுப் பொருள்) 3. சொற்குப் பொருள் (4-ஆம் வேற்றுமைப் பொருள்) 4. சொல்லது பொருள் (6-ஆம் வேற்றுமைப் பொருள்) 5. சொல்லும் பொருளும் (உம்மைத் தொடர்) 6. சொல்லாகிய பொருள் (பண்புத் தொடர்) 7. சொல்லானது பொருள் என ஏழு பொருள் மயங்கி வந்துள்ளது என்பது தொகைச்சொல்லுக்கு ஏனைய இலக்கண ஆசிரியர்கள் கருத்தை யொட்டித் தரப்படும் விளக்கம். ஆனல் இவருடைய கருத்துப் புதுமையாக உள்ளது.

மூன்றும் வேற்றுமையும் முதல் வேற்றுமையும் ஒன்றாகும் என்றது இரண்டும் கருத்தாப் பொருளில் வரும் என்பதாகும். இராமன் இராவணனைக் கொன்றான். இதில் இராமன் கருத்தா; அது முதல் வேற்றுமையாக வந்துள்ளது.

இராவணன் இராமனால் கொல்லப்பட்டான்—இதில் இராமன் மூன்றும் வேற்றுமைக் கருத்தாப் பொருளில் வந்துள்ளது.

| | | |
|---|---|---|
| முன் மொழியில் பொருள் சிறந்து நிற்றல் | : | வேங்கைப் பூ |
| பின் மொழியில் ,, | : | நீர்க்குவளை |
| இரு மொழியில் ,, | : | இராப்பகல் |
| அன்மொழியில் ,, | : | பொற்றொடி - |

(இது பெண்ணைக்குறிக்கும்போது மட்டுமே)

தொகாநிலை

| | | |
|---|---|---|
| முற்று | : | உண்டான் சாத்தன் |
| பெயரெச்சம் | : | படித்த மாணக்கன் |
| வினையெச்சம் | : | உழைத்து உயர்ந்தான் |

பெயரும் உருபும் ஏற்றசொல் :

| | | | |
|---|---|---|---|
| முதல் | வேற்றுமை | : | உழைப்பு வென்றது |
| 2ஆம் | ,, | : | குறளைக் கற்றான் |
| 3ஆம் | ,, | : | கையால் எழுதினான் |
| 4ஆம் | ,, | : | நண்பனுக்குக் கொடுத்தான் |
| 5ஆம் | ,, | : | ஊரிலிருந்து வந்தான் |
| 6ஆம் | ,, | : | வள்ளுவருடைய நூல் |
| 7ஆம் | ,, | : | பல்கலைக்கழகத்தில் படித்தான் |

இடைச்சொல் தொடர் : மாணவர்களே! படியுங்கள்
உண்மையே பேசு

உரிச்சொல் தொடர் : கடிமணம்

அடுக்கடுக்கு : புலி புலி

அசைநிலை : மற்றோ மற்றோ
அதனாலேயேதான் (இங்கு இரண்டு ஓகாரத்திற்கும் பொருள் இல்லை.)

பொருணிலை : போபோபோ - ஒருசொல் மூன்று முறை அடுக்கி வந்தது.

வருக வருக - இரண்டு முறை அடுக்கி வந்தது.

ஏஎ ஏஎஅம்பல்
மொழிந்தனள்யாயே - இரண்டு முறை அடுக்கி வந்தது.

இசைநிலை : நல்குமே நல்குமே நல்குமே நாமகள்— மூன்று முறை அடுக்கி வந்தது
பாடுகோ, பாடுகோ, பாடுகோ, பாடுகோ — நான்கு முறை அடுக்கி வந்தது.

தொகையில் பொருள் சிறக்கும் இடம் என்று ஏனையோர் சொன்னதை இவர் 'தொகைநிலை' என்று விளக்கினர். ஏனெனில் தொகாநிலைத் தொடர் என்று தொகாத இடங்களைச் சுட்டியதால் தொகையாய் வருவதைத் 'தொகைநிலை' என்றார். இப்பகுதி நேமிநாதம் 64ஆம் சூத்திரத்தைத் தழுவியுள்ளது. ஆனல் அவரும் 'முன்மொழியும் பின்மொழியும் மூண்ட இரு மொழியும் அன்மொழியும் என்றவற்றில் ஆம் பொருள்கள்' என்று குறிப்பிட்டுள்ளார்.

ஏனைய பகுதி, இலக்கண விளக்கம் 345, 346 ஆகிய இரண்டு சூத்திரத்தையும் தழுவியது.

68. என்னும்ஓர்பொருட் பலபேர்பிரி யாஓர்பொரு ளின்;இடும்
பலபேர் சிறப்பின் வழா; செய்யாய் என்மறையே
முன்னிலையிற் செய்யெனவாங்; குறிப்பிசை சொல்லாக
மூன்றுமே குறிப்பெச்சமறை, பிரிவோடு, ஒழிவு
இன்னிசையில் உம்மை, யென, என்னல பெயர்வினையும்பிறிது
இலாது ஏழ்சொல் எச்சம்; எச்சமிதில் எட்டு
முன்னிலகும் பெயர்,வினை எச்சங்களைப் போற்குறிப்பு
மொழியும் எச்சம் விளக்கு(ம்)முன்னம் உணர்வின்
அளந்தறியே. [௬௫]

**எச்சம் பற்றிய இலக்கணம் கூறுகின்றது.**

**உரை:** ஒரு பொருளைக் குறித்து வரும் பெயர்கள் பல பொருளைப் பிரித்துக்காட்டாது. பொருள் வேறுபாடு இல்லாமல் ஒரு பொருளைக் குறித்து வரும் பல சொற்கள் அப் பொருளைச் சிறப்பித்தலின் வழு என்று கருதப்படமாட்டாது.

செய்யாய் என்னும் முன்னிலை எதிர்மறை வாய்பாட்டுச் சொல் 'செய்' என்ற வாய்ப்பாட்டில் உடன்பாட்டுப் பொருளில் வரும்.

1. குறிப்பு, 2. இசை, 3. சொல் என்ற மூவகைக் குறிப் பெச்சத்தோடு 4. எதிர்மறை, 5. பிரிவு, 6. ஒழியிசை 7 உம்மை, 8. என, வென்ற எச்சம் 9. பெயர், 10. வினை என்ற ஏழுவகையும் சேர்த்து எச்சங்கள் பத்து ஆகும். இதில் முன்னே கூறப்பட்ட எட்டுவகை எச்சங்களும் பெயரெச்சம் வினையெச்சம் ஆகிய இரண்டும் போலக் குறிப்பு மொழியும் எச்சச் சொற்களை விளக்குவகையாக அமையும். இவற்றைக் குறிப்பு அறியும் அறிவால் அறிந்துகொள்ள வேண்டும்.

**விளக்கம் :** தொல்காப்பியன், தமிழ்மொழியின் முதல் மொழி நூல் அறிஞன், இலக்கணக்கோட்பாட்டில் நுண்மாண் நுழை புலம் கண்டோன் என்பனவெல்லாம் ஒருவரையே குறிக்கும்.

அறியாய் என்பது அறிவாயாக என்ற பொருளில் வருவது, செய்யாய் என்ற செய் என்ற முன்னிலை வாய்பாட்டில் வருவதாகும்.

பத்துவகை எச்சம் பற்றித் தொல்காப்பிய உரையாசிரியர்களுக்குள் இருவித கருத்துக்கள் காணப்படுகின்றன. இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் ஆகிய மூவரும் ஒரு விதமாகவும் தெய்வச்சிலையார் மற்றொரு விதமாகவும் பொருள் கொண்டுள்ளனர். இளம்பூரணர் போன்றோரின் கருத்துப்படி எதிர்மறை போன்ற ஏழுவகை எச்சமும் முன்னரே விளக்கப்பட்டு மீண்டும் வேறுநோக்கில் இங்கு பேசப்படுவதாக ஆகிறது. அப்படியாயின் இன்னும் பல எச்சங்களை (சிறப்பெச்சம் போன்றவற்றை)விட்டது ஏன் என்றகேள்வி எழுகிறது. எனவே தெய்வச்சிலையார் கருத்தே பொருத்தமானது என்று திரு. குமாரசாமிராஜா 'தொல்காப்பியம் கூறும் எஞ்சு பொருட்கிளவி' என்ற கட்டுரையில் விரிவாக ஆராய்ந்துள்ளார்.

| | இளம்பூரணர் உதாரணம் | தெய்வச்சிலையர் உதாரணம் |
|---|---|---|
| எதிர்மறை: | 'யானே கொண்டேன்' என்பது யான் கொண்டிலன் என எதிர்மறைப் பொருள் தருவது | 'இம்மைப்பிறப்பிற் பிரியலம்' எனவே எதிர் மறையாக 'அடுத்த பிறவியில் பிரிவேன்' |
| பிரிவு : | அவனே கொண்டான்' என்பது அவன்தான் கொண்டான் என்ற பொருள் தருவது | 'இவட்குக் கண் அழகிது' மற்றுள்ள உறுப்புக்கள் அழகில்லை என்ற ஏனைய உறுப்பைப்பிரித்துநின்றது. |
| ஒழியிசை: | கூரியதோர் வாள்மன் | இவர் கல்வியாற் குறைவிலர்; ஒழுக்கத்தார் குறைவுடையர். |

| | | |
|---|---|---|
| உம்மை : | சாத்தனும் வந்தான் எனவே கொற்றனும் வந்தான் என்று பொருள் படும். | சாத்தன் வந்தான். கொற்றன் வந்தான். கொற்றனும் வந்தான் என்பதற்கு உம்மை இல்லாமல் வந்தது. |
| என : | கொள்ளெனக் கொண்டான். | 'வீடு உணர்ந்தார்க்கும்' என்ற பாடலில் இரும்புலி சேர்ந்த இடம் என வியப்பாமல் எனப் பொருள் உரைக்க வேண்டுதலின் என என்பது எஞ்சி நின்றது. |

எச்சங்களில் குறிப்பு, இசை, சொல் ஆகிய மூன்றை ஒரு பிரிவாகவும் மற்றைய ஏழையும் மற்ருெரு பிரிவாகவும் கூறியது முன்னதற்கு முடிக்கும் சொல் இல்லை என்பதும் பின்னதற்கு முடிக்கும் சொல் உள்ளது என்பதும் காரணமாகும். 'எஞ்சிய மூன்றுமேல் வந்து முடிக்கும் எஞ்சு பொருட் கிளவி இல்லென மொழிப' (தொல், சொல். 436) என்ற தொல்காப்பிய நூற்பாவால் இதனை உணரலாம்.

இச்சூத்திரம் இலக்கண விளக்கம் 355, 353, 348 349, 354 ஆகிய சூத்திரங்களைப்பின்பற்றியது.

**பா. வி.** 'சிறப்பின் வழாஙயெயாய்' (முதல் வரி) என்ற மூலபாடம் 'சிறப்பின் வழா செய்யாய்' என்று திருத்தப் பட்டுள்ளது. ஒழிவு பின்னியலும்' என்ற மூலபாடம் (3வது வரி) 'ஒழிவு இன்னிசையில்' அதாவது ஒழியிசை என்று திருத்தப் பட்டுள்ளது.

69. அளைமறி பாப்பு, அடிமறி, தாப்பிசை, விற்பூண், மொழிமாற்று,
ஆற்றொழுக்கு, நிரனிறையே, கொண்டு கூட்டல், எட்டாம்;
வளர் பொருள் கோளபின் மொழி முன்னிடை சேறல்; அடிகண்
மாறுகினும் பொருள் ஒத்த நடுச் சொன்முதல் கடைபோய்த்
தெளிதல்; பிறசொன் முதல் நோக்கல்; ஓர் அடியிற் பொருள்நேர்
செய்மொழி மாற்றுதல்; அடிதொறும் பொருண் முற்றிடுதல்,
உளவெழுத்துப் பெயர் வினைச்சொற்பொருள் எதிர்நேர் நிரலா
யுறல் பொருந்திற் றிசைத்தல், விரி என்பர் உயர்ந்தோரே.
[௬௯]

**பொருள்கோளின் வகையும் அவற்றின் விரியும் விளக்குகின்றது.**

**உரை:** *1. அளைமறி பாப்பு 2. அடி மறி 3. தாப்பிசை 4. விற்பூட்டு, 5. மொழிமாற்று 6. ஆற்றொழுக்கு 7. நிர்னிறை 8. கொண்டு கூட்டு எனப் பொருள்கோள் எட்டு வகைப் படும்.*

*செய்யுளின் ஈற்றில் நின்ற சொல் முதலிலும் இடையிலும் சென்று பொருந்தும்படி அமைவது அளைமறிபாப்புப் பொருள்கோள்.*

*செய்யுளின் அடிகள் அப்படியே முன்னும் பின்னும் மாற்றினாலும் பொருள் மாறுபடாதது அடிமறிப்பொருள்கோள்.*

*செய்யுளின் இடையில் நின்ற சொல் முதலிலும் ஈற்றிலும் சென்று ஒட்டி நிற்பது தாப்பிசைப் பொருள்கோள்.*

*செய்யுளின் இறுதியில் நின்ற சொல் முதலில் நிற்கும் சொல்லை நோக்கி நிற்பது விற்பூட்டுப் பொருள்கோள்.*

*தாம் குறித்த பொருளிற்கு ஒத்த சொற்களை ஓரடியுள்ளே மாற்றிச் சொல்லுதல் மொழிமாற்றுப் பொருள்கோள்.*

*ஏனைய அடிகளை நோக்காது அடிதோறும் பொருள் முடிவு பெற்று வருவது ஆற்றொழுக்குப் பொருள்கோள்.*

*பெயர்ச்சொல்லையும் வினைச்சொல்லையும் அவற்றை முடிக்*

கும் சொற்களையும் எதிர் எதிராக வைத்தும் வேறு வேறு வரிசைப்படும்படியும் வைத்துள்ளதைப் பொருள் பொருத்தத்திற் கேற்ப அமைப்பது நிரனிறைப்பொருள்கோள்.

பொருள் தருவதற்குப் பொருந்தும்படி முன்னின்ற சொற் களைப் பின்னும் பின்னின்ற சொற்களை முன்னும் கொண்டு கூட்டிப் பொருள்கொள்வது கொண்டு கூட்டுப்பொருள் ஆகும்.

**விளக்கம்**: இது *411* முதல் *419* வரையுள்ள நன்னூல் சூத்திரங்களை ஒட்டியது. வாக்கியத்தில் தொடர்களும் சொற் களும் அமையவேண்டிய ஒரு முறை உண்டு. ஆனல் அம் முறை மாறியும் வருவது இயற்கையே. ஒரு முறையை அடிப்படையாகவும் மற்றவற்றைத் திரிந்ததாகவும் கொள்வர். உரைநடையைவிடச் செய்யுளில் முறை மாற்றம் சற்று மிகுதியாகக் காணப்படும். எனவே செய்யுளைப் பிரித்துப் பொருள் கொள்ளும் முறையே பொருள் கோளாக வளர்ந்தது. பொருள் கோளில் ஆற்றுஒழுக்கு என்பது இயல்பான முறையைச் சுட்டும்; ஏனையவை மாறி வருகின்றவற்றை முறைப் படுத்திக்கொள்ளும் வகைக்கு இடப்பட்ட பெயர்களாகும். ஆனல் கொண்டு கூட்டு என்பதைத் தனிவகையாகக் கொண்டது ஆராய்ச்சிக்குரியது. ஆற்றொழுக்குத் தவிர ஏனையவற்றைக்கொண்டு கூட்டு என்ற பொது வகையில் அடக்கி விடலாம். இல்லாவிட்டால் கொண்டு கூட்டு என்பதை அடிமறி, தாப்பிசை, மொழிமாற்று, நிரனிறை ஆகியவற்றுள் அடங்காத பிறமுறைகளைக் கொண்டதாகக் கருதவேண்டும். மொழிமாற்று என்பதில் கொண்டு கூட்டு இல்லாதது போலத் தோன்றுகிறது. ஆனல் மொழிமாற்று உடைய முழுச்செய்யுள் ஒரு பொருள் உடையது. அதன் உறுப்பான அடிகளை முறை மாற்றினலும் பொருள் ஒன்றே தருகிறது. எனவே முறை மாற்றியும் மாற்ருமலும் பொருள்கொள்ளலாம். முறை மாற்றிப்பொருள் கொள்ள லாம்என்ற முறையில் ஒருவகை கொண்டு கூட்டாகக்கருதி மொழி மாற்றும் ஒருவகையானபொருள் கோளாகக்கொள்ளப்பட்டது.

70. உயர்பு, இழிபாந் திணையியற்பேர், அப் பொருளிற்சாதி
யொருமை பன்மை; யொருசொல் நின்று தனித் தனி மேவு
தலாய்ப்
பயில் பிரிவு ஏழாம்; எழுத்துச் சொற் பொருளிற் றிரிபாம்,
பலசொல் ஓர் சொல்லாம்; ஓர் சொற் பல சொல்லாகும்.
இயலும் இடுகுறியே காரணமாம், காரணமே
யிடுகுறியாம். பழைய கழிதலும் புதிய புணர்பும்
அயரும் வழுவல காலத்தற்றுஞ், சான்றோர்கள்
அமை அடங்காது எனினும் இவற்றமைக்க அறிந்தோரே.
[ய எ]

***பொதுச் செய்திகள் சிலவற்றை விளக்குகின்றது.***

**உரை :** *1. உயர்திணை இயற்பெயர் 2. அஃறிணை இயற்பெயர், 3 உயர்திணைப் பொருளில் சாதியொருமை, 4. உயர்திணைப் பொருளிற் சாதிப் பன்மை, 5. அஃறிணைப் பொருளிற் சாதி ஒருமை, 6. அஃறிணைப் பொருளிற் சாதிப் பன்மை, 7. ஒரு சொல் நின்று தனித்தனி உதவுதல் என ஏழு வகையாகவும் பிரிக்கலாம்.*

*பல பொருளையும் குறிப்பதற்குரிய பல சொல்லும் ஒரே சொல்லாக அமைதலும் (பல பொருட் ஒரு சொல்) ஒரு பொருளைக் குறிக்கப் பல சொல் அமைதலும் (பல சொல் ஒரு பொருள்) உண்டு.*

*ஒரு காரணத்தால் இடுகுறிப்பெயர், காரணப்பெயராகவும் காரணப்பெயர் இடுகுறியாகவும் அமையலாம்.*

*முற்காலத்துள்ள இலக்கணங்களும் சொற்களும் பிற்காலத்தில் சில மறைந்து போதலும் புதியதாகச் சில உண்டாதலும் தவறு இல்லை. அது காலத்து இயல்பாகும்.*

**விளக்கம் :**

*இறை, அமைச்சு என்பன உயர்திணை இயற்பெயர்.*
*கல், பகல் என்பன அஃறிணை இயற்பெயர்.*

சிவிகை பொறுத்தான் (சிவிகையைத் தூக்கினவர் ஒருவராக இல்லாமையால், வருமொழி நோக்காமல் தனக்குரிய ஒருமைப்பாலைவிட்டுப் பன்மைப்பாலை விளக்குதலால் உயர்திணைச் சாதி ஒருமை.

'அஞ்சுவது அஞ்சாமை பேதைமை' (குறள் 428)-
அஃறிணைச் சாதி ஒருமை.

'எண்என்ப ஏனை எழுத்து என்ப' (குறள் 392)-
உயர்திணைச் சாதிப் பன்மை

'இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு' (குறள் 392)-
அஃறிணைச் சாதிப்பன்மை.

'பொருள்கருவி காலம் வினையிடனொடு ஐந்தும்; இருள்தீர எண்ணிச்செயல்' (குறள் 675) இங்கு ஒடு என்ற ஒரு சொல்லே ஒவ்வொரு பெயரோடும் சேர்ந்து வருவதால் ஒரு சொல் நின்று தனித்தனி உதவியுள்ளது.

செங்கோல் என்பதை ஒரு சொல்லாகவும் பொருப்பன் என்பதனைப் பொருப்பு என்னும் உரிமைப்பொருளை உடையான் என்று பல சொல்லாகவும் கொள்வர்.

வேலன் - வேல் என்பது காரணப் பெயராயினும் முருகனைக் குறிப்பதால் இடுகுறிப் பெயராயிற்று.

இடுகுறிப்பெயரெல்லாம் ஒரு காலத்தில் காரணமாகவே இருந்திருக்கவேண்டும் என்பதால் இடுகுறிப் பெயராயினும் காரணப் பெயர் கருதுவது.

பழையன கழிதல்: சங்க காலத்தில் இருந்த இசின், சின் போன்ற அசைகளும் அழன், வெரிந் போன்ற சொற்களும் வழக்கு ஒழிந்தன. தொல்காப்பியர் காலத்தில் இல்லாத கிறு, கின்று போன்ற இடைநிலைகளும் யவனர், சைவர் போன்ற சொற்களும் புதிதாக மொழியில் வந்து சேர்ந்தன.

இது இலக்கணக் கொத்து 130, 116 ஐயும் நன்னூல் 462, இலக்கண விளக்கம் 371 ஆகியவற்றையும் தழுவியது.

பெயரை ஏழுவகையாகப் பிரிப்பதும் (இ. கொ. 130) ஒரு சொல்லைப் பல சொல்லாகவும் பல சொல்லை ஒரு சொல்லாக வும்கருதும் கருத்தும் இடுகுறி காரணப்பெயர் பற்றிய கருத்தும் இலக்கணக் கொத்தில் (110) காணப்படுகின்றன. நன்னூலார் 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' என்று கூற (462) இலக்கண விளக்கத்தார் 'பழையன கழிதலும் புதியன புணர்தலும்' (371.1) என்று விளக்கியுள்ளார். சாமி கவிராயர் இருவருடைய கருத்துக்களிலும் ஒவ்வொருபகுதி (முற்பகுதி யை நன்னூலிருந்தும் பிற்பகுதியை இலக்கண விளக்கத்தி லிருந்தும்) தழுவிக்கொண்டுள்ளார்.

# 4. பொருளதிகாரம்

## 1. அகத்திணை மரபு

71. அறமுதனான் கினில்வீடு சொலற்குஅரிது ஆகையினால்
அறம்,பொருள்,இன் பமும்,பொருளாம்; அவற்றின் அறம்,
பொருளே,
புறம்அதுவாம்; இன்பம்அகஞ்; செய்யுள்அணிக்கு இசைவாம்;
புறநிற்க, அகப்பொருள்கைக் கிளையொடுஐந் திணையே நிறிய
பெருந்திணைஏ ழாய்ப் புனைந்து உரையும்உலக
நெறியும் வழாஅது (உ) ரைப்பனவாம்; அவற்றினிற்கைக்
கிளையே
கறுவில்ஒரு தலைக்காமம்; ஐந்திணைஅன் புடைய
காமம்,இசை யாக்காம மாதல்பெருந் திணையே. [க]

**இது அகத்திணை வகையை விளக்குகின்றது.**

*உரை : அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கினுள் வீடு எடுத்துச் சொல்லுவதற்கு அரிது; ஆகையால் அறம், பொருள், இன்பம் என்ற மூன்றே பொருளாகக் கருதப்படுகிறது. அறமும் பொருளும் புறத்திலும் இன்பம் அகத்திலும் அடங்கும். அகப்பொருள்*

கைக்கிளையும் குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை, நெய்தல் என்ற ஐந்திணையும் பெருந்திணையும் ஆக ஏழாகும். அகப் பொருள் கற்பித்து உரைக்கப்படும் புனைந்துரையும் உலக நெறியும் உரைப்பதாகும். கைக்கிளை என்பது ஒரு தலைக் காமம். ஐந்திணை என்பது அன்புடைய காமம். பெருந்திணை என்பது இசையாக் காமம்.

**விளக்கம் :** அறம் முதனான்கினில் வீடு சொலற்கு அரிது என்ற கருத்து திருக்குறள் பரிமேலழகர் உரையை ஒட்டி அமைந்திருக்கலாம். 'வீடு என்பது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்து ஆகலின் துறவறமாகிய காரணவகையாற் கூறப்படுவது அல்லது இலக்கணவகையால் கூறப்படாமையின் நூல்களால் கூறப்படுவன ஏனைய மூன்றுமேயாம்' — பரிமேலழகர் உரைப்பாயிரம் (திருக்குறள் முதல் குறள்). இது நம்பியகப்பொருள் 1 முதல் 5 ஆம் சூத்திரங்களின் தழுவலாகும்.

72. திணைகுறிஞ்சி, பாலை,முல்லை, மருத(ம்),நெய்தல், ஐந்தாம்;
செறியு(ம்)முதற்கரு, உரிஎன்றவைமூன்று பொருளாந்;
துணைநிலமும், பொழுது(ம்)முதற் பொருளாகும்; வரையே
சுரம்,காடு வயல்,திரைசேர் இடம்பத்து நிலமாம்;
கனிபொழுது பெரும்பொழுது, சிறுபொழுதாம்; பெரிதே
கார்,கூதிர், இரண்டுபனி, இருவேனில், ஆறும்;
அனைமாலை, யாமமே, வைகறையே, காலை
அழற்றியநண் பகல்,எற்பாடு அறுவகைத்தாஞ் சிறிதே. [உ]

**இது திணை, முதல் ஆகியவற்றை விளக்குகின்றது.**

**உரை :** ஐந்திணை என்பது குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்பன. முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்ற மூன்றாலும் ஐந்திணை கூறப்படும். இவற்றுள், முதல் என்பது நிலம், பொழுது என இரண்டாகும்.

நிலம் என்பது வரையும் (மலை) வரை சார்ந்த இடமும், சுரமும் சுரம் சார்ந்த இடமும், காடும் காடு சார்ந்த இடமும், வயலும் வயல் சார்ந்த இடமும், கடலும் கடல் சார்ந்த இடமும் ஆகப் பத்தாம். பொழுது என்பது பெரும் பொழுது சிறு பொழுது என இருவகைப்படும். கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் எனப்பெரும் பொழுது அறு வகைப்படும். மாலை, யாமம், வைகறை, காலை, நண்பகல், எற்பாடு எனச் சிறுபொழுதும் அறுவகைப்படும்

**விளக்கம் :** இது நம்பியகப்பொருள் 6 முதல் 12 வரையுள்ள சூத்திரங்களை அடியொற்றியது. ஆயினும் நம்பியகப்பொருள் சிறுபொழுது ஐந்து என்று கூற இந்நூல் ஆறு என்று கூறுவது குறிப்பிடத்தக்கது. ஐந்து வகைச் சிறுபொழுதை 'காலையும் பகலுங் கையறுமாலையும் ஊர்துஞ்சி யாமமும் விடியலும்' என்று குறுந்தொகையில் (32. 1, 2) அள்ளூர் நன்முல்லையார் விளக்குகின்றார்.

**பாட. வி.** 'நன்பகல்' (4-வது வரி) என்பது மூலபாடம்.

73. வகைக்கூதிர் முன்பனியா மமுங்குறிஞ்சிக்கு ஆகு(ம்);
மகிழ்வேனில் பின்பனிநண் பகல்பாலைக் காகும்
முகப்புருகார் மாலைமுல்லைக்கு உரித்தாம்;வை கறையேஉரித்து
மருதத்தி னுக்கா(ம்);நெய் தலுக்குஎற் பாடாந்
தொகுத்தபெரும் பொழுதாறு(ம்) மருதநெய்தற் காகும்;
சொற்றதெய்வம், உயர்ந்தோர்,அல் லோர்விலங் கூர்நீர்புட்,
பகுத்தமரம், பூ,உணவு பறை,யாழ்பண் தொழிலாம்
பதினன்கும் பிறவுமேகருப் பொருளாக் குகவே. [ரு]

***இது பொழுதும் கருப்பொருளும் விளக்குகின்றது.***

**உரை:** கூதிர், முன்பனி என்ற இரு பெரும்பொழுதும் யாமம் என்ற சிறுபொழுதும் குறிஞ்சித் திணைக்கு உரியன. கார்காலம் என்ற பெரும்பொழுதும் மாலை என்ற சிறு பொழுதும் முல்லைத் திணைக்கு உரியன. வைகறை என்ற

சிறு பொழுது மருதத்திணைக்கு உரியது. நெய்தல் திணைக்கு, எற்பாடு என்ற சிறுபொழுது உரித்து. ஆறு பெரும் பொழுதுகளும் மருதத்திணைக்கும் நெய்தற்றிணைக்கும் உரியன. 1. தெய்வம், 2. உயர்ந்தோர், 3. அல்லோர், 4 விலங்கு, 5. ஊர், 6. நீர், 7. புள், 8. மரம், 9. பூ, 10. உணவு, 11. பறை, 12. யாழ், 13. பண், 14. தொழில் எனப் பதினான்கும் பிறவும் சேர்ந்தது கருப்பொருளாம்.

**விளக்கம்:** இது நம்பியகப் பொருள் 13 முதல் 19 வரையுள்ள சூத்திரங்களை ஒட்டியது.

74. குகன்,சிலம்பன், கொடிச்சியே,கு றவர்குறத் தியர்தேன்,
குறிச்சி,சுனை, அருவி,களி புலி,கரடி, யானை,
சிகண்டி,முயல், மான்,பன்றி, உடும்புவரை,யாடு
சிங் க(ம்),மா சுணம்கவரி, நாவிலிஞ்சி, மஞ்சள்
மிகுங்கடம்பு, அசோகு,புன்னை, தேக்கு,ஏனல், காந்தள்,
வேங்கை,கோங்கு, அகில்,ஏலா தோரை,சந்தங், கறி,வேய்,
சுகந்தமாத, விவெறிகொள், துடி,குறிஞ்சி யாழ்,பண்
சுனையருவி யாடல்,தினை காத்தல்குறிஞ் சியினே. [ச]

**குறிஞ்சிக்குரிய கருப்பொருளினைத் தொகுத்து உரைக்கின்றது.**

**உரை:** குகன், சிலம்பன், கொடிச்சி, குறவர், குறத்தியர், தேன், குறிச்சி, சுனை, அருவி, புலி, கரடி, யானை, சிகண்டி (முயல்), முயல், மான், பன்றி, உடும்பு, மலையாடு, சிங்கம், அசுணம், கவரி, நாவி, இஞ்சி, மஞ்சள், கடம்பு, புன்னை, தேக்கு, தினை, காந்தள், வேங்கை, கோங்கு, அகில், ஏலா (ஏலம்), தோரை, சாந்தம், மிளகு, மூங்கில், மாதவி, துடி, குறிஞ்சியாழ், குறிஞ்சிப்பண், சுனையாடல், அருவியாடல், தினைகாத்தல் முதலியன குறிஞ்சிக்குரிய கருப்பொருளாம்

**விளக்கம்:** இது நம்பியகப்பொருள் 20-ஆம் சூத்திரத்தைத் தழுவியது. நாவி என்பது புழுகுப்பூனை என்ற பொருளில் சிலப்பதிகாரத்திலும் (பீலி. மஞ்ஞையும் நாவியின் பிள்ளையும் 25. 53), கஸ்தூரி மிருகம் என்ற பொருளில்

பிரபுலிங்கலீலையிலும் ('நாவியின் கட்போதுறு மதம் விடுத்து' பிர.புதே.28) வந்துள்ளது.

75. குறைவில்கன்னி. தீவிடலை, எயிற்றி,யுடன் மறவர்,
கொடியமறத் தியர்,குறும்பூழ், ப-நந்து,செந்நாய் கழுகு,
புறவு,கவு தாரி,செவ்வல், குரவு,மரா, உழிஞை,
புன்கு,இருப்பை பாலை,நெல்லி முருக்கு,ஓமை கள்ளி,
வறியகிணறு, இலவு,நரி, கூகை,யார்ச் சூரை,
வன்காரை, நெருஞ்சி,துடி, பஞ்சுரம்,பா லையின்யாழ்,
நிறை,முருங்கை, நொள்ளை,சமர் பகற்,சூறை யாடல்,
நெறியலைப்புக், கொலை,கொள்ளை யிடல்,பாலைக் கருவே.[ரு]

**இது பாலைக்குரிய கருப்பொருளைத் தொகுத்து உரைக்கின்றது.**

**உரை:** கன்னி, விடலை, எயிற்றி, மறவர், மறத்தியர், குறும்பூழ், பருந்து. செந்நாய், கழுகு, புறு, கவுதாரி, செவ்வல், குரவு, மரா, உழிஞை, புன்கு, இருப்பை, பாலை, நெல்லி, முருக்கு, ஓமை, கள்ளி, பாழ்கிணறு, இலவு, நரி, கூகை, சூரை, காரை, நெருஞ்சி, பஞ்சுரம், பாலையாழ், முருங்கை, நொள்ளை, சமர், பகற்சூறையாடல், நெறிஅலைப்பு (வழியில் இடையூறு), கொலை, கொள்ளையிடல் ஆகியன பாலையின் கருப்பொருளாகும்.

**விளக்கம்:** இது நம்பியகப் பொருள் 21ஆம் சூத்திரத்தைத் தழுவியது.

76. கரும்ஆயன், குரும்பொறை, நா டன், மனைவி, இடையர்,
காதல்இடைச் சியர்,பாடி, முயல்,கலை,கான் கோழி,
வருமான்,மல் லிகை.குருந்து, பிடவ(ம்)முல்லை, காயா,
வரகு,கொன்றை, சாமை, முதிரை, கண்குல்லை, தோன்றி,
முருகு,ஏறுங் குறுஞ்சுனை,கான் யாறு,சா தாரி,
முல்லை,யாழ், கொல் லேற்றுப் பறை,முதிரை விற்றல்,
இரும்ஏறு தழுவுதல், குழல் ஊதல்,தயிர் விலை,மூ
வினமேய்த்தல், கான்யாற்றி னுடன்முல்லை தனக்கே. [சா]

**முல்லையின் கருப்பொருளைத்தொகுத்து உரைக்கின்றது.**

**உரை :** ஆயன், குறும்பொறைநாடன், மனைவி, இடையர், இடைச்சியர், பாடி, முயல், கலை, கான்கோழி, மான், மல்லிகை, குருந்தம், பிடவம், முல்லை, காயா, வரகு, கொன்றை, சாமை, முதிரை, குல்லை, தோன்றி, முருகு, குறுஞ்சுனை, கான்யாறு, சாதாரி, முல்லையாழ், கொல்லேற்றுப்பறை, முதிரை விற்றல், ஏறு தழுவுதல், குழல் ஊதல், தயிர் விற்றல், மூவின மேய்த்தல், கான்யாறு ஆடல், ஆகியன முல்லையின் கருப்பொருள்கள்.

**விளக்கம் :** இது நம்பியகப் பொருள் 22ஆம் சூத்திரத்தை ஒட்டியது.

77. தன்னிகரில் இந்திரன்,ஊ ரன்,கிழத்தி, கடையர்,
தக்ககடைச் சியர்,நான்கு குலத்தார்,வே சையர்கள்
அன்னம்,அன்றில், நாரை, கம்புட், குருகு,எருமை, தாரா,
ஆறு,நீர்நாய், பொய்கை,மனைக் கிணறு,பேரூர், கன்னல்,
செந்நெல்,அங் காடி,காஞ்சி, வஞ்சி,மருதங், கமுகஞ்,
சங்கு,வளை, பலா,மா, வாழை, கழுநீர்,
தென்னை,வயற் கனிவருக்கங், கிழங்கு,வருக் கங்கள்
சேனையொடு, கருணை,மஞ்சள், சேம்பு,சோ லைகளே. [எ]

***மருதத்துக்குரிய கருப்பொருளைத் தொகுத்துரைக்கின்றது.***

**உரை :** இந்திரன், ஊரன், கிழத்தி, கடையர், கடைச்சியர், நான்கு குலத்தார், வேசையர், அன்னம், அன்றில், நாரை, கம்புள், குருகு, எருமை, தாரா, ஆறு, நீர்நாய், பொய்கை, வீட்டுக்கிணறு, பேரூர், கன்னல், செந்நெல், அங்காடி, காஞ்சி, வஞ்சி, மருதம், கமுகு, சங்கு, வளை, பலா, மா, வாழை, கழுநீர், தென்னை, கனிவருக்கம், கிழங்கு வருக்கம், சேனை, கருணை, மஞ்சள், சேம்பு, சோலை ஆகியன மருதத்திற்குரிய கருப்பொருள்கள்.

78. சோலையிடை குயில்,வண்டு, மயில்,கவிபூந் தோட்டம்.
சொன்னமதிழ்க், கூடகோபு ர(ம்),மேடை, மாடம்,
வேலி,மாளிகை, கோவில்,குள(ம்), நதி,நீ ராடல்,
வியன்கிணைமங் கல(ம்),முழவு, மருதயாழ், தண்பண்,

காலைபடித் துறை,வேதத் தொனி,வேள்வி வளர்த்தல்,
**தமிழ்முதற்கல் விகள்பயிறல்**, பாடலுடன் ஆடல்
நாலுவரு ணரும்பிறவும் அவரவர்செய் தொழிலே
நடத்தலுமே மருதநிலக் கருப்பொருளாய் வருமே. [அ]

***மருதத்துக்குரிய கருப்பொருளின் தொடர்ச்சி இது.***

**உரை:** *சோலைக்குயில், வண்டு, மயில், பூந்தோட்டம், மதிள், கூடகோபுரம், மேடை, மாடம், வேலி, மாளிகை, கோவில், குளம், நதிநீராடல், கிணைமங்களம், முழவு, மருதயாழ், சாலை, படித்துறை, வேதத்து ஒலி, வேள்வி வளர்த்தல், தமிழ் முதலிய கல்வி பயிறல், பாடல், ஆடல், நாலுவருணத்தாரும் பிறரும் அவரவர் தொழில் செய்தல் ஆகியனவும் மருதத்துக்குரிய கருப் பொருள்களாகும்.*

**விளக்கம்:** *இதுவும் மேலைச் சூத்திரமும் நம்பியகப் பொருள் 23ஆம் சூத்திரத்தைத் தழுவியன. ஆயினும் இவர் புதிதாகத் தமிழ் முதற்கல்விகள் பயிறல், பாடலுடன் ஆடல் போன்றவற்றையும் விதந்து சொல்லியிருப்பது குறிப்பிடத் தக்கது.*

*மதிள் என்பது மதிழ் என்று மாறியுள்ளது. ளகரம் ழகரமாக மாறிவருவது, இந்நூலில் பல இடத்திலும் காணப் படுகின்றது.*

79. வருணன்,சேர்ப் பன்பரத்தி, பரவர்,பரத் தியர்கள்,
மற்றளமா சடல்,காக்கை, சுறவுமுதல் மீன்கள்,
வரிபனை,பட் டில்நெய்தல், உவர்க்கேணி, கைதை,
வெண்சங்கு, பவள(ம்),முத்து, நண்டு,ஆமை, ஞாழல்,
சொரிமணல்,நீர், முள்ளி,புன்னை, அடம்புதில் லைமுதல்
தோணி,நாவாய், புணை,மீன்கோட் பறை,செவ்வ ழிப்பண்,
ஒருவிளரி யாழ்,உப்பு, மீன்படுத்தல், விற்றல்,
உணக்கல்,கட லாடல்,புள் ளோப்புலு(ம்)நெய்தற் புணர்ப்பே
[கூ]

***நெய்தலுக்குரிய கருப்பொருளைத் தொகுத்துக் கூறுகின்றது.***

**உரை:** வருணன், சேர்ப்பன், பரத்தி, பரவன், பரத்தியர்கள், காக்கை, சுறு முதலிய மீன்கள், பனை, பட்டில், நெய்தல், கேணி, கைதை, சங்கு, பவளம், முத்து, நண்டு, ஆமை, ஞாழல், மணல், நீர், முள்ளி, புன்னை, அடம்பு, தில்லை, தோணி, நாவாய், புணை, மீன்கோட்பறை, செவ்வழிப்பண், விளரியாழ், உப்பு, மீன் படுத்தல், உணக்கல், விற்றல், கடலாடல், புள் ஓப்பல் ஆகியவை நெய்தற்குரிய கருப்பொருள்.

**விளக்கம்:** இது நம்பியகப்பொருள் 24ஆம் சூத்திரத்தை ஒட்டியது.

80. புணர்வு,பிரிவு, இருப்பூடல், இரங்கல்அவ் வநிமித்தம்·
போற்றும்இரண் டிரண்டாய்ஐந் திணைக்கும் உரிப் பொருளாய
மணம்உறுமுப் பொருள்களுந்தத் தந்திணையில் அன்றி
மயங்கலுமாம்; ஐந்திணையிற் பெருந்திணைகைக் கிளையை
அணவலுமாம் அதிலதிற்கை கோள்களவு கற்பு என்றுஇரண்டாம்
அதின்இயற்கைப் புணர்ச்சி,இடந் தலைப்பாடுஅன் பரிற்கூட்
டுணர்இகுழைக் கூட்டெனநால் வகைகளவிற் புணர்வாம்,
உரைஇயற்கைப் புணர்ச்சி முன்கைக்கிளை நிகழ்தல் கடனே.
[ம]

***இது உரிப்பொருளின் வகையும் ஐந்திணை நிகழ்ச்சிகளும் கூறுகின்றது.***

**உரை:** புணர்வும், புணர்வு நிமித்தமும்; பிரிவும், பிரிவு நிமித்தமும்; இருத்தலும், இருத்தல் நிமித்தமும்; ஊடலும், ஊடல் நிமித்தமும்; இரங்கலும், இரங்கல் நிமித்தமும்; ஆகியவை ஐந்திணைக்கும் உரிய பொருளாம். மணம் உறு முப்பொருளான புணர்வு, பிரிவு, இருத்தல் என்ற மூன்றும் தனக்குரிய திணையோடு பிறதிணையிலும் மயங்கும். ஐந்திணையில் பெருந்திணையும், கைக்கிளையும் மயங்கும் ஐந்திணையில் களவு, கற்பு என இரண்டொழுக்கம் நிகழும். களவானது, இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, அன்பரிற்கூட்டு

(பாங்கற் கூட்டம்) இருளைக்கூட்டு (பாங்கியிற்கூட்டம்) என நால்வகையினை உடைத்து. இயற்கைப் புணர்ச்சி முன் கைக்கிளை நிகழ்தல் கடன் ஆகும்.

**விளக்கம் :**

இது நம்பியகப்பொருள் 25, 26, 27, 28 ஆகிய சூத்திரங்களைத் தழுவியது. ஆயினும் ஐந்திணையிலும் கைக்கிளையும் பெருந்திணையும் மயங்கும் என்பது நம்பியகப் பொருளில் காணப்படவில்லை. இருளை என்பது இருமை என்று இங்கு வந்துள்ளது.

81. கடன்எனுங்கைக் கிளைஇறைவி குறிப்பு அறியுங் காறுங்
கணவன்அணு காதுநின்று நெஞ்சொடுகூ றுதலாம்;
அடர்தெய்வங் கிழத்தியினும் வரும்இயற்கைப் புணர்ச்சி,
அகப்புணர்ச்சி, மெய்ப்புணர்ச்சி மறைப்புணர்ச்சிக்கு
உரித்தா(ம்);
மடமகட்கு நாண்,மடமும் பெருமை,உர(ன்), நிறைக்கு
மருவுகுண மாதலின்முன் னகப்புணர்ச்சி உரித்தாம்;
துடர்காட்சி முதலாகச் சாக்காடுஈ ருகச்
சொற்பத்துங் கைவரின்மெய் யுறுபுணர்ச்சி யுரித்தே. [அக]

**இது கைக்கிளை, இயற்கைப்புணர்ச்சி ஆகிய இரண்டையும் விளக்குகின்றது.**

உரை : தலைவியிடத்து உண்டாகும் குறிப்பினைத் தான் அறியும் வரை தலைவன் அவளைச் சாராது நின்று நெஞ்சோடு சொல்லுதல் கைக்கிளையாம். தெய்வத்தாலும் தலைவியாலும் பெறப்படுவது இயற்கைப் புணர்ச்சி. உள்ளத்தாற் புணரும் புணர்ச்சி மெய்யுற்றுப் புணரும் புணர்ச்சி என இரண்டும் களவுப் புணர்ச்சிக்கண் உரிய. தலைமகளுக்கு நாணும், மடமும், ஆகிய இரண்டும் பெருமையும், உரனும் நிறைந்த தலைவனைப் பொருந்தும் குணமாதலின், உள்ளப்புணர்ச்சி முன் நிகழ்தற்கு உரியது. காட்சி முதலாகச் சாக்காடு ஈறாக உள்ள பத்தும் நிகழுமாயின் மெய்யுறு புணர்ச்சி கூடுதற்கு உரித்தாம்.

**விளக்கம்:** நம்பியகப்பொருள் 29, 32, 34, 35, 36, ஆகிய சூத்திரங்களை அடியொற்றியது இது.

'காட்சி முதலாகச் சாக்காடு ஈறுகச் சொற்ற பத்து' என்பது காட்சி, வேட்கை, ஒருதலை உள்ளுதல், மெலிதல். ஆக்கம் செப்புதல், நாணுவரை இறத்தல், நோக்குவ எல்லாம் அவையே போறல், மறத்தல், மயக்கம், சாக்காடு என்று நம்பியகப்பொருள் உரையில் விளக்கப்பட்டுள்ளது. இவற்றில் வேட்கை முதல் சாக்காடுவரை ஒன்பது வகையும் தொல் காப்பியத்தில் (களவி. 9) காணப்படுகின்றன.

82. உரியபகற் குறிஇரவுக் குறிபுணர்ச்சி க்குஇடன்வீடு,
ஒழிதல்பகற் குறி;வீட்டின் எல்லைஇராக் குறியாம்
புரியுமொரு வழித்தணத்தல், வரைவுஇடையே வைத்துப்
பொருட்பிரிதல் எனஇரண்டு(ம்) மறைப்பிரிவாம்; ஒருகாற்
பிரிவினுக்குப் பருவம்இலை; ஏனையதுஓர் இருதாம்;
பெருங்களவு வெளிப்படுமுன் பின்வரைவுஉண் டாகும்
வரைவுமறை, காப்புமிகை யாற்றுஅச்சம் வேற்று
வரைவுநேர் வுறில்தோன்றும் அறத்தொடு நிலையே. [௰உ]

**இது களவுப் புணர்ச்சி பற்றிய விளக்கம் கூறுகின்றது.**

**உரை:** புணர்ச்சி நிகழும் இடம் பகற்குறியும் இரவுக்குறி யும் என இரு பகுதியினை உடையது. வீட்டின் எல்லையைக் கடந்தது பகற்குறி. வீட்டின் எல்லைக்குள் இரவுக்குறி நடை பெறும். ஒரு வழித் தணத்தல், வரைவிடைவைத்துப் பொருள் வயிற்பிரிதல் என இரண்டு வகையாகும் களவுப் புணர்ச்சி. ஒருவழித்தணத்தலுக்குப் பருவ வரையறை இல்லை. வரைவிடை வைத்துப்பொருள் வயிற்பிரிவுக்கு இரண்டு மாதம் (ருது) காலமாகும். களவு வெளிப்படா முன்னும் வெளிப்பட்ட பின்னும் மணம் செய்துகொள்ளுதல் உண்டாகும். உறவினர் வரைவு எதிர்கொள்ளாத இடத்தும் காவல் மிகுந்த இடத்தும் தலைமகள் தலைமகன் வரும் வழியில் ஏற்படும் துன்பத்திற்கு அஞ்சியவிடத்தும், பிறர்வரைவு நேருமிடத்தும் அறத்தொடு நிலை தோன்றும்.

**விளக்கம்:** *இது அகப்பொருள் 37 முதல் 42 வரை உள்ள சூத்திரங்களையும் 47ஆம் சூத்திரத்தையும் தழுவியது.*

83. அறத்தொடுநி லைதலைவி சகிசெவிலி நற்றாய்
ஆகு(ம்);நால்வ ரும்ஒருவர்க் கொருவர்வினை விடையாம்;
இறப்பில்குர வரிற்புணர்வு வாயிலிறைப்புணர்வு என்று
இரண்டுகற்பிற் புணர்ச்சி;மறைப் புணர்வுமன்றற்,
புணர்வாங்;
குறித்தபரத் தையர்,காமக் கிழத்தியர்,பின் வதுவைக்
குலக்கிழத்தி யெனமூவ ரவைக்குரியர்; வருணம்
அறுத்தபரத் தையர்கள விற்குரியர்; ஒழிந்தோர்கள்
மூன்றல்செய்து கொளற்குரியர் என்றுஅறிகற் பினுக்கே.
[அ௩]

***அறத்தொடு நிற்றல், கற்பில் புணர்ச்சி முதலியவற்றை விளக்குகின்றது.***

**உரை:** *தலைவி, தோழி, செவிலி, நற்றாய் ஆகிய நால்வரும் ஒருவர்க்கு ஒருவர் வினவியும் விடை கூறியும் கொள்வர். கற்பிற்புணர்ச்சி என்பது குரவரால் புணரும் புணர்ச்சி, வாயில்களாற் புணரும் புணர்ச்சி என இருவகைப் படும். களவுப் புணர்ச்சி மணத்தில் முடியும். பரத்தையர், காமக்கிழத்தியர், வதுவைக்குலக்கிழத்தியர் என மூவகையோரும் புணர்ச்சி ஒழுக்கத்திற்கு உரியர். நல்ல சாதி இல்லாத பரத்தையர் களவிற்குரியர். ஒழிந்தோர் வதுவைப்புணர்ச்சிக் குரியர்.*

**விளக்கம்:** *இது அகப்பொருள் 48, 53, 56, 58, 59, 60, 61 ஆகிய சூத்திரங்களைத் தழுவியது.*

84. கற்பியலிற் பரத்தை,கல்வி, காப்பு,(உ)தவி, தூது,
கைபொருளிற் பிரிவுஆறு (உ)ண்டு;அதிற்காவல் பரத்தை
இற்பிரிவும் பருவம்இலைத்; தூது(உ)தவி பொருளிடைப்
பிரிவுஓ ராண்டு;கல்வி பிரிவுமூன்று ஆண்டாஞ்;

சொற்பிரிவால் ஊடல்உண்டாம் பாணர்,இரு பாங்கர்,
துணைவி,கண்டோர், பாகன்,பா டினி,கூத்தர், இளையர்,
தற்புதல்வன், செவிலி,அறி வோர்,காமக் கிழத்தி,
சார்விருந்தாற் ருமையிலவ் ஊடல்தீர் மருந்தே [௧௪]

***இது பிரிவு, ஊடல் ஆகியவற்றை விளக்குகின்றது.***

**உரை :** *பரத்தையிற் பிரிவு, ஓதற்பிரிவு, காவற் பிரிவு, அரசனுக்கு உதவிக்காகப் பிரிவு, தூதுவயிற் பிரிவு, பொருள் வயிற்பிரிவு எனக்கற்பின்கண் பிரியும் பிரிவு ஆறு வகைத்தாம் காவற்பிரிவுக்கும் பரத்தையிற் பிரிவுக்கும் குறிப்பிட்ட கால வரையறை இல்லை. தூதுவயிற்பிரிவு, உற்றுழிப் பிரிவு, பொருட்பிரிவு ஆகியவற்றிற்கு ஓராண்டும் கல்விக்காகப் பிரிவு மூன்று ஆண்டுமாம். பிரிவால் ஊடல் உண்டாகும், பாணர், இருவகைப் பாங்கர், துணைவி, கண்டோர், பாகன், பாடினி, கூத்தர், இளையர், தன்னுடைய புதல்வர், செவிலி, அறிவோர், காமக்கிழத்தியர், விருந்து செய்தல் ஆகிய அனைத்தும் ஊடலைத்தீர்க்கும் மருந்துகளாகும்.*

**விளக்கம் :** *இது நம்பியகப் பொருள் 62, 90, 89, 68 ஆகிய சூத்திரங்களைப் பின்பற்றியது.*

**பாட. வி :** *விருந்து ஆற்கருமை (4வது வரி) என்ற மூல பாடம் விருந்து ஆற்ருமை என்று கொள்ளப்பட்டுள்ளது.*

# 2. கைக்கோண் மரபு

85. மருவுறும்அன் புஐந்திணையிற், களவுவே தத்தின்
மன்றல்எட்டிற் கந்திருவ வழக்கம்தாம்; பின்மூன்று
ஒருதலைக்கா மமும்முன் னன்குஒவ்வாக் காமமுமாம்;
உரைத்ததின்முன், காட்சிஐயம், துணிவு,குறிப் பறிதல்,
விரவும்ஊழ் முயற்சையினல் ஒத்தகிழவோனும்
மின்னுங்காண் பதுகாட்சி; யவள்உருவும் இடமுந்
திருவுறவெய் தூதுஐயம்; கடவுள்வேற் றுமையால்
தெளிதல்,துணிபு; அவள்கண்ணால் அறிதல்குறிப்பறிவே. [க]

***இது களவு, கைக்கிளை, ஆகிய இரண்டையும் விளக்குகிறது.***

**உரை :** *ஐந்திணை ஒழுக்கத்துள் களவு என்பது, வேதத்துள் சொல்லப்பட்ட 1. பிரமம், 2. பிரசாபத்தியம், 3. ஆரிடம், 4. தெய்வம், 5. காந்தருவம், 6, ஆசுரம், 7. இராக்கதம், 8. பைசாசம் என்ற எட்டு வகைத் திருமணத்துள் காந்தருவ மணத்தோடு ஒத்தது. பின்னுல் உள்ள ஆசுரம், இராக்கதம், பைசாசம் என்ற மூன்று வகையும் கைக்கிளைக்கும், முன்உள்ள பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம் என்ற நான்கு வகையும் பெருந்திணைக்கும் உரியவாம். முன் சொன்ன கைக்கிளை என்பது 1. காட்சி, 2. ஐயம், 3. துணிவு, 4. குறிப்*

பறிதல் ஆகிய நான்குவகைப்படும். நல்வினை வயத்தால் ஒத்த தலைமகனும் தலைமகளும் ஒருவரையொருவர் சந்தித்தல் காட்சி; தலைமகளின் வடிவமும் அவளைக்கண்ட இடமும் சிறப்புடையது ஆனகாலத்து தலைமகன்பால் நிகழ்வது ஐயம்; தெய்வத்துக்கும் மக்களுக்கும் உள்ள வேற்றுமையான கண் இமைத்தல் போன்ற வற்றால் தலைவன் தெளிதல் துணிவு. தலைமகளின் கண் வழியால் அவள் உடம்பாட்டை அறிதல் குறிப்பறிதல்.

**விளக்கம் :**

இது அகப்பொருள் 117, தொல்காப்பியக் களவியல் 14, அகப்பொருள் 118 முதல் 122 வரையுள்ள சூத்திரங்கள் ஆகியவற்றைத் தழுவியது.

**பா. வி.** 'கிழவோனு மின்னுங்' (3 வது வரி) என்ற பாடம் திருத்தமுறவேண்டும். 'எய்தூ னையம்' (4வது வரி) என்பது எய்துவது ஐயம் என்றிருக்கவேண்டும்.

86. வேண்டுஇயற்கைப் புணர்ச்சிகள்,வன் புறை,தெளிவு, பிரிவின்
 வியத்தல்.பிரி கலங்கல்,இடந் தலைப்பாடு,அன் பரிற்கூட்டு
ஈண்டுமதி யுடன்பாடு, பாங்கியினற் கூட்டம்,
 எற்குறி,எல் லிடையீடு, இராக்குறிஅல், லிடையீடு,
ஆண்டுவரை வினில்வேட்கை, வரைவுகடா வுதலே,
 அரசன்ஒரு வழித்தணத்தல், வரைவிடையே வைத்துத்
தூண்டுபொருள் வயிற்பிரிதல், என்றபதி னேழு
 தொகையினல்வகை விரியாய்வருங் களவுஎன் பதுவே [உ]

***களவிற்குரிய கிளவித் தொகை உணர்த்துகின்றது.***

**உரை :** 1. இயற்கைப்புணர்ச்சி, 2. வன்புறை, 3. தெளிவு, 4. பிரிவின் வியத்தல், 5. பிரிவுழிக் கலங்கல், 6. இடந்தலைப்பாடு 7. அன்பர் கூட்டு (பாங்கற் கூட்டம்), 8. மதி உடன்பாடு (பாங்கி மதி உடன்பாடு), 9. பாங்கியினற் கூட்டம், 10. பகற்குறி, 11. பகற்குறி இடையீடு, 12. இரவுக் குறி, 13. இரவுக்குறி இடையீடு, 14. வரைதல் வேட்கை,

(திருமணத்தில் விருப்பம்), 15. வரைவு கடாதல் (திருமணத்துக்குப் பெண் கேட்டல்) 16. ஒருவழித்தணத்தல் (திருமணம் செய்துகொள்ளவேண்டும் என்ற தோழியின் கருத்தை ஒத்துக் கொண்ட தலைவன் தன் ஊர்க்கு ஒருவழிப்போய் வருகிறேன் என்று கூறிப்போதல்), 17. வரைவிடை வைத்துப் பொருள் வயிற்பிரிதல் (திருமணத்தை உறுதி செய்துகொண்டு பொருள் ஈட்டுவதற்காகப் பிரிதல்) என்ற பதினேழு வகையும் களவிற்குரிய கிளவியின் தொகையாகும்.

**விளக்கம்:** இது நம்பியகப்பொருள் 123ஆம் சூத்திரத்தை ஒட்டியது. 'இடைமீடு' (2வது வரி) என்று மூலத்தில் இருந்தது 'இடையீடு' என்று திருத்தப்பட்டுள்ளது. 'பிரிவின் வியத்தல்' என்று வருவதைப் பின்னால் (சு ஆம். சூத். 88) பிரிந்து மகிழ்ச்சி என்று கூறுகின்றார்.

87. அதிய தெய்வப்புணர்ச்சி,கலந் துழிமகிழ்தல், நலம்பா
ராட்டல்,ஏற் புறவணிமுன் றும்வேட்கை உணர்த்தல்
அதுமறுத்தல், உடன்பாடு கூட்டம்,நால் வகைத்தால்;
இரவுஎண்ணல் இரந்து இடன்முன் னுக்குதல்மெய் தீண்டல்
மதிபொய்பா ராட்டிஇடம் பெற்றுஅணைதல் வழிபாடு
மறுத்தல்இடை யூறுசொல்ல(ல்) நீடுநினைந்து இரங்கல்
முதியமறுத்து எதிர்கொளல்வீண் (ந)கை நகைவாய்ப்பு (உ)ணர்தல்
முயங்கல்புண ருதல்புகழ்அவ் ஐமூன்றுஇறைவிப்
புணர்வே. [௩]

***இது இயற்கைப் புணர்ச்சியின் விரி கூறுகின்றது.***

**உரை:** இயற்கைப்புணர்ச்சியின் பாகுபாடாகிய இரண்டினுள் ஒன்றாகிய தெய்வக் கூட்டப்புணர்ச்சி என்பது 1. கலந்துழி மகிழ்தல் (புணர்ச்சி ஏற்பட்டபோது மகிழ்தல்), 2. நலம் பாராட்டல் (அவளது நல்ல பண்புகளைப் பாராட்டுதல்), 3. ஏற்புற அணிதல் என மூன்று வகைப்படும். மற்றொன்றாகிய தலைமகளாற் புணரும் புணர்ச்சி, 1. வேட்கை உணர்த்தல், 2. மறுத்தல், 3. உடன்படுதல், 4. கூட்டம் என்ற நான்கு

வகைப்படும். தலைமகளாற்புணரும் இப்புணர்ச்சி, 1. இரந்து வேண்ட எண்ணல், 2. இரந்து இடன் நிற்றல், 3. முன்னிலை யாக்குதல், 4. மெய்தீண்டல், 5. பொய் பாராட்டல், 6. இடம் பெற்று அணைதல், 7. வழிபாடு மறுத்தல், 8. இடையூறு சொல்லல் ,9. நீடு நினைந்து இரங்குதல், 10. மறுத்து எதிர் கொளல், 11. வீண்நகை, 12. நகை வாய்ப்பு உணர்தல், 13. முயங்குதல், 14. புணருதல், 15. புகழ்தல் என்ற சிறு பிரிவு பதினைந்து உடையது.

**விளக்கம்:** இது நம்பியகப்பொருள் 125, 126, 127 ஆகிய சூத்திரங்களை ஒட்டியது.

88. புணரும்ஐயந் தீர்த்தல்,பிரிவு அறிவுறுத்தல், இரண்டாய்;
புனைந்துழிநா ணியது(உ)ணர்ந்து தெளித்தல்,பெரு நயப்பே,
அணவுதெய்வத் திறம்பேசல், பிரியம்என்றல், பிரிவே
அறைதல்,இடம் அணித்துஎன்றல், வன்புறைஆ ருகு(ம்);
மணமகல்இ றைவிதே றுதல்ஒன்றே தெளிவா(ம்);
மாதுசெல்லுஞ் செலவுகண்டு நெஞ்சொடுகோன் சொல்லும்
உணர்வுபெறு பாக னொடு சொல்லலும்,என் றுஇரண்டாய்
ஓதுவர்,கோன் றலைவிபிரிந் துழிமகிழ்ச்சி மரபே. [ச]

***இது வன்புறை, தெளிவு, பிரிவுழி மகிழ்ச்சி ஆகிய மூன்றையும் விளக்குகின்றது.***

**உரை:** வன்புறை என்பது 1. ஐயந்தீர்த்தல், 2. பிரிவு அறிவுறுத்தல் என இரண்டு பெரும்பிரிவை உடையது. 1. புனைந்துழி நாணியது உணர்ந்து தெளிவித்தல், 2. பெரு நயப்பு உரைத்தல், 3. தெய்வத்திறம் பேசுதல், 4. பிரியேன் என்றல், 5. பிரிவைக்கூறுதல், 6. இடம் அண்மையில் உள்ளது என்று கூறுதல் என்ற ஆறு சிறு பிரிவை உடையது. இவை தலைமகன் தலைமகளது அறிவின்மை நீங்கச் சொன்ன வன்புறைச் சொற்களாம்.

தலைமகன் கூறிய சொல்லைத் தலைமகள் தெளிதல் என்ற ஒன்றே தெளிவு எனப்படும். 1. தலைவி தலைவனைப் பிரிந்து

செல்லும் செலவு கண்டு தலைமகன் தன் நெஞ்சோடு சொல்லுதலும் 2. தன் கருத்தை உணர்ந்து கொள்ளும் பாகனோடு சொல்லுதலும் என இரண்டு வகையாய்ப் பிரிந்துழி மகிழ்ச்சி வரும்.

விளக்கம்: இது நம்பியகப் பொருள் 128, 129, 130, 131 ஆகிய சூத்திரங்களைப் பின்பற்றியது.

பா. வி நெஞ்சொடுகோன் சொல்லும் என்பது (3வது வரி) சொல்லலும் என்று இருக்கவேண்டும்.

89. மருண்டு(உ)ரைத்தல், தெருண்டு(உ)ரைத்தல், இரண்டதாய் ஆயம்
வழிபடலால் மாயம் என்றல், வாயில்பெற்றே உய்தல்,
இருபண்பு கூறல்,பயந் தோர்ப்பழிச்சல், உறங்காது
இரவு(அ)ழுங்கல், ஐந்துபிரி வுழிக்கலங் கலாகும்;
தருந்தெய்வம் தெளிதல், கூடுதல்,விடுத்தல், மூன்றுய்த்;
தந்ததெய்வம் தரும் எனச்செல் லுதல்,எதிரே காண்டல்
விரைந்துபுண ருதல்,புகழ்தல் ஆயத்தொடு (உ)ய்த்தல்,
விளம்பும்ஐந் துறையும்இடந் தலைப்பாட்டின் சார்பே. [ரு]

**பிரிவுழிக்கலங்கல், இடந்தலைப்பாடு என்ற இரண்டையும் விளக்குகின்றது.**

உரை: 1. மருண்டு சொல்லுதல். 2. தெருண்டு உரைத்தல் என இரண்டு பெரும் பிரிவும் 1. ஆயம் வழிபடு தலைக்கண்டு இது மாயமோ என்று கூறுதல், 2. வாயில் பெற்று உய்தல், 3. பண்பு பாராட்டுதல். 4. பெற்றோரைப் பாராட்டுதல், 5. உறங்காது இரவு வருந்துதல் என்ற ஐந்து சிறு பிரிவும் பிரிவுழிக்கலங்கல் என்ற துறையைச் சார்ந்தன. 1. தெய்வம் தெளிதல் 2. கூடுதல், 3. விடுத்தல் என்ற மூன்று பெரும் பிரிவும் 1. (முன்னர் தலைவியைத்) தந்த தெய்வம் (மீண்டும்) தரும் எனச் செல்லுதல், 2. எதிரே காண்டல் 3. உடன் புணருதல், 4. புகழ்தல் 5. ஆயத்தோடு அவளைச் சேர்ப்பித்தல் என ஐந்து சிறு பிரிவும் இடந்தலைப்பாட்டிற்கு உரியன.

**விளக்கம்:** இது நம்பியகப்பொருள் 132 முதல் 135 ஆகிய சூத்திரங்களை ஒட்டியது.

90. சார்தல்வினு விடைமறைநேர் கூடல்கூட் டுஏழாய்த்
தலைவன்பாங் கனைச்சார்தல் உற்றதுவி னுதல்
கூறும்உற்ற துரைத்தல்பாங் கன்கழறல் மறுத்தல்
குரிசிலைப்பாங் கன்பழித்தல் வேட்கைதாங் கரிதாம்
ஏர்புரைத்தல் பாங்கன்மனத் தழுங்கல்மன் னுடுஅழுங்கல்
எவ்விடத்துஎவ் வியற்று எனல்இவ் விடத்துஇயல்இ
தென்றல்
ஆரும்இறை வனைத்தேற்றல் குறிவழியே சேறல்
அவட்காண்டல் இகழ்ந்ததனுக்கு அன்பன்இரங்
குதலே. [சு]

***இது பாங்கற் கூட்டத்தை விளக்குகிறது.***

**உரை:** *1. பாங்கனைச்சார்தல், 2. பாங்கன் தலைவனை வினவுதல், 3. பாங்கன் பதில் கூறுதல், 4. தலைவன் எதிர்மறுத்தல், 5. ஒத்துக்கொள்ளல், 6. கூடுதல், 7. பாங்கியோடுசேர்த்தல் என்று ஏழுவகைப் பெரும்பிரிவும் 1. தலைவன் பாங்கனை அணுகுதல், 2. நடந்தது என்னவென்று (பாங்கன் தலைவனைக்) கேட்டல், 3. தலைவன் நடந்தது என்னவென்று கூறுதல், 4. பாங்கன் சொல்லுதல், 5. தலைவன் மறுத்தல், 6. தலைவனைப் பாங்கன் பழித்தல், 7. தலைவன் வேட்கை தாங்குவதற்கு அரிது என்று கூறல், 8. பாங்கன் தன்மனத்து அழுங்குதல், 9. பாங்கன் தலைவனுடன் சேர்ந்து வருந்துதல், 10. பாங்கன் எந்த இடத்தில் எவ்வாறு உள்ளது என்று கேட்டல், 11. தலைவனும் இந்த இடத்தில் இவ்வாறு என்று கூறல், 12. பாங்கன் தலைமகனைத் தேற்றுதல், 13. பாங்கன் (தலைவன்) குறிப்பிட்ட வழிச் செல்லுதல், 14. தலைவியைக் காண்டல், 15. தலைவியை இகழ்ந்து சொன்னதற்குப் பாங்கன் வருந்துதல்.*

**விளக்கம்:** இது நம்பி அகப்பொருள் 136, 137 (முதல் 11 வரி வரை) ஆகிய இரண்டையும் அடியொற்றியது.

91. தலைவனையே வியத்தல்,தலை வியைவியத்தல், இறைக்குத்
தலைவிநிலை கூறல்,இறை குறிச்சேறல், காண்டல்,
கலவிபுக ழுதல்,சகியோ டுளய்துகெனல், பாங்கிற்
கலப்பித்தல். அறுநான்கும் பாங்கற்கூட் டமதாம்;
இலகியமுன் னுறவுணர்தல், குறையுறவே யுணர்தல்,
இருவருங்கூ டித்தலை வன்உற் றிடவுணர்தல், மூன்றாய்ச்
செல்வுஒழுக்கம், உண்டி,மணம், பயிற்சியொடு, தோற்றம்,
செயல்,மறைப்பு, இவ்வேழினுங்கண்டு ஐயம்முற்றோ ருதலே.
[எ]

**இது பாங்கற் கூட்டத்தின் எஞ்சிய பகுதியும் பாங்கிமதி உடன்பாடும் விளக்குகின்றது.**

**உரை:** 16. தலைவனை வியந்து கூறல், 17 தலைவியை வியந்து கூறல், 18. பாங்கன் தலைவனுக்குத் தலைவியின் நிலையைக் கூறுதல், 19. தலைவன் குறிவழிச் செல்லுதல், 20. தலைவியைக் காணுதல் 21. கலத்தல், 22. புகழுதல், 23. தோழியோடு சேர்ந்து கொள்ளச் சொல்லுதல், 24. அவர்களோடு சேர்ந்து விடுதல் ஆகிய இருபத்து நான்கு சிறு பிரிவும் பாங்கற் கூட்டம் என்ற துறைக்கு உரியன.

1. தோழி, வடிவு வேறுபாடு கண்டும் முன்னுறவுணர்தல் 2. தலைவன் தன்னிடம் குறை யுற்று நிற்பதால் உணர்தல் 3. தலைவியும் தோழியும் இருக்கும்போது தலைவன் வருவதால் உணர்தல் என மூன்று வகையும் பாங்கி, கூட்டம் உணர்ந்து ஒத்துக்கொள்வதான பாங்கி மதி உடன்பாடு ஆகும். இவற்றில் 1. நடை (ஒழுக்கம்), 2. உணவு, 3. மண (வாசனை) வேறுபாடு, 4. பயிற்சி, 5. தோற்றம், 6. செய்கை, 7. மறைப்பு என ஏழு வகைப்படும் தோழி முன்னுறவுணர்வு.

**விளக்கம்:** இது 137 ஆம் சூத்திரத்தின் 12 ஆம் வரிமுதலுள்ள வரிகளையும், 138, 139 ஆகிய சூத்திரங்களையும் தழுவியது.

92. ஐய்யமறப் பிறைதொழுகென் றிடல்,கரந்து வினவல்;
அவள்கரவு தரவுணர்தல், சுனை வியத்தல், நாணச்
செய்தல்,தகை யணங்குறுத்த, னடுங்கநா டுதலே,
சிலதியைக்கண்டு இரவுறுத்தல், கையுறைகொண் டூர்,பேர்,
மொய்கெடுதி, வழியிடைபே சாமை,நெஞ்சம் வினவல்,
முகம்புகுதல், எண்ணம்யாதுஇவர் ஆர்என்று ஓர்தல்,
மெய்தெளிதல், கையுறைகொண்டு அவ்வகைகேட் டிடல்,பின்
விடைதகைமெய் யுணர்தல்முப் பான்மதியுடன்பாட்
டிருப்பே. [அ]

*இது பாங்கிமதி உடன்பாட்டை விளக்குகிறது.*

**உரை:** *1. பாங்கியின் ஐயம் நீங்குவதற்காகத் தலைவியைப் பிறையைத் தொழுமாறு வேண்டுதல், 2. மறை முகமாக வினவுதல், 3. தலைவியின் களவை உணர்ந்து கொள்ளுதல், 4. சுனையை வியந்து உரைத்தல், 5. தலைவியை வெட்கமுறும்படிச் செய்தல், 6. தகையணங்கு உறுத்தல், 7. நடுங்கநாடுதல், 8. தோழியைக் கண்டு இரவு வலியுறுத்தல், 9. கையுறை எடுத்துக்கொண்டு ஊர் வினுதல், பெயர் வினுதல், 10. கெடுதி வினுதல், 11. போகும் வழியில் பேசாமை, 12. உள்ளக் கருத்தை வினவுதல், 13. பார்க்க விரும்புதல், 14. யார் என எண்ணுதல், 15. இவர் யார் என்று ஆராய்தல், 16. உண்மை தெரிந்து கொள்ளுதல், 17. கையுறையைக் கொண்டு ஊர், பேர் முதலியவற்றைக் கேட்டிடல், 18. பின்னல் விடை கூறுதல், 19. நகைத்தல், 20. உண்மையை உணர்ந்து கொள்ளுதல் ஆகிய இருபதும் மேலே கூறிய பத்தும் (பாங்கி மதியுடன்பாடு மூன்றும் முன்னுற வுணர்தல் ஏழும்) சேர்ந்து முப்பதும் மதியுடன்பாட்டின் வகையாம்.*

**விளக்கம்:** *இது அகப்பொருள் 132ஆம் சூத்திரத்தைத் தழுவியது.*

93. இரவு,சேட் படை,மடலின் கூற்று,மடல் விலக்கே,
மிசைதல்மடல் கூற்று,ஒழிதல், குறைநயப்பித் திடலே,
விரிநயத்தல், கூட்டல்,கூ டுதல்,ஆயங் கூட்டல்,
வேட்டல்ஈ ரறுவகைத்தாய்த்; தலைவன்உட்கோள் சாற்றல்

தெரிவைகுல முறைகிளத்தல், அவன்அவளை உயர்த்தல்,
தெரியாள்போல் வினவல்,வன் இறைவித்தன் மைஇயம்பல்,
அருமைசொலல், இன்றியமை யாதெனல்,நின் குறைநீ
அறையெனல்,பாங் கியைப்பழித்தல், பேதைமைஊட் டுதலே.
[௯௩]

**இதுவும் அடுத்த மூன்று சூத்திரங்களும் பாங்கியிற் கூட்டம் உணர்த்துகின்றன.**

**உரை:** *1. இரத்தல், 2. சேட்படை, 3. மடல் கூற்று 4. மடல் விலக்கு, 5. ஒத்துக்கொளல், 6. மடல் கூற்று ஒழிதல், 7. குறை நயப்பித்தல், 8. விரிநயத்தல், 9. தலைவனையும், தலைவி யையும் தோழி சேர்த்தல், 10. கூடுதல், 11. ஆயத்தோடு சேர்த்தல், 12. வேட்டல் ஆகிய பன்னிரண்டு பெரும் பிரிவும்; 1. தலைவன் உட்கருத்து சொல்லுதல், 2. தலைவியின் குலமுறை, (குடிவழி) கூறுதல், 3. தலைவன் தலைவியை உயர்த்திக் கூறுதல், 4. பாங்கி தெரியாதவள் போல வினவுதல், 5. தலைவியின் பண்பு நலம் கூறுதல், 6. தலைவியின் அருமை பெருமை கூறுதல், 7. தலைமகன் இன்றியமையாமை கூறுதல், 8. பாங்கி தலைவனை உன்னுடைய குறையை நீயே சென்று தலைவியிடம் கூறு என்றல், 9. தலைவன் பாங்கியைப் பழித்தல், 10. பேதைமை ஊட்டுதல்.*

**விளக்கம்:** *இது அகப்பொருள் 143, 144, 10 சூத்திரங் களை ஒட்டியது.*

94. தலைவியறிவு அவன்உரைத்தல், முற்புணர்ச்சி கூறல்,
தன்னிலைகோன் சாற்றல்,உல கியல்பாங்கி உரைத்தல்,
உலகியலைமறுத்தல்,அஞ் சிஅச்சுறுத்தல், அவன்கை
யுறைபுகழ்தல், மறுத்தல்,ஆற்று நெஞ்சோடு அழுங்கல்,
புலவிஆற் றுவித்துஇருளை சொல்,இறைவன் மடலே
பொருள்எனஎண் ணுதல்,அதனைப் புவிமேல்வைத்
துரைத்தன்,
மேவியதன் மேல்வைத்துரைத் தல்,அவையவத் தின்அருமை
விளம்பல்,தன் னைத்தான்புகழ்தல், அருள்கொண்டா
டுதலே [௯௪]

உரை: 11. தலைவியின் மூதறிவுடைமை தலைவன் கூறுதல், 12. முன்புணர்ச்சியைக் கூறுதல், 13. தன்னுடைய நிலையைத் தலைவன் கூறுதல், 14. தோழி உலகியலைக் கூறுதல், 15. தலைவன் உலகியலை மறுத்தல், 16. தோழிதான் அஞ்சித் தன் அச்சத்தைக் கூறுதல், 17. தலைவன் தான் பரிசாகக் கொண்டு வந்ததைப் புகழ்தல், 18. தோழி பரிசை மறுத்தல் 19. தலைவன் பொறுக்கமுடியாத உள்ளத்தோடு வருத்தப் படுதல், 20. தோழி வருத்தத்தை ஆற்றுவித்து நீக்குதல், 21. தலைவன் மடலே பொருள் என்று கூறுதல், 22. மடலேற்றினை உலகின் மேல்வைத்து உரைத்தல், 23. தன்மேல் வைத்து உரைத்தல், 24. தலைவி உடலுறுப்புக்களின் அருமை பெருமை கூறல், 25 தன்னைத்தான் புகழ்தல், 26. அருள் கொண்டாடுதல்.

விளக்கம்: இது அகப்பொருள் 144.11 வரிமுதல் 145 ஆகிய இரண்டையும் தழுவியது.

பாட விளக்கம்: 'இகுளை சொல்' (3-வது வரி) என்பது 'இகுளை சொல்லால்' என்று இருத்தல் நலம்.

95. கொண்டுநிலை கூறல்,இள மைத்தன்மை கூறல்,
கோதைவரு தியல்உரைத்தல், செவ்வியரிது உரைத்தல்,
அண்டுசெவ்வி எளிதுரைத்தல், எனைமறைப்பின் எளிதுஎன்று
அவள்நகுதல், நகைபொருள்புலம் பல்,அவள் தேற்றல்
பண்டுளகை யுறைஏற்றல், இறையாற்றல், குறைநேர்
பாங்கிஅவட்கு உணர்தல்,அறி யாள்போலக் கூறல்,
கண்டனன்மன் னனையென்றல், சகியைமின்ஞண் மறைதல்,
கருமறைப்பென் எனத்தழுவல், கையுறைவாழ்த் துதலே.
[௯௫]

உரை: 27.பாங்கி கொண்டு நிலைகூறல், 28. தலைவியின் இளமைத் தன்மையைத் தலைவனுக்குக் கூறல், 29. தலைவன் தலைவி தன்னை வருத்திய தன்மையைக் கூறுதல், 30. தோழி செவ்வியருமை கூறுதல், 31. தலைவன் தலைவியினுடைய செவ்வி

எளிமையைக் கூறுதல், 32. தோழி தன்னை மறைத்தால் எளிது என்று கூறிச் சிரித்தல், 33. அவளுடைய கேலிச் சிரிப்பைப் பொறுத்துக் கொள்ளாமல் புலம்புதல், 34. தோழி தலைமகனுக்கு ஆறுதல் சொல்லுதல், 35. தோழி தலைவன் முன் வைத்திருந்த பரிசை (கையுறை) ஏற்றல், 36. தலைவன் ஆற்றுதல், 37. இறைவன் குறையை உணர்ந்த தோழி அதைத் தலைவிக்கு உணர்த்துதல், 38. தலைவி ஒன்றும் அறியாதவள் போல் பதில் கூறுதல், 39. தோழி தலைவனைக் கண்டேன் என்று கூறுதல், 40. தலைவி தோழியை மறைத்தல், 41. தோழி தன்னை மறைப்பது ஏன் என்று தழுவுதல், 42. தோழி பரிசைப் புகழ்தல்.

**விளக்கம்:** கொண்டு நிலைகூறல் என்பது அகப்பொருள் 145. 8 வரியையும் ஏனையவை 146, 147 ஆம் சூத்திரங்களையும் யொற்றியன.

96. வாழ்சகிகோன் துயர்கிளத்தல், மறுப்பரிதாம் என்றல்,
மன்குறிவே றுஎனல்அவளை முனிதல்,அவள் முனிதல்,
தோழிகைக்கை யுறைஏற்றல் அவள்உடன்பா டுஅவர்க்குத்
தோழிகூறு தல்குறிக்கண் செயல்குறிக்கண்கொண் டுஏகல்
வீழ்குறிஉய்த்து அகறல்இறை வரல்புணர்தல் புகழ்தல்
விடுத்தல்சகி கையுறைகாட் டுதல்பாங்கிற் கூட்டல்,
ஆழ்தலைவற்கு ஓம்படைசாற் றுதல்விருந்தால் விலக்கல்,
அவன்விரும்பல் உடன்பாங்கிற் கூட்டுஅறுபத் தொன்றே.
[௯௨]

**உரை:** 43. தோழி தலைவனின் துயரநிலையைக்கூறுதல் 44. தலைமகன் மறுப்பது கடினம் என்று கூறல், 45. தலைமகள் குறிப்பு வேறு என்று கூறுதல், 46. தலைவியைக் கோபித்தல், 47. தலைவி பாங்கியைக் கோபித்தல், 48. தோழி கையிலுள்ள பரிசைத் தலைவி ஏற்றல், 49. தலைவி ஒப்புக் கொண்டதைத் தலைவனுக்குத் தோழி கூறுதல், 50 தோழி கூடும் இடம் குறிப்பிட்டுச் சொல்லுதல், 51. அந்த இடத்திற்

குத் தலைவியைக் கொண்டுசேர்த்தல் 52. குறியிடம் சேர்த்து விட்டுத் தோழி நீங்குதல் 53. தலைவன் அங்கு வருதல், 54. புணர்தல், 55. புகழ்தல் 56. தலைவியைவிட்டு நீங்குதல், 57. தோழி தலைவியைச் சார்ந்து கையுறை காட்டுதல், 58. ஏனைய தோழியர் கூட்டத்தோடு சேர்த்தல் 59. தலைவன் தலைவியைப் பாதுகாக்கவேண்டுமெனல் 60. விருந்து விலக்குதல் 61. தலைவன் விருந்துகொள்ள விரும்புதல் எனப் பாங்கியிற் கூட்டம் அறுபத்தொரு வகைப்படும்.

**விளக்கம்:** இது அகப்பொருளின் 148, 149 ஆகிய இரண்டு சூத்திரங்களின் தழுவல்.

97. அறுகுறிக்கண் சொல்லல்,முதல் விருந்துவெஃகல், ஈருய்
ஆறிரண்டும் பகற்குறியாம்; இரங்குதல்,வன் புறை,இற்தேவி
செறிஉணர்த்தல், மூவகைத்தாய்த், தலைவன்நீங் கிடத்திற்றே
யந்திப்பொழுதினைக்கண்டு இரங்கல்,சகிபு லம்பல்,
இறைவன்நீ டல்இறைவி வருந்தல்,சகி கழறல்,
இறையவன்முன் னிலைப்புறச்சொல் மொழிதல்,சகிக்கு உரைத்தல்,
நெறிசகியச் சுறுத்தல்,நீங் கற்கு அருமை தலைவி
நினைந்து இரங்கல், அவன்வரவு பாங்கிசொலுஞ்
சிறப்பே. [கூ]

***இது பகற்குறி விளக்குகின்றது.***

**உரை:** (மேலே கூறப்பட்ட) குறியிடம் சொல்லுதல் முதலாக விருந்தாக அழைக்கப்படுதலை விரும்புதல் ஈறாகப் பன்னிரண்டும் பகற்குறியாம். அது 1. இரங்குதல், 2. வன்புறை 3. வீட்டிலேயே இருக்கும்படி செய்தலைக் கூறுதல், (இற்செறிப்பு உணர்த்தல்) என்று மூன்று வகையினை உடையது. 1. தலைவனை நீங்கியபோது தலைவி மாலைப் பொழுதினைக் கண்டு இரங்குதல் 2. தோழி வருந்துதல் 3. தலைவன் வரும் காலத்தைக் நீட்டிக்கத்தலைவி வருந்துதல் 4. தோழி தலைவிக்குச் சொல்லுதல் 5. தலைவனோடு முன்னிலைப்புற மொழியாகக் கூறுதல் 6 தோழியோடு கூறுதல்

7. தோழி அச்சுறுத்தல் 8. நீங்குவதற்குரிய துன்பம் நினைந்து தலைவி இரங்குதல் 9. தலைவனுடைய வரவைத் தோழி கூறுதல்

**விளக்கம்:** இது அகப்பொருள் 152, 153, 154 ஆகிய சூத்திரங்களைத் தழுவியது.

98. சிறைப்புறமாச் செறிப்புஉணர்த்தல், முல்லையின்பு றச்சொற்
செப்பியுணர்த்து தல்,முன்னின்று உணர்த்துதல்,முன்னின்றுஉணர்த்தி
உறுத்தி ஓம் படை சாற்றல், தஞ்சம் இலாது இறை நெஞ்
சொடுகிளத்தல், ஈரேழும் ஒருசார்எற் குறியாந்;
தறுக்கல், செல் லல், கலக்கம் மூன்றாய்;அவ னைஅவளைச்
சகிகுறியின் விலக்கல்,இடம் பார்த்துஅழிதல், அகறல்,
குறிக்கண் இறை சென்றுஇரங்கல், வறுங்களம்பார்த்து அழுங்கல்,
குறிச்சியெண்ணி மதி மயங்கல், பகல் இடையீடு ஏழே. [௯௩]

***இது பகற்குறியும் பகற்குறி இடையீடும் உணர்த்துகின்றது.***

**உரை:** 10. தோழி சிறைப்புறமாகத் தலைவியின் செறிப்பு (வீட்டிலேயே வைக்கப்பட்டது) கூறுதல். 11. தோழி தலைமகனுக்கு முன்னிலைப் புறமொழி கூறி இற்செறிப்பை உணர்த்துதல், 12. முன்னே நின்று செறிப்பு அறிவித்தல், 13. முன்னே நின்று செறிப்பு உணர்த்தி ஓம்படை கூறுதல், 14. அடைக்கலம் பெறாது தலைமகன் தன் நெஞ்சோடு பேசுதல் என்ற பதினான்கும் பகற் குறியின் வகையாகும். 1. விலக்குதல், 2. செல்லுதல், 3. கலங்குதல் என மூன்றுபெரும் பிரிவையும் 1. தோழி முன்னர் குறிப்பிட்ட குறியிடம் தலைவன் சென்று வருதலை விலக்குதல், 2. அவ்விடத்திற்குத் தலைவி சென்று வருந்துதல், 3. குறியிடம் கண்டு தலைவி வருந்துதல் 4. அவ்விடத்தைவிட்டு நீங்குதல், 5. தலைவன் குறியிடம் சென்று வருந்துதல், 6. வறிய களத்தைப் பார்த்து அழுங்குதல், 7. தலைவி வாழும் ஊரை எண்ணி அறிவு தடுமாறுதல் எனஏழுவகைச் சிறுபிரிவினையும் பகற்குறி இடையீடு (இடையூறு) என்பர்.

**விளக்கம்:** இது அகப்பொருள் 154.9 முதல் 156 வரையுள்ள சூத்திரங்களைப் பின்பற்றி எழுந்தது.

**பாட வி :** முன்னிலைப் புறச்சொல் (முதல் வரி) என்பதே சரியான பாடம். ஆனல்' முல்லையின்' என்பது சரியெனக் கருதி சொற்' என்பது 'சேரற்' என்று மூலபிரதியிலேயே திருத்தப் பட்டுள்ளது. 'செல்ல' (3வதுவரி) என்று மூலத்தில் உள்ளது 'செல்லல்' என்று திருத்தப் பட்டுள்ளது.

**99.** பகர்வேண்டல், மறுத்தல்,உடன் படல்,கூட்டல், கூடல்,
பாராட்டல்
உயங்கல்,நீங் குதல்,எட்டு வகைத்தாய்; மகிழ்நன்
இருட்குறிவேண் டல்,பாங்கி நெறிஅருமை வகுத்தல்
இறைநெறிஎ ளிமைசொல், அவன்நாட்டு அணியைச்
சகிவினவல், அவன்அவள்நாட் டணிவினவல், அவற்குச
சகிகூறல், இறைகுறிப்புஏந் திழைக்குஇயம்பல், நேராது
அகமொடுகூ றுதல்;சகிபால் நேர்ந்துஉரைத்த(ல்),நேர்ந்து
அவற்குஇயம்பல், குறியின்நிரீஇத் தாய்துயில்ஓ ருதலே.
[௫௫]

***இரவுக்குறி விளக்குகின்றது.***

**உரை:** 1. வேண்டுதல் 2. மறுத்தல் 3. ஒத்துக் கொள்ளுதல் 4. கூட்டுதல் 5. கூடுதல் 6. கூடுதலைப் பாராட்டுதல் 7. வருந்துதல் 8. நீங்குதல் என எட்டு வகைப்படும் இரவுக்குறி. 1. தலைவன் இரவுக்குறி வேண்டுதல் 2. தோழி வரும் வழியிலுள்ள துன்பங்களைக் கூறுதல், 3. தலைவன் வரும் வழியில் துன்பம் இல்லாமையைக் (எளிமையைக்) கூறுதல். 4. அவனுடைய நாட்டு அழகு முறையைத் தோழி கேட்டல், 5. தலைவன், தலைவி நாட்டு அழகு முறை வினவுதல், 6. தலைவனுக்குத் தோழி தன்னுட்டு அழகு முறையைக் கூறுதல், 7. தலைமகனுடைய உள்ளக் கருத்தினை த் தலைவிக்குத்தோழி கூறுதல் 8. தலைமகள் ஒத்துக்கொள்ளாது தன் நெஞ்சோடு பேசுதல், 9. ஒத்துக் கொண்டு தோழியோடு சொல்லுதல், 10. தலைவி ஒத்துக்

*கொண்டதைத் தலைவனுக்குக் கூறுதல், 11. தலைமகள் குறியிடத்துக் கொண்டு வந்து நிறுத்தி வைத்துத் தாய் தூங்குகிறாளா என்று உணர்தல்.*

**விளக்கம்:** *நம்பியகப்பொருள் 157-ஆம் நூற்பாவின் தழுவல் முதல் இரண்டு வரி. ஆனால் கூட்டல், பாங்கிற் கூட்டல் என்று இருவகையாக அகப்பொருளில் இருப்பதைக் கூட்டல் என்று ஒன்றாக்கியதால் இங்கு எட்டுவகையே அமைந்துள்ளது. 158 - 11 வரி வரையுள்ள பகுதியின் தழுவல் பின்பகுதி.*

**பாட விளக்கம்:** *'பகா வேண்டல்' என்ற (முதல் வரி) மூலபாடம் பகர்வேண்டல் என்று திருத்தப்பட்டுள்ளது.*

•

100 ஓர்ந்துஇறைவிக் குஇறைவரவு சொல்அவட்கொண் டேகல்
உடன்குறிஉய்த்து அகறல்அவன் எதிர்ப்படல்ஆற் றருமை
தேர்ந்தவன்ஏங் குதல்இறைதேற் றுதல்புணர்தல் புகழ்தல்
திருஅவனைக் குறிவிலக்கல் அவன்அவளை விடுத்தல்
சார்ந்துஇகுழை கையுறைகாட் டுதல்இற்கொண்டு ஏகல்
சகிபிற்சென்று இறைவரவை விலக்கல்இறை மயங்கல்
கூர்ந்துஇறையைச் சகிஇறைவி துயர்கிளந்து விடுத்தல்
கொற்றவன்செல் லுதல்இருபத் தேழும்இராக் குறியே [௱]

***இரவுக்குறியின் தொடர்ச்சி***

**உரை:** *12. தாயின் தூக்க நிலையை அறிந்துகொண்டு தலைவிக்குத் தலைவன் வந்திருப்பதைக் கூறுதல், 13. தலைவியை அழைத்துக்கொண்டு குறியிடம் செல்லுதல், 14. தலைவியைக் குறியிடம் சேர்த்தபிறகு தோழி நீங்குதல், 15. தலைவனைத் தலைவி நேரே பார்த்தல், 16. தலைவன் வரும் வழியின் துன்பங்களை அறிந்து தலைவி ஏங்குதல், 17. தலைவன் தலைவியைத் தேற்றுதல், 18. புணர்தல், 19. புகழ்தல், 20. தலைமகள் தலைமகனைக் குறிவிலக்குதல், 21. தலைமகன் தலைமகளை வீட்டிற்குப் போகவிடுதல், 22. தோழி தலைமகளை அடைந்து கையுறையைக் காட்டுதல், 23. தோழி தலைமகளை*

வீட்டிற்கு அழைத்துக்கொண்டுபோதல் 24. தோழி தலைவன் பின்சென்று அவன் வரவை விலக்குதல் 25 தலைமகன் மயங்குதல் 26. தலைவியின் துயரநிலையை எடுத்துக்கூறித் தலைவனை விடுத்தல் 27. தலைவன் செல்லுதல் ஆக இருபத்தேழும் இரவுக்குறியின் விரியாகும்.

**விளக்கம்:** இது அகப்பொருள் 158-12 வரி முதல் உள்ள பகுதியின் தழுவல்.

**பாட விளக்கம்.** ஈராக் குறி (கடைசி வரி) என்பது மூலபாடம்.

101. இரவு இடையீடு அல்ல குறி; வரற்கு அருமை, எனவாய்
இகுளை இற வரவு உணர்த்தல், இறைவிதான் குறியின்
மருள்வது சாற் றுதல், இறைதீங்கெடுத்து இகுளை இயம்பல்,
மனன் புலந்து ஏகுதல், வளவின் வறுங்களம் கண்டு
இரங்கல்
தரமுறுதன் துணைக்கு உரைத்தல், அவள் அவலம் பாங்கி
தணித்தல், இறைமேற்பாங்கி குறிபிழைப்பு ஏற்றுதல் கோன்
கருவிழிமேல் ஏற்றல்,அவள் குறிமருட்சி சொலல்,கோன்
கடுஞ்சொல்அவட்கு உணர்த்தல்,கவன் றுஎன்பிழைப்பு
அன்று எனவே. [ள]

***இது இரவுக்குறி இடையீடு பற்றி விளக்குகின்றது.***

**உரை:** இரவுக்குறி இடையீடு என்பது 1. அல்ல குறியும் (குறியில்லாதபோது உண்டாகும் போலிக்குறி) 2. வருவதற்கு அருமையும் (வருவதற்குரிய துன்பம்) என இரண்டு வகையினை உடையது. 1. தோழி தலைவன் வந்திருப்பதைக் கூறுதல், 2. தலைவி தான் குறி அஞ்சியதைக் கூறுதல், 3. தோழி தலைமகனுக்குரிய தீங்கு எடுத்துக் கூறுதல், 4. தலைவன் மனம் வருந்திப் போகுதல். 5. பொழுது விடிந்த பிறகு வறுங்களம் கண்டு தலைவி வருந்துதல், 6. தன்னுடைய தோழிக்குக் கூறுதல், 7. தலைவியின் துன்பத்தைத் தோழி தணித்தல், 8. குறிதவறியது தலைவனால் ஏற்பட்டது என்று

தோழி கூறுதல், 9. தலைவி மேல் தலைவன் குற்றம் சாட்டுதல், 10. தலைவி குறி மருண்டமையைத் தோழி தலைவனுக்குச் சொல்லுதல், 11. தலைவன் கூறிய கடுஞ்சொல்லைத் தலைமகளுக்குத் தோழி உணர்த்துதல், 12. தலைவி தன்னுடைய தவறு இல்லை என்று கூறுதல்.

**விளக்கம்:** இது அகப்பொருள் 159, 160, ஆகிய இரு சூத்திரத்தையும் தழுவியது.

**பாட விளக்கம்:** தனித்தல் (3வது வரி) என்னும் மூல பாடம் தணித்தல் என்று கொள்ளப்பட்டுள்ளது.

102 அன்புறுதாய் நாய்ஊர்துஞ் சாமைகா வலரால்
அச்ச(ம்)நிலா வெளிப்படல்கூ கைகுழறல், கோழி
தன்குரற்காட் டுதல்பத்துஒன் பான்துறையாம், அச்சந்
தகும்உவர்ப்புஆற் றுமைமூன் றுய்ச் சகிநா யகிபால்
துன்பம்வினு வுதல்,செவிலி மறைஅறிந்து அவட்குச்
சொல்இறையோன் வரற்குஅருமை சொல்,இறைஊர்ப் படாதும்
என்றல்,சகி அவற்பழித்தல், இறைவிஇறை வனைநொந்து
இயற்படுத்தல், கனவுஅழிவு, கவின்அழிவு, சொல்லே, [மஅ]

**இது இரவுக்குறி இடையீடும் வரைதல் வேட்கையும் கூறுகின்றது.**

**உரை:** 13. தாய் தூங்காதிருத்தல், 14. நாய் தூங்காதிருத்தல், 15. ஊர் தூங்காதிருத்தல் 16. காவலர் வருகின்ற அச்சம், 17. நிலா வெளிப்படுதல், 18. கூகை கூவுதல், 19. கோழிகூவுதல் எனப் பத்தொன்பதும் இரவுக்குறி இடையீட்டிற்கு உரியன. 1. அச்சம், 2. வெறுப்பு, 3. ஆற்றுமை என மூன்று பெரும் பிரிவினை உடையது வரைதல் வேட்கை.

1. தோழி தலைவனிடம் துன்பம் வினுவுதல், 2. இரகசியத்தைத் தோழி தலைவிக்குச் சொல்லுதல், 3. தலைமகன் வருதற்குரிய துன்பத்தைச் சொல்லுதல், 4. தலைமகன் ஊர் செல்வான் என்றல், 5. தோழி தலைவனைப் பழித்தல்,

6. தலைமகள் தலைமகனை இயற்பட மொழிதல், 7. கனவில் வருந்துதலைச் சொல்லுதல், 8. அழகு நலம் கெடுதலைச் சொல்லுதல்.

**விளக்கம்:** முதற்பகுதி அகப்பொருள் 161, 162 ஆகிய இரண்டையும் தழுவியது. 160, 161 ஆகிய சூத்திரங்களில் முறையே 12உம் 7உம் கூறிவிட்டு 162இல் 18 என்று கூறுவது வியப்பாக உள்ளது. பிற்பகுதி 163, 164.7 வரையுள்ள பகுதியின் தழுவலாகும்.

103. சொலும்இறைவற்கு இடர்கூற வேட்டல்சகி துயர்நீ
சொல்என்றல், அலர்அச்சம், ஆற்றச்சம் உரைத்தல்,
கலிகாம(ம்) மிக்ககழி படர்கிளவி, தன்னுட்
கையாறுஎய் திடுகிளவி நெறி, குறியே வெறியே,
குலவுபிறர் விலக்குவித்தல்; தமரைவரைவு எதிர்வு
கொள்வித்தல், பத்தொன்பான் வரைவுவேட் கையதாம்;
வலியபொய்த்தல், மறுத்தல், கழறு தல்மெய்த்தல் நான்கு
வகையாகும் வரைவுகடா தலைஇனனங்காலே. [௰௩]

**வரைதல் வேட்கையும் வரைவு கடாதலும் கூறுகின்றது.**

**உரை:** 9. தலைமகள் தன்னுடைய துன்பத்தைத் தலைவனுக்குக் கூறும்படித் தோழியைத் தூண்டுதல், 10. தோழி உன்னுடைய துயரை நீயே சொல் என்று தலைவிக்குக் கூறுதல், 11. ஊரார் பேச்சுக்கு (அலர்) அஞ்சுதல், 12. தலைவன் வரும் வழி பற்றிய அச்சம் சொல்லுதல், 13. விருப்பம் மிகுதியால் துன்பத்தைச் சொல்லுதல், 14. தான் விருப்பத்தை அடக்க முடியாத செயலற்ற தன்மையால் தோன்றும் சொற்களைச் சொல்லுதல், 15. நெறி, 16. குறி, 17. வெறி, ஆகியவற்றை விலக்குவித்தல், 18. பிறர் விலக்குவித்தல், 19. உறவினரைத் திருமணம் ஏற்பாடு செய்யச் சொல்லுதல் ஆகிய பத்தொன்பதும் திருமணம் செய்து கொள்ள விருப்பம் (வரைவு வேட்கை) கூறும் பிரிவுகளாம்.

1. பொய் சொல்லுதல், 2. மறுத்துக் கூறுதல், 3. பேசுதல், 4. உண்மையைக் கூறுதல் ஆகிய நான்கு பிரிவும் திருமணம் செய்து கொள்ளக் கேட்டுக் கொள்ளும் (வரைவு கடாதல்) துறையைச் சேர்ந்தனவாகும்.

**விளக்கம்:** நம்பியகப்பொருள் 164இல் கூறப்பட்ட செய்திகளே மேல் சூத்திரத்தில் 2-வது வரியில் 'சகிநாயகி பால்' என்று தொடங்கி இச்சூத்திரத்தில் மூன்றுவது வரி வரை (வரைவு கடாதலை வினவுதல் – வரைவு கடாதல்) கூறப்பட்டுள்ளன. ஆயினும் நம்பியகப் பொருளில் 18 கிளவிகளே ('உரைபெற வகுத்த ஒன்பதிற்று இரட்டியும் வரைதல் வேட்கை விரியெனப் படுமே') கூறப்பட்டுள்ளது. எனவே அவர் கருத்துப்படி பிறர் விலக்குவித்தல் என்பது தனிக்கிளவியாகக் கருதப்படாது, முன்னர் உள்ள கிளவியோடு சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். சாமிகவிராயரோ அதையும் தனியாகக் கொண்டு 19 கிளவி என்று கூறியுள்ளார்.

104. வினவுதாய்க்குஒளித் தமைகூறு தல்,அலர்அச் சுறுத்தல்,
வெறியச்சம், தாய்அறிவு, பிறர்வரைவும் உணர்த்தல்,
அனுவிலவரை வு,எதிர்வுஉணர்த்தல், வரையும்நாள்
உணர்த்தல்
அறிவுஉணர்த்தல் குறிபெயர்த்தல், இறைவாய்மை, நாடுஊர்
இனியபுகழ் மரபுகுலன் கூறல்பகற் குறிநீத்து,
இரவில்வரவு எனல் இரவில் வரிற்பகல்வா வென்றல்,
புனைஇரவும் பகலும்வா வெனல்,இரவும் பகலும்
போவெனல்,ஏர் அழிபுஉரைத்தல், ஆற்றச்சஞ் சொல்லே.
[உ௰]

***இது வரைவு கடாதலின் விரிவை விளக்குகின்றது.***

**உரை:** 1. வினவிய தாய்க்கு மறைத்துக் கூறியதை உரைத்தல், 2. ஊரார் பேச்சு உண்டாகும் என்று அச்சம் உண்டாக்குதல், 3. வெறி அச்சுறுத்தல், 4. தாய்க்குத் தெரியும் என்று கூறுதல், 5.பிறர் திருமணம் செய்துகொள்ள விரும்புதலை

உணர்த்தல், 6. அதற்கு எதிர்ப்புக் கூறுதல், 7. திருமண நாள் உணர்த்துதல், 8. (தலைமகளுடைய) அறிவு தலைமகனுக்கு உணர்த்துதல், 9. குறியை மாற்றுதல், 10. தலைவனுடைய வாய்மை, நாடு, ஊர், புகழ், மரபு, குலன் ஆகியவற்றைக் கூறுதல், 11. பகலில் வராது இரவு வருக என்றல், 12. இரவில் வந்தால் பகலில் வருக என்று கூறுதல், 13. பகலிலும் இரவிலும் வருக என்று கூறுதல், 14. பகலிலும் போ என்று கூறுதல், 15. அழகு அழிந்ததைக் கூறுதல், 16. வரும் வழியிலுள்ள துன்பத்திற்கு அஞ்சும் அச்சம் சொல்லுதல்.

விளக்கம் : இது அகப்பொருள் 166 முதல் பதினொன்று வரிவுரையுள்ள பகுதியைத் தழுவியது.

105. ஆற்றுகிலாத் தன்மைஆற்று எனல்,காவன் மிகுதி,
ஆசைமிகல் சொலல்கனவு நலிபுஉரைத்தல், இருபான்
கூற்றும்வரை வுகடாதல் விரியாகுஞ்; செலவு
கூறல்,தடை, நேர்வித்தல், நேர்,கலங்கல், வினவல்
தேற்றல்,ஏழாய்த்; தன்போக்குஉணர்த் தல்,சகிவி லக்கல்,
செயவேண்டல், விடுத்தல்,அவட்கு உணர்த்தல்,நெஞ்சிற் புலத்தல்
சாறறுசகி ்தறறல்,வந் ததுஉணர்த்தல், நேர்ந்து
சகிகோன்ரும் வினவல்,சகி விடை,பன்ஞென்று ஒருசார்
தணப்பே. [உக]

**வரைவு கடாதலின் விரியும் ஒருவழித் தணத்தலும் கூறுகின்றது.**

**உரை :** 17. பொறுத்துக்கொள்ளமுடியாத தன்மையைப் பொறுத்துக்கொள் என்று கூறுதல், 18. காவல் மிகுதியாக இருப்பதைக் கூறுதல், 19. ஆசை மிகுதியாக இருப்பதைக் கூறுதல், 20. கனவால் துன்பப்படுதலைக் கூறுதல் ஆகிய இருபது கூற்றுக்களும் வரைவு கடாதலின் விரியாகும். 1. சொல்லப்போகிறேன் என்று கூறுதல், 2. அதற்குத் தடை கூறுதல், 3. ஒத்துக்கொள்ளச் செய்தல், 4. ஒத்துக் கொள்ளல், 5. (சென்றவுடன்) கலங்குதல், 6. விசாரித்தல்,

7. தேற்றல் என்று ஏழு வகைப்படும் ஒருவழித்தணத்தல். 1. தான் ஊர்க்குச் செல்லப் போவதைக் கூறுதல், 2. தோழி விலக்குதல், 3. தலைவன் செல்லவேண்டும் என்று கூறல், 4. தோழி போகவிடுதல், 5. தலைவன் சென்றதைத் தலைவிக்குச் சொல்லுதல், 6. தலைவி தன் நெஞ்சோடு வருந்திப் புலம்புதல், 7. தோழி ஆற்றுவித்தல், 8. தலைவன் வந்துள்ளதைக் கூறல், 9. தோழி தலைவனை வினவுதல், 10. தலைவன் தோழியை வினவுதல், 11. தோழி விடைகூறுதல் என்ற பதினொரு கூற்றும் ஒருவழித்தணத்தலின் வகைப்படும்.

**விளக்கம்:** இது 166.12, 167, 168 ஆகிய அகப்பொருள் சூத்திரங்களை ஒட்டியது.

'நேர்ந்து சகிகோன் வினவல்' என்பதைத் தோழி தலைவனை வினவுதலும் தலைவன் தோழியை வினவுதலும் என இருவகையாகக்கொண்டது, மொத்தம் பதினொரு கூற்று வர வேண்டும் என்று கருத்தின் அடிப்படையிலாகும். எனவே நேர்ந்தது என்பது 'ஒருவரையொருவர்' என்று பொருளையும் நேர்தல் என்பது 'எதிர்' என்ற பொருளையும் அடியொற்றியது. நம்பியகப்பொருள் 168ஆம் சூத்திரத்தில் ஒருவழித்தணத்தலின் விரி பன்னிரண்டு என்று கூற இவ்வாசிரியர் பதினொன்று கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

நெஞ்சொடு புலம்பலுக்குப் பிறகு வரும் 'சென்றோன் நீடலின் காமமிக்க கழிபடர் கிளவி' என்ற கிளவியே இங்கு விடப்பட்டுள்ளது.

இது நம்பியகப்பொருள் 166.11 முதலுள்ள பகுதியையும் 167ஆம் சூத்திரத்தையும் தழுவியது.

106. தணப்புணர்த்தல்,தடை, நேர்வித் திடல்,நேர்தல் பிரிவாற்
றுன்கலங்கல், வன்புறைவன் பொறை,வருங்காற் கலங்கல்,
உணர்த்துவந்த மகிழ்ச்சி,ஒன் பதாய் அவட்கு என்பொருட்
போக்கு
உரையெனல்நீ உரையெனல்நீ டேன்எனக்கோ(ன்) நீங்கல்,
பணப்பிரிவை அவட்குஉணர்த்தல், அவள் இரங்கல் கடுஞ்
சொற்
பாங்கிசொலல், இறைவிகடு மொழிமொழிதல் பாங்கி
மணத்தலைவர் மீண்டுவரு குவர்எனவற் புறுத்தல்,
மயில்பருவங் கண்டுஇரங்கல், இருளைவம்பென் றிடலே[உஉ]

**வரைவு இடைவைத்துப் பொருள் வயிற்பிரிவு விளக்குகின்றது.**

*1. பிரிவு அறிவுறுத்தல், 2. பிரிவைத் தடைசெய்தல் 3. பிரிவை ஒத்துக்கொள்ளச் சொல்லுதல் 4. (தலைவி) பிரிவை ஒத்துக்கொள்ளுதல், 5. பிரிவைப் பொறுத்துக்கொள்ள முடியாமல் கலங்குதல், 6. வன்புறை (ஆற்றியிரு என்று வற்புறுத்திக்கூறல்), 7. வன்பொறை (பெரிதாகப் பொறுத்துக்கொள்ளுதல்), 8. தலைவன் வந்தபோது கலங்குதல், 9. தலைவன் வந்ததால் மகிழ்ச்சியடைதல் என்ற ஒன்பதும் வரைவிடைவைத்துப்பொருள் வயிற்பிரிவு என்ற துறையின் பெரும் பிரிவாகும் 1. நான் பொருள் ஈட்டுவதற்குப்போகிற செய்தியைத் தலைவிக்குக் கூறுக எனத் தோழியிடம் கூறுதல், 2. தோழி தலைவனையே அச்செய்தியைக் கூறும்படிசொல்லுதல், 3. காலம் நீடிக்கமாட்டேன் என்று கூறித் தலைவன் நீங்குதல், 4. தலைமகன் பொருள் ஈட்டுவதற்காகப் பிரிந்ததைத் தலைவிக்குத் தோழி கூறுதல், 5. தலைமகள் வருந்துதல், 6. தோழி தலைவியிடம் கடுஞ்சொற்களைக் கூறுதல், 7. தலைவி கடுஞ்சொற்களைச் சொல்லுதல், 8. தலைவன் திரும்பி வந்து விடுவான் என்று வற்புறுத்தித் தோழி கூறுதல், 9. தலைவன் குறிப்பிட்ட பருவம் வந்துவிட்டது என்று உணர்ந்து தலைவி வருந்துதல், 10. தோழி பருவமில்லாத பருவம் என்று கூறுதல்.*

**விளக்கம்:** *இது அகப்பொருள் 169, 170.9 வரையுள்ள பகுதியைப் பின்பற்றியது.*

107. வம்பல என்று இறைவி சொல், அவர்தூதாய் அப்பருவம்
வந்தெனச் சகி சொலல், பெண்ஆற்றல், சென்ற இடத்து
நம்பி புலம்புதல், வருங்காற்பாகன், முகிலுடன், கோன்
நவின்று இரங்கல், வலம்புரி கேட்டவன் வரவு கூறல்,
கம்பைமின்னுள் வாழ்த்துதல்,வந்தோனுடன் நினைப்பு வினவல்,
காளைநினைத்தமை கூறல் அவனை ஆற்றுவித்த
சொம்பு சொல் எனமூவேழும் பொருட்பிரிவாம், களவின்
துறை ஏழிலா முன்னூறு என்பர்இரு நிலத்தே. [உ௩]

***இது வரைவு இடைவைத்துப் பொருள்வயிற்பிரிதல் விளக்குகின்றது.***

*__11.__ பருவம் இல்லாத பருவம் இல்லை, சரியான பருவமே என்று தலைவி கூறுதல், __12.__ தலைவருடைய தூதாகப் பருவம் வந்தது என்று தோழி கூறுதல், __13.__ தலைவி பொறுத்துக் கொள்ளுதல், __14.__ தலைவன் பொருள் தேடச் சென்ற இடத்துப் புலம்புதல், __15.__ தலைவன் திரும்பி வரும்போது தேர்ப்பாகனொடு (பிரிவாற்றுமை) சொல்லி வருத்தப்படுதல், __16.__ மேகத்துடன் சொல்லுதல், __17.__ வலம்புரிச் சங்கு ஒலி கேட்டுத் தலைவன் வருகின்றான் என்று கூறுதல், __18.__ சங்கைத் தலைவி வாழ்த்துதல், __19.__ வந்த தலைவன் (தலைவியை) நினைத்தானா என்று கேட்டல், __20.__ தலைவன் நினைத்தேன் என்று கூறுதல், __21.__ தலைவி பொறுத்துக் கொண்டிருந்த தன்மையைக் கூறல் ஆக இருபத்தொரு கூறும் வரைவிடை வைத்துப் பொருள் வயிற்பிரிவு என்பதன் கூற்றுப் பகுதிகளாம். ஆக மொத்தம் களவுக்குரிய கிளவி 293 ஆகும்.*

**விளக்கம் :** *இது அகப்பொருள் 170.9 வரியிலிருந்து வந்த பகுதியைப் பின்பற்றியது.*

**பாட விளக்கம் :** *முன்னூரென்பர் (4வது வரி) என்ற மூலபாடம் முன்னூறு என்று திருத்தப்பட்டுள்ளது.*

108. இருவரைவாம், தமர்தரத்த ராதுஇறைவன் மணத்தல்;
இதின்முற் கூறேவரைவு மலிவுஅறத்து நிலையாம்;
வரைவுமுயல் வுஉணர்த்தல்வரைவு எதிர்வுஉணர்த்தல் வரைவால்
மகிழ்தல்என மூவகைத்தாய்க்; காதலுக்குஇகுளை
நிருபன்முலை விலைகொடுத்தது உணர்த்தல்அனை மகிழ்ச்சி
நினைத்தல்தமர் வரை வுஎதிர்ந்தது உணர்த்தல்கன்னி மகிழ்தல்
அரும்இறையைப் புகழ்தல்மணத் தாற்தெய்வம் தொழல் பார்த்
தருளகெனல்; கண்டோர்மகிழ்வு ஏழ்வரைவு மலிதலுக்கே. [உச]

***வரைவும் வரைவு மலிதலும் விளக்குகின்றது.***

**உரை:** *1. தலைவியை உறவினர் கொடுக்க மணம் செய்து கொள்ளலும், 2. உறவினர் தராதபோது மணம் செய்து கொள்ளலும் எனத் திருமணம் செய்து கொள்ளல் இருவகைப்படும். 1. வரைவு மலிதல், 2. அறத்தொடு நிற்றல் என இரண்டும் வரைவிற்குரிய கிளவிகள். 1. திருமணம் செய்து கொள்ள முயற்சி செய்வதைக் கூறுதல், 2. திருமணம் ஆகப்போவதை உணர்த்தல், 3. திருமணத்தால் மகிழ்தல் என்று மூன்று வகையினை உடையது வரைவு மலிதல். 1. காதலன் முலைவிலை கொடுத்தமையைத் தோழி தலைவிக்குக் கூறுதல். 2. அன்னை பெறும் மகிழ்ச்சியை நினைத்துப் பார்த்தல். 3. உறவினர் திருமணம் ஒத்துக்கொண்டதைத் தோழி தலைவிக்குக் கூறுதல், 4. தலைவி செய்திகேட்டு மகிழ்ச்சி அடைதல், 5. தலைவனைப் புகழ்ந்து கூறுதல், 6. மணம் காரணமாகத் தலைவி கடவுளை வணங்குதலைப் பார்க்கும்படி தலைவனிடம் கூறுதல், 7. தலைவி கடவுளை வணங்குதலைக் கண்ட தலைவன் மகிழ்தல் என ஏழுவகைச் சிறுபிரிவை உடையது வரைவு மலிதல்.*

**விளக்கம்:** *அகப்பொருள் 171, 173, 174 ஆகிய மூன்று சூத்திரங்களையும் தழுவியது. நம்பியகப்பொருள் வரைவு முயல்வு*

உணர்த்தல், வரைவு எதிர்வு உணர்த்தல் வரைவு அறிந்து மகிழ்தல், பராவல் கண்டு உவத்தல் என நான்கு வகையாகக் (சூத் 173) குறிப்பிடுகின்றது. ஆனால் சாமி கவிராயர் 'பராவல் கண்டு உவத்தல்' என்ற பெரும் பிரிவை எடுத்துக் கொள்ளவில்லை.

**பாட விளக்கம்:** 'முற்கூறே வரைவு மலி வறத்தி லையாம்' (முதல் வரி) என்ற மூலபாடம், முற்கூறே வரைவு மலிவு அறத்து நிலையாம் என்று திருத்தப்பட்டுள்ளது.

109. தலைப்படுமுன் னிலைபுறச்சொல் இரண்டாய்மான் கண்ணீர்
சகிதுடைத்தல் கலுழ்ஏதுக் கூறல்தெய்வங் காட்டிச்
செரலத்தெளிந்தது உணர்த்தல்இகப் புரைத்தல்
இயற்பழித்தல்
துணிவின்இயற் படுத்தல்தெய்வம் பொருமைசெய்வோம்
என்றல்
தலைப்பின்மனைச் செறிப்புஉணர்த்தல் இருள்வருமன்
னனைத்தாய்
கண்டுஉரைத்தல் இறைவிஅற நிலைஒன்பான் வெறியை
விலக்கல்விலக் கனைவினவல் இவள்விகற்பு ஏதுஎனல்பூ
வேழ(ம்)நீர்ப் புணர்ச்சிசொலல் ஆறுசகி அறமே [உரு]

***அறத்தொடு நிற்றலை விளக்குகின்றது.***

**உரை:** அறத்தொடு நிற்றல் என்பது 1. முன்னிலை மொழியும், 2. முன்னிலைப் புறமொழியும் (முன்னே இருக்கும் போது நேரே கூறாது பிறருக்குக் கூறுவார் போலக் கூறுதல்), என்ற இருவகையை உடையது. அறத்தொடு நிற்றல். 1. தலைவியின் கண்ணீரைத் தோழி துடைத்தல், 2. தலைவி வருந்துவதற்குரிய காரணத்தைக் கூறுதல், 3. தலைமகன் தெய்வத்தைக் காட்டிச் சொன்னதால் தெளிவடைந்ததை உணர்த்துதல், 4. தலைவன் பிரிந்ததைத் தலைவி தோழிக்குக் கூறுதல், 5. தலைவன் பண்புகளை இகழ்ந்து கூறுதல், 6. பின்னர் ஆராய்ந்து உணர்ந்து தலைவன் குணங்களைப் புகழ்ந்து உரைத்தல்

7. தெய்வம் பொறுத்துக்கொள்ளாமையைச் செய்வோம் என்று கூறுதல், 8. வீட்டிலேயே இருக்கும்படிச் செய்துள்ளதைக் கூறுதல், 9. இரவு வரும் தலைவனைத் தாய் நேரே பார்த்ததைக் கூறல் எனத் தலைவி அறத்தொடு நிற்றல் ஒன்பது கூற்றுக்களை உடையது. 1. வெறியை விலக்குதல், 2. தாய் தோழியை வினவுதல், 3. தலைவிக்கு வேறுபாடு ஏற்பட்ட காரணம் என்னவென்று கூறுதல், 4. பூ காரணமாகவோ, 5. களிறு காரணமாகவோ, 6. நீர் காரணமாகவோ ஏற்பட்ட புணர்ச்சியால் தோழி அறத்தொடு நிற்பாள்.

**விளக்கம்:** நம்பியகப்பொருள் தலைவி அறத்தொடு நிற்றலை எழுவகைப்படுத்திக்கூற (176) இந்நூல் ஒன்பது வகையாகக் கூறியுள்ளது. இது அகப்பொருள் 175, 176, 177 ஆகிய மூன்றையும் அடியொற்றியது.

110. அறம்உணர்தாய் செவிலையைப்பெண் வேற்றுமைவி னுதல்
அவள்முன்னின்று உணர்த்தல்இரண் டேசெவிலி
அறமாம்;
முறையின்இவை அறத்தோடு நிலைபதினே ழாகு(ம்);
மூவெட்டுங் களவுவெளிப் படுமுன்வரை வாகும்
இறையுடன்போய்வரைதல்,மீண் டேவரைதல்,உடன்போக்கு
இடையீடுஉற்றேவரைதல், வெளிப்படை,மூன்று அதனினம்;
இறைதவிரும் போக்கே,கற் பொடுபுணர்ந்த கவ்வை
மீட்சிஎன வேதொகைமூன்றும்உடன்போய் வரைவே. [உகூ]

***செவிலி அறத்தொடு நிற்றலும் உடன்போய் வரைவும் விளக்குகின்றது.***

**உரை:** 1. தாய் தலைவியிடம் காணப்படும் வேறுபாடு கண்டு செவிலியை வினவுதல், 2. செவிலி தாயின் முன்னே இருந்து நேரே கூறுதல் என்ற இரண்டும் செவிலி அறத்தொடு

நிற்றற்கு உரிய கிளவியாகும். ஆக அறத்தொடு நிற்றலுக்குரிய கிளவி பதினேழு (தலைவி-9, தோழி-6, செவிலி-2) ஆகும். வரைவு மலிதலுக்குக் கூறிய ஏழுகிளவியும் அறத்தொடு நிற்றலுக்குக் கூறிய பதினேழு கிளவியும் ஆக இருபத்து நான்கு கிளவியும் களவு வெளிப்படுமுன் வரைவிற்குரியன.

1. தலைவருடன் சென்று மணஞ்செய்து கொள்ளுதல், 2. சென்றுவந்தபின் மணஞ்செய்துகொள்ளல், 3. தலைவனுடன் செல்ல இடையூறு ஏற்பட்டபின் வரைதல் என மூன்று வகையும் களவு வெளிப்பட்டபின் ஏற்படும் வரைவாகும். இதனுடைய இனமாக 1. தலைவனுடன் தலைவி செல்லும் உடன்போக்கை ஒத்திப்போடுதல், 2. தலைவி தலைவனுடைய உடைமையாய்க் கற்போடு கூடி இருத்தலைப் பலரும் அறிதல், 3. புதல்வியைத் தேடிச்சென்று செவிலி மீண்டு வருதலும், உடன்போன தலைவனும் தலைவியும் மீண்டு வருதலுமான மீட்சி ஆகிய மூன்றும் உடன்போய் வரைவின் பாகுபாடாகும்.

**விளக்கம்:** இது 178, 179, 180 ஆகிய மூன்று அகப்பொருள் பாடலின் தழுவலாகும்.

**பாட விளக்கம்:** 'அறமுணர்த்தாய்' (முதல் வரி) என்ற மூலபாடம் அறம் உணர்தாய் என்றும் 'வேற்றுமை வீனுதல் (முதல் வரி) என்பது வேற்றுமை விளுதல் என்றும் திருத்தப்பட்டுள்ளன. 'முன்றதனின்மிறை' (3ம் வரி) என்ற மூலபாடம், மூன்று அதன் இனம் இறை' என்று திருத்தப்பட்டுள்ளது.

111. போக்குஉணர்த்தல், நேராமை, நேர்வித்தல், நேர்தல்,
போக்கல்,விலக் குதல்,புகழ்,தேறு ஏற்றல்,எட்டு வகைத்
தாய்த்
தூக்குசகி இறைக்குஉடன்போக் குஉணர்த்தல் அவன்
மறுத்தல்,
தோழிஉடன் படுத்தல்,உடன் படுத்தல் அவட்கு
உணர்த்தல்,
ஏற்கும்நாண் அழிபுஇரங்கல் கற்புஉயர்ச்சி கூறல்
இசைந்து,எழுதல், சுரத்துஇயல்பு சொல்,இறைவி மறுத்தல்
ஆக்குறுகை யடைகொடுத்தல், வைகிருளில் விடுத்தல்
அவன்சுரத்தின் உய்த்தல்அசைவு அறிந்திருத்தல் உடனே.
[உஎ]

***இது உடன் போக்கின் வகையும் விரியும் உணர்த்துகின்றது.***

**உரை :** *1. தலைவியை உடன் அழைத்துச்செல்லும்படி தலைவனுக்குக் கூறுதல், 2. தலைவனும் தலைவியும் மறுத்தல், 3. இருவரையும் உடன்போக்கிற்கு ஒத்துக்கொள்ளும் படிச் செய்தல், 4 இருவரும் ஒத்துக்கொள்ளுதல், 5. இரு வரும் செல்லவிடுதல், 6. தலைவியின் தளர்ச்சி கண்டு இருவரும் மேலும் போகாமல் கண்டோர் தடுத்தல், 7. தலை வன் தலைவியைப் புகழ்ந்து கூறுதல், 8. தலைவியைத் தேற்றுதல், ஆகிய எட்டு வகையினை உடையது உடன்போக்கு. 1. தோழி தலைமகனுக்கு உடன் போக்குக் கூறுதல், 2. அதற்குத் தலைவன் ஒத்துக்கொள்ளாது மறுத்தல், 3. தோழி தலைவனை ஒத்துக்கொள்ளச் செய்தல், 4. தலைவன் ஒத்துக்கொள்ளுதல், 5 தலைவன் ஒத்துக் கொண்டதைத் தலைவிக்குத் தோழி கூறுதல், 6. தலைவி நாணம் அழிந்து போவதற்கு இரங்குதல், 7. கற்பின் மேம் பாட்டைத் தோழி கூறுதல், 8. தலைவி ஒத்துக்கொண்டு புறப்படுதல், 9. தோழி பாலைவனத்தின் இயல்பைக் கூறுதல், 10. தலைமகள் மறுத்தல், 11. தோழி தலைவியைத் தலைவன் கையில் ஒப்படைத்தல், 12. விடியற் காலத்தில் தலைவனும் தலைவியும் செல்லுதல், 13. தலைமகனைத்*

தலைமகன் பாலைவனத்திற்கு அழைத்துச்செல்லுதல், 14. தலைமகள் இயலாமை அறிந்து தங்குதல்.

**விளக்கம்:** 'உடன்படுத்தலுடன் படுத்தல் அவட்குணர்த்தல்.....................'என்ற பாடமே காணப்படுகிறது. அடுத்த நூற்பாவில் மொத்தம் பத்தொன்பது எனக்கூறப்படுவதாலும் உடன்படுத்தலும் தலைவன் போக்கு உடன்படுதலும் பாங்கி தலைவிக்கு உடன்போக்கு உணர்த்தலும் என்ற மூன்றுகக் காணப்படுவதாலும் உரையில் மூன்றுக விரித்து எழுதப்பட்டது. அல்லது 'சுரத்து இயல்பு சொல் — தலைவி மறுத்தல்' என்று இருப்பதைத் தோழி சுரத்து இயல்பு கூறுதல் தலைவி மறுத்தல் என இரண்டாகவும் கொள்ளலாம்.

இது அகப்பொருள் 181, 183:10 ஆகிய வரையுள்ள பகுதியின் தழுவல்.

112. உடன்கலந்துபூச் சூட்டிமகிழ்ந்து உரைத்தல்,அதைக் கண்டோர்

அயிர்த்தல்,அவர் விலக்கல்,பதி அணிமை சொலல்,ஊர்
அடைந்தமைகூ றுதல்,பத்தொன் பானும்உடன்போக்காம்;
அணிசெவிலி புலம்பல்,நற் ருய்புலம்பல், மனைமருட்சி,
இடுங்கண்டோர் மொழி,செவிலி பின்தேடிச் சேறல்,
என்றுஐந்தாய்ச் செவிலிபாங்கி யைவினவல்; பாங்கி
மடந்தைபோக்குஉணர்த் தல்,தேற்றினர்க்கு எதிர்சொற்று அழுங்கல்,
வருசெவிலி அறிவின்மை சொலல்,தெய்வந் தொழலே.
[உஅ]

**உடன் போக்கின் விரியும் கற்பொடு கவ்வையும் விளக்குகிறது**

உரை: 15. உடன் கலந்து பூச்சூட்டி மகிழ்ந்து அளவளாவுதல், 16. அதைப் பார்த்தவர்கள் ஐயம் அடைதல், 17. பார்த்தவர்கள் அவர்களை விலக்குதல், 18. தலைவனுடைய ஊர் அருகில் இருப்பதைக் கூறல், 19. தலைவன் ஊர் வந்துவிட்டதைத் தலைவிக்குக் கூறுதல் ஆகப் பத்தொன்பதும்

உடன் போக்கிற்கு உரிய கிளவிகளாகும். 1. செவிலி புலம்புதல், 2. தலைமகளைப் பெற்ற தாய் (நற்றாய்) புலம்புதல், 3. மனையின்கண் இருந்து நற்றாய் வருந்துதல், 4. இவர்கள் வருந்து தலைக் கண்டவர்கள் இரங்கிக் கூறுதல், 5. செவிலி தலைவியைத் தேடிக்கொண்டு செல்லுதல் என ஐந்து வகைப்படும் கற்பொடு புணர்ந்த கவ்வை.

1. செவிலி தோழியைக் கேட்டல், 2. தோழி, தலைவி தலைவனுடன் உடன்போக்கு போனமையைக் கூறுதல், 3. தன்னைத் தேற்றுவார்க்குப் பதில் கூறிக்கொண்டு வருந்துதல், 4. எதிர்வருகின்ற செவிலியினுடைய அறியாமை எடுத்துச் சொல்லுதல், 5 செவிலி தெய்வத்தை வணங்குதல் என்று செவிலி புலம்பல் மட்டும் ஐவகையாக வரும்.

**விளக்கம்.** இது அகப்பொருள் 182: 11 முதல் உள்ள பகுதியையும், 183, 184, ஆகிய சூத்திரங்களையும் தழுவியது. அகப்பொருளில் உடன்போக்கு பதினெட்டுக்கிளவிகளேபெறும் என்று கூறியிருக்க இவர் பத்தொன்பது என்று குறிப்பிடுகிறார்.

**பாட விளக்கம்.** '(பதி) அணுமை (சொல்)' என்ற மூல பாடம், அணிமை என்று திருத்திக் கொள்ளப்பட்டுள்ளது.

அனை மருட்சி என்பது மூலபாடம். அகப்பொருளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது (செவிலி புலம்பல் நற்றாய் புலம்பல் கவர்மனை மருட்சி - 183, 1, 2) மனை மருட்சி என்று திருத்திக்கொள்ள வேண்டியுள்ளது என்பது தெளிவாகும். ஆனால் நம்பியகப்பொருள் 186 ஆம் பாட்டில் 'ஐந்து மனை மருட்சிக்குரிய' என்ற பகுதியின் பழைய உரையில் 'ஐந்தும் அனை மருட்சிக்குரிய' என்ற பொருள் கொள்ளப்பட்டிருப்பதை அகப்பொருள் பதிப்பாசிரியர் கா.ரா. கோவிந்தராச முதலியார் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்கள் (அகப்பொருள் பக். 226 அடிக்குறிப்பு).

113. தொழுசெவிலி நற்றாய்க்குச் சொல்லநற்றாய் இரங்கல்,
தோழியாரட் டம்அயலார் தோழியொடும் புலம்பல்,
அழுசகிபாற் புலம்பு(ல்)நிமித் தம்போற்றல் சுரத்தை
ஆற்றுவித்தல், தன்மகள்மென் மைத்தன்மைக்கு இரங்கல்
எழில் இளமைக்கு இரங்கல் அச்சமதற்கு இரங்கல் கண்டோர்
இரங்கல்ஆற்றாத் தாயைச் செவிலிதேற் றுதல்பின்
னுழிநடத்தல் வழியின்முக் கோற்பகவரை வினாதல்
மற்றுஏது காட்டல்எயிற் றியைவினா வுதலே. [௨௬]

***இது கற்பொடு புணர்ந்த கவ்வையின் விரி உணர்த்துகின்றது.***

**உரை:** *1. செவிலி தலைவியின் உடன்போக்கை நற்றாய்க்குச் சொல்ல அவள் வருந்துதல், 2. தோழி புலம்புதல், 3. அயலார் தோழியோடு வருத்தப்படுதல், 4. நற்றாய் தோழியிடம் வருத்தப்படுதல், 5. (தலைவி வரும்) அறிகுறி (நிமித்தம்) கண்டு பாராட்டுதல், 6. பாலைவனத் துன்பத்தைப் பொறுத்துக்கொள்ளுதல், 7. தன் மகளுடைய மென்மைத் தன்மைக்கு இரங்குதல், 8. இளமைத் தன்மைக்கு வருந்துதல், 9. தன்மகளின் அஞ்சும் குணத்திற்கு இரங்குதல், 10. கண்டோர் இரங்குதல், 11. தலைவியின் பிரிவைப் பொறுத்துக் கொள்ள முடியாத அன்னையைச் செவிலி தேற்றுதல், 12. பின் செவிலி தேடிச்செல்லுதல், 13. போகும்வழியில் முக்கோற் பகவரை வினவுதல், 14. அதற்கு அவர்கள் (செவிலி கவலைப் படாமல் இருப்பதற்குரிய) காரணத்தை எடுத்துச்சொல்லுதல், 15 செவிலி எயிற்றியை வினவுதல்.*

**விளக்கம்:** *இது அகப்பொருள் 185 முதல் 188.3 வரையுள்ள பகுதியின் தழுவலாகும்.*

114. வினையில்குர வொடுபுலம்பல், சுவட்டினைக்கண் டிரங்கல்,
மேற்கலந்து வருவோரை வினவல்,அவர் தேற்றல்,
அனைமகட்கா ணுதுதுன்பம் உறல்இருபத் தெட்டும்
அறிந்திடுகற் பொடுபுணர்ந்த கவ்வையாம்; தெளிதல்

தனிமகிழ்ச்சி வினவல்செப் பல்,நால்வகைத்தாய்ச்; செவிலி
தலைவிசேண் அகன்றமைதாய்க்கு உணர்த்தல், நம்மூர்ச்
சார்ந்தோம்
எனஇறைவிக்கு இறைசொலல்,தம் வரவுமுன் செல்வோரோடு
இருளையர்க்கே சொலிவிடுத்தல், அவள் அவர்க்கு ஓதுதலே.
[௩௰]

***இது கற்பொடு புணர்ந்த கவ்வையின் எஞ்சிய பகுதியும் மீட்சியும் விளக்குகின்றது.***

**உரை:** *16. குராமரத்தோடு புலம்புதல், 17. சென்றவர்களின் அடிச்சுவட்டினைக் கண்டு வருந்துதல், 18. தன்னுடன் வருவோரை வினவுதல், 19. அவர்கள் செவிலியைத் தேற்றுதல், 20. அன்னை (செவிலி) மகளைக் காணாது வருத்தம் அடைதல். ஆக இருபத்தெட்டுக் கிளவியும் கற்பொடு புணர்ந்த கவ்வைக் குரியன. 1. உண்மையைத் தெளிதல், 2. மகிழ்ச்சி அடைதல், 3. வினவுதல், 4. சொல்லுதல், என நான்கு வகையாய் வரும் மீட்சி. 1. தலைவி நீண்டதூரம் சென்று விட்டமையைச் செவிலி தோழிக்கு உணர்த்தல், 2. நம் ஊருக்கு அருகே வந்துவிட்டோம் என்று தலைவிக்குத் தலைவன் கூறுதல், 3. தங்களுடைய வருகையை முன்னே செல்வோர் வழியாகத் தோழிக்குச் சொல்லி அனுப்புதல், 4. முன்னே செல்வோர் போய்த் தோழிக்குச் சொல்லுதல்.*

**விளக்கம்:** *அகப்பொருள் 188.4 முதல் 191.5 வரையுள்ள பகுதியைப் பின்பற்றி எழுந்தது கற்போடு புணர்ந்த கவ்வை இருபத்தெட்டு என்று கூறியுள்ளர். ஆனால் இங்கு பெரும்பிரிவு ஐந்தும் செவிலிபுலம்பல் என்ற சிறுபிரிவு ஐந்தும். ஏனைய சிறுபிரிவுகள் இருபதும்தான் காணப்படுகின்றன. எனவே இருபத்தெட்டுக் கிளவி என்று கூறியதன் பொருத்தம் விளங்கவில்லை. நம்பியகப்பொருள் கற்பொடு புணர்ந்த கவ்வைக்கு இருபத்தொருகிளவியே (180) என்று கூறியுள்ளது.*

115 ஓதுபாங்கியர் நற்ருய்க்குஉணர்த் தல்நற்ருய்இறைவன்
உளங்கொள்வே லனைவினவல், ஆறு(ம்)மீட் சியதாம்;
ஈதுரையுடன் சென்றுவரைத லாம்வினவல், இயம்பன்
மேவுதல்,முன் ருய்மன் னயர்வேட்கை யிற்ருய்
வாதிகலசெவி லியைவினவல், செவிலிக்கே பாங்கி
வரைந்ததுஉணர்த் தல்செவிலி தாய்க்குஉணர்த்தல்
இறையோன்
தாதியுடன் நுமர்க்கியான் வரைந்தமைகூறுஎன்றல்
தான்முன்கூ றியதுஉணர்த்தல், ஐந்து(ம்)மீள் வரைவே.
[௧௧]

***மீட்சியின் ஒரு பகுதியும், மீள் வரைவும் உணர்த்துகின்றது***

**உரை:** 5. அது கேட்ட தோழியர் நற்ருய்க்கு உணர்த்துதல், 6. தலைவனுடைய உள்ள (மன) நிலையை அறிந்து கொள்ள வேலனைக் கேட்டல் என்ற ஆறும் மீட்சியின் விரியாகும். தலைவியுடன் போய் வரைந்து மீண்டும் வருதலும் உரித்து. 1. நற்ருய் செவிலியை வினவுதல், 2. முன்னரே திருமணம் நடந்தமை கூறுதல், 3. உறவினர்க்கு உரை என்று கூறுதல் என்ற மூன்று வகையும் மீள்வரைவு என்பதின் பெரும் பிரிவாகும். 1. திருமணம் செய்ய வேண்டும் என்ற விருப்பத்தோடு செவிலியைக் கேட்டல், 2. செவிலிக்குத் திருமணம் நடந்து விட்டதைத் தோழி கூறுதல், 3. அதைச் செவிலி நற்ருய்க்கு உணர்த்துதல், 4. தலைவன் தோழியிடம் உறவினர்க்கு யான் திருமணம் செய்து கொண்டமையைக் கூறு என்று கூறுதல், 5. தோழி முன்னரே அச்செய்தியைக் கூறி விட்டேன் என்று கூறுதல் என்ற ஐந்தும் மீள் வரையின் விரியாகும்.

**விளக்கம்:** இது நம்பியகப் பொருள் 191·6 முதல் உள்ள பகுதி 192, 193, 194 ஆம் சூத்திரங்கள் ஆகியவற்றை அடியொற்றியது. நம்பியகப்பொருள் வினுதல், செப்பல், மேவல் என்ற மூன்றையும் அவற்றின் விரிவாய்ப் பின்னர் கூறப்படுவதையும் தன் மனை வரைதல் (தனுதில் வரைதல்) என்று குறிப்பிட்டுள்ளது.

116. மீண்டும்போக்கு உணர்த்தல்அலர் உணர்த்தல்நீங் கிருக்கல்
மீட்சியென, நால்வகைத்தாய்; நீங்குஇறைவி தம்போக்
காண்டபாங்கி யர்க்குஉணர்த்தி விடுத்தல்ஈன் றுட்கும்
அவையுணர்த்தி விடுத்தல்நற் றுய்க்குஅந்தணர் வந்து
உணர்த்தல்
ஈண்டுதமர்க்கு அனையுணர்த்தல், தமர்சேறல், அதுகண்டு
இறைவிஇறைக்கு உணர்த்தல்அவன் விடுத்துஅகறல்
செல்வாள்
தாண்டிறையின் பார்த்தழுங்கல், மணம்கண்டோர்மகிழ்தல்,
சாற்றும்ஒன்பான் போக்குஇடையீடு உற்றுவரைந் திடலே.
[கஉ]

***போக்கு இடையீடு உற்று வரைதலை விளக்குகின்றது.***

**உரை**: *1. மீண்டும் தலைவனும் தலைவியும் சென்றதைக் கூறுதல், 2. ஊரார் தூற்றுதலைக் கூறுதல், 3. நீங்கி யிருத்தல், 4. மீண்டமை என நான்கு வகைப்படும் போக்கு இடையீடு உற்று வரைதல். 1. உடன்போக்குக்கு நீங்குகிற தலைவி தன்போக்கைத் தோழியர்க்கு உணர்த்துதல், 2. தன்னுடைய தாய்க்கும் உணர்த்துதல், 3. தாய்க்கு அந்தணரும் வந்து கூறுதல், 4. உறவினருக்கு அன்னை கூறுதல், 5. உறவினரும் சேர்ந்து கொள்ளுதல், 6. இதைப் பார்த்துத் தலைவி தலைமகனுக்குக் கூறுதல், 7. தலைவன் தலைவியை விடுத்து நீங்குதல், 8. தலைவி (உறவினருடன்) செல்லுதலைத் தலைவன் பார்த்துக்கொண்டிருந்து பின்னர் வருந்துதல், 9. திருமணத்தைக் கண்டோர் மகிழ்தல் ஆகிய ஒன்பதும் போக்கு இடையீடு உற்றுவரைதல் (தலைவன் தலைவியுடன் உடன் போக்குச் செல்லும்போது பிரிந்துசென்று பின்னர்த் திருமணம் செய்து கொள்ளுதல்) என்பதன் கிளவிகளாகும்.*

**விளக்கம்**: *இது அகப்பொருள் 197, 198 ஆகிய இரண்டையும் தழுவியது. அகப்பொருளில் உடன்போக்கு இடையீடு என்ற தலைப்பில் ஆறு கிளவிகள் மட்டுமே அதன் விரியாகச் சொல்லப்பட்டுள்ளன.*

117. உற்றிடுமுத் தொகையினுற்க ளவுவெளிப் படையி
னுள்வரைவின் துறைஅறுபத் தேழுஆகும்; வரைவு
பெற்றதுதொண் ணூற்றுஒன்ரும்; இல்வாழ்க்கை பரத்தைப்
பிரிவுஓதற் பிரிவு, காவற்பிரிவு, தூதிற்
சொற்றபிரிவே, துணையிற் பிரிவு, பொருட்பிரிவு, ஏழ்
தொகைகற்பாம்; அவையில்இறை யோன்மகிழ்வே, இறைவி
பற்றுமகிழ்வே, பாங்கி மகிழ்வு, தாய் மகிழ்வாய்ப்
பன்னியதுஓர்இல்வாழ்க்கை நால்வகையின் இறுமே. [கக]

***இதுவரைவுக்குரிய துறைகளின் தொகையையும் கற்பையும் விளக்குகின்றது.***

*உரை: களவு வெளிப்படும்போது வரைவின் துறை அறுபத்தேழு ஆகும்.*

| | |
|---|---|
| உடன் போக்கு | 19 |
| கற்பொடு புணர்ந்த கவ்வை | 28 |
| மீட்சி | 6 |
| மீள்வரைவு | 5 |
| போக்கு இடையீடு | 9 |
| வரைவு | 67 இதனுடன் |
| வரைவு மலிதல் | 7 |
| அறத்தொடு நிற்றல் | 17 |
| வரைவு பெற்றது | 91. |

*1. இல்வாழ்க்கை, 2. பரத்தையிற் பிரிவு, 3. ஓதற் பிரிவு, 4. காவற் பிரிவு, 5. தூதுசொல்லப் பிரிதல், 6. துணை செல்வதற்காகப் பிரிதல், 7. பொருள் ஈட்டுவதற்காகப் பிரிவு என்ற ஏழுவகையும் கற்பு ஒழுக்கத்திற்கு உரியன. இவற்றில் 1. தலைவன் மகிழ்ச்சியடைதல், 2. தலைவி மகிழ்ச்சி*

யடைதல், 3. தோழி மகிழ்ச்சியடைதல், 4. தாய் மகிழ்ச்சி யடைதல் என்று நான்குவகையினை உடையது இல்வாழ்க்கை.

**விளக்கம்:** கற்பு பற்றிய கருத்துக்கள் நம்பியகப் பொருள் 201, 202, ஆகிய இரண்டையும் பின்பற்றி எழுந்தன.

118. இறைஇறைவி முன்சகியைப் புகழ்தல்,இறை யவனை
இருளைவாழ்த்து தல்வரையு(ம்) நாள்அளவும் வருந்தாப்
பொறை,இறைவி பாற்பாங்கி வினவல்,அவள் உணர்த்தல்,
பூமானை வரையுமட்டும் பொறுத்தமைகேட் டிடல்,கோன்
அறைதல்,சகி மணமனையில் வருசெவிலிக்கு இருவர்
அன்புறவு சொலல்,வாழ்க்கை அறைதல்,மண வீட்டிற்
றறுகிவரு செவிலிதாய்க்கு இறைவிமனை வாழ்க்கை
சாற்றல்,கற்புச் சொலல்,காதல் சொலல்,பதினொன் ருமே.
[௩.௬]

*இல்வாழ்க்கையின் விரிவுணர்த்துகின்றது*

**உரை:** 1. தலைவன் தலைவிக்கு முன்னால் தோழியைப் புகழ்தல், 2. தலைவனைத் தோழி வாழ்த்துதல், 3. திருமணம் ஆகும் நாள் வரையும் வருந்தாமல் பொறுத்துக் கொண்டிருந்ததைத் தலைவியிடம் தோழி கேட்டல், 4. அதற்குத் தலைவி பதில் கூறுதல், 5. தலைவன் திருமணம் முடியுமட்டும் பொறுத்திருந்தமையைத் தோழி கேட்டல், 6. தலைவன் அதற்குப் பதில் கூறுதல், 7. தலைவனும் தலைவியும் வாழும் வீட்டிற்கு வந்து இருவருடைய அன்பான உறவைக் கண்டு அதைச் செவிலிக்குத் தோழி கூறுதல், 8. அவர்களுடைய இல்வாழ்க்கை நன்று என்று கூறுதல், 9. மண வீட்டிற்குச் சென்று வந்த செவிலி தலைவியின் குடும்ப வாழ்க்கையைப் பற்றித் தாய்க்குக் கூறுதல், 10. தலைவியின் கற்பு நிலையைத் தாய்க்குத் தெரிவித்தல். 11. இருவர் காதலையும் தெரிவித்தல், எனப்பதினொரு கிளவியும் இல்வாழ்க்கையின் விரியாகும்.

**விளக்கம்:** நம்பியகப்பொருள் *203* ஆம் சூத்திரத்தை அடியொற்றியது. ஆனால் நம்பியகப்பொருளில் பத்து வகைக் கிளவி மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. தலைமகன் திருமணம் வரை பொறுத்திருந்ததைத் தோழி கேட்டல் என்ற ஒரு கிளவி மட்டுமே அங்கு உள்ளது. ஆனால் இந்நூலில் அதற்கு அவன் பதில் கூறுதல் என்பதும் தனித்துறையாகக் கருதப்பட அவ்வாறு நம்பியகப் பொருளில் சேர்க்கப்படவில்லை.

**பாட விளக்கம்:** 'இகுழை வாழ்த்தூதல்' என்ற மூல பாடம் இகுளை வாழ்த்துதல் என்று திருத்தப்பட்டுள்ளது.

119. மேவவேண்டு தல்,மறுத்தல், மகிழ்தல்,வினு நேர்தல்,
விடுத்தல்,அறு வகைப்பரத்தைப் பிரிவாகும்; அதனிற்
காவலன்நீங் குழிப்புலவிக்கு இவட்குஏதுஇது என்றே
கண்டோர்கூ றுதல்,தனித்த தலைவிதுனித்து இரங்கல்,
ஒஇதுஎன் னெனத்தோழி வினவல்,இறை புறத்தின்
ஒழுக்குஇறைவி சொலல்,பாங்கி கழறுதல்,செவ் வணியைப்
பாவைசே டியர்க்குஅணிதல் அணிந்துவிடல், அணியூர்ப்
பார்த்துஅழுங்கல், கண்டுபரத் தையர்கள்பழித் திடலே.
[நரு]

***இது பரத்தையிற்பிரிவு உணர்த்துகின்றது.***

**உரை:** *1.* பொருந்தும்படி வேண்டுதல், *2.* அதற்கு மறுத்தல், *3.* மகிழ்ச்சி அடைதல், *4* வினவுதல், *5.* ஒத்துக் கொள்ளுதல், *6.* விடுத்தல் என ஆறுவகையை உடையது பரத்தையிற்பிரிவு, *1.* தலைவன் நீங்குவதைக் கண்டோர்கள் தலைவியின் புலவிக்குக் காரணம் அதுதான் (அவன் பிரிவு) என்று கூறுதல், *2.* தனித்து இருக்கும்போது தலைவனை வெறுத்து வருத்தப்படுதல், *3* வருத்தப்படுவது எதற்கு என்று தோழி விசாரித்தல், *4.* தலைவனுடைய புற ஒழுக்கத்தைத் (பரத்தையிற் பிரிவு) தலைவி தோழிக்குச் சொல்லுதல், *5.* தோழி பதில் சொல்லுதல், *6.* செவ்வணி (பெண்கள்

பூப்பெய்தியதை அறிவிக்க அணியும் சிவந்த மலர்) பாவை சேடியர்க்கு அணிதல், 7. அணிதலைப் பார்த்து ஊரார் வருந்துதல், 8. அதைக்கண்டு பரத்தையர்கள் பழித்தல்.

**விளக்கம்:** இது நம்பியகப்பொருள் 204, 205.9 வரையுள்ள பகுதியை அடியொற்றியது. ஆயினும் நம்பியகப் பொருள் பரத்தையிற் பிரிவாக நான்கு கிளவிகளையே கூறியுள்ளது. மகிழ்தல், வினா என்ற இரண்டும் இவர் கூறிய புதிய கிளவிகள்.

**120.** பரத்தைஉல கியல், நோக்கி விடல்,விடலில் தலைவன்
படர்தல்,கண்டு வாயில்கள்கூ றுதல்,பாங்கி இறைவிக்கு
உரைத்தல்,அவள் எதிர்கொண்டு பணிதல், புணர்ந் திடல்
பத்தொடுநான்கும் உணர்த்தஉணர்ந் திடும்ஊடல் ஈனவாம்;
இரட்டுறும்வெள் ளணிஅணிதல், அணிந்து விடல் விடுங்கால்
இறைவாயில் வேண்டல்,நெய் யாடியதுஇகு ளைசாற்றல்
தரிப்பின்மன மகிழ்ச்சிஅவன் சொலல்,சகிகோன் வரவு
தலைவிக்குஓ துதல்,அவள்ஓர்ந்து இறையோடுஊ
டுதலே. [௩௬]

***இது உணர்த்த உணர்ந்திடும் வாயில்களையும் உணர்த்த உணரா ஊடற்குரிய கிளவிகளையும் கூறுகின்றது.***

*9. பரத்தை உலகியல் நோக்கித் தலைவனை விடுதல், 10. அதனால் தலைவன் வீட்டிற்குச் செல்லுதல், 11. அவன் வருதலைக்கண்டு துணையாக இருப்போர் (வாயில்கள்) கூறுதல், 12. அதைத் தோழி தலைவனுக்குக் கூறுதல், 13. தலைவி எதிர் சென்று பணிதல், 14. இருவரும் சேர்ந்திடல் எனப் பதினான்கும் உணர்த்த உணரும் ஊடலுக்குரிய கிளவிகள் ஆகும்.*

*1. வெள்ளணி அணிதல், 2. அணிந்து விடுதல், 3. அப்போது தலைவன் வாயில் வேண்டல், 4. தலைவி நெய் யாடியது (எண்ணெய் தேய்த்துக் குளித்தது) தோழி சொல்லுதல், 5. தலைவன் மகிழ்ச்சி அடைவதைச் சொல்லுதல்,*

6. தோழி தலைவனுடைய வரவைத் தலைவிக்குச் சொல்லுதல், 7. தலைவி உணர்ந்து தலைவனோடு புலத்தல்.

**விளக்கம்:** முற்பகுதி, அகப்பொருள் 205–9 முதல் உள்ள பகுதியைத் தழுவியது. ஆயினும் அகப்பொருள் உணர்த்த உணரும் ஊடற்கிளவிகள் பதினொன்றே கூறியுள்ளது.

**121.** ஊடல்இலா மகவேந்தல் பாணன்முதல் வாயி
லோர்வேண்டல், மறுத்தல்முனிந் திடல்,பழித்தல்,அவர் போய்
நீடிறைவர்க்கு உரைத்தல்,விருந் தொடுவருகாற் பொறுத்தல்
நிருபன்கண்டு உவத்தல்பின் னும் ஊடல்புறங் காட்டல்,
ஆடவன்ஊ டலைநோக்கிச் சீறேல்என் றவள்சீர்
அடிதொழல்ஈது எங்கையர்கண் டிடில்நன்றன்று என்றல்
தேடலர்யா ரையும்அறியேன் எனல்,காமக் கிழத்தி
செலக்கண்ட துணர்த்தல்சகி அவளைஆற் றுதலே.

[கூள]

உணர்த்த உணரா ஊடற்குரிய கிளவிகளின் ஒரு பகுதி கூறுகின்றது.

8. ஊடல் கொள்ளாத மகவை எடுத்தல், 9. பாணன் முதலிய வாயிலோர் வேண்டுதல், 10. தலைமகள் வாயில் மறுத்தல், 11. கோபித்தல், 12. பழித்தல் 13. பாணர் தலைமகனிடம் சென்று சொல்லுகல், 14. தலைவன் விருந்தினர்களோடு வரும்போது தலைவி பொறுத்துக் கொள்ளுகல், 15. தலைவன் அதைக் கண்டு மகிழ்ச்சி அடைதல், 16. பின்னர் தலைவி ஊடுதல், 17. புறங்காட்டுதல், 18. தலைவன் தலைவியின் ஊடலைக்கண்டு கோபித்துக் கொள்ளாதே என்று அவள் அடியை வணங்குதல், 19. இந்நிகழ்ச்சியைத் தன்னுடைய சகோதரியர் கண்டால் நல்லது அல்ல என்று தலைவி கூறுதல், 20. யாரையும் எனக்குத் தெரியாது என்று கூறுதல், 21. காமக்கிழத்தி சென்றதைத் தான் பார்த்து உணர்த்தல், 22. தோழி தலைவியை ஆற்றுதல்.

**பாட விளக்கம்:** 'இரைவர்க்கு' (2—வது வரி) என்ற மூலபாடம் இறைவர்க்கு என்று திருத்தப்பட்டுள்ளது.

122. ஆறுகிலா,து ஊடல்,பா லனைப்பழித்தல், அதுகண்
டவன்ஊடல், கொடியையெனச் சகிஅவனை இகழ்தல்,
கூறுஇருபா றுஉணர்த்த உணராஊ டலதாம்,
கோதைமைந்தன், ஆற்றுமை வாயில்களாய் வருங்கால்
தேறிஎதிர் கொளல்,மணத்தல், மணந்தவன்போ கியபின்
சேர்த்தபுதல் வனைப்புகழ்தல் சகிஅவளைப் புகழ்தல்,
ஏறியநாற் றுறைஉணரா ஊடல்நீக் குதலாம்
இவைநாற்பான் நான்குமதன் விரிவெனப்பே சுவரே.[௩அ]

**உணர்த்த உணரா ஊடற்கிளவியில் ஒரு பகுதியும் ஊடற் கிளவியின் ஒருபகுதியும் ஊடல் நீக்குதலுக்குரிய கிளவியும் விளக்குகின்றது.**

**உரை:** 23. பொறுத்துக்கொள்ளாது ஊடல், 24. மகனைப் பழித்தல், 25. அதைக்கண்டு தலைவன் ஊடல், 26. கொடியவன் என்று தோழி தலைவனைக் கூறுதல் என்ற இருபத்தாறு கிளவியும் உணர்த்த உணரா ஊடலுக்குரிய கிளவிகளாய்ப் பரத்தையிற் பிரிவின் கண் நிகழும். 1. மகனும் (தந்தையின் பிரிவைப்) பொறுத்துக் கொள்ளாததன் காரணமாகத் தலைவன் வீட்டிற்கு வரும்போது தலைவியின் மனம் அமைதிப்பட்டு ஏற்றுக்கொள்ளுதல், 2. மணத்தல், 3. புணர்ந்து நீங்கியபின் தலைவனைத் தன்னோடு சேர்தற்குக் காரணமான புதல்வனைப் பாராட்டுதல், 4. தோழி தலைவியைப் புகழ்தல் என்ற நான்கும் ஊடல் நீக்குதற்குரியன. உணர்த்த உணர்த்திடும் ஊடலுக்குரிய பதினன்கு வகையும் உணர்த்த உணரா ஊடலுக்குரிய இருபத்தாறு வகையும் ஊடல் நீக்குதலுக்குரிய நான்கு வகையும் சேர்த்து வரும் நாற்பத்து நான்கு வகையும் பரத்தையிற் பிரிவுக்குரிய விரியாகும்.

**விளக்கம்:** மேலே இரண்டு சூத்திரமும் இதுவும் அகப்பொருள் 206, 207 ஆகிய இரண்டையும் தழுவியன.

உணர்த்த உணரா ஊடற்கிளவிகளாக நம்பியகப்பொருள் (206 இல்) பதினைந்து கிளவிகளே பேசுகின்றது.

123. பேசுபிரிவு, அறிவுறுத்தல், பிரிவுஉடன்படாமை
பிரிவைஉடன் படுத்தல்,உடன் படுதல்பிரி கலக்க(ம்)
மாசறுவன் புறையேவன் பொறைவருங்கால் கலக்கம்
வந்தவழி மகிழ்ச்சிஎன்று ஒன்பான்வகையாகுங்
வீசுகல்வி முதலாம்வ கைப்பிரிவும் வகையே
விரியாய்ஐ யொன்பானும் அகப்புறமும் கலப்பாம்
தேசுயர்கற் பிடைத்துறைநா ருமைகோள் இரண்டில்
சேர்க்கும்அகப் பொருள்துறைநா னூற்றெண்பா னன்கே.
[கூ௩]

**இது பிரிவு வகைகளை உணர்த்துகின்றது.**

**உரை:** 1. தலைவன் தான் பிரியப் போகின்றேன் என்று கூறுதல், 2. அதற்குத் தலைவி ஒத்துக்கொள்ளாமை, 3. தலைவன் ஒத்துக்கொள்ளும்படிச் செய்தல், 4. தலைவி ஒத்துக்கொள்ளுதல், 5. தலைவன் பிரிந்த போது கலங்குதல், 6. (தோழி) பிரிவைப் பொறுத்துக்கொள்ளும்படி வற்புறுத்திக் கூறுதல், 7. தலைவி பொறுத்துக் கொள்ளுதல், 8. தலைவன் வரும்போது வருத்தப்படுதல், 9. வந்தபோது மகிழ்ச்சியடைதல் என்னும் ஒன்பது வகையினை, கல்விப்பிரிவு, காவற்பிரிவு, தூதிற்பிரிவு, துணை வயிற்பிரிவு, பொருள் வயிற்பிரிவு என்ற ஐந்து வகைப்பிரிவுகளும் உடையன. இந்த நாற்பத்தைந்து வகையும் அகப்புறத்தைச் சார்ந்தது. கற்பிற்கு உரிய துறைகள் நூறு (இல்வாழ்க்கைக்குரியது 11, பரத்தையிற் பிரிவுக்குரியது 44, ஏனைய பிரிவுக்குரியது 45); ஆக மொத்தம் அகப்பொருள் துறை நானூற்றுஎண்பத்துநான்கு.

| | |
|---|---|
| களவியல் | 293 |
| வரைவியல் | 91 |
| கற்பியல் | 100 |
| | 484 |

**விளக்கம்:** இது அகப்பொருள் 209ஆம் சூத்திரத்தைத் தழுவியது.

124. எண்ணும்திணை கைகோள்கூற் றெடுகேட்போர் காலம்
இட(ம்)மெய்ப்பாடு எச்ச(ம்)முன்னம் பயன்பொருளே துறையாய்
நண்ணிரண்டாறு அகத்துறுப்பாம் இவற்றின்விரிவு ஒழிபா
நவின்றனமுன் றிணைகைகோள் இரண்டாகுந் தலைவி
அண்ணல்பார்ப் பான்பாங்கன் சகிசெவிலி கூற்றும்
ஆறும்அறை கூற்றுகும் அக்கூற்றோடு அறிவோர்
பண்விறலி தாய்கண்டோர் பரத்தையரே கூத்தர்
பாணர் ஏழுக் கூற்றமேகற் பினிற்கூற் றுரித்தே. [சுய]

***அகப்பாட்டு உறுப்புகளும் கூற்றும் உணர்த்துகின்றது.***

**உரை:** *1. திணை, 2. கைகோள், 3. கூற்று, 4. கேட்போர், 5. காலம், 6. இடம், 7. மெய்ப்பாடு, 8. எச்சம், 9. முன்னம், 10. பயன், 11. பொருள், 12 துறை எனப்பன்னிரண்டும், அகப்பாட்டு உறுப்புக்களாகும். இவற்றுள் திணை, கைகோள் ஆகிய இரண்டும் மேலே விளக்கப்பட்டன. 1. தலைவி, 2. தலைவன், 3. பார்ப்பான், 4. பாங்கன், 5. தோழி, 6. செவிலி ஆகிய ஆறு பேரும் களவுக்காலத்துக் கூற்றிற்கு உரியவராவர். இவர்களோடு 1. அறிவோர் (முக்கோல் பகவர் போன்றவர்). 2. விறலி, 3. தாய், 4. கண்டோர், 5. பரத்தையர், 6. கூத்தர், 7. பாணர் ஆகிய ஏழு பேரும் கற்புக் காலத்துக் கூற்றிற்கு உரியவர் ஆவர்.*

**விளக்கம்:** *இது நம்பியகப் பொருள் 211, 212, 213, 214 ஆகிய சூத்திரங்களைத் தழுவியது.*

**பாட விளக்கம்:** *எழக்கூற்றுமே (கடைசி வரி) என்பது மூலபாடம், ஏழுக்கூற்றுமே என்று திருத்திக் கொள்ளப் பட்டுள்ளது.*

125. உரியபயந் தோன்,தம்முன் சேரியார்நோய் அறிவோர்,
ஊர்அயலோர், இவர்மொழிமுன் னிலையின்நிக ழாவாம்;
தருநற்றாய் இறைஇறைவி யுடன்வெளியிற் கூறாள்
தாய்உடன்போக்கு உணர்ந்தபின்பு செவிலி,தெய்வம், அயலோர்,
இருபிறப்போர், சகி,அறிஞர், நோய்அறிவோ ருடனு
மியற்செவிலி இவரோடும் தாயொடும்கூறற்கு அமையும்
அரியகண்டோர் இறைவிசகி யாபெற்றோர்க்கு உரைப்பார்
அணைசொல்லுஞ் சுரத்துஇறைவிக்கு இறைதமர்காண் பொழுதே. [௱௨௫]

***கூற்றுக்குரியோர் பற்றி விளக்குகின்றது.***

**உரை:** *தந்தை, உடன் பிறந்த அண்ணன், நோய் அறிவோர், ஊரவர், அயலோர் ஆகியவர்கள் முன்னில் கூற்று நடைபெறாது. தாய் தலைவனோடும் தலைவியோடும் நேரே பேசமாட்டாள். தலைவனுடன் தலைவி சென்றது உணர்ந்த பின்னரே செவிலி தெய்வம் அயலோர் இருபிறப்போர் (அந்தணர்), தோழி, அறிவோர், நோய் அறிவோர் ஆகியோருடன் தாய் பேசுவாள். செவிலி மேலே கூறப்பட்டவர்களோடும். தாயோடும் பேசுதற்குரியவள். தலைவி, தோழி, பெற்றோர் ஆகியோருடன் கண்டோர் பேசுவர்; பாலைவனத்தில் தலைவியின் சுற்றத்தாரைக் கண்டபோது தலைவன் தலைவியர் பற்றிக் கூறுவர்.*

**விளக்கம்:** *இது நம்பியகப்பொருள் 215, 218, 219 220, 221 ஆகிய சூத்திரங்களின் தழுவல்.*

**பாடவிளக்கம்:** *செரியா (நோய் அறிவோர் முதல்வரி) என்ற மூலபாடம் அகப்பொருளை ஒட்டி (215) சேரியார் என்று திருத்திக்கொள்ளப்பட்டுள்ளது.*

126. காணும்இடந் தொறும்இங்ஙன் கூறுதார், எவருங்
காளைகன்னி யொடும்உரைப்பார் காமமிகு தியினால்
வாணுதலும் இறைவனுஞ்சொல் வனபோற்கேட் பனபோல்
மறுப்பனபோல் அஃறிணைப்பண் பினவொடு(ம்) நெஞ் சோடுமே

வீணுரையாய், உவமஉரு பகமயங்கச் சொலுவார்;
விளம்பும்அனே வருந்தாந்தம்மொடுசொல்லும் உளவா
பூண் இறைவி இறைவன்கூற் றனேவோரும் கேட்பர்
புகலனேவோர் கூற்றும்அவர் கேட்பர்இடம் அறிந்தே[சஉ]

***கூற்று பற்றிய சில விதிவிலக்கும் கேட்போர் பற்றியும் விளக்குகின்றது.***

**உரை:** *கூற்றிற்குரிய ஏனையோர் தலைவனோடும் தலைவி யோடும் அவர்களைக் காணும்போதெல்லாம் உரைப்பர். காம மிகுதியினால் தலைவனும் தலைவியும் அஃறிணைப் பொருள்களோ டும் தங்கள் நெஞ்சோடும் அவை சொல்வன போலவும் கேட் பன போலவும் மறுப்பனபோலவும் வீண் உரையாய் உவமை யும் உருவகமும் மயங்கும்படி பேசுவார். கூற்றிற்குரிய அனே வரும் தம்மோடு தாமே பேசுதலும் உண்டு. தலைவி பேச்சையும் தலைவன் பேச்சையும் கூற்றிற்குரிய எல்லோரும் கேட்பர். அவ்வாறே ஏனையோருடைய பேச்சையும் இடம் அறிந்து தலைவனும் தலைவியும் கேட்பர்.*

**விளக்கம்:** *இது நம்பியகப்பொருள் 222 முதல் 226 வரையுள்ள சூத்திரங்களின் தழுவல்.*

*222-ஆம் அகப்பொருளில் வரும் 'சாற்று எழுவரும்' என்பதைப் பின்பற்றிக் கூறுதார் என்று இங்கு சொல்லப்பட் டுள்ளது.*

127. இடம்கரும(ம்), நிகழ்இடமாம்; பொருள்நிகழ்வு தோற்றும்,
இறப்புநிகழ் வுஎதிர்மூன்றுங் காலமதாம் உணரார்
அருங்குறியாற் பொருள்தோன்ற முடிப்பதுமெய்ப் பாடாம்
அழுகை.நகை, மருட்கை,அச்சம், பெருமிதமே, யுவகை
உடன்சினமே இளிவரல்எட் டால்அதுதான் விரியும்,
உரைகுறிப்பாற் சொலிமுடித்தல் எச்சமதாம்; இதனாற்
படும்பயன்ஈது என்றுபொருள் தொகுத்துஉணர்த்தல் பயனும்
பணிமொழிஈங்கு இவர்க்குஉரித்தென்று எண்ணுதல்முன்
னமதே. [சங]

**இது இடம், காலம், மெய்ப்பாடு, எச்சம், பயன், முன்னம் ஆகியவற்றை விளக்குகின்றது.**

**உரை:** செயல் நிகழும் இடமே 'இடம்' எனப்படும். உலகத்திலுள்ள பொருள்களை அறிந்து கொள்ளும்படியாக நடப்பது இறப்பு (இறந்தகாலம்) நிகழ்வு (நிகழ்காலம்) எதிர்வு (காலம்) என்ற மூன்றும் 'காலம்' ஆகும். அறிந்துகொள்ள முடியாதார் அவ்விடத்துத் தோன்றும் குறி (அடையாளம்) யால் பொருள் தெரிந்துகொள்ள வைப்பது 'மெய்ப்பாடு' எனப்படும். அவை. 1. அழுகை, 2. நகை, 3. மருட்கை, 4. அச்சம், 5. பெருமிதம், 6. உவகை, 7. சினம், 8. இளிவரல் என எட்டு வகைப்படும். சொல்லாலும் (உரை), குறிப்பாலும் கூட்டிப்பொருள் முடித்தல் வேண்டி நிற்பது 'எச்சம்' எனப்படும். இதனால் உண்டாகும் பயன் இது என்று பொருளைத் தொகுத்துச் சொல்லுதல் ஆகும். இதுவே பயன். இந்த இடத்தில் இத்தன்மை உடையவர்களுக்கு இது உரியது என்று எண்ணுவது 'முன்னம்' எனப்படும்.

**விளக்கம்:** நம்பியகப்பொருள் 227, 228, 231, 232, 229, 230 என்ற சூத்திரவரிசையைத் தழுவி எழுதப்பட்டது இச்சூத்திரம். ஆயினும் அகப்பொருளில் எட்டுவகை மெய்ப்பாடு என்ன என்று விளக்கப்படவில்லை. இவர் தொல்காப்பியத்தை ஒட்டி (மெய்ப்பாட்டியியல் 3) அவற்றை விரித்துக் கூறியுள்ளார்.

128. முன்உரைத்த திணைக்குரிமை, இதற்குஇதுஎன்று இல்லாமல்
மொழிந்ததிணை எவற்றினுக்கும் பொருட்படவே பொது
வாய்ச்
சொன்னிலைமைப் படச்செய்தல், பொருட்கூறு பாடாற்;
துறைஐந்து நிலத்தினுக்கும் உரியகருப் பொருளும்

தன்னதன்றிப் பிறழாமல் பொருட்டுறுத்த வாகுஞ்
சார்உவமப் பொருள்உணர்ச்சிப் பொருடிணைஓர்ந் திடப் பாட்டின்
அனையும்,வெளிப் படைஉள்ளு றையெனவே உவமம்
இருவகையாம்; இறைச்சிபொருட் புறத்தின்அகன் றிடுமே.
[சச]

***இது பொருள் வகை, துறை, உவமவகை ஆகியவற்றை விளக்குகின்றது.***

**உரை:** *பொருள், கூறுபாடு என்பது மேலே கூறியபடி இந்தத் திணைக்கு இது உரியது என்று கொள்ளாமல் எல்லாத் திணைக்கும் பொதுவாக உரிய வகையில் சொல் அமையும் படிச் செய்தல் ஆகும். 'துறை' என்பது ஐந்து வகை நிலத்தினுக்கும் உரிய கருப்பொருளோடு (மக்கள், விலங்கு, தெய்வம் போன்றவை) பிறவும் சேர்த்துக் கூறினும் இலக்கணம் வழுவாதபடி அமைத்தல் ஆகும். உவமப் பொருளும் உணர்ச்சிப் பொருளும் அறிந்து கொள்ளு மாறு பாட்டில் வரும் உவமை என்பது 1. உள்ளுறை உவமம், 2. வெளிப்படை உவமம் என இரண்டாகும். உணர்ச்சிப் பொருள் (இறைச்சிப் பொருள்) என்பது கருப்பொருளின் கண் பிறக்கும்.*

**விளக்கம்:** *இது நம்பியகப் பொருள் 233, 234, 236, 237 ஆகிய சூத்திரங்களைத் தழுவியது. 'இறைச்சிப் பொருட் புறத்தின் அகன்றிடுமே' என்பது நம்பியகப்பொருளில் காணப்படவில்லை.*

# 3. புறத்திணை மரபு

129. அகங்கண்டார் புறங்காண்பார், புறத்தின்அறம் பொருளாய்
அறிஞர்காண் புறத்தொழுக்காம், வெட்சி, வஞ்சி, உழிஞை,
திகழ்ந்ததும் பை,வாகை ஐந்துகாஞ்சியேபா டாண்
டிணை இரண்டுந் தொகுத்துஏழும் புறப்பொருளாம் அவற்றின்
மிகுங்குறிஞ்சிப் புறம்வெட்சி, அதில்ஆதந் தோம்பல்,
வேந்தன்வய வரைமருவார் நிரைகவர்கொன் றுரைத்தல்,
உகந்துபணி தலைக்கோடல், படை,அரவம், விரிச்சி
ஓர்தல்,வேண்டாவீர மறவர்வழிச் செலவே. [க]

***புறத்திணையின் பொது விளக்கமும் அதன் வகையும் வெட்சி யின் விரியும் விளக்குகின்றது.***

*உரை: அகத்தை அறிந்து கொண்டவர்கள் புறத்தையும் அறிந்து கொள்ள விரும்புவர். புறத்திற்கு அறமும் பொருளும் பாடற் பொருளாகும் அது, 1. வெட்சி, 2. வஞ்சி, 3. உழிஞை, 4. தும்பை, 5. வாகை, 6. காஞ்சி, 7. பாடாண் திணை என எழு வகைப்படும்.*

*குறிஞ்சித் திணைக்குப் புறமாக வருவது வெட்சித்திணை, இத்திணையில் 1. பசுக்களைக் கைப்பற்றிக் கொண்டு வந்து பாதுகாத்தல் 2. அரசன் தன் பகைவருடைய பசுக்*

கூட்டங்களைக் கவர்ந்து வரும்படி வீரர்களுக்குச் சொல்லுதல், 3. அவ்வீரர்கள் மகிழ்ச்சியுடன் அரசன் கட்டளையை ஏற்றுக் கொள்ளுதல், 4. படை செல்லும் ஒலி கேட்டல், 5. நல்ல நிமித்தம் உண்டாகிறதா என்று ஆராய்தல், 6. அந்நிமித்தம் பற்றிக் கவலைப்படாத வீரர்கள் மேலும் தொடர்ந்து செல்லுதல்.

**விளக்கம்:**

வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை என ஐந்தையும் ஒன்றாகப் பிரித்து அவை ஐந்திணைக்கு (குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம், பாலை) உரிய புறத்திணைகள் என்று பிரித்துக் காட்டுதற்காக இருக்கலாம். காஞ்சி பெருந்திணை ஆகியவற்றிற்குரிய அகத்திணைகள் முறையே பெருந்திணை, கைக்கிளை எனப்படும்.

**130.** வேயுரை,வேய்ப் புறத்துஇறை,ஊர் கொலையாகோள், பூசல்
விலக்குஇடர் இன்று உய்த்தல்,நுவல் வழித்தோற்ற
நிறைத்தல்,
ஆய்நிரைப்பா தீடு,உண்டாட்டு, ஈகை, புலனே
அறிசிறப்புப், புள்வழக்குத், துடிநிலைகொற் றவைசீர்,
காயும்வெறி யாட் டுஇருபத் திரண்டாம்ஆன் மீட்சி
கரந்தைநிரை கோள்கேட்டோன் மறவரைமீட் கென்றல்,
சேயபடை யொலிபறவாப் புட்டெரிதல், நடையிற்
செல்லு,சாப் புறத்துஇறை,போர் புண்ணேடுவந் திடலே[உ]

***வெட்சியின் ஒரு பகுதியும் கரந்தையின் ஒரு பகுதியும் கூறுகின்றது.***

**உரை:** 7. ஒற்றன் (பகை நாட்டின் நிலைமை) கூறுதல், 8. பகை அரசன் நாட்டுப்புறத்துச் சென்று தங்குதல், 9. ஊரை அழித்தல், 10. பசுக்களைக் கவர்ந்துகொள்ளுதல், 11. பகைவருடைய போரை விலக்குதல் (போர் முடிந்து போதல்) 12. பசுக்களுக்குத் துன்பம் நேராதபடி கொண்டு

போதல், 13. வீரர்களுடைய வழிவந்தோர் (உறவினர்) மகிழ்தல், 14. பசுக்கூட்டங்களை ஊரில் கொண்டுவந்து நிறைத்தல், 15. பசு நிரையைப் பங்கிட்டுக்கொள்ளுதல், 16. வீரர்கள் (மதுவை) உண்டு மனங்களித்து ஆடுதல், 17. வேண்டியவர்களுக்குப் பசுக்களைக்கொடுத்தல், 18. பகைவர் நாட்டின் நிலைமையைக் கூறினவர்க்குச் (அரசன்) சிறப்புச் செய்தல், 19. புள் நிமித்தம் சொன்னவர்க்குப் பரிசு வழங்குதல், 20. துடிகொட்டினவனின் பண்பைக்கூறுதல், 21. வெற்றியைத் தந்த கொற்றவைஎன்ற தெய்வத்தின் சிறப்புக்கூறுதல், 22. பூசை செய்கிறவனோடு வள்ளிக்கூத்து (வெறி) ஆடுதல், என்ற இருபத்திரண்டு பிரிவுகள் உள்ளன.

1. பசுநிரை கவர்ந்து சென்றதை மீட்டல் கரந்தை, 2. ஆநிரைகளைக் கொள்ளுதல், 3. அச்செய்தியைக்கேட்ட அரசன் வீரர்களை மீட்கச் சொல்லுதல், 4. நிரை மீட்கும் படைகள் எழுப்பும் ஒலி, 5. போகும் வழியில் புள்ளின் சகுனம் பார்த்தல், 6. பகைவர் போன வழியிடத்துச் செல்லுதல், 7. புறத்துச்சென்று தங்குதல், 8. வீரன் போர் செய்த புண்ணோடு வருதல்.

**பாட விளக்கம்:** 'பறவாப்புடடெரிதல்' (4வது வரி) என்ற மூலபாடம் பறவாப்புட்டெரிதல்' என்று திருத்தப் பட்டுள்ளது.

131, திடத்தபோர்க் களத்தொழிவு,ஆ ளெறிபிள்ளை, பிள்ளைத்
தெளிவு,பிள்ளை யாட்டேகை யறவு,நெடு மொழியே,
அடுத்தபிள்ளைப் பெயர்ச்சி,வேத் தியல்மலிவு, குடிமை,
ஆபெயர்த்தல், சமர் விலக்கல், நலிவிலாது உய்த்தல்
ஒடுக்குநண்ணு வழிந்தோற்ற(ம்), நிறைத்த,லேபா தீடு,
உண்டாட்டுக் கொடைதுடிகொற் றவைநிலையாம், எனவே
எடுத்தஇரு பத்தேழாம் இருவகைஏ ழேழும்
இயம்பும்வெட் சித் திணைவிரிவென் றிடுவர்முல்லை
நகையே [ரு]

கரந்தையின் எஞ்சிய பகுதியை விளக்குகின்றது.

உரை:-9. போர்க்களத்தில் வீரர்கள் இறத்தல், 10. போரிடுகின்ற வீரரை எதிரே விலக்கித்தான் ஒருவனுமே வீரரை வெட்டும் ஆளெறிபிள்ளை, 11. துடி ஒலிக்கத் தன் புண்ணைப்பிரியப்பட்டு விரும்பிக் கூத்தாடும்பிள்ளைத்தெளிவு, 12. பகைவருடைய குடரை மாலையாகச் சூட்டிக் கையிலே வேலை வைத்துக்கொண்டு ஆடும் பிள்ளையாட்டு, 13. வீரர்கள் போரில் இறந்ததைக்கண்டு வருந்துதல், 14. வீரன் தன்னுடைய மேம்பாட்டை உயர்த்திச் சொல்லுதல், 15. வீரனுக்கு மன்னன் பரிசு அளித்தல், 16. மன்னனின் சிறப்பை வீரர் புகழ்தல், 17. வீரர்களது குடியின் வரலாற்றினைச் சொல்லுதல், 18. பசுக்களை இடம் மாற்றுதல். 19. போரை விலக்குதல், 20. ஆநிரைகளைக்கொண்டு செல்லுதல், 21. நிரை மீட்டோர் வரவு தெரிதல், 22. ஊர்ப்புறத்துத் தாம் கொண்ட நிரையை நிறுத்தல், 23. நிரையைப்பங்கிட்டுக் கொள்ளுதல், 24. உண்டு மகிழ்தல், 25. வெற்றியால் விளைந்த கொடை, 26 துடிநிலை, 27. கொற்றவை நிலை, என இருபத்தேழு துறையை உடையது. வெட்சி இருபத்திரண்டும் கரந்தை இருபத்தேழும் சேர்ந்து 49 துறையும் வெட்சித்திணை விரி என்று கூறுவர்.

**விளக்கம்:** இது புறப்பொருள் வெண்பா மாலை 2ஆம் சூத்திரத்தையும் தொல்காப்பியம் புறத்திணையியல் 58ஆம் சூத்திரத்தையும் தழுவியது.

**பாட விளக்கம்:** 'உயத்தல்' (2வது வரி) என்ற பாடம் உய்த்தல் என்று திருத்தப்பட்டுள்ளது.

132. முல்லையது புறம்வஞ்சி, பகைமேற்சென்று அடலா(ம்);
முதல்வன்வஞ்சி ஆடல்படை யொலி,குடைநாட் கோளே,
செல்லுமவர் நாட்கோள்கொற் றவைநிலை,வே லுழவர்
செய்தொழில்கூ றுதல்,இறையை வழுத்துகொற்ற வஞ்சி,

கொல்லிறையைப் புகழ்ந்துபிற நாடுஅழிபுக்குஇரங்கு
கொற்றவள்ளை, பொருவீரர்க்கு அருள்பேராண் வஞ்சி
வல்லதிறை வாங்கிஇறை பெயர்ந்தபக்கம், வேந்தின்
வரிசைபெற்ரோர் வண்மைசொன்மா ராயவஞ்சிப் பகுப்பே. [௪]

***இதுவும் அடுத்த சூத்திரமும் வஞ்சித் திணையை விளக்குவன.***

**உரை:** *முல்லைத்திணைக்குப் புறமாக வருவது வஞ்சித் திணை. அது பகைவர் நாட்டின் மேற்சென்று போரிட்டு வெற்றி பெறக் கருதுவது. 1. அரசன் வஞ்சிப்பூவைச் சூடிக் கொள்ளுதல், 2. படைகள் எழுச்சியினால் ஏற்படும் அரவம், 3. அரசன் குடையைப் புறவீடு விடுதல், 4. அரசர் படையெடுத்துச்செல்லும் நாள் குறிப்பிடுதல், 5. கொற்றவைநிலை, 6. கொல்லர் போர்க்கருவிகளைச் செய்யும் தொழிலைக்கூறுதல், 7. அரசனைப்புகழ்ந்து அவனது தன்மையைக் கூறுதல், 8. பகைவர்களை அழிக்கும் அரசனைப் புகழ்ந்து பகைவர் நாடு அழிவதற்கு வருந்துகின்ற கொற்றவள்ளை, 9. போரிடுகின்ற வீரர்க்கு அருள் செய்கின்ற பேராண் வஞ்சி, 10. தோற்ற அரசனிடம் திறையைப்பெற்று அரசன் அந் நாட்டை விட்டு நீங்குவது, 11. பரிசுபெற்ரோர் அரசனுடைய வள்ளல் தன்மையைச் சொல்லும் வீரர்களின் நிலைமை (மாராய வஞ்சி).*

**பாட விளக்கம்:** *வேல்உளவர் (2வது வரி) என்பது மூல பாடம்.*

133. பகைஉரித்தந் திறஞ்சேர்நெடு மொழிவஞ்சி, முதற்போர்
பகரமுதுசொல் வஞ்சிதெவ்வூர் எரித்தபுல வஞ்சி,
திகழ்கொள்ளைப் புலவஞ்சி, பாணர்கொடை வஞ்சி
திறைஈய்ந்த குடிக்கருள்செய் குறுவஞ்சி, கட்டூர்
வகையுரைத்தல், தனிநிலையே, தழிஞ்சிபகை பணிந்து
மன்னவன்ஊர் பெயராப்பா சறைவஞ்சி,பின்னும்
இகலினர்நா டெரித்தபெரு வஞ்சிசோ றுதவல்
இசைவஞ்சி, நாடழிபுக்கு இரங்கல்ஐயைந் ததுவே. [௫]

12. பகைவர்தஞ்சேனையை நெருங்கித் தன்னுடைய ஆண்மைத் தன்மை உயர்த்திச் சொல்லும் நெடுமொழி, 13. தன்னுடைய குடியின் சிறப்பினைச் சொல்லும் முதுமொழி வஞ்சி, 14. பகைவர் ஊர்களை எரித்த புல வஞ்சி (உழ புல வஞ்சி), 15. பகைவர் ஊர்களைக் கொள்ளையடித்த வஞ்சி (மழபுல வஞ்சி), 16. பாணர்க்குப் பரிசில் கொடுத்தல் கொடை வஞ்சி), 17. வென்ற அரசனுக்குத் திறையைக் கொடுத்துக் குடிமக்களைப் பாதுகாத்த குறுவஞ்சி, 18. வீரர் களுக்குக் கட்டப்பட்ட பாசறையின் கூறுபாட்டைக் கூறுதல், 19. ஒரு வீரனின் தனிச்சிறப்பு நிலையைக் கூறுதல் (தனிநிலை), 20. வீரன் தோற்று ஓடுபவரின் முதுகுப் புறத்து வாள் எறியாத தன்மையைக் கூறுதல் (தழிஞ்சி), 21. பகைவர்கள் பணிந்த பின்னும் படையெடுத்து வந்த மன்னவன் தன் நாட்டுக்குச் செல்லாமல் பாசறையில் தங்கியிருத்தல் (பாசறை வஞ்சி), 22. பகைவர்களின் நாட்டை எரித்த பெருவஞ்சி, 23. சோறு உதவல் (பெருஞ்சோற்று வஞ்சி), 24. அரசனு டைய வெற்றிப் புகழ் கூறும் இசை வஞ்சி, 25. பகையரச னின் நாடு அழிவதற்கு இரங்குதல் என இருபத்தைந்து துறைகளை உடையது.

**விளக்கம்:** புறப்பொருள் வெண்பாமாலை 21 துறைகளைக் (சூத்திரம் 3) கூறுகின்றது. இவர் மாற்றியும் கூட்டியும் 25 ஆக ஆக்கியுள்ளார்.

'திறை வாங்கி இறை பெயர் பக்கம்' என்பதைப்புறப் பொருள் வெண்பாமாலை கொற்றவை நிலையில் சேர்த்துக்கூற இவர் தனித்துறையாக்கி விட்டார். அவ்வாறே கட்டூர் வகை உரைத்தல் என்பதும் குறுவஞ்சியிலிருந்து வேறானதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. வெட்சிக்குப் பிறகு வஞ்சியும் உழிஞையும் கூறுமுறையும் தொல்காப்பியத்தைத் தழுவியது. புறப்பொருள் வெண்பாமாலை வஞ்சி, காஞ்சி, என்ற வரிசையில் விளக்குகின்றது.

**பாட விளக்கம்:** 'னெடுமொழி' (1வது வரி) என்பது மூலம். 'குருவஞ்சி' (2-வது வரி) என்பது மூலபாடம். ஆனல் புறப்பொருள் வெண்பாமாலை 52-ல் குறுவஞ்சி என்று காணப் படுதலால் அவ்வாறே திருந்திக்கொள்ளப்பட்டது.

'சொருதவல்' (4-வது வரி) என்பது மூலபாடம். பெருஞ் சோற்று நிலை என்பதற்கு இணையாக உள்ளமையால் சோறு உதவல் என்று கொள்ளப்பட்டது.

134. அதிகுழிஞை மருதத்தின் புறன்,அரண(ம்)முற் றுதலும்,
அரண்காப்பும், எனஇரண்டாம்,அவற்றுஅரண்முற் றுதலே,
முதல்,உழிஞை சூடல்,குடை நாட்கோள்,வா ணட்கோள்
முரசுழிஞை, மதில்கொளக்கோன் எழுந்தகொற்ற வுழிஞை,
மதிகையொடு வேந்துறலின் அரண்எய்தும் என்றல்
நமன்கண்ணன் எனச்சொல்லுங் கந்தழி உழிஞைப்,
புதுமைபுகழ் முற்றுழிஞை எவர்க்கும்பூ விருப்பாய்ப்
புகறல்,மதிற் புறத்துஇருத்தல் மதினிலைக் கோடச்
சொலலே. [சு]

**உழிஞைத் திணைக்குரிய துறைகளை இதுவும் அடுத்த இரண்டு சூத்திரமும் கூறுகின்றன.**

**உரை:** உழிஞை என்ற புறத்திணை மருதம் என்ற அகத் திணையின் புறனகும். பகைவேந்தர் அரணைப் படை யெடுத்துச் செல்லும் அரசன் முற்றுகையிடுதலும் அங்கு இருக்கும் அரசன் காத்தலும் என இருவகைப்படும். 1, அரணை முற்றுகையிடுதல், 2. உழிஞை மாலையை அணிந்து கொள்ளுதல் 3. அரசன் குடையைப் புறவீடு விடுதல். 4. வாளைப் புறவீடு விடுதல், 5. முரசின் நிலைமையைக் கூறுதல், 6. பகைவர் நாட்டு மதிலைக் கைப்பற்ற அரசன் வீரரோடு செல்லும் கொற்ற உழிஞை, 7. மன எழுச்சியுடன் அரசன் வருதலால் அரண் கைப்பற்றப்படும் என்றல் (அரச உழிஞை), 8. வீரத்தோடு போரிட்டு அரணைக் கைப் பற்றும் தன்னுடைய அரசனைத் திருமால் என்று புகழ்ந்து

சொல்லும் கந்தழி, 9. உழிஞை மாலையணிந்த புகழுடைய சிவபெருமானின் புகழ்கூறும் முற்றுழிஞை, 10. எல்லோரும் காந்தள் பூ விரும்புதலைச் சொல்லுதல், 11. மதிற்புறத்து இருத்தல், 12. மதிலைக் கைப்பற்றியதைச் சொல்லுதல்.

**விளக்கம்:** உழிஞைக்குரிய பொதுவிளக்கம் தொல்காப்பியத்தை (புறம். 61) ஒட்டியது.

**பாட விளக்கம்:** அதிகுழிஞை என்பது அதிருழிஞை (அதிர்+உழிஞை) என்று இருந்திருக்கலாம்.

135. கோன்றிறத்தோன் மலிபுரைத்தன், மதில்ஒருவன் பொருத
குற்றுழிஞை, மிளைகடப்ப விரைதல்,மிளை காத்தல்,
ஏன்றுஅகழிப் புறத்திருத்தல், பொரும்பாசி, மதிலில்
ஏணிசார்த்து தல்,ஏணி இவரும்எயிற் பாசி,
ஆன்றமதில் பாய்தல்,அகத் தரையடல் போரவா
ஓரா மதிற்சீர் சொல்லகாலை மதில்உளமுர சியம்பத்
தோன்றல்சூழ் சொல்ல,வேற்றுப் படைவரவு,ஆனைக்கோள்,
சூழ்எயிலின் வரகுவிதைத் திடல்,வாள் மங்கலமே. [எ]

**உரை:** 13. அரசன் சிறந்த வீரர்களின் கொள்கையைப் புகழ்ந்து உரைத்தல், 14 பகைவர் மதில்மேல் வீரன் ஒருவன் மட்டுமே போரிட்ட குற்றுழிஞை, 15. காவற்காட்டைக்கடந்து முன்னே செல்லுதல், 16. காவற்காட்டைப் பகைவர்கள் காத்தல், 17. அகழியின் புறத்துத் தங்குதல், 18. அகழியிடத்துப் போரிடுதல், 19. மதிலில் ஏணியைச் சார்த்துதல், 20. அரணத்தின் வலி அழியும்படி ஏணிமேல் ஏறிச்செல்லுதல், 21. மதில்மேல் பாய்ந்து செல்லுதல் (முது உழிஞை என்று புறப்பொருள் கூறும்), 22. மதிலினுள் சென்றுபோரிடுதல், 23. மதிலினுடைய பெருமையைச் சொல்லவும் காலை நேரத்தில் முரசு ஒலிப்பவும் படையெடுத்த வீரர்கள் கோபித்தல், 24. வேற்றுப்படையினர் வருதல், 25. யானையைக் கைப்பற்றுதல், 26. மதிலில் உழுது வரகு விதைத்தல், 27. வாள்மங்கலம் கூறுதல்,

**பாட விளக்கம்:** குற்றிழிஞை என்ற மூல பாடம் குற்றுழிஞை என்று திருத்தப்பட்டுள்ளது.

136. மங்கலமாய் மதிற்குமரி மணத்தல்,எயில் கொண்டோன்
மதில்வேந்தன் மகட்கேட்கு மிகல்,திரைகொண்டு ஏகல்,
பொங்குமுற்றி ஞேற்ஜபாக்கி யிருத்தல்,வேற் றரசர்
பொருமதிலின் அடைதொகையோடு எண்ணுன்காம்;
அரண்காப்பு
இங்குநொச்சி சூடல்முன்போய் விளிந்தமறப் பாசி,
இகல்மிளையூர்ச் செருமிளைகாத் தோர்விறன்மேம் படுத்தல்
அங்குதிரை மறம்,எயிற்போர், எயிலின்மிசை அழிதல்,
அழிபடைதாங் குதல்மகட்கோண் மறுத்தல்ஒன்பான்
தானே. [அ]

***உழிஞையின் ஒருபகுதியும் நொச்சியும் கூறுகின்றது.***

**உரை:** *28. மதிலாகிய பெண்ணை மணத்தல், 29. மதிலை வென்றவன் மதில் உடைய மன்னனின் மகளை வேண்டிய முறைமையைச் சொல்லுதல்,. (மகட்பால் இகல்), 30. பகை மன்னன் கொடுத்த திறையை எடுத்துக் கொண்டு செல்லுதல், 31. பிறரைப்போக்கிவிட்டுத் தான் மட்டும் பாசறையில் இருத்தல், 32. அரசர் பலரும் மதிலிடத்தே உள்ள அவனைச் சேர்தல் என்ற முப்பத்திரண்டும் உழிஞைத் திணைக்குரிய துறைகளாகும்.*

*அரணைக்காத்து நிற்றல் நொச்சித்திணை, 1. எயில் காக்கும் வீரர் நொச்சிப்பூவைச் சூடுதல், 2. முன்னே போரில் இறந்த வீரத்தின் போக்கைச் சொல்லுதல், 3. காவற் காடு அழியாதபடி பூசல் செய்த மதிப்பினைக் கூறுதல், 4. காவற்காட்டைக் காத்து நின்றோர் வெற்றியை மேம் படுத்திச்சொல்லுதல், 5. (பெரிய அரணிடத்துப்பாயும்) குதிரையின் வீரத்தைக்கூறுதல், 6. மதில் காக்கும்போரைப் பற்றிக் கூறுதல், 7. மதில் தாக்கப்படுவதைச் சொல்லுதல், 8. அழியும் மதிலைப் படையானது காத்தல், 9. பகையரசன் மகளை வேண்ட அவன் தர மறுத்தல் ஆகிய ஒன்பது துறை களும் இத்திணைக்கு உரியன.*

**விளக்கம்:** *உழிஞைத்திணைக்குரிய துறைகளாகப் புறப்பொருள் வெண்பாமாலை 29 துறைகளே சொல்லியுள்ளது. (சூத். 6). இவர் பல துறைக்குக்கொடுத்த விளக்கமும், புறப் பொருள் வெண்பாமாலையிலிருந்து வேறுபட்டுள்ளது.*

**பாட விளக்கம்:** *'மேம்புடுத்தல்' (3வது வரி) என்பது மூலபாடம். 'மகட்கேடகுமிதல்' (1வது வரி) என்பது மூல பாடம்.*

137. தாங்குநெய்தற் புறம்தும்பை சமர்க்குஎதிர்வாம்;தும்பை
தரித்தல்படைக்கு உதவுகொடை, ஒலிபடையை ஓம்பி
ஓங்கல்புரி தானைமற(ம்), மன்னனை ஓம் படுத்தல்,
உறுபடையின் மறஞ்சொலி எண்ணவர்அழிபுக்கு இரங்கல்
ஆங்,குதிரை மறம்ஆனை மறம்தூசி நிலைதார்
ஆசைமொய்த்த வழிஒருவன் எறிதல்தேர் மறமே,
தூங்கல்எறிந்து இறந்தோர்க்குப் பாணர்கடன் கழித்தல்,
துறைஇருவர் மாய்ந்தும்போர் அகலாப்போர் நிலையே [கூ]

***இது தும்பைத்திணையின் விளக்கமும் அதற்குரிய துறை களும் விளக்குகின்றது.***

**உரை:** *பிரிவுத் துன்பத்தைப் பொறுத்துக் கொள்ள முடியாத நெய்தல் திணைக்குப் புறம் தும்பைத்திணை. அது போர்க்குப் புறப்பட ஆயத்தம் ஆதலாம். 1. தும்பைப் பூவால் ஆனமாலையை அணிந்து கொள்ளுதல், 2. தம் போர் வீரர்க ளுக்குப் பரிசு அளித்தல், 3. படையைப் பாதுகாத்த ஆற்றலைக் கூறும் தானை மறம் (படைவீரர்களின் வீரச் சிறப்பு), 4. அரசனுக்கு உறுதி கூறுதல், 5. படையின் வீரத்தை உயர்த்திச் சொல்லி பகைவர் அழிவுக்கு இரங்குதல், 6. குதிரையின் வீரத்தைச் சிறப்பித்துச் சொல்லுதல், 7. யானை யின் வீரத்தைச் சிறப்பித்துச் சொல்லுதல், 8. தூசி நிலை, 9. தார்நிலை, 10. ஆசை மொய்த்த வழி ஒருவன் மேல் எறித லாகிய தேரின் வலிமையைச் சிறப்பித்துச் சொல்லும் தேர் மறம், 11. போரில் இறந்தோர்க்குப் பாணர் இறுதிக் கடன் செய்தல் ,12. போர்க் களத்தில் இரண்டு அரசரும் இறந்த பின்னரும் போர் முடியாத போரின் நிலை,*

**பாட விளக்கம்:** *'குதிரை மறம்' (2 வது வரி) என்பதும் 'துரை' (4வது, வரி) என்பதும் மூலபாடங்கள்.*

138. நின்றுஒருவன் இரிபடைப்பி னருங்குஎருமை மறமே,
நெய்வேல்போட்டு உடல்வலியால் அடர்ஏம வெருமை,
அன்றிநெஞ்சில் வேல்பறித்த நூழிலே நூழில்
ஆட்டுமுன்றேர்க் குரவை,பின்றேர்க் குரவைபே யாட்டே,
மன்றகளிற் றெடுபடுத்தல், வயவர்மன் ஞேட்டும்
வாளமலை, நெடுந்தகைபோர்ப் பொலிதானை நிலையே,
வென்றிவேல் கணைமொய்ப்ப உடல்தீண்டா அச்சம்
வீழ்புயத்தை மாதர்புல்லும் சிங்கார வாழ்வே. [ம]

**தும்பைக்குரிய துறைகளை விளக்குகின்றது.**

**உரை:** *13. புறமுதுகிட்ட தன்னுடைய படைக்குப் பின் நிற்கும் எருமை மறம், 14. தான் வேலைக் கீழேபோட்டு விட்டுத் தன்னுடைய உடம்பின் வலிமையால் பின்னரும் வெற்றி கொள்ளும் ஏமவெருமை, 15. தன் நெஞ்சில் இருந்த வேலைத் திரித்து ஆடும் நூழில், 16. அந்த வேலைப் பறித்து எறியும் நூழிலாட்டு, 17. மன்னனுடைய தேர்முன் வீரர் ஆடும் முன் தேர்க்குரவை, 18. தேர்ப்பின்னே பாணிச்சியர் முதலானோர் ஆடும் பின்தேர்க்குரவை, 19. தேரின் முன்னும் பின்னும் பேய் ஆடுதல், 20. வேல் படுதலால் வீழ்ந்த யானைக் கீழ்ப்படுத்தல், 21. வாள் வீரர் அரசன் வாளோடு ஆடும் வாளமலை, 22. வீரர்கள் போர்க்களத்தைச் சிறப்பிக்கும் தானை நிலை, 23. வேலின் அம்பு மார்பைத் தீண்டிய போது உடல் நிலத்தைத் தீண்டாத (வேல்பட்டபோதும் தரையில் வீழாத) அச்சம், 24. இத்தகைய வீரரின் தோள்களை மாதர் தழுவும் சிருங்கார நிலை.*

139. வாள்வடுமெய் கண்டுகேள்க லுழும்உவகைக் கலுழ்ச்சி
மன்னிறப்ப முரணின் இறந் திடல்கணவற் காண
நீள்குழலி வரல்இருகோன் சுற்ற(ம்)முற்றும் இறத்தல்,
நிகழ்த்துஇருபான் எட்டும்தன் துறையாகும். பாலைக்கு
ஆள்புறமே வாகைபகை முடித்திடும்வெற் றியதாம்;
அமர்முடித்து வாகைசூடு தல்இகன்றோர் கண்ணி
தாள்கழல்கச்சு இனிப்புனைவோம் எனல்அரச வாகை
முரசுநிலை, இறையுழவன் எனும் மறக்கள வழியே [மக]

**தும்பைத்திணையின் ஒழிபும் வாகைத்திணையின் துறை களும் விளக்குகின்றது.**

**உரை:** 25. வாளால் ஏற்பட்ட விழுப்புண் உடைய கணவனைக்கண்டு மனைவி மகிழ்ச்சிக் கண்ணீர் வடித்தல், 26. தன்னுடைய அரசன் இறந்தானாகை வீரன் முரணால் இறந்திடல், 27. கணவனைக் காண மனைவி வருதல், 28. இரண்டு அரசர்களுடைய சுற்றத்தார் அனைவரும் இறத்தல் ஆகிய இருபத்தெட்டுத்துறைகளும் தும்பைத்திணைக்குரியன.

பாலைக்குப் புறமானது வாகைத்திணை. 1. பகை அரசனைக் கொன்று பகையை ஒழித்துவிடும் வெற்றியே வாகை, 2. போர் முடித்துவாகைப்பூ சூடுதல், 3. மாலையினையும் கச்சினையும் கழலினையும் இனி அணிந்து கொள்வோம் என்று கூறுதல், 4. சிறந்த அரசனது தன்மையைக் கூறும் அரச வாகை, 5. முரசினுடைய தன்மையைக் கூறும் முரசுநிலை, 6. அரசனை உழவன் என்று சிறப்பித்துக்கூறும் மறக்கள வேள்வி.

**விளக்கம்:** புறப்பொருள் வெண்பாமாலை தும்பைக்கு 24 துறைகளே சொல்லியுள்ளது. (சூத். 7)

140. களத்தில்பேய்க் கூட்டல்பார்ப் பார்வாகை, வணிகர்
காண்வாகை, வேளாளர் வாகையாரை யுஞ்சீர்
வளத்தினுல்இக மேல்என்றி டும்பொருந வாகை,
மரபுஅறிஞர் வாகைதா பதவாகை, கூதிர்
துளித்தபாச றைவாடைப் பாசறைவேந்து இயல்பு
சொல்அரச முல்லைபார்ப் பான் முல்லை, எட்டாய்த்
தெளிக்கும்அவை முல்லைகணி வன்வாகை மறத்தைச்
சிறியபேதை யர்க்குஉணர்த்து(ம்) மூதின்முல்லை இயல்பே.
[மஉ]

**வாகைத்துணையின் துறைகளுள் ஒரு பகுதியை விளக்கு கின்றது.**

**உரை:** 7. போர்க்களத்தில் பேய்கள் கூடுதல், 8. பார்ப்பாரது தன்மையைக் கூறும் பார்ப்பன வாகை,

9. வாணிக வாகை, 10. வேளாளர் வாகை, 11. உன் புகழ் மிகுதியாக இருப்பதனால் பிறரை இகழாமல் இரு என்று கூறும் பொருந வாகை, 12. மூன்று கால நிகழ்ச்சியையும் அறிந்து சொல்லும் அறிஞரின் தன்மையைக் கூறும் அறிஞ வாகை, 13. தபோதன வேடத்தார் தன்மையைக் கூறும் தாபத வாகை, 14. கூதிர் காலத்துப் பிரிவாற்றாமையால் வருந்தும் கூதிர்ப் பாசறை, 15. வாடைக் காற்றின் மிகுதியைக் கூறும் வாடைப் பாசறை, 16. அரசனுடைய தன்மையைக் கூறும் அரச முல்லை, 17. பார்ப்பான் முல்லை, 18. எட்டு வகை நெறியைப் பின்பற்றி நடுவு சொல்லும் சான்றோர் தன்மையைக் கூறும் அவைய முல்லை, 19. சோதிடரால் வல்லவனது கீர்த்தியைக் கூறும் கணிவன் வாகை, 20. வீரத்தின் சிறப்பைச் சிறிய பேதையர்க்கு எடுத்துக் கூறும் மூதின் முல்லை,

**பாட விளக்கம்:** 'கணிவன வாகை' (4 வது வரி) என்பது மூலபாடம்.

141. இயல்புஇடஞ்சொற் றிறையைஉயர்த் தியவல்லான் முல்லை
இறைகாவன் முல்லைகா வல்தகுதி கூறல்,
உயிர்இறைவன் களங்கொள்பே ராண்முல்லை, கொடுத்தது
உவந்திடாம றமுல்லை, குடைபுகழு முல்லை
துயில்நிலைபோர் அவிகொடுத்தல், சால்புமுல்லை, கிணைவன்
சூழ்ந்துளவற் புகழ்ந்திடுகள் வழியேதத் துவத்தின்
பயனுணர்தல், உணர்ந்துஅருளால் நீங்கன்முப்பா னென்றும்
பரித்தவாகைத் திணைக்குளென்று ரைப்பர்பெரி யோரே. [மக]

**வாகைக்குரிய துறைகளின் ஒரு பகுதியைக் கூறுகின்றது.**

**உரை:** 21. இடத்தினையும் இயல்பினையும் சொல்லி அரசனை உயர்த்திக் கூறும் வல்லாண் முல்லை, 22. அரசன் பாதுகாத்தலைச் சிறப்பிக்கும் காவன் முல்லை, 23. அரசன் பாதுகாத்தலின் தகுதியைக் கூறல், 24. அரசன் போர்க் களத்தைக் கொண்ட சிறப்பைக் கூறும் பேராண் முல்லை, 25. மன்னன் கொடுத்ததை விரும்பாத வீரனின் தன்மையைக்

கூறும் மறமுல்லை, 26. குடையைப்புகழும் முல்லை, 27. போரில் அவிப்பலி கொடுத்தல் (உயிரைப் பலியாகக் கொடுத்தல்), 28. சான்றோரின் பெருமையைக் கூறும் சால்பு முல்லை, 29. கிணையைக் கொட்டுவோரின் புகழைக் கூறுதல், 30. தத்துவத்தின்பயன் உணர்ந்து மெய்ப்பொருள் அறிதல், 31. உலகத்துத்துயரத்தை உணர்ந்து அருள் காரணமாகப்பற்றை ஒழித்தல் என்ற முப்பத்தொரு துறையும் வாகைத் திணைக்கு உரியது.

**விளக்கம்:** புறப்பொருள் வெண்பாமாலை (சூத். 8) முப்பத்து மூன்று துறைகளைச் செல்லியுள்ளது.

142 பெருந்திணைக்குப் புறம்காஞ்சி, நில்லாத உலகம்
பேணுதலாம்; இறையதிர்ஊன் றிடக்காஞ்சி சூடல்,
விரைந்து எதிர்த்தல் எதிர்த்தாரைத் தடுக்கும்வழித்தழிஞ்சி,
மீளியர்க்குப் படைவழங்கல், வரிசையேற் றூர்த்தன்
முரண்புகறல், அறைகூவற் செல்கெனும்வாட் செலவு
முனைக்குடையிற் சேரல்சூழ் உரைத்தல்பூக் கூறல்
தருந்தூசி தாங்கிவீழ் தலைக்காஞ்சி, தலைதந்
தார்க்குதவல் பதிதலைகண் டவள்உயிர்மாய்த் திடலே. [மச]

***இதுவும் அடுத்த சூத்திரமும் காஞ்சித்திணையின் விளக்கமும் அதன் துறைகளும் கூறுகின்றன.***

**உரை:** பெருந்திணைக்குப்புறமாக வருவது காஞ்சித்திணை 1. நிலைபேறு இல்லாத உலகத்தைப் போற்றிப் பாதுகாப்பது காஞ்சி, 2. பகையரசன் வந்துவிட அரசன் காஞ்சிப்பூவை அணிந்து கொள்ளுதல், 3. எதிர்த்துப் போரிட விரைவாகச் செல்லுதல், 4. எதிர்த்துவரும் பகையரசரைத் தடுத்து வரும் வழியைக்காத்தல், 5. வீரர்களுக்குப் படைக்கலங்களை வழங்குதல், 6. படைக்கலங்களையும் வரிசையையும் பெற்றுக்கொண்டோர் தங்களுடைய வலிமையைக் கூறுதல், 7. பகைவர் அறைகூவி அழைத்தால் செல்க என்று கூறும் வாள் செலவு, 8. போர்க்குடையைப் புறவீடு விடுத்தல், 9. இவ்வாறு செய்வேன் என்று சூளுரைத்தல், 10. அரசன் கொடுத்த

பூவின் சிறப்புச் சொல்லுதல், **11.** எதிர்த்துவரும் படையைத் தாங்கி இறந்தவனுடைய தலையின் மதிப்பைச் சொல்லுதல், **12.** தலையைக் கொண்டு வந்தவனுக்குச் செல்வத்தைக் கொடுத்தல், **13.** கணவனுடைய தலையைக் கண்ட மனைவி தன் உயிரைப் போக்கிக்கொள்ளுதல்.

**விளக்கம்:** காஞ்சித்திணைக்குரிய விளக்கம் தொல்காப்பியத்தை (புறத்திணை. 78) ஒட்டியது. புறப்பொருள் வெண்பாமாலை கூறும் விளக்கம் இதனின்றும் மாறுபட்டது.

**143.** மாற்றார்சா தலைதுளக்கக் கடவுமற மாற்றார்
வருதல்கண்டு புண்கிழித்து முடிதல்பேய் ஓம்பல்,
ஏற்றுஇறந்தார்க் கண்டுபேய்அஞ் சல்பேய் தொடுதல்
இல்லான்புண் ணவற்றெடும்பேய் கடிந்ததொடாக் காஞ்சி,
ஆற்றலினென்று இரங்குதல்மட் டீதல்எரி மூழ்கல்,
அவன்படும்வே லின்இவனும் படுதல்வே லிறைவன்
வேற்றரசர் முன்னிருந்து முனைமுரிப்புஎண் மூன்றும்
வியந்தகாஞ்சித் துறையா(ம்)மென் மலர்க்கைக் கொடியே.
[௰௫]

**உரை:** **14.** பகைவர் சாதலைப்போற்ற மறவர் வருதல், **15.** பகைவர் வேல்பட்ட தன்னுடைய மார்பில் புண்ணைப் பிளந்துகொண்டு இறத்தல், **16.** வீரனின் திறத்தைக் கண்டு பேய் பரிகரித்தல், **17.** இறந்தாரைக் கண்டு பேய் அஞ்சுதல், **18.** பேய்புண்ணைத் தொடுதல், **19.** புண்ணினைத் தீண்டுவதற்குப் பயப்பட்டுப் பேய் நீங்கிய தொடாக்காஞ்சி, **20.** வீரனின் ஆற்றல் இத்தன்மையது என்று புகழ்ந்து மனம் நொந்து இரக்கப்படுதல், **21.** மதுவைக்கொடுத்தல், **22** மனைவி எரிமூழ்குதல், **23.** வீரன் இறந்துபட்ட வேலினால் அவன் மனைவியும் இறந்துபடல், **24.** மன்னன் பகைஅரசன் முன்னே இருந்து போர்க்களத்திலிருந்து போக்குதல் ஆகிய இருபத்து நான்கு துறைகளையும் உடையது காஞ்சித்திணை.

**விளக்கம்:** காஞ்சிக்குரிய துறைகள் இருபத்திரண்டு என்று புறப்பொருள் வெண்பாமாலை (சூத். 4) கூறுகின்றது.

144. கைக்கிளைக்குப் புறம்பாடாண் டிணைபாடிற் குரிய
கா வலனைப் பாடொழுக்கம் பாடுநெறித் தாகு(ம்);
மெய்க்கொடைசீர், ஆற்றல்,அளி சொல்லிறைக்கு வாயில்
விடும்புலவன் கடைநிலைஈ சனைப்பிறரைப் பிறிதைத்
தக்கொருவ னோடுஒன்றோடு உவமஉரு பகமாச்
சாற்றல்இறை முன்னெண்ணும் பரிசில்இவை என்றல்,
தொக்கின்னர் இவைஈய்ந்தார் அவர்போல்ஈ கென்றல்,
துயில்எழுப்பல், மடலேறல், மங்கலம்பா டுதலே. [௧௬]

***இதுவும் அடுத்த சூத்திரமும் பாடாண் திணையின் விளக்கமும் அதன் துறையும் கூறுகின்றது.***

*உரை: கைக்கிளைக்குப் புறமாக வருவது பாடாண் திணை. பாடுதற்கு உரிய அரசனைப் பாடும் சிறப்புப் பண்புகளை உடையது அது: 1. அரசனின் கொடைத் திறன், ஆற்றல்திறன், முதலியவற்றைச் சொல்லிப் புலவன் வாயில் காவலனை அனுப்புதல், 2. இறைவனோடு வேறொரு தக்கவரையும் தக்கபொருளையும் உவமையாகவும் உருவகமாகவும் ஒப்பிட்டுக் கூறல், 3. அரசன் முன்னால் தான் பெறக் கருதும் பரிசில் இவை என்று கூறுதல், 4. இன்னார் இவை ஈந்தார், அவர்போல நீயும் தருக என்று கூறுதல், 5. அரசனைத் துயிலிலிருந்து எழுப்புதல், 6. மடல் ஏறுதல், 7. மங்கலம் பாடுதல்.*

145. பாடுசபை மங்கலமே, விளக்குநிலை, சுடரைப்
பண்புவமை சொலல்,கபிலை நிலைவேள்வி நிலையே,
வீடுவெள்ளி நிலைமுதலா மழைக்குறி,யில் வாழ்க்கை
வேந்தன்அர சிருப்புமணச் சிறப்பு,மகப் பயத்தல்;
நாடு,நகர், மலைநதி'தார், கொடி,வளஞ்சொல் துறைகள்;
நாட்சிறப்புக் கிணைநிலை,பாண் கொடை,மறக்கள வழியே,
ஆடும்வெறி, ஆயுதமங் கலம்,கடவுள் வணக்கம்,
அடுத்தகட வுளைவணங்கிப் பயன்கூறும் கூற்றே. [௧௭]

*உரை: 8. சபையில் மங்கலம் பாடுதல், 9. அரசனுடைய விளக்கின் சிறப்பைக் கூறுதல், 10. ஞாயிற்றின் பண்*

போடு உவமித்துச் சொல்லுதல், **11.** கபிலைப் பசுவின் முறைமையைக் கூறல், **12.** வேள்வி செய்த முறைமையைக் கூறுதல், **13.** வெள்ளியினது நிலைமையைக் கூறுதல். **14.** மழைக்குறி கூறுதல் **15.** இல்வாழ்க்கையின் சிறப்புக் கூறுதல், **16.** வேந்தன் அரசிருப்பு, **17.** திருமண வாழ்க்கையின் சிறப்புச்சொல்லுதல், **18.** மகப்பேற்றின் சிறப்புச்சொல்லுதல், **19.** நாட்டின் வளம் சொல்லுதல், **20.** நகரின் வளம் சொல்லுதல், **21.** மலையின் வளம் சொல்லுதல், **22.** ஆற்றின் வளம்சொல்லுதல், **23.** தாரின் சிறப்புச்சொல்லுதல், **24.** கொடியின் சிறப்புச்சொல்லுதல், **25.** நாட்சிறப்பு, **26.** கிணைகொட்டுவோனின் நிலையைக்கூறுதல், **27.** பாணர்க்குக்கொடுத்தல், **28.** போர்க்களத்தின் சிறப்பு, **29.** ஆடும் வெறி, **30.** ஆயுதத்தின் நன்மையைக்கூறுதல். **31.** கடவுளை வணங்குதல், **32.** கடவுளை வணங்கிப்பெறும் பயன் சொல்லுதல்,

146. கூத்தர்விற லியர்பொருநர், பாணரே, புலவர்
 கூறுமாற்றுப் படைகள்; செவி யறிவே யுறுத்தல்,
வேத்தவையில் கொடைபெற்றும் விடைபெரு திருத்தல்
 விடைச்செலவு, கடவுள்மின்னர் விரும்பல் நயத்தல்,
ஏத்துதார்விரும் பல்புல்லேம் எனல்வேண்டா விருப்பே,
 இறைமயலைச் செயக்குரைத்தல், புறநிலைவா யுறையின்
வாழ்த்துக்கள்ஓம் படைநிலைஎன் னும்இவ் வேழின்
 வரும்பொதுச்சொல் லாதனவு(ம்) ஒழிபெனஉன் னுகவே
[மஅ]

***இதுவும் பாடாண் திணைக்குரிய துறையை விளக்குகிறது.***

**உரை:** 33. கூத்தர் ஆற்றுப்படை, 34. விறலியர் ஆற்றுப்படை 35. பொருநர் ஆற்றுப்படை, 36. புலவர் ஆற்றுப்படை, 37. பாணர் ஆற்றுப்படை, 38. அரசன் நல்லனவற்றை அறிந்துகொள்ளக்கூறுதல், 39. அரசவையில் பரிசில் பெற்றும் விடை பெற்றுச்செல்லாது தங்கியிருத்தல், **40.** விடைபெற்றுச் செல்லுதல், **41.** கடவுளைப் பெண்கள்

விரும்பிக் கெஞ்சிக்கேட்டல், 42. அவன் அணிந்த மாலையை விரும்புதல், 43. அவனைத்தழுவமாட்டோம் என்று கூறுதல், 44. வேண்டா வெறுப்பு, 45. அரசனுடைய விருப்பத்தை உரைத்தல், 46. புறநிலை, 47. வாயுறை வாழ்த்து, 48. அரசன்செய்யவேண்டிய நல்ல செயல்களை எடுத்துச் சொல்லுதல், ஆகிய நாற்பத்தெட்டும் பாடாண் திணைக்குரிய துறைகளாகும். இந்த ஏழுதிணைக்குரிய பொதுவானதையும் ஏனையவற்றையும் ஒழிபு என்று கொள்ளவேண்டும்.

**விளக்கம்:** புறப்பொருள் வெண்பாமாலை பாடாண் துறைக்கு 48 துறைகள் (சூத். 9) கூறியிருப்பினும் அதன் வகையில் இரண்டிற்கும் வேறுபாடு உண்டு.

147. உன்னநிலை, இளமையின்வேந்து, இயற்கைகழல்புனைதல்
ஊக்கத்துஏ ழகநிலைபட்ட வற்கேகற் காண்டல்,
அன்னகற்கோ ணிலைகன்னீர் படுத்திடல்கற் காண்டல்,
அணிக்கன்னாட் டுதலேகன் முறைபழிச்சல், கல்லைத்
தன்னகத்திற் கொடுபுகுதல், கணவனையே இழந்தாள்
தளருமுது பாலைசுரத் திடைப்பன்னி இழந்து
மன்னிரங்கு சுரநடைபெண் இழந்துவீட் டிருந்தோன்
வாடுதல்நி லையுரைத்த தபுதார நிலையே. [௰௬]

***பொதுவியலுக்குரிய துறைகளை இதுவும் அடுத்த சூத்திரங்களும் கூறுகின்றன.***

**உரை:** 1. அரசனை நிமித்தம் பார்க்கும் மரத்தோடு சேர்த்து மிகு புகழைச் சொல்லும் உன்னநிலை, 2. அரசன் இளையவனாக இருக்கும் பண்பு கூறுதல், 3. அரசன் கழலைப் புனைந்து கொள்ளுதல். 4. ஏழகத்தகரினை மேற்கொண்டு செலுத்தினும் இத்தன்மையன் என்று அவன் ஊக்கத்தை மிகுத்துச்சொல்லுதல், 5. போரில் இறந்தவர்க்குக் கல்நடுவதற்குக் கல்லைத் தேர்ந்தெடுத்தல், 6. அந்தக்கல்லை எடுத்துக்கொள்ளுதல், 7. அந்தக்கல்லை நீராட்டுதல், 8. கற்காண்டல், 9. அந்தக்கல்லை நடுதல், 10. கல்லைப்

பாராட்டிப்புகழ்ந்து கூறுதல், 11. அக்கல்லைத்தன் வீட்டிற்கு எடுத்துக்கொண்டு போதல், 12. கணவனை இழந்தவள் வருந்தும் தன்மையைக்கூறும் முதுபாலை, 13. பாலைவனத்தில் தலைவியை இழந்து வருந்தும் தலைவன் நிலையைக்கூறும் சுரநடை, 14. மனைவி இறந்தபின் தனியே வீட்டில் இருந்து வாடும் கணவனின் நிலையைக்கூறும் தபுதாரநிலை.

148. தாரம்இறை இறந்தபின்தா பதநிலை,சேய் ஈன்றாள்
சாய்ந்ததலைப் பெயர்நிலை,சேய் மாய்ந்ததிணை மயக்கம்,
பாரரசை இழந்துஇரங்கல், சொல்லிடையீட் டாலே
பாரிசுமத்து எரிமூழ்குதல்,இறையோடு இறந்த
நாரியைக்கண் டவர்அழுமூ தானந்தம் தொழிலும்
நடவாது கனைகுழிப்பப் படுமூதா னந்தம்
ஓர் நிமித்தம் பொய்ப்பவிதும் பானந்தம் இறைவிண்
ஊற்றுமிருந் தேன்என்னும் ஆனந்தத் துயரே [௨0]

உரை: 15. கணவன் இறந்தபின் வருந்தும் மனைவியின் நிலையைக் கூறும் தாபத நிலை, 16. மகப்பேறு பெற்றபின் இறந்த மாதரின் நிலை கூறும் தலைப்பெயர் நிலை, 17. சேய் மாய்ந்த திணைமயக்கம், 18. அரசனை இழந்து வருத்தப்படுதல், 19. அரசி சுடலை நெருப்பில் மூழ்கி இறத்தல், 20. அரசனோடு இறந்த அரசியைக் கண்டவர்கள் அழுது அதிசயத்துக் கூறும் மூதானந்தம், 21. நல்ல நிமித்தம் ஏற்படாததால் பயப்படும் நிலை கூறும் ஆனந்தம், 22. தலைவன் இறந்தும் தலைவி தான் இறவாமல் இருக்கிறேன் என்று கூறும் ஆனந்தத்துயர்.

149. துயரின்அடுத் தோர்அழுங்கை யறுநிலை,போர்க் களத்தில்
துஞ்சினோர்க்குஇரங் கல்,பட்டோன் புகழைஇச்சித்து
உரைத்தல்
அயர்வில்அறமுதலசொலு முதுமொழி,கூற்று உறுமுன்
அறஞ்செய்மின் என்றல்நிலை யாமைகோ னிழந்த
கயல்விழிநாண் துணையின்உறல் நிறைகாப்பின் உறுதல்,
கற்புமுல்லையே, புணர்பால்முல்லை, இல்லாண்டு முல்லை,
உயர்காடு வாழ்த்து,ஈவார் துதித்து,ஈயார் பழித்தல்,
உந்தி, கடை திறப்பு,இடைமை, வலைமை, குறந் தவமே.
[௨௧]

உரை: 23. துன்பம் உற்றவர்கள் அழும் கையறு நிலை (செயலற்ற நிலை), 24. போர்க்களத்தில் இறந்தவர்க்கு வருத்தப்படுதல், 25. இறந்தவனுடைய புகழை விரும்பிப்பாராட்டி உரைத்தல், 26. குற்றமற்ற அறம் முதலியவற்றைச் சொல்லும் முதுமொழி, 27. இறப்பதற்குமுன் அறம் செய்யுங்கள் என்று கூறுதல், 28. நிலையாமை, 29. அரசனை இழந்த பெண் நாணையே துணையாகக் கொள்ளுதல், 30. கற்பையே காப்பாகக் கொள்ளுதல், 31. கற்பு முல்லை, 32. மணந்தவன் வருத்தம் நீங்கின மனத்துடனேயே விதியை ஏத்தும் பாண் முல்லை. 33. இல்லின் சிறப்பைக் கூறும் இல்லாண் முல்லை. 34. காடு வாழ்த்து, 35. பொருள் கொடுப்போரைத் துதித்தல், 36. பொருள் கொடுக்காதவரைப் பழித்தல், 37. உந்தி 38. கடை திறப்பு, 39. இடைமை, 40. வலைமை, 41. குறம், 42. தவம்.

150\. தவரில் உறுப் பியல்கள்சொல்லல், சித்துஉரைத்தல், மல்லன்,
தகர்விடைபூம் ஆனை,பரி, கோழி,சுவர்ப் பூவை,
சிவல்,கிளி,தேர்,, கவி,சூது, யாழ்,பாடல், ஆடற்,
சிறப்பு; உலாச், சுடர்தோற்றம், தூது,தொழில், சிறப்பு,
நவில்கால, முடிகவித்தல், அமைச்சியல், பூக் கொய்தல்,
நன்னீரா டுதல், பொழிலா டுதல்,சுண்ணம் இடித்தல்,
செவியதோணேக் கம்ஆடு தல்,குயில்கூ வித்தல்
தெள்ளேணங் கொண்டாடல், வாகனத்தின் திறமே [உஉ]

உரை: 43. உறுப்புக்களின் இயல்பைக் கூறுதல், 44. சித்து உரைத்தல், 45. மல்லன், 46. தகர், 47. விடை, 48. பூழ், 49. யானை, 50. பரி (குதிரை), 51. கோழி, 52. சுவர்ப்பூவை, 53. சிவல், 54. கிளி, 55. தேர், 56. கவி, 57. சூது, 58. யாழ், 59. பாடல், 60. ஆடல், 61. சிறப்பு, 62. திங்களின் தோற்றம், 63. ஞாயிற்றின் தோற்றம், 64. தூது, 65. தொழிற்சிறப்பு, 66. காலம், 67. முடி சிறப்பு, 68. அமைச்சியல், 69. பூப்பறித்தல், 70. நீராடுதல், 71. பொழில் ஆடுதல், 72. சுண்ணம்.

இடித்தல், 73. தோள் நோக்கம் ஆடுதல், 74. குயில் கூவித்தல், 75. தெள்ளேணம் கொட்டுதல், 76. வாகனத்தின் திறம்

151. திரைக்காப்புச், செங்கீரை, தாலம்சப் பாணி,
செய்யமுத்தம், வாரானை, அம்புலிகூ யாடல்,
அறைத்தசிறு பறை,சிற்றில் அழித்தாடல், சிறுதேர்,
அம்மானை, கழங்குஊசல், சோபனங்கட் டியமே,
துறைக்கொம்மை, தத்தாங்கி, கப்பன், மதங்கு,ஏசல்,
தொண்ணூற் ருறுஇவைகள் போல்பிறவும்ஒழி பாகும்;
இறைத்தமுன்னூற் ரேடுநாற்பான் இரண்டுபுறத் துறையாம்;
இருபொருளில் துறைஎண்ணூற்று இருபான்ஆ றெழுமே.
[உக]

77. காப்பு, 78. செங்கீரை, 79. தாலம், 80. சப்பாணி, 81. முத்தம், 82. வாரானை, 83. நிலாவைக் கூப்பிடல், 84. சிறுபறை, 85. சிற்றில் அழித்து விளையாடல், 86. சிறுதேர் உருட்டல், 87. அம்மானை, 88. கழங்கு ஆடுதல், 89. ஊஞ்சலாடுதல், 90. சோபனம், 91. கட்டியம், 92. துறைக்கொம்மை, 93. தத்தாங்கி, 94. கப்பல், 95. மதங்கு, 96. ஏசல் என்ற தொண்ணூற்று ஆறும் இவை போன்ற பிறவும் ஒழிபியலைச் சார்ந்தன.

| | |
|---|---|
| வெட்சி | 49 |
| வஞ்சி | 25 |
| உழிஞை | 32 |
| நொச்சி | 9 |
| தும்பை | 28 |
| வாகை | 31 |
| காஞ்சி | 24 |
| பாடாண் திணை | 48 |
| ஒழிபு | 96 |
| | 342 |

என்று புறத்துறை மொத்தம் முந்நூற்று நாற்பத்திரண்டு.

அகத்துறை — 484
புறத்துறை — 342

826

அகமும் புறமும் சேர்ந்து எண்ணூற்று இருபத்தாறு ஆகும்.

**விளக்கம்:** இது புறப்பொருள் வெண்பாமாலை பொதுவியற் படலத்தில் காணப்படும் கருத்தை (சூத். 10,11) ஒட்டியது எனினும் வேறுபாடு அதிகம் காணப்படுகின்றது.

# 5. யாப்பதிகாரம்

## 1. உறுப்பு மரபு

152. எழுத்துமுதல் இரண்டு,சார்பு ஈரைந்தாய், ஈராறு
என்பர்அசை இரண்டு,முப்பான் சீர்.தளைஏழ், அடிஐந்து,
ஒழுக்கின்ஐம் பான்,ஒன்றுதொடை ஒன்பான்ஆறு ஒன்பான்
உடன்இரண்டாய் விரி,நாற்பா மூன்று இனம்யாப்
பியலாம்,
அழுத்துகுறி(ல்), நெடில்,தனித்தும், அவற்றினில்ஒற்
றடுத்தும்,
ஆய்தநே ரசைநான்கு குறிலிணைந்து நின்றுங்,
கொழுத்தகுறி னெடில்தனித்தும், அவற்றினில்ஒற் றடுத்தும்
கூடுநிரை யசைநான்கொடு எட்டாம்ஈ ரசையே. [௧]

***யாப்புக்களின் உறுப்பும் அசையும் உணர்த்துகின்றது.***

**உரை:** *முதல் எழுத்து இரண்டு வகை (உயிர், மெய்); சார்பெழுத்து பத்து (குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, ஐகாரக்குறுக்கம், ஔகாரக் குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம், குற்றியலுகரக் குறுக்கம்) ஆக எழுத்து பன்னிரண்டு. அசை இரண்டு வகை*

(நேர், நிரை), சீர்மூன்று வகை (இயற்சீர், உரிச்சீர், பொதுச்சீர்), தளை ஏழுவகை (வெண்டளை இரண்டு, ஆசிரியத்தளை இரண்டு, கலித்தளை ஒன்று, வஞ்சித்தளை இரண்டு), அடி ஐந்து வகை (குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி) பொருந்திய தொடை ஐந்து (மோனை, இயைபு, எதுகை, முரண், அளபெடை); தொடையின் விரி 48. பாக்கள் நான்குவகை (வெண்பா, ஆசிரியம், கலி, வஞ்சி) மூன்று வகை இனங்கள் (தாழிசை, துறை விருத்தம்) ஆகியவை சேர்ந்து நடை பெறுவது யாப்பினுடைய தன்மையாம். குற்றெழுத்துத் தனித்து வரினும், நெட்டெழுத்துத் தனித்து வரினும், குற்றெழுத்து மெய்யெழுத்தை அடுத்து வரினும், நெட்டெழுத்து மெய்யெழுத்தை அடுத்து வரினும், நேரசையாகும். எனவே நேரசை நான்கு; இரண்டு குறில் சேர்ந்து வந்தாலும், அவை மெய்யெழுத்தை அடுத்து வந்தாலும், ஒரு குறிலும் ஒரு நெடிலும் சேர்ந்து வந்தாலும், அவை மெய்யெழுத்தை அடுத்து வந்தாலும், நிரையசை ஆகும். எனவே நிரையசை நான்கு; ஆக இரண்டும் சேர்ந்து அசை எட்டாகும்.

**விளக்கம்:** யாப்பருங்கலம், யாப்பின் உறுப்புக்கள் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, பா என ஏழு வகைப் படும் என்று பகுக்கும். யாப்பருங்கலக்காரிகை இவ்வேழுடன் பாவினமும் சேர்த்து எட்டு என்று கூறும். சாமிகவிராயரும் பாவின் உறுப்பு எட்டு என்றே கூறியுள்ளார்.

153. அசைஇரண்டாய், நான்கு இயற்சீர் அகவற்காம்; உரிச்சீர்
அசைமூன்ருய், எட்டாம்;நேர் ஈறுவெள்ளை; நிரைஈறு
அசையும்வஞ் சிக்கு;ஓரசைச் சீர்இரண்டு,நா லசைச் சீர்
எண்ணிரண்டும் பொதுவு,இவை முப்பான்சீர்ஏழ் தளைகள்
நிசவிளமுன் நிரைமாமுன் நேர்அகவல் தளைமா
நிரைவிளநேர் இயற்றளைகாய் முன்னேர்வெண்டளையாம்,
வசிகாய்முன் நிரைகலியின் தளைகனிமுன் நிரைநேர்
வஞ்சிக்காம் நிழல்கனிபூக் காய்பொதுச்சீர் தளைக்கே. [உ]

**அசையும், சீரும், தளையும், சீரின் வகையும், தளையின் வகையும் உணர்த்துகின்றது.**

**உரை:** ஈரசையினால் ஆன நான்கு சீரும் (நேர் நேர்; நிரை நேர்; நிரை நிரை; நேர் நிரை) ஆசிரிய உரிச்சீர் எனப்படும்; இயற்சீர் என்றும் கூறப்படும். மூவசையால் ஆன சீர் எட்டுச்சீரில் நேர் அசையை இறுதியில் (நேர் நேர் நேர்; நிரை நேர் நேர்; நிரை நிரை நேர்; நேர் நிரை நேர்) கொண்டுள்ள நான்கு சீரும் வெண்பா உரிச்சீர் எனப்படும். நிரையை இறுதியில் கொண்டுள்ள நான்கு சீரும் (நேர் நேர் நிரை, நிரை நேர் நிரை, நிரை நிரை நிரை, நேர் நிரை நிரை) வஞ்சி உரிச்சீர் எனப்படும். ஓரசைச் சீர் இரண்டு. நாலசைச் சீர் பதினாறு. அவை பொதுச் சீர் எனப்படும். மூன்று வகைச் சீரும் (ஆசிரியவுரிச்சீர், வெண்பாவுரிச்சீர், வஞ்சியுரிச்சீர்) பொருந்துவதால் ஏழு வகைத் தளையுண்டாம். விளச்சீரோடு (கருவிளம், கூவிளம்—நிரை அசையில் முடிவது) நிரைவந்து சேருவது நிரையொன்றாசிரியத்தளை எனப்படும். மாச்சீரோடு (தேமா, புளிமா-நேர் அசையில் முடிவது) நேர்வந்து சேருவது நேரொன்றாசிரியத்தளை எனப்படும். மாச்சீரோடு (நேர்) நிரையசைவந்து ஒன்றுவதும் விளச்சீரோடு (நிரை) நேரசை வந்து ஒன்றுவதும் இயற்றளை (இயற்சீர் வெண்டளை) எனப்படும். காய்ச்சீரோடு (மூவசையுடையதாய் நேரசையை ஈற்றில் உடைய தேமாங்காய், புளிமாங்காய், கருவிளங்காய் கூவிளங்காய்) நேரசை வந்து சேருவது வெண்சீர் வெண்டளை எனப்படும். காய்ச்சீரோடு நிரையசை வருவது கலித்தளையாகும். கனிச்சீரோடு, (மூவசை உடையதாய் நிரையசையை இறுதியில் உடைய தேமாங்கனி, புளிமாங்கனி, கருவிளங்கனி, கூவிளங்கனி) நிரையசை ஒன்றினும் நேரசை ஒன்றினும் வஞ்சித்தளை. (முன்னது ஒன்றிய வஞ்சித்தளை என்றும் பின்னது ஒன்றாத வஞ்சித்தளை என்றும் விதந்து அழைக்கப்படும்.)

**விளக்கம்:** காரிகையில் ஓரசைச் சீருக்கும் தளை கொள்ளும் முறை கூறப்பட்டுள்ளது; இந்நூலில் அச்செய்தி, கூறப்படவில்லை.

*பொதுச்சீரான நாலசைச்சீரில் தளைகொள்ளும்போது நிழற்சீர் எட்டும் கனிச்சீர்போலத் தளைபெறும். (எனவே நிழல்முன் நிரைவந்தால் ஒன்றிய வஞ்சித்தளை; நிழல் முன்நேர் வந்தால் ஒன்றாத வஞ்சித்தளை.) பூச்சீர் எட்டும் காய்ச்சீர் போலத் தளைபெறும். (எனவே பூ முன்நேர் வந்தால் வெண்சீர் வெண்டளை; பூ முன் நிரை வந்தால் கலித்தளை.)*

**பாடவிளக்கம்:** 'வஞ்சிக் கேரசைக் சீர்' (2-வது வரி) என்ற மூலபாடம் **'வஞ்சிக் கோரசைச்சீர்'** என்று திருத்தப் பட்டுள்ளது.

154. தளையொன்று, குறள்இரண்டு, சிந்துமூன்று, அளவு
தளை,நான்கு நெடில்,அடிஐந்து ஆதிகழி நெடிலாம்,
தெளிஅடிஐந்து இவையாம்;வெண் பாக்,கலிவஞ் சிக்கே,
சிறுமைஇரண்டு; அகவல்ஒன்றும் பெருமைபொருள் முடிவாம்;
எளிதின்முதல் எழுத்துஒன்றல் மோனை;ஈற்று உறுஞ்சொல்
எழுத்துஇசைத்தல் இயைபு;இரண்டாம் எழுத்துஒன்றல் எதுகை;
வளைபொருட்சொல் முரணின்முரண்; அளபெடுக்கில் அளபா(ம்);
மற்றுஇரட்டைத் தொடைஒருசொல் அடிமுழுதும் வரலே. [௩]

***அடியும் தொடையும் உணர்த்துகின்றது.***

**உரை:** *இரண்டு சீரான் வந்த அடி குறளடி, மூன்று சீரான் வந்த அடி சிந்தடி, நான்கு சீரான் வந்த அடி அளவடி, ஐந்து சீரான் வந்த அடி நெடிலடி, ஐந்து சீருக்கு மேற்பட்ட சீரான் வருவது கழிநெடிலடி என அடி ஐந்து வகைப்படும்.*

*வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய மூன்றுக்கும் குறைந்த அளவு இரண்டு அடி; அகவலுக்குக் குறைந்தது ஒரு அடி; மிக நீண்ட அளவு, பொருள்முடிவைப் பொறுத்து அமையும்.*

ஒவ்வொரு அடியிலும் முதல் எழுத்து ஒத்து வரும்படி பாடுவது மோனை. ஒவ்வொரு அடியிலும் இறுதியில் நின்ற சொல்லும் எழுத்தும் ஒத்து வரும்படி பாடுவது இயைபு. ஒவ்வொரு அடியிலும் முதலில் இரண்டாம் எழுத்து ஒத்து வரும்படியாகப் பாடுவது எதுகை. அடிதோறும் மொழிமுதலில் பொருளானும் சொல்லானும் மாறுபட்டு (முரண்பட்டு) வரும்படி பாடுவது முரண். ஒவ்வொரு அடியிலும் மொழி முதலில் உயிரெழுத்தாவது மெய்யெழுத்தாவது அளபெடை பெற்றுத் தம்முள் ஒத்து வரும்படி பாடுவது அளபெடை. ஒரு அடி முழுவதும் ஒரு சொல்லே வரும்படி பாடுவது இரட்டைத் தொடை

**பாட விளக்கம்:** 'அகவலொன்றும்' (வேதுவரி) என்பது அகவல் மூன்றும் என்று இருக்கவேண்டும் என்பது யாப்பருங்கலக்காரிகையால் ('மூன்று அகவற்கு' யா. கா. 14. 1) உணரலாம்.

155. முழுதுஅடிசீர் அசைஎழுத்தின் அந்தம்ஆ தியதாய்
மொழிதல்அந்தா தித்தொடையாம், இவைமுழுதும்
இலவேற்
பழுதறுசெந் தொடைஇருசீர் இணைதல்இணை, முச்சீர்
பற்றுவது கூழைநாற் சீர்முற்று முன்பின்
எழும்ஒருஉப், பொழிப்புஒன்று மூன்றுஉறின்.முன் னயல்சீர்
இலதுமேற் கதுவாய்கீழ்க் கதுவாய்பின் னயற்சீர்
அழிவுறலா(ம்), நெடிலின்மூன் றெழுத்து(உ)யிர்விட் டிசைசீ
ரடிவருக்கம் அனுவொடுஐம் பான்ஒருதொடைஎன்
றருளே. [௪]

**தொடையின் விரி உணர்த்துகின்றது.**

**உரை:** ஒரு அடியின் இறுதியில் (அந்தம்) நிற்கின்ற அடியோ, சீரோ, அசையோ, எழுத்தோ அடுத்த அடிக்கு முதலாக (ஆதி) வரும்படிச் செய்வது அந்தாதித் தொடை. மேலே கூறப்பட்ட மோனை முதலான பல்வேறு தொடையும் இல்லாமல் பாடுவது செந்தொடை என்று அழைக்கப்படும்.

(முதல்) இரண்டு சீர்களில் மோனை முதலாயின வரும்படி பாடுவது இணைத்தொடை.

(முதல்) மூன்று சீர்களில் மோனை முதலாயின வரும்படி பாடுவது கூழைத்தொடை.

நான்கு சீர்களிலும் மோனை முதலாயின வரும்படி பாடுவது முற்றுத்தொடை.

நான்கு சீர்களில் முதல் சீரும் நான்காம் சீரும் மோனை முதலாயின வரும்படி தொடுப்பது ஒரூஉத் தொடை.

முதல் சீரிலும் மூன்றும் சீரிலும் மோனை முதலிய தொடைகள் வருவது பொழிப்புத் தொடை.

முன்னயற்சீர் (அதாவது இரண்டாவது சீர்) நீங்கலாக ஏனைய சீர்களில் (1, 3, 4 ஆம் சீர்களில்) மோனை முதலிய தொடைகள் வருவது மேற்கதுவாய்த் தொடை.

பின்னயற்சீர் (அதாவது மூன்றுவதுசீர்) இல்லாமல் ஏனைய சீர்களில் (1, 2, 4 ஆம் சீர்களில்) மோனை முதலியன வருவது கீழ்க்கதுவாய்த் தொடை.

**விளக்கம்:** அனு என்பது இனம் என்ற பொருளில் யாப்பருங்கலக்காரிகை (பக். 169) உரையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

## 2. பாவின மரபு

156. அருள்பாவில் வெள்ளைசெப்பல், அளவுபின்சிந்து இறும்ஓர்
அசைஇரண்டேல் உவ்வாம்,ஈ ரடிகுறட்பாக் கூன்சேர்
இருகுறள்நே ரிசைஆசிட் டாசிடைநே ரிசைகூனில்
அதாசிட்டுஇரு குறள்ஆசிடை விகற்புஒன்று இரண்டாம்
ஒருமைபன்மை விகற்பாய்க்கூ னிலவுநே ரிசையின்
ஒழிந்தவும்இன் னிசை,அடிமூன்று இன்னிசைநே
ரிசைபோற்
பரவுதல்சிந் தியல்,ஐந்து முதல்ஈராறு அளவும்
பஃறொடை,மிக்கு ஆதல்கலி யொன்பதும்வெண் பாவே.
[க]

*வெண்பாவின் வகை உணர்த்துகின்றது.*

**உரை:** வெண்பா செப்பல் ஓசை உடையது. நான்கு சீர் கொண்ட அடிகளையுடையது. இறுதி அடி மூன்று சீராய் வரும். ஈற்றுச்சீர் ஓரசையையுடையது. இரண்டு அசையானால் (காசு, பிறப்பு என்னும்) உகரவாய்பாட்டில் முடியும்.

இரண்டு அடியால் வருவது குறள்வெண்பா. இரண்டு குறள் வெண்பாவாய் நடுவே தனிச்சொல் பெற்று வருவது இரு குறள் நேரிசை-வெண்பா. ஆசு இடையே வைத்து இரண்டு குறள் வெண்பாவாய் நடுவே தனிச்சொல் வைத்து ஒரு விகற்பத்தாலும் இரண்டு விகற்பத்தாலும் வருவது ஆசிடை நேரிசை வெண்பா. ஒரு விகற்பத்தாலும் பல விகற்பத்தாலும்

வந்து தனிச்சொல் இல்லாமல் நான்கடியாய் வருவது இன்னிசை வெண்பா. மூன்று அடியால் இன்னிசை வெண்பாப் போல (அதாவது தனிச்சொல்லின்றி ஒரு விகற்பமாயும் பல விகற்பமாயும் வருவது) இன்னிசைச் சிந்தியல் வெண்பா. மூன்று அடியால் நேரிசை வெண்பாப்போல் (அதாவது இரண்டாவது அடியில் தனிச்சொல் பெற்று இரண்டு விகற்பத்தாலும் ஒரு விகற்பத்தாலும் வருவது) நேரிசைச் சிந்தியல் வெண்பா. ஐந்துஅடிமுதல் பன்னிரண்டு அடி அளவும் பெற்று வருவது பஃறொடை வெண்பா. பன்னிரண்டு அடிக்கு மேற்பட்ட வெண்பாவினைக் கலிவெண்பாவாகக் கொள்ள வேண்டும்.

157. வெள்ளொத்தா ழிசைஅடிமூன்று ஈற்றடிமுச் சீராய்
வேற்றுஒலிகீழ் குறையாகி அடிமூன்று முதல்ஏழ்
உள்ளுற்றால் வெண்டுறையா(ம்). மூன்றடிநான் கடிஈற்று
ஓர்தனிச்சொல் பெறுதல்வெளி விருத்த(ம்) மூன்று
இனமா(ம்)
துள்ளுற்ற குறட்குஇனம்செந் துறையொடுதா ழிசையாம்;
சொல்அகவல் இசைஐந்துஈறு அளவடிஆ சிரிய(ம்);
நள்ளுற்ற ஈற்றயல்சிந் தேற்றி(ன்)நே ரிசைப்பா
நான்கடியு(ம்) மாறிவரில் அடிமறிமண் டிலமே. [உ]

***வெண்பாவின் இனமும் ஆசிரியப்பாவின் வகையும் கூறுகின்றது.***

***உரை:*** வெள்ளொத்தாழிசை, அடிமூன்று உடையதாய் இறுதிஅடி மூன்று சீர் உடையதாய் அமையும்.

வெண்டுறை, ஓர் இசையாயும் முன் ஓர் இசையாய்ப் பின் ஓர் இசையாயும் சீர்கள் குறைந்தும் மூன்று முதலாக ஏழு அடிவரை வரும். வெளிவிருத்தம் மூன்று அடியாலும் நான்கு அடியாலும் ஒவ்வொரு அடியின் இறுதியிலும் தனிச்சொல் பெற்று வரும். வெள்ளொத்தாழிசை, வெண்டுறை, வெளிவிருத்தம் ஆகிய மூன்றும் வெண்பாவுக்கு

இனமாக வரும். குறள் வெண்பாவுக்கு இனம், குறள் வெண் செந்துறையும் குறள் தாழிசையும் ஆகும்.

ஆசிரியப்பாவுக்கு அகவல் இசையும் ஐவகை ஈறும் அளவடியும் உரியன. இறுதியடிக்கு முன்னடி (ஈற்றயலடி) சிந்தடியாக (மூன்று சீராக வருவது) வருவது நேரிசை ஆசிரியப்பா. நான்கு அடியும் முன்பின்னாக மாற்றினாலும் பொருள் வருவது அடிமறிமண்டில ஆசிரியப்பா.

**பாட விளக்கம்:** 'பெருதல்' (2வதுவரி) என்ற மூலபாடம் பெறுதல் என்று திருத்தப்பட்டுள்ளது. 'உள்ளுற்ருல்' (2–வது வரி) என்ற மூலபாடமும் உள்ளுற்ருல் என்று திருத்தப் பட்டுள்ளது.

158. அடியாவு(ம்) நேர்ஒத்து வரின்நிலைமண் டிலப்பா
அளவு(ம்) முன்பின் ஒத்துஇடையிற் குன்றல்இணைக்
குறட்பா;
உடனேவெண் பாஅடிப்பின் அகவல்இறின் மருட்பா;
ஒன்றுஇரண்டாம் அடிநூற்பா அகவல்ஆறு ஆகு(ம்);
நெடியமுன் றடியொத்தல் அகவற்று ழிசையா(ம்);
நேர்ஒத்துஈற் றயல்குறைதல், இடைகுறைதல், மடக்கல்,
இடைகுறைந்து மடக்கல்,அக வற்றுறைநான் கடியே
எய்துகழி நெடில்விருத்தம்;இனம்மூன்றுங் கலப்பே.
[ரு]

**ஆசிரியப்பா வகையும் இனமும் உணர்த்துகின்றது.**

**உரை:** எல்லா அடியும் தம்முள் ஒத்து நான்கு சீராக வந்தால் நிலைமண்டில ஆசிரியப்பா. முதலடியும் இறுதி அடியும் நான்கு சீராய் நடுவே உள்ள அடிகள் இரண்டு சீரானும் மூன்று சீரானும் வருமாறல் அது இணைக்குறள் ஆசிரியப்பா. வெண்பா முதலாக ஆசிரியப்பா இறுதியாக வந்தால் மருட்பா. ஓர் அடி அல்லது ஈரடியில் வருவது நூற்பா அகவல். ஆக ஆசிரியப்பா ஆறுவகைப்படும்.

மூன்று அடிகள் தம்முள் அளவு ஒத்து வருமாயின் அகவல் தாழிசை. எல்லா அடிகளும் ஒத்து வந்து ஈற்றயல் அடி குறைந்து நான்கு அடியாய் வருவதும் இடையிலுள்ள அடி குறைந்து நான்கு அடியாய் வருவதும் இடை குறைந்து வருவதும் இடைகுறைந்து மடக்காய் வருவதும் எல்லாம் அகவல் துறையாம். கழிநெடில் அடி நான்காய்த் தம்முள் அளவு ஒத்து முடிந்தால் ஆசிரியவிருத்தம்.

**விளக்கம்:** நான்கடியே... (4—வது வரி) இடைநிலை விளக்காய் நின்றது.

159. கலிப்பாநே ரடிதுள்ளல், இருசுரித கம்பின்
காட்டும்ஒரு தரவு முத்தா ழிசைகூன்பின் னிலைகொண்டு
ஒலித்தல்நே ரிசைஒத்தா ழிசை; இடை தேர் குறள் சிந்து
ஓய்ந்து ஓய்ந்து உற் றிடில்அம்போ தரங்கவொத்தா ழிசை; முன்
பலித்துஅராகம் பெறில்வண் ணகவொத்தா ழிசையாம்
பண்பின்வெண் பாகசிதைந்து முச்சீர் இறு வதுவெண்க லிப்பா
வலித்தரவும் தரவிணையும் சிலபலதா ழிசையு(ம்)
மயங்கலுங்கொச் சகம்ஒன்பான் பிறங்கலிப்பா அளவே [ச]

***கலிப்பாவின் வகை உணர்த்துகின்றது.***

**உரை:** கலிப்பாவுக்கு நேரடி (நான்கு அடி); துள்ளல் ஓசை உரியது. சுரிதகம் பின்னே வந்து முடியும். ஒரு தரவு வந்து அதன்பின் மூன்று தாழிசை வந்து அதன்பின் ஒரு தனிச்சொல் வந்து ஒரு சுரிதக உறுப்புப்பெற்று வருவது 1. நேரிசை ஒத்தாழிசைக்கலிப்பா. தாழிசைக்கும் தனிச் சொற்கும் நடுவே நான்குசீர் அடியும் மூன்றுசீர் அடியும் இரண்டுசீர் அடியும் கொடுத்துத்தரவு, தாழிசை, அம்போ தரங்கம், தனிச்சொல், சுரிதகம் பெற்று வருவது 2. அம்போ தரங்க ஒத்தாழிசைக்கலிப்பா. அம்போதரங்க உறுப்புக்கும் தாழிசைக்கும் நடுவே அராகம் என்ற உறுப்பு வந்தால்

3. வண்ணக ஒத்தாழிசைக்கலிப்பா. கலிப்பாவிற்குரிய பண்பான கலித்தளை தட்டுக் கலியோசை தழுவியும் வெண்தளைதட்டு வெள்ளோசை தழுவியும் மூன்றுசீர் இறுதியில் வருவது 4. வெண்கலிப்பா. ஒரு தரவு வந்தது, 5. தரவு கொச்சகக் கலிப்பா. இரண்டுதரவு வந்தது, 6. தரவிணைக் கொச்சகக் கலிப்பா. சில தாழிசை வந்தது, 7. சில் தாழிசை கொச்சகக்கலிப்பா. பல தாழிசை வந்தது, 8. பல் தாழிசை கொச்சகக்கலிப்பா. தரவு, தாழிசை, அராகம், அம்போ தரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்ற ஆறு உறுப்புக்களும் தம்முள் மயங்கி வந்தது, 9. மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா. ஆகக் கலிப்பா ஒன்பது வகைப்படும்.

160. அள்வுஒத்துஈறு உயர்ந்துஅடிமட் டிலகலித்தா ழிசைநான்கு
அடிநெடிலும் அதிற்பன்னேழ் பன்னுறுஎண் முடிவுங்
களவற்ற கலித்துறைநே ரடிநான்கு பெறுதல்
கலிவிருத்தம் இன(ம்)மூன்ருந்; தூங்கல்இசை வஞ்சி,
தெளிவுற்ற குறளடிசிந் தடியாகித் தனிச்சொற்
சேர்ந்துசுரி தகங்கள்இறுங் குறளடிநான் குஒருமூன்று
உளதுற்ற தாழிசைஅங்கு அவைஒன்று துறைசிந்
தொருநான்கு விருத்தம்வஞ் சியின்மூன்றின் சீரே.

[ரு]

**கலிப்பாவின் இனமும் வஞ்சிப் பாவின் வகையும் உணர்த்து கின்றது.**

**உரை.** ஒத்த அளவுடைய அடிகளைக்கொண்டு இறுதி அடி மட்டும் மிகுந்தும் வருவது கலித்தாழிசை. நெடிலடி நான்காய்ப்பதினேழு எழுத்தும் பதினறு எழுத்தும் பெற்று வருவது கலித்துறை. நாற்சீரடி நான்காய் வருவது கலிவிருத்தம் எனக் கலிப்பாவிற்கும் மூன்று இனம் உண்டு.

தூங்கல் ஓசையை உடையது வஞ்சி குறளடி வஞ்சிப்பாவும் சிந்தடி வஞ்சிப்பாவும் தனிச்சொல் பெற்றுச் சுரிதகத்தால் முடியும். இரண்டு சீர் அடி(குறளடி) நான்காய் மூன்று செய்யுள்

ஒரு பொருள்மேல் அடுக்கி வந்தால் அது வஞ்சித்தாழிசை எனப்படும். இருசீரடி நான்காய் ஒரு பொருண் மேல் ஒன்றே வந்தால் அது வஞ்சித்துறை எனப்படும். மூன்று சீரடி நான் காய் வருவது வஞ்சிவிருத்தம் எனப்படும்.

161. சீர்தளைகெட் டிடில்குறுகு(ம்) உவ்வியும்அப் பெயருஞ்
சிலஒற்றும், அளபும்,அலகு ஏருவாம் சந்தம்
சார்வுறிற்சீர் பார்தளைதீர் பல்ஒற்றுஓர் ஒற்றுந்
தனிக்குறிலாம் குறளையௌ வொற்றளபும் பலநேர்,
பேரும்உயி ரளபுஇருநே ராம்,குறில்விட் டிசைக்கிற்
பிறபிறவொடு உறழும்வெள் ளையடிதளைசீர் உறழாது
ஆர்வனப்பு, வகையுளியாம், முதுசொல்,வசை வாழ்த்து,
அம்மானை, முதல்வொப்பால, வருங்காலச் செயுளே.

[ கூ ]

ஒழிபியல் உணர்த்துகின்றது.

உரை: செய்யுளில் சீரும் தளையும் பொருந்தாமல் கெட்டு வந்தால் குற்றியலுகரமும் குற்றியலிகரமும் மெய்யெழுத்துக் களும் அளபெடையும் அலகிடும்போது விலக்கிவிடவேண்டும். சந்தம் பொருந்தி வருமானால் பல ஒற்றுக்கள் சேர்ந்துவருவது ஒரு மெய்யெழுத்தாகவும் ஐகாரக் குறுக்கம் குற்றெழுத்துப் போலவும் ஔகாரக் குறுக்கமும் ஒற்றளபெடையும் தனிக்குறில் போலவும் உயிரளபெடை இரு நேரசையாகவும் கருதப் படுவது உண்டு. குற்றெழுத்து விட்டிசைக்குமானால் பிற வற்றொடு மாறுபட்டு வரும்.

பிறவகைப்பாடல்களில் வெண்பா அடிவந்து மயங்கும். பிறபாக்களின் சீரும், தளையும் வெண்பாவில் வந்து கலவா. வனப்பு, அம்மானை, ஒப்பு, காலம் முதலியனவும் செய்யுளில் வரும்.

# 3. பிரபந்த மரபு

162. செய்யுள்முடிவு இரண்டா(ம்),முத் தகம்குளகம் என;ஓர்
செய்யுளின்முத் தகம்இறும்;பல பாட்டின்இறுங் குளகம்;
எய்துஇரண்டால் தொகைநிலையாய்த் தொடர்நிலையாய்ச் செய்யுள்
இரண்டணிக்காம். அவற்றினிலே தொகைஒருவன் உரையும்,
ஐயர்பல்லோர் உரையும்,இடம், தொழில்,காலம், பொருள் பாட்டு
அளவு,பிற வாலும்பே ரிட்டுமுடிப் பனவாம்;
துய்யபொருட் டொடர்நிலை,சொற் றொடர்நிலை,என் றிரண்டாம்
தொடர்நிலை;சொற் றொடர்நிலைஅந் தாதிஅடுத் ததுவே. [க]

***இது செய்யுளின் வகையும் விரியும் கூறுகின்றது.***

**உரை:** *முத்தகம், குளகம் என்று செய்யுள் இரண்டு வகைப்படும். அவற்றுள் முத்தகம் என்பது ஒரு பாட்டால் முடியும். பல பாட்டுக்களால் முடிவது குளகம். மேலும் தொகைநிலைச்செய்யுள்,தொடர்நிலைச்செய்யுள் என இரண்டும் கூட அணி உணரப்பயன்படும். தொகைநிலைச்செய்யுள் என்பது ஒருவரால் இயற்றப்பட்ட பல பாட்டுக்களும் பலரால் இயற்றப் பட்ட பல பாட்டுக்களும் இடம், தொழில், காலம், பொருள், பாட்டின் வகை, அளவு ஆகிய பிறவற்றின் அடிப்படையில்*

பெயர் கொடுத்துத் தொகுக்கப்படுவது. தொடர்நிலைச் செய்யுள் என்பது ஒத்த பொருளால் தொடர்ந்து பாடப்படும். அது, 1. பொருள் தொடர்நிலைச்செய்யுள். முன்னே உள்ள செய்யுளோடு பின்னே வரும் செய்யுள் சொல்லினால் தொடர்ந்து வரும்படி அந்தாதித்தொடையில் [அந்தம் (முதல் பாட்டின் இறுதி) + ஆதி (அடுத்த பாட்டின் முதல்)]பாடப் படும். அது, 2. சொல்தொடர்நிலைச்செய்யுள் இவ்வாறு இரு வகைப்படும்.

**விளக்கம்:** இது தண்டியலங்காரம் 2 முதல் 6 வரை யுள்ள சூத்திரங்களைத் தழுவியது.

163. அடுத்தபொருட் டொடர்பெருங்காப் பியம்,சிறுகாப் பியமாய்
அறைவர்;அதின் வரும்பொருள்;வாழ்த்து, இணையிலிஇறை
வணக்கம்,
உடைத்தாய்நாற் பொருட்பயத்தாய், மலை,வாரி, நதி,நாடு
ஊர்,பருவம், சுடர்த்தோற்ற(ம்) மணங்,கலவி, புலவி
முடிச்சூட்டு; மகப்பேறு, கனிபொழில்ஆ டுதல்,நீர்
மூழ்கல்,போர், சயம்,அமைச்சு, தூதுஉடைத்தாய்ச், சந்தி
படப்படல, வுறுப் புடைத்தாய்ச் சுவை,பாவம் பொருந்தப்
பாடுவது தான்பெருங்காப் பியம்எனச்சொல் லுவரே
[உ]

***இது தொடர்நிலைச் செய்யுளின் விரி உணர்த்துகின்றது.***

**உரை:** பொருள் தொடர்நிலைச்செய்யுளைப் பெருங் காப்பியம் சிறுகாப்பியம் என இரண்டு வகையாகக் கூறுவர். அவற்றுள் பெருங்காப்பியம் என்பது வாழ்த்து, கடவுள் வணக்கம் உடையதாய் அறம், பொருள், இன்பம் வீடு என்ற நான்கு பொருளைத் தருவதாய் மலை, கடல், நதி, நாடு, ஊர், பருவம், ஞாயிறு, திங்கள் ஆகிய இரு சுடர்களின் தோற்றம் ஆகியவை பற்றிய வருணனைகளும் மணம், கலவி, ஊடல், முடிசூட்டு, பிள்ளைப்பேறு, சோலைகளில் விளையாடுதல், நீரில் விளையாடுதல், போர் வெற்றி, அமைச்சு, தூது பற்றிய

செய்திகளும் பொருத்தமாக அமையும் முறையில் படலம் முதலிய பாகுபாட்டோடு பல சுவைகளும் பாவங்களும் பொருந்தும்படிப் பாடுவது.

**விளக்கம்:** இது தண்டியலங்காரம் 7, 8, ஆகிய சூத்திரங்களை ஒட்டியது.

164. சொன்னவற்றிற் குறையினுமாம், அறம்ஆதி நான்காய்ச்
சொலும்பயனிற் குறைதல்,சிறு காப்பியமாம்; அவைதாம்
உன்னும்ஒரு வகைப்பாட்டிற் பலவகையாம்; பாட்டின்
உரைபாடை தழுவலுமாம்; இவ்விருசெய் யுளிலே
மன்னுவது பிரபந்தம் அளவிலவாம்; இவையே
மலை,நதி நாடு, ஊர்,தார்,மாக் களிறு,கொடி, முரசம்
பன்னுசெங்கோல், எனுந்தசாங்கம் பொருந்திப்பொ ருத்தம்
பார்த்துப்பா கத்தொடுசொல் வனசிலசொல் லுவமே. [௩]

***காப்பியத்தின் சிறப்பு இலக்கணமும் ப்ரபந்த வகைகளும் உணர்த்துகின்றது.***

**உரை:** மேலே சொல்லப்பட்ட உறுப்புக்களில் சில குறைந்தாலும் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு பொருளில் குறைந்துவருவது சிறுகாப்பியம் எனப்படும். இரண்டு வகைக்காப்பியங்களும் ஒருவகைச் செய்யுளாலும் பலவகைச் செய்யுளாலும் இயற்றப்பட்டு உரைநடை விரவியும் பிறமொழிச் சொல் கலந்தும் வரும். இவற்றில் கணக்கற்ற பிரபந்தங்களும் கலந்துவரும். மலை, நதி, நாடு, ஊர், மாலை, குதிரை, யானை, கொடி, முரசு, செங்கோல் ஆகிய பத்தும் (தசாங்கம்) சேர்த்துப் 'பொருத்தம்' பார்த்துப் பாகமும் சொல்லவேண்டும். அவற்றுள் சில பின்னல் கூறப்படுகின்றன.

**விளக்கம்:** இது தண்டியலங்காரம் 9, 11 ஆகிய இரண்டு சூத்திரங்களையும் வெண்பாப்பாட்டியல் 19ஆம் சூத்திரத்தையும் தழுவியது. செய்யுள் நெறி (வைதருப்பம், கௌடம்) எனத் தண்டியலங்காரம் கூறுவதையே இவர் 'பாகம்' என்று குறிப்பிட்டுள்ளார்.

165. வன்பில்பிள்ளைக் கவிஅகத்திற் கோவைபுறக் கோவை
வருக்கத்திற் கோவைஉலா வொடுபவனிக் காதல்
இன்பமடல், வளமடலே அனுராக மாலை
இசைவிரக மாலைஉலா மடல்சதகம் பதிகம்
அன்புஇரட்டை மணிமும்மணி நான்மணியிற் கோவை
அந்தாதி, மாலைஅலங் காரபஞ்ச மந்தான்
முன்புவெண்பாக் கலித்துறையே விருத்தத்தந் தாதி
மொழிபதிற்றுப் பத்தாம்அந் தாதிகலம் பகமே. [௪]

***பிரபந்தங்களின் வகை உணர்த்துகின்றது.***

**உரை:** *பிள்ளைக்கவி, (பிள்ளைத்தமிழ்) அகக்கோவை, புறக்கோவை, வருக்கக்கோவை, உலா, பவனிக்காதல், இன்பமடல், வளமடல், அனுராகமாலை, விரகமாலை, உலாமடல், சதகம், பதிகம், இரட்டை மணிக்கோவை, மும்மணிக்கோவை நான்மணிக்கோவை, மாலை. அலங்காரபஞ்சமம், வெண்பா, கலித்துறை, விருத்தத்தந்தாதி, பதிற்றுபத்தந்தாதி, கலம்பகம் ஆகியனவும்*

166. கலந்திடுபன் மணிமாலை, பரணி,திக்கு விசயங்,
காதல்வண்ணம், பஞ்சரத்தின நவரத்தின மேசல்
இலங்குகுற(ம்) மறம்பள்ளு நாடகங்கள் பிறவும்
ஏற்றுபிர பந்தமதாம்; இவைஅலது புலவோர்
துலங்குமதி யூகத்தாம் அகம்புறமாம் பொருளின்
துறையின்ஒன்று பலபலபாட் டோர்பாட்டின் இசைப்பார்
வலன்கலியே பாலைமுல்லை காஞ்சிவஞ்சி கடிக
மாலைவிலா சந்தூது மஞ்சரிப்பேர் மொழியே. [௫]

***பிரபந்த வகையின் தொடர்ச்சி இது.***

**உரை:** *பன்மணிமாலை, பரணி திக்குவிசையம், காதல், வண்ணம், பஞ்சரத்தினம், நவரத்தினம். ஏசல், குறம், மறம், பள்ளு, நாடகம் ஆகியனவும் இவை போன்ற பிறவும் பிரபந்த வகையைச் சாரும். இவை அல்லாமல், புலவர்கள் தங்களின் அறிவுத்திறத்தால் அகப்பொருளிலும் புறப்பொருளிலும் உள்ள*

பல்வேறு துறைகளைத் தனியே பாடுவதும் உண்டு. கலி, பாலை, முல்லை, வஞ்சி, கடிகமாலை, விலாசம், தூது, மஞ்சரி ஆகிய பெயர்கள் அவ்வகையில் அடங்கும்.

167. மொழிபொருளிற் காப்புமுதற் சிறுதேர்மட் டாண்பின்
மூன்றில்கழங்கு அம்மனைஊஞ் சல்பேணுங்கிளைச்சீர்
வகுப்போடு
அழிவின்அக வலின்விருத்தத்து அறைதல்பிள்ளைக் கவியாம்,
அகம்புறமும் தனித்தனிமுற் றுரைத்தலவ்வக் கோவை;
வழுவில்அகப் பொருளின்ஏற் பனஅகரா தியதாய்
வருக்கம்பா டுதல் வருக்கக் கோவை; கலித்துறையாம்
எழும்இறைவன் சீரும்அவன் பவனியுங்கண்டு ஏத்தும்
ஏழ்மடவார் பருவமும்பா டுதல்உலா இயல்பே. [௬௭]

***பிள்ளைக்கவி, கோவை, உலா ஆகியவற்றின் இலக்கணம் கூறுகின்றது.***

உரை: காப்பு முதல் சிறுதேர் வரை (காப்பு, தாலாட்டு, செங்கீரை, சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிறுபறை முழக்கல், சிற்றில்சிதைத்தல், சிறுதேர் உருட்டல்) ஆண்பாற்பிள்ளைத் தமிழுக்கு உரியன. பெண்பாற்பிள்ளைத் தமிழுக்குப் பின் மூன்று பகுதி இல்லாமல் கழங்கு, அம்மானை, ஊஞ்சல் (ஊஞ்சல் = ஊசல்) என்ற மூன்றையும் சேர்த்துக் கொள்ளவேண்டும். பிள்ளைக்கவி (பிள்ளைத்தமிழ்) வகுப்பாலும் ஆசிரிய விருத்தத்தாலும் பாடவேண்டும்.

அகப்பொருள்மேல் வருவன அகப்பொருட்கோவை. புறப்பொருள்மேல் வருவன புறப்பொருட்கோவை. அகப் பொருளில் ஏற்பனவற்றைக் கொண்டு அகர வரிசைப்படி வருக்கத்தால் பாடுவது வருக்கக்கோவை.

கலித்துறையால், வீதியிடை செல்கின்ற தலைவன் சிறப்பையும் அவன் உலாவையும் பார்த்துப் புகழ்கின்ற ஏழு பருவ மங்கை யரையும் பாடுதல் உலா.

**விளக்கம்:** *கிளைச்சீர் வகுப்பு என்பது ஒரு பொருளைப்பற்றி எண்சீர்க்கு மேற்பட்ட அடிகளால் அடுக்கி வண்ணம் அமையப் பாடுதல் ஆகும்.*

**பாட விளக்கம்:** *களங்கமனை (1வது வரி) என்ற மூல பாடம் 'கழங்கு அம்மனை' என்று கொள்ளப்பட்டுள்ளது.*

168. இயல்உலாவினில் ஆசைபிற ரொடுசொற்றுஇ ரங்கல்
இவைபவனிக் காதல்;அவை மிக்கதுஇன்ப மடலாம்
உயரும்ஆண்பா லவர்அவாறு இரங்கல்வள மடலாம்;
உற்றதுஉரைப்பு அனுராக மாலையா ரொடுந்தம்
மயல்உரைத்த லேவிரக மாலை;கன வினிற்சேர்
மங்கையரான்மடல்கூற்று உலாமடல்வெண் பாவாம்
பயிலும்ஓர்பாட் டாய்நூறுஉரைப் பதுதான் சதகம்
பப்பத்தாய் எத்துறையும் பாடல்ப திகமதே. [எ]

***பவனிக் காதல், இன்பமடல், வளமடல், அனுராகமாலை, கிரக மாலை, உலா மடல், சதகம், பதிகம், ஆகியவற்றின் இலக்கணம் கூறுகின்றது.***

**உரை:** *தலைவன் உலா வரும்போது தன்னுடைய விருப்பத்தைப் பிறரிடம் சொல்லி வருத்தப்படுதல் பவனிக் காதல் எனப்படும். காதல் மிகுதியாவதைக் கூறுவது இன்ப மடல். அச்சமயத்தில் ஆண்கள் அவ்வாறு வருத்தப்படுதல் வளமடல். தனக்கு நேர்ந்தவற்றைக் கூறுவது அனுராகமாலை எல்லோரோடும் தம்முடைய காதலை எடுத்துக் கூறுவது விரகமாலை. (தலைவனைக்) கனவினிற்கண்ட மடந்தையர் தலைவனை அடைவதற்காக மடல் ஏறுவதாகப் பாடுவது உலாமடல். இது கலிவெண்பாவால் வரும். நூறு பாடல் ஒரு யாப்பில் பாடுவது சதகம். எந்தப்பொருள் பற்றியும் பத்துப்பத்துப் பாடலாய்ப் பாடுவது பதிகம்.*

169. பத்துவெண்பாப் பத்துஅகவல் பாடலும்,பின் கலிப்பாப்
பத்துஉறலும், பின்வஞ்சி பத்துஉறலும், அடைவே
நத்துஇரட்டை மணிக்கோவை; மும்மணியிற் கோவை
நன்மணிக்கோ வையும்அவைநேர் கலப்பது
அந்தாதி யுமாம்;
ஒத்தவெள்ளை கலித்துறையும், பின்அகவ லும்பின்
னுறும்அகவல் விருத்தமும்,சேர்த்து அடைவின்
மாலையுமாம்
எத்திறத்தும் இனம்பாவின(ம்) மாறியைம்பான் கவிதை
இயம்புவதே அலங்கார பஞ்சமம்என் றுரே. [அ]

***இரட்டை மணிக்கோவை, மும்மணிக்கோவை, நான்மணிக் கோவை, மாலை, அலங்கார பஞ்சமம் ஆகியவற்றின் இலக்கணம் கூறுகின்றது.***

**உரை :** *பத்துவெண்பாவும் பத்து ஆசிரியப்பாவும் கலந்து பாடுவது இரட்டை மணிக்கோவை. பத்துவெண்பாவும், பத்து ஆசிரியப்பாவும், பத்துக் கலிப்பாவும் சேர்த்துப் பாடுவது மும்மணிக்கோவை. பத்து வெண்பாவும், பத்து ஆசிரியப்பாவும், பத்துக்கலிப்பாவும் பத்துவஞ்சிப்பாவும் கலந்து பாடுவது நான்மணிக்கோவை. இந்த மூன்றும் அந்தாதித் தொடையில் பாடப்பெறும். வெண்கலித்துறையும் ஆசிரியப் பாவும் ஆசிரியவிருத்தமும் சேர்ந்து முறையாக வருவது மாலை. எந்த வகையாலும் எந்த இனத்தாலும் மாறி மாறி ஐந்து வகையான (நேரிசை வெண்பாவும், கலித்துறையும் ஆசிரியப் பாவும், ஆசிரிய விருத்தமும் வகுப்பும் ஆகிய) கவிதையும் சேர்ந்து வருவது அலங்கார பஞ்சமம் ஆகும்.*

**விளக்கம் :** *இது வெண்பாப் பாட்டியல் செய்யுளியல் 16, 17, 22 ஆகியவற்றைத் தழுவியது.*

170. ஆர்ந்தவெள்ளை கலித்துறையே! விருத்தமுந்தான் தனியே
அந்தாதித் திடில்அப்பே ரந்தாதி; நூறு
சார்ந்துபப்பத் தோர்இசையாம் பதின்பத்துஅந் தாதி;
தகும்கலிப்பா வெள்ளைகலித் துறைபாடிப் பின்னர்த்

தோய்ந்தபாவி னமுழுதும் பலதுறையும் வகுப்புஞ்
சொற்றொடராம் கலம்பகம்;சில் குறைபன்மணி மாலை
ஏய்ந்தநூற மரர்தொண்ணூறு ஐயர்எண்பான் அரசர்
எழுபதமைச்சு அறுபதுஇப்பர் ஐம்பதுசூத் திரர்க்கே [௬]

***அந்தாதி கலம்பகம், கன்மணிமாலை முதலியவற்றின் இலக்கணமும் வகுப்பு அடிப்படையில் பாட்டின் தொகையும் கூறுகின்றது.***

**உரை :** *வெண்பாவால் அந்தாதித் தொடை வரப்பாடுவது வெண்பா அந்தாதி. கலித்துறையால் அந்தாதித் தொடை வரப்பாடுவது கலித்துறை அந்தாதி. விருத்தப் பாக்களால் அந்தாதித் தொடையில் பாடுவது விருத்தத்தந்தாதி. பத்துப்பத்துப் பாடல்களாக அந்தாதித் தொடையில் பாடுவது பதிற்றுப்பத்து அந்தாதி.*

*கலிப்பாவும், வெண்கலித்துறையும் முதலிலும் பின்னர் பாவினங்கள் முழுமையும் பல துறையும் வகுப்பும் தொடரப் பாடுவது கலம்பகம். இவற்றில் சில குறைந்தால் அது பன்மணி மாலை எனப்படும்.*

*நூறு பாடல் தேவர்களுக்கும், தொண்ணூறு ஐயர்க்கும் எண்பது அரசர்க்கும் எழுபது அமைச்சர்க்கும் அறுபது வணிகர்க்கும் ஐம்பது சூத்திரர்க்கும் பாடுவர்.*

**விளக்கம் :** *வெண்பாப்பாட்டியல் செய்யுளியல் 10, 12 சூத்திரங்களில் கூறியதைத் தழுவியது.*

171. திரமுறுகொச் சகப்பாவில் இரண்டடிஏ ருமல்
சேர்காப்புக், கடைதிறப்புப், பாலைச்சீர், காளி
அருமனைச் சீர்பேய்நிலை,பேய் மொழி,காளி மொழியே,
அரசன்சீர் எழுச்சிபொர லடுதல் களம் வேட்டல்,
மருவுபுறப் பொருள்சிறப்ப ஒருதினத்துஆ யிர(ம்) மா
வதைத்தவர்க்குப் பாடுதலே பரணி;அப்பா வினிலே
குரிசில்வெற்றி பாடுதலே திக்குவிசை யந்தான்;
கொண்டமயல் ஈரடிக்கண் ணியில்இசைகா தலுக்கே. [௰]

***பரணி, திக்குவிசையும், காதல் ஆகியவற்றின் இலக்கணம் கூறுகின்றது.***

உரை: கொச்சகக் கலிப்பாவால் இரண்டடி ஏழுமல் காப்பு, கடைதிறப்பு, பாலைநிலத்து இயல்பு, பேய் நிலை, பேய் மொழி, காளிமொழிதல், அரசன் போருக்கு எழுதல், வெற்றி பெறல், களவேள்வி ஆகிய புறத்திணைக்குரிய பொருள் சிறக்கும்படி ஒரு நாளில் ஆயிரம் யானையைக் கொன்றவரைச் சிறப்பித்துப் பாடுதல் பரணியாகும். கொச்சகப்பாவில் தலைவனின் வெற்றியைச் சிறப்பித்துப் பாடுதல் திக்கு விசையம் ஆகும். தான் கொண்ட ஆசையை இரண்டு அடிக்கண்ணியாகக்கொண்டு பாடுதல் காதல் ஆகும்.

விளக்கம்: பரணியின் இலக்கணம், வெண்பாப் பாட்டியல் செய்யுளியல் 38, 39 ஆம் சூத்திரங்களை ஒட்டியது.

172. தலைவனுக்கு நாற்கலையும் பொருட்குறைநாற் கலையும்
சந்தமிட்டு மும்மூன்று துள்ளலும்,தொங் கலுமாம்
கலைகள்எட்டாம் வண்ணம்;அல்லாற் பஞ்சரத்தின(ம்) முதலாய்க்
கண்டவைபா வினஞ்சிலதும் பதந்தருசிந் துகளே
பலவுமதாய்ப். பத்துஅங்கம், கலவி,மையல் தூது,
பவனி,கதை, சாதிகம்,வா தாடல்கொம்மை, குரவை,
புலவிமுதற் காப்பியம்போல் உரைபாடை தழுவிப்
புகல்வதுவாம். இனிப்பொருத்தம் கூறுதும்மங் கையரே
[௰௧]

***பிரபந்தம் சிலவற்றின் இலக்கணம் கூறுகின்றது.***

உரை: தலைவனுக்கு நான்கு கலைகளும் எடுத்துக் கொண்ட பொருளுக்கு நான்கு கலைகளும் ஆகச் சந்தங்கள் அமைத்துத்துள்ளலும் தொங்கலும் மும்மூன்றாக அமைய எட்டுக் கலைகளால் பாடுவது வண்ணம். பஞ்சரத்தினம் முதல் உள்ள ஏனைய பிரபந்தங்கள் பாவினங்களில் சிலவற்றையும் பதம் (நாட்டியம் ஆடுவதற்கு ஏற்ப பாடப்படும் பாடல்கள்) தருகின்ற சிந்து பலவற்றையும் பத்து உறுப்புக்கள், கலவி, மையல், தூது, பவனி(உலா), கதை, சாதிகம், வாதாடல், கொம்மை,

குரவை, புலவி தொடங்கிச் சிறுகாப்பியம்போல உரைநடையும் பிறமொழியும் கலந்து பாடப்படுவன. அடுத்துப்பொருத்தம் பற்றிப் பேசப்படும்.

**பாட விளக்கம்:** 'பஞ்சரத்தின்' (2வது வரி) என்று மூலபாடத்தில் இருப்பதை 166-இல் 'பஞ்சரத்தினம்' என்று ஒருவகைப் பிரபந்தம் கூறியிருப்பதால் 'பஞ்சரத்தினம்' என்று திருத்திக்கொள்ளப்பட்டுள்ளது.

173. மங்கலஞ்சொல், எழுத்துத்,தா னம்,பாலோடு, உண்டி,
வருண,நாட்,கதி, கணம்,பத்தாம் செய்யுட்பொ ருத்தம்
கங்கை,பரி, உலகஞ்சீர் பருதி,சசி,தார்கார்,
கடல்,புகழ்மா மலை,திருநீ ரெழுத்து,அமுதம் பழனம்
சங்கம்,அணி, பார்தேர்சொல், தாமரை,பொன் ஞாணை,
சந்தனங்,கற் பகம், நிதி,பா லழகு,அன்னம், திகரி,
திங்கள், பூ நாளும் முதன் மொழிக்காம்.நல் லடையுந்
திரிசொலுமாம் நூற்குஇசைமுன் பின்இடைமங் கலமே.
[௭௨]

***பொருத்தத்தின் வகையும் 'மங்கலம்' ஒன்பதன் விளக்கமும் உணர்த்துகின்றது.***

**உரை:** 1) மங்கலம், 2) சொல், 3) எழுத்து 4) தானம், 5) பால், 6) உண்டி (உணவு), 7) வருணம், 8) நாள், 9) கதி, 10) கணம் என்று பொருத்தம் பத்துவகைப்படும். அவற்றுள் மங்கலப்பொருத்தம் என்பது கங்கை, பரி, உலகம், சீர், பருதி, சசி, தார், கார், கடல், மலை, திரு, நீர், எழுத்து, அமுதம், பழனம், சங்கம், அணி, பார், தேர், சொல், தாமரை, பொன், ஆணை, சந்தனம், கற்பகம், நிதி, பால். அழகு, அன்னம், திகரி, திங்கள். பூ. நாள் ஆகியவை முதன்மொழிகள் வருமாறு பாடுவது. நல்ல அடைச்சொற்களும் திரிசொற்களும் நூலுக்கு முன்னும் பின்னும் இடையிலும் பயன்படுத்துவதும் மங்கலம் ஆகும்.

**விளக்கம்:** இது வெண்பாப்பாட்டியல் முதன்மொழியியல் சூத்திரங்கள் 2, 3, ஆகிய இரண்டையும் அடியொற்றியது.

174. மங்கலச்சொற் பொருள்இன்மை, தலம்இன்மைநாம
வகையுழிபல் பொருள்தோன்றல் சொல்லீறு திரிதல்
அங்கவையா கா;மூன்றுஐந் து,ஏழு,ஒன்பான் ஆகும்,
ஆறுஎட்டு நாலாகா; எழுத்துஅ,ஆ, ஐ,ஔ
இங்கிவையே பால;இஈ குமார;உ,ஊ ராச;
எ,ஏய விருத்தம்;ஒஓ மரண;மன்பே ரரதி
தங்குவது தான்முன்மூன் றும்பின்இரண் டாகா,
சார்குறிலாண் நெடிற்பெண் இவை உறழ்ச்சியும்பா லறியே
[௰௩]

***சொல், எழுத்து, தானம், பால் பொருத்தங்களை விளக்குகின்றது***

**உரை:** *சொற்பொருத்தம் என்பது முன்னே சொன்ன மங்கலச்சொற்களில் பொருள் இல்லாதனவும், நலம் இல்லாதனவும் வகையுளியைச் சேர்ந்தனவும் பலபொருட்கு ஏற்ற சொல்லும், ஈறுதிரிதல் ஆகியனவும் வராமல் பாடுவது.*

*மூன்று (இ), ஐந்து (உ), ஏழு (எ), ஒன்பது (ஐ) ஆகிய எழுத்துக்கள் முதன்மொழியில் வருவது நன்று. நான்கு (ஈ) ஆறு (ஊ) எட்டு (ஏ) ஆகிய எழுத்துக்கள் மொழிக்கு முதலில் வருவது தீது. இது எழுத்துப்பொருத்தம் ஆகும்.*

*அ, ஆ, ஐ, ஔ ஆகிய நான்கு எழுத்துக்களும் பால (சிறியவர்) எழுத்து என்றும், இ, ஈ, என்ற இரண்டும் குமார (இளைஞர்) எழுத்து என்றும், உ, ஊ, என்ற இரண்டும் அரச எழுத்து என்றும், எ, ஏ என்ற இரண்டும் மூப்பு எழுத்து என்றும், ஒ, ஓ என்பன மரண எழுத்து என்றும் தானங்களாக வகுப்பர். தலைமகனது இயற்பெயரின் முதலெழுத்தின் கூற்றைத் தொடங்கி முதல் மூன்று தானங்களாகிய பாலன், குமாரன், அரசன் என்பவற்றுள் ஒன்றாய்*

வருமாயின் நன்மை எனவும் பின்னிரண்டு தானங்களாகிய மூப்பு, மரணம் என்பவற்றுள் ஒன்ருய் வருமாயின் தீது என்றும் கொள்ளவேண்டும். இது தானப்பொருத்தம் ஆகும்.

குற்றெழுத்தெல்லாம் ஆண்பால் எழுத்தாம். நெட்டெழுத்தெல்லாம் பெண்பால் எழுத்தாம். எனவே ஆணைப் புகழுமிடத்து ஆண்பால் எழுத்தும் பெண்ணைப்புகழுமிடத்து பெண்பால் எழுத்தும் சிறப்புடைத்து. இரண்டு எழுத்துக்களும் மயங்கி வந்தாலும் குற்றமில்லை. இது பால் பொருத்தம் ஆகும்.

**விளக்கம்:** இது வெண்பாப்பாட்டியல் முதன் மொழியியல் 4, 5, 6, 7 ஆம் சூத்திரங்களைத் தழுவியது.

**பாட விளக்கம்:** 'வகையுழி' (1-வது வரி) என்பதன் சரியான பாடம் 'வகையுளி' என்பதே 'நெடிற்பின்' என்ற மூலபாடம் (4-வது வரி) 'நெடிற்பெண்' என்று திருத்திக் கொள்ளப்பட்டுள்ளது.

**175.** அறி,ஐஒ,ஔ, ஒவல்உயிர், கச,த,ந,ப, ம,வவேழ
அமுதம்;அம் முதல்அவுங்கான் மாத்திரைஅக் கேனஞ்
செறிஅளபு நஞ்சு;ஞ,ண, வெற்றுஆய்தம் அமுதில்
சேர்த்திடார்உயிர் சிவன்,மெய்ய யன்மால் செவ்வேள்,விண்
ணிறை,கதிர்இந் திரன்,வருணன், நிதிக்கோன்,ஈர் இரண்டாய்
இயற்றினராம்;உயிர்,கமுதல் ஆறு,ஐயர் முதல்
உறும்,அரசர் உறுல,வ றனவசியர் பிறவே;
உழவரையர்அரக்கையர்தாழ்ந் ததற்குஉயர்வு மாமே [ஒசு]

**உணவு, வருணம் என்ற இரு பொருத்தமும் விளக்குகின்றது.**

**உரை:** ஐ, ஔ, ஒ ஆகியவை அல்லாத உயிரெழுத்துக்களும் க, ச, த, ந, ப, ம, வ ஆகிய ஏழு மெய்யெழுத்துக்களும் உணவாகிய அமுத எழுத்தாகவும் முதல் எழுத்துக்களாக வராதனவும் கால் மாத்திரை உடைய மகரக்குறுக்கம்,

ஆய்தக்குறுக்கம் முதலியனவும் ஆய்தமும் அளபெடைகளும் நஞ்சு எழுத்தாகவும் கருதப்படும். ஞ, ண ஆகிய இரண்டு மெய் யெழுத்தையும் ஆய்தத்தையும் அமுத எழுத்தோடு கலந்து சொல்லமாட்டார். இது உணவுப் பொருத்தமாகும்.

உயிர் எழுத்துக்கள் அனைத்தும் சிவன், வருணம், மெய்யெழுத்துக்கள் ஒன்பதாய் வகுத்து அயன், திருமால், முருகன், இந்திரன், கதிரவன், மதி, எமன், வருணன் குபேரன் ஆகியோர்க்கு உரியதாகக் கருதப்படும். உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டும் க, ங, ச, ஞ, ட, ண ஆகிய ஆறு எழுத்துக்களும் அந்தணர்க்கும், த, ந, ப, ம, ய, ர, ஆகிய ஆறு மெய்யும் அரசர்க்கும் ல, வ, ற, ன, ஆகிய நான்கும் வணிகர்க்கும் ழ, ள என்ற இரண்டும் உழவர்க்கும் உரியன. அந்தணர்க்கு உரிய எழுத்து அந்தணர்க்கு மட்டுமாகவும் உயர்ந்தோர்க்கு உரிய ஏனைய எழுத்துக்களைத் தாழ்ந்தோர்க்கும் பயன்படுத்தலாம். இது வருணப் பொருத்த மாகும்.

**விளக்கம்:** இது வெண்பாப்பாட்டியல் முதன்மொழி யியல் 6, 7, ஆகிய சூத்திரங்களைத் தழுவியது

**பாட விளக்கம்:** 'முதலுறு மரசாரறு லள ...' (இறுதி வரி) 'முதல் உறும் அரசர் உறுலள' என்று திருத்திக் கொள்ளப்பட்டுள்ளது.

176. ஆமுதன்மை உற்பவநாட், பேர்நாண மத்திமம்,
ஆம் அவைமு வொன்பான்ஆக் கி,ஒன்றுமூன் றைந்தேழ்
தாமும்எட்டாம் இராசிவைநா சியமுமா காவாம்;
சாரும்இரு தலைபொருந்தில் உத்தமோத் தமமாம்
ஏமவலி குறில்ஈறில் சுரகதியா, வீ.யூ,வே,
இறின்மெலியு நரகதிமு தற் சீர்க்கு இசைவாம்
காயமிருக கதிய,ர,ல,ள, றபிறவே நரக
கதியாகா; இவற்றுயிர்முன் மெய்யொடில் குறுமே. [൫௫]

**இது கதி உணர்த்துகின்றது:**

உரை: 27 நாளையும் (நட்சத்திரத்தையும்) ஒன்பது ஒன்பதாக மூன்று கூறுக்கிப் பாட்டுடைத் தலைமகனின் இயற்பெயரின் முதல் எழுத்தின் நாளைத் தொடங்கிக் கூறுகளை எண்ண ஒன்று மூன்று, ஐந்து, ஏழுவரின் பொருந்தா. அல்லாத நாட்களுள் பாட்டுடைத் தலைவன் பெயர் முதல் எழுத்தின் இராசி தொடங்கி எட்டாம் இராசி நாட்களும் வயிறுசியமாகியமும் பொருந்தா. வல்லெழுத்துக்களும் ஒ நீங்கிய குற்றெழுத்துகளும் தெய்வ கதி. ஆ, ஈ, ஊ, ஏ ஆகிய நான்கு நெட்டெழுத்துக்களும் மெல்லெழுத்துக்களும் மக்கள் கதி இந்த இரண்டும் முன்மொழிக்கு நன்மை உடையவாம். ய, ர, ல, ள, ற ஆகியவை மிருக கதி. பிற எழுத்துக்கள் நரகர் கதி.

**பாட விளக்கம்:** 'நாண மத்திமம்' (1-வது வரி) என்ற மூலபாடம் 'நாண் மத்திமம்' என்று திருத்தப்பட்டுள்ளது.

'காம மிருக' (4-வது வரி) என்பது மூலத்தில் தெளிவாகத் திருத்தப் படாமல் உள்ளது. முதலில் 'காய்' என்று எழுதியதைப் புள்ளியை அடித்து விட்டு யகரத்தையும் திருத்தியுள்ளார்கள். ஆயினும் 'ம' என்று தெளிவாகப் படிக்க முடியாத நிலையில் உள்ளது

177. இலகுநேர்,கு ருநிரை;நப்ப தசகணம், வெண்சீர்
இப்பலன்வா ழுட்,புகழசூ னிய,நோயாம்; வஞ்சி
அலகிடுசீ ரேச,ர,ம,ய கணம்இதின்பலன் கேடு,
அழிவுதிரு, மகிழ்ச்சியாம்; சுவற்க மதி,வான்,
மலர்பருதி, வெண்சீர்முன்; வளி,அனல்,பார், புனலே,
வஞ்சிச்சீர்,பின் பொருந்தும்;பிற வாகா; இயற்சீர்
நலபிரமன், திரு,வரசன், கருடன்;முழு வதுமாம்
நவின்றதிற்கா ணுவிதிஉத் தியின்அமைத்துக் கொளலே.
[௧௬௯]

**இது கணம் உணர்த்துகின்றது.**

**உரை:** வடமொழியில் நேரசைக்கு இலகு என்றும் நிரையசைக்குக் குரு என்றும் பெயர். வெண்சீர் நான்கும் (காய்ச்சீர்) முறையே (நகர மெய்யில் ஆரம்பிக்கும் எழுத்துக்கள்) ப, த, ச ஆகிய எழுத்துக்களையும் வாழ்நாள், புகழ், சூனியம், நோய் ஆகிய பயனையும் சுவர்க்கம், மதி, வான், பரிதி ஆகிய இடங்களையும் பெற்றுப் பொருந்திவரும். அவ்வாறே வஞ்சிச்சீர் (கனிச்சீர்) நான்கும் முறையே ச, ர, ம, ய, என்ற எழுத்துக்களையும் கேடு, அழிவு, திரு, மகிழ்ச்சி ஆகிய பயன்களையும் காற்று, தீ, நிலம், நீர் ஆகிய இடங்களையும் பெற்றுப்பொருந்தி வரலாம் ஏனையவை பொருத்தமாக அமையாது. இயற்சீர் நான்கும் (தேமா, புளிமா, கூவிளம், கருவிளம்) முறையே பிரமன், திரு, அரசன், கருடன் ஆகியவற்றோடு பொருந்திவரும்.

இதில் கூறப்படாத விதிகளைப் பல்வேறு உத்திகள் மூலம் அமைத்துக்கொள்ள வேண்டும்

**விளக்கம்:** சிதம்பரப்பாட்டியல் பொருத்தவியல் 9, 10-ஆம் சூத்திரங்களைத் தழுவியது. ஆயினும் சிதம்பரப் பாட்டியலில்வெண்சீருக்கு ந, ப, த, வ என்று (அதாவது சகரத்திற்குப் பதில் வகரம்) குறிப்பிடப்பட்டுள்ளது *

---

* இந்தச் சூத்திரத்திற்கு உரை எழுத உதவிய திருவாளர் ச. தண்டபாணிதேசிகர் (விரிவுரையாளர், தமிழ்த் துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்) அவர்களுக்கும் இது சிதம்பரப்பாட்டியலோடு ஒப்புமை உடையது என்று காட்டியுள்ள திருவாளர் உ. பழநி அவர்கட்கும் என் நன்றி.

178. அமைத்தனநற் பொருத்தவிதி; இனிப்பாகம் என்ப
தவ்விருசெய் யுளிற்கவுடம், வைதருப்பம் எனவாங்
குமைத்தவண் ணம் வகுப்பு,மிறைக் கவி,ஒவ்வோ ரினமே
கூர்ந்தசெறி வெழுத்துடன்சொற் செறிவு,வழி மோனை
சிமிழ்த்தவழி யெதுகைதிரி வொடு,மடக்கு, முதலாய்ச்
செம்மையின்றிச், சொற்குஅரிதாம், கஷ்டம்இவ்வா றன்றித்
தமிழ்த்திறத்தில் அமிழ்தம்போற் செவிக்குஇனிமை காட்டும்
தனிமதுர பாகம்என்பர் வைதருப்பந் தனையே [ஏ]

***இது பாகம் உணர்த்துகின்றது.***

**உரை:** *இதுவரை பொருத்த விதி கூறப்பட்டது. 'பாகம்' என்பது கவுடம், வைதருப்பம் என இருவகைப் படும்.*

*வண்ணம், வகுப்பு, இறைக்கவி, செறிவெழுத்து, சொற் செறிவு, வழிமோனை, வழியெதுகை, திரிவு, மடக்கு முதலி யனவும் செம்மையாகச் சொல்லாமல் சொல்லுவதற்கு அரிய தாய் அமைவது கவுடநெறி.*

*அவ்வாறின்றித் தமிழ் முறையில் அமிழ்தம்போலச் செவிக்கு இனிமையை ஊட்டக்கூடிய தனித் தன்மையான இனிய பாகமே வைதருப்பம் எனப்படும்.*

**விளக்கம்:** *இது தண்டியலங்காரம் 13, 14, 15 ஆகிய சூத்திரங்களைத் தழுவியது.*

# 6. அணியதிகாரம்

## 1. பொருளணி மரபு

179. தன்மை,சுவை, உவமை,வேற் றுமை,வேற்றுப் பொருளே
தற்குறிப்பு, நிதெரிசனம், உருபகம்,ஒட்டு, ஏது
முன்னவிலக்கு, அவநுதி,உதாத்தம்,நிர னிறையே,
முரண்,மாறு படுபுகழ்,இ லேசம்,தீ பகமே,
பின்னிலை,சி லேடை,புணர் நிலை,சமா யுதமே
பெறுவிபாவ னைதம்மேம் பாடு,பரி யாயம்,
அன்னபரி வருத்தனை,வி சேட(ம்),நுட்பம், வாழ்த்தோடு
அதிசயம்,முப் பதுஞ்சங்கீ ரணமும்யாப் பணியே. [௧]

*இது பொருளணிகளின் தொகை உணர்த்துகின்றது.*

*உரை: 1. தன்மை, 2. சுவை, 3. உவமை, 4 வேற்றுமை, 5. வேற்றுப்பொருள் வைப்பு, 6 தற்குறிப்பு, 7. நிதரிசனம், 8. உருவகம் 9 ஒட்டு, 10. ஏது, 11. முன்னவிலக்கு, 12. அவநுதி. 13. உதாத்தம், 14. நிரனிறை, 15. முரண், 16 மாறுபடுபுகழ், 17. இலேசம், 18. தீவகம், 19 பின்னிலை, 20. சிலேடை, 21. புணர்நிலை, 22. சமாயுதம், 23. விபாவனை 24. தம்மேம்பாட்டு உரை, 25. பரியாயம், 26. பரிவருத்தனை, 27. விசேடம்.*

28 நுட்பம் 29. வாழ்த்து, 30. அதிசயம், 31. சங்கிரணம் என்ற முப்பத்தொன்றும் செய்யுளுக்கு அலங்காரமாகக் கருதப்படும் பொருள் அணியின் வகையாகும்.

**விளக்கம் :** தண்டியலங்காரம் 28 ஆம் சூத்திரத்தைத் தழுவியது எனினும் அது முப்பத்தைந்து பொருள் அணிகள் சொல்லியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. ஒப்புமைக் கூட்டம், புகழாப்புகழ்ச்சி, ஆர்வமொழி, பாவிகம் ஆகிய நான்கு அணிகளும் சேர்த்துக்கொள்ளப்பெறவில்லை.

180. அணியினில்எப் பொருளினு(ம்)மெய் விளக்குவது தன்மை
அதுபொருள்ஆ கியஆறின் முடிவாந்: தன்மைக்
குணம்வெளியில் தோன்றமுடிப் பதுசுவை,முன் பொருளிற்
கொண்டமெய்ப்பாடு எட்டும்அதாம்;பண்பு தொழிற்பயனிற்
பணிபொருளே பொருளோடு சேர்ந்துஒப்புமைதோன் றுறவே
பலவாகி ஒன்றாகி வெளிப்படைஉள் ளுறையாய்த்
துணியும்விரி வாய்த்தொகையாய் அணிகள்பல வினுமே
தோய்வதுவாய்ச் சொல்வதுவே உவமைஎன்னும் இதுவே.
[உ]

***தன்மை, சுவை, உவமை அணிகளை விளக்குகின்றது.***

**உரை:** எவ்வகைப்பட்ட பொருளாலும் உண்மைப் பண்பை விளக்கிச் செல்லுவது தன்மையணி. அந்தத்தன்மை பொருள் (Object) இடம், காலம். உறுப்பு (சினை), பண்பு (குணம்), தொழில் ஆகிய ஆறுவகையாகத் தோன்றும்.

பண்பு வெளியே தெரியும்படி சொல்லுவது சுவையணி. அது எட்டு வகை மெய்ப்பாட்டின் மூலம் (வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், உருத்திரம், நகை) வெளிப்படும். பண்புதொழில், பயன் என்பன காரணமாக வரும் பொருளோடு பொருள்சேர்ந்து ஒற்றுமை தெரியும்படி ஒருபொருளோடும்பல பொருளோடும் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் (உள்ளுறை) உவமை உருபுகள் பயன்படுத்தியும், உவம உருபுகள் பயன்படுத்தாதும் தொகையாகவும் வேறுபல அணிகளுடன் கலந்து வரும்படிச் சொல்லுவது உவமையணி.

**விளக்கம்:** இது தண்டியலங்காரம் 29, 69, 31 ஆகிய சூத்திரங்களைப் பின்பற்றியது.

181. இதரவித ரம்,புகழ்தல்,நிந்தை,கூ டாமை,
பின்சொல்,பல பொருள்ஐயந் தெரிதருதோற் றந்,தான்
உதவுசமுச் சய,மோக, நியமம்,அநி யமமே,
ஓர்வயிற்,பல வயிற்,போலி; அற்புதம்,அ பூதம்
விதமுறுவி காரம்,உண்மை, பொதுநீக்கம், இயம்பல்
வேட்கைவிப ரீதமாலை, இருபதிரண்டு; அவற்றில்
அதுநிகர்ஈ திதுநிகரது எனல்இதர விதரம்;
அப்புகழ்தல் உவமைதனைப் புகழ்வபொரு ளினுமே. [௩]

***இது முதல் நான்கு சூத்திரங்கள் உவமையின் விரியை உணர்த்துகின்றன.***

**உரை:** 1. இதர விதரம், 2. புகழ், 3. நிந்தை, 4 கூடாமை, 5. இன்சொல், 6. பல்பொருள், 7. ஐயம், 8 தெரிதருதேற்றம், 9. சமுச்சயம், 10. மோகம், 11. நியமம், 12. அநியமம், 13. ஒருவயிற்போலி, 14. பலவயிற்போலி, 15. அற்புதம், 16. அபூதம், 17. விகாரம், 18. உண்மை, 19 பொது நீக்கம், 20. இயம்பல் வேட்கை, 21. விபரீதம், 22. மாலை என இருபத்திரண்டு வகையை உடையது உவமை.

இதரவிதர உவமை என்பது ஒரு பொருள் ஒரு சமயம் உவமையாயும் மற்றொரு சமயம் பொருளாயும் வருமாறு உவமிப்பது. புகழ் உவமை என்பது பொருளைப் புகழ்ந்து கூறுவது.

**விளக்கம்:** இது தண்டியலங்காரம் 32–ஆம் சூத்திரத்தை ஒட்டியது. ஆனால் தண்டி 24 வகையே கூறியுள்ளது, மறுபொருள் என்ற அணிக்குப் பதிலாக இதில் அற்புத அணி சேர்க்கப்பட்டுள்ளது. உவமை விரியின் இலக்கணம் தண்டியலங்கார உரையில் மட்டுமே காணப்படுகின்றது.

182. பொருள்உயர்த்தி உவமையைநிந் திப்பதுநிந் தையாம்;
பொருட்குஇலாக்கு ணம்பொருத்திநிகர்சொலல்கூ டாமை;
ஒருபொருளின் உவமையைமேம் படுத்திமேம் படினும்
உயர்ச்சிஇலாது ஒப்பலதுஎன்று உரைத்தல் இன்சொல்
லாகும்;
அரியபொருள் ஒன்றுபல உவமைபல பொருளாம்;
ஐயம்உவ மையும்பொரு ளும்ஐயுற லாம்; ஐயம்
கருதிமறுப் பதுதெரியும் தேற்றம்;இதா னன்றிக்
காணும்இத னுலும்ஒப்பாம் என்றல்சமுச் சயமே [ச]

உரை: பொருளை உயர்த்திக்கூறி உவமையைத் தாழ்த்திக் கூறுவது நிந்தை உவமையணி. ஒரு பொருளுக்கு இல்லாத பண்பைச் சேர்த்துக்கூறி உவமையாக்குவது கூடாமை உவமையணி. ஒரு பொருளை விட உவமையை உயர்த்திக் கூறி அவ்வாறு உயர்த்திக் கூறினுலும் உயர்வு இல்லாது ஒப்புஇல்லை என்று கூறுவது இன்சொல் உவமையணி. அரிய பொருள் ஒன்றுக்குப் பல உவமைகளைக் கூறுவது பல பொருள் உவமையணி. உவமையையும் பொருளையும் ஐயப்பட்டுக் கூறுவது ஐய உவமை. ஐயப்பட்ட பொருளை ஆராய்ந்து துணிவது தெரிதருதேற்ற உவமையணி. இந்தப் பொருளால் மட்டுமின்றி வேறுசிலவற்ருலும் ஒக்கும் என்பது சமுச்சய உவமை.

183. மேவுமயல் வெளிப்படஓ துதன்மோக(ம்); நியம
விதிஇதற்கு இதேநிகர்என் றிடநியம(ம்); மறுக்கிற்
பாவும்அநி யமமாம்;ஓர் தொடர்ச்சொலிற்பல் உவமை
பலவயிற்போ லியதாம்;ஒன்று ஒருவயிற்போ லியதாம்;
கூவுபொருட் குணம்உவமைக்கு உண்டெனில்ஒப்பு, ஒன்றே
கூறுவதுஅற் புத(ம்); முன்பி லாநிகர்அ பூதம்
தாவுவமை வினவிகாரித் தல்விகா ரமதாம்
சாற்றுஉவமைசொலிமறுத்துப் பொருள்சொலல்உண்
மையதே [ரு]

உரை: ஒரு பொருள்மேல் எழுந்த வேட்கை வெளிப் படும்படிக் கூறுதல் மோக உவமையணி. இன்ன பொருளுக்கு

இன்னதே உவமையாகக் கூறவேண்டும் என்ற நியதியே நியம உவமையணி. நியமித்த உவமையை விலக்கிப் பிற உவமைகள் மிகவும் பொருத்தமானது என்பது அநியம் உவமையணி. ஒரு தொடர் மொழியில் பல உவமை வந்து வந்த உவமை ஒவ்வொன்றிலும் உவமைச்சொல் வெளிப்படும் படிச் சொல்வது பலவயிற்போலி உவமையணி ஒரு தொடர்மொழிக்கண் பல உவமை வந்தால் அந்த உவமைகள் ஒவ்வொன்றிலும் உவமைச்சொல் இல்லாமல் ஒரு உவமைச் சொல்லை மட்டுமே பயன்படுத்துவது ஒருவயிற்போலி உவமையணி. ஒரு பொருளின் பண்பு உவமிக்கப்படும் பொருளுக்கு இருந்தால் ஒப்பாக ஆகமுடியும் என்று கூறுவது அற்புத உவமையணி. முன்பு இல்லாததனை உவமையாக்கி உரைப்பது அபூத உவமை. ஒரு உவமையை விகாரப்படுத்திக் கூறுவது விகார உவமையணி. உவமையைச் சொல்லி மறுத்துப் பொருளையே கூறி முடிப்பது உண்மை உவமையணி.

184. சொல்உவமை சொலிமறுத்துப் பொருளைஒப்பாய்ப்
பொருட்கே
சொலல்பொதுநீங் குவமை;இதை இதுவாகச் சொலவே
ஒல்லும்விருப் பெனல்இயம்பல் வேட்கை;பொரு ளிகார
யுவமைபொரு ளாய்க்கூறல் விபரீதம்;ஓர் பொருளிற்
பல்உவமைக்கு ஒன்றேடொடுஒன்று: இடைவிடாத்
தொடர்ச்சி
பகர்மாலை யாம்; உயர்ச்சி, தாழ்ச்சி,மிகல் குறைதல்
நல்லபான்மா றல்வருமே னும்வழு வில வா
நவில்போலப், புரையமுதற் பலவாம்ஒப் புருபே. [சு]

**உரை:** உவமையைக் கூறி மறுத்துப் பொருள் தன்னையே உவமையாகக் கூறுவது பொதுநீங்கு உவமையணி. இந்தப் பொருளை இன்ன உவமையாகச் சொல்வதற்கே விருப்பம் என்று கூறுதல் வேட்கை உவமையணி. தொடர்ந்து உவமையாய் வருவதனைப் பொருளாகவும் பொருளாய்

வருவதனை உவமையாகவும் கூறுவது விபரீத உவமையணி. ஒரு பொருளுக்குப் பல உவமை வந்தால் அவை ஒன்றோடு ஒன்று இடைவிடாது தொடர்ச்சி உடையதாகச் சேர்த்தல் மாலை உவமையணி. உவமையைப் பொருளை (உவமேயம்) விட உயர்த்திச் சொல்லுதலும் தாழ்த்திச் சொல்லுதலும் மிகுத்துச் சொல்லுதலும் குறைத்துச் சொல்லுதலும் பால் வேறுபடுத்திச் சொல்லுதலும் (ஆண்பாலுக்குப் பெண்பால் உவமையைக் கூறுதலும் பெண்பாலுக்கு ஆண்பால் உவமை கூறுதலும் போல்வன) உடையனவாக வந்தாலும் குற்றம் ஏற்படாத முறையில் கூறவேண்டும். போல, புரைய போன்ற பலவும் உவம உருபுகளாக வரும்.

**விளக்கம்:** தண்டியலங்காரம் 34 ஆம் சூத்திரத்தை யொட்டிச் சுருக்கமாகச் சொல்லப்பட்டுள்ளன உவம உருபுகள்.

**பாட விளக்கம்:** 'பொருணிகாரய்' என்பது விளங்கவில்லை. ஆயினும் பொருளே உவமையாக வருவதைக் குறிக்கின்றது என்று இடம் நோக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

185. ஒப்பின்இரு பொருளைமொழிக் குறிப்பின்வே றுக்கல்
உற்றவேற்று மை;பொருளா தியற்புணரு முன்னோர்
மெய்ப்பொருள்வைத் ததுமுடிய உலகறிசொற் சொலலாம்
விரிவேற்றுப் பொருள்,கூட்டம், கூடாமை, இருமை,
தப்பும்விப ரித(ம்),முரண் ஓர் வழிமுழுமை, ஏழாஞ்
சரமசரத்து இயல்பைவே றோர்குறிப்பின் ஏற்றல்
செப்பியதற் குறிப்பாம்;ஒன் றினுக்குஒத்த பயனைத்
தீமைநன்மை புலப்படக்கூ றல்நிதரி சனமே. [எ]

***வேற்றுமை, வேற்றுப்பொருள் வைப்பு, தற்குறிப்பு, நிதரிசனம் ஆகிய அணிகளை விளக்குகிறது.***

**உரை:** ஒத்த இரண்டு பொருட்களைச் சொல் வழியாகவும் (ஒன்றின் சிறப்பை வெளிப்பட எடுத்துச் சொல்லுதல்) குறிப்பாகவும் தம்முள் வேற்றுமைப்படச் சொல்லுதல்

வேற்றுமை அணி. பொருள், குணம் போன்ற ஒன்றோடு பொருந்தும் மற்றொரு உண்மையான பொருளை வைத்து எல்லோரும் அறிந்து கொள்ளும் முறையில் சொல்லுவது வேற்றுப்பொருள் வைப்புஅணி. அது 1. கூட்டம் (பொருந்துவதனைப் பொருத்தம் உடையதாகச் சொல்லுதல், 2. கூடாமை (பொருந்தாததைப் பொருந்தும்படி அமைத்துக் கூறல்), 3. இருமை (பொருந்துவதையும் பொருந்தாததையும் சேர்த்துக் கூறுதல்), 4. விபரிதம் (மாற்றி விபரிதமாகத் தோன்றும் முறையில் கூறுதல், 5. முரண் (தம்முள் மாறுபட்டிருக்கும் இயல்பு உடைய பொருளை வைத்தல்), 6. ஓர்வழி (ஒரு பண்பைக் கூறினால் அப்பண்பின் எல்லாக் கூறுகளையும் முழுமையாகச் செல்லாது சிலவற்றின் மேல் செல்வது) 7. ஒருதிறம் உரைத்தால் (அத்திறம் எல்லாவற்றின் மேலும் முற்றச் செல்ல உரைப்பது) ஆகிய ஏழு வகைப்படும். அசையும் பொருள் அசையாப் பொருள் ஆகியவற்றின் இயல்பானத் தன்மையைத் தான் கருதிய பொருட்குறிப்புத் தோன்றும்படி அப்பொருள்கள் மேல் ஏற்றிச் சொல்லுதல் தற்குறிப்பேற்ற அணி. ஒரு பொருளால் நிகழும் நிகழ்ச்சியின் பயனை அதன் தீமையும் நன்மையும் வெளிப்பட்டுத் தோன்றுமாறு கூறுதல் நிதரிசன அணி எனப்படும்.

**விளக்கம்:** இது தண்டியலங்காரம் 49, 47, 48, 56, 85 ஆகிய சூத்திரங்களைத் தழுவியது. தண்டியலங்காரம் (48-ஆம் நூற்பா) வேற்றுமைப் பொருள் அணியை முழுவதும் சேறல் (முழுமை) ஒருவழிச் சேறல் (ஓர்வழி) முரணித் தோற்றல் (முரண்), சிலேடையின் முடித்தல், கூடா இயற்கை (கூடாமை) கூடும் இயற்கை (கூட்டம்), இருமை இயற்கை (இருமை), விபரீதப் படுத்தல் (விபரிதம்) என்று எட்டு வகையாகக் கூறியுள்ளது. சிலேடையின் முடித்தலும் இருமையின் பகுதியாகக் கருதியே சாமி கவிராயர் ஏழு வகையாகக் கூறியிருக்க வேண்டும்.

186. கூறுஉவமை உவமேயம் வேற்றுமைநீத்து ஒன்றுய்க்
கொண்டுஆக்கந்; தொகை,விரியாம் உருபகம்தான், இயைபு
தேரியைபு இலாமைஉரு பகம்சமா தானம்,
சிறப்பு,விருத் தம்,முற்றேடு, அவையவங்கள் அவை
யவியாம்,
ஏறுபல; உருபகத்தோர் தொடாஇயைபு தொடர் இன்
றியையாமை உருபகம்முன் உருபகம்செய் ததைப்பின்
வேறுஉருபித் திடில்பொருட்கே உருபகப்பண் பின்மை
வேறுகாரணம் இயல்புஎன்றெ னல்சமாதா னமதே [அ]

***உருவக அணியை விளக்குகின்றது.***

**உரை:** *உவமையாகக் கூறும் பொருளுக்கும், உவமித்துக் கூறப்படும் பொருளுக்கும் வேற்றுமையை நீக்கிவிட்டு ஒன்று என்பதோர் உணர்வுதோன்ற அமைப்பது உருவக அணி. 1. தொகை உருவகம் (ஆகிய என்ற சொல் மறைந்து இருக்கும்படிக் கூறுவது), 2. விரி உருவகம் (அச் சொல்லைப் பயன்படுத்திக் கூறுவது), 3. இயைபு உருவகம், 4. இயைபிலா உருவகம், 5. இயைபு இலாமை உருவகம், 6. சமாதான உருவகம், 7. சிறப்பு உருவகம், 8. விருபக அல்லது விருத்த உருவகம், 9. முற்று உருவகம், 10. அவையவ உருவகம், 11. அவையவி உருவகம் எனப் பலவகைப்படும்.*

*பல பொருள்களை உருவகம் செய்யும்போது தம்முள் இயைபு உடையவாகக் கூறி உருவகம் செய்வது இயைபு உருவகம். பல பொருளும் தம்முள் இயையாமை இயைபிலா உருவகம். ஒரு பொருளை நன்றாக உருவகம் செய்த பின்னர் அதனை வேறாக உருவகம் செய்து அப்பொருளுக்கு உருவகப் பண்பு இல்லை என்று வேறு காரண இயல்பு என்று கூறுதல் சமாதான (சமாதானம்) உருவகம்.*

**விளக்கம்:** *அடுத்த சூத்திரத்தில் விருத்தம் என்பது விருபகம் என்று கூறப்பட்டிருப்பதும் தண்டியலங்காரத்தில் விருபகம் என்றே கூறப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கன.*

சமாதான உருவகம் தெளிவாக விளங்கவில்லை. இது தண்டியலங்காரம் 36, 37 ஆகிய இரண்டையும் தழுவியது. ஆயினும் உருவகத்தின் விரி, தண்டியலங்காரம் பதினைந்து என்று கூறச் சாமிநாதம் வரையறுக்காமல் விட்டுச் செல் கின்றது.

187. சமப்பொருட்குச் சிறப்படைரு பித்தவற்றால் பொருளைத்
தானுருபித் தல்சிறப்பாங், கூடாக்கு ணங்கள்
அமைத்தல்விரு பகம்அங்க முழுதுரைத்தல் முற்றும்,
அவையவமும், அவையவியும் தனித்தனியேல் அவையாஞ்,
சிமிழ்க்கும்உரு பகம்இன்னும் பலகருதும் பொருளின்
திறந்தொகுத்துஒப் பாலதனைப் புலப்படுத்தல் ஒட்டாம்;
இமைக்கும்அடை யும்பொருளும் அயற்படுத்தல், பொதுவாய்
இயம்பல்,விர வித்தல்,விப ரிதப்படுத்த லாமே [கூ]

**உருவகத்தின் விரியும் ஒட்டணியும் விளக்குகின்றது.**

**உரை:** ஒரு பொருளை எடுத்து அதற்குச் சிறந்த அடைகளை உருவகம் செய்து அவற்றால் பொருளை உருவகம் செய்தல் சிறப்பு உருவக அணி. ஒரு பொருளுக்குப் பொருந் தாத தன்மையைக் கூட்டி உருவகம் செய்தால் விருபக உருவக அணி. உடல் உறுப்புக்களை முழுவதும் உருவகப்படுத்து தல் முற்று உருவக அணி. உடல் உறுப்புக்களை (அவையவம்) உருவகம் செய்வது அவையவ உருவக அணி. உடல் முழு வதும் (அவையவம் உடையது அவையவி) உருவகம் செய் வது அவையவி உருவக அணி.

தான் கூறக்கருதிய பொருளின் திறத்தை மறைத்து அதற்கு ஒப்பான பிறிது ஒன்றின் மூலமாக வெளிப்படுத்திக் கூறுவது ஒட்டணி. 1. கூறுகின்ற பொருளும் அதனது அடை யும் வேறுபடும்படிக் கூறுதலும், 2. அடையை வேறுபடுத்திப் பொருளைப் பொதுவாகக் கூறுதலும், 3. அடையை ஒன்றோ டொன்று கலந்து கூறுதலும், 4. விபரீதப்படுத்திக் கூறுத லும் என நான்கு வகையாக ஒட்டணியைக் கூறலாம்.

விளக்கம்: ஒட்டணியின் விளக்கம் தண்டியலங்காரம் 52, 53-ஆம் சூத்திரங்களைத் தழுவியது. தண்டி நான்கு வகையினை உடையது ஒட்டணி என்று விதந்து கூறுகிறது.

188. ஆம்இதனல் இதுவிளைந்தது எனும்ஏது. அதுதான்
அகம்புறம்ஒற் றுமைக்கருவி யாம்,யுத்தம், அயுத்தம்,
தோமில்கா ரியம்தெரிகா ரணம்,ஓர்பால் தோற்றம்,
தூரகாரி யமும்;ஒன்றின் ஒன்றுஉண்மை, இன்மை,
தாம்அழிவு படல்என்றும், எனும்ஐந்து அபாவந்
தாமும்அது வாம்;குறிப்பின் மறுக்கின்முன்ன விலக்காம்;
காமர்முக் காலமும்,மேவு பொருள்,குணம்,கா ரியமே
காரணத்தால், வன்சொல்,வாழ்த்து, ஆதியின்வந் திடுமே.
[ம]

ஏது, முன்னவிலக்கு ஆகிய இரண்டையும் விளக்குகின்றது.

உரை: இந்தக் காரணத்தினல் இந்தக் காரியம் விளைந்தது என்று கூறுவது ஏதுஅணி. காரணத்திற்கேற்ற காரியம் நிகழ்வதாகக் கூறுவது யுத்த ஏது அணி. காரணத்திற்குப் பொருந்தாத காரியம் நிகழ்வதாகக் கூறுவது அயுத்த ஏது அணி. காரியத்தைத் தெரிந்துகொள்ளும் படியான காரணத்தைக் கூறும் காரியம் தெரிகாரண ஏது அணி. காரணமும் காரியமும் ஒருங்கே நிகழ்வதாகக் கூறுவது ஓர்பால் தோற்ற ஏதுஅணி. ஒரு வழிக் காரணம் நிகழப் பிறிதொரு வழிக்காரியம் நிகழ்வதாகக் கூறுவது தூரகாரிய ஏது அணி.

1. ஒன்றின்கண் ஒன்று இல்லாமையைக் கூறும் ஒன்றின் ஒன்றது அபாவம், 2. ஓரிடத்தில் ஒரு காலத்தில் உள்ளபொருள் பிறிதோரிடத்தும் பிறிதொருகாலத்தும் இல்லாமையைக் கூறும் உண்மை அபாவம், 3. இல்லாமையினது இல்லாமையைக் கூறும் இன்மையது அபாவம், 4. முன்பு உள்ளது அழிவுபட்டு இலதாதலைக் கூறும் அழிவுபட்ட அபாவம், 5. எக்காலத்தும் இல்லாமையைக்

கூறும் என்றும் அபாவம் என்ற ஐந்துவகை அபாவ அணியும் ஏதுவின் கண் அடங்கும். முன்னவிலக்கு அணி, இறப்பு, எதிர்வு, நிகழ்வு என்னும் மூன்றுவகைப்பட்ட காலங்களோடும் பொருந்திவரும். பொருள் விலக்கு, குண விலக்கு, காரிய விலக்கு, காரண விலக்கு, வன்சொல் விலக்கு, வாழ்த்து விலக்கு முதலிய பலவகையாக வந்திடும்.

இது தண்டியலங்காரம் 58, 63, 61, 43, 44 ஆகிய வற்றைத் தழுவியது. ஏது அணியைத் தண்டியலங்காரம் காரகம், ஞாபகம் என்று இரு வகைப்படுத்தியுள்ளது. தோற்ற ஏது என்பது தண்டியில் 'ஒருங்குடன் தோற்றம் என்று கூறப்பட்டுள்ளது.

விலக்கு அணி பொருள், குணம், காரணம், காரியம் என்று நான்கு வகையால் வரும் என்று முதலில் விளக்கி விட்டு (44) அடுத்த சூத்திரத்தில் வன்சொல், வாழ்த்து முதலிய பதின்மூன்று பாகுபாடு உடையது என்று தண்டி கூறி யிருக்க இங்கு மொத்தமே ஆறுவகையே பேசப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

189. வந்தபொருட், குணம்,சிறப்பின், உண்மையையவே றுஒன்றுன்
மறுப்பதுஅவ னுதி;விறல்சீர் உயர்ப்பதுஉ தாத்தமாம்;
முந்திருசொற் பொருள்எழுத்து முறை,எதிரால் நிரலே
முடித்தல்நிர னிறையா(ம்);முன் முரண்தொடையே முரணும்;
நிந்தைசெயப் பிறபுகழ்தல் மாறுபடு புகழா(ம்);
நிகழ்குறிப்பைப் பிறிதொன்றுல் மறைத்தல்; இலே சம்தாம்
பந்தியுடன் புகழ்வதுபோல் பழித்தல், பழித் திடல்போல்
புகழ்தல்,இவை இரண்டும்இலே சம்பொருந்தி வருமே [௰௯]

அவனுதி, உதாத்தம், நிரனிறை, முரண், மாறுபாடு புகழ், இலேசம் ஆகிய அணிகளை விளக்குகின்றது.

**உரை:** பொருளும் குணமும் சிறப்பும் ஆன உண்மையை வேறு ஒன்றால் மறுப்பது அவனுதிஅணி. வியக்கத் தக்க பெருமைக்குணங்களை உயர்த்திக் கூறுவது உதாத்தஅணி. முன்னே இருக்கின்ற சொற்பொருளையும் எழுத்து முறையையும் (சொல்லையும்) வரிசையாக நிறுத்திவைத்து அதன் வரிசைமுறைப்படி பொருள் கொள்வது நிரனிறை அணி. முரண் தொடையைப் பயன்படுத்துவது முரண் அணி. ஒரு பொருளைப் பழிப்பதற்கு இன்னொரு பொருளைப் புகழ்வது மாறுபடு புகழ் அணி. ஒரு நிகழ்ச்சியின் குணங்களைப் பிறிது ஒரு பொருளால் மறைத்துக் கூறுவது இலேசஅணி. ஒன்றனைப் புகழ்வதுபோலப் பழித்தலும், பழிப்பதுபோலப் புகழ்தலும் இலேச அணியின் பகுதியாகவே கொள்ள வேண்டும்.

**விளக்கம்:** இது, தண்டியலங்காரம் 75, 74, 67, 83, 65, 66 ஆகிய சூத்திரங்களைத் தழுவியது.

**பாட விளக்கம்:** 'பிற்புகழ்தல்' (3வதுவரி) என்ற மூல பாடம், பிறபுகழ்தல் என்று திருத்தப்பட்டுள்ளது.

190. பொருள்ஆதி குறித்து,ஒருபால் நின்றொருசொல் பலபால்
பொருள்தரிற்றீ பகம்;முன்பின் னிடைபொருந்து முன்னே
வருபொருட்சொற் பின்னும்வரிற் பின்னிலையாம்; மொழிஓர்
வகைத்தொடர்பல் பொருள்தரிற்சி லேடையாம்;
செஞ்சொல்,
பிரிசொல்லாய், ஒருவினை,பல் வினை,முரணும் வினையே,
பின்னியமம், அநியமம்வி ரோதம்,அவி ரோதம்,
கருதுவதாம், வினைகுணத்தின் இருபொருட்கோர்,மொழியே
காட்டிஉட னிகழ்வின்முடித் திடுதல்புணர் நிலையே. [௧௯௦]

**தீபகம், பின்னிலை, சிலேடை, புணர்நிலை ஆகிய அணிகளை விளக்குகின்றது.**

**உரை:** பொருள், குணம், தொழில், பண்பு, உறுப்பு ஆகியவற்றைக் குறித்த ஒரு சொல் ஓரிடத்தில் நின்று பல

இடத்தில் நின்ற சொற்களோடு பொருந்திப் பொருள் தருவது தீபக அணி. முன்னும், பின்னும், நடுவிலும் வந்த சொல்லாவது பொருளாவது பின்னர்ப் பல இடத்திலும் வருவது பின்னிலை அணி. ஒருவகையாக நின்ற தொடர் பல பொருளைத் தருவது சிலேடை அணி. இது, செஞ்சொல் சிலேடை (ஒரு வகையாக நின்று பல பொருள்படுவது); பிரிசொல் சிலேடை (ஒரு வகையாக நின்ற சொல்லைப் பிரித்துத் தொகை வேறுபடுத்திப் பல பொருளாகக் கொள்வது); ஒரு வினைச் சிலேடை (ஒரு வினைச்சொல்லால் வருவது); பலவினைச் சிலேடை (பல வினைச்சொல் பற்றி வருவது); முரண்வினைச் சிலேடை (மாறுபட்ட வினைச்சொல்லால் வருவது); பின்னியமச் சிலேடை (சிலேடையாகக் கூறியவற்றை ஒன்றற்கு நிச்சயமாக்குவது), அநியமச் சிலேடை (சிலேடையாகக் கூறியவற்றை நிச்சயம் செய்து அதைத் விலக்குதல்); விரோதச் சிலேடை (முன்னர் சிலேடையாகக் கூறியதைப் பின்னர் மாறுபட்ட (விரோதித்தல்) சிலேடையாகக் கூறுவது), அவிரோதச் சிலேடை (முன்னர் சிலேடையாகக் கூறிய பொருளைப் பின்னர் மாறுபடாமல் கூறுவது) ஆகிய பலவகைப்படும். வினை (தொழில்) யாலும், பண்பாலும், வேறுபடும் இரண்டு பொருளுக்கு ஒன்றே பொருந்தும்படி உடனிலையாகக் கூறுவது புணர்நிலை அணி.

**விளக்கம்:** தண்டியலங்காரம் 40, 42, 76, 77, 78, 86 ஆகிய சூத்திரங்களைத் தழுவியது. சிலேடையைச் செம்மொழி, பிரிமொழி என்று இருவகையாக (தண்டி 76) முதலில் பிரித்து அடுத்து ஒருவினைச் சிலேடை என்று ஏழாகப்பிரித்துத் (77) தண்டியலங்காரம் கூறும்.

191. நிலைபெறமுன் முயன்றதொழிற் பயன்பின்வே றொன்று
நிகழ்முடிப்ப துசமாயு தம்;விபாவனைதான்
உலகறிகா ரணமொழித்தொன் றுரைப்புழிக்கா ரணம்வே
றொன்றுஇயல்பிற் குறிப்பில்வெளிப் படுத்தலாம்; தனைத்தான்

பலபுகழ்தற் மேம்பாட்டு ரை;குறிப்பை உரைத்த
பயன்தோன்றப் பிறிதுரைத்தல் பரியாயம்; பொருளின்
தலைபரிமா றுதல்பரிவர்த் தனை;பண் பாதித்
தன்குறைமெய்ப் படஉரைக்கும்பொருள்விசே டமதே.
[௰ரு]

**சமாயுதம், விபாவனை, தன் மேம்பாட்டு உரை, பரியாயம் பரிவர்த்தனை, விசேடம் ஆகியவற்றை விளக்குகின்றது.**

**உரை:** *முன்பு தான் முயன்ற தொழிலினது பயன் அத்தொழிலால் அன்றி வேறு ஒரு தொழிலால் நிகழ்ந்த தாகக் கூறிமுடிப்பது சமாயுத அணி. ஒன்றினுடைய தொழிலை உரைக்கும்போது அத்தொழிலுக்குப் பலரும் அறிந்துள்ள காரணத்தை ஒழித்து வேறொரு காரணத்தைக் கூறும்போது அது குறிப்பாக வெளிப்படுமாறு கூறுவது விபாவனை அணி. ஒருவன் தன்னைத்தானே பலவாறாகப் புகழ்ந்து கொள்வது தன்மேம்பாட்டு உரைஅணி. தான் நினைத்த குறிப்பைக் கூறாமல் அப்பொருள்தோன்றப் பிறிது ஒன்றைக் கூறுவது பரியாயஅணி. பொருள்கள் ஒன்றைக் கொடுத்து ஒன்று கொண்டனவாகச் சொல்வது பரிவர்த்தனை அணி. பண்பு, தொழில் முதலாயின குறைபடுதல் காரண மாக அப்பொருளுக்குச் சிறப்பு இருப்பதாகக் கூறுவது விசேட அணி.*

**விளக்கம்:** *இது 73, 51, 71, 72, 85, 79 ஆகிய தண்டியலங்காரச் சூத்திரங்களைத் தழுவியது. சமாயுதத்தைச் சமாகிதம் என்று தண்டியலங்காரம் கூறும்.*

**பாட விளக்கம்:** *உறைத்த (3 வது வரி) என்ற மூல பாடத்தை உரைத்த என்று கொள்ளவேண்டும்.*

192. விசித்ததொழி லினிற்குறிப்பின் அரும்பொருளே உணரும்
வினைத்திறன்நுட் பமாதம்;இன் னூர்க்குஇதுமுற் றிடவொன்று
இசைப்பதுவாழ்த் து;ஒருபொருளின் வனப்புவிதந்து
உரைக்கில்
இவ்வுலக வரம்புஇறந்தும் இறவாதும் பெரியோர்
அசைத்துவியந் திடஉரைப்பது அதிசெயமாம்; இவைதாம்
ஐயாறில் ஒன்றேடொடுஒன்று இரண்டுமுதற் பலவும்
ஒசிப்பிலதாய் கலத்தல்சங் கீரணம்;இதிற் கூறாதது
உண்டெனிற்கூ றியஅணியின் அடக்குவதாம் விதியே. [௯௪]

***நுட்பம், வாழ்த்து, அதிசயம், சங்கீரணம் ஆகியவற்றை விளக்குகின்றது.***

**உரை:** *தொழிலாலும் குறிப்பாலும் அருமையான பொருளை உணரும் தன்மையே நுட்ப அணி. இந்தத் தன்மையை உடையவர்க்கு இது நிகழ்க என்று கூறுவது வாழ்த்து அணி. ஒரு பொருளில்உள்ள அழகை வெளிப் படையாகக் கூறும்போது உலக நடையைத் தாண்டியும் தாண்டாமலும் பெரியோர் வியப்படையும்படிக் கூறுவது அதிசய அணி. இந்த முப்பது அணிகளுள் ஒன்றேடு ஒன்றும் பலவும் தம்முட் பொருந்த உரைப்பது சங்கீரண அணி. இங்கே கூறாத அணிகள் உண்டு என்றால் அவற்றை முன்னே கூறியவற்றுள் அடக்கிக் கொள்ளவேண்டும்.*

**விளக்கம்:** *இது தண்டியலங்காரம் 64, 88, 54, 89 ஆகிய சூத்திரங்களைப் பின்பற்றியது.*

193. ஏதுவிலக்கு, உருபகம்;தற் குறிப்புடன்வி ரோதம்,
இசைத்திடுஞ்சி லேடை,அதி சயம்வேற்றுப் பொருளில்
ஓதும்உவ மையும்விலக்குஏது, அவனுதிசி லேடை,
உவமையினில் உருபகமும், உருபகஞ்சி லேடை,
மூதுவமைத் தீபகமும், உவமையிற்பின் னிலையும்,
மொழிஉவமை, உருவகத்தின் வேற்றுமையும், உவமை
மீதுறுதல், குறிப்பும்வேற் றுப்பொருள்சி லேடை,
விளம்புஏது வினில்விலக்கு முதல்சங்கீ ரணமே [௯௫]

***சங்கீரண அணியின் விரி கூறுகின்றது.***

**உரை:** ஏது உருவகம், விலக்கு உருவகம், தற்குறிப்பு விரோதச் சிலேடை, தற்குறிப்பு விரோத அதிசயம், வேற்றுப் பொருள் உவமை, விலக்கு ஏது, அவனுதி சிலேடை, உவமை உருவகம், உருவகஞ் சிலேடை, உவமைத் தீவகம், உவமையிற் பின்னிலை, மொழி உவமை, உருவகத்தின் வேற்றுமை, உவமை மீதுறல், குறிப்பு வேற்றுப் பொருள் சிலேடை, ஏதுவினில் விலக்கு முதலாயின சங்கீரண அணியைச் சார்ந்தன.

## 2. சொல்லணி மரபு

194\. முதல்எழுத்தின் கூட்டம்இடை பிறிதுஇலதும் பெயர்த்தும்
ஒழியவேறே பொருள்தந்திடின் மடக்குஎன் ருகும்;
அதுவும்ஓ ரடிமுதல்நான்கடிகாறுஞ் சேரும்;
ஆதிஇடை, பின்,முதலோடு இடை,கடை,பின் னிடையே,
உதவும்முழு துடன்எழுவ கைத்தாம்;ஓ ரடியே
ஒழித்தல்இணை முதல் விகற்பம் போல்பதினைன்று
உளவாம்;
அதமில்அடி முழுதுமடக் கலுமாம்;ஓ ரெழுத்து
மடக்குதலும் அதற்கு உரித்தாஞ் சொல்லணியின் வரைவே.
[க]

***இது மடக்கு அணி உணர்த்துகின்றது.***

**உரை:** எழுத்துக்களின் சேர்க்கை (கூட்டம்) யோடு பிற எழுத்தும், சொல்லும் நடுவே வந்தும், நடுவே வராமலும் இருக்க அச்சேர்க்கை மடக்கி வந்து இருவேறு பொருளைத் தருவது மடக்கு அணி. அம்மடக்கு ஓரடியிலும் இரண்டு அடியிலும் மூன்று அடியிலும் நான்கு அடியிலும் வரும். இது 1. ஆதிமடக்கு, 2. இடைமடக்கு, 3. கடைமடக்கு, 4. ஆதியோடு இடைமடக்கு, 5. ஆதியோடு கடைமடக்கு, 6. இடையோடு கடைமடக்கு, 7. முழுது மடக்கு என ஏழுவகைப்படும். ஓரடி மடக்கு நீங்கலாக உள்ளவற்றில் தொடையின் இணை முதலாகிய

விகற்பத்தொடை' போலப் பதினொன்று ஆக அமையும். அடிமுழுவதும் மடக்குதலும் ஓரெழுத்து மடக்குதலும் என இருவகையாகவும் பிரிக்கலாம்.

**விளக்கம்:** *இது தண்டியலங்காரம் 92, 93, 94, 95 ஆகிய சூத்திரங்களை அடியொற்றியது.*

**195.** வருங்கோமூத் திரி,சருப்ப தோபத்திரம், மாலை
மாற்றுஎழுத்துச்சுதஞ்சதுரங் கக்கவி,சக் கரமே,
கரந்துறையுஞ் செய்யுள்,சுழி குளங்,கூடச் சதுக்கம்
காதைகரப்பு, எழுத்துவருத் தனம்,ஒற்றுப் பெயர்த்தல்,
விரிந்ததிரி பங்கிதிரி பதாதிநிரோட் டி,வினா
விடை,முரசு பெந்தம்,மாத் திரையின்வருத் தனமே,
பிரிந்தமாத் திரைச்சுருக்கம், பிறிதுகவி, கடக
பெந்தம்,தேர்க் கவி,நாக பெந்தமுஞ்,சேர்க் குவரே [உ]

***சித்திர கவிகளின் விரி உணர்த்துகின்றது.***

**உரை:** *1. கோமூத்திரி, 2. சருப்பதோ பத்திரம் 3 மாலை மாற்று. 4. எழுத்துச் சுதம், 5. சதுரங்கம் 6. சக்கரம், 7. கரந்துறையும் செய்யுள், 8. சுழிகுளம் 9. கூடச்சதுக்கம், 10. காதை கரப்பு, 11. எழுத்து வருத்தனம், 12. ஒற்றுப் பெயர்த்தல். 13. திரிபங்கி, 14 திரி பதாதி, 15. நிரோட்டி, 16. வினாவிடை, 17 முரசுபெந்தம், 18. மாத்திரையின் வருத்தனம், 19. மாத்திரைச் சுருக்கம், 20. பிறிதுகவி, 21. கடகபெந்தம், 22. தேர்க்கவி, 23. நாக பெந்தம் ஆகிய இருபத்து மூன்றும் சித்திரக் கவிகளின் பாகுபாடுகளாம்.*

**விளக்கம்:** *இது தண்டியலங்காரம் 98-ஆம் சூத்திரத்தை ஒட்டியது. ஆயினும் நூலுள் பன்னிரண்டு வகையே கூறப்பட்டுள்ளது. உரையில் உள்ள எட்டும் புதிதாகச் சதுரபங்கம், கடகபெந்தம், தேர்க்கவி ஆகிய மூன்றும் சேர்த்து 23 என்று சாமிகவிராயர் கூறுகிறார்.*

196. வரிகள்இரண் டிரண்டாய்மேல் கீழ்இடைஒன் றகற்றி
வாசிப்பநேர் சொல்பாட் டொத்தல்கோ மூத்திரி;
ஒருபதம்எட் டெழுத்தாய்நான் கடிக்கவியைஎட்டெட்டு
ஒருநிறையாய் மேல்கீழ்கீழ் மேல்எட்டெட்டு அறையின்
தரவெழுதி நான்முகமுஞ் சொல்லினும்பாட் டாதல்
சருப்பதோபத் திரம்;ஒருபாட் டுஈறுதியதாய்
இரையினும்அப் பாட்டாதல் மாலைமாற்று; ஒருசொல்
எழுத்துஒரொன்று அறப்பொருள்வே றும்எழுத்துச்
சுதமே [௯]

***கோமூத்திரி, சருப்பதோபத்திரம், மாலைமாற்று, எழுத்துச்சுதம் ஆகியவற்றை விளக்குகின்றது.***

**உரை:** *இரண்டு இரண்டு வரியாக ஒரு செய்யுளை எழுதி மேலும் கீழும் ஒன்று இடையே விட்டுப்படித்தாலும் ஒரு பாட்டாகக் கருதப்படுவது கோமூத்திரி. ஓரெழுத்து ஒருசொல் எட்டு உடைய நான்கு அடிகள் கொண்ட ஒரு பாட்டை வரிசைக்கு எட்டெட்டுச் சொற்களாக எழுதி மேலும் அதேபாட்டை மேலுள்ள வரியைக்கீழாகவும் கீழுள்ள வரி மேலாகவும் அதே முறையில் வரிசைக்கு எட்டெட்டுச் சொற்களாக எழுதி அது மேலே இருந்து கீழே படித்தாலும், கீழே இருந்து மேலே படித்தாலும், இறுதியில் தொடங்கி முதல் வரை படித்தாலும் பொருள் தரும்படி அமைந்தால் சருப்பதோ பத்திரம் எனப்படும். ஒரு பாட்டைக் கடைசியி லிருந்துபடித்தாலும் அதே பாட்டாகவே அமைந்தால் அது மாலை மாற்று எனப்படும். ஒரு சொல்லில் உள்ள எழுத்துக்கள் ஒவ்வொன்றை நீக்க அது வெவ்வேறு பொருளைத் தரும்படி அமைத்தால் எழுத்துச் சுதம் எனப்படும்*

**விளக்கம்:** *சித்திரக் கவிகளுக்குரிய விளக்கம் தண்டியலங்கார உரையில் மட்டுமே காணப்படுகிறது.*

*3-வது வரியில் உள்ள 'இருதி' என்பதை 'ஈறுதி, (ஈறு + ஆதி) என்று கொள்ள வேண்டும்.*

197. எழும்பரிக்கால் முதல்பேதஞ் சதுரங்கம், நால்,ஆறு,
எட்டாரஞ் சக்கரம்,ஓர் கவிக்கோர்கவி சொல்லின்
அழுந்தாமல் எழுத்தெடுத்தல் கரந்துறையும் செய்யுள்,
அன்றிஓர்பாட்டு எவ்வெட்டுஎழுத் தாய்நால்வரி இட்டு
ஒழுங்குகீழ்மேல் மேல்கீழ்புறம் புறம்பார்க்கி னும்பாட்
டொத்தல்சுழி குளம்;பினடி எழுத்துஏனை யடியின்
விழுந்தடங்கள் கூடச்சதுக் கம்பாட்டுஒன்று இறுதி
மேலாய்ஒன் றிடைவிடவே ருங்காதை கரப்பே. [௪]

***சதுரங்கம், சக்கரம், கரந்துறை, கூடச்சதுக்கம், காதைகரப்பு ஆகியவற்றை விளக்குகின்றது.***

*உரை: பரிக்காலில் வேறுபாடு முதலில் வேறுபாடு இருப்பது சதுரங்கம். நாலாரைச் சக்கரம், ஆறாரைச் சக்கரம், எட்டாரைச் சக்கரம் என்று மூன்று வகைப்படும் சக்கரம்.*

*ஒரு செய்யுளில் பிறிது செய்யுளினுடைய சொற்களின் எழுத்துக்கள் பொறுக்கி எடுத்துக் கொள்ளும்படி பாடுவது கரந்துறையும் செய்யுள். ஒரு செய்யுளை வரிக்கு எட்டு எழுத்துக்களை உடைய நான்கு வரி எழுதி முதல் வரிசையிலுள்ள எழுத்துக்களை மேலேயிருந்து கீழேயும் கடைசி வரிசையிலுள்ள எழுத்துக்களை கீழே இருந்து மேலேயும் படித்து மேலும் இரண்டாம் வரிசையை மேலே இருந்து கீழேயும் கடைசிக்கு அடுத்த வரிசையைக் கீழே இருந்து மேலேயும் படித்து, தொடர்ந்து இவ்வாறு படித்துக் கொண்டு வந்தால் அந்த வரி நான்கும் ஏற்பட்டு அதே செய்யுளாகவே முற்றுப் பெறுவது சுழிகுளம். இறுதி அடியிலுள்ள எழுத்துக்களை ஏனைய மூன்று அடியுள்ளும் மறைந்து நிற்கும்படி பாடுவது கூடச்சதுக்கம்,*

*ஒரு செய்யுள் முடிய எழுதி அதன் இறுதிச்சொல்லின் முன்னர் உள்ள சொல்லின் முதலெழுத்துத் தொடங்கி*

ஒவ்வொரு எழுத்து நடுவில் விட்டுப் படிக்கும்போது வேறொரு செய்யுள் வருமானால் அது காதை கரப்பு (வேறொரு செய்யுளின் காதை மறைந்து நிற்றல்) எனப்படும்.

198. காதையின்ஓ ரெழுத்து,ஒருசொல் வேறுஒவ்வொர் எழுத்தைக்
கண்டுசொல்லாய்ப் பொருளுறலே எழுத்துவருத் தனமாம்;
ஓதுயிர்மெய் மொழியின்ஒற்றுப் பெயர்க்குங்கால் பொருள் வேறு
உடையதுஒற்றுப் பெயர்த்தல்,ஒரு கவிமூன்று கவியாய்ப்
போதல்திரி பங்கி;மூன்று எழுத்துஒருசொல் முதல்பின்
புகல்இடையின் சேர்ந்துசொற்க ளாந்திரிப தாதி;
பாதம்உ, ஊ, ஒ, ஓ, ஔ, ப, ம, வ, விசை நூற்று
பத்தொன்பான் எழுத்தில்நிரோட் டகங்கரந் திசையே. [ரு]

**எழுத்து வருத்தனம், ஒற்றுப்பெயர்த்தல், திரிபங்கி, திரிபதாதி, நிரோட்டகம் ஆகியவற்றை விளக்குகின்றது.**

**உரை:** ஓரெழுத்து ஒரு மொழியாய்ப் பொருள் சுட்டி நின்று பின்னர் ஒரு எழுத்துச் சேர்த்தால் வேறொரு சொல்லாய்ப் பொருள் சுட்டி அமைதலே எழுத்து வருத்தனம் (எழுத்து வளர்த்தல்) என்று பெயர். சொல்லப்பட்ட மொழிகளில் உள்ள மெய்யெழுத்துக்களை நீக்கி விட்டால் வேறு பொருள் தரும்படி அமைப்பது ஒற்றுப் பெயர்த்தல்.

ஒரு பாட்டாக இருப்பதைத் மூன்றாகப் பிரித்து எழுத மூன்று பாட்டாக அமையுமானால் அது திரிபங்கி எனப்படும். மூன்று எழுத்துக்களை உடைய ஒருசொல் முதல் எழுத்தும் இறுதி எழுத்தும் சேர வேறொரு சொல்லாகவும் நடு எழுத்தும் இறுதி எழுத்தும் சேர வேறொரு சொல்லா கவும் அமையுமானால் திரிபதாதி எனப்படும். உ, ஊ, ஒ, ஓ, ஔ ஆகிய ஐந்து உயிரெழுத்துக்களும், ப, ம, வ, நீங்கிய பதினைந்து மெய்யெழுத்துக்களால் உண்டான எழுபத்தைந்து

உயிர்மெய் எழுத்துக்களும், (15 × 5) ப, ம, வ என்ற மூன்று மெய்யெழுத்துக்களும் இம்மூன்று மெய்யெழுத்துக்களால் உண்டான முப்பத்தாறு உயிர்மெய் எழுத்துக்களும் சேர்த்து மொத்தம் (5 + 75 + 3 + 36) 119 எழுத்துக்கள் இல்லாமல் பாடுவது நிரோட்டம் என்று அழைக்கப்படும்.

**விளக்கம்:** ஒற்றுப் பெயர்த்தலுக்குத் தண்டி உரை தரும் விளக்கம் வேறு. திரிபதாதி என்பதைத் தண்டி திரிபாகி என்று குறிப்பிட்டுள்ளது.

நிரோட்டம் என்பது இதழோடு இதழ் ஒட்டாதது என்று பொருள்.

**பாட விளக்கம்:** 'பமல்விசை' (4-வது வரி) என்பது மூல்பாடம்.

199. அங்குவினச் சொற்றொடரைப் பிரித்துவெவ்வே றுவினு
அதற்குவிடை பொருளாகச் சொலல்வினவி டையாம்;
உங்குவரி நான்கடிநான் காய்க்கோமூத் திரிபோல்
உயர்ந்தவரி இரண்டுசிறு வாராய்மேல் வரிகீழ்
இங்கு பிறவரியின்மேல் கீழ்மூக்காய்ப் பெருவார்
எனப்புகறல் முரசுபெந்தம்; ஓர்சொலின்ஓ ரளவு
புங்கமுறப் பொருள்வேரு மாத்திரை வர்த்தனஞ்;சொற்
பொருள்திரிய வளவறுமாத்திரைச்சுருக்கப் பாவே. [சு]

**வினாவிடை, முரசுபெந்தம், மாத்திரைவர்த்தனம், மாத்திரைச் சுருக்கம் ஆகியவற்றை விளக்குகின்றது.**

**உரை:** வினாவாக வரும் சொற்றொடரைப் பிரித்து வெவ்வேறு வினாவையே அதற்கு விடையாக அமையும்படி செய்வது வினாவிடை. ஓரடி ஒரு வரியாக நான்கு வரி எழுதி மேலிரண்டு வரி கோமூத்திரிபோல அமைத்தும், உயர்ந்த வரி இரண்டும் சிறியவார் போல அமைத்தும் மேல்வரி இரண்டாம் வரியிலும் மூன்றாம் வரியிலும் நான்காம்

வரியிலும். கீழே வந்து மீண்டும் மேல் நோக்கவும் கீழ் வரியிலும் அவ்வாறே மேலுற்றுக் கீழ்நோக்கவும் பெரிய வார் போக்கி இந்தவார் நான்கும் நான்கு வரியாகவும் பாடுவது முரசுபெந்தம். ஒரு பொருள் தரும்சொல் ஒரு மாத்திரை மிகுதிப்படுத்த வேறொரு பொருள் தருவது மாத்திரை வருத்தனம்.

ஒரு பொருள் தரும்சொல் ஒரு மாத்திரையைக் குறைக்க வேறொரு பொருள் தருவது மாத்திரைச் சுருக்கம்.

200. பாஎனினும் இனம்எனினும் ஓர் கவியாய்ப்
பதம்எதுகை பொருள்ஒப்பச் சொல்பிறிது கவியாம்;
மாவலகில் ஏற்கு(ம்)மறை யொருவரியாய் நான்கு
வரிபிடியாய் ஏற்கு(ம்)மறை வலஞ்சுற்றி முனைமேல்
மேவல்கட கபெந்தம்; பன்மூன்றுப திறுென்று
வியன்ஒன்பான்தட்டுஉடைத்தாய்க் கீழத்தட்டு முதலே
ஓவலிடம் வலஞ்சுற்றி மேல்போய்நேர் இழிந்தே
ஒத்துக்கீழ்த்தட்டின்இறும் தேர்க்கவியின் அரணே. [ச]

***பிறிதுகவி, கடகபெந்தம், தேர்க்கவி ஆகியவற்றை விளக்குகிறது***

உரை: ஒரு செய்யுளை அடியும் தொடையும் வேறுபடுத்தினும் சொல்லும் பொருளும் வேறுபடாது வேறொரு செய்யுளாக வருவது பிறிதுகவி. ஒரு வரி மறைந்து நான்கு வரி பிடியாக அமைந்தும் ஏற்கும் மறை வலமாகச் சுற்றி முனையில் பொருத்துவது கடகபெந்தம். பதின்மூன்று வரியும் பதினறு வரியும் ஒன்பது வரியும் தட்டு உடையதாய்க் கீழ்த்தட்டு முதலாக இடமாகவும் வலமாகவும் சுற்றி வந்து மேலே போய் நேரே கீழ் இறங்கி வந்து ஒத்துக் கீழ்த் தட்டில் முடிவது தேர்க்கவி.

201 அரவுஇரண்டு கலந்துஇனிசை நேரிசைவெண் பாவின்
ஆண்பெண்மேற் சொலு(ம்)நாகபெந்தம்;மறை தலைவால்
இருவயிறு, நால்மூலை,நாள்இசைவும், ஐந்தைந்து;
இடைநான்குஎவ் வெட்டாய்த் தொண் ணூற்றிரண்டன் பான்ஏழ்
ஒருகவிக்காய்; நூற்றுப்பன் ளுன்குஎழுத்துத் தலைவால்
உற்றநாலிசை வில்ஒவ் வொன்றிடைநான்கு ஈரெட்டாய்,
மருவுசந்தி யிரட்டுமற்ற சந்திஅட்ட நாகம்
வகுப்பதும்வால் கறைபதினொன்று இடுவதுஞ்சில் விடத்தே.
[அ]

***நாக பெந்தம் விளக்குகின்றது.***

**உரை:** *இரண்டு பாம்புகள் தம்முள் இணையும்படியாக எழுதி ஒரு இன்னிசை வெண்பாவும் ஒரு நேரிசை வெண்பாவும் எழுதி ஆண், பெண்மேல் சொல்லுதல் நாகபெந்தம். தலையும், வாலும் இருவயிறும் நான்கு மூலையில் நான்கு பொருத்து வாயிலும் அமைத்து ஐவ்வைந்து இடையில் நான்கு, எவ்வெட்டாக அமைத்துத் தொண்ணூற்றிரண்டின்மேல் ஏழு ஒரு கவியாகவும் நூற்றுப் பதினான்கு எழுத்துத்தலையும், வாலும் உற்ற நான்கு பொருத்து வாயிலும் ஒவ்வொரு இடைக்கு நான்கு, எவ்வெட்டு ஆகப்பொருந்து சந்தியில் இரட்டியும் ஏனைய சந்தியில் அட்டநாகம் வகுப்பதும் வால் கறையில் பதினொன்று இடுவதும் சில இடங்களில் உண்டு.*

# 3. அமைதி மரபு

202. இடம்,உலகம், கலை,காலம், ஆகம(ம்)நியாயம்
இவைமலைவும் எழுத்துச்சொற், பொருள்,யாப்போடு, அணியிற்,
படர்வழுவும் அவற்றினில்ஆ னந்தம்நீக் கிடுக;
பகர்ந்தனபின் பகரில்அனு வாதம்என்றே அமைக்கத்
தொடரியலின் விதியுணர்த்தி ஒருவாற்றன் விலக்குஞ்
சொல்வர் இன்றி யமையாதுஎன் றமைக்க விந்நூல் முன்பின்
தடமறிந்(து), உதாரணம் மேற் கோள்ஏது அறிந்து,
தழுவுகஐந் திலக்கணமுந் தமிழ்உணர்பூ தலத்தே [க]

*1. இடமலைவு, 2. உலகமலைவு, 3. கலைமலைவு, 4. காலமலைவு 5. ஆகமமலைவு, 6. நியாயமலைவு ஆகிய ஆறுவகை மலைவும் 1. எழுத்து வழு, 2. சொல் வழு, 3. பொருள் வழு, 4. யாப்பு வழு, 5. அணி வழு ஆகிய ஐந்து வழுவும் ஆனந்தக் குற்றமும் நீக்கவேண்டும்.*

*முன்னே சொன்னவற்றை மீண்டும் சொன்னால் 'அனுவாதம்' என்று கருதி அமைத்துக்கொள்க.*

தொடரியலின் விதிமுறைகளை உணர்த்தி ஒருவகையில் நீக்கவேண்டிய சொற்கள் இன்றியமையாதது என்று தோன்றினால் அமைத்துக்கொள்ளலாம்.

முன்னும் பின்னும் கூறிய கருத்துக்களை அறிந்துகொண்டு ஏற்கும் இடம் அறிந்து உதாரணம், மேற்கோள் முதலியவற்றைக் காரணம் அறிந்து தழுவ வேண்டும்.

இவையெல்லாம் ஐந்து வகை இலக்கணமும் உணர்ந்த தமிழ் கூறு நல்லுலகில் அறிந்து செயல்படவேண்டும்.

**விளக்கம்:** இது தண்டியலங்காரம் 99ஆம் சூத்திரத்தைத் தழுவியது.

**பாட விளக்கம் :** 'என்றமைக்கவி நூல்' (3வது வரி) என்பது மூலபாடம்.

அமைதி மரபு முற்றும்.

அணியதிகாரம் முற்றும்.

# சூத்திர முதற்குறிப்பு அகரவரிசை

## (எண் சூத்திர எண்)


அகங்கண்டார் 129
அகராதி 15
அங்கு வினை 199
அசை இரண்டாய் 153
அடியாவு(ம்) 158
அடுத்த பொருட் 163
அடைசினை 62
அண்ண(ம்) 17
அணவு 30
அணியினில் 180
அணுவினான் 16
அதிகுழினை 134
அதியதெய்வப்புணர்ச்சி 87
அமைத்தன 178
அரவு இரண்டு 201
அருள்பாவில் 156
அவை இயற்சொல் 37
அளவு ஒத்து 160
அளைமறி 69
அறத்தொடு 83
அறம் உணர்தாய் 110
அறமுதனான் 71
அறிஐஔ 175
அறியாதபொருளை 60
அறுகுறிக்கண் 97
அறைபொதுப்பேர் 65
அன் ஆன் 50
அன்புறுதாய் 102
அன்னதெய்வம் 35
ஆக்கம் ஒழிவு 55
ஆகுபெயர் 40
ஆண்ட பொருள் 39
ஆம் இதனால் 188
ஆமுதன்மை 176
ஆயுமொன்றொ 19
ஆர்ந்த 170
ஆரியத்தின் 33
ஆற்றுகிலாத் 105
ஆறுகிலாது 122
இடங்கரும(ம்) 127
இடம் உலகம் 202
இதர விதரம் 181
இயல் உலாவினில் 168
இயல்பு இடங் 141
இயலுங்கம்முன் 22
இரவு இடையீடு 101
இரவு சேட்படை 93
இரு வரைவாம் 108
இலக்கண மது 36
இலகு நேர் 177
இறை இறைவி 118
ஈறு முதனிலை 51
உடலின் உயிர் 29

| | |
|---|---|
| உடன் கலந்து | 112 |
| உடன்படா | 11 |
| உய்த்த பொருள் | 12 |
| உயர்பு, இழிபாங் | 70 |
| உயிர்மெய் | 28 |
| உரியபகற் | 82 |
| உரிய பயங் | 125 |
| உருபு சாரி | 54 |
| உற்றிடு | 117 |
| உன்ன நிலை | 147 |
| ஊடல் இலா | 121 |
| எண்ணும் | 124 |
| எழுத்துமுதல் | 152 |
| எழுத்தொன்று | 23 |
| எழும்பரி | 197 |
| என்னும் ஓர் | 68 |
| எட்டின் விளி | 45 |
| ஏது விலக்கு | 193 |
| ஐய்யமறப் பிறை | 92 |
| ஒப்பின் | 185 |
| ஒருமை | 59 |
| ஒற்றுயிராதிகள் | 20 |
| ஓதினவன் | 8 |
| ஓதுபாங்கியர் | 115 |
| ஓர்ந்து | 100 |
| கடன் | 81 |
| கரும் ஆயன் | 76 |
| கலந்திடுபன் | 166 |
| கலிப்பா | 159 |
| களத்தில் | 140 |
| கற்பியலிற் | 84 |
| காணும் அ ஆ | 32 |
| காணும் இடங் | 126 |
| காதையின் | 198 |
| குகன் சிலம்பன் | 74 |
| குருமகன் | 6 |
| குறைவில் | 75 |
| கூத்தர் | 146 |
| கூறும் உவமை | 186 |
| கூறும் | 43 |
| கைக்கிளை | 144 |
| கேள்வியசை | 56 |
| கொண்டுநிலை | 95 |
| கொண்ட | 25 |
| கொள்பவன் | 7 |
| கோன்றிறத்தோன் | 135 |
| சமப்பொருட்கு | 187 |
| சார் எண் | 27 |
| சாதல் வினை | 90 |
| சான்றவர் | 61 |
| சிலபலவாய் | 26 |
| சிறைப்புமாச் | 98 |
| சீர் தளை | 161 |
| செய்து | 53 |
| செய்யுள் | 162 |
| சொல் உவமை | 184 |
| சொல் வகுக்கிற் | 34 |
| சொலும் இறை வற்கு | 103 |
| சொற்றமிழ் | 38 |
| சொன்னவற்றிற | 164 |
| சோலை | 78 |
| தணப்புணர்த்தல் | 106 |
| த, ந, நு, எ | 46 |
| தமிழ் தரு | 13 |
| தருதொழிலின் | 49 |
| தலைப்படு | 109 |
| தலைவனுக்கு | 172 |
| தலைவனையே | 91 |
| தலைவியறிவு | 94 |
| தவரில் | 150 |
| தளையொன்று | 154 |
| தன்மை | 179 |
| தன்னிகரில் | 77 |

| | |
|---|---|
| தாங்கு | 137 |
| தாரம் | 148 |
| திடத்தபோர் | 138 |
| திணைகுறிஞ்சி | 72 |
| திரமுறு | 171 |
| திரைக்காப்பு | 151 |
| துயரின் | 149 |
| தொக்குழி | 67 |
| தொடர்வினை | 48 |
| தொழு செவிலி | 113 |
| நிலையிகர | 31 |
| நிலைபெறமுன் | 191 |
| நின்று ஒருவன் | 138 |
| நூலின் | 3 |
| பகர்வேண்டல் | 99 |
| பகை உரித்த | 133 |
| படுமெழுவாய் | 42 |
| பண்பான | 57 |
| பத்து வெண்பா | 169 |
| பரத்தை | 120 |
| பா எனினும் | 200 |
| பாடு சபை | 145 |
| புணர்வு பிரிவு | 80 |
| புணரும் ஐயந் | 88 |
| புல்லும் | 24 |
| பூமகளும் | 1 |
| பூமிசை | 2 |
| பெயர் | 14 |
| பெருந்திணை | 142 |
| பேச்சிரட்டை | 64 |
| பேசு பிரிவு | 123 |
| பொதுக்குரு | 4 |
| பொருள் ஆதி | 190 |
| பொருள் உயர்த்தி | 182 |
| பொருள் தோன்றிற் | 63 |
| போக்கு உணர்த்தல் | 111 |
| மங்கலச்சொற்பொருள் | 174 |
| மங்கலஞ்சொல் எழுத்து | 173 |
| மங்கலமாய் | 136 |
| மருண்டு | 89 |
| மருவுறும் | 85 |
| மறுத்தல் | 9 |
| மாற்றார் | 143 |
| மீண்டும் | 116 |
| முதல் எழுத்தின் | 194 |
| முல்லையது | 132 |
| முழுது அடிசீர் | 155 |
| முற்றிலது | 52 |
| முன் உரைத்த | 128 |
| மெய் தவிருங் | 5 |
| மேலைநுதலி | 10 |
| மேவ வேண்டுதல் | 119 |
| மேவுமயல் | 181 |
| மொழிபொருளிற் | 167 |
| வகைக் கூதிர் | 73 |
| வந்த பொருட் | 189 |
| வந்தவுயிர் | 21 |
| வம்பல என்று | 107 |
| வரிகள் | 196 |
| வருகோமுத்திரி | 395 |
| வருணன் | 79 |
| வன்பில் | 165 |
| வன்மை | 18 |
| வாய்த்த | 58 |
| வாழ்சகிகோன் | 96 |
| வாள் வடு | 139 |
| விசித்த | 192 |
| விளியேற்கும் | 44 |
| வினவுதாய்க்கு | 104 |
| வினையில் குர | 114 |
| வினை, வினைபேர் | 47 |
| வெள்ளொத்தாழிசை | 157 |
| வேண்டு இயற்கை | 86 |
| வேயுரை | 130 |
| வேற்றுமையா | 41 |
| வேற்றுமையின் தொகை | 66 |

# துணைபுரிந்த நூல்கள்

## 1. இலக்கணம் :

இலக்கணக்கொத்து, சுவாமிநாததேசிகர், ஆறுமுக நாவலர் பதிப்பு, சென்னை, 1956

இலக்கணத்தொகை, (எழுத்து) ச. வே. சுப்பிரமணியன் (பதிப்பர்), சென்னை 1967

இலக்கணத்தொகை, (சொல்.) ச. வே. சுப்பிரமணியன், (பதிப்பர்), நாகர்கோயில், 1971

இலக்கண விளக்கம், வைத்தியநாத தேசிகர், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் (கழகம்), சென்னை, 1973

இலக்கண விளக்கச் சூறாவளி, சிவஞான சுவாமிகள், ஆறுமுக நாவலர் பதிப்பு, சென்னை, 1952

தண்டியலங்காரம், தண்டி ஆசிரியர், கழகப்பதிப்பு, சென்னை, 1958

தொல்காப்பியம், எழுத்ததிகாரம், இளம்பூரணர் உரை, கழகம், சென்னை

தொல்காப்பியம், சொல்லதிகாரம், தெய்வச்சிலையார் உரை கழகம், சென்னை.

தொல்காப்பியம், சொல்லதிகாரம், நச்சினார்க்கினியர் உரை, கழகம், சென்னை.

தொல்காப்பியச் சூத்திர விருத்தி, சிவஞான சுவாமிகள், ஆறுமுக நாவலர் பதிப்பு, சென்னை, 1952

தொன்னூல் விளக்கம் மூலமும் பொழிப்புரையும், வீரமா முனிவர், நாகப்பட்டினம், 1891

நம்பியகப்பொருள் (பழைய உரையுடன்) நாற்கவிராச நம்பி, கழகப்பதிப்பு, (பதிப்பர்- கா. ர. கோவிந்தராச முதலியார்), சென்னை, 1951
நன்னூல் மூலமும் சங்கர நமச்சிவாயர் உரையும், உ. வே. சாமிநாதையர் பதிப்பு, சென்னை, 1953
நன்னூல் மூலமும் சங்கர நமச்சிவாயப் புலவர் இயற்றிச் சிவஞான முனிவர் திருத்திய விருத்தியுரையும், கழகம், சென்னை, 1971
நன்னூல் மூலமும் மயிலைநாதர் உரையும், உ. வே. சாமிநாதையர் சென்னை, 1946
நேமிநாதம், குணவீர பண்டிதர், கழகம், சென்னை, 1973
பிரயோக விவேகம், ஆறுமுக நாவலர் பதிப்பு, 1952
புறப்பொருள் வெண்பாமாலை, ஐயனாரிதனார், உ. வே. சாமிநாதைய்யர் பதிப்பு, சென்னை, 1950
முத்துவீரியம், முத்துவீர உபாத்தியாயர் (பதிப்பர் சுந்தரமூர்த்தி) கழகம், சென்னை, 1972
யாப்பருங்கலக்காரிகை, கலியாண சுந்தரமய்யர் பதிப்பு, சென்னை, 1948
யாப்பருங்கலம்-விருத்தியுரை, அமிதசாகரனார், கழகம் சென்னை, 1973
வீரசோழியம், புத்தமித்திரனார், பெருந்தேவனார் இயற்றிய உரையுடன், (பதிப்பர்- கா. ர. கோவிந்தராச முதலியார்), கழகம், சென்னை, 1970

## 2. இலக்கியம் :

அகநானூறு, கழகப்பதிப்பு, சென்னை, 1968
ஐங்குறுநூறு, கழகப்பதிப்பு, சென்னை, 1972
கலித்தொகை, கழகப்பதிப்பு, சென்னை, 1975
குறுந்தொகை, கழகப்பதிப்பு, சென்னை, 1965
சிலப்பதிகாரம், கழகப்பதிப்பு, சென்னை, 1972
சீவகசிந்தாமணி, உ. வே. சாமிநாதையர் பதிப்பு சென்னை, 1949

திருக்குறள், கழகப்பதிப்பு, சென்னை, 1970

நற்றிணை, கழகப்பதிப்பு சென்னை 1967

பத்துப்பாட்டு, உ. வே. சாமிநாதையர் பதிப்பு சென்னை, 1971

பிரபுலிங்கலீலை, கழகப்''திப்பு, சென்னை

புறநானூறு. உ. வே. சாமிநாதையர் பதிப்பு சென்னை, 1970

## 3. பிற நூல்கள் :

அறவாணன், க. ப. நன்னூல் பாயிரம்.

இளவரசு, சோம. 1963. இலக்கண வரலாறு, சிதம்பரம்.

கந்தசாமி, சோ. ந 1973. 'எழுத்துப்பேறும் சாரியையும்' இலக்கண சிந்தனைகள் (பக். 18-37) அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு.

குமரசாமிராஜா, ந. 1970. 'தொல்காப்பியம் கூறும் எஞ்சு பொருட்கிளவி' இரண்டாவது கருத்தரங்கு மலர் (Mimeo) திருச்சி.

கோதண்டராமன், பொன். 1973 இலக்கண உலகில் புதிய பார்வை, தமிழ் நூலகம், சென்னை. 1

சண்முகம், செ. வை. 1972. 'பழந்தமிழில் ஐகார ஔகாரங்கள்' நான்காவது கருத்தரங்கு மலர் (பக். 368-73), கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை சார்பு வெளியீடு.

,, 1973. 'தொல்காப்பியரின் சில இலக்கண உத்திகள்' ஐந்தாவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை (பக். 541-47), சென்னை மாநிலக் கல்லூரித் தமிழ்த்துறைச் சார்பு வெளியீடு.

,, 1974. 'எழுத்திலக்கணப் போக்குகள்' திரு. பெ திருஞானசம்பந்தம்பிள்ளை மணிவிழா மலர் (பக். 193-198), சிதம்பரம்.

பாலசுப்பிரமணியன், க. 1972. 'தொல்காப்பியரின் ஒலியனியியல் கொள்கை' தொல்காப்பியமொழியியல் (பக். 51–82), (பதிப்பர்கள்: ச. அகத்தியலிங்கம் & க. முருகையன்) அண்ணமலைப்பல்கலைக் கழகம்.

மயிலை சீனி வேங்கடசாமி, 'கிருத்துவமும் தமிழும்' கழகப்பதிப்பு.

மீனாட்சிசுந்தரம், கா. 1973, 'சொற்பகுப்பு அன்றும் இன்றும்' ஐந்தாவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை (பக். 753-758), சென்னை மாநிலக்கல்லூரித் தமிழ்த் துறைச் சார்பு வெளியீடு,

மீனாட்சிசுந்தரன், தெ. பொ. 1974, 'உரிச்சொல்' இலக்கண ஆய்வுக்கட்டுரைகள்-1 (பக். 121-138) அண்ணமலைப்பல்கலைக்கழகம்.

முருகையன், க. 1972. 'தொல்காப்பியரின் ஒலியியல் கொள்கை' தொல்காப்பிய மொழியியல் (பக். 1-50) (பதிப்பர்கள்; ச. அகத்தியலிங்கம் & க. முருகையன்), அண்ணமலைப்பல்கலைக்கழகம்.

வேங்கடராசுலு ரெட்டியார், 1944, எழுத்ததிகார ஆராய்ச்சி, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

வையாபுரிப்பிள்ளை, எஸ். 1957, இலக்கியமணிமாலை (2ஆம் பதிப்பு), சென்னை.

Burrow, T 1968, *Collected Papers on Dravidian Linguistics.*) Annamalainagar.

Chomsky, N. 1964, Current Issues in Linguistic Theory, Mouton & co, The Hague.

Kuiper, F. B. J. 1958 'Two problems in Old Tamil phonology, in Indo-Iranian Journal, Vol. 2, No. 3.

# *DEPARTMENT OF LINGUISTICS*

## PULICATIONS

### 1961

| | | | |
|---|---|---|---|
| 1 | Prof. T. P. Meenakshisundaram-Sixty-first Birth day Commemoration Volume-Collected Papers of Prof. T. P. Meenakshisundaran | Rs. | 3.75 |
| 2 | Kolami—M. B. Emeneau | Rs. | 11.50 |

### 1965

| | | | |
|---|---|---|---|
| 3 | History of Tamil Literature— T. P. Meenakshisundaran | Rs. | 10.00 |
| 4 | Spoken Tamil I—. M Shanmugam Pillai | Rs. | 6.66 |
| 5 | India and Historical Grammar— M. B. Emeneau | Rs. | 4.00 |
| 6 | Lexicography—S. M. Katre | Rs: | 4.00 |
| 7 | Dravidian—S. K. Chatterji | Rs. | 4.00 |

### 1966

| | | | |
|---|---|---|---|
| 8 | Conversational Tamil— N. Kumaraswami Raja and K. Doraswamy | Rs. | 7.00 |

### 1967

| | | | |
|---|---|---|---|
| 9 | Dravidian Linguistics, Ethnology and Folk Tales- Collected papers—M. B. Emeneau | Rs. | 25.00 |
| | Naccina:rkkiniyar's Conception of Phonology— S. V. Shanmugam | Rs. | 5.00 |

| | | | |
|---|---|---|---|
| 11 | A Generative Grammar of Tamil (A fragment of Tamil Syntax)— S. Agesthialingom | Rs. | 7.00 |

1968

| | | | |
|---|---|---|---|
| 12 | Spoken Tamil II— M. Shanmugam Pillai | Rs. | 6.66 |
| 13 | Collected Papers on Dravidian Linguistics— T. Burrow | Rs. | 8.00 |
| 14 | A Modern Evaluation of Nannu:l— G. Vijayavenugopal | Rs. | 8.00 |
| 15 | Two Lectures on the Historicity of Language Families—M. Andronov | Rs. | 1.50 |
| 16 | A Descriptive Grammar of Gondi— P. S. Subrahmanyam | Rs. | 5.00 |

1969

| | | | |
|---|---|---|---|
| 17 | Dravidian Linguistics (Seminar papers)— (Eds.) S Agesthialingom and N. Kumaraswami Raja | Rs. | 7.00 |
| 18 | Post-Nasal Voiceless Plosives in Dravidian— N. Kumaraswami Raja | Rs. | 3.00 |
| 19 | The Tirunelveli Tamil Dialect— A. Kamatchinathan | Rs. | 5.00 |

1970

| | | | |
|---|---|---|---|
| 20 | Gowda Kannada—K. Kushalappa Gowda | Rs. | 3.60 |
| 21 | Vaagri Boli-An Indo-Aryan Language— G. Srinivasa Varma | Rs. | 5.00 |
| 22 | Dravidian Comparative Phonology: A Sketch— M. B. Emeneau | Rs. | 6.00 |

| | | | |
|---|---|---|---|
| 23 | The Language of Tamil Inscriptions 1250-1350 A. D,—S. Agesthialingom and S. V. Shanmugam | Rs. | 5.00 |
| 24 | Dravidian Verb Morphology (A Comparative Study)—P. S. Subrahmanyam | Rs. | 10.00 |
| 25 | Dravidian Nouns (A Comparative Study)— S. V. Shanmugam | Rs. | 8.00 |
| 26 | The Kollimalai Tamil Dialect— K. Karunakaran | Rs. | 6.00 |

1972

| | | | |
|---|---|---|---|
| 27 | Third Seminar on Dravidian Linguistics— (Eds.) S. Agesthialingom and S. V. Shanmugam | Rs. | 10.00 |
| 28 | A Grammer of Kannada (based on the inscriptions of Coorg, South Kanara and North Kanara Dts. 1000 to 1400 A.D.)— K. Kushalappa Gowda | Rs. | 10.00 |
| 29 | Tolka:ppiya moliyiyal (Collection of papers) presented at the Seminar on Tolka:ppiyam) – (Eds.) S. Agesthialingom and K. Murugaiyan | Rs. | 10.00 |

1973

| | | | |
|---|---|---|---|
| 30 | A Bibliography of Dravidian Linguistics— S. Agesthialingom and S. Sakthivel | Rs. | 10.00 |
| 31 | A Bibliography for the Study of Nilagiri Hill Tribes - S. Agesthialingom and S. Sakthivel | Rs. | 2.00 |
| 32 | Structure of Malto—A. Sisir Kumar Das | Rs. | 5.00 |

1974

| | | | |
|---|---|---|---|
| 33 | Contrastive Linguistics and Language Tcaching – K. Theivanatham Pillai : | Rs. | 10.00 |

34 An Introduction to Modern Telugu—
P. S. Subrahmanyam Rs. 10.00

35 Ilakkaṉa a:yvukkaṭṭuraikal-I—(Eds.)
S. Agesthialingom and K. Balasubramanian Rs. 10.00

1975

36 Cuva:mina:tam Edited with Commentary
(in Tamil)—S. V. Shanmugam

37 Nominal Composition in Malayalam
(A Generative transformational approach)—
P. N. Ravindran

38 Dravidian Case System—(Eds.)
S. Agesthialingom and K. Kushalappa Gowda

FORTH COMING

39 Linguistic Diversity—
M. W. S. DeSilva (in press)

40 Phonology of Kodagu Language
with vocabulary—R. Balakrishnan (in press)